என்கிறபடியே-எட்டுமிரண்டும் பத்தாய்-பக்தியைச் சொன்னபடி. "எட்டு" என்று - திருவஷ்டாக்ஷரமாய் அத்தாலேயாதல், "இரண்டு" என்று - வாக்யத்வயமாய் அத்தாலே யாதல் வசீகரித்தென்னவுமாம். அல்லது, எட்டுமிரண்டுமறியாதாருக்குக்கட்டப்போகாதே. (பெருமாயன்) அவன் நினைக்கவொண்ணாத ஆச்சாயசேஷ்டிதங்களை யுடையவன். அதாவது - * அழுகையு மஞ்சிநோக்கு மந்நோக்கும் தொழுகையுமான விச்சேஷ்டிதங்கள்; [அழுகையும்] உரலோடே கட்டிவைத்தவாறேயழ, அவள் வாய்வாயென்றவாறே அஞ்சி, பேதைத்தனந்தோற்ற அவளைப்பார்க்கும்; [அந்நோக்கும்] "தொடுவேசெய்திளவாய்ச்சியர் கண்ணினுள் விடவேசெய்து விழிக்கும்" என்கிறபடியே-பெண்களடையத் திரண்டுவருகைக்காகக் களவாகிற ஸாதநத்தை யநுஷ்டித்து, கள்ளனைக்காண்கை

அடித்தாலும் கள்ளனென்றடித்தால் நமக்கிஷ்டம், அத்தால் நமக்குபயமில்லையென்றிருந்தானென்றபடி. "தொழுகையுமிவை கண்டவசோதை" என்கிறபடியே-தாயைத்தொழத்தொடங்கினானென்கிறார் (இவளித்யாதி.)

தொழுதாலடியாரோவென்ன (இத்தசையிலித்யாதி.) இவற்றையெல்லாம் நினைத்து, "அதிசஞ்சலசேஷ்டிதன்" என்கிறானென்றுகருத்து. பலிதார்த்தம் (துருதுருக்கையித்யாதி.) "இத்யுக்த்வா" என்று - நிஜம்கர்மகரணத்துக்கு ஹேதுவாக அநுவதிக்கையாலே அத்தையுமொருபந்தமாக அருளிச்செய்கிறார் (ஒருசொல்லாலேயித்யாதி.) இப்படி யிவன்சொல்லுக்குப் பரதந்த்ரனாயிருக்கையாலே தானே கட்டுண்ணப்பண்ணினான் என்றுகருத்து. கட்டாதே அடியாதே அவனுடைய அண்டையிலேதானே யிருக்கவொண்ணாதோவென்ன; அருளிச்செய்கிறார் (இவளையித்யாதி.)

(பெருமாயன்) நிரதிசயாஸ்சர்யயுக்தன். இத்தால் - அவாப்த ஸமஸ்தகாமனுக்கு ஒருகுறை யுண்டாய், அதுதன்னை க்ஷுத்ரரைப்போலே களவாகிற வழியல்லாவழியிலேயிழிந்து, ஸர்வசக்தியானவவன்றான் அதுதன்னையும் தலைக்கட்டமாட்டாதேவாய் துகையதாக அகப்பட்டுக்கட்டுண்ட்டியுண்டு, "பையவேநிலையும்" என்றுஉடம்புவெளுத்து நின்றநிலையளவுஞ்செல்லநினைக்கிறார்.

(என்னப்பனில்) ஆழ்வார்இவர்க்குத்தேஸ்யராயிற்க, இங்ஙனேசொல்லுவானென்னென்னில்; பகவத்ஸம்பந்தமறவார்த்தை சொன்னாராகில்,ஆழ்வாரோட்டைஸம்பந்தத்தையறுத்துக்கொண்டாராவரிறே; அத்தாலேசொல்லுகிறார். அதவா, 'పుంసాం దృష్టిచిత్తాప హారిణమ్'' 'பும்ஸாம்த்ர்ஷ்டிசித்தாபஹாரிணம்'' என்கிறபடியே-அவ்வருகே போவாரையும் துவக்கவல்ல விஷயமாகையாலே, துவக்குண்டு சொல்லுகிறானென்னவுமாம்.

எல்லார்க்கும் அஸாதாரணமாகையாலே ஒத்தபருவத்திற் பெண்களெல்லாரும்வந்துதிரள, அவர்கள்முகத்திலே தௌர்த்யகர்ப்பமானகடாக்ஷத்தைப் பண்ணுகிற்கும். இசையாதவர்களை இசையும்படி பார்த்தும், இசைந்தவர்களை அறவிலைசெய்து தரும்படி பார்த்தும், தான்பண்டுசெய்த மறத்தாலே மாலிந்ய முடையவர்களை * அமலங்களாக விழித்தும், இப்படி நேக்கேயாய்ச்செல்லும். [தொழுகையும்] மககள் மனம்மாதர்க்குத் தெரியு மாகையாலே இவனுடைய தௌர்த்யத்தை யறிந்து அவள்அசசமுறுத்த,தொழுகையும்-அவளைப்பார்த்து அஞ்சலிபண்ணும். பொடிந்தவர்களுக்கு ப்ரஸாதமாவது அஞ்சலியே யென்றிருக்கும். " క్షిప్రం దేవప్రసాదనీ" "అన్తరేణాఞ్జలిం బద్ధ్వా లక్ష్మణస్య ప్రసాదనాత్" "க்ஷிப்ரம்தேவப்ரஸாதினீ" "அந்தரேணாஞ்ஜலிம்பத்வாலக்ஷ்மணஸ்யப்ரஸாதநாத்" என்கிறபடியே. [இவைகண்டவசோதை தொல்லையின்பத்திறுதிகண்டாள்] ஆத்மாநுபந்தியானஸுகத்தினுடையஎல்லையைக் கண்டாள். நித்யமுக்தர் ஜ்ஞாநசக்த்யாதிகளைக்கண்டு அநுபவித்தவர்கள்; இவள் ஸௌசீல்யாதிகளைக்கண்டநுபவித்தவள்.

கட்டுண்கைமுதலானவை ஆஸ்சர்யங்களானபடியை உபபாதிக்கிறார் (இத்தாலித்யாதி.) அவரப்பனில் என்று ஸம்பந்தமறச்சொல்லாதே "என்னப்பனில்" என்னக்கூடுமோவெனகிற சங்கையை யநுவதிக்கிறார் (ஆழ்வாரித்யாதி.) (ஸம்பந்தமறவார்த்தை சொன்னாராகில்) என்று பரிஹார வாக்யத்திலேயிருக்கையாலே இப்படிதாத்பர்யம் கொள்ளவேணும். ஸம்பந்தமறச்சொன்னாராகில் ஆழ்வாருக்குவைமுக்யம் வருமென்றுபரிஹரிக்கிறார் (பகவதித்யாதி.) அவரப்பனில் - என்றுசொல்ல வந்தவரோயாகிலும் அவசமாகச் சொன்னானென்று பரிஹாராந்தர மருளிச்செய்கிறார்(அதவேத்யாதி.)

(என்னப்பனில்நண்ணி) பகவத்விஷயத்தில்நின்றும் ஆழ்வார்பக்கலிலேகிட்டி. சப்தாதிவிஷயப்ராவண்யங்களைவிட்டு பகவத்விஷயத்தைக் கிட்டுகையிலுண்டான அருமைபோரும், ப்ரதமாவதியான பகவத்விஷயத்தைவிட்டுப் புருஷார்த்தத்தில் சரமாவதியான ததீயசேஷத்வத்தைக கிட்டுகை; சப்தாதிவிஷயங்களை விடலாம் அதின்தோஷதர்ஶநத்தாலே, இங்கு அங்ஙனொரு தோஷங்காண விரகில்லையாகையாலே இது அதிலுமரிது.

(தென்குருகூர்நம்பி) "நல்கியென்னைவிடான் நம்பிநம்பி" என்று ஆழ்வார்தாம் உத்தேஶ்யமாகப்பற்றினவிஷயத்தின் பூர்த்தியளவன்றிறே இவர்பற்றினவிஷயத்தின்பூர்த்தி. எங்ஙனேயென்னில்; பகவத்விஷயத்தைப்பற்றினால் அதினெல்லையான ஆழ்வாரளவும் வரவேண்டியிருக்கும், ஆழ்வாரைப்பற்றினால் அவ்வருகு கந்தவ்யபூமி யில்லையிறே. "ஆசார்யர்களை 'நம்பி' என்னக்கற்பித்தார் ஸ்ரீமதுரகவிகளிறே" என்று ஜீயரருளிச்செய்வர். (என்றக்கால்) மநோவாக்காயங்கள்மூன்றும் வேண்டியிருக்கும் பகவத்விஷயத்துக்கு, ஒருக்திமாத்ரமேயமையும் இவ்விஷயத்துக்கு. பூர்த்தியால்வந்த ஏற்றமேயன்று, ஸௌலப்யத்தாலு மேற்றமுண்டென்கை.

(என்னப்பனில்) என்னையனில். (பெருமாயனென்னப்பனில்) இப்போதை இவருடையதாஸ்யதை, "[illegible]" "குணைர்த்தாஸ்யமுபாகத:" என்கிறபடியே அத்தலையில் குணசேஷ்டிதங்களுக்குத் தோற்றதாய்த்து; இவரையுமுட்படத் தோற்பிக்கிறதிறே இவ்வபதாநம். இனி ஆழ்வாரைப்போலே இளநெஞ்சல்லாமையாலே மீண்டாரித்தனை. (என்னப்பனில்நண்ணி) அவனிற் காட்டில் ஆழ்வார்பக்கலிலே நெஞ்சைவைத்து. சப்தாதி விஷயங்களின் போக்யதையையறுத்துத தன்பக்கலிலேயாக்கிக்கொள்ளும்-பகவத்வைலக்ஷண்யம்; பகவத்விஷயபோக்யதையில்நின்றும் மீட்டுத் தன்பக்கலிலே யாக்கிக்கொண்டது ஆழ்வார்வைலக்ஷண்யம்.

"என்னப்பனில்-தென்குருகூர்" என்றால போதாதோ "நண்ணி" என்பானென்னென்ன; அருமைதோற்றச் சொல்லுகிறாரென்று, அவ்வருமையை தார்ஷ்டாந்தமுகேந உபபாதிக்கிறார் (சப்தாதீத்யாதி.) கீழ் - சப்தாதிகளோடேஸாம்யந்தோற்ற வருளிச்செய்து, ஆதிக்யந்தோன்ற அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (சப்தாதிவிஷயங்களித்யாதி.)

"என்னப்பனில் - அமுதூறும்" என்கிறபடியேகுருகூர்ச்சடகோபன் என்னாமல், "குருகூர்நம்பி" என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (நல்கிஇத்யாதி.) கற்பித்தார் - அப்யஸிப்பித்தார். ஸௌலப்யமென்றது-ஏககரண ஸாத்யத்வத்தாலே வந்த ஸௌலப்யமென்றபடி.

(அண்ணிக்கும்) தித்திக்கும். பகவத்விஷயத்தை யநுபவித்தால் ஆழ்வார்க்குப்பிறக்குமாநந்தமெல்லாம் இவ்விஷயத்திலே ஒருக்திமாத்ரத்தாலே யெனக்கு விதித்தது.

(அமுதூறும்) அமுதூற்றுமாறுதே நிற்கும். "ஸபுநராவர்த்தே" "நசபுநராவர்த்ததே" என்று - அவ்விஷயம் ஆழ்வார்க்கு தத்ப்ரஸாதத்தாலே நித்யமாய்ச் செல்லுமாப்போலே, எனக்கு ஆழ்வார் ப்ரஸாதத்தாலே நித்யாபூர்வமாய்ச் செல்லப்பெற்றேன்.

(என்னாவுக்கே) இதுபின்னை எங்களுக்கு ரஸிக்கிறதில்லையீ! என்னில; முதலடியான பகவத்விஷயமுங்கூட ரஸியாதிருக்கிற வுங்களுக்கு, அதினெல்லையிலேநிற்கிற வெனக்குரஸிக்குமாப்போலே ரஸிக்குமோ. (என்னாவுக்கே) அநாதிகாலம்விஷயாந்தரங்கள் ரஸித்துப்போந்த என்னாவுக்கே இவ்விஷயம் ரஸிக்கிறதென்றுமாம். ... ... (க)

(தென்குருகூர்நம்பியென்றக்கா லண்ணிக்கும்) குறுங்குடிநம்பியைக்காட்டில் குருகூர்நம்பியைவ்யாவர்த்திக்கிறது. அவனுக்குப் பூர்த்தி ஜ்ஞாந சக்த்யாதிகளாலே; இவருக்குப்பூர்த்தி ஜ்ஞாநபக்த்யாதிகளாலே. ஜகத்தைத்தனக்காக்கும்படியான குணங்கள் அவனது; அவன்றன்னைத் தனக்காக்கும்படியான குணங்கள் இவரது.(நண்ணித்தென்குருகூாநம்பியென்றககால்)ஆழ்வார் பக்கலிலே நெஞ்சைவைத்து ஆழ்வாாதிருநாமத்தைசசொன்னால்.

(அண்ணிக்குமமுதூறுமென்னாவுக்கே) நினைத்தநெஞ்சும் தித்தித்து, சொன்ன நாக்கும்தித்தித்து வாராநின்றது. (என்றக்கால முதூறும்) உச்சாரணம் ஸகர்த்தாய், ஸாரஸ்யம்ஸதாகால வர்த்தியாநின்றது. இனி, பகவத்விஷயதனதை நினைக்கைக்கு நெஞ்சுமில்லை, சொல்லுகைககு நாககுமில்லை. இந்தஸாரஸ்யம் எங்களுக்குப் பிறக்கக் காண்கிறிலோமீயென்னில் (என்னாவுககே) உங்களைப்போலே பகவத்விஷயமும்ரஸித்து ஆழ்வாரும் ரஸிக்கும் நாவன்றே என்னது, அடியேபிடித்து ஆழ்வாருடைய ஸாரஸ்யத்திலேபழகினநாவன்றோ. (என்னாவுக்கே) இவ்வம்சத்தில் கரணியானனென்னோடு கரணங்களோடு வாசியில்லை. (என்னாவுக்கே) அவர்தாம், "என்னெஞ்சினால் நோக்கிககாணீர்" எனறாப்போலே இவரும் "என்னாவுககே" என்கிறார். ... ... (௧)

"ஊறும்" என்றவிடத்தில் வர்த்தமாநதாதபர்ய மருளிச்செய்கிறார் (அமுதூற்றியாதி.) இத்தைஸ்லேஷமுகமாக உபபாதிக்கிறார் (நசேத்யாதி.) "என்னு" எனறதுக்கு இரண்டுதாத்பர்யம்; பாகவத நிஷ்டனென்றும், விஷயாந்தரப்ரவணனென்றும; முந்தின வர்த்தத்தை சங்காபூர்வகமாக அருளிச்செய்கிறார் (இது பின்னையித்யாதி;) இரண்டாவது (அநாதிகாலமித்யாதி) விரோதிவ்யஸநத்தை அநுபவிக்கிறஎன்னாவுக்கு இதுரஸிக்கும் படியென்னென்று வித்தராகிறுரொன்றுகருத்து. ... ... (க).

அ.—இரண்டாம்பாட்டு. முதற்பாட்டில் - "ஆழ்வார்" என்றால் தமக்கு ரஸிக்கிறபடி சொன்னார்; இப்பாட்டில் - அவருடைய பாசுரமே தேஹயாத்ரையாமபடி தாரகமானபடியைச் சொல்லுகிறார்.

அ.—இரண்டாம்பாட்டு. (நாவினாலிதயாதி) ஆழ்வார்கள் பகவத்விஷயத்திலே ஆசார்யப்ரதிபத்தி பண்ணிப் போந்தார்கள்; இவர் ஆசார்யவிஷயத்திலே பகவத்ப்ரதிபத்திபண்ணிப்போருகிறவராய்த்து. பகவதவிஷயத்திலும் ஆழ்வார்க்குண்டானவாசி;-"యది శక్నోషి గచ్ఛ త్వమతిచఞ్చలచేష్టిత। ఇత్యుక్త్వా తనిజం కర్మ సా చకార కుటుమ్బినీ" "யதிசக்நோஷிகச்சத்வமதிசஞ்சல சேஷ்டித। இத்யுக்த்வாதநிஜம் கர்மஸாசகார குடும்பிநீ" என்கிறபடியே இடைச்சிகட்ட, வல்வல்லையாகில நான்கட்டினகட்டை யவிழ்த்துப் போய்க்காணும், உன்துரு துருக்கைத்தனத்திலே யறப்பட்டதீ! என்றுகையாலும்வாயாலும்கட்டி, கறப்பனகடைவன குவாலாகையாலே பெரிய திருநாளிலும் ஸந்த்யாவந்தநம் முட்டாமல் நடத்துவாரைப்போலே, அவள் தன்கார்யத்திலே போனாளென்று சொல்லுகையாலே, ஓரபலைகட்ட அது அவிழ்க்க மாட்டாமலிருந்தான்; கட்டினவர்களே இரங்கி யவிழ்க்கவேணுமென்றிறே அவன் நினைவு. அப்படியே ஆழ்வாரும், இவனுடைய ஸௌசீல்ய குணத்தாலே கட்டுண்டு, "எத்திறம்" என்று போக மாட்டாமலிருந்தார்; இவர் அப்படியன்றிக்கே ஆழ்வாரீடுபட்ட அபதாநத்தை யநுஸந்தித்திருக்கச்செய்தேயும் அதில் ஆழங்கால் படாதே அத்தைவிட்டு ஆழ்வாருடைய போக்யதையிலே நின்றவராய்த்து.

கீழிற்பாட்டிலே, "நண்ணித்தென் குருகூர் நம்பியென்றக்காலண்ணிக்கு மமுதூறுமென்னாவுக்கே" என்று - ஆழ்வார்பக்கல் ஸ்மர்திஸாரஸ்யத்தையும் ஸங்கீர்த்தந ஸாரஸ்யத்தையும் சொல்லக்கேட்டவர்கள், நாட்டாரடைய பகவத்விஷயத்தையே ஸ்மர்த்தவ்யமாகவும் ஸங்கீர்த்தநீயமாகவும் சொல்லாநிற்க, நீர் ஆழ்வாரை இவையிரண்டுமாக வநுஸந்திப்பானென், பகவத்விஷயத்திலேயும் அந்வயிச்சப்பார்த்தாலோ வென்ன; அதுக்கு இப்பாட்டாலே உத்தரஞ்சொல்லுகிறார்.

அ.—ஸங்கத்யர்த்தம வ்ர்த்தவர்த்திஷ்யமாண கீர்த்தநம் (முதற்பாட்டிலித்யாதி.) கீழ்ப்பாட்டில் ஆழ்வாருடைய போக்யதையையும், அநந்தரம் தத்ஸம்பந்தத்தையுடைய ப்ரபந்தமே தமக்குதாரகமென்கையையும் சொல்லுகிறாரென்று கருத்து. (அவருடைய பாசுரம்) என்று திருவாய்மொழியும் கண்ணிநுண் சிறுத்தாம்பும், ஸம்பந்தஸாமாந்ய ஷஷ்டியாகையாலே, "தேஹயாத்ரையாம்படி" என்றத்தை விவரிக்கிறார் (தாரகமானபடியை என்றவிதில்.)

நாவினால்நவிற்றின்பமெய்தினேன்;
மேவினேனவன்பொன்னடிமெய்ம்மையே
தேவுமற்றறியேன்குருகூர்நம்பி
பாவினின்னிசைபாடித்திரிவனே. (௨)

ப - ரை.—நவிற்று - பகவத் விஷயத்தில் உபகாரகரை ஸ்தோத்ரம் பண்ணக்கடவ, நாவினால் - நாவைக்கொண்டு, இன்பம் - நிரதிசயானந்தத்தை, எய்தினேன் - பெற்றேன்; அவன் பொன் அடி - ஆழ்வாருடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை, மேவினேன் - பொருந்தினேன். மெய்ம்மையே - ஸத்யமாக; மற்று - ஆழ்வாரொழிய வேறொரு, தேவு - தெய்வத்தை, அறியேன் - அறிகிலேன்; குருகூர் - திருநகரிக்கு, நம்பி - நிர்வாஹகரான ஆழ்வாருடைய, பாவின் - திருவாய்மொழியோடு கூடிய, இன் - இனிய, இசை - கானத்தை, பாடி - பாடிக்கொண்டு, திரிவன - திரியாநிற்பனென்கிறார்.

வ்யா.—(நாவினால்நவிற்றின்பமெய்தினேன்) "என்றக்காலண்ணிக்கும்" என்று ப்ரஸ்துதமானத்தையநுபாஷிக்கிறார் அதிலுண்டான ஆதராதிசயத்தாலே; மநஸ்ஸஹகாரமில்லாத வுக்திமாத்ரமடியாக நிரதிசயஸுகம் ப்ரயோஜநமானால் பின்னாட்டுகை தவிராதிறே. (நாவினால்நவிற்று) மநஸ்ஸஹகாரமில்லையென்கிறார். பகவத்விஷயத்திலுபகாரகரை ஸ்தோத்ரம்பண்ணக்கடவ நாவைக்கொண்டு, அந்தக்கார்யத்தைக் கொள்ளப்பெற்றேனென்னவுமாம்.

தாந்தாம்பற்றினவிஷயத்தைவிட்டுப் புறம்புசிலபோகவேண்டுவது அவ்விஷயம் இஹலோக ஸுகஜநகமல்லவாயாதல், பரலோக ஸுகத்துக்கு ஸாதநமன்றாயாதல், பற்றினவர்கள் இவ்விஷயத்தை யொழிய வேறேயொரு ஸ்வாமியுண்டாக நினைத்திருத்தல், காலக்ஷேபவிஷய மல்லாமையாலே யாதலன்றே; அதில் எனக்கு இஹலோக ஸுகஜநகமுமாழ்வாரே, பரலோகஸுகத்துக்குஸாதநமும் ஆழ்வாரே, எனக்குஸ்வாமியும் ஆழ்வாரே, காலக்ஷேபவிஷயமும் ஆழ்வாரே. ஆனபின்பு பகவத்விஷயத்திலே அந்வயிக்கவேண்டுகிறதென்னென்கிறார்.

வ்யா.—(நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) நான்பெற்ற பேற்றைப் பார்க்கமாட்டீர்களோ.

"பாடித்திரிவனே" என்றத்தைப்பற்ற, "என்றக்கால்" என்றத்தோடு புநருக்தமன்றோவென்ன; அருளிச்செய்கிறார் (என்றக்காலித்யாதி.) ஆதராதிசயத்துக்கு அடியருளிச்செய்கிறார் (மநஸ்ஸஹகாரமித்யாதி.) நிரதிசயஸுகம் என்றது - "என்னப்பனில்-அண்ணிக்கும்" என்றத்தைக்கடாக்ஷித்து. "நவிற்று" என்று விடுகையாலே நா அர்த்தஸித்தமாயிருக்க, "நாவினால்" என்றுசொல்லுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (மநஇத்யாதி.) நைரபேக்ஷ்யம் சொல்லுகையன்றிக்கே, "நாவினால்" என்று ஶ்லாக்யார்த்தமென்கிறார் (பகவதித்யாதி.)

"ప్రత్యక్షే గురవస్స్తుత్యాః" "ப்ரத்யக்ஷேகுரவஸ்துத்யா:" என்னக்கடவதிறே. ஈஶ்வரஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநங்கொள்ளப்பெற்றேன் நானொருவனுமேயென்கிறார். (இன்பமெய்தினேன்) "வீவிலின்பம்மிக வெல்லைநிகழ்ந்தனன் மேவி" என்று ஆழ்வார் அவ்விஷயத்திற்பெற்றபேற்றை இவ்விஷயத்திலே பெற்றேனென்கிறார். "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்" என்று கரணத்ரயத்தாலும் அவ்விஷயத்தை யாஶ்ரயித்தவர் பெற்றபேற்றை உக்திமாத்ரத்தாலே பெற்றேன். அநாதிகாலம் நரகத்திலேஸ்ருஷ்டியும் நரகத்திலே ஸம்ஹாரமுமாம்படி பாபத்தைப்பண்ணிப் போந்தநாவாலே நிரதிசயாநந்தத்தை ப்ராபித்தேனென்னவுமாம்.

(நாவினால்) நவிற்றும்போது நாவேண்டியிருக்கசெய்தே, "நாவினால் நவிற்று" என்கைக் கடி மநஸ்ஸஹகாரம் வேண்டாதபடி, "అవశేనాపియన్నామ్ని కీర్తితే" "அவசேநாபியந்நாமநிகீர்த்ததே" என்கிறபடியே வாங்மாத்ரோச்சாரணத்தாலே ஆநந்தம் ஸித்தித்ததென்கைக்காக. (நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) இப்படியேயன்றிக்கே பகவத்விஷயததில புறம்புள்ள இந்த்ரியங்களை மநஸ்ஸிலேயடக்கி, மநஸ்ஸைக்கொண்டுபோய சுபாச்ரயத்திலேவைத்து, பின்பு அநவரதபாவனையுண்டாய், அதுதானேபோய் ஸமாதிபர்யந்தமாறுமிறே, "నవివేదాత్మనో గాత్రం తదస్మర్త్యాహ్లాదసంస్థితః" "நவிவேதாத்மநோகாத்ரம் ததஸ்மர்த்யாஹ்லாதஸம்ஸ்தித:" என்று ஆநந்தம் ஸித்திப்பது; ஆழ்வார்தமக்கு, "அடியையடைந்துள்ளந்தேறி யீறிலின்பத்திருவெள்ளம் யான் மூழ்கினன்" என்று இத்தனைசெய்யவேண்டிற்று.

உபகாரகனை ஸ்துதிக்கவேணுமோவென்ன; அருளிச்செய்கிறார் (ப்ரத்யக்ஷேத்யாதி.) நாப்படைத்தப்ரயோஜநம் பெற்றவர்கள்வேறில்லையோவென்ன; "విచిత్రా దేహసంపత్తిః" "விசித்ராதேஹஸம்பத்தி:" இத்யாதிவசநத்தை யுட்கொண்டருளிச்செய்கிறார் (ஈஶ்வரேத்யாதி.) * நாவினால் நவிற்று இன்பம் பெற்றாருண்டோவென்ன; "இசைமாலைகளேத்திமேவப்பெற்றேன்" என்றத்தைக் கடாக்ஷித்து, "நாவினால் நவிற்றின்பமெய்தினேன்" என்று ஸமுதாயதாத்பர்ய மருளிச்செய்கிறார் (வீவிலின்பமித்யாதி.) கீழ் உக்திமாத்ரத்தால்வந்த ஆநந்தம் ஆழ்வார்க்கு ஸமமென்றருளிச்செய்து, அவருக்கு கரணத்ரயம் வேண்டிற்று, இவருக்கொன்றேயமைந்ததென்று தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (சிந்தையாலுமித்யாதி.) "நாவினால்" என்றதுக்கு நைரபேக்ஷ்யஶ்லாகோத்யோதந மன்றிக்கே தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (அநாதிகாலமித்யாதி.)

(இன்பம்) "இன்னவகைப்பட்ட வின்பமென்னுமையாலே
பஹுவிதமான ஆநந்தத்தை, எய்தினேன் - எய்தப்பெற்றேன்.
எனக்கு "[illegible]" என்னவேண்டிற்றில்லை (நவிற்றின்பமெய்
தினேன்) (எய்தினேன்) பகவத்விஷயத்தைப்பற்றினார்க்கு ஆநந்
தம் காலாந்தரபாவி; இங்கு அப்படியன்றிக்கே எய்திவிட்டேன்.
(நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) அநவரதபாவனையாலும்
ஆநந்தமுண்டாக வேண்டிற்றில்லை, அநுபவத்தாலுமாநந்தமுண்
டாகவேண்டிற்றில்லை.

ஆனால் இப்போதன்றோ இந்த இன்பத்தை விரும்பினீர், சரீர
வியோக ஸமநந்தரம் பிறக்கு மாநந்தவிருத்திக்கு ஒருஸாதநத்தைப்
பற்றவேணும், அதுக்கு ஸாதநமாக * லோகவிக்ராந்த சரணங்
களை ஆச்ரயிக்கவேண்டாவோவென்ன; (மேவினேனவன் பொன்
னடி) அதுவாகில் அதுக்கும் ஆழ்வாரதம்முடைய திருவடிகளை
உபாயமாகப் பற்றினேன். (அவனபொன்னடி) யாதொருவிஷயத்
தை நாவினால் நவிற்றின்பமெய்தினேன், அவனுடைய திருவடி
களே. ப்ராப்யமானதுதானே ப்ராபகமுமாயத்து. (அவன்பொன்
னடி) அதுபோலே * உலகமளந்த பொன்னடியாய் ஊர்ப்பொது
வாய் எல்லார்தலையிலு மிருக்கு மதன்றிக்கே, இதிருவடிகள், *
త్రైవిద్యవృద్ధజనమూర్ధవిభూషణం - த்ரைவித்யவ்ருத்தஜநமூர்த்த விபூஷண
மாயிருக்கும். வ்ருத்தஜநங்களாகிறார் - உத்தரபாக நிஷ்டரானவர்
கள். (பொன்னடி) நான் தொட்டுப்பரிமாறினாலும் தோஷம்
வாராத திருவடிகள். (மேவினேன)பகவத்விஷயத்தை ஆச்ரயிக்கு
மிடத்தில், "காகணைமிசை நமபிரான சரணேசரண் நமக்கென்று
நாடொறுமேகசிந்தையனாய்" என்று வர்த்தமாநநிர்தேசம பண்
ணவேண்டிற்று; இங்கு அப்படியன்றிக்கே ஸக்ருத்ஸமாச்ரயண
மமைந்தது.

(அவன்பொன்னடிமேவினேன்)பகவத்விஷயத்தில்போலே,
"త్వమేవోపాయభూతోమేభవ" "த்வமேவோபாயபூதோமேபவ" "త్వ.
త్పాదమూలంశరణంప్రపద్యే" "த்வத்பாதமூலம்சரணம்ப்ரபத்யே" "உன்
னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று அபரோக்ஷித்து ஆச்ரயிக்க
வேண்டாதபடி, எங்கேனுமிருந்து ஆச்ரயிக்கலாம்படியான அவ
னுடைய திருவடிகளை. (அவன்பொன்னடி - மேவினேன்) ஒரு
புருஷகார புரஸ்ஸரமாக வன்றிக்கே தந்நிரபேக்ஷமாக வாச்ரயித்
தேன். இங்கே, ஜீயர்வார்த்தையை யநுஸந்திப்பது.(மேவினேன்)
அத்தோடே பொருந்திவிட்டேன். இனி வேறொருகால் இருக
கைக்கு இடமில்லாதபடி பொருந்திவிட்டேன்.

(நாவினால் நவிற்றின்பமெய்தினேன் மேவினேனவன்பொன்
னடி) இத்தைப் பின்சென்றிறே ஆளவந்தாரும், ஆசார்யவிஷயத்
தை "అత్రపరత్రచాపినిత్యం యదీయచరణౌశరణంమదీయమ్" "அத்ரபரத்ரசாபி
நித்யம்யதீயசரணௌ ஶரணம்மதீயம்" என்றது.

(மேவினேனவன் பொன்னடி) ஆழ்வாருடைய ஸ்ப்ருஹணீய மான திருவடிகளை உத்தேஶ்யமாகப் பொருந்தினேன். ‘‘அஜஸ்ரம்’’ ‘‘க்ஷிபாமி’’ என்று ஈச்வரனும் கூட உபேக்ஷித்த தசையிலே விஷயீகரித்த ஆழ்வாருடைய விலக்ஷணமான திருவடிகளோடே பொருந்தப்பெற்றேன்.

நீர் செய்த தென்னுவாகில், பேற்றினுடைய படியிருந்தபடியென் னென்ன (மெய்ம்மையே மேவினேன்) உபகாரகவிஷயத்திலே நிற்கிறவளவிலே வேறொருவிஷயமுத்தேஶ்யமாய், அதுகிட்டினவாறே அதிலே தோள்மாறும்படியன்றிக்கே, ஐஹிகாமுஷ்மிகங்களிரண்டும் ஆழ்வார் திருவடிகளேயாகப் பொருந்தினேன். இங்கிருந்தநாள் அஜ்ஞாதஜ்ஞாபநத்தாலே யுபகாரகராகவும், பகவல்லாபத்துக்கு புருஷகாரமாகவும், நித்யவிபூதியில ‘‘[illegible]’’ ‘‘யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:’’ என்கிறபடியே ப்ராப்யமாகவும் இவர் தம்மையே பற்றினேனே. ஆளவந்தார் ‘‘[illegible]’’ ‘‘அத்ர பரத்ர சாபி’’ என்னைக்கருமமருளி இவரிறே.

* அநந்தகலேஶபாஜநமான ஸம்ஸாரத்திலிருக்கிற நாளெல்லாம் ஈஶ்வரனுபேக்ஷித்தானென்றும், அவ்வளவில் ஆழ்வார் தம்மை கடாக்ஷித்தாரென்றும் திருவுள்ளமாகக்கருதி தாத்பர்யகதநமுகேந கீழ்வாக்யவிவரணம் (க்ஷிபாமித்யாதி.) பரமகாருணிகராகையாலும் அநாதியான ஸம்ஸாரத்தில யாத்ருச்சிகாதிகள் ஸம்பாவிதங்களானையாலும், சேதநருக்கு ‘‘அஜஸ்ரம்’’ ‘‘க்ஷிபாமி’’ என்று அவன்சொன்னது அஹ்ருதயோக்தியாய் அச்சமுறுத்தினனித்தனை யென்று திருவுள்ளம்பற்றி (உபேக்ஷித்த தசை என்றது.) உபகாரகரென்று ஆழ்வாரை நீர்பற்றினீராகிலும உமக்குப்புருஷார்த்தமேதென்கிற சங்கையையநுவதித்து, நான் இவரை யுபகாரகத்வேந பற்றிவேறுபலங்களிலேபோகிறவனன்றிக்கே, நியதமாக ஸகலபுருஷார்த்தங்களும் ஆழ்வார் திருவடிகளாகவே பற்றினே னென்கிறாரென்றருளிச்செய்கிறார் (நீர்செய்ததென்னித்யாதி.) மெய்ம்மையே-ஸத்யமாக. ‘‘மெய்ம்மை’’ என்றத்தோடு, ‘‘அவன் பொன்னடிமேவினேன்’’ என்றத்தை யநுஷங்கித்தாரென்று கண்டுகொள்வது. ‘‘ஸர்வம் யதேவ நியமேந’’ ‘‘ஸர்வம்யதேவநியமேந’’ என்கிறபடியே ஸகல பலங்களும் திருவடிகளேயென்று கீழருளிச்செய்து, ப்ராப்யப்ராபகங்களாக யோஜநாந்தரம் (இங்கிருந்தவித்யாதி.) இத்தைப்பற்றியிறே அபியுக்தருமருளிச் செய்தாரென்று ப்ரமாணம் காட்டுகிறார் (ஆளவந்தாரித்யாதி.) மெய்ம்மையென்றது - இரண்டாம் யோஜனையில்.

(தேவுமற்றறியேன்)ப்ராப்யமும்ப்ராபகமுமானவேறொருவஸ்துவுண்டென்றிரேன். "மெய்ம்மையே" என்றவிடம்-அந்வயத்தாலேசொன்னார்; "தேவுமற்றறியேன்" என்று வ்யதிரேகத்தாலே சொல்லுகிறாரிறே-தம்முடைய அத்யவஸாயந் தோற்றுகைக்காக. "மற்றறியேன்" என்று-புருஷார்த்தாந்தரங்களோபாதி பகவத்விஷயத்தையுங் கழிக்கிறாரிறே - அதினெல்லையான ஆழ்வார்திருவடிகளளவும் வந்தவராகையாலே. சாஸ்த்ரவாஸநையாலேயாதல், ஆசார்யோபதேசத்தாலேயாதல் சொல்லுகிறாரல்லர், உபகாரகரான ஆழ்வார்திருவடிகளில் பாவபந்தத்தாலே சொல்லுகிறார்.

"மேவினேனவன் பொன்னடி" என்றீர், அந்த ஆச்ரயணத்தை, "సాదేవేస్మిన్ ప్రయుజ్యతామ్" "ஸாதேவேஸ்மிந் ப்ராயுஜ்யதாம்" என்கிறபடியே ஸர்வஸ்வாமியான ஈச்வரவிஷயத்திலே ப்ரயோகிக்கவேண்டாவோவென்ன; (தேவுமற்றறியேன்) நான் அப்படியிருப்பதொரு ஸ்வாமியுண்டாகவ்யுத்பத்திபண்ணிவைக்கிலன்றோ வேண்டுவது. (தேவுமற்றறியேன்) தேவறிவன், ஆழ்வாரையொழிய வேறறியேன். சாஸ்த்ரம் காட்டித் தந்ததன்றோ தைவமாவது, அதுதானே, "ఆచార్యదేవోభవ" "ஆசார்யதேவோபவ" என்று விதித்ததே.(தேவுமற்றறியேன்) தேவதாவ்யுத்பத்தியுள்ளவிடத்தே யன்றோ தேவதாப்ரதிபத்தியுள்ளது.ஆகையாலே நான் தேவதையாக வ்யுத்பத்திபண்ணிற்றுஆழ்வார்க்குமேற்படவில்லை.

ஆனால், "என்னப்பன்" என்று - கீழே பகவத்விஷயத்தை ஸ்வாமியாக வநுஸந்தித்தீரேயென்ன; அது ஆழ்வார் ஆதரித்த விஷயமென்று ஆதரித்தே னித்தனைபோக்கி, தேவதாப்ரதிபத்தி

ப்ராப்யமும் ப்ராபகமுமென்றுசொல்லி யிருக்க, புநஃ "தேவுமற்றறியேன்" என்று சொல்லவேணுமோ வென்கிற சங்கையைப் பரிஹரிக்கிறார் (மெய்ம்மையேயென்றவிடமித்யாதி.) (ஸகல பலங்களு மாழ்வார்திருவடிகளாகப் பற்றினேன்) என்ற ப்ரதமயோஜநாநுகுணமாக தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (மற்றறியேனென்றித்யாதி.)முந்தினயோஜநையில் ப்ராப்யப்ராபகஸாதாரணயேந "தேவு" என்று-ஸமாஸ்ரயணீயவஸ்துவைச் சொல்லுகிறது; இரண்டாம்யோஜநையில் ப்ராப்யவஸ்துவைச் சொல்லுகிறது. சாஸ்த்ரங்கள் எம்பெருமானை ப்ராப்ய ப்ராபகமாகச்சொல்லி ஆசார்யோபதேசமு மப்படியேயிருக்க, இவர்இப்படிகழிக்கைக்கு ஹேதுவேதென்ன; அருளிச்செய்கிறார் (சாஸ்த்ரோத்யாதி.)

(குருகூர்நம்பி) இவனையும்பற்றி வேறொரு விஷயத்தையும் பற்ற வேண்டும்படியோ இவருடைய பூர்த்தியிருப்பது; "குருகூர் நம்பிபா" என்கிறது - ஆழ்வார்திருவாயாலேயருளிச்செய்ததென் றாய்த்துத்திருவாய்மொழிதன்னையு மாதரிப்பது. அதிலே"குருகூர்ச்சடகோபன்" என்றருளிச்செய்தாரிறே; அவ்வழியாலே யாயிற்று திருவாய்மொழியிலாதரம். ஆழ்வார் ப்ரதிபாத்யராகையாலே, "குருகூர்நம்பிபா"என்று-கண்ணிநுண் சிறுத்தாம்பைச் சொல்லுகிறதென்னவுமாம்.

பூர்வகமாகச் சொன்னேனென்று, "అనన్యదైవత్వమియంక్షమాచ" "அநந்ய தைவத்வமியம்க்ஷமாச"என்று அநந்யதைவத்வத்தையுடைய பிராட்டி பெருமாளுக்கு எடுத்துக் கைநீட்ட, பெரியபெருமாள்பாடு புகுமாப்போலே. இவ்வர்த்தம் நாங்கள் விச்வஸிக்கும்படி யென்னென்ன; (மெய்ம்மையே) இ.து ஸத்யமே. (மேவினேனவன் பொன்னடிமெய்ம்மையே தேவுமற்றறியேன்) ஸ்ரீசடகோபனைத் தலையிலேகொண்டிருந்து பொய்சொல்லுவாருண்டோ.

ஆனாலும் காலக்ஷேபத்துக்கு பகவத்விஷயத்தைப் பற்றிக்காலம்போக்கவேணுங்காணுமென்ன(குருகூர்நம்பிபாவினின்னிசைபாடித்திரிவனே) எனக்கு காலக்ஷேபவிஷயம் உங்களைப்போலே ஒன்றிரண்டா யிருந்ததோ, ஆயிரம்ப்ரகாரமில்லையோ. (குருகூர்நம்பி) கவிபாடுகைக் கீடாம்படி, "వాల్మీకిర్భగవాన్ ఋషిః" "வால்மீகிர்ப்பகவாந்ரிஷி:" என்கிறபடியே பூர்ணரானவாழ்வார். "ஏற்கும்பெரும்புகழ் வானவரீசன் கண்ணன்றனக்கு ஏற்கும்பெரும்புகழ்வண் குருகூர்ச்சடகோபன்" என்கிறபடியே - ஸ்துத்யவிஷயத்துக்கு பரத்வ ஸௌலப்யபூர்த்தி, ஸ்தோத்ரவிஷயத்துக்கு ஜ்ஞாநபக்தி பூர்த்தி.

நீராழ்வாரையொழிய"தேவுமற்றறியேன்"என்றிருக்கிறவராகில், முகில்வண்ணனடிமேற்சொன்னசொன்மாலையாயிரமான திருவாய்மொழிஅப்யஸிப்பானென்னென்கிறசங்கையிலேயருளிச்செய்கிறார்(இவனையென்று தொடங்கி, திருவாய்மொழியிலாதரமென்னுமளவும்.) "பூர்த்தியிருப்பது"என்றவநந்தரம்"ஆகையாலே"என்றுகூட்டி, "ஆதரிப்பது" என்றத்தோடே அந்வயிப்பது. ஆழ்வார் திருவாயாற்சொன்னதுக்கு ப்ரமாணம்(அதிலேயித்யாதி.)இதுக்கு "பரனடிமேற்குருகூர்ச்சடகோபன்சொல்" இத்யாதிகளிலேநோக்கு. "என்முன்சொல்லும்"என்றும் "தன்னைத்தானே துதித்து" என்றும் எம்பெருமான் சொல்லாகத்தோற்றுகையாலே ஆழ்வார் சொல்லென்று அர்த்தம் சொல்லக்கூடுமோவென்ன; குருகூர்நம்பி விஷயமான பா என்று அர்த்தாந்தர மருளிச்செய்கிறார். (ஆழ்வாரித்யாதி.)

(பாவினின்னிசை) பாவோடே கூடப் புணர்ப்புண்ட இனிய இசை. (பாடித்திரிவனே) உம்முடைய தேஹயாத்ரை நடத்திப் போரும்படி யென்னென்ன, ப்ரீதிப்ரேரிதனாய்க் கொண்டுசொல்லி இதுவேதாரகமாக ஸஞ்சரிப்பன். "உண்டுதிரிவன்" என்னுமாப்போலே "பாடித்திரிவன்" என்கிறார். "நமன்றமர் தலைகள் மீதே - நாவலிட்டுழிதருகின்றோம்" என்னுமாப்போலே இதுவே யாத்ரையாயிருக்கிற என்னுடைய கதிநிவ்ர்த்தியைப்பண்ணவல்லாருண்டோவென்றுமாம். ப்ராக்தநகர்மபலாநுபவத்தைப் பண்ணுவிக்கும்யமன் கதிபங்கம்பண்ணவோ, அதுக்கடியான விஷயாந்தரங்கள் கதிபங்கம்பண்ணவோ. ... ... (உ)

---

* கண்டுகொண்டென் கண்ணிணையாரக்களித்திறே * தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொல்லிற்று. (இன்னிசைபாடி) திரிகிறபோதே கூடசதிரம்பின் நல்லிசையைப்பாடி. அநுபவித்துக் கொண்டுபாடி.

(குருகூர்நம்பி-இன்னிசைபாடி) பகவத்ப்ரதிபாதநமென்றன்று இவர் திருவாய்மொழியைப் பாடிற்று, ஆழ்வாரருளிச்செய்ததென்றாய்த்து. "உயர்வறவுயர்நலமுடையவன்" "வண்புகழ் நாரணன்" "மலர்மகள்விரும்பும் நமரும்பெறலடிகள்" "என்செய்ய தாமரைக்கட்பெருமானார்" என்று பாடாநிற்கச்செய்தேயும் பகவத்விஷயத்தோடு உறவற்றிறே இவர்பாடுகிறது. (திரிவனே) அங்குப்போலன்றோ "[illegible]" "ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்றிருக்கவேண்டுவது, இங்கு அப்படியன்றிக்கே விச்ருங்கலமாகத்திரியாநிற்கும். (திரிவனே) இது எனக்கு காலயாத்ரை. ஆகையாலே ஸுகப்ரதரும், ஸாதநப்ரதரும், ஸ்வாமியும், காலக்ஷேபவிஷயமும் எனக்கு ஆழ்வாரே யென்று பகவத்விஷயத்தோடே அந்வயிக்கத்தேடினவர்களுக்கு உத்தரஞ்சொன்னாராய்நின்றது.

'பா' என்று சந்தஸ்ஸையுடைத்தான ப்ரபந்தமாயிதுக்குச் சேர்ந்தநுரூபமான மநோஹரமான காநமென்றர்த்தமருளிச்செய்கிறார் (பாவோடு இத்யாதி.) "பாடித்திரிவன்" என்றதுக்கு இரண்டுதாத்பர்யம். பாடுகைதிரிகைக்கு ஹேதுவாகதாரகமாகவும், பாடுகையாலே அப்ரதிஹதஸஞ்சாரமாகவும். அதில் முந்தினத்தை சங்காபரிஹாரமுகேந வருளிச்செய்கிறார் (உம்முடைய இத்யாதி.) இரண்டாம்தாதபர்யம் (நமன்தமரித்யாதி.) நமன்-யமன்; தமர் அவனுடைய தூதர். நாவலிடுகை-ஜயித்தவர்கள் தோற்றவர்கள்வாசலிலே சென்று அறை கூறுகை. உழிதருகை-ஸஞ்சரிக்கை. யாத்ரையாக-வ்யாபாரமாக. கதிநிவ்ர்த்தியைப்பண்ணவல்லாருண்டோவென்றத்தை விவரிக்கிறார் (ப்ராக்தநேத்யாதி.) அதுக்கு-கர்மத்துக்கு. ... ... (உ)

அ.—மூன்றும்பாட்டில், "தேவுமற்றறியேன்" என்று-புருஷார்த்தாந்தரங்களோடேகூட பகவத்விஷயத்தையும் காற்கடைக்கொள்ளக்கடவீரோவென்ன; "எனக்கு அபுருஷார்த்தம்" என்னுமளவாய்த்துக் காற்கடைக்கொண்டது, "ஆழ்வாருகந்தவிஷயம்" என்னுமிவ்வழியாலே தேவுமற்றறியிலுமறிவனென்கிறார். சூர்ப்பநகையைப்போலேகிடந்தானைகண்டேறுமதிறேதவிர்த்துக்கொண்டது. "விட்டுசித்தர் தங்கள்தேவரை வல்லபரிசுவருவிப்பரேலதுகாண்டும்" என்று பெரியாழ்வார்முன்னாகப்பற்றும் ஆண்டாளைப்போலே, ஆழ்வார்முன்னாகப் பற்றும்பற்றுத் தவிர்ந்திலரிறே; ஆழ்வார்முன்னாகவரு முத்தேஶ்யதை தவிர்ந்திலரிறே, "భవతఃపరమోమతః" "பவதஃபரமோமதஃ" என்றுகேட்க, "ధర్మోధికతమోమతః" "தர்மோதிகதமோமதஃ" என்றாப்போலே, ஆசார்யருசிபரிக்ருஹீதமாய்வருமது ஆதரணீயமிறேயிவர்க்கு.

அ.—மூன்றும்பாட்டு. (திரிதந்தித்யாதி) இவர், "தேவுமற்றறியேன்" என்றாரிறே - கீழிற்பாட்டில்; இங்கு - ஈச்வரன்றான் இவர்பக்கலிலேமண்டினபடியைச்சொல்லுகிறது. பகவத்விஷயப்ரீணநமாக ஆசார்யவிஷயத்திலே ப்ரவணனாகக்கடவன்: ஆசார்யப்ரீணநமாக பகவத் விஷயத்திலே ப்ரவணனாகக் கடவன். "ప్రియోహిజ్ఞానినోత్యర్థమహంసచమమప్రియః" "ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்த்த மஹம்ஸசமமப்ரியஃ" என்கிறபடியே ஒருவர்க்கொருவர் ப்ரியவிஷயமாயிருக்குமிறே. ஒருவனை ஒருவனுகந்தானவது - அவனுகந்தானையுமுகக்கையாயதது. இவர், கீழே - "தேவுமற்றறியேன்" என்று நம்மையுமறந்து ஆழ்வார்பக்கலிலே ப்ரவணரானோ, எல்லாங்கூட நம்மையறிவித்தவரொன்றிறே ஆழ்வார்பக்கல் இவர்க்கு ஆதரம, இப்படி நம்மையுகந்தார்க்கும் இவர்க்கும் ப்ரீதராமிடத்தில * மமபகுதபக்தேஷு ப்ரீதிரப்யதிகையாகையாலே நாம் கொடுக்கும் பரிசிலேதென்று பார்த்து, ஆழ்வார்பக்கல் பக்திபூர்ணமான இவர்திருவுள்ளத்திலே, நீர்வெள்ளத்திலே நெய்தல் பரித்தாப்போலே தனனுடைய வடிவைகொண்டுவந்து பாரிக்க,

---

மூன்றும்பாட்டு. கீழ்ப்பாட்டில் - "தேவுமற்றறியேன்" என்றும், இப்பாட்டில் - "தேவபிரானுடைக்கரிய கோலத்திருவுருக்காண்பன்" என்றும் சொல்லக்கூடுமோ வென்கிறவிரோதி பரிஹாரார்த்தமாக சங்காந்தர பரிஹாரமுகேந ஸங்கதி யருளிச்செய்கிறார் (தேவித்யாதி.) (பகவத்விஷயத்தையும்) தமக்குத்தேஶ்யரான ஆழ்வாருக்குததேஶ்யமான பகவத்விஷயத்தையும் காற்கடைக்கொண்ட ப்ரகாரத்தை த்ர்ஷ்டாந்தமுகேந விவரிக்கிறார் (சூர்ப்பணகேத்யாதி) இத்தால்-அத்வாரகமாகப்பற்றுகை அநர்த்தஹேது வென்று கருத்து. ஆழ்வாருகந்தவிஷயமென்று பற்றினப்ரகாரத்துக்கு அநுகுத்ர்ஷ்டாந்தங்களை யருளிச்செய்துகொண்டு விவரிக்கிறார் (விட்டுசித்தரித்யாதி, மீண்டுபோந்தாரென்னுமளவும்.) கீழ் வாக்ய விவரணம் (ஆழ்வாரித்யாதி.) இவருக்கு-மதுரகவிகளுக்கு.

ஸ்ரீபுராதேவியார், "வடகீழ் மூலையில் தத்வத்தையும் 'ஆச்ரயணீயம்' என்று உடையவ ரருளிச்செய்தாராகில் எனக்கும் அதுவாமத்தனையன்றோ" என்றாள்; குணமலைப்பாடியுடையார்; காங்கேயன் தெற்கே யெடுத்துவிட்டபோது; பிள்ளையாத்தானங்கே குறைவறுப்புச் சமைக்க, அவர் "உமக்குவேண்டுவதென்" என்று கேட்க, இவர் "உம்மைக்கொண்டுபண்டே யுபகாரங்கொண்டோங்காணும்" என்ன; "ஆவதென், என்னையறியாதேவருவதோருபகாரமுண்டோ" என்ன; "எங்களாசார்யர், நான் கோயிலில் மண்பெற்றது அவ்வேளாளனாலே" என்றருளிச்செய்யக் கேட்டிருந்தோம், இதுக்குமேற்பட்டதோ ருபகாரமுண்டோ நமக்கு" என்றார்; உடையவர் வெள்ளைசாத்தியெழுந்தருளின காலத்திலே, திருவடிகளில் ஸம்பந்த முடையாரை "பெருமாளைத்திருவடித்தொழவேண்டா" என்றுவிலக்க, ஆழ்வானை "நீராரோனுக்கும் விரோதியோ, நீர்புக்குத்திருவடித்தொழலாகாதோ என்ன; "ஆத்மகுணம் மோக்ஷஹேதுவென்றிருந்தோம், அதுபந்தஹேதுவானபின்பு எம்பெருமானார்திருவடிகளில் ஸம்பந்தத்தை யறுத்துக்கொள்ளவோ" என்று மீண்டுபோந்தார்.

இத்தைக்கண்டு ப்ரீதரான விவர், இதுக்கு நிமித்தமென்னென்று ஆராய்ந்து பார்த்து, அது பகவச்சேஷத்வ ஜ்ஞாநத்தாலும் வந்ததன்று, பாகவதசேஷத்வமாதரத்தாலும் வந்ததல்ல, பகவதாச்ரயணத்தாலும் வந்ததல்ல, எல்லாங்கூட நான் ஆழ்வார்க்கு அநந்யார்ஹசேஷபூதனாய்ப்பெற்றபேறிறேயிதுவென்றுஸ்வகதமாக ப்ரீதராகிறார். ஆசார்யவிஷயத்தைப்பற்றி யிருப்பானொருவனை பகவத்விஷயம் தானேமேல்விழுமென்னு மிடத்துக்கு உதாஹரணமிதிறே. பிராட்டியைப்பற்றினாலும் அவள் அவனோடே சேர்க்கையாலே அவன்கைபார்த்திருக்கவேணும்; இங்கு அவன்றானே வந்து மேல்விழுந்து தன்னை இவனுக்குக்கொடுக்கும்.

குணமலைப்பாடி-க்ராமவிசேஷம். "காங்கேயன்" என்று - ஒருவேளாளனுக்குப் பேர். எடுத்துவிட்டபோது-ஸேனையைத்திரட்டிக்கொண்டு போனபோது. பிள்ளையாத்தான்-ஒரு ஸ்ரீவைஷ்ணவர், சமைக்க - அமைக்க. மண்பெற்றது - திருமாளிகைலபித்தது; இவ்வைதிஹ்யத்தால் ஆசார்யாபிமதன் என்றனக்கு மபிமதனென்று தோற்றுகிறது. "காலத்திலே" என்றவநந்தரம் "அவர்" என்று சேஷம். (வேண்டாவென்று) என்றவநந்தரம் "கோயிலிலேக்ரிமிகண்டன்மநுஷ்யர் விலக்க" என்று கூட்டுவது. ஆத்மகுணமென்றது – ஆரோனுக்கும் விரோதியாகாதபடியான சமமும் தமமுமிவ்விடத்தி லாத்மகுணங்களில் ப்ரதாநம். "சமமும்தமமும்" இத்யாதிவாக்யங்கள் அநுஸந்தேயங்கள்.

திரிதந்தாகிலுந்தேவபிரானுடைக்
கரியகோலத்திருவுருக்காண்பனுன்
பெரியவண்குருகூர்நகர்நம்பிக்கா
ளுரியனாயடியேன்பெற்றநன்மையே.

ப-ரை.—திரிதந்தாகிலும் - மீண்டாகிலும், தேவபிரானுடை - நித்யஸூரி நிர்வாஹகனான ஈஶ்வரனுடைய, கரிய-நீலமேகநிபச்யாமமாய், கோலம்-ஸுந்தரமாய், திரு-பிராட்டியோடே கூடியிருக்கிற, உரு-திருமேனியை, நான்-பகவத்விஷயத்தை விட்ட நான், காண்பன - ஸாக்ஷாத்கரிப்பன்; பெரியவண்-மஹோதாரராய், குருகூர்நகர-திருநகரியிலேயெழுந்தருளியிருக்கிற, நம்பிக்கு-ஆழ்வார்க்கு, ஆளுரியனாய-உரியவடியனாய், அடியேன்-அடியேன், பெற்ற-லபித்த, நன்மை - பகவல்லாபம் ... ... *

வ்யா.—(திரிதந்தாகிலும்) திரிதருகையாவது-மீளுகை. மீண்டாகிலும். திரிதலென்றது - கடைக்குறையானசொல்லாய், திரிதந்தாகிலும்-போனவழியெல்லாம் மீண்டாகிலும். அதாவது-திருவாய்மொழிப்பாவைவிட்டு, இசைகளைவிட்டு, ஆழ்வாரைவிட்டு, “அவருகந்தவிஷயம்” என்று ப்ரதமாவதியிலேவந்து. (தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன்)(தேவபிரான்)நித்யஸூரிகளுக்குத் தன்னைமுற்றூட்டாக அநுபவிக்கக்கொடுத்துக்கொண்டிருக்கு முபகாரகன்.

வ்யா.—(திரிதந்தாகிலும்) திரியாநிற்கச்செய்தேயும். இங்ஙனே ஸஞ்சரியாநிற்கச்செய்தேயும். “மெய்ம்மையேதேவு மற்றறியேன்” என்று-ப்ரத்யயம பண்ணலாம்படி பகவத்விஷயத்தோடு ஒட்டற்றுத்திரியாநிற்கசசெயதேயும் இப்பேற்றைப்பெற்றேன்.

(தேவபிரானுடை) இவர்திருவுள்ளத்தில் ஈச்வரன் கொண்டுவந்து பாரித்துக்காட்டினவடிவு நித்யஸூரிகளுக்குப்படிவிடும் வடிவாய்த்து. அவர்களையும் இவர்களையும்பார்த்தால் அவர்கள் நமக்கே நல்லவர்கள்; இவர் ஆழ்வார்க்கே நல்லவர். இவருக்கன்றோ இவ்வடிவை நாம் ப்ரகாசிப்பிப்பதென்று இவருக்குக்கொடுவந்து அநுபவிப்பித்தான். “஭க்தாநாம் த்வம் ப்ரகாசஸே” “பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே” என்கிறவிடத்தில், பக்தராகிறார் - இவராய்த்து.

கீழிரண்டுபாட்டிலும், “என்னப்பன்” என்றும், “பெருமான்” என்றும், நம்பியென்றக்காலாழ்வாரையும், “குருகூர்நம்பி பாவினின்னிசை” என்றவிடத்தில் திருவாய்மொழியையும் அதின் கானத்தையும்பற்றினக்ரமத்தைத்திருவுள்ளம்பற்றி மீண்டபடியை விவரிக்கிறார் (அதாவதித்யாதி.) “கரியகோலத்திருவுருக்காண்பன்” என்கையாலே,“தேவபிரான்”என்றதுக்கும்தம்மையநுபவிப்பித்தாப்போலே அவர்களை யநுபவிப்பித்தானென்று திருவுள்ளமென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (நித்யஸூரிகளித்யாதி.)

இவர்நின்றநிலைகுலைந்து பகவத்விஷயத்திலே நிற்கும்போதும், அதினெல்லையான நித்யஸூரிகள்யாத்ரையா யாய்த்திருப்பது. (தேவபிரானுடைக் கரியகோலத்திருவுரு) நித்யஸூரிகளுக்குப் படிவிடும்வடிவு,காளமேகநிபஶ்யாமமாய், அழகுதான் ஒருவடிவுகொண்டாப்போலேயிறே யிருப்பது; "கோலமேதாமரைக்கண்ணதோ ரஞ்சநநீலமே" என்று - ஆழ்வார் வாயபுலத்தக் கேட்டிருக்குமவராகையாலே பேசுகிறார். பரமயோகிகள், யோகம் கைப்புகுந்தால்ஹர்வசியுடைய வடிவைவாணிநகுமாப்போலே, இவரும்இவ்விஷயத்தை வர்ணிக்கிறாரிறே-"கரியகோலம"என்று, ஸ்ப்ரஹைஹபண்ணுமபடி ஆழ்வார் வர்ணிக்கக் கேட்டிருந்தபடியாலே.

(கரிய) இவ்வடிவு நித்யஸூரிக ளநுபவிக்கிறபோதும், "கண்கள் சிவந்து"என்றுதொடங்கி, "அடியேனுளளான" என்று ஆழ்வார் தாம் அநுபவிக்கிறபோதும் வெளிறு இருந்தது; இவர் அநுபவித்தவாறே தன்னிற மிட்டதாயத்து. "என்னுள்ளிசே ரம்மானுக்கு-செம்பொன் திருவுடம்பு" என்று ஆழ்வா ரநுபவித்த போதும் பொற்கொன்ற வளவித்தனைபோக்கி கறுத்த தில்லையே. (கோலம்) ஆனைக்கு உதவவந்தாப்போலே இருந்தபடியே, வருகையன்றிக்கே இங்கு அநுபாவ்யமாய வருகிறவருகையாமல், சாந்தின திருவாபரணமுந் தானுமாயாய்த்து வந்தது. அபிம! விஷயத்தின் பாடு போவார் ஆபரணம் பூண்டிறேபோவது.. (திருவுரு) கழற்றவொண்ணுதிருப்பதோ ராபரணத்தையுங் கொண்டுவந்தார். அவ்விருண்டவடிவுக்கு மின்போலே ப்ரகாசகையாயிருக்குமவளாய,இவளைக்கண்டாலாயத்து அவ்வடிவையும காணலாவது. "திருக்கண்டேன்பொன்மேனிகண்டேன்" என்கிறபடியே. ஸ்வரூபத்தாலே ஸ்வரூபத்துக்குப்ரகாசகையாயிருக்கும; விக்ரஹத்தாலே விக்ரஹத்துக்கு ப்ரகாசகையாயிருக்கும அவள்தான.

இவர் மீண்டாராகில் "என்னப்பனில" என்ற கண்ணனையன்றேபற்றுவது, "தேவபிரான்" என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (இவர் நின்றநிலை யித்யாதி.) நின்ற நிலைஎன்றது-திருவாய்மொழி யிசையிலே நின்றநிலை யென்றபடி. அதினெல்லையானவென்றது - பகவத்விஷயத்தின் மேலெல்லையானபடி. நித்யஸூரிக ளநுபவிக்கும் வடிவு கரியதிருவுருவா யிருக்குமோ வென்ன; அருளிச்செய்கிறார் (நித்யஸூரிகளுக்கு இத்யாதி.) இறே என்றது-ப்ரமாணப்ரஸித்தியைச்சொல்லுகிறது. இதுஇருந்தபடியென்னென்ன (கோலமே யித்யாதி.) பகவத்ப்ரவணரநிக்கே யிருக்கிறதாம் அவன்திருமேனியை வர்ணித்துக்காணக் கடவேனென்று ஸ்வார்த்தமாக ப்ரார்த்திப்பானெனென்ன; அருளிச்செய்கிறார் (பரமயோகிகளித்தியாதி.)

(காண்பன்) ஸாக்ஷாத்கரிப்பன். ஸாக்ஷாத்கரித்தநுபவிக்கிற இவைவிட்டால், பரமபத நிலயனையாய்த்து ஸாக்ஷாத்கரிப்பது. (நான்) "தேவுமற்றறியேன" என்று-பகவத்விஷயத்தை ஸந்யஸித்தநான்.

(காண்பன்) இவ்வடிவை ச்ரவணமாத்ரத்தாலேயாதல், மநநமாத்ரத்தாலேயாதல், நிதித்யாஸநமாத்ரத்தாலேயாதலன்றிக்கே, ப்ரத்யக்ஷஸமாநாகாரமாம்படி அநுபவிக்கப்பெற்றேன். அவை வேண்டுவது இவன் காணவாசைப்படும் போதிறே. இங்கு அப்படியன்றிக்கே அவனருளே அதிகதமுமல்லாமையாலே எனக்குக் கண்ணாலே காணுமாப்போலே காணலாயத்து. (தேவபிரானுடைய கரிய கோலத் திருவுருக்காண்பன்) "அமரர்களாதி முதல்வன் கருகிய நீலநன்மேனிவண்ணனை பூமகளார் தனிக்கேள்வன் ஒரு கதியின்சுவை தந்திட்டொழிவிலனென்னோடே" என்று-ஆழ்வாரை யநுபவிப்பித்தாப்போலே என்னையுமநுபவிப்பித்தான்.

(நான் காண்பன்) "தேவுமற்றறியேன" என்று - காருணைக்குக் கண்கள் ப்ரியவைத்த நானிறே கண்டேன். (தேவபிரானுடைய கரியகோலத் திருவுருக்காண்பன்) பிராட்டிக்கு நித்யாநுபாவ்யமாய ஸூரிகளுக்கு ஸதாதர்சநீயமுமான விக்ரஹத்தைக் கிடீர் விஷயருசிநானாக் கண்டநுபவிக்கப் பெற்றேன். (தேவபிரானுடைய கரிய கோலத் திருவுருக்காண்பன்) அவனை நேருகெல்லாம் நோக்காநா, நானும் ஆழ்வாரைவிட்டவும் பார்ப்பாரைப்போலே பார்த்தேனென்னுமாம். வைதிகச்சார நாக்கு நீட்டாதவர் பரதசைகளைப் பாதத்துவிடச் சொல்லவேணுமோ. (ஸ்ரீதந்த்ரயாதி) பார்த்தேனென்னவியாயிறும ஆழ்வார் திருவடிபோலே பொருளர்பமாய்த்தகைப்பதற்கே. அதுவேய்யதிமானையாலே கண்டுவிட்டேனென்கிறார். இதுபோலே வருகையினால் யிராதே துளஸீகந்தியாயிருக்கையாலே மெய்ப்பமனமாயிருக்குமே. ஆக இப்படி எல்லாப்படியாலும் அநுபவிஷயமாகையாலே "தேவர்" என்று அஞ்சிக்கட்கரிய கண்டேனென்கிறார்.

(பெரியவன் குருகூர்த்யாதி) நான் ஆழ்வார்க்கு அநந்யார்ஹசேஷபூதனாய்ப் பெற்றபேறு என்கிறாரேபோல. இப்பேறு என்னாலும் வந்ததல்ல, பிறராலும் வந்ததல்ல, அவனாலும் வந்ததல்ல, ஆழ்வாரடியாகவந்ததென்கிறார்.

"காண்பன்" என்றதாலே தேவபிரானையே காணக்கடவேனென்று பொருளாய், அத்தையருளிச்செய்கிறார் (ஸாக்ஷாதித்யாதி.) "காண்பன்" என்றதாலர்த்தஸித்தமாயிருக்க, "நான்" என்றதால் பலிதம (தேவுமற்று இத்யாதி)

(பெரியவண்குருகூர்நகர்நம்பிக்கு) மஹோதாரராய்க்கொண்டு திருநகரியிலே திருவவதரித்த ஆழ்வார்க்கு. ஸர்வேஶ்வரனுடைய ஔதார்யம் ஜீவியாதகாலத்திலே தன்வாசியறிவித்த ஔதார்யமிறே. "குருகூர்நகர்" என்று - *வைகுந்தமாநகரை வ்யாவர்த்திக்கிறது. "பரமபதம்" என்பது, "அயர்வறுமமரர்களதிபதி" என்பதாய் ஆழ்வார்படுமதெல்லாம், இவரும "திருநகரி" என்றும், "ஆழ்வார்" என்றும் அப்படியேயாயத்து அநுபவிப்பது.

(நம்பிக்கு) "நானொன்றைப்பற்றினேன், ஒன்றைவிட்டேன்" என்னலாம்படியோ, ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது. அதாவது- ஆழ்வாரை யநுபவிக்குமநுபவத்திலே பகவத்விஷயமுமந்தர்ப்பூதமாயிருக்கை. (ஆளுரியனாய) உரியவடியனாய். உரியவடியார்க்கு "தந்தாமுக்கு" என்ன ஒரு ப்ரியாப்ரியங்களின்றிக்கே ஸ்வாமி யுகந்தத்தையே பற்றி, அவன்கைவிட்டத்தை விட்டிருக்குமதிறே ஸ்வரூபம்.

(ஆளுரியனாய்) ஆளாகப்ராப்தனாய. பகவச்சேஷத்வத்துக்கு ஆளற்றிருக்க ஆழ்வார்க்குசேஷபூதராகை பெறாப்பேறிறே. அன்றிக்கே, உரியவடியனாய. "தேவுமற்றறியேன" என்னும்படி ஸர்வசேஷிபாடும்போகாதபடி ஆழ்வார்க்கு அநந்யார்ஹனாய.

(நம்பிக்கு) வெறும்பகவத்விஷயம் தேடிப்போகவேண்டும்படியோ ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது. அந்தஸர்வரக்ஷகனுக்கும் ஆளாகாத வென்னையும் ரக்ஷித்து ஆளாக்கிகொண்ட பூர்த்தியன்றோ ஆழ்வாரது. (நம்பிக்கு ஆளுரியனாய) இவருடைய, * [illegible] - குணைர்த்தாஸ்யமுபாகத: இருக்கிறபடி. (நம்பிக்காளுரியனாய்) இவருடைய ப்ரணவார்த்தாநுஸந்தானமிருக்கிறபடி.

(குருகூர்நம்பி) இந்தநம்பி, "[illegible]" "வாஸுதேவோஸி பூர்ண:" என்று பரமபத நிலயனுதல், அவர்தாமநுஸந்தித்த திருக்குறுங்குடிநம்பியாதலன்றிக்கே, திருநகரியிலே வர்த்திக்கிறநம்பி. இவருக்கு பூர்த்திக்கு ஊற்றுவாய் இத்தேசமென்றிருக்கிறார்.

பெருமையை வண்மைக்குவிசேஷணமாக்கி அதனைவிசேஷிக்கிறார் (ஸர்வேச்வரனுடையவித்யாதி.) குருகூர்பதவ்யாவர்த்யார்த்தம் (குருகூரித்யாதி.) வ்யாமோஹத்தாலே ஆழ்வாரையும் திருநகரியையும வர்ணித்ததுக்குதர்ஷ்டாந்தமுகேந தாத்பர்யம் (பரமபதமித்யாதி.) குருகூர்நகரானென்னாதே "நம்பி" என்றதுக்கு தாத்பர்யத்தையெல்லையளவு மருளிச்செய்கிறார் (நான் ஒன்றையித்யாதி வாக்யத்வயத்தாலே.) உரியனாய் - ஆளாய் என்று விசேஷிக்கைக்கு ப்ரயோஜநமருளிச்செயவதாக உரியவடியார் நிலையைக்காட்டுகிறார் (உரியஇத்யாதி.)

(அடியேன்) ஆழ்வாருடைய நீர்மைக்குத் தோற்று "அடியேன்" என்கிறார்; "தொண்டரெல்லீரும் வாரீர்" என்னும் நீர்மையிறே. (பெற்றநன்மை) பெற்றபகவல்லாபம். ஆழ்வார்க்கு உரிய வடியேனுடைய்பெற்றபேறு இதிறேநான். ப்ராப்தாப்ராப்த விவேகத்தில் ப்ராவண்யத்தால்வந்த நன்மையன்றென்கை. ... ௩

(வண்குருகூர்) வண்மையையுடைத்தான திருநகரி. ஆழ்வார் எம்மைத் தந்தாயபோலே ஆழ்வாரதமமைத்தந்த திருநகரி. * ஸர்வகாமங்களுகான்தசப. (பெரியவண்குருகூர்) பரமபதம் ஒருசிறுகை யென்னும்படி. உபயவிபூதியு மொதுங்கவிம்படி பெருமையையுடைத்தாயது. அன்றிக்கே (பெரியவண் குருகூர்) "புவியும் இருவிசும்பும் நின்னகத்த நீயென்செவியின் வழிபுகுந் தென்னுளையாய்" என்கிறபடியே - விபூதியையும் விபூதிமானையும் தமக்குள்ளே யடக்கியிருக்கிற ஆழ்வாரைத் தன்னுள்ளே யடக்குகையாலே பெரியதாகை.

(நகர்) விலக்ஷணர் வர்த்திக்கும் பர்த்தீரூர் தேசம். "தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருவாவது" என்று - அதுகளை யாராடிகளும் வந்து பரிக்ரஹிக்குமாபோலே பாட்டோமாயது. (நகர்) முகதாரனமாய பரிக்ரஹிக்கத்தசம. * பொன்னமெசயதே கம்புவார் பதிவைகுந்தம்மேறே. * "கரைவைர்ததுக் குழலலை மணிவண்ணனை.- யுத்துதலமாமனைமாமிவறு" "வெண்ணிலகம் பொறிபொழுதிசெற்ற விலைகொய-பலயுமேறு" என்ற - விதவிபுசரத்தமும், அது தனக்கு விம்பவாழவேம் புடைய வில்லவேசதேசம்.

(அடியேன பெற்றநன்மையே) இங்கு, "அடியேன்" என்கிறது - தாமேனபடி. ஆழ்வாருக்கிப்படி நானிருக்கும்படியிறே. (பெற்றநன்மையே) ஆழ்வாரதமக்கு இனம்பெறவேண்டுவன நன்மையுண்டோயாகிலும் நமக்கு இனி பெறவேண்டும் நன்மையொன்றுமில்லை. ஆழ்வார்தாம, "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ" என்றும, "மலருநீலச்சுடர்தழைப்ப" என்று தொடங்கி "எனதிருமாலனை-வந்தெய்தா மாறியேன்" என்றும மநோரதம்கடவாநிற்க இன்று நான் இப்பேறுபெறும்படியானபடியெனதோ?

---

5 ... என்றிருக்க "அடியேன்" என்றருளிச்செய்கிறார் (ஆழ்வாருடையவிதயாதி.) "நன்மையே" என்று விச்தாரிரோனகிறார் (ஆழ்வாருக்கிதயாதி.) ஸர்வம்பாவயம ஸாவதாரணமென்று, "ஆருரியனையப் பெற்றநன்மை" என்று தாத்பர்யம் (ப்ராப்தேத்யாதி.) ப்ராப்தாப்ராப்த விவேகமாவது-பகவத்விஷயம் ப்ராப்தம, இதரவிஷயமப்ராப்தம என்று விவேகிதுப் பற்றவில்லை. அப்படியே யாகையாலே பற்றினேனென்றபடி. ... ... (௩)

அ.—நாலாம்பாட்டில், "என்னப்பனில்" என்று - காற்கடைக்கொண்டவிஷயத்தை, "ஆழ்வாருகந்தார்" என்றுவிரும்புகைக்கடியென்னென்னில்; என்றண்மை பாராதே என்னை விஷயீகரித்தநீர்மையை யநுஸந்தித்தால், அவருகந்தவிஷயத்தை யுகவாதொழிவனோஎன்ன; உம்முடைய் தண்மையேது, அதுபாராதே அவர் விஷயீகரித்தபடி யென்னென்ன, அத்தைப்பேசுகிறார்.

(நம்பிக்கித்யாதி) அவனுக்கு சேஷபூதராயிருந்துவைத்தே அவர் அலமராநிற்க, நான் ஆழ்வார்தமக்கே சேஷபூதனாயிருந்து வைத்து இந்நன்மையைப்பெறுவதே!. வைஷ்ணவஸம்ச்ரய ராலல் * "ప్రయాస్యన్తి" "ப்ரயாஸ்யந்தி" என்றுபேரய்ப் பெறவேண்டாதேஇருந்தவிடத்திலேவந்திருப்பதே!. "ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம்" என்ற வார்த்தை என்னளவிலே பலித்ததென்று ஸ்வாநுஸந்தாநத்தாலே ஸந்துஷ்டராகிறார். ... ... (௩)

அ.—நாலாம்பாட்டு. (நன்மையித்யாதி) "தேவுமற்றறியேன்" "பெரியவண்குருகூர் நகர் நம்பிக்காளுரியனா யடியேன் பெற்ற நன்மை" என்று இவர் சொல்லக்கேட்டவர்கள், "సర్వేషామేవలోకానాం పితామాతాచమాధవః" "ஸர்வேஷாமேவலோகாநாம்பிதாமாதாச மாதவ:" "పితాహమస్యజగతోమాతా" "பிதாஹமஸ்யஜகதோமாதா" "உலகுக்கோர்முந்தைத் தாய்தந்தையே" என்கிறபடியே - ரிஷிகளும் ஆழ்வார்களும் அவன்றனும் ஏககண்டமாக ஸர்வலோகங்களுக்கும் மாதா பிதாவாக ஸர்வேச்வரனைச் சொல்லாநிற்க, நீரும் அந்தலோகத்திலேயொருவராயிருக்க, இப்படிபந்துவானவவனை ஆச்ரயித்தல், அதுவு மன்றிக்கே, "వాసుదేవస్సర్వమితిసమహాత్మా" "வாஸுதேவஸ்ஸர்வமிதிஸமஹாத்மா" "பெருமக்கள்" "சிறுமாமனிசர்"

நாலாம்பாட்டு. கீழ்ப்பாட்டுக்கு மிப்பாட்டுக்கும் சங்காபரிஹாரரூபேண ஸங்கதியருளிச் செய்கிறார் (என்னப்பனிலித்யாதி.) என்னப்பனில் என்றது - "தேவுமற்றறியேன்" என்றதுக்குஉபலக்ஷணம். (உகந்தார்) என்ற அநந்தரம் 'ஆகிலும்' என்றத்யாஹார்யம். ஆகையால் ஆழ்வாருகக்கை விரும்புகைக்கடியாயிருக்க (அடியென்னென்னில்) என்கிற சங்கை உதியாதென்கிறது பரிஹார்த. "புன்மையாகக் கருதுவராதலில்" என்றத்தைக்கடாக்ஷித்துஎன்னுடைய நிகர்ஷமேபற்றாசாக அங்கீகரித்தவாழ்வாருடையஸௌலப்யம் அவருகந்த விஷயமென்றாகிலும் பற்றுகைக்கு ஹேதுவென்று பரிஹரிக்கிறார் (என்தண்மையித்யாதி.) (என்தண்மை பாராதே) அதுவே பற்றாசாக என்று கூட்டுவது. ஒழிவேனோவென்ன என்றது-இப்படி உத்தரமருளிச்செய்யவென்றபடி.

ஒருத்தனுக்கு நன்மையாவது - தோஷகுணங்கள் ஏகாஸ்ரயஸ்தங்களாயிருந்தால், தோஷத்தைவிட்டு குணாம்சத்தை ஸ்வீகரிக்கை; அதில் மிகுதியாவது. - "குணம்" என்று பேரிடலாவதொன்றின்றிக்கே தோஷமேயாயிருந்தால், அதுதானே பற்றாசாகக்கைக்கொள்ளுகை.

ஒருவனுக்கு, "దురాచారః" "துராசாரஃ" என்கிறபடியே - நன்மை கலசாத பொல்லங்காவது - "మనసానిష్టచిన్తనమ్" "மநஸாநிஷ்டசிந்தநம்" என்றும், "கோடியமனத்தால் சினத்தொழில் புரிந்து" என்றும், "சினத்திறற்செற்றம்நோக்கி - வாளா-தீவிளிவிளிவன்" என்றும் சொல்லுகிறபடியே - நிர்நிபந்தநமாக பகவத்விபூதிபூதரோடே சீறுபாறென்று போருகை. நன்மையாவது- அவர்கள்பக்கல் அபகார விபரீதனாயிருக்கையும், தன்பக்கலிலே நிர்நிபந்தநமாக அபகாரரளவில் உபேக்ஷித்திருக்கையும், நன்மையால் மிகுதியாவது - "అపకారిష్వపిసదా సాధుస్సాద్వేవవర్తతే" "அபகாரிஷ்வபிஸதா ஸாதுஸ்ஸாத்வேவவர்த்ததே" என்கிறபடியே-அந்த அபகாரபரரளவிலும் உபகாரகனாய்ப் போருகை. அதாகிறது-அவர்களளவில் குறைகாணாதொழிகையிறே. இப்படியிருக்கிறவர்களாகிறார்-பிராட்டி, கூரத்தாழ்வான்போல்வார்களிறே. ஏகாக்ஷி, ஏககர்ணி தொடக்கமான ராக்ஷஸிவர்க்கம் ஓவாமலிருந்து தர்ஜநபத்ஸநாதிகள் பண்ணியிருக்கச்செய்தேயும், "இவர்களை நலியவேணும்" என்ற திருவடியோடே மறுதலைத்து, "కార్యంకరుణమార్యేణ, கார்யம்கருணமார்யேண"என்றாப்போலே ஐந்த்ர வ்யாகரணபண்டிதனானநீ,பின்னையும் உன்ஜந்மம்விடாமல்வார்த்தைசொன்னாய், இவர்களுடையகண்ணநீர்கண்டால்கற்றவனால்கருணைபண்ணவன்றோவடுப்பது,நாட்டில்குற்றம்செய்யாமலிருக்கிறாரானுமுண்டோ, இவர்கள்தாம் குற்றஞ்செய்யி லன்றோ இவ்விசாரம் வேண்டுவது, அவர்கள் ஏதேனும் வித்யதிக்ரமம்பண்ணினார்களோ,நீகற்ற பரப்பில் "நாயன் சொன்னது அடியான்செய்கைகுற்றம்" என்றுஒருவசநங்கிடந்ததோ, இவர்கள் ராவணன் பரிகரமாய் அவனுக்குக் கைவழி மண்ணான வடியாருமாய் அவனுடைய ஆஜ்ஞாபரிபாலநசீலைகளுமாகா நின்றால் அவன் சொன்னத்தை மறுக்கலாமோ, பெருமாள் உன்னை என்னைக்கண்டுவாவென்றுவிட்டாரோ, ஸ்த்ரீவதம்பண்ணிவாவென்று விட்டாரோ; அப்படியே சொன்னாராகில்

நான்மறையாளர்களெல்லாரும். "நன்மையால் மிக்க" என்றத்தைவிவரிக்கிறார் (ஒருத்தனுக்கு இத்யாதிவாக்யத்வயத்தாலே.) பற்றாசாக-ஹேதுவாக.

(நான்மறையுடையவர்கள்) அதுக்கடியாக ஹிதாநுசாஸநம் பண்ணக்கடவ வேதங்களிலே அவகாஹித்திருக்குமவர்கள். நாலுவகைப்பட்டவேதங்களுக்கும் வ்யாஸபதம் செலுத்தவல்லவர்கள்; அவர்களாகிறார் - ஸ்ரீஜநகராஜன் திருமகளாதல், கூரத்தாழ்வானாதல். இத்தால்சொல்லிற்றாயிற்று - வேதார்த்த தாத்பர்யம் கைப்படுகை. அதாவது-ஆந்ருஶம்ஸ்ய ப்ரதாநராகை யென்றபடி.

அவர்குற்றமாகிறது, நீ சொன்னாயாகில் அந்த வித்யதிக்ரமம் உன்னதாகிறது'' என்று குணக்ரஹணம்பண்ணி ராக்ஷஸிகளைரக்ஷித்தாளிறே பிராட்டி. ஆகையாலிறே இவள்கோஷ்டியைப்பற்ற ராமகோஷ்டி லகுதரையாய்த்து. அவயவங்களிலே ஹாநி பிறக்கும்படி அபசாரம்பண்ணின நாலூரானும், ''நான் புக்கலோகம் புகவேணும்'' என்றிறே ஆழ்வானபேக்ஷித்தது. இப்படிக்கு ப்ரஹ்லாதனும் க்ர்த்யோபாதாநம்பண்ணி தன்னை நலியவிட்ட புரோஹிதவர்க்கத்தைமறித்தும் அந்தகர்த்யை போய் நலிய,ஸர்வேச்வரனை அபேக்ஷித்து அவர்களைநோக்கியும், "మత్పితుస్త్వత్కృతంపాపం దేవతస్యప్రణశ్యతు" ''மத்பிதுஸ்த்வத்க்ர்தம்பாபம் தேவதஸ்யப்ராணச்யது'' என்று-ஹிரண்யாபராதத்தை க்ஷமிப்பித்தும், இப்படி அபகாரிகள் பக்கல் உபகாரகனாய்ப்போந்தான்.

45630

(நான்மறையாளர்கள்) நாலுவகைப்பட்ட வேதங்களை ஆண்டுபோருமவர்கள். இப் ப்ரமாணவாக்யங்களை, தத்வஹிதபுருஷார்த்த ப்ரதிபாதகமான வாக்யங்களோடே சேர்த் தநுஸந்திக்கும்படி வேதநிர்வாஹகரானவர்கள். (நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்) இவர்களுக்கு இவ்வாத்மகுணமுண்டாகைக்கூற்றுவாய் வேதஸம்பந்தமாய்த்து. "మాతాపితృసహస్రేభ్యో వత్సలతరం శాస్త్రమ్" ''மாதாபித்ர்ஸஹஸ்ரேப்யோவத்ஸலதரம் சாஸ்த்ரம்'' என்றும், ''நலங்களாய நற்கலைகள்'' என்றும் - குற்றம்செய்தாரை ஏவ்வளவிலும் கைவிடமாட்டாத இத்தோட்டை ஸம்பந்தமாய்த்து - இதுக்கடி. இக்கலைகளைக் கல்லாதவர்களிறே - இந்நன்மை பெறாதவர்கள். ''கற்றிலேன் கலைகள்-பெற்றிலேனதனால் பேதையேன்நன்மை'' என்கிறபடியே இதடியாகவிறே * பெருநிலத்தாருயிர்க்கெல்லாம் செற்றமே வேண்டித் திரிந்தது.

தாத்பர்யார்த்தம் (அதுக்கித்யாதி.) அதுக்கு - பற்றாசாகக் கொள்ளுகைக்கு. சப்தார்த்தகதநமுகேந ''ஆளர்கள்''என்றதுக்கு தாத்பர்யமருளிச் செய்கிறார் (நாலுவகையித்யாதி.) வ்யாஸபதம் அகண்டமானவேதத்தை அர்த்தத்தின்படியே சாகாகாண்டாதிரூபேணவிபஜிக்கிற வ்யாஸருடைய அதிகாரம். அவர்களாகிறார் என்றது-நன்மையால்மிக்கநான்மறையாளர்களாகிறார் என்றபடி. உக்தார்த்த நிகமநம் (இத்தாலித்யாதி.) வேதார்த்த தாத்பர்யத்தின்படியே யநுஷ்டிக்க வல்லவர்களாயிருக்கை என்றபடி. ஆந்ர்சம்ஸ்யம்-ஸர்வபூதாநுகூலாசரணம்.

(புன்மையாகக்கருதுவர்) புன்மையென்று ஒரு தர்மமும், அதுக்குஆஶ்ரயமான தர்மியுமாயிருக்கையன்றிக்கே, புன்மைதான் ஒருவடிவுகொண்டதென்றிருப்பர்கள். புன்மையாவது - துக்கமாதல், பொல்லாங்காதல், விஷயாந்தர ப்ராவண்யமாதல், துர்மாநமாதல். இதுதான்-மேலிற்பாட்டிலே ப்ரஸக்தமாககடவது.

இதுகல்லாதவர்களாகையாலேலங்காவாஸிகளானராக்ஷஸர்*శరణాగతవత్సలః-ரிபூணாமபிவத்ஸலரான பெருமாளோடே வெறுப்புக்கொண்டது.* கல்லாதவரிலங்கையிறே. இதுகற்றவர்களுக்குபலம் அபகாரிகள்பக்கலிலேஉபகாரம்பண்ணுகை;இதுகல்லாதவர்களுக்கு பலம்உபகாரிகள்பக்கலிலே அபகாரம் பண்ணுகை.இதுதான் மறையாகையாலேதுஷ்ப்ரக்ருதிகளுக்குஸ்வார்த்தத்தைபோதிப்பியாதிறே. "நன்மையால மிக்க, நான்மறையாளர்கள்" என்கிற விரண்டாலும்-"శ్రోత్రియం బ్రహ్మనిష్ఠమ్" "ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" என்கிற விரண்டையும் சொல்லுகிறதாய்த்து. அன்றிக்கே, (நன்மையால் மிக்கநான்மறை)நித்யதையாலும்நிர்த்தோஷதையாலும் அஜ்ஞரானவர்களுக்கு ஜ்ஞாதவ்யார்த்தங்களையுடைய ப்ரமாணாந்தரநிரபேக்ஷமாக அறிவிக்குமதாகையாலும், "వేదైశ్చ సర్వైరహమేవ వేద్యః" "வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்ய:" என்கிறபடியே ஸர்வாதிகவஸ்துவையே ப்ரதிபாதிக்கிறதாகையாலும், ப்ரமாணாந்தரங்களிற்காட்டில் ப்ராமாண்யஶ்ரீயால் அதிசயிதயான வேதார்த்தஜ்ஞாநமுடைய மஹாத்மாக்களெனனவுமாம்.

(புன்மையாகக் கருதுவர்) அப்படி பிறருடைய குறைகாணமாட்டாதவர்களுட்பட என்னுடைய தோஷாதிசயத்தாலே என்னை யநாதரிக்கும்படியாய்த்து. (புன்மையாகககருதுவர்) நன்மையால் மிக்கவாகள், என்னுடைய புன்மையின் மிகுதியாலே புறக்கணித் திருப்பர்கள். (நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதுவர்) அந்தவேதார்த்தங்களைத் திருத்தி அநுஸந்திக்கிறவர்களுக்கு, என்னுடைய குற்றத்தின் மிகுதியாலே ஒருகுணங்கண்டு திருத்தப்போச்சுதில்லை. (நான்மறையாளர்களித்யாதி) அவர்களிலே ஒருவர்க்கு ஆளாகப் பெற்றிலேன. (புன்மையாககருவா)"புன்மை" என்றும், "நான்" எனறும் வேறின்றிக்கே,"என தாவி யென்னும் வல்வினை" என்கிறபடியே புன்மைதானாகவே நினைப்பர்கள். தர்மப்ராசுர்யத்தாலே தர்மியை தர்மவ்யபதேசம் பண்ணக்கடவதிறே.

---

* புன்மைசப்தார்த்தமான துக்கமாதல் பொல்லாங்காதல்இவ்விடத்துக்கு விவக்ஷிதமன்று, மேல்பாட்டில் துக்கத்தையுபபாதியாமையாலே. பொல்லாங்கு - பாபம்.

(ஆதலிலன்னையாயத்தனுமென்னையாண்டிடுந்தன்மையான்) அப்புன்மையேஹேதுவாக"இவ்வளவில் நாமல்லது ரக்ஷகரில்லை" என்றுஎனக்கு ஸர்வவிதபந்துவுமானவர். "[illegible]" "த்ரீந்லோகாந்ஸம்பரிக்ரம்ய" என்கிறபடியே, காகத்தோபாதி இவனுக்கும் புறம்பொருபற்றுசில்லை என்றதுவே ஹேதுவாக ஸர்வவிதரக்ஷகரானவர். ப்ரியமே செய்யக்கடவமாதா செய்யுமதுவும், ஹிதமேசெய்யக்கடவபிதாசெய்யுமதுவும், ஸ்வரூபாநுரூபமான அடிமைகொள்ளும்நாயன் செய்யுமதுவும் செய்யுமவர். "தாயாய்த்தந்தையா யறியாதனவறிவித்தவத்தா" என்று-பகவத்விஷயத்தில் ஆழ்வார்சொல்லுமதெல்லாம் ஆழ்வார் விஷயத்திலே சொல்லுகிறார் இவர்.

(கருதுவர்) நம்முடைய புன்மையன்றிகே அவர்களுடைய அநாதரங்களும இவனை வருத்துகிறது. "[illegible]" "ஹதோஸ்ம்யிதிமாமேவம் பகவாநபிமந்யதே" என்ற ஸ்ரீபரதாழ்வானைப்போலேயும, "[illegible]" "திகஸ்து தஜ்ஜந்மயத்ஸாதுபஹிஷ்கர்தம்ஸ்யாத்" என்ற அக்ரூரனைபபோலேயும, "[illegible]" "மஹாத்மபிர்மாமவலோக்யதாந்நய" என்கிறபடியே அவர்களுடைய அங்கீகாரம் புருஷார்த்தமாய், அத்தாலே அநாதரமும் அப்படியேயிறே. (கருதுவா) அவர்களுக்கு வாசி- வாய்விட்டுச் சொல்லாமை. (நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதுவர்) அவர்கள்ஸர்வஜ்ஞராகையாலே வஸ்துகதியையபதாவாக அறிந்திருப்பர்களிறே.

(ஆதலிலன்னையாயித்யாதி) கீழ்-ஸாத்விகவர்க்கம் கைவிட்டபடிசொல்லிற்று; மேல்- ஆழ்வாரைக்கொண்டபடி சொல்லுகிறது. இப்படி எல்லாரும் கைவிட்டவனை, "நம்மையொழியக்கைக்கொள்ளுவாரில்லை" என்றுஎன்பக்கலிலே மாத்ர்வத்வத்ஸலரானார். "[illegible]" "யதவாஶரண்யமஶரண்யஜநஸ்யபுண்யம்" என்றிறே ஆழ்வாரைச் சொல்லிற்று. (அன்னையாயத்தனும்) "அத்தனாகியன்னையாகி" என்று-பகவத்விஷயம்போலே முற்பட ஹிதபரனாய்ப் பின்பு ப்ரியபரனாகையன்றிக்கே, முற்பட ப்ரியபரராய் பின்பு ஹிதபரரானார். அப்படியே ஆளவந்தாருமுற்பட, "[illegible]" "மாதாபிதா" என்று-மாதர்த்வத்தையாய்த்து அநுஸந்தித்தது.

தாத்பர்யார்த்தம (அப்புன்மையே யிதயாதி.) எல்லாருக்கும் த்யாகஹேதுவானபுன்மை இவருக்கு ரக்ஷிக்கைக்கு ஹேதுவானபடியை யுபபாதிக்கிறார் ([illegible] - த்ரிந்லோகாநித்யாதி.) "அன்னை" இத்யாதிக்கு கௌணவ்ர்த்தியாலேசப்தார்த்தம் (ப்ரியமேயித்யாதி.) நாயன்-ஸர்வேஶ்வரன். வ்யாக்யாதாவீடுபடுகிறார் (தாயாயித்யாதி.)

(தன்மையான்) அக்நிக்கு ஔஷ்ண்யம்போலேயும், ஜலத்துக்கு சைத்யம்போலேயும் இஸ்ஸ்வபாவங்களை நிரூபகமாகவுடையவர். அதாகிறது - "இவனுக்குபகரித்தோம்" என்றுதான் நினைத்தல், இவன்றனக்கு ப்ரத்யுபகாரத்தி லிழியவேண்டியிருத்தல் செய்யாதொழிகை.

(சடகோபன்) என்பக்கல சாட்யத்தைபபோகினவர். கீழ் மூன்றுபாட்டிலும்-"தென்குருகூர் நம்பி"என்றுசொன்னவர், இப்பாட்டில் - "சடகோபன்"என்றிறே-ஸ்வதோஷதனதப்போக்கினபடியாலே.

(அன்னையா யத்தனாய்) முற்பட பகவதப்ரபாவதகதை உபதேசித்து, அநந்தரம் அதிகாரிவேஷத்தை உபதேசித்தார். "உம்முயிர்வீடுடையான்" "பத்துடையடியவர்க்கெளியவன்" "பரிவதிலீசனைப்பாடி விரிவது மேவலுறுவீர் - நன்னீர்தூய்ப் புரிவதுவும் புகைபூவே" என்று உபதேசித்திறே, "கழியின்தொண்டர்கள்கழித்துத்தொழுமின்" என்றது. (அன்னையாயததனாய்) "[illegible]" "குருபிதாகுருர்மாதா" என்று - லாக்ஷணிகமாய் வருவதன்றிக்கே, என்னுடையபுனமையில் புனையிலலாதாப்போலே அவருடைய மாதா பித்ர்த்வத்திலும்புனையில்லை.

(என்னையாண்டிடுந்தன்மையான்) ஸ்வாமிகாத்யமு மநுஷ்டித்தார்.பகவத்விஷயத்தை, "அத்தனாகியன்னையாகி யாளுமெம்பிரானுமாய்" என்று அநுஸந்தித்தாப்போலே, இவரும் ஆழ்வார் விஷயத்திலே அவற்றையநுஸந்திக்கிறார். (என்னையாண்டிடுந்தன்மையான்) திருவாய்மொழி யருளிச்செய்கிறபோது என்னைப்பட்டோலை யெழுதச்சொல்லி அருளிச்செய்தார். உசிதமான கைங்கர்யத்தைக்கொண்டாா. (எனனையாண்டிடும்) "'பொலிந்து நின்ற பிரான்பக்கலிலும் ஒருக்கால் போயவாரீர்' என்று உபதேசித்தார்" என்று பிள்ளையருளிச்செய்வர். "கட்டுண்ணப்பண்ணிய பெருமாயனென்னப்பனில் நண்ணி" என்று நான்விட்டுப்போந்த விஷயத்தை, "நீள்குடக்கூத்தனுக்காள்செய்வதே - உறுவது" என்று - பொலிந்துநின்ற பிரானுக்கும் ஓரஞ்சலிநேரும்படி பண்ணினார். (தன்மையான்) இது ஸஹஜஸ்வபாவமாய்த்து ஆழ்வார்க்கு. ஆழ்வாரடியாக அடிமைகொள்ளுகையாலே பகவத் விஷயத்துக்கு ஔபாதிகம். (சடகோபன்) என்னுடைய சாட்யத்தைப்போகி என்னை ரக்ஷித்தவர்.

"தன்மையான்" என்றத்தைக்கீழ்ச்சொன்ன மூன்றுபதங்களிலுங்கூட்டி தாத்பர்யம் (அக்நிக்கித்யாதி.) இஸ்ஸ்வபாவங்களை நிரூபகமாகச்சொன்னத்தால் பலிதம் (அதாகிறதித்யாதி.) சாட்யத்தைப்போக்கினதுக்கு ஜ்ஞாபகமென்னென்ன ;அருளிச்செய்கிறார் (கீழித்யாதிவாக்யத்வயத்தாலே.)

(என்னம்பி) தாய்செய்வது தமப்பன் செய்யமாட்டான், அவன்செய்வதுஇவள செய்யமாட்டாள், ஆசார்யன் செய்யுமது இருவரும் செய்யமாட்டார்கள், நாயன் செய்யுமது அடியான் செய்யமாட்டான், எல்லார்செய்வதும்செய்யவல்லபூர்த்தியையுடையவர். (என்னம்பியே) என்னுடைய தண்மையாகிற பாழ்ந்தாறு நிரம்பும்படியான பூர்த்தியை யுடையவரென்று பிரிததனே. இவர்க்குக் கீழ்ச்சொன்ன தர்ஷ்டாந்தங்கள் ஸர்வதாஸாம்யமல்ல, கர்மௌபாதிகமாகவந்த ஸம்பந்தமாகையாலும் அபூர்ணஸ்தலமாகையாலும். (௪)

(என்னை யாண்டிடுந் தன்மையான் சடகோபன்) அவனடியார், "சிறுமாமனிசராயென்னையாண்டார்" என்று ஆழ்வார் தம்மையாண்டுபோருமவர் ததீயராம்படியானுல், என்னை ஆழ்வார் ஆண்டுபோரசசொல்லவேண்டாவிறே. (என்னை யாண்டிடுந்தன்மையான் சடகோபன்) என்னை ரக்ஷித்தது "சடகோபன்" என்கிற பட்டப்பெயர் சூடினவர்.

(என்னம்பியே) அவரேயன்றோ என்குறைவை நிறைக்கும்படியான நிறைவை யுடையவர் என்குறைவாகிற பாழ்ந்தாறு நிறையும்போது அவருடைய பூர்த்தியே வேண்டாவோ. ஸத்வநிஷ்டர்களுபஹிஷ்டனுன வென்னைத்தாம அங்கீகரித்தும், அப்ரியங்களிலும் அஹிதங்களிலும் கைவளர்ந்து போந்தவென்னைப்ரியஹிதங்களிலேமூட்டியும், அநுபகாரகனுன வென்னை கைங்கர்யங்கொண்டு போநத பூர்த்தியை யுடையவர் ஆழ்வாரேயன்றோவென்று ஸ்வஹித்தாந்தத்தை த்ருடீகரிக்கிறார். ... ... (௪)

பதாந்தரஞ்சொல்லாதே "நம்பி" என்றதுக்குதாத்பர்யமருளிச்செய்கிறார் (தாயென்றுதொடங்கி அநுசுவாக்யத்தாலே.) (ஆசார்யன) என்கிறவாகயத்துக்கு, சடகோபன் என்றது-என் அஜ்ஞாநத்தைப்போககினவரென்கையாலேயென்றுகருத்து. "நம்பி" என்றதுக்கு கீழ்ச்சொன்னவர்களோடு ஸாம்யஞ்சொன்னர்; அவர்களிலும் ஆதிக்யமாக வர்த்தாந்தரம் (எனனுடையவித்யாதி.) பாழ்ந்தாறு-படுகுழி, அதாவது-தம்முடைய தோஷஙகளாகிற வஞ்சகமான படுகுழியைத்துற்றப்பொகடுகைக்கீடான க்ர்பாதிகுணபூர்த்தியை யுடையவரென்கை. ஆதிக்யத்தை யுபபாதிக்கிறார் (இவருக்கித்யாதி.) "நன்மையான்மிக்க நான்மறையாளர்கள்-என்னை-புன்மையாகக் கருதுவராதலில்-சடகோபனென்னம்பியே-என்னையாயத்தனுய் என்னையாண்டிடுந்தன்மையான்" என்று அந்வயம். ஆக, காற்கடைக்கொண்ட பகவத்விஷயத்தையும் ஸர்வப்ரகாரோபகாரகரான ஆழ்வாரையிட்டுஉகவாதொழிவேனே வென்று கருத்து.

அ.—அஞ்சாம்பாட்டில், உம்மைப்புன்மையாகவும் உமக்கு ஆழ்வார் ஸர்வப்ரகாரத்தாலு முபகாரகராகவுஞ்சொன்னீர்; உம்முடைய புன்மையையும், உமக்குஆழ்வாருபகரித்த நன்மையையுஞ் சொல்லிக்காணீரென்னச் சொல்லுகிறார்.

நம்பினேன்பிறர்நன்பொருள் தன்னையும்
நம்பினேன்மடவாரையுமுன்னெலாம்
செம்பொன்மாடத்திருக்குருகூர்நம்பிக
கன்பனாயடியேன்சதிர்த்தேனின்றே.

ப-ரை.—முன்னெலாம் - அநாதிகாலமெல்லாம், பிறர்-பிறருடைய, நன்பொருள்தன்னையும்-விலக்ஷணமான ஆத்மவஸ்துவையும், நம்பினேன் - ஆசைப்பட்டுப்போந்தேன்; மடவாரையும் - பாதிவ்ரத்யாதிகளையுடைய பரஸ்த்ரீகளையும், நம்பினேன் - ஆசைப்பட்டுப்போந்தேன்; செம-மாற்றுயர்ந்த, பொன் - பொன்னாலேசெய்யப்பட்ட, மாடம்-மாடங்களையுடைய, திருக்குருகூர் - திருநகரியிலே யெழுந்தருளி யிருக்கிற, நம்பிக்கு - பூர்ணரான ஆழ்வாருக்கு, அன்பனாய் - ப்ரீதனாய், அடியேன-அடியேன, இன்று - ஆழ்வாருக்கு சேஷமான ஸமயத்திலே, சதிர்த்தேன - சதிரனேன.

இவர் இவ்வர்த்தத்தை வெளியிடுகிறவிடத்தில் என்ன சப்தமுகத்தாலே வெளியிட்டதென்ன; (அருள்கொண்டாயிரமின்றமிழ்பாட்டினான்) அநந்தஸஹஸ்ர சாகாப்ரதிபாதிதமான அர்த்தத்தை ஸஹஸ்ரகாதாமுகத்தாலேவெளியிட்டார். (தமிழ்பாடினான) "దుర్బోధా వైదికాశ్శబ్దాః" "துர்ப்போதாவைதிகாஶ்ஶப்தா:" என்று துர்ப்போதமான வேதசப்தம்போலன்றிக்கே த்ராவிடபாஷையாலே வெளியிட்டார்.

பகவதர் ஆநந்த ஹேதுத்வேந ஆநந்த இதிவ்யபதேசாச்சேதி ஸூத்ரார்த்தம். * அருமறையின்பொருளை யருளினப்ரகாரமேதென்னு மாகாங்க்ஷயிலே, "அருள்கொண்டு" என்றருளிச்செய்தாரென்று திருவுள்ளம்பற்றிவ்யாவர்த்யபூர்வகமாகபகவத்க்ருபை மூலமென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவர்தாமித்யாதி.) அவனேப்ரேரித்தானென்ன; அருளிசசெய்கிறார் (என்னாகியேஇத்யாதி.) அநந்தமானவேதார்த்தத்தை ஸங்க்ரஹித்து ஸஹஸ்ரஸங்க்யையாக ப்ரபந்தீகரித்தாருண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (சதுர்விம்ஶதித்யாதி.) ஸ்ரீராமாயணத்தோடு ஸமமாக இருபத்துநாலாயிரமாகப்பாடாதே ஆயிரமாகப் பாடுவானேனென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஓராத்மாவுக்கித்யாதி.)

(பாடினானருள்கண்டீர்) "மயர்வறமதிநலமருளினன்" என்னும்படியான அருளல்ல, அது தன்னையும் விளாக்குலைகொண்டிருக்குமருளிறே ஆழ்வாரருள். ஈஸ்வரன்கைவிட்ட ஆத்மாக்களிலும், அவர்களுடையதுர்க்கதியைக் கண்டு திருத்த வொருப்பட்டபடியாலே இவரருள் ப்ரத்யக்ஷமன்றோவென்கை. (இவ்வுலகினில்மிக்கதே) சிதசிதீஸ்வரதத்த்வத்ரயத்தையும் கபளீகரித்திருக்கை. "அதனில் பெரியவென்னவா" என்று - பகவத்விஷயத்தில் தமக்குண்டான அபிநிவேசத்தளவும் போருமாய்த்துஎன்னளவில் க்ருபையும். ()

(ஆயிரமின்தமிழ்பாடினான்) ப்ரணவம்போலே அதிஸங்க்ரஹமாதல், மஹாபாரதம்போலே அதிவிஸ்த்ருதமாதலன்றிக்கே ஆயிரமின்றமிழாகப்பாடினார். (இன்தமிழ்பாட்டினான்) அவனைச் சொன்ன துயிரிதையாயிருக்கச்செய்தே அதுவறை முறுகலாயிருக்கும்; இது செவிக்கினிய செஞ்சொல்லாயிருக்கும். (பாடினான்) "வேட்கையால் சொன்னபாடல்" என்கிறபடியே தம்முடைய அநுபவாநந்த ஸாகரத்துக்குப் பரீவாஹ சுபவசநங்களைப் பண்ணினார். ஆனால் ஒருபுருஷபுத்திமூலமாக வந்த விது ப்ரமாணமாம்படியென்னென்ன; தாம்சொன்னாராகிலன்றோ அது சொல்லவேண்டுவது, அவனுடைய அருள்மூலமாகச்சொன்னவராகையாலே அதுசொல்லப்போகாது, "𑌮𑍋𑌹𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌕𑌾𑌰𑌯" "மோஹஸாஸ்த்ராணிகாரய" என்கிற அந்த நிக்ரஹமடியாகவந்ததன்றே யிது, *தெரியச்சொன்னவாயிரமாகையாலே அருளடியாகவந்ததாய்த்து. "ஆமுதலவனிவனென்றுதற்றேற்றி, என்னுமுதல்வந்து புகுந்து நல்லின்கவி, தூமுதல்பத்தர்க்குத் தான் தனனைச் சொன்னவென் வாய்முதலப்பனை" என்று ஆழ்வார் தாமேயருளிச்செய்தாரிறே. (அருளித்யாதி) "தன்புகழேத்த வருளினான்" என்று ஆழ்வாரருள்கொண்டு அவருடைய புகழை ஏத்தினாப்போலே யாய்த்து-ஆழ்வாரும் அவனுடைய வருள்கொண்டு * ஏற்கும் பெரும்புகழாயிரத்தைப்பாடிற்று. இவர்தாம் * நெடியானருள் சூடுமடியானாகையாலே அருளொழிய இவர்க்குக் கைம்முதலில்லையே.

"சடகோபனருள்" என்றாப்போலே "பாடினானருள்" என்றதுக்கு ஹார்த்ததாத்பர்யம் (மயர்வறவித்யாதி.) 'கண்டீர்' என்றதுக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஈஸ்வரனித்யாதி.) "[illegible]" என்கிறவ்யுத்பத்தியையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (சிதசிதீஸ்வரேத்யாதி.) தம்முடையபக்கல் பண்ணின க்ருபையை த்ருஷ்டாந்தமுகேந விவரிக்கிறார் (அதனிலித்யாதி.) "அருள்கொண்டாடுமடியவரின்புற-அவ்வருமறையினுடைய பொருளையருளினான்; அருள்கொண்டாயிர மின்றமிழ்ப்பாடினானுடையவருளிவ்வுலகினில்மிக்கதே-கண்டீர்" என்றந்வயம் ... ... (அ)

(அருள்கண்டீரிவ்வுலகினில் மிக்கதே) அவருடைய அருளன்றோ இந்தலோகத்தில் அதிசயிதமாய்த்து. (பாடினானருள்கண்டீரிவ் வுலகினில்மிக்கது) பாட்டுமன்று, பாடினவருமன்று, பாட்டுக்கடியானவருளுமன்று, இவரருளாய்த்து. (இன்றமிழ்ப்பாடினானித்யாதி) வகைமுறுகலான ஸ்ரீகீதைசொன்னவனுடையவருளன்று, அவன் * நெறியெல்லாமெடுத்துப்பாடினவிடத்திலும் பட்டாரும்படாதாருமாய்த்து. இவரருள் அப்படியன்றியிலே, "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போலவனுடைய, பேருந்தார்களுமே பிதற்றப்பண்ணிற்றாய்த்து. (அருளித்யாதி) "நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி" "நெறியுள்ளியுரைத்த - அம்பகவன்" என்று தான்றோன்றியான தன்னுடைய ஜ்ஞாநங்கொண்டு சொன்னதன்றிக்கே அவனுடைய வருள்கொண்டு பாடினதன்னேற்றமுண்டே இவரருளுக்கு.

(இன்றமிழ்பாடினானருள்கண்டீரில்வுலகினில் மிக்கது) "கேட்டாரார்வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்" என்று அந்தலோகத்தில் இவருடைய பாட்டுமிக்காப்போலே இந்தலோகத்தில் அருள் மிக்கது. இங்கு அருள்மிக்கு அங்குபோகம் மிகும்படியிறே லோகஸ்வபாவங்களிருப்பது. (இவ்வுலகினில்மிக்கதே) அவனுடைய வருள் ஆழ்வாரளவிலே சுவறிவிட்டது, இவருடைய வருள் ஸாம்ராஜ்யம் பண்ணாநின்றது. அவனுடைய அருளைகொண்டாடுமவர்கள் அடியவர்களாய், இவரருளைலோகமடங்கக் கொண்டாடும்படி தேஜிஷ்டமாய்த்து. (ஆயிரமித்யாதி) ஸ்ரீகீதைசொன்ன க்ர்ஷ்ணனென்றால் கையெடுப்பாரில்லை, திருவாய்மொழிபாடின ஆழ்வாருடைய ஊரின்பேரைக்கேட்க இருந்ததேகுடியாகக் கையெடாநின்றது. திருவாய்மொழிகேட்டால் ஈசுவராபிமாநிகளைக் கையெடார்களிறே. (கண்டீர்) இவ்வம்சம் நான் சொல்லவேண்டியிருந்ததோ, ப்ரத்யக்ஷமன்றோ. (கண்டீர்) அவனுடைய அருள் சாஸ்த்ரகம்யம்; இது ப்ரத்யக்ஷஸித்தம். (இவ்வுலகினில்-கண்டீர்) இப்போது இவ்வுலகத்திலேகண்டிகோளே, அந்த லோகத்திலே போனால் அங்குக் காணுகிறிகோள். (இவ்வுலகினில்மிக்கது) இந்தலோகத்தையும் ஆழ்வாருடையவருளையும் சீர்தூக்கிப் பார்த்தால் அதிலும் விஞ்சியிருப்பது இவரருளன்றோ. *கடல்மண்ணெல்லாம்விலையோவெனமிளிரும்படியிறே இவருடைய கண்ணுடைமையிருப்பது. ... ... (அ)

அ.—ஒன்பதாம்பாட்டு. (மிக்கவேதியரித்யாதி) கீழே .. ஆழ்வாருடைய குணகீர்த்தநம் பண்ணும்படி அவர் தமக்கு க்ர்பைபண்ணினபடியைச்சொல்லி இதுக்குத் தண்ணீர்த்துரும்பான அநாதிசர்மங்களை ஆழ்வார்தம்முடையபார்வையாலே பாறவடித்தபடி சொல்லி,

அ.—ஒன்பதாம்பாட்டில்,"ஆழ்வாருடையவருள் "உலகினில் மிக்கது" என்கைக்கடியென்னென்னில்; என்னுடைய தண்மை பாராதே ஸகலவேதங்களினுடைய ரஹஸ்யார்த்தத்தைப்பாடி,அத்தையெனக்குபகரித்தாரென்றார்-கீழ்; "நீசனேன் நிறைவொன்றுமி லேனென்கண் பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதி" என்று அவ்விஷயத்தில் ஆழ்வாரருளிச்செய்த்தை, ஆழ்வார்திருவடிகளிலே இவரருளிச்செய்கிறார்.

மிக்கவேதியர்வேதத்தினுட்பொருள்
நிற்கப்பாடியெனெஞ்சுள்நிறுத்தினான்;
தக்கசீர்ச்சடகோபனென்னம்பிக்காட்
புக்ககாதலடிமைப்பயனன்றே.

அப்படியான ஆழ்வாருடைய க்ர்பாவைபவத்தை திக்குக்கள் தோறும் அறிவிக்கக்கடவேனென்று தம்முடைய வாசாவிசேஷத்தைச்சொல்லி, "సృష్టస్త్వం వనవాసాయ" "க்ர்பயாபர்யபாலயத்" என்றும், "அருளினன்" என்று தொடங்கி, "ஆழியானருள்தருவானமைகின்றான்" என்றது முடிவாக ரிஷிகளும் ஆழ்வார்தாமுமாக பகவத்க்ர்பையை ஆதரித்துப்போகாநிற்க, நீர் ஆழ்வாருடைய க்ர்பாப்ரஸித்தியாலே ப்ரவணரானபடியென்னென்ன; பகவத்க்ர்பையிற்காட்டில ஆழ்வாருடைய க்ர்பை இந்தலோகத்திலே அபிவிர்த்தமாகையாலேயென்றுசொல்லி நின்றது - கீழ்; இதில்-கீழே ஆழ்வாருடைய ஜ்ஞாநப்ரதாநம் ப்ரஸ்துதமாகையாலே, அவர்ஸகலவேதாந்த தாத்பர்யமான அர்த்தவிசேஷத்தைத்தமக்கு அறிவித்த ப்ரகாரத்தைச்சொல்லி, அதுக்கீடான குணங்களையுடையராகையாலே பூர்ணரான ஆழ்வார்விஷயத்தில் சேஷபூதன் ப்ரேமமேயன்றோ அவர்க்கடிமைசெய்கையில் ப்ரயோஜநமென்று உபகாரஸ்ம்ர்தியாலே அவர்க்கு சேஷபூதனென்று ப்ரேமபூர்வகமாகப் பிறக்குமாதரமன்றோ அடிமையில்முடிந்தநிலமென்கிறார்.

கீழ்நாலாம்பாட்டிலே - ஆசார்யவிச்வாஸஞ் சொன்னார்; மேலிரண்டுபாட்டாலே - ஆசார்யவைபவமும் அவனுடைய உபகாரவைபவமும் சொன்னார்; இதில் - உபகாரப்ரகாரோபபாதநம் பண்ணுநின்றுகொண்டு தமமுடைய க்ர்தஜ்ஞதையைச் சொல்லுகிறார். ஆசார்யனுக்குக்ர்பையேவிஷயமாய் சிஷ்யனுக்கு க்ர்தஜ்ஞதையே விஷயமாயிருக்கும்.

ஒன்பதாம்பாட்டு.மிக்கதென்கைக்கு என்றது-மிக்கதென்றறிகைக்கென்றபடி. ஸ்ரீமதுரகவிகள் கங்காதீரத்தினின்றும் ஆழ்வாருடைய திவ்யதேஜஸ்ஸை ஸாக்ஷாத்கரித்துவந்த மஹாயோகிகளாகையாலே இவருக்கொரு தண்மையுமுண்டோவென்ன; வ்யாக்யாதாத்ர்ஷ்டாந்தமுகேந நைச்யமென றருளிச்செய்கிறார் (நீசனேனித்யாதி.)

ப-ரை.—மிக்கவேதியர்- அதிசயித்தப்ராஹ்மணர்களுடைய, வேதத்தின்-வேதத்தினுடைய, உட்பொருள்-ஸூக்ஷ்மமான அர்த்தத்தை,நிற்க-நிற்கும்படி,பாடி-புரபத்திவிஷயமாகப்பாடி,என்னெஞ்சுள்-என்மனஸ்ஸிலே,நிறுத்தினான்-ஸுப்ரதிஷ்டிதமாம்படி பண்ணினார்; தக்க-தகுதியான, சீர் - ஜ்ஞாநாதிபூர்த்தியையுடைய, சடகோபனென்னம்பிக்கு-என்னுடைய பூர்ணரான ஆழ்வார்க்கு,ஆட்புக்ககாதல் - தாஸ்யத்திலே ப்ரவேசத்தாலுண்டானகாதல, அடிமை-தாஸ்யத்தைக்கு, பயனன்றே-ப்ரயோஜநமன்றோ. . ... *

வ்யா.—(மிக்கவேதியர்) ப்ரமாணஶ்ரேஷ்டமான வேதத்தையே நிரூபகமாகவுடையவர்கள்."உளன்சுடர்மிகுசுருதியுள்" என்று ஆழ்வாரருளிச்செய்யக் கேட்டிருக்கையாலே, ப்ரமாணச்ரேஷ்டமென்கிறார். அநேகசாகாத்யயநம் பண்ணினவர்களென்றுமாம்.

வ்யா.—(மிக்கவேதியரித்யாதி)ஆழ்வார் தமக்கு அறிவித்த அர்த்தத்தின்சீர்மையை யருளிச்செய்கிறார். (வேதியர்) வேதியராகிறார்-பாஹ்யசாஸ்த்ரங்களை,"காண்பரோகேட்பரோதான்" என்றுகண்ணாலும்பாராதே செவியாலும்கேளாதே நித்யநிர்த்தோஷமானவேதப்ரமாணநிஷ்டரானவர்கள். "వేదశాస్త్రాత్పరం నాస్తి" "வேதஶாஸ்த்ராத்பரம்நாஸ்தி" என்றும்,"வேதநூலோதுகின்ற துண்மையல்லதில்லை" என்றும் சொல்லுகிறபடியே வேதத்துக்கவ்வருகுப்ரமாணமில்லையென்றிருக்குமவர்கள். (மிக்கவேதியர்) அவ்வேதத்திலும்,"వేదవాదరతాః" "வேதவாதரதாः" என்றும், "త్రైవిద్యా మాం సోమపాః పూతపాపాః" "த்ரைவித்யாமாம்ஸோமபாः பூதபாபாः"என்றும் சொல்லியபடியே ஆபாத ப்ரஸித்தமான அல்பாஸ்திரங்களான ஸ்வர்க்காதி புருஷார்த்தங்களையும் தத்ஸாதநங்களான ஜ்யோதிஷ்டோமாதிகளையும புருஷார்தத ஸாதநங்களாக அறுதியிட்டிருக்கையன்றிக்கே, உத்தமபுருஷார்த்தமான் பகவத்ப்ராப்தியே புருஷார்த்தமென்றும், தத்ஸாதநமும், "బ్రహ్మవిదాప్నోతి పరమ్" "ப்ரஹ்மவிதாப்நோதிபரம்" இத்யாதிவாக்யோக்தமான வேதநமாதல், "ముముక్షుర్వై శరణమహం ప్రపద్యే" "முமுக்ஷுர்வைசரண மஹம்ப்ரபத்யே" என்கிற சரணாகதிரூபமான சரமஸாதநமாதலென்று * வேதாந்த விஜ்ஞாநத்திலே ஸுநிச்சிதார்த்தரா யிருக்குமவர்கள். (மிக்கவேதியர்) "மிககார்வேதவிமலர்" என்று - ஆழ்வார்பாடே கேட்கையாலே "மிக்கவேதியர்" என்கிறார். அன்றிக்கே, "மிக்கவேதியர்" என்று - "சுடர்மிகுசுருதி" என்கிறபடியே ப்ரத்யக்ஷாதிகளில் அதிசமான வேதப்ரமாண நிஷ்டரென்றுமாம். (வேதியர் வேதம்) "బ్రాహ్మణానాం ధనం వేదమ్" "ப்ராஹ்மணாநாம்தநம் வேதம்" என்றும், "அந்தணர்மாடு" என்றும் சொலலுகிறபடியே அவர்களுக்கு பரமதநமானவேதம். (வேதியர்வேதம்) வேதத்தையே தங்களுக்கு நிரூபகமாகவும் தநமாகவுமுடையயராயிருப்பர்கள்.

(வேதத்தினுட்பொருள்) அந்த வேதத்திலுண்டான அர்த்தவிசேஷத்தை.

'மிக்க' என்றதுக்குஶ்ரேஷ்டதையும் பஹுத்வமும என்றிரண்டர்த்தம். முந்தினதையருளிச்செய்கிறார் (ப்ரமாணேத்யாதி.)ப்ரமாணஶ்ரைஷ்ட்யமபௌருஷேயத்வாதிகளாலே. இப்படி விசேஷணமிட்டுச் சொல்ல வேண்டுமோவென்ன; ஆழ்வார் விசேஷணமிட்டாப்போலேயருளிச்செய்தாரென்கிறார்(உளனித்யாதி;)இரண்டாமர்த்தம் (அநேகேத்யாதி.)

(வேதத்தினுட்பொருள்) ஸகலவேதங்களினுடைய ரஹஸ்யார்த்தத்தை. வேதாந்தரஹஸ்யம்-ததீயசேஷத்வ பர்யந்தமான பகவச்சேஷத்வ மென்றிறே வைதிகசாஸ்த்ரம் நிர்ணயித்தது.

(நிற்கப்பாடி) துர்க்ரஹமான இந்த ரஹஸ்யார்த்தத்தைக் கேட்பார்க்கு ப்ரதிபத்திவிஷயமாம்படிபாடி. "பரமனைப்பயிலும் திருவுடையார் யவரேலும்" என்றும் "எம்மையாளும் பரமர்" என்றுமருளிச்செய்தாரிறே.

(வேதத்தின் - பொருள்) அதாவது - "వేదైశ్చ సర్వైరహమేవ వేద్యః" "வேதைஶ்ச ஸர்வை ரஹமேவவேத்ய:" என்றும், "வேதப்பொருளேயென்வேங்கடவா" என்றும், "வேதாந்தவிழுப்பொருள்" என்றும் சொல்லுகிறபடியே - ஸகலவேதங்களும் ஒருமிடறாகவோதித் தலைகட்டுவது பகவத்ஸ்வரூபாதிகளையிறே. (உட்பொருள்) அதில் தத்விஷயப்ரதிபாதகமான அம்சம் புறப்பொருளாய், ததீயப்ரதிபாதகமான அம்சம் உட்பொருளாயிருக்கும். அதில புறப்பொருளையே சொல்லிவிடுகையே யன்றிக்கே அதுக்கு ஹ்ருதயமான ததீயவைபவத்தை, * பயிலுஞ்சுடரொளி, * நெடுமாற்கடிமை, இரண்டாலும் அருளிச்செய்தார்.

(நிற்கப்பாடி) துர்க்ரஹமானவேதார்த்தத்தைப்ரதிபத்திவிஷயமாம்படிபாடி. (நிற்கப்பாடி) கேட்டவர்கள் நெஞ்சிலே ஊற்றிருக்கும்படி பாடியென்றுமாம். (வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி) அது * நிற்குமாமறையாளுப்போலே அதில் அர்த்தரூபமானதுவும் ஸர்வகாலமும அழிவின்றிக்கே நிற்கும்படியாகப் பாடியென்றுமாம். (வேதியர் வேதத்தினுடபொருள நிற்கப்பாடி) வைதிகரானவர்கள் அதுக்கு ஹ்ருதயமான அர்த்த தாத்பர்யத்தையறிந்து அதிலே நிஷ்டராம்படி பாடி.

(என்னெஞ்சுள் நிறுத்தினான்) அதுதன்னை என்னெஞ்சிலே ப்ரதிஷ்டிதமாம்படி பண்ணினான். (என்னெஞ்சுள் - நிற்கபாடி-நிறுத்தினான்) பாடுகிறபோதே என்னெஞ்சிலே தொங்கும்படிக் கீடாவிரகிட்டுப்பாடி நிறுத்தினான். (நெஞ்சுள நிறுத்தினான்) அது தன்னிலும்மேலெழச்சொல்லிவிடுகையன்றிக்கே அந்தரங்கமாக உபதேசித்தார்.

வேதார்த்தம பகவச்சேஷத்வமன்றே, உட்பொருளைத் தந்நெஞ்சில் நிறுத்துகையாவதென்னென்ன; அருளிச்செய்கிறார் (வேதாந்தரஹஸ்யமென்றுதொடங்கி ஸ்திரமாக்கின தென்னுமளவும்.) ஆழ்வார் ஏவிக்கொள்ளத் தாம் இங்கே யடிமைசெய்கையாலே தமக்கு இங்கே ஸித்தித்தவடிமை ஆழ்வாருக்கு அர்ச்சாவதாரம் ஏவிக்கொள்ளமாட்டாமையாலே பரமபதத்திலேஸித்தித்ததென்றபடி. வேதாந்தரஹஸ்யம்-ப்ரணவத்தில் சதுர்த்த்யர்த்தம்.

(என்னெஞ்சுள் நிறுத்தினான்) பகவச்சேஷத்வத்துக்குங்கூட மேட்டுமடையான என்னெஞ்சிலே இத்தைஸ்திரமாக்கினார். கல்லைத்துளைத்து அதிலே நீரைநிறுத்துவாரைப்போலே, நிர்விவரமான என்னெஞ்சுக்குமிதுவே விஷயமாம்படி பண்ணினார். இதிறே-என்தண்மையைப்பாராதே என்றிறத்திற்பண்ணின வுபகாரம்.

(தக்கசீர்ச்சடகோபன்) இதுதொடங்கி உபகாரஸ்ம்ருதியாலே தமக்குப்பிறந்த அபிநிவேசத்தைப்பேசுகிறார். (தக்கசீர்ச்சடகோபன்) ஸர்வேஶ்வரன்கவிகள்" என்றால் தகுதியான கல்யாணகுணங்களையுடைய ஆழ்வார்.

(என்னெஞ்சுள் நிறுத்தினான்) புன்மையே வேஷமான என்னெஞ்சிலே படுத்தினார். (நிறுத்தினான்) உபதேசித்தவர் தாமே குலைக்கிலும் குலையாதபடி த்ருடாத்யவஸாயமாக வுபதேசித்தார். (என்னெஞ்சுள்நிறுத்தினான்) தத்விஷயமுமுட்பட ஓடுபோகாத வென்னெஞ்சிலே? ததீயவைபவமுட்பட நடையாடும்படி பண்ணினார். (மிக்கவேதியர்வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடியென்னெஞ்சுள் நிறுத்தினான்) வேதார்த்தங்களைவகுத்து அதுக்குப் பாசுரமிட்டுத் திருவாய்மொழி பாடினாற்போலேயோ அப்பரமார்த்தங்களை என்னெஞ்சிலே படுத்தினவருமை. வேதார்த்தங்களைத் திருவாய்மொழியிலே சேர்த்து அத்திருவாய்மொழியர்த்தங்களை என்னெஞ்சிலே சேர்த்தார். ஆசார்யவைபவம் கைப்பட்டவனுக்காய்த்து ஸகலவேதார்த்தங்களும் கைப்படுவது. (மிக்கவேதியாதி) ப்ரமாண வைபவத்தையும், ப்ரமாத்ருவைபவத்தையும், ப்ரமேயமான தத்வ வைபவத்தையும் அபிமதவைபவத்தையும இவர்நெஞ்சிலே பூர்ணோபதேசம் பண்ணினாராய்த்து.

(தக்கசீர்ச்சடகோபனென்னம்பி) இப்படி உபதேசிக்கவல்ல ஜ்ஞாநாதிபூர்த்தியைக் காட்டி என்னுடையசாட்யத்தைப் போக்கித்தம்முடைய பூர்த்தி நிலைநின்றவர். குறைவாளனைக்குறைவறுக்கையிறே ஒருவன்பூர்த்திக்குமேலெல்லை.

உக்தார்த்தத்துக்கு த்ருஷ்டாந்தமுகேந விவரிக்கிறார் (கல்லைத்துளைத்தித்யாதி.) நிர்விவரமான - பகவச்சேஷத்வம்கூடப் புகுராதபடியான. கீழோடேயிவ்வர்த்தத்துக்குச் சேர்த்தியாகையாலே ப்ரக்ருதார்த்தோப ஸம்ஹாரம் பண்ணுகிறார் (இதிறேயித்யாதி.)

இதுதொடங்கி என்றது - இந்த அர்த்தமும் மேற்பாட்டும். "தக்க" என்றதுக்கு ஒன்றுசொல்லவேண்டுகையாலே, "ஸர்வேஶ்வரன்கவி" என்று சொல்லுகைக்குத்தக்கவொன்றர்த்த மருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனித்யாதி.)

“அயர்வறுமமரர்களதிபதி” என்றால் ஸர்வேஶ்வரத்வத்துக்குப்போரும்படி யிருக்குமாப்போலே, “ஸர்வேஶ்வரன்கவிகள்” என்றால் போரும்படியாயாய்த்து ஆழ்வாரிருக்கும்படி; “ஏற்கும் பெரும்புகழ் வானவரீசன்கண்ணன்றனக் கேற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்” என்று தாமேயருளிச்செய்தாரிறே. (என்னம்பிக்கு) அதுக்குமேலே யொருபௌஷ்கல்யமிறேயிது. என்னைவிஷயீகரிக்கைக்குத் தகுதியான சீலாதிகுண பௌஷ்கல்யத்தை யுடையவரானவர்க்கு.

(ஆள்புக்ககாதல்) அநந்யார்ஹ சேஷமாக்கினருசி.

(நம்பி) விபூதிக்காக வுபதேசித்தாலும் தம்முடைய ஜ்ஞாநாதிகளைக் கரைகாணவொண்ணாதவர். (என்னம்பி) அவருபதேசித்த வர்த்தங்களிலும் அவருடையபூர்த்தியிலேயாய்த்து இவர்தோற்றது. (தக்கசீர்ச்சடகோபனென்னம்பி) * தக்க கீர்த்தித் திருக்குறுங் குடி நம்பியானவவருடைய நம்பியன்று இவருடையநம்பி. அப்பூர்த்தி என்னளவிலே வந்ததில்லையே.

(ஆட்புக்ககாதல்) அவர்க்கடிமைபுக்கதாலுண்டான வாதரம். (அடிமைப்பயனன்றே) அடிமையே ப்ரயோஜநமாகவுடைய தன்றோ. முற்பட அடிமைபுக்கு, அநந்தரம் ஆதரம் நடந்து, பின்பு அடிமைசெய்யுமதுவே அவர்க்குப்ரத்யுபகாரம். முற்பட சேஷபூதனாய், பின்பு ப்ரேமம்நடந்து ப்ரேமாநுரூபமான கிஞ்சித்காரமும் நடக்கவேணும். ஆசார்யபவ்யதையும் ஆசார்யப்ரேமமும், ஆசார்யகிஞ்சித்காரமும் இம்மூன்றும் அபேக்ஷிதமிறே சிஷ்யனுக்கு. அவர், பகவச்சேஷத்வத்தையும் பகவத்ப்ரேமத்தையும் பகவச்சேஷவ்ர்த்தியையும் உபதேசித்தார்; இவர், ஆழ்வார்க்கு சேஷமாய் அவர்க்கேஸ்நிக்தராய் அவர்க்கேகிஞ்சித்கரிக்கத்தேடுகிறாராய்நின்றது; இவர் கற்றது இதிலேயாய்த்து. அவர் புறப்பொருளைவிட்டு உட்பொருளைக் கொடுத்தார்; இவர் உட்பொருளானபகவத்விஷயந் தன்னைப் புறப்பொருளாக்கி, அதிலுமுட்பொருளான ஆழ்வார் திருவடிகளிலே சேஷபூதராய் ப்ரேமபூர்வகமான கைங்கர்யத்திலே இழிகிறாராய்த்து.

கண்ணன் தனக்குக்கவியென்றால் “ஏற்கும்பெரும்புகழ்” என்று கருதிப்ரமாணமருளிச்செய்கிறார் (ஏற்குமித்யாதி.) “தக்கசீர்” என்றபோதே கல்யாணகுணங்களைச் சொல்லியிருக்க “நம்பி” என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (அதுக்குமேலே யித்யாதி வாக்யத்வயத்தாலே.) ஆள்புக்ககாதல் - ஆள்புக்குப்பண்ணினகாதல். இத்தையருளிச்செய்கிறார் (அநந்யேத்யாதி.)

(அடிமைப்பயனன்றே) இந்தருசியன்றோ அப்போதே தாஸ்யமான ப்ரயோஜநத்தோடே வ்யாப்தமாயிருப்பது. பகவத்விஷயத்தில் ருசியடியாகப்பிறந்த தாஸ்யம், சரீரவிஸ்லேஷம் பிறந்து அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஒருதேசவிசேஷத்திலே சென்றால் பெறக்கடவதாயிறேயிருப்பது; அங்ஙனன்றிக்கே, ஆழ்வார்பக்கல் பிறந்தருசி, இச்சரீரத்தோடேயிங்கேயாழ்வார்திருவடிகளிலேயெல்லாவடிமையுஞ் செய்யலாம்படிபண்ணும். "துயரறுசுடரடிதொழுதெழு" என்றுமுதலிலே அபிநிவேசித்த ஆழ்வார்க்கு * முனியே நான்முகனுக்கவ்வருகேயிறே பேறாய்த்து; இவ்விஷயத்தில் ருசிபிறந்தால் அத்தனைவிளம்பியாதென்கிறது. அன்றேயென்றது - ஆமென்றுமாம் ... ... (௬௰)

(அடிமைப்பயனன்றே) அடிமை ப்ரயோஜநமென்னுமிடம் ஆழ்வார்ஸ்ரீபாதத்திலே கற்றார். (அன்றே) அதுவேயன்றோ அர்த்தம். அந்த * வழுவிலாவடிமை செய்கிறதிற்காட்டில் இதுவன்றோவுறுவது. ... ... (௬)

அ.—பத்தாம்பாட்டு. (பயனன்றாகிலுமித்யாதி) கீழ்ப்ரபந்தத்திலோடின தாத்பர்யம் - ஆழ்வாருடைய ஸர்வப்ரகாரவைலக்ஷண்யமும், இப்படிவிலக்ஷணரானவாழ்வார் தம்பக்கல் பண்ணின உபகாரவைபவமுமிறே. தம்முடைய தோஷத்துக்கு எதிர்த்தட்டான ஆழ்வார்வைலக்ஷண்யமும், தம்முடைய குறைக்கெதிர்த்தட்டான உபகாரகத்வமும், இவ்விரண்டையும் சொல்லிக்கொண்டு போந்தார்-கீழ்; இப்பாட்டில்-அவ்வுபகாரத்துக்குப்ரத்யுபகாரம் தேடிக்காணாமையாலே தெகுடாடுகிறார். "வேதத்தினுட்பொருள்நிற்கப்பாடியென்னெஞ்சுள்நிறுத்தினான்" "[illegible]" "யோமாதததாதிஸ இதேவமாவா:" என்று முமுக்ஷுதசையோடு முக்ததசையோடுவாசியற உபகாரஸ்ம்ருதி நடக்குமதுபோக்கி ப்ரத்யுபகாரம் பண்ணித் தலைக்கட்டப்போகாதிறே. ப்ரத்யுபகாரநிரபேக்ஷத்வம் ஆசார்யலக்ஷணமாய் ப்ரத்யுபகாரஸாபேக்ஷத்வம் சிஷ்யலக்ஷணமாகையாலே, அதுக்குவழிதேடிக்காணாமையாலே அலமர்கிறார். உபகாரம் அதுக்குப்ரத்யுபகாரந்தேடுகையிலேமூட்டும்; உபகாரகௌரவம் ப்ரத்யுபகாரமில்லாதபடிபண்ணும். அதுக்கு ஸத்ருசப்ரத்யுபகாரமாகவேணும்; அதுண்டாகிலிறே இவன்பண்ணலாவது

அடிமையை, பயனாக-பலமாக வுடைத்தானதென்று அர்த்தமருளிச்செய்கிறார் (அப்போதேயித்யாதி.) வ்யாவர்த்யபூர்வகம் விவரணம்பண்ணுகிறார் (பகவதித்யாதி.) இத்சைத மூதலிக்கிறார் (துயரறுசுடரித்யாதி.) முந்தினவர்த்தத்தில் "அன்றே-அடிமைப்பயன்" என்றந்வயம்; இரண்டாமர்த்தத்துக்கு யதாக்ரமமந்வயம். (௬௰)

அ.—பத்தாம்பாட்டில், ஆழ்வார் தமக்கு உபகரித்தவுபகாரத்தையநுஸந்தித்தவாறே, தாம் இதுக்கு முன்பு ஆழ்வார்விஷயத்தில் நின்றநிலையடங்க முதலடியிட்டிலராகத்தோற்றுகையாலே, அவர் பண்ணின வுபகாரத்தைப்பேசுகிறார். அவன் பண்ணின உபகாரத்துக்குப்ரத்யுபகாரமில்லையோவென்னில்; "[illegible]" "கர்த்ஸ்நாம்வா ப்ருதிவீம் தத்யாந் நதத்துல்யம் கதஞ்சந" என்று - பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணையான பூமியும்ஸத்ர்ஶமன்றென்றதிறே சாஸ்த்ரம். அவன் இவனுக்கு உபகரித்தது ஸர்வாதிகமாயிருப்பதொரு மிதுநத்தையானால், அப்படியேயிருப்பதொரு மிதுநத்தையுபகரித்தாலிறே இவன் ப்ரத்யுபகாரம்பண்ணினானவது; ஆகையாலே ஆசார்யவிஷயத்தில்எல்லாம் செய்தாலும் அவன்பண்ணின வுபகாரத்தைப்பார்த்தால் ஒன்றும் செய்திலனாய்என்று மொகக்குறைவாளனாய்ப் போருமித்தனை.

பயனன்றாகிலும்பாங்கலராகிலும்
செயல்நன்றாகத்திருத்திப்பணிகொள்வான்
குயில்நின்றார்பொழில்சூழ்குருகூர்நம்பி
முயல்கின்றேனுன்றன் மொய்கழற்கன்பையே.

ப-ரை.—பயனன்றாகிலும் - ப்ரயோஜநமில்லாதபோனாலும், பாங்கலராகிலும் - பாங்கற்றவர்களாகிலும், செயல்-தம்செயலாலே, நன்றாக - அநுஷ்டாநபாயந்தமாக, திருத்தி - சிக்ஷித்து, பணிகொள்வான் - பகவத்பாகவத கைங்கர்யத்தில் அந்வயிப்பிக்குமவராய, குயில் நின்று - நேரிர் பரிஸரத்திலே இனி "எத்தைச்செய்வோம்" என்கிறதலேயேய்ப்போட்ட காலம்போமித்தனை. இவன் திருத்தித்தருகையாலே பகவத்விஷயத்துக்கு ஆத்மஸமர்ப்பணம் பண்ணலாம், இவன்றானே திருத்தினவத்தை இவனுக்குக் கொடுக்கைஸத்ர்சமன்றே.

பத்தாம்பாட்டு. "ஆட்புக்ககாதலடிமைப்பயனன்றே" என்று-தாம் அநுகூலராய்கைங்கர்யங்களைப்பண்ணிக்கொண்டிருக்க, "பயனன்றாகிலும்பாங்கலராகிலும்" என்று அநுஸந்திக்கக்கூடுமோவென்கிற சங்கையிலே அது தன்னெஞ்சிற்படாமையாலேயருளிச்செய்கிறாரொன்று அவதாரிகையருளிச்செய்கிறார் (ஆழ்வாரித்யாதி.) தமக்கு-மதுரகவிகளுக்கு. உபகாரத்தை என்றது-"என்னெஞ்சுள்நிறுத்தினான்" என்றத்தைக்கடாக்ஷித்து. இதுக்குமுன்பு என்றது-"பயனன்றாகிலும்" இத்யாத்யநுஸந்தாநத்துக்கு முன்பென்றபடி. "அவன் பண்ணினஉபகாரம்" என்றது-தன்பக்கலொன்றுமின்றிகேயிருக்கஅவன் பண்ணினஉபகாரமென்றபடி. முதலடியிட்டிலராகத்தோற்றுகைக்கு ஹேது தாம்பண்ணின அநுகூலாசரணம் ஸத்ர்சமல்லாமையாலே அத்தைப்பண்ணக்கூடாதென்று கருத்து. ப்ரத்யுபகாரம்-ஸத்ர்சோபகாரம். ப்ரத்யுபகாரமில்லாமைக்கு சாஸ்த்ரங்காட்டினவநந்தரம் உபபத்தியுங்காட்டுகிறார் (அவனிவனுக்கித்யாதி.)

யிருக்கிற குயில்களுங்கூட நின்று, ஆர்-திருவாய்மொழியைப்பாடுகிற ஸம்ருத்தியையுடைய, பொழில - பொழிலாலே, சூழ்-சூழப்பட்ட, குருகூர்-திருநகரிக்கு, நம்பி-நிர்வாஹகரானவரே, உனறன-தேவரீருடைய, மெய்-சுலாக்யமான, கழற்கு - திருவடிகளுக்கு, அன்பையே - அபிநிவேசத்தையே, முயல்கின்றேன் - அர்த்திக்கின்றேன்.

வ்யா.—(பயனன்றாகிலும்) நாட்டிலேயொருவனுக்கு ஒருவனுபகரிப்பது ஒருப்ரயோஜநத்தைப்பற்றவிறே; அங்ஙனொருப்ரயோஜநமில்லாதிருக்கச்செய்தேயும். (பாங்கலராகிலும்) ப்ரயோஜநமில்லாவிட்டால், சொல்லுகிற ஹிதங்கேட்கைக்குப் பாங்காயிருக்கலாமிறே; அங்ஙன்பாங்கின்றிக்கே யிருந்தார்களேயாகிலும்.

வ்யா.—(பயனன்றாகிலும் பாங்கலராகிலும்) "ధర్మార్థౌ యత్ర న స్యాతాం శుశ్రూషా వాపి తద్విధా। తత్ర విద్యా న వక్తవ్యా" "தர்மார்த்தௌ யத்ர நஸ்யாதாம் சுச்ரூஷா வாபி தத்விதா। தத்ர வித்யா நவக்தவ்யா" என்கிறபடியே தர்மார்த்தரூபமான ப்ரயோஜநமாதல், "శుశ్రూషా" "சுச்ரூஷா" என்கிற அதிகாரமாதலின்றிக்கேயிருக்கச்செய்தேயும். அத்ருஷ்டப்ரயோஜநமாதல் த்ருஷ்டப்ரயோஜநமாதலின்றிக்கேயிருக்கச்செய்தேயும், பகவத் ப்ரியஸித்திக் காதல் பகவத்ஸமாராதநசேஷமாக இவன்பக்கலுண்டான த்ரவ்யஸித்திக்காதலன்றிக்கே, அவனுடைய சுச்ரூஷையாகிற அதிகாரபூர்த்திகண்டாயிறே பகவத்விஷயத்தை உபதேசிக்கைக்கு யோக்யதையுள்ளது. "అర్థదః, జ్ఞానదః, శుశ్రూషుః, అధ్యాప్యాః" "அர்த்தத:, ஜ்ஞாநத:, சுச்ரூஷு:, அத்யாப்ய:" என்கிறபடியே நிரவதிகவத்ஸலனானவனும், "శిష్యస్తేఽహం శాధి మాం త్వాం ప్రపన్నమ్" "சிஷ்யஸ்தேஹம் சாதிமாமத்வாம் ப்ரபந்நம்" என்றபின்பிறே உபதேசப்ரவர்த்தகனாய்த்து. இவர் அப்படியன்றிக்கே, துர்க்கதியேபற்றாசாகவாய்த்து உபதேசித்தது. *புன்மையாகக் கருதுவதேபற்றாசாகவாய்த்து *இவர் அன்னையாய்த்தனாய்த்து. இத்தலையில் ஒருநன்மைபார்க்கவேண்டிற்றில்லை புன்மையாகிற துர்க்கதி. ஸ்வப்ரயோஜநநிரபேக்ஷமாகப் பிறருடைய துர்க்கதியே பற்றாசாகவாய்த்து ஸத்துக்கள் உபதேசிப்பது. "శ్రూయతాం పరమార్థో మే దైతేయా దనుజాత్మజాః। న చాన్యథైతన్మన్తవ్యం నాత్ర లోభాదికారణమ్" "ச்ரூயதாம்பரமார்த்தோமே தைதேயா தநுஜாத்மஜா:। நசாந்யதைதந்மந்தவ்யம் நாத்ரலோபாதிகாரணம்" என்கிறபடியே. "నాత్ర లోభాదికారణమ్" "நாத்ரலோபாதிகாரணம்" என்கிறவிடம்-ஸ்வப்ரயோஜநநிரபேக்ஷம்; "దనుజాత్మజాః" "தநுஜாத்மஜா:" என்கிறவிடம் - ஆஸுரஸம்பந்தம் பிறருடையதுர்க்கதி; "శ్రూయతామ్" "ச்ரூயதாம்" என்கிறவிடம்-உபதேசம்; "పరమార్థః" "பரமார்த்த:" என்கிறவிடம் - உபதேஷ்டவ்யமான அர்த்தகௌரவம்; "మే" "மே" என்கிறவிடம் - உபதேஷ்டாவினுடைய ஆப்திபூர்த்தி.

இப்படியிருக்குமவர்களுக்கு ஹிதஞ்சொல்லுகைக்கு ஹேது வென்னென்னில்; இவர்களநர்த்தம் பொறுக்கமாட்டாமையிறே. இப்படியுபதேசித்தாருண்டோவென்னில்; ராவணனுடைய துர்க்கதியைக்கண்டு, "[illegible]" "மித்ரமௌபயிகம்கர்த்தும்" என்று-அவனுக்கு ஹிதஞ்சொன்னாளிறே பிராட்டி. ஒருவன், தலைக்கடையையும் புழைக்கடையையும் அடைத்துக்கொண்டு அகத்துக்குள்ளேகிடக்க அகம் நெருப்புப்பட்டுவேவாநின்றால், கண்டுநின்றார் அவிக்கும்போது, தங்களுக்கொரு ப்ரயோஜநத்தைப்பார்த்தாதல், உள்ளேகிடந்தவனபேக்ஷித்ததுக்காக வாதலன்றே யவிப்பது; இப்படியாய்த்து ஆழ்வார்படியும்.

(செயல்நன்றாக) தனக்கொரு ப்ரயோஜநமில்லையேயானாலும், எதிர்த்தலைபாங்கின்றியேயொழிந்தாலும் அவனுஜ்ஜீவிக்கும்படியென்னென்னில்; தம்முடைய செயலாலே எல்லாம நன்றாம்படிபண்ணி. இவன்செயல்தான் நன்றாமபடிபண்ணி யென்றாகவுமாம்.

(பயனன்றாகிலும் பாங்கலராகிலும்) நிஷ்பலமேயாகிலும் அநதிகாரிகளேயாகிலும்.

(செயல்நன்றாகத் திருத்தி) அநுஷ்டாநபர்யந்தமாக வுபதேசித்துத் திருத்தினார். என்னளவன்றியிலே தம்முடைய வளவிலே உபதேசித்தார். க்ஷத்ரபந்துவுக்கு துர்க்கதியே பற்றாசாக வைஷ்ணவனுபதேசித்தவிடத்திலும் காலாந்தரத்திலிறே அவனுக்குபலித்தது, இவர் * ஊரும் நாடு முலகமும் தன்னைப்போலே யாக்குமவராகையாலே * செயல்நன்றாகததிருத்தினார். (செயல்நன்றாகத் திருத்தி) இவருபதேசித்த வர்த்தம என்னெஞ்சிலேபட்டு அதுதான் அத்யவஸாயபர்யந்தமாய், அவ்வளவன்றிக்கே அநுஷ்டாநசேஷமாய், அவ்வநுஷ்டாநந்தான் ஸதஸதநுஷ்டாந மிச்ரமாகையன்றிக்கே ஸதநுஷ்டாநமேயாம்படி திருத்தினார். முற்பட ச்ரவணமும் ச்ருதமானவர்த்தத்தில் மநநமும் மநநமானவர்த்தத்தில் மஹாவிச்வாஸமும் விச்வஸிதமானவர்த்தத்தில் அநுஷ்டாநமும் அதில் அஸதநுஷ்டாநம் சலசாதேஸதநுஷ்டாநமேயாய்ப் போருகையுமிறே செயல் நன்றாகத் திருத்துகையாவது.

துர்க்கதிகண்டுபதேசிக்கைக்கு உபபத்தியுங்காட்டுகிறார் (ஒருவனித்யாதி.) அகம்-க்ர்ஹம். சங்காஸமாதாந பூர்வகம் எடுத்த ப்ரதீகத்துக்கு தாத்பர்யம் (தனக்கித்யாதி.) ஸ்வப்ரயோஜந மில்லாதேபோனாலும் அவன்ப்ரயோஜநமானாலும் ஸித்திக்கவேண்டாவோவென்று சங்கைக்குக்கருத்து. "செயல்நன்றாக" என்றது-ஸாமாந்யமாக விருக்கையாலே, ஆழ்வாருடைய செயலாலே என்று கீழருளிச்செய்து, இவன் செயலை நன்றாகப் பண்ணியென்று அர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (இவனித்யாதி.)

(திருத்திப்பணிகொள்வான்) "தீர்ந்தவடியவர்தம்மைத்திருத்திப்பணிகொள்ளவல்ல" என்று—"ப்ராப்யமும்ப்ராபகமுந்தானே" என்றத்யவஸித்திருக்குமவர்களுடையவிரோதியைப்போக்கி அடிமைகொள்ளுமவனென்றதிறே ஸர்வேஶ்வரனை; அங்ஙனன்றிக்கே, இவையொன்றுமின்றிக்கே யிருக்குமவர்களையும் திருத்திப்பணி கொள்ளுமவரிறே ஆழ்வார். "பணிகொள்வான் - குருகூர்நம்பி" என்றந்வயம்.

(திருத்தி) இவற்றில் என்கையில் என்னைக்காட்டிக்கொடாதே தாமே கைக்கொண்டாராய்நின்று இவ்வவஸ்தாபந்நமாக்கினார்.

(பணிகொள்வான்) பகவத்பாகவதவிஷயங்களில் கிஞ்சித்காரத்திலே மூட்டினார். திருத்தினபலம் விநியோகமகொள்ளவேணுமே, இவரும் அவர்க்குகப்பாகவாய்த்து பகவத்பாகவத விஷயங்களுக்கு அடிமைசெய்வது. பகவத்கிஞ்சித்காரமும வேணும், ஆசார்யகிஞ்சித்காரமும் வேணும், வைஷ்ணவகிஞ்சிதகாரமும் வேணும். பகவத்பாகவதவிஷயங்களுக்கு அடிமைசெய்யும் ஆசார்யனுக்குப்ரியமாக பகவத்பாகவதவிஷய மிரண்டும் உகக்கைக்கு ஆசார்யனுக்கு அடிமைசெய்யும். பதத்ரய நிஷ்டையைப்போலே கிஞ்சித்காரத்ரயமும் இவனுக்கு அபேக்ஷிதமா யிருக்கும். ஸ்வரூபம் பகவதகிஞ்சிதகாரத்திலே மூட்டும்; பகவத்ப்ரீதி பாகவதகிஞ்சித்காரத்திலேமூட்டும்; பாகவதப்ரீதியும் இவ்வ்யக்தித்வயத்தினுடைய வைபவத்தை உபதேசித்தஉபகார ஸ்ம்ர்தியால் வந்த விவன் தன்னுடைய ப்ரீதியும் ஆசார்யகிஞ்சித்காரததிலே மூட்டும். இப்படி ஒன்றுக்கொன்று ப்ரவர்த்தகமாயாய்த்து மூன்று விஷயமுமிருப்பது. இதில் ஒன்று நிருபாதிகஸம்பந்தம்; மற்றவை யிரண்டும் ஸோபாதிகஸம்பந்தம். அதில் ஒன்று உததேச்யதையுபாதியாகப் பிறக்கும்; ஒன்று உபகாரகத்வமுபாதியாகப்பிறக்கும்.

(பயனித்யாதி) அநதிகாரியான வென்னை அதிகாரத்தின் மேலெல்லையிலேநிறுத்தி நிஷ்பலமான வென்னை பகவத்பாகவத கைங்கர்யத்திலே அந்வயிப்பித்துத் தாமருளின ப்ரயோஜநங்கொண்டார்.

"திருத்தி" என்றதுக்கு - திருந்தாதவரையும் திருத்தியென்றாய், வ்யாவர்த்யபூர்வகமாக தாத்பர்யமருளிச்செய்கிறார்(தீர்ந்த இத்யாதிவாக்யத்வயத்தாலே.) இவையொன்றுமின்றிக்கே என்றது - ப்ராப்யமவனே என்றும் ப்ராபகமவனே என்றும் சொல்லுகிற அத்யவஸாயங்களின்றிக்கே என்றபடி. "கொள்வான்" என்றது-கொள்ளுகைக்காகவென்று போராமைக்காக அந்வயங்காட்டுகிறார் (பணிகொள்வா னித்யாதி.)

(குயில்நின்றார் பொழில்சூழ்) என்றவிடம் - திருத்திப் பணி கொள்ளும்படிக்கு த்ருஷ்டாந்தம். இவர் ஒருகாலத்திலே ஆற்றாமையாலே, "காணவாராய்" என்று கூப்பிடுவதுமொருபாசுரமுண்டு; "யாவர் நிகரகல்வானத்தே" என்று களித்துச் சொல்லுவதுமொருபாசுரமுண்டு; இவர்பாசுரத்தைக்கேட்ட குயில்களும் செவியேற்றத்தாலே யிப்பாசுரத்தையேசொல்லும்; ஆகஇரண்டுபாசுரத்துக்கும் குயில்களாய்த்துப் பயிற்றுவன.

(பயனித்யாதி) அவன் * தீர்ந்த வடியவர்தம்மைத் திருத்திப் பணிகொள்ளுமித்தனை, இவர் கருந்தறையிலே திருத்துமவராய்த்து. அவன் அதிகாரநிஷ்பத்தி பிறந்தால் ப்ராப்யவிரோதிகளைப் போக்கிப் பணிகொள்ளும்; அவ்வதிகார நிஷ்பத்தி தன்னையுங்கொடுத்தாய்த்து இவர் அடிமைகொண்டது. அதிகாரநிஷ்பத்தி ஆசார்யனாலே; புருஷார்த்த நிஷ்பத்தி ஈச்வரனாலே. அதிகாரமாவது- ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் புரையறுதியாகையாலே, "செயல்நன்றாகத்திருத்தி" என்று-அவராலேயிறே இவர்க்குண்டாய்த்து. இவனைத் தன்னுபதேசத்தாலே வெளிச்செறிப்பித்து, தாநநுஷ்டித்துக்காட்டி, தன்னில் விஞ்சின அநுஷ்டாநம் இவன்கையிலே கண்டாலாய்த்து அவன் இவனை பகவத்பாகவத கிஞ்சித்காரயோக்யனென்றறுதியிடுவது. [ஆர்ந்தபுகழச்சுதன்] இவ்வளவிலே புகழ்படைத்து, "பற்றினைவிடாதவன்" என்கிற பட்டப்பெயரும் பெற்றாய்த்து அவனிருக்கிறது. (பணிகொள்வான் குயில்நின்றார் பொழில்சூழ்குருகூர்நம்பி) பணிகொள்ளுமவராய்த் திருநகரிக்கு நிர்வாஹகரானவரோயென்று ஸம்புத்தி.

(குயிலித்யாதி) அசேதநமானபக்ஷிஜாதமடைய ஆழ்வார்பரிஸரத்திலேதிருந்தி, திருவாய்மொழிபாடக்கற்றுப்பாடாநின்றால் சேதநனை நான் திருந்தச்சொல்லவேணுமோ. சாகாஸம்பந்தமுண்டாகையாலே அக்குயில்கள் திருவாய்மொழியையாய்த்துப் பாடுவது. அவை * பாடுங்குயில்களாகையாலே தம்பிரான் மாரைப்போலே ஆழ்வார்க்குத்திருவாய்மொழிபாடுவனவாய்த்து. ஒருதேசஸம்பந்தத்தாலே * செவ்வாய்க்கிளி நான்மறைபாடுமானால் இத்தேசவர்த்திகளுக்குத் திருவாய்மொழிபாடச்சொல்லவேண்டாவிறே. தாம் மதுரவாக்காகையாலே மதுரவாக்கான குயிலையிட்டுப் பொழிலைச் சிறப்பிக்கிறார்.

செவியேற்றத்தாலே - செவியாலே. பயிற்றுகை - அப்யஸித்துச் சொல்லுகை.

(குருகூர்நம்பி) "ஊரும்நாடுமுலகமுந்தன்னைப்போல்" என்று சேதநராளவன்றிக்கே, திர்யக்குக்களளவு மேறும்படியாயாய்த்து ஆழ்வாருடையபூர்த்தியிருப்பது.

(முயல்கின்றேனுன்றன்மொய்கழற்கன்பையே)உன்னுடைய ச்லாக்யமானதிருவடிகளுக்கன்பையே, முயல்கின்றேன்-அர்த்தியாநின்றேன். செய்கிறவடிமையால் பர்யாப்திபிறவாமையாலே, "திருவடிகளிலே யெனக்கபிநிவேசம்வேணும்" என்று அர்த்திக்கிறார். "என்னைத்தீமனங்கெடுத்தாயுனக்கென்செய்கேன்"என்று ஆழ்வார் தாம் அவ்விஷயத்திலே தடுமாறினாப்போலே, ஆழ்வார்பண்ணினவுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரங் காணாமையாலே தடுமாறுகிறார். ()

(குருகூர்நம்பி) ப்ரத்யுபகார நிரபேக்ஷதைக்கடியான பூர்த்தியையுடையவரோ. பகவதகிஞ்சித்காரத்துக்கு த்வாரம்பெறிலும ஆசார்யகிஞ்சித்காரத்துக்கு த்வாரமில்லை. இவன் த்ர்ஷ்டத்தை கர்மத்தின்கையிலேபொகட்டு அத்ர்ஷ்டத்தை ஈச்வரன்கையிலே பொகட்டிருக்குமவனிறே.

(உன்றன் மொய்கழற்கன்பையே - முயல்கின்றேன்) உன்னுடைய பரமபோக்யமான திருவடிகளிலுண்டான ஸ்நேஹமடியாக ப்ரத்யுபகாரந்தேடி. உத்ஸாஹியாநின்றேன். இவ்வுத்ஸாஹத்துக்குமேற்பட ப்ரத்யுபகாரம்பண்ணுகைக்குவிரகில்லையே. அவர் தாம் "உனக்கென்செய்கேன்" என்பது, "அப்பனுக்கேதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே" என்றாப்போலே. (மொய்கழல) "மொய்கழலேயேத்தமுயல்" என்று - ஆழ்வார் அவ்விஷயத்தை யருளிச்செய்யக்கேட்டுப்போந்த வாஸநையாலே, இங்கும்"மொய்கழல்" என்கிறார். கீழே - "அவன்பொன்னடி" என்று ஆழ்வார் திருவடிகளின் பாவநத்வஞ்சொன்னார்; இங்கே - போக்யதை சொல்லுகிறார். * வகுளாபிராமமாய் ஸ்ரீமத்தாயிறே ஆழ்வார்திருவடிகளிருப்பது. (மொய்கழற்கன்பையே) இத்திருவடிகளின் போக்யதை அன்பைக்கொடுத்தது. அன்பு ப்ரத்யுபகாரத்திலே மூட்டிற்று; அதுக்கு இடங்காணாமையாலே அலமாராநின்றேன். இவ்வலமாப்பு யாவச்சைதந்யமிறே ... ... (௧௦)

---

* நம்பி பததாத்பர்யம் (ஊருமித்யாதி.) மொய்-ச்லாக்யதை. "கழற்கு" என்றது-ஸம்பந்தஸாமாந்ய ஷஷ்டியாய், விஷய விஷயிபாவனையிட்டு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (செய்கிற வித்யாதி.) முன்பே அபிநிவேச முண்டாயிருக்க இவர் புநஃ அத்தை ப்ரார்த்திப்பா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (என்னையித்யாதி.) ()

அ.—நிகமத்தில், இப்ப்ரபந்தத்தையே தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு ஆவாஸபூமி பரமபதமென்கிறார்.

அன்பன்றன்னையடைந்தவர்கட்கெலா
மன்பன்தென்குருகூர்நகர்நம்பிக்
கன்பனாய்மதுரகவிசொன்னசொல்
நம்புவார்பதிவைகுந்தங்காண்மினே.

மதுரகவியாழ்வார்திருவடிகளேசரணம்.

ப-ரை.—அன்பன் தன்னை அடைந்தவர்கட்கெலாம் - ஆச்ரிதவத்ஸலனான அவனை ஆச்ரயித்தவெல்லார் பக்கலிலும், அன்பன்-வாத்ஸல்யத்தை யுடையராய், தென் - ஸ்ப்ருஹணீயமான, குருகூர்நகர் - திருநகரிக்கு, நம்பிக்கு - நிர்வாஹகரான ஆழ்வாருக்கு, அன்பனாய் - தாஸபூதராய, மதுரகவி - ஸ்ரீமதுரகவிகள், சொன்ன-அருளிச்செய்த, சொல்-பாசுரங்களை, நம்புவார் - தங்களுக்குத் தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு, பதி - வஸ்தவ்யதேசம், வைகுந்தம் காண்மின் - பரமபதமாகக்காணுங்கள்.

பதினோராம்பாட்டு. (அன்பனித்யாதி) இப்பாட்டில்-இப் ப்ரபந்தம் கற்றார்க்கு வஸ்தவ்யபூமி பரமபத மென்கிறார். ஆழ்வாருடைய போக்யதையும் அவர் தமக்கு ஸ்வாமி யென்னு மிடமும், தமக்கு காலக்ஷேபவிஷயமும் அவருடைய ப்ரபந்தமே யென்னு மிடமும், ஆழ்வாரோட்டைஸம்பந்தமடியாக ஈச்வரன் மேல் விழுந்தநுபவித்தபடியும், தம்முடைய தோஷம்பாராமல் ஆழ்வார் விஷயீகரித்தபடியும், தோஷந்தான் அவருடைய தேசப்ரபாவத்தாலே தம்மைவிட்டுக்கழன்றபடியும், பின்பு அத்தோஷம் மேலிடாதபடி ஆழ்வார் குணகீர்த்தநமே தமக்கு காலயாத்ரையாம்படி அவர் தம்மைத்திருத்தினபடியையும், அவருடைய க்ருபா வைபவத்தை லோகமடங்கலும் தாம்பரப்ப வேண்டுமபடி தமக்குப் பிறந்த ஆதரமும், பகவத க்ருபையிற்காட்டில் ஆழ்வாருடைய க்ருபை லோகத்திலே அதிசயித்தபடியையும், அக் க்ருபை யடியாக அவர் உபகரித்த வுபகாரமும், அவ்வுபகார பரம்பரைகளுக்கு ப்ரத்யுபகாரந்தேடி அவருடைய பூர்த்தியாலே ப்ரத்யுபகாரத்துக்கு அவகாசம் காணாமல் தாம் அலமருகிறபடியையுமிறே கீழ்ச்சொல்லி நின்றது; இவ்வர்த்தங்களுக்கு வாசக சப்தமிட்டுச்சொன்ன இப் ப்ரபந்தத்திலே ஆதரமுள்ளார்க்கு, நித்யஸூரிகள் பரமபதத்திலே ஒரு ப்ராப்தி பண்ணிக்கொடுப்பர்களென்கிறார். இவர்களுக்குத் திருநகரியே ப்ராப்யஸ்தலமாயிருந்ததாகிலும் அவர்க ளாதரத்துக்காக அங்கேபோய் அங்கும் ஆழ்வாரை அநுபவிக்கப்பெறுவர்கள்.

நிகமத்தில், "நம்புவார்பதிவைகுந்தங்காண்மின்" என்றதைக்கடாக்ஷித்தவதாரிகையருளிச்செய்கிறார் (நிகமத்திலித்யாதி.)

வ்யா.—(அன்பன்) வாத்ஸல்யத்தையே நிரூபகமாகவுடைய வனாய்த்து ஈச்வரன். இன்னானுக்கன்பன் என்று விசேஷியாமை யாலே, "రిపూణామపివత్సలః" "ரிபூணாமபிவத்ஸலः" என்கிறபடியே-ஸர்வவிஷயமாய்த்து அவனுடைய வாத்ஸல்ய மிருப்பது. அது க்கு ஹேதுவென்னென்னில்; "సర్వేషామేవలోకానాంపితామాతాచమాధవః" "ஸர்வேஷாமேவலோகாநாம்பிதாமாதாசமாதவः" என்றும், "దేవానాందానవానాఞ్చసామాన్యమధిదైవతమ్" "தேவாநாம்தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" என்றும்-ஜநகத்வப்ரயுக்தமானஸம்பந்தம் ஸர்வஸாதாரணமாகையாலே வாத்ஸல்யமும் பொதுவாயிருக்கும்.

---

*: வ்யா.—(அன்பனித்யாதி) கவிபாட்டுண்ட விஷயத்தையும், கவிபாடினதம்மையும், கவிதன்னையும், கவியையேதேனுமொரு வழியால் கற்றவர்களுக்கு பலமும் சொல்லுகிறது.

(தன்னையடைந்தவர்கட்கெலாம்-அன்பன்) தம்முடைய திருவடிகளை யாச்ரயித்த என்போல்வார்க்கெல்லாம் வத்ஸலராயிருக்குமவர். எங்கள்தோஷங்களைப்பாராதே தம்முடைய குணங்களைத் தந்து தரிப்பிக்குமவர். "நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதுவராதலில் அன்னையாயத்தனாய்" என்றும், "நின்று தன்புகழேத்தவருளினான்" என்றும் சொல்லுகிறபடியே. அன்றிக்கே, "அன்பன்" என்று-ஸர்வேச்வரனுக்குத் திருநாமமாய், அவனை ஆச்ரயித்தவர்க்கெல்லாம் ஸ்நிக்தராயிருப்பர். "మద్భక్తజనవాత్సల్యమ్" "மத்பக்தஜநவாத்ஸல்யம்" என்று இத்தையிறே ப்ரதமலக்ஷணமாகச் சொல்லிற்று.

(அன்பன்) இன்னபடி அன்பனென்கை யன்றியிலே எல்லார்க்கும் எல்லாப்படியாலும் நிஸர்க்கஸௌஹார்த்தாயிருக்கும். "ఏవంనిసర్గసుహృది,నచిత్రమిదమాశ్రితవత్సలత్వమ్" "ஏவம்நிஸர்க்கஸௌஹார்தி-நசித்ரமிதமாச்ரிதவத்ஸலத்வம்" என்று-ஸௌஹார்த்த கார்யமிறே வாத்ஸல்யம். "సర్వలోకైకవత్సలః" "ஸர்வலோகைகவத்ஸலः" "శరణాగతవత్సలః" "ஶரணாகதவத்ஸலः" "రిపూణామపివత్సలః" "ரிபூணாமபிவத்ஸலः" என்னும்படி லோகத்துக்காக வத்ஸலனுமாய் அதில் ஆச்ரிதரளவிலே, "దోషోయద్యపి" "தோஷோயத்யபி" என்னும்படி வத்ஸலனுமாய், ப்ராதிகூல்யமே பண்ணிப்போருமவர்களுக்கும் வத்ஸலனாயிருக்கும். * ప్రతిభవమపరాద్ధుర్ముగ్ధసాయుజ్యదోభూః-ப்ரதிபவமபராத்துர்முக்த ஸாயுஜ்யதோபூःவிறே. அங்கு, மௌக்த்யமாவது-தோஷம் நெஞ்சில் படாதொழிகையாய்த்து.

"அன்பன்" என்றவிடத்தில் ப்ரீதியை விஷயாநுரூபமாக வாத்ஸல்ய பரமாக்கியருளிச்செய்கிறார் (வாத்ஸல்யத்தை யித்யாதி.)

(அன்பன்) தன்னை ஸ்நேஹித்தார்க்குத் தானொருவனுமே விஷயபூதனுமாய், தான் ஸ்நேஹிக்குமிடத்தில் விபூதியாக ஸ்நேஹிக்குமவன். தன்னை ஸ்நேஹித்தவன்புறம்பே சிலவற்றை ஸ்நேஹித்தால் அவனுக்குத் தன்னைப்பெறவிரகில்லை, தான் எல்லாரையும் ஸ்நேஹியாநாகில் தான் இன்றிக்கேயொழியும். "[Grantha]" "[Grantha]" "நிரவதிகவாத்ஸல்ய ஜலதே" "வாத்ஸல்ய மஹோததே" என்கிறபடியே கடலுக்குள்ளே மாணிக்கங்களுடைய மறைந்துகிடக்குமாப்போலே, இவ்வாத்ஸல்யகுணத்திலே குற்றங்களுடைய மறையும்படியாயாய்த்து-இதுஸ்வரூபத்தை விளாக்கொலைகொண்டு கிடக்கும்படி. ஸ்வரூபந்தான் ஸர்வஸாத்ர்ச்யரஹிதமானாப்போலேயாய்த்து - இக்குணமும் ஸத்ர்சரஹிதமாய் * நிகரில் புகழாயிருக்கும்படி. அந்தஸாத்ர்ச்யராஹித்யத்தால்பெற்றது பாத்வஸித்தி; இந்த ஸாத்ர்ச்யராஹித்யத்தால் பெற்றது சரண்யத்வஸித்தி. (அன்பன்) தன்னைப்பற்றிப் புறம்பே சிலவற்றை யாசைப்பட்டவர்களுக்கும், "[Grantha]" "உதாரா:" என்று குணங்கொள்ளும் வ்யாமோஹத்தை யுடையவன். (அன்பன்) உபக்ரமத்திலே, "கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயனென்னப்பன்" என்று-சௌலப்யஸ்வாமித்வங்களை உபாதாநம்பண்ணி, உபஸம்ஹாரத்திலே வாத்ஸல்ய குணத்தோடே தலைக்கட்டுகிறார். அவை ஒருதட்டு, இது ஒருதட்டிறே. இத்தைப்பற்றவிறே, "[Grantha]" "ஶீலாதிகுணஸம்பந்நஸ்ஸர்வலோகைகவத்ஸல:" என்று ரிஷிகளும் சொல்லிற்று.

(அன்பன்றன்னையடைந்தவர்கட்கெலாமன்பன்) இப்படி ஸர்வலோகவத்ஸலனான ஸர்வேச்வரனுடைய இக்குணத்துக்குத்தோற்று, "[Grantha]" "குணைர்த்தாஸ்யமுபாகத:" என்று அடிமைபுக்கு அவன்திருவடிகளை உபாயத்வேநவரணம்பண்ணியிருக்கும் ஸாத்விகவர்க்கத்துக்கு நல்லராயிருக்குமவர். அவனுக்கு எல்லாரோடும் பந்தமுண்டாகையாலே எல்லாரையும் ஸ்நேஹிக்கும்; இவர் "பரமனைப்பயிலும் திருவுடையார் யவரேலு மவர்கண்டீர்—எம்மையாளும்பரமர்" என்றிருக்குமவராய்த்து. இவரைப்போலே வைராக்யபூர்வகமான ஸ்நேஹமன்றே அவனது. அவனுக்கு எல்லாரோடும் ஸ்வரூபஸம்பந்தம்; இவரது உபாதிநிபந்தந ஸம்பந்தம். (எல்லாமன்பன்) அவர்களுடைய ஜாத்யாதிநியமம் பாராதே தத்ஸம்பந்தமேஹேதுவாக நல்லராயிருக்குமவர். "கும்பி நரகர்களேத்துவரேலும் - என்தொழுகுலம்" "எத்தனை நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்-மணிவண்ணர்க்காளென்றுள் கலந்தார் அடியார் தம்மடியாரெம்மடிகள்" என்றிருக்குமவர்.

(தன்னையடைந்தவர் கட்கெலாமன்பன்தென்குருகூர்நகர்நம்பி) ஆழ்வாருடைய அன்பு அங்ஙன் பொதுவாயன்றேயிருப்பது; "பரமனைப்பயிலும் திருவுடையார் யவரேலும் அவர்-எம்மையாளு ம்பரமர்" என்கிறபடியே-பகவத்ஸம்பந்த நிபந்தநமாயிறே யிருப் பது. தம்மைப்போலே "அடிக்கீழமர்ந்துபுகுந்தேன்" என்பாரெ ல்லாரையுந் தமக்கு நாதராகவாய்த்து நினைத்திருப்பது. (தென் குருகூர்நகர்நம்பி) "அடியாரடியார்தம்மடியார்" என்று-தத்ஸம்ப ந்திஸம்பந்திகளளவும்பண்ணினப்ரேமத்தாலே பூர்ணராயிருப்பர்.

(நம்பிக்கன்பனாய்) பகவத்விஷயத்தளவுமன்றிக்கே, ததீயரள வுமன்றிக்கே, ஆசார்யவிஷயத்திலே ஸக்தராய். தனக்கு புருஷார்த் தம் வேண்டியிருக்கில் பகவத்விஷயத்தைப் பற்றவமையும்; அங் ஙன்தானுகந்ததன்றிக்கே, "ஈஶ்வராநுகப்பே புருஷார்த்தம்" என் றிருக்கில் பாகவதர்களைப்பற்ற வமையும்; "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" "ஸஸ்ப்ராணாஃபாண்டவாஃ" "மமப்ரா ணாஹிபாண்டவாஃ" என்று - பாண்டவர்களைத் தனக்கு தாரகராக விறே நினைத்திருப்பது. ஈச்வரனோடு ஸ்ரீவைஷ்ணவர்களோடு வாசியற எல்லாருடையவுகப்பும் அபுருஷார்த்தமென்றிருக்கில் ஆசார்யனைப்பற்ற வடுக்கும்; "ஆசார்யவாந்" என்றாய்த்து ஸ்ரீவைஷ்ணவர்களுகப்பது.

(அன்பன்) அவனடியார், "நனிமாக்கலவியின்பமே நாளும் வாய்க்க" என்று-பகவதநுபவ ஸுகத்தைவிட்டேயாகிலும் வைஷ் ணவஸமவாயஸம்ச்லேஷரஸராயிருக்குமவர். (அடைந்தவர்கட் கெலாமன்பன்) அவனை சேஷியாக வரிக்கவுமாம், பந்துத்வேந வரிக்கவுமாம், உபாயத்வேநவரிக்கவுமாம், இவர்க்கு ஆதரிக்கவே ண்டுவது ஏதேனு மொருஸம்பந்தமாய்த்து.

(தென்குருகூரித்யாதி) இவர்க்கு இப்படி பகவத்பாகவத விஷ யத்தில் ஸ்நேஹத்துக்கு ஊற்றுவாய் திருநகரியில் பிறப்பாய்த்து. துறைவாய்ப்பாலே பயிரும்வாய்க்குமிறே. இவர்க்கு * கடல்கடல் புரைய விளைவிக்கைக்கடி அந்த நிலப்பண்பாய்த்து. (நகர்) அந் நகரவாஸத்தாலேயாய்த்து இவர் ஸாராஸார விவேகஜ்ஞராய்த்து. (நம்பி) இப்படி ஆத்மகுணபூர்ணரானவாழ்வார்.

(அன்பனாய்) இப்படி இவருடைய பகவத்ஜ்ஞாந பக்த்யாதிக ளாகிற ஆத்மகுணம்கண்டாய்த்து இவர்க்கு ஸ்நேஹம்பிறந்தது.

அன்பன்றன்னை யடைந்தவர்கள்-ஸ்ரீமஹாபாகவதர்கள். இங் கு "அன்பன்" என்றது - பக்தனென்றபடி. * நம்பி பததாத்பர்யம் (அடியாரித்யாதி.) பகவானையும் பாகவதர்களையும் பற்றாமல் ஆழ் வார்விஷயத்திலன்பராவானென்னென்ன;"அன்பன், தன்னையடை ந்தவர்கட்கெலாமன்பன், நம்பிக்கன்பன்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து இவர்களுக்குண்டான பலதாரதம்யங்களை யருளிச் செய்கிறார் (தனக்கு என்று தொடங்கி அஞ்சுவாக்யத்தாலே.)

ப்ரதமத்திலே ஆசார்யன் தனக்கு அஜ்ஞாதஜ்ஞாபநமுகத்தாலே ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, பகவத்ஸமாச்ரயண வேளையிலே புருஷகாரபூதனாய், தன்னுடைய அநுஷ்டாநத்தாலே இவனை நல்வழியே கொண்டுபோய், ப்ராப்திதசையிலும் ஸாத்யவிவ்ர்த்தியைப் பண்ணிக்கொடுக்கக்கடவனாய், இப்படி ஸஹஸ்ரமுகத்தாலே உத்தேஸ்யனாயிறே யிருப்பது. (மதுரகவி சொன்ன சொல்) ஆழ்வாரை, தாம்சொன்ன பாசுரம் தமக்கினிதாயிருக்கையாலே "மதுரகவி" என்கிறார்.

(சொன்னசொல்நம்புவார் பதிவைகுந்தங்காண்மினே) இனிதாயிருந்ததில்லையாகிலும், இப்ப்ரபந்தத்தைத்தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு வஸ்தவ்யதேசம் பரமபதம். ஆழ்வார் உத்தேஸ்யராநால் திருநகரியன்றோ ப்ராப்யமாவதென்னில்; திருநகரியில் * பொலிந்துநின்றபிரானையும், ஆழ்வாரானையுமாய் இருபுரியாய்ச்செல்லும்; அங்ஙனன்றிக்கே ஆழ்வாரானையேயாய்ச் செல்லும் பரமபதம்.

(அன்பனாய்மதுரகவி) அவர்க்கு பகவத்ப்ரேமம்ஸ்வரூபப்ரயுக்தமாய், "ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன்" என்று நிரூபகமானாப்போலே, இவர்க்கு ஆழ்வார்க்குநல்லரானவொன்று நிரூபகம். அவர் ப்ரணவநமஸ்ஸுக்களிரண்டிலும் நிஷ்டராய்ப்போருவர்; இவர் மத்யமபதத்திலேயே நிஷ்டராயிருப்பர். (மதுரகவி) அவர் தத்விஷயத்தைக் கவிபாடுகையாலே, "என்னாவிலின்கவி" என்றாப்போலே, இவரும ஆழ்வாரைக் கவிபாடுகையாலே, தம்மை "மதுரகவி"என்கிறார். (நம்பிக்கன்பனாய்-மதுரகவி) நெஞ்சுக்குப் பணி ஆழ்வார்பக்கல் ஸ்நேஹமாய், வாய்க்குப்பணி அவருடைய குணஸ்தோத்ரமேயானவர்.

(சொன்னசொல்)அவர் ப்ரபந்தீகரித்த இந்தசப்தஸந்தர்ப்பத்தை.(சொன்னசொல்) இதுவு மொருசொல்லே! என்று விஸ்மிதராகிறார். (நம்புவார்) இத்தை யாசைப்படுமவர்கள். இவ்வர்த்தத்தை வ்யுத்பத்திபண்ணிவிடுதல்செய்கையன்றிக்கே இதிலே நெஞ்சையுடையராய் இவ்வியலிலே எப்போதும் பரிசயிப்பது, இதுக்குள்ளோடுகிற ஆழ்வாருடைய ப்ரபாவங்களிலே வித்தராவது, இப்ப்ரபாவத்தை யெப்போதும் ஒருவர்சொல்லக்கேட்க வாசைப்படுவதாய், இப்படி நசைபண்ணிப்போருவர்.

அவர்களுக்குகப்பாகவன்றிக்கே அவன்பண்ணின வுபகாரத்தாலும் பற்றவேண்டுமென்கிறார் (ப்ரதமத்திலித்யாதி.) சொல் நம்புவார் என்னாதே "சொன்ன" என்கையாலே பலிதம் (இனிதாயித்யாதி.) இருபுரியாவது - ஒருவன்மதுரக்கு எதிர்மதுரக்குக்குவிபரீதமாயிருக்கை.

"அடியார் நிலாகின்ற வைகுந்தமோ" என்றும், "வானவர் நாடு" என்றுஞ் சொல்லக்கடவதிறே. நம்பிதிருவழுதி வளநாடு தாஸர், "'நம்புவார்பதிவைகுந்தம்' என்று-அவர்களிருந்ததேசங் காண் பரமபதம்" என்றுசொல்லுவர்;"உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகுந்தம் மூரெல்லாம்"என்னக்கடவதிறே;"'கூரத்தாழ்வான் மகன் பிறந்தபின்பு ஸம்ஸாரமும் பரமபதமு மிடைச்சுவரைத் தள்ளி யொருபோகியாய்த்துக்காண்' என்று பெற்றி பணித்தார்" என்று பிள்ளை யருளிச்செய்வர் ... ... (௧௧)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

(நம்புவார்) பகவத்ப்ரபாவத்திற்காட்டில் ஆழ்வார்ப்ரபாவத்தை விரும்புவார். ஆழ்வார்ப்ரபாவஞ்சொன்னவிது கைதவமன்று, ஸத்யமென்று இவ்வர்த்தத்தைத் தங்களுக்குத் தஞ்சமாக விச்வஸித்திருப்பார். (பதிவைகுந்தம் காண்மினே) அவர்களுக்கு வஸ்தவ்ய பூமி பரமபதம் * ... ... (௧௧)

அழகியமணவாளப்பெருமாள்நாயனார்

திருவடிகளேசரணம்.

இங்கேதானே பரமபதம் என்றதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்யமருளிச்செய்கிறார் (கூரத்தாழ்வானித்யாதி.) பெற்றிபணித்தார் என்றது - இங்கேயிருக்கச் செய்தேதானே அந்தவிபூதியிலநுபவத்தைப்பெற்றிபணித்தார். அங்குத்தையி லநுபவம் இங்கே கிட்டுகையாலே இங்கேயிருந்தே அந்தவிபூதியை யுண்டாக்கினார்; ஆகையாலேயொரு போகியாயிற்றென்றபடி ... (௧௧)

டிவரவு - கண்ணி நாவினால் திரிதந்து நன்மையால் நம்பினேன் இன்று கண்டு அருள் மிக்கவேதியர் பயனன்றாகிலும் அன்பன் வாடி.

ஜீயர் திருவடிகளேசரணம்.

கண்ணிநுண்சிறுத்தாம்பு

ப்ரதிபத-வ்யாக்யாந அரும்பதங்கள்

ஸம்பூர்ணம்.

* இங்கே சிலவாக்கியங்க ளிருக்கவேண்டும், கோசாந்தரங்களில் கண்டுகொள்வது.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த திருச்சந்தவிருத்தத்

தனியன்களுக்கு

பிள்ளைலோகஞ்சீயரருளிச்செய்த

வ்யாக்யாநம்.

அவதாரிகை.—(தருச்சந்தப்பொழில்) இதில்-திருச்சந்தவிருத்தஞ்செய்தருளின திருமழிசைப்பிரான் அவதாரஸ்தலமான*திருமழிசைவளம்பதியும் ஒருதேசமே! என்று அதிலே ஆழங்கால்படும்படி சொல்லுகிறது.

தருச்சந்தப்பொழில்தழுவுதாரணியின் துயர்தீரத்
திருச்சந்தவிருத்தஞ்செய்திருமழிசைப்பரன்வருமூர்
கருச்சந்துங்காரகிலுங்கமழ்கோங்குமணநாறும்
திருச்சந்தத்துடன்மருவுதிருமழிசைவளம்பதியே.

வ்யா.—(தருச்சந்தப்பொழில்தழுவுதாரணியின்துயர்தீர) தரு-கல்பகத்தரு. சந்து-சந்தநம். * சந்தநப்பூமலர்சோலையிறே;இரண்டு சோலையாலும் சூழப்பட்ட. தாரணி-பூமி. பொழில்தழுவியிருக்கிற பூமியிலுண்டான மநுஷ்யர் துக்கம்தீர. அவர்கள் பகவத்விஷயத்தை யிழந்திருக்கிற துக்கம்தீர. அவர்கள்தான்போக்ய போகோபகரண போகஸ்தாநங்களைவிரும்பி பகவத்விமுகராயாய்த் திருப்பது. அதுக்குமேலே "அறியார்சமணரயர்த்தார்பவுத்தர்சிறியார்சிவப்பட்டார்" என்றிறே அவர்கள் அந்யசேஷபூதராய் அநர்த்தப்படுகிறது; அவற்றை நிவர்த்திப்பித்து ஸத்வ்ருத்தராக்குகைக்காக வாய்த்து-"திருச்சந்தவிருத்தம்"எனகிற திவ்யப்ரபந்தம் செய்தருளிற்று. அதிலே "புண்டரீகபாதபுண்ணியகீர்த்தி நும்செவிமடுத்துண்டு நும்முறுவினைத்துயருள்நீங்கியுய்ம்மினோ" என்றும், "நன்மாலைவாழ்த்திவாழ்மினோ" என்றும்-பகவத்பஜநத்தையும் தேவதாந்தராஜ்ஞாநாஸக்திகளை,*காணில்*சொந்தம*வண்டு*போதுகளிலே ஸுவ்யக்தமாக தர்ஸிப்பித்தும் திருத்தியருளிற்று. (திருச்சந்தவிருத்தம்) சந்தோரூபமான வ்ருத்தமென்றபடி. "கலித்துறை, விருத்தம், வெண்பா" என்றுப்போலே சொல்லக்கடவதிறே. ஏவம்வித ப்ரபந்தநிர்மாணகராய்த் திருமழிசைக்கு நாதரான ஆழ்வாரவதரித்தவூரிருக்கும்படி சொல்லுகிறது (கருச்சந்தும்காரகிலும்கமழ்) ஆகரத்தில் சந்தநாகருக்களாலும் பரிமளிதமாய்.

(கோங்குமணநாறும்) கோங்கென்கிற வ்ர்க்ஷத்தினுடைய புஷ்பபரிமளத்தையு முடைத்தாய் எல்லாவற்றாலும் மிக்க பரிமளத்தை யுடைத்தாகையாலே * வேரிமாறாதபூமேலிருப்பாளாய் ஸ்ரீ என்று திருநாமத்தை யுடையளான பெரியபிராட்டியாருடன் பொருந்தி யிருக்கும் திருமழிசை. (வளம்பதியே) இந்த விபூதியிலே இதொரு தேஶமே! கோங்கு என்று - பரிமளமாகவுமாம் - வளம் - அழகும், ஸம்பத்தும். ஆழ்வாராலே ஊரும் உத்தேஶ்யமாயிருக்கிறது. ... ௧

அ.—(உலகுமழிசையும்) "இதில் திருமழிசை - மஹீஸாரக்ஷேத்ரம்" என்று மஹத்த்வத்தைச் சொல்லுகிறது.

உலகுமழிசையு முள்ளுணர்ந்து தம்மில்
புலவர்புகழ்க்கோலால தூக்க - உலகுதன்னை
வைத்தெடுத்தபக்கத்தும மாநீர்மழிசையே
வைத்தெடுத்தபக்கம் வலிது.

வ்யா.—(உலகுமழிசையும்) லோகங்களையும் விலக்ஷணமான திருமழிசையையும். (உள்ளுணர்ந்து) மாஹாத்ம்யங்களை மநஸ்ஸிலே மநநம்பண்ணி. (தம்மில்புலவர்) பார்க்கவாதி மஹர்ஷிகளான மஹாகவிகள். (புகழ்க்கோலால்தூக்க) இவற்றின்புகழை யென்னுதல்; புகழ்க்கோலாலே யென்னுதல். தூக்க - துலைப்படுத்திநிறுக்க. (உலகுதன்னைவைத்தெடுத்தபக்கத்தும்) லோகத்தைவைத்தெடுத்த துலையைக்காட்டிலும். (மாநீர்மழிசையே வைத்தெடுத்தபக்கமவலிது) மிக்க ஜலஸம்ருத்தியையுடைய மஹீஸாரக்ஷேத்ரத்தை வைத்தெடுத்த துலையே அதுலமாயிருந்தது. அகஸ்த்ய துர்வாஸாதிகளிருந்த பக்ஷம்போலே ஆழ்வாரவதரண ஹேதுவானதேஶமும் தாழ்ந்துகாட்டிற்றிறே. ஜகந்நாதனிறே அங்கேநித்யஸந்நிதிபண்ணுவது. "చిన్తయేత్సజగన్నాథం విష్ణుంజిష్ణుంసనాతనమ్" "சிந்தயேத் ஸஜகந்நாதம் விஷ்ணும்ஸநாதநம்" என்றிறே தத்யாநபரராய் அங்குள்ளதபோதநரிருப்பது; அத்தாலே வைதத்தெடுத்தபக்ஷம் வலிதாயத்து. "ధాత్రాతులితాలఘుమహీ" "தாத்ராதுலிதாலகுமஹீ" என்னக்கடவதிறே. மாநீர்மழிசை-தீர்த்தம் திருமண்ணுண்டான ஸ்தலம். "மழுசாடுகண்டீர்மருந்து" என்னக்கடவதிறே. * பத்தியான பாசனமான பக்திஸாராவதரணத்துக்கு அநுகுணமாயிருக்கும் தேஶமென்று அந்த திவ்யதேஶ வைபவம்சொல்லிற்றாய்த்து.

"తులయామలవేనాపి నస్వర్గంనపునర్భవమ్।
భగవత్సఙ్గిసఙ్గస్య మర్త్యానాంకిముతాశిషః॥"

"துலயாம லவேநாபி நஸ்வர்க்கம் நபுநர்ப்பவம்।
பகவத்ஸங்கி ஸங்கஸ்யமர்த் யாநாம்கிமுதாஶிஷஃ"

என்றிறே ததீயவைபவ மிருப்பது.

பிள்ளைலோகஞ்சீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த
திருச்சந்தவிருத்தத்திற்கு
பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
வ்யாக்யாநாவதாரிகை.

ஆழ்வார் திருமழிசைப்பிரானுகிறார் க்ருஷ்ணாவதாரம்போலேயாய்த்துப் பிறந்தபடியும் வளர்ந்தபடியும்;—யதுகுலத்திலே பிறந்து கோபகுலத்திலே வளர்ந்தாப்போலே, ரிஷிபுத்ரராய்ப் பிறந்து தாழ்ந்தகுலத்திலே யாய்த்து வளர்ந்தது. க்ருஷ்ணனாய் யதுகுலத்திலேபிறந்தாப்போலே அங்கே வளர்ந்தருளினுகில் ராமாவதாரத்தோபாதியா மித்தனையென்று பார்த்தருளி, இடையரும் இடைச்சிகளும பசுக்களும், "நம்மிலே யொருத்தன" என்னும்படி தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காகவாய்த்து கோபஜாதியனாய் வளர்ந்தருளிற்று; அப்படியே ஆழ்வாரும் பகவதபிப்ராயத்தாலே தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காகத் தாழ்ந்தகுலத்திலே வளர்ந்தருளினாராய்த்து. இவ்வாழ்வாருக்கு ஸர்வேஶ்வரன் நிர்ஹேதுகமாக *மயர்வறமதிநலமருளி, தன்னுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும், ததாஶ்ரயமான ஜ்ஞாநஶக்த்யாதிகல்யாணகுணங்களையும், உபயத்துக்கும் ப்ரகாஶகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், அதுக்கலங்காரமான கிரீடாதிபூஷணவர்க்கத்தையும், அந்தோதி விகல்பிக்கலாம்படியான சங்கசக்ராதி திவ்யாயுதங்களையும, இதடங்கக்காட்டிலெறித்த நிலாவாகாரமே அநுபவிக்கிற லக்ஷ்மீப்ரப்ருதி மஹிஷீவர்க்கத்தையும், அச்சேர்த்தியே தங்களுக்கு தாரகாதிகளாக வுடையரான பரிஜநபரிபர்ஹத்தையும, இப்போகத்துக்கு வர்த்தகமான பரமபதத்தையும் ஸாக்ஷாத்கரிப்பித்து ப்ரக்ருதிபுருஷாத்மகமான லீலாவிபூதியினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹாரங்களை லீலையாகவுடையனாயிருக்கிறபடியையுங்காட்டிக்கொடுத்து, இப்படி உபயவிபூதிநாதனான எம்பெருமான் தன்பெருமையைக்காட்டிக்கொடுக்கையாலே பகவதநுபவைகபோகராய், "[illegible]" "கோபஜநயஸ்மாந்நிதம் ஶரீரம்" என்கிறபடியே ஸம்ஸாரதோஷத்தை அநுஸந்திக்க இடமில்லாதபடி ஈஶ்வரன் தம்மை அநுபவிக்கையாலே மார்க்கண்டேயாதிகளைப்போலே சிரகாலம் ஸம்ஸாரத்திலே யெழுந்தருளி யிருந்தவிவர், ப்ராப்தமுமாய ஸுலபமுமான விஷயத்தை ஸம்ஸாரிகளிழக்கைக்கு ஹேதுவென்னென்று அவர்கள்பக்கலிலே கண்வைத்தார்.

தாம்பகவத்விஷயத்திலப்ரவணராயிருக்கிறப்போலே ரஜஸ்தமஸ்ஸுக்களாலேபிறந்த அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களாலே, "యో బ్రహ్మాణం విదధాతి పూర్వమ్" "யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்" என்றும் "యుగకోటిసహస్రేషు విష్ణుమారాధ్య పద్మభూః । పునస్త్రైలోక్యధాతృత్వం ప్రాప్తవానితి శుశ్రుమః" "யுககோடிஸஹஸ்ரேஷு விஷ்ணுமாராத்யபத்மபூ:। புநஸ்த்ரைலோக்யதாத்ர்த்வம் ப்ராப்தவாநிதிஶுஶ்ரும:" என்றும் "వేదా మే పరమం చక్షుర్వేదా మే పరమం ధనమ్" "வேதாமேபரமம்சக்ஷுர்வேதாமேபரமம்தநம்" என்றும் "మహాదేవస్సర్వమేధే మహాత్మా" "மஹாதேவஸ்ஸர்வமேதேமஹாத்மா" என்றும்-குருபாதகாதிகளாலும் க்ஷேத்ரஜ்ஞதயா ஸம்ப்ரதிபந்நரான ப்ரஹ்மருத்ராதிகள் பக்கலிலே, "శివో రుద్రః" "హిరణ్యగర్భస్సమవర్తతాగ్రే" "ஏகஏவருத்ர," "ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே" என்று இத்யாதிப்ரஶம்ஸா வாக்யங்களாலும் தாமஸ புராணங்களாலும் பரத்வ புத்தியைப்பண்ணி, சேதநர் பகவத் விமுகராய் அநர்த்தப் படுகிறபடியைக்கண்டு பராநர்த்தம் பொறுக்கமாட்டாமையாலே நிர்த்தோஷ ப்ரமாணங்களாலும் ஸம்யஜ்ஞ்ந்யாயங்களாலும் பாஹ்யகுத்ருஷ்டி நிரஸநபூர்வகமாக பகவத் பரத்வத்தை உபதேஶித்தவிடத்திலும் அவர்கள் அபிமுகீகரியாமையாலே, நாம் இவர்களைப்போலன்றியே ஜகத்காரண பூதனாய் பரமபத நிலயனான ஸர்வேஶ்வரனே ப்ராப்யனென்று அவன் ப்ரஸாதத்தாலே அறியப்பெற்றோம். இனி இவனை ஆஶ்ரயிக்குமிடத்தில் பரவ்யூஹங்கள் தேஶவிப்ரக்ருஷ்டத்வத்தாலே அஸ்மதாதிகளுக்கு ஆஶ்ரயணீயமாகமாட்டாது; அவதாரங்கள் காலவிப்ரக்ருஷ்டதையாலே ஆஶ்ரயணீயங்களாகமாட்டாது; இரண்டுக்கும் தூரஸ்தரான பாக்யஹீநர்களும் இழக்கவேண்டாதபடி அர்ச்சகபராதீநனாய் ஸர்வாபராதஸஹனாய் ஸர்வாபேக்ஷிதப்ரதனாய் வர்த்திக்கும் அர்ச்சாவதாரத்தின் நீர்மையை அநுஸந்தித்து ஆகிஞ்சந்யத்தை அதிகாரமாக்கி, ப்ரபத்தியை அதிகாரிவிஶேஷணமாக்கி, பகவத்க்ருபையை நிரபேக்ஷோபாயமென்று அத்யவஸித்து அவனை யாஶ்ரயித்து அவன் க்ருபைபண்ணி முகங்காட்ட இவ்விஷயத்தை லபிக்கப்பெற்றேனென்று தமக்குப் பிறந்த லாபத்தைச்சொல்லித் தலைகட்டுகிறார். ... ... *

அ.—முதற்பாட்டு."భూతేభ్యోऽణ్డమ్" "பூதேப்யோऽண்டம்" என்கிறபடியே - அண்டகாரணமாய் ஸகுணமானப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களுக்கு அந்தராத்மாவாய் நிற்கிறநீயே ஜகத்துக்கு உபாதாந காரணம். இவ்வர்த்தம் வேதாந்தப்ரமேயம் கைப்படாத பாஹ்ய குத்ருஷ்டிகளால் நினைக்கவொண்ணாதென்கிறார்.

பூநிலாயவைந்துமாய்ப்புனற்கணின்றநான்குமாய்
தீநிலாயமூன்றுமாய்ச்சிறந்தகாலிரண்டுமாய்
மீநிலாயதொன்றுமாகிவேறுவேறுதன்மையாய்
நீநிலாயவண்ணநின்னையார்நினைக்கவல்லரே. (௧)

ப-ரை.—பூ - பூமியிலே, நிலாய - வர்த்திக்கிற, ஐந்துமாய் - சப்தஸ்பர்ச ரூபரஸகந்தங்களைந்துமாய், புறனகண்நின்ற-ஜலத்திலேவர்த்திக்கிற, நான்கு மாய் - சப்தஸ்பர்ச ரூபரஸங்கள் நான்குமாய், தீநிலாய - அக்நியிலேவர்த்திக் கிற, மூன்றுமாய் - சப்தஸ்பாசரூபங்கள் மூன்றுமாய், சிறந்த - சேதநர்க்கு ஆதாரமாயிருக்கும் பலத்தையுடைய, கால்நிலாய - காற்றிலேவர்த்திக்கிற, இரண்டுமாய் - சப்தஸ்பர்சங்களிரண்டுமாய், மீநிலாயது - ஆகாசத்திலே வர் த்திக்கிற, ஒன்றுமாகி - சப்தகுணமொன்றுமாகி, வேறுவேறு தன்மையாய்- தேவாதிகளுக்கு அந்தராத்மாவாய், நீ - சித்சிச்சரீரியானநீ, நிலாயவண்ணம்- கார்யகாரணவர்க்கத்திலே க்ரம ப்ரகாரத்தையுடையனாய், நின்னை - சித்சித விசிஷ்டமாய்க்கொண்டு ஜகதுபாதாந காரணமாய்நிற்கிற வுன்னை, ஆர்நினை க்கவல்லரோ - நினைக்கவல்லாரார்.

வ்யா.—(பூநிலாயவைந்துமாய்)பூமியிலேவர்த்திக்கிறஶப்தாதி குணங்களைந்துமாய். "गन्धवती पृथिवी" "तस्या गन्धो गुणो मतः" "கந்தவதீ ப்ர்திவீ" "தஸ்யாகந்தோகுணோமத:" என்று-ப்ர்திவிகுணம்கந்தமாயி ருக்க,ஶப்தாதிகளைந்தும அதுக்குகுணமாகச்சொல்லுவானென்னெ ன்னில்; "शब्दादिभिर्गुणैर्ब्रह्मन् संयुक्तान्युत्तरोत्तरैः" "சப்தாதிபிர்க்கு ணைர்ப்ரஹ்மந் ஸமயுதாந்யுத்தரோத்தரை:" என்கிறபடியே காரண குணாநுவர்த்தியாலே ஶப்தஸ்பர்ஶ ரூபரஸகந்தங்களையுங் கூட்டிச் சொல்லுகிறது. (புனற்கணின்றநான்குமாய்) அப்பிலேவர்த்திக்கிற ஶப்தஸ்பர்ஶரூபரஸங்களுமாய."सम्भवन्ति ततोऽम्भांसि रसाधाराणि तानि तु" "ஸம்பவந்திததோம் பாம்ஸி ரஸாதாராணிதாநிது" என்கிறபடியே தத்குணம்ரஸமாயிருக்க, அதிலும்காரணகுணாநுவர்த்தியாலே ஶப்த ஸ்பர்ஶ ரூபங்களையும் கூட்டிச்சொல்லுகிறது. (தீநிலாயமூன்றுமா ய்) "ज्योतिरुत्पद्यते वायोस्तद्रूपं गुण उच्यते" "ஜ்யோதிருதபத்யதே வாயோஸ்தத்ரூபம்குணஉச்யதே" என்கிறபடியே அக்நிகுணமான ரூபத்தோடே ஶப்தஸ்பர்ஶங்களைக் கூட்டி "மூன்றுமாய்" என் கிறது.

(சிறந்தகாலிரண்டுமாய்) ஸ்வஸஞ்சாரத்தாலே சேதநர்க்காதார மான பலத்தையுடைய வாயுவினுடையகுணமிரண்டுமாய். "बलवान् भगवान् वायुस् तस्य स्पर्शो गुणो मतः" "பலவாந்பகவாந்வாயுஸ் தஸ்ய ஸ்பர்ஶோகுணோமத:" என்கிறபடியே வாயுகுணமான ஸ்பர்ஶத் தோடே ஆகாஶகுணமான ஶப்தத்தையுங் கூட்டிச்சொல்லுகிறது.

(மீநிலாயதொன்றுமாகி) மீதிலேவர்த்திக்கிறஶப்தகுணமொன்று மாய். "आकाशं शब्दलक्षणम्" "ஆகாஶம் ஶப்தலக்ஷணம்" என்கிறபடியே ஆகாஶகுணமொன்றையும்சொல்லுகிறது. உக்தமான பூதபஞ்சகங் களுக்குக காரணமான ஏற்றத்தாலும் ஸ்வவ்யதிரிக்தங்களுக்கு அவ காஶப்ரதாநம்பண்ணு மேற்றத்தாலும் "மீது" என்று - ஆகாஶத் தைச்சொல்லுகிறது.

முதற்பாட்டு.—காரணகுணாநுவர்த்தியாவது - பூமிக்கு பரம் பரையா மற்றநாலுபூதங்களும காரணமாகையாலே அந்த நாலு பூதங்களுடைய குணங்களும் கார்யமான பூமியிலே வர்த்திக்கு மென்றபடி.

அண்டகாரணம் ப்ருதிவ்யாதிகளாயிருக்க ஸப்தாதி குணங்களோடே ஸமாநாதிகரித்தது ப்ருதிவ்யாதிகளோபாதி தத்குணங்களும் ஸ்வாதீநமா யிருக்கையாலே சொல்லுகிறது. ப்ருதிவ்யாதிகளோடு ஸாமாநாதிகரண்யம் ஸரீராத்மபாவ ஸம்பந்த நிபந்தநம்; குணங்களோடு ஸாமாநாதிகரண்யம் அவற்றினுடையஸத்தாதிகள் ஸ்வாதீநமாயிருக்கையாலே. அண்டத்துக்கு மஹதஹங்காரங்களும் காரணமாயிருக்க பூதங்களைந்தையுஞ் சொல்லுவானென்னென்னில்; "[illegible]" "தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஸஸ்ஸம்பூத:" என்கிற ஸ்ருதிச்சாயையாலே யருளிச்செய்கிறார். "பூதேப்யோऽண்டம்" என்று ரிஷிகள் சொல்லுகிற பஞ்சீகரணத்தாலே - ஸூக்ஷ்மசிதசித்விஸிஷ்ட ப்ரஹ்மகாரணமாகையாலே சிதந்தர்ப்பூதமான புருஷஸமஷ்டியையும் நினைக்கிறது. இவ்வளவாக ப்ராக்ருதஸ்ருஷ்டி சொல்லிற்றாய்த்து.

(வேறுவேறுதன்மையாய்) அண்டாந்தர்வர்த்திகளாய் ஒன்றுக்கொன்று விலக்ஷணமான தேவாதிபதார்த்தங்களுக்கும ஆத்மாவாய். ஆத்மாக்களுடையஸ்வரூபம் ஏகரூபமாயிருக்க "வேறுவேறு" என்கிறது கர்மத்தால்வந்த தேவாதிரூப பேதங்களைப்பற்ற. (நீநிலாயவண்ணம்) சிதசிச்சரீரியானநீ கார்யகாரணவர்க்கத்திலேநிற்கிற ப்ரகாரம். அதாகிறது - அசித்கதமான பரிணாமமென்ன, சேதநகதமான அஜ்ஞாநதுக்காதிகளென்ன இவை, உன்பக்கல்ஸ்பர்ஸியாதபடிநிற்கை. (நின்னை) சிதசித்விஸிஷ்டமாய்க்கொண்டு ஜகதுபாதாந காரணமானவுன்னை. (ஆர்நினைக்கவல்லர்)நினைக்கவல்லாரார். பரமாணுக்கள் உபாதாநகாரணமென்னும் வைஸேஷிகர் நினைக்கவோ; ப்ரதாநம் உபாதாநகாரணம், சிதசித்ஸம்ஸர்க்கத்தாலே ஜகந்நிர்வாணமென்னும் ஸாங்க்யர் நினைக்கவோ; நிமித்தோபாதாநங்களுக்குபேதஞ்சொல்லும் ஸைவர் நினைக்கவோ; சிதசிதீஸ்வர தத்வத்ரயங்களும் ப்ரஹ்மபரிணாமமென்னும் பேதாபேதிகள் நினைக்கவோ; நிர்விஸேஷவஸ்துவ்யதிரிக்தங்கள் அபரமார்த்தமென்னும் மாயாவாதிகள நினைக்கவோ; வேதாந்த ப்ரமேயம் கைப்பட்டாரொழிய ஆர்நினைக்கவல்லர் என்கிறார். (௧)

அ.—இரண்டாம்பாட்டு. "[illegible]" "ஸஹயஜ்ஞைப்ரஜாஸ் ஸ்ருஷ்ட்வா" என்கிறபடியே-காரணபூதனானவுன்னாலே ஸ்ருஷ்டமான சேதநர்க்குகர்மயோகம்முதலாகபரமபக்திபர்யந்தமான பகவத்ஸமாராதநத்துக்கும் ஸமாஸ்ரயமாகைக்கும் அந்த பரபக்தியுக்தர்க்கு ஸர்வவித போக்யமாகைக்கும் க்ருஷ்ணனாய்வந்து ரக்ஷிக்கும் உன்னுடைய நீர்மையை * யார் நினைக்கவல்லரென்கிறார்.

ஸத்தாதிகள்-குணங்களுடைய ஸத்தாதிப்ரவ்ருத்திகள்.

இரண்டாம்பாட்டு —ஸமாஸ்ரயம் - விஷயம்.

ஆறுமாறுமாறுமாயோரைந்துமைந்துமைந்துமாய்
ஏறுசீரிரண்டுமூன்றுமேழுமாறுமெட்டுமாய்
வேறுவேறுஞானமாகிமெய்யினோடுபொய்யுமாய்
ஊறொடோசையாயவைந்துமாயவாயமாயனே. (உ)

ப-ரை.—ஆறும் - அத்யயநாதிஷட்கர்மங்களாறும், ஆறும் - வஸந்தாதி ருதுக்களாறும, ஆறுமாய் - ஆக்நேயம்முதலான யாகங்களாறுமாய், ஓரைந்து - பஞ்சமஹாயஜ்ஞங்களுக்கும், ஐந்தும - பஞ்சாஹுதிகளுக்கும் ஆராத்யனாய், ஐந்துமாய் - பஞ்சாக்நிகளுக்கு அந்தராத்மாவுமாய், ஏறு - ச்லாக்யமான, சீரிரண்டும்-உபாஸநரூப பகவத்ஜ்ஞாநமும் இதரவிஷயவைராக்யமுமாகிற இரண்டு குணங்களும், மூன்றும்-ஐச்வர்ய கைவல்ய பகவத்ப்ராப்திகள் மூன்றும், ஏழும்-விவேகவிமோகம் முதலான ஏழுகர்மங்களும், ஆறும் - ஜ்ஞாநபலைச்வர்யம் முதலான ஆறும், எட்டுமாய் - அபஹதபாபமத்வாதி எண்குணங்களுமாய், வேறுவேறுஞாநமாகி - நிர்மலாந்தக்கரணரல்லாத பாக்யஹீநர்க்கும் பாஹ்ய குத்ருஷ்டிஸ்மாதிகளுக்கும பரவாதிகளுமாய், மெய்யுமாய் - முமுக்ஷுக்களுக்கு மெய்யனாய், பொய்யுமாய் - ப்ரயோஜநாந்தரபரர்க்கு க்ஷுத்ரப்ரயோஜநங்களைக்கொடுத்துத் தான் அகலநிற்கையாலே பொய்யனாய், ஊறொடோசையாய வைந்துமாய - சப்தஸ்பர்சரூபரஸகந்தங்களைந்துமாய, ஆய - கோபஸஜாதியனாய் வந்து திருவவதரித்த, மாயனே - ஆச்சர்யபூதனே!, உன்னை உள்ளபடி பரிச்சேதித்தறிய வல்லாரார்னென்கிறார்.

வ்யா.—(ஆறுமாறுமாறுமாய்) அத்யயநாதி ஷட்கர்மங்களும், அத்யயநத்தால் ஜ்ஞாதவ்யமான கர்மாநுஷ்டாநத்துக்கு யோக்யமான வஸந்தாதிருதுக்களாறும், அநுஷ்டேயமான ஆக்நேயாதிஷட்யாகங்களும். இது ஸர்வகர்மங்களுக்கும் உபலக்ஷணம். இவை ஆறு என்றது - இவற்றோடே ஈஸ்வரனை ஸமாநாதிகரித்தது. அத்யயநாதிகளிலே, "ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:" "ததாபிபுத்தியோக்ந்தம்" என்கிறபடியே - சேதநனைமூட்டியும் அவற்றுக்கேகாந்தங்களான காலங்களுக்கு நிர்வாஹகனாயும், அநுஷ்டேய கர்மங்களுக்கு ஆராத்யனாயுமிருக்கையாலே ஸமாநாதிகரித்துச் சொல்லுகிறது. (ஓரைந்து மைந்துமைந்துமாய்) கீழ்ச்சொன்ன கர்மத்துக்கு அதிகாரஸம்பத்துகுடலாய், ப்ரதாநமான பஞ்சமஹாயஜ்ஞத்துக்கும், பஞ்சாஹுதிகளுக்கும் ஆராத்யனாய், பஞ்சாக்நிக்கு அந்தராத்மாவாயுமிருக்குமவன். பஞ்சமஹாயஜ்ஞமாவது - "தேவயஜ்ஞ: பித்ருயஜ்ஞோ பூதயஜ்ஞ: மநுஷ்யயஜ்ஞோ ப்ரஹ்மயஜ்ஞ:" "தேவயஜ்ஞோ பிதுர்யஜ்ஞோ பூதயஜ்ஞோ மநுஷ்யயஜ்ஞோ ப்ரஹ்மயஜ்ஞ:" என்கிறவை. பஞ்சாஹுதிகளாவன - ப்ராணாஹுதிகள். பஞ்சாக்நிகளாவன - கார்ஹபத்யாஹவநீயதக்ஷிணாக்நிகளும் ஸப்யாவஸத்யங்களும். (ஏறுசீரிரண்டும்) "தர்மேண பாபமபநுததி" "தர்மேணபாபமபநுததி" என்னும்படியே-விஹிதகர்மாநுஷ்டாநத்தாலே மோக்ஷவிரோதிபாபம்போனால்

அத்யயநாதிஷட்கர்மங்கள் - அத்யயந அத்யாபந யஜந யாஜந தாந ப்ரதிக்ரஹங்களாகிற ஆறு கர்மங்கள். ... ... உ

இவன்பக்கலிலே [பிறக்கும்] உபாஸநரூப "பகவத்ஜ்ஞாநமும் தத்கார்யமான இதர விஷயவைராக்யமு"மென்கிற இரண்டு குணமும். * மாற்பால் மநஞ்சுழிக்கையும், மங்கையர்தோள் கைவிடுகையும். (மூன்றும்) உபாஸநபலமான ஐஶ்வர்ய கைவல்ய பகவத் ப்ராப்திகள். அன்றிக்கே, ஜ்ஞாநவைராக்ய ஸாத்யமான பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் மூன்றும். (ஏழும்) உக்தமானகர்மயோகாதி பரபக்தி பர்யந்தமான அளவுகளை பலிக்கக்கடவ மநோநைர்மல்யத்துக் கடியான விவேகாதி ஸப்தகமும். அதாகிறது - விவேக விமோகாப்யாஸக்ரியாகல்யாணாநவஸாதாநுத்தர்ஷங்கள். அதாகிறது – மநோநைர்மல்ய ஹேதுவான விவேகாதி நியமஸப்தகயுக்தமாகிய க்ரியாஶப்த வாச்யமான விஹித கர்மாநுஷ்டாநத்தாலே உபாஸநநிஷ்பத்தியைச் சொல்லுகிறது. (ஆறும்) உக்தபக்தி வர்த்தகமாய் ஸ்வயம் ப்ராப்யமான ஜ்ஞாந பலைஶ்வர்ய வீர்யஶக்தி தேஜஸ்ஸுக்களாறும். (எட்டுமாய்) * அபஹதபாப்மத்வாதி குணாஷ்டகமுமாய். "స్వేనరూపేణాభినిష్పద్యతే" "ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்கிறபடியே இது ப்ராப்யாந்தர்க்கதமிறே.

(வேறுவேறுஞானமாகி) நிர்மலாந்தக்கரணரல்லாதபாக்யஹீநர்க்கும் பாஹ்யகுத்ருஷ்டி ஸ்ம்ருதிகளுக்கும் ப்ரவர்த்தகனாய். (மெய்யினோடுபொய்யுமாய்) கீழ்ச்சொன்ன முமுக்ஷுக்களுக்கு மெய்யனாய், ப்ரயோஜநாந்தரபரரான க்ஷுத்ரர்க்கு ப்ரயோஜநங்களைக்கொடுத்து தான் அகல நிற்கையாலே பொய்யனாய். (ஊனொடோசையாய வைந்துமாய) பரமபக்தி யுக்தராயிருப்பார்க்கு ஸர்வவித போக்யமானவன். "ஊனொடோசை" என்று - ஶப்தாதிகளைந்துக்கும் உபலக்ஷணம். "உண்ணுஞ்சோறு பருகுநீர்" என்றும், "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும்" என்னக்கடவதிறே. (ஆயமாயனே) கோபஸஜாதீயனாயவதரித்த ஆஶ்சர்யபூதனே. அதாவது - தான் நின்ற நிலையிலேநின்று ஆஶ்ரிதர்க்கு உபகரிக்கையன்றிக்கே, திவ்யமங்களவிக்ரஹத்தை ஸம்ஸாரிஸஜாதீயமாக்கிவந்தவதரித்து, உபாஸகர்க்கு ஶுபாஶ்ரயமாய் ஸித்தோபாய பரிக்ரஹம் பண்ணினார்க்கு விஷயாந்தரங்களில் நின்றும்மீட்டு, தானே போக்யமுமாய், * காணவாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்திருக்கும் பரமபக்தியுக்தர்க்கு ஸர்வவித போக்யமுமானவனென்கை. அவதாரந்தான் * ஸாதுபரித்ராணத்துக்கும் தர்மஸம்ஸ்தாபநத்துக்குமாகவிறே. ௨

அ.—மூன்றாம்பாட்டு. முதற்பாட்டிற் சொன்ன ஜகத்காரணத்வப்ரயுக்தமான லீலாவிபூதியோகமென்ன, இரண்டாம்பாட்டிற் சொன்ன உபாயத்துக்கு பலமான நித்ய விபூதியோகமென்ன, ஆக இந்த உபய விபூதியோகத்தை நிர்ஹேதுக க்ருபையாலே தேவரீர் காட்ட வருத்தமற நான் கண்டாப்போலே வேறு ஸ்வஸாமர்த்யத்தால் காணவல்லாரில்லை யென்கிறார்.

ஐந்துமைந்துமைந்துமாகியல்லவற்றுளாயுமாய்
ஐந்துமூன்றுமொன்றுமாகிநின்றவாதிதேவனே!
ஐந்துமைந்துமைந்துமாகியந்தரத்தணைந்துநின்
றைந்துமைந்துமாயநின்னையாவர்காணவல்லரே. (௩)

ப-ரை.—ஐந்தும் - ஆகாசாதிபூதங்களைந்தும், ஐந்தும்-ச்ரோத்ராதிஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், ஐந்துமாகி - வாய்முதலிய கர்மேந்த்ரியங்களைந்துமாகி, ஐந்தும் - ஆகாசாதிபூதங்களைந்துக்கும் காரணமான தந்மாத்ரைகளைந்தும், மூன்றும் - அஹங்காரம் மஹாந் ஸூக்ஷ்மமூலப்ரக்ருதி என்கிற மூன்றும், ஒன்றுமாகி-மநஸ்ஸுமாய், அல்லவற்றுள்-இப்படி இருபத்துநாலாகப் பிரிக்கப்பட்டிருக்கிற ப்ரக்ருதியிலே ஸம்ஸ்ருஷ்டமான ஜீவாத்மாக்களுக்கு, ஆயுமாய்-அந்தர்யாமியாய், நின்ற-இவையழிந்தகாலத்திலும் ஸூக்ஷ்மசிதசித் விசிஷ்டனாய்க் கொண்டுநின்ற, ஆதிதேவனே - காரணபூதனே, ஐந்தும் - அப்ராக்ருதமாய் திவ்ய சக்திமயமான திவ்யவிக்ரஹமும், ஐந்தும் - அதுக்கு ஒப்பிடமான ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், ஐந்தும் - கர்மேந்த்ரியங்களைந்துமாகி இவற்றுக்கு, ஆகி-நிர்வாஹகனாய், ஐந்தும் - சப்தாதிபோக்யங்களைந்தும், ஐந்துமாய - போகஸ்தாநம் போகோபகரணம் வைகுந்தத்தமரர்முனிவர் முமுக்ஷுக்கள் என்கிற ஐந்துகோடியுமாய், அந்தரத்து - பரமபதத்திலே, அணைந்துநின்று - பொருந்திநின்ற, நின்னை - உபயவிபூதியுக்தனாயிருக்கிற உன்னை, யாவர்காணவல்லரே - ஸ்வஸாமர்த்யத்தாலே காணவல்லாரார்.

வ்யா.—(ஐந்துமைந்துமைந்துமாகி) ஆகாசாதி பூதங்களைந்தும், ச்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், வாகாதி கர்மேந்த்ரியங்களைந்துமாகி. (ஐந்துமூன்றும்) ஆகாசாதிபூதங்களைந்துக்கும் காரணமான தந்மாத்ரைகளைந்தும், ஒன்றுக்கொன்று காரணமான அஹங்காரமென்ன மஹானென்ன ஸூக்ஷ்ம மூலப்ரக்ருதியென்ன இவை மூன்றும். (ஒன்றுமாகி) “மந ஏவ” “மநஏவ” என்கிறபடியே-உத்தமமான ஸகல பதார்த்தங்களுக்கும் பந்த ஹேதுவாகைக்கும் மோக்ஷ ஹேதுவாகைக்கும் ஹேதுவான மநஸ்ஸுமாய். (அல்லவற்றுளாயுமாய்) இப்படி சதுர்விம்சதியாக விபக்தமான ப்ரக்ருதியிலே ஸம்ஸ்ருஷ்டரான ஜீவாத்மாக்களுக்கு அந்தர்யாமியாய். (அல்லவற்றுள்) அசித் வ்யாவ்ருத்தரான சேதநர்பக்கலிலே. (நின்றவாதிதேவனே) ஸ்தூலசிதசித்விசிஷ்டனாய் நின்றாப்போலே, இவை அழிந்த காலத்திலும், ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டனாய்க் கொண்டு நின்ற காரணபூதனானவனே. (ஐந்துமைந்துமைந்துமாகி) இதுக்குக்கீழே லீலாவிபூதியோகத்தைக்காட்டித்தந்தபடியைச் சொன்னாராய், மேல் திவ்யமங்கள விக்ரஹத்தையும் நித்யவிபூதியோகத்தையும் காட்டித் தந்தபடியைச் சொல்லுகிறார். அப்ராக்ருதமாய் பஞ்சசக்திமயமான திவ்ய விக்ரஹத்தையும், ததாச்ரயமான ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும் கர்மேந்த்ரியங்களைந்துமென்கிற இவற்றுக்கு நிர்வாஹகனாய். இத்தால் - திவ்ய விக்ரஹயோகஞ்சொல்லிற்று.

மூன்றாம்பாட்டு.— பஞ்சசக்தி - “పరమేష్ఠీ పుమాన్ విశ్వో నివృత్తిస్సర్వ ఏవహి” என்கிறவை.

(அந்தரத்தணைந்துநின்றுஐந்துமைந்துமாய)ஶப்தாதிபோக்யங்களைந்தும்,போகஸ்தாநமென்ன,போகோபகரணமென்ன,"வைகுந்தத்தமரரும்முனிவரும்" என்றஇரண்டுகோடியும், முக்தரும் என்ற அஞ்சுகோடியுமாய். (அந்தரத் தணைந்துநின்று) "परमव्योम" "பரமவ்யோம" என்றும், "परमाकाश" "பரமாகாஶம்" என்றும் ஶ்ருதி ப்ரஸித்தமான பரமபதத்திலே பொருந்திநின்று. இப்படி உபயவிபூதி யுக்தனுன (நின்னையாவர் காணவல்லரே) ஸ்வஸாமர்த்யத்தால் காணவல்லாரார். மநுஷ்யரிற்காட்டில் ஜ்ஞாநாதிகரென்று தேவர்கள் காணவோ; உபயபாவநாநிஷ்டரென்று ப்ரஹ்மாதிகள் காணவோ; ப்ரஹ்மபாவநா நிஷ்டரென்று ஸநகாதிகள் காணவோ. '... ... ...; ௫

அ.—நாலாம்பாட்டு. ஜ்ஞாபகமான வேதங்களையும் மந்த்ர ரஹஸ்யங்களையும் தேவரீருண்டாக்கி வைககச்செய்தேயும் அவ்வழியாலேயறிந்து உபாஸியாதேயிருக்க,நீயேவந்து என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்த விதுஎன்ன நீர்மை! என்கிறார்.

> மூன்றுமுப்பதாறினோடோரைந்துமைந்துமைந்துமாய
> மூன்றுமூர்த்தியாகிமூன்றுமூன்றுமூன்றுமூன்றுமாய்
> தோன்றுசோதிமூன்றுமாய்த்துளக்கமில்விளக்கமாய்
> ஏன்றெனாவியுள்புகுந்ததென்கொலோவெம்மீசனே. (௪)

ப-ரை.—ஸகலவேதத்துக்குமடியான, மூன்றுமுப்பது - ககாராதி ஹகாராந்தமான முப்பத்துமூன்று மெய்யெழுத்துக்களும், ஆறினோடோரைந்துமைந்தும் - பதினாறு உயிரெழுத்துக்களும், இரண்டிலும் - அநுபாத்தமான, ஐந்துமாய் - ளகரம் முதலான ஐந்தெழுத்துக்களுமாகிய ஐம்பத்துநாலு அக்ஷரங்களுக்கும் நிர்வாஹகனாய், மூன்றுமூர்த்தியாகி - வேதாத்மாவான மூன்றுரூபத்தையுமுடையையாய, மூன்று மூன்று மூன்று மூன்றுமாய் - த்ருதவாதசாக்ஷர பரதிபாத்யனாய, தோன்றுசோதி மூன்றுமாய் - மூன்றக்ஷரங்களாலாகிய ப்ரணவத்தாலே ப்ரதிபாதிக்கப்படுமவனாய, துளக்கமில் - அசைவின்றிக்கேயிருக்கிற, விளக்கமாய - அகாரவாச்யனாய், எம்மீசனே - நீ சேஷி நானசேஷபூதன் என்கிற ஸம்பந்தத்தை உணர்த்தினவனே!, ஏன்று - என்காயத்தை உனக்கு பரமாகஏறிட்டுக்கொண்டு, என் ஆவியுள் புகுந்தது - என்மநஸ்ஸிலே புகுந்து என்னைப்ரகாசிப்பித்தது, என் - என்னநீர்மை!, என்று ஈடுபடுகிறார்.

வ்யா.—(மூன்றுமுப்பதாறினோடோரைந்து மைந்து மைந்துமாய்) ஸகலவேதங்களுக்குமடியான ஐம்பத்துநாலு அக்ஷரத்துக்கும் நிர்வாஹகனாய். (மூன்றுமுப்பது) ககாராதி ஹகாராந்தமான ஹல்லுக்களான முப்பத்துமூன்று அக்ஷரமும். (ஆறினோடோரைந்துமைந்தும்) அச்சுக்களான பதினாறு அக்ஷரமும். (ஐந்துமாய்) இரண்டிலும் அநுபாத்தமான ளகாராதிகள் அஞ்சக்ஷரமும்.

போகோபகரணம் - சத்ரசாமராதிகள். ௫

நாலாம்பாட்டு.—அகாரமமுதலானதுக்கு "அச்சு" என்றுபேர்.

(மூன்றுமூர்த்தியாகி)வேதாத்மாவான மூன்றுருபத்தையுமுடையனாய். அக்ஷரங்கள் ஜ்ஞாநஹேதுவாவது வேதஶரீரமானாலிறே. (மூன்றுமூன்று மூன்றுமூன்றுமாய்) அந்த வேததாத்பர்யமான திருத்வாதஶாக்ஷரப்ரதிபாத்யனாய். (தோன்றுசோதிமூன்றுமாய்) மூன்றிலே தோன்றுகிற சோதியாய். "ఓఙ్కారో భగవాన్ విష్ణుః" "ஓங்காரோ பகவாந் விஷ்ணு:" என்கிறபடியே-அக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவப்ரதிபாத்யனாய். (துளக்கமில்விளக்கமாய்) ஸகலவேதகாரண ப்ரணவத்துக்குங் காரணமாய். தனக்கொரு காரணமில்லாமையாலே, சலநமின்றிக்கேயிருக்கிற அகாரவாச்யனாய். (என்றெனாவியுள்புகுந்த தென்கொலோ) இவ்வழியாலே நானறிந்து உபாஸிக்கைக்கு விஷயபூதனாகையன்றிக்கே, என்கார்யத்தை உனக்கு பரமாக ஏறிட்டுக்கொண்டு என்மநஸ்ஸிலே புகுந்து என்னை உள்ளபடி ப்ரகாஶிப்பித்த விது என்னநீர்மை. (எம்மீசனே) ப்ரகாஶிப்பித்த ப்ரகாரமென்னென்னில்; நீ ஶேஷியாய் நான்ஶேஷபூதனாயிருக்கிற இம்முறையுணர்த்தினாயென்னுதல்; இப்படி எனக்கு ப்ரகாஶிப்பிக்கைக்கடி இழவுபேறுகள் உன்னதாம்படியான ஸம்பந்தத்தை யுடையவனென்னுதல். ௪

அ.—அஞ்சாம்பாட்டு. நம்மை உள்ளபடி அறிவிக்கவற்றான வேதங்களும் மந்த்ரரஹஸ்யங்களுமுண்டாயிருக்க, "யாவர்காணவல்லரே" என்பானென்னென்னில்; அந்தர்யாமித்வத்தாலும் ஜகதேககாரணத்வத்தாலும் ஸகலாதாரனாயிருக்கிற ஸ்வபாவத்தைத் திரளவறியுமித்தனையொழிய, தேவரீர்காட்ட நான் கண்டாப்போலே ஏவம்விதனென்று ஒருவர்க்கு மறியவொண்ணாதென்கிறார்.

நின்றியங்குமொன்றிலாவுருக்கடோறுமாவியாய்
ஒன்றியுள்கலந்துநின்றநின்னதன்மையின்னதென்
றென்றும்யார்க்குமெண்ணிறந்தவாதியாய! நின்னுந்திவாய்
அன்றுநான்முகற்பயந்தவாதிதேவனல்லையே. (௫)

ப-ரை.—நின்று-ஸ்தாவரமாய்நின்றும், இயங்கும்-ஜங்கமமாய்ஸஞ்சரித்தும், ஒன்றிலா - உஜ்ஜீவநப்ரகாரங்களில் ஒன்றாகும் உறுப்பன்றிக்கேயிருக்கிற, உருக்கள்தோறும் - ஸகலசரீரங்கள்தோறும், ஆவியாய் - ஆத்மாவாய், ஒன்றி- எதிர்த்தலையில் ஹேயதையைப்பாராதே பொருந்தி, உள்கலந்துநின்ற - ஏகதத்வமென்னும்படி கலந்துநின்ற, நின்னதன்மை - உன்னுடையஸ்வபாவம், இன்னதென்று-இப்படிப்பட்டதென்று, என்றும் - நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும், யார்க்கும் - பேரளவுடையரான பரமர்ஷிகளுக்கும், எண் இறந்த-

---

வேதாத்மாவான - வேதஶரீரமான. மூன்று ரூபமாவது - கீழ் "ஹல்" என்றும், "அச்சு" என்றும் இரண்டு மன்றியிலே யிருக்கிற ளகாராதியுமாகிற மூன்று ரூபத்தையு மென்றபடி. அக்ஷரங்கள் வேதஶரீரமாக வேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (அக்ஷரங்களித்யாதி.) ௪

மநஸ்ஸால் நினைக்கைக்குமெட்டாத, ஆதியாய் - ப்ரதாநனானவனே, அன்று-தேவாதி ஸகலபதார்த்தங்களும் அழிந்துகிடந்தவன்று, நின்உந்திவாய்-உன்னுடைய திருநாபீகமலத்திலே, நான்முகன்பயந்த - ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த, ஆதிதேவனல்லையே-ஜகதேககாரணனல்லையோ, உன் ஸ்வரூபத்தை உள்ளபடி காணவல்லாரார்.

வ்யா.—(நின்றியங்குமொன்றிலா வுருக்கள்தோறும்) ஸ்தாவர ஜங்கமாத்மகமாய், தந்தாமுடைய உஜ்ஜீவநப்ரகாரங்களில் ஒன்றுக்கு ஒன்றுக்கு முறுப்பன்றிக்கேயிருக்கிற ஸகல ஶரீரங்கள்தோறும். ஒருபடிப் பட்டிராத ஶரீரங்களென்றுமாம். (ஆவியாயொன்றியுள்கலந்துநின்ற)ஆத்மாவாய், எதிர்த்தலையில் ஹேயதையைப் பாராதேபொருந்தி, ஸமாப்ய-உள்புகுந்து,ஏகத்ரவ்யமென்னும்படிகலந்துநிற்கிற. (நின்னதன்மை)உன்னுடையஸ்வபாவம். அதாகிறது-தத்கததோஷங்கள்தட்டாதேநிற்கையும், விபுவானதான்இவற்றிலேஸமாப்யவ்யாபரிக்கையுமாகிறஇவ்வாஶ்சர்யம்.(இன்னதென்று)ஏவம்விதமென்று. த்ருஷ்டாந்தமுகத்தாலே உபபந்நமென்று. (என்றும்யார்க்கும்)வர்த்தமாநகாலத்தோடுபவிஷ்யத்காலத்தோடுவாசியற அதிஶயிதஜ்ஞாநரானப்ரஹ்மாதிகளுக்கும்.(எண்ணிறந்த)மநோரதத்துக்கும்அவ்வருகாய்நின்ற. (ஆதியாய்) ப்ரதிதிவ்யவஹாரங்களிலேவந்தால் ப்ரதாநனானவனே. ஸாக்ஷாத்கரிக்கும்போது, "நிற்கின்றதெல்லாம்நெடுமால்" என்கிறபடியேவிஶேஷ்யமானதேவரீர்ப்ரதாநராயசேதநாசேதநங்கள் விஶேஷணமாத்ரமாயிருக்கையும், வ்யவஹாரத்தில்வந்தால் "వచసాంవాచ్యముత్తమమ్" "வசஸாம்வாச்யமுத்தமம்" என்கிறபடியே ஶப்தவாச்யங்களில் ப்ரதாநனாய் நிற்கையும். (நின்னுந்திவாயன்று நான்முகற்பயந்த வாதிதேவனல்லையோ)இதுகிடக்க,ஜகதேககாரணனாய் நிற்கிறநிலைதான் ஒருவர்க்குமறிய நிலமோ. * ஒன்றுந்தேவில்படியே தேவாதி ஸகலபதார்த்தங்களும் அழிந்துகிடந்தவன்று உன்னுடைய திருநாபீகமலத்திலே, "యోబ్రహ్మాణంవిదధాతిపూర్వమ్" "யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்" என்கிறபடியே ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த ஜகதேககாரணனல்லையோ. திருநாபீகமலோத்பத்தியைப்பார்த்தால் ப்ராக்ருதமென்னவொண்ணாது, க்ஷேத்ரஜ்ஞனான ப்ரஹ்மாவுக்கு உத்பாதகமாகையாலே அப்ராக்ருதமென்னவொண்ணாது, இவ்வாஶ்சர்யத்தை ஏவம்விதமென்று, கர்மவஶ்யராய் பரிமிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளறியவோ. ... ... ரு

அஞ்சாம்பாட்டு.—ஸமாப்ய-விபுவானஸ்வரூபமெல்லாவற்றோடும் வ்யாபிக்கை. உபபந்நமாகாதிருக்கைபூரிப்பது .சொல்லக்கூடாதிருக்கையென்றபடி. ப்ரதிதி வ்யவஹாரங்களேதென்ன; அருளிச்செய்கிறார் (ஸாக்ஷாத் இத்யாதி.) இப்பாட்டுக்கு "யாவர்காணவல்லர்" என்று கீழ்ப்பாட்டோடே க்ரியை. ... ... ரு

அ.—ஆறும்பாட்டு. ஸகலாந்தர்யாமித்வத்தால் வந்த ஸகலாதாரத்வம் சொல்லிற்றாய் நின்றது-கீழ்; லோகத்திலே யொன்றுக்கொன்று தாரகமாயும் தார்யமாயும் போருகிற தில்லையோவென்று பகவதபிப்ராயமாக; அந்த பதார்த்தங்களுக்கும் தேவரீரே தாரகமென்று வேதாந்த ப்ரஸித்தமான 'இவ்வர்த்தம் தேவரீர் பக்ஷத்திலே வ்யவஸ்திதமன்றோ, இஸ்ஸர்வாதாரத்வமும் ஸ்வஸாமர்த்யத்தாலே வேறொருவர்க்கும் காணமுடியாதென்கிறார்.

நாகமேந்துமேருவெற்பைநாகமேந்துமண்ணினை
நாகமேந்துமாகமாகமாகமேந்துவார்புனல்
மாகமேந்துமங்குல்தீயோர்வாயுவைந்தமைந்துகாத்
தேகமேந்திநின்றநீர்மைநின்கணேயியன்றதே. (௯)

ப-ரை.—நாகம்ஏந்து-ஸ்வர்க்கத்தை தரிக்கிற, மேருவெற்பை-மேருபர்வதத்தையும், நாகம் ஏந்து-திக்கஜங்களாலே தரிக்கப்படுகிற, மண்ணினை-பூமியையும், நாகம் - துக்கஸம்பந்தரஹிதமான ஸுகத்தாலே, ஏந்து - பூர்ணமான, மாகம் - பரமவ்யோமத்தையும், மாகம்-பரமபதத்தையும், மாகமேந்து-ஆகாசத்தாலே தரிக்கப்படுகிற, வார்புனல் - பரவாஹத்தையுடைய கங்கையையும், மாகமேந்து-ஆகாசம்தரிக்கின்ற, மங்குல் - மேகத்தையும், தீ - வைச்வாநராக்நியையும், ஓர் - அத்விதீயமான, ஐந்துவாயு - பஞ்சவ்ருத்திப்ராணனையும், அமைந்துகாத்து-பொருந்தினின்று ரக்ஷித்து, ஏகம - ஒருவஸ்துவானது, ஏந்திநின்ற - தரியாநின்றதென்று சருதிசொல்லுகிற, நீர்மை - ஸ்வபாவம், நின்கணேயியன்றதே-தேவரீர்பக்கலிலேயே வர்த்திக்கிறதென்கிறார்.

வ்யா.—(நாகமேந்துமேருவெற்பை) ஸ்வர்க்கத்தை தரிக்கிற மேருவாகிற பர்வதத்தை. மேருவுக்கு ஸ்வர்க்காதாரத்வம் மேருசிகரத்தில் தேவேந்த்ரன் வாஸத்தாலே. (நாகமேந்துமண்ணினை) திக்கஜங்களாலே தரிக்கப்படுகிற பூமியென்னுதல்; பாதாளகதருமிருந்துள்ள திருவநந்தாழ்வானாலே தரிக்கப்படுகிற பூமியென்னுதல். (நாகமேந்துமாகம்) துக்கஸம்பந்தரஹிதமான ஸுகத்தாலே பூர்ணமான பரமவ்யோமம். "ஏந்தல்" என்று - தேங்கலாய், ஆநந்தநிர்ப்பரமான தேசமென்கை. "நாகம்" என்று-துக்கஸம்பந்தரஹிதமான ஸுகத்துக்கு வாசகமானபடி யெங்ஙனேயென்னில்; கம் - ஸுகம். அகம்-துக்கம். நாகம்-துக்கரஹிதமித்யர்த்தம். "நாகமேந்து மஆக" என்று - ஸம்புதிதியாய, திருவநந்தாழ்வானாலே தரிக்கப்பட்ட திருமேனியையுடையவனே.

ஆறும்பாட்டு.—பதார்த்தங்களுக்கும்-ஒன்றுக்கொன்று தாரகமான எல்லா பதார்த்தங்களுக்கும் ஸர்வேஸ்வரனே தாரகனென்றபடி.

இத்தால் - கீழ்ச்சொன்ன தாரகபதார்த்தங்களும் பகவதாஹித ஶக்திகமாய்க்கொண்டு தரிக்கிறனவென்றதாய்த்து. (மாக மாகமேந்துவார்புனல்)பரமபதமென்ன, ஆகாஶத்தாலே தரிக்கப்படுகிறப்ரவாஹரூபமானகங்கையென்ன, இவையும். (மாகமேந்துமங்குல்) ஆகாஶம்தரிக்கிற மேகத்தையும்.(தீயோர்வாயுவைந்தமைந்து காத்து) வைஶ்வாநராக்நியையும் பஞ்சவ்ர்த்திப்ராணன்களையும்ரக்ஷணதர்மத்திலே சமைந்துநின்றுரக்ஷித்து.‘‘ஓர்வாயுவைந்துமைந்து காத்து’’ என்று பாடமானபோது - தஶதாவிபக்தமான வாயுவைச்சொல்லுகிறது. ‘‘𑌮𑍇𑌘𑍋𑌦𑌯𑌃 𑌸𑌾𑌗𑌰𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃’’ ‘‘மேகோதயஸ்ஸாகரஸந்நிவ்ர்த்தி:’’ இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே நிராலம்பநமான ஆகாஶத்திலே ஸஞ்சரிக்கிற ஸகலபதார்த்தமும் ஈஶ்வரஸங்கல்பத்தாலே ஸஞ்சரிக்கிறதென்று சொல்லிற்றாய்த்து. ‘‘𑌯𑌥𑌾𑌕𑌾𑌶𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂’’ ‘‘யதாகாஶஸ்திதோநித்யம்’’ இத்யாதி. (ஏகமேந்திநின்றநீர்மை) ஒருவஸ்து தரிக்கிறதென்று ஶ்ருதிசொல்லுகிற ஸ்வபாவம். (நின்கணேயியன்றதே) தேவரீர்பக்கலிலே வர்த்திக்கிறது. இயத்தல் - நடத்தலும், வளர்த்தலும். ‘‘யாவர்காணவல்லர்’’ என்று கீழோடே அந்வயம். இஸ்ஸர்வாதாரத்வத்தைத் தேவரீர்காட்ட. நான்கண்டாப்போலே வேறுகாண வல்லாராரென்கிறார். ... ௬

அ.—ஏழாம்பாட்டு.—நாம் ஜ்ஞாநத்துக்கு விஷயமான பின்பு பரிச்சேதித்து அறியமாட்டாதொழிகிறது ஜ்ஞாநஶக்திகளின்குறையன்றோ, ‘‘யாவர்காணவல்லரோ’’ என்கிறதென்னென்ன; தேவரீர் இதரஸஜாதீயராய் அவதரித்து ரக்ஷிக்கிறபடியை ஜ்ஞாநத்தாலும் ஶக்தியாலும் அதிகனான ருத்ரனு மறியமாட்டானென்கிறார்.

ஒன்றிரண்டுமூர்த்தியாய்,உறக்கமோடுணர்ச்சியாய்,
ஒன்றிரண்டுகாலமாகி,வேலைஞாலமாயினாய்,
ஒன்றிரண்டுதீயுமாகி,ஆயனாயமாயனே!
ஒன்றிரண்டுகண்ணினானுமுன்னையேத்தவல்லனே. (எ)

ப-ரை.—ஒருமூர்த்தி - பரதாநமான ஒருமூர்த்தியும், இரண்டுமூர்த்தியாய் - அபரதாநமான இரண்டுமூர்த்தியுமாய், உறக்கமோடு - அஜ்ஞாநத்துக்கும், உணர்ச்சி - ஜ்ஞாநத்துக்கும், ஆய் - நிர்வாஹகனாய், ஒன்றிரண்டுகாலமாகி - ஸத்வரஜஸ்தமமாகிற மூன்றுகுணத்துக்கும் நிர்வாஹகனாய், வேலை - கடல்சூழ்ந்த,

---

(இத்தாலென்றது) - பரமவ்யோமத்துக்கு அவன்றானே தாரகனென்னு மிடந்தோற்ற வேறொன்றை தாரகமாக இட்டுச்சொல்லாதே, கேவலம் ‘‘மாகம்’’ என்றவித்தால்-கீழ்தாரகங்களாகச் சொன்னமேருவும் ஶேஷனும் ஈஶ்வரனாலே கொடுக்கப்பட்ட ஶக்தியையுடைத் தாய்க்கொண்டு தரிக்கின்றன என்றபடி. அக்நி - ஜாடராக்நி. யோக ஶாஸ்த்ரத்திலே அவனதீநமென்றதுக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார் (யதாகாஶேத்யாதி.) ... ௬

ஞாலமாயினாய் - பூமிக்குநிர்வாஹகனாய், ஒன்றிரண்டுதீயுமாகி-ஆஹவநீயம் கார்ஹபத்யம் தக்ஷிணாக்நிகளாகிற முன்றக்நிகளுக்குந்நிர்வாஹகனாய், மாயனை-ஆச்சர்யபூதனை, ஆயனே - க்ர்ஷ்ணனே, ஒனறிரண்டுகண்ணினனும் - முக்கணனானருத்ரனும், உன்னை - ஸர்வநிர்வாஹகனைவுன்னை, ஏத்தவல்லனே-உள்ளபடி அறிந்து ஸ்தோத்ரம்பண்ணசக்தனோவென்கிறா.

வ்யா.—(ஒன்றிரண்டுமூர்த்தியாய்) ப்ரதாநமான ஒருமூர்த்தியும் அப்ரதாநமான இரண்டுமூர்த்தியுமாய். ப்ரஹ்மருத்ரர்களை ஶரீரமாகக்கொண்டு அவர்களுக்கு நிர்வாஹகனாய், திவ்யமங்களவிக்ரஹத்தை இதரஸஜாதீயமாககிகொண்டவதரித்து ப்ரயோஜநாந்தரபரரோடு முமுக்ஷுக்களோடு வாசியற ஸர்வநிர்வாஹகனாய். (உறக்கமோடுடணர்ச்சியாய்) ஜ்ஞாநாஜ்ஞாநங்களுக்கு நிர்வாஹகனாய். "அநாதிமாயயாஸுப்த:" "அநாதிமாயயாஸுப்த:" என்கிறபடியே உறங்கினார்கணக்காய் விழுகையாலே, உறக்கத்தை-அஜ்ஞாநமென்கிறது. இத்தால் - மூன்றும் ஏகாத்மா திஷ்டிதமென்ன, அநேகாத்மா திஷ்டிதமென்ன அந்யோந்யம் ஸமமென்கிற அஜ்ஞாநத்துக்கும், மத்யஸ்தன் ரக்ஷகன், ப்ரஹ்மருத்ராதிகள் ரக்ஷ்யபூதரென்கிற யாதாத்ம்யஜ்ஞாநத்துககும் நிர்வாஹகனென்கை. (ஒனறிரண்டுகாலமாகி) ஜ்ஞாநஹேதுவான ஸத்வோத்தர காலத்துககும், அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களுக்கு ஹேதுவான ரஜஸ்தமோத்ரிக்தகாலத்வயத்துக்கும் நிர்வாஹகனாய். "த்ரேதாயாம்ஜ்ஞாநமுச்யதே" "கலௌஜகத்பதிம்விஷ்ணும்" "த்ரேதாயாம்ஜ்ஞாநமுச்யதே" "கலௌஜகத்பதிம்விஷ்ணும்" என்னக்கடவதிறே. (வேலைஞாலமாயினாய்) கடல்சூழ்ந்தபூமிக்கு நிர்வாஹகனாய். யதாஜ்ஞாநம் பிறந்தவர்களுக்கு ஆவாஸஸ்தாநமானகர்மவிபூதிக்குநிர்வாஹகனாய். "அயந்துநவமஸ்தேஷாம் த்வீபஸ்ஸாகரஸம்வ்ருத:" "அயந்துநவமஸ்தேஷாம் தவீபஸ்ஸாரஸம்வ்ர்த:" என்கிறபடியே-நவமவர்ஷமான ஜம்பூத்வீபத்தில் காமபூமியான பாரதவர்ஷம் கடல்சூழ்ந்திறே யிருப்பது.

ஏழாம்பாட்டு.—ஆதாரஸ்தாநமாவது - ஜ்ஞாநம் பிறந்தவனுக்கு கர்மாநுஷ்டாநம் இந்த பூமியிலொழியக் கூடாமையாலே அதுக்கு யோக்யமான பூமியென்றபடி. ஜம்பூத்வீப மெல்லாவற்றையுமன்றோ கடல்சூழ்ந்தது, பாரதவர்ஷமாத்ரத்தைச் சூழவில்லையேயென்ன; அருளிச்செய்கிறார் (என்கிறபடியே யித்யாதி.) பாரதவர்ஷத்துக்கு உத்தரமாக மேலைஸமுத்ரந் தொடங்கிக் கிழைஸமுத்ரமளவாக ஸகரர்கல்லினார்களென்று ப்ரஸித்த மாகையாலே பாரதவர்ஷத்தையும் தனியே கடல்சூழ்ந்ததென்றபடி. நாலுகடலுக்கும் நடுவான ஜம்பூத்வீபத்தில், நவவர்ஷமாவது - மஹாமேருவுக்கு ஆஸந்நமாகச் சுற்று மொரு வர்ஷமும், அதுக்கு வடக்காக மூன்றும், தெற்காகமூன்றும், கிழக்கேஒன்றும், மேற்கேஒன்றும்; ஆக மஹா மேருவைச்சுற்றும் ஒன்பது வர்ஷமாய், எல்லாவற்றுக்கும் தெற்கான வர்ஷம் பாரதவர்ஷப்பேர். இது தான் நவகண்டமாய் அதில் எட்டு கண்டமும் போக பூமியாய், ஒன்பதாம் கண்டமான பாரதகண்டம் கர்மபூமியா யிருக்குமென்றபடி.

(ஒன்றிரண்டுதீயுமாகி) ப்ரதாநமான ஆஹவநீயத்துக்கும் ததங்கமான கார்ஹபத்ய தக்ஷிணாக்நிகளுக்கும் நிர்வாஹகனாய். "కర్మాణ్యసంకల్పితతత్ఫలాని" "கர்மாண்யஸங்கல்பித தத்பலாநி" என்கிறபடியே - முமுக்ஷுக்களுக்கு அநுஷ்டேயமான யஜ்ஞாதிகளுக்கும் அங்கமான அக்நித்ரயத்துக்கும் நிர்வாஹகனாய். (ஆயனாயமாயனே) அதீந்த்ரியமான விக்ரஹத்தை கோபஸஜாதீயமாக்கி யவதரித்த ஆஶ்சர்யபூதனான க்ர்ஷ்ணனே. இத்தால்- "అహంహి సర్వయజ్ఞానాం భోక్తా" "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம்போக்தா" என்கிறபடியே உக்தமான யஜ்ஞத்துக்குமாராத்யனாய அவதரித்தபடி. "సర్వయజ్ఞః సర్వఇజ్యశ్చ కృష్ణః" "ஸர்வேயஜ்ஞா: ஸர்வஇஜ்யாஶ்சக்ர்ஷ்ண:" "ధర్మసంస్థాపనార్థాయ సంభవామి" "தர்மஸம்ஸ்தாபநார்த்தாயஸம்பவாமி" என்னக்கடவதிறே. (ஒன்றிரண்டுகண்ணினானும்) ஶக்திஸூசகமான ஒருகண்ணையும் இதரஸஜாதீயமான இரண்டுகண்ணையுமுடைய ருத்ரனும். (உன்னையேத்தவல்லனே) "ఈశ్వరాద్జ్ఞానమన్విచ్ఛేత్" "ஈஶ்வராத்ஜ்ஞாநமந்விச்சேத்" என்கிற ஜ்ஞாநாதிக்யத்தையும் லலாடநேத்ரனென்கிற ஶக்த்யாதிக்யத்தையு முடையனென்று ஸர்வநிர்வாஹகனான வுன்னை உள்ளபடி அறிந்தேத்தவல்லனோ. ஆகமமுகத்தாலே தன்னையேத்தவல்லனித்தனைபோக்கி உன்னையேத்தவல்லனோ. ஸத்வோத்தரனானபோதும் தானறிந்த அம்ஶத்தைப் பிறர்க்கு உபதேஶிக்குமித்தனைபோக்கி உன்னை உள்ளபடி அறிந்தேத்தவல்லனோ. ... ... எ

அ.—எட்டாம்பாட்டு. உபயவிபூதியிலுண்டான ஸகலபதார்த்தங்களினுடைய ஸத்தாதிகளும், கார்யகாரணோபயாவஸ்தமான லீலாவிபூதிக்கு நிர்வாஹகமான காலதத்வமும் ஸ்வாதீநமாம்படி நிற்கிற வுன்னை, ருத்ரனேயன்று பரிச்சேதிக்கமாட்டாதான், உபயவிபூதியிலும் பரிச்சேதிக்க வல்லாரில்லையென்கிறார்.

ஆதியானவானவர்க்குமண்டமாயவப்புறத்
தாதியானவானவர்க்குமாதியானவாதிநீ;
ஆதியானவானவாணரந்தகாலநீயுரைத்தி;
ஆதியானகாலநின்னையாவர்காணவல்லரே. (அ)

ப-ரை.—ஆதியான-ஸ்ர்ஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களான, வானவர்க்கும்-ப்ரஹ்மாதிதேவர்களுக்கும், அண்டமாய - அண்டசப்தவாச்யமான, அப்புறத்து - பரமபதத்திலவர்த்திக்கிற, ஆதியான-ஏககாரணபூதரான, வானவர்க்கும்-நித்யஸூரிகளுக்கும், ஆதியான-ஸத்தாதிகளுக்குஹேதுவான, ஆதிநீ-ப்ரதாநன்நீ; ஆதியான-ஜகத்ஸ்ர்ஷ்ட்யாதிகர்த்தாக்களாய், வானம்- ஊர்த்வலோகங்களுக்கு, வாணர்-அத்யக்ஷராய்வர்த்திக்கிற ப்ரஹ்மாதிகளுடைய பதங்களு

"ஆலநிழற்கீழ்" என்று-பிறர்க்கு உபதேஶித்தானே யென்ன; அருளிச்செய்கிறார் (ஸத்வோத்தரனானபோதித்யாதி.) ... எ

டைய, அந்தகாலம்-அவ்வவகாலத்துக்கு நியாமகனான, நீ—, உரைத்தி-அருளிச் செய்கையாலே, ஆதியானகாலம் - ஆதிகாலத்துக்கு நிர்வாஹகனான, நின்னை-உன்னை, யாவர்-அளவுடையரான ப்ரஹ்மாதிகள்தான், காணவல்லரோ - பரிச்சேதித்தறியவல்லரோவென்கிறார்.

வ்யா.—(ஆதியானவானவர்க்கும்) ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார ங்களுக்கு கர்த்தாக்களான தேவதைகளுக்கும், ப்ரஹ்மா தக்ஷப்ரஜா பதிகள் ஸப்தரிஷிகள் ஆதித்யர்களாகிற இவர்கள் ஸ்ருஷ்டிகர்த்தாக் கள்; இந்த்ரன் சதுர்த்தசமநுக்களாகிற இவர்கள் ஸ்திதிகர்த்தாக் கள்; ருத்ரன் அக்நி யமன் முதலான இவர்கள் ஸம்ஹாரகர்த்தாக்கள். "ஆதி" என்று - கர்த்தாவைச் சொல்லுகிறது. (அண்டமாயவப்புற த்து ஆதியானவானவர்க்கும்) லீலாவிபூதிக்கு அப்புறத்தில் அண்ட ஶப்தவாச்யமான பரமபதத்தில் வர்த்திக்கிற ஜகத்காரண பூதரான நித்யஸூரிகளுக்கும். அஸ்த்ரபூஷணாத்யாயக்ரமத்தாலே நித்யஸூரி களை ஜகத்துக்குக் காரணபூதராகச் சொல்லக்கடவதிறே. அதவா, "యత్ర పూర్వే సాధ్యాస్సన్తి దేవాః" "யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" என்றும், "యత్రర్షయః ప్రథమజా యే పురాణాః" "யத்ரரிஷய: ப்ரதமஜா யே புராணா:" என்றும் சொல்லுகிற ஆதிதேவர்களென்றுமாம். (ஆதியா னவாதி நீ) இப்படி உபயவிபூதியிலும் ப்ரதாநரானவிவர்களுடைய ஸ த்தாதிகளுக்கு ஹேதுவான ப்ரதாநன் நீ. (ஆதியானவானவாணரந்த காலநீயுரைத்தி) இனிமேல் ஜகத்துக்கு நிர்வாஹகமான காலதத்வமும் தேவரீரிட்ட வழக்கென்கிறது. ஜகத்ஸ்ருஷ்ட்யாதி கர்த்தாக்களாய் ஊர்த்வலோகங்களுக்கு அத்யக்ஷராய் வர்த்திக்கிற ப்ரஹ்மாதிகளு டைய பதங்களுடைய அவ்வவகாலத்துக்கு நியாமகனாய். "நீ உரை த்தி" என்கிறது - "సహస్రయుగపర్యన్తమహర్యద్బ్రహ్మణో విదుః" "ஸஹஸ்ர யுகபர்யந்தமஹர்யத் ப்ரஹ்மணோ விது:" என்றித்யாதிகளிலே நீயரு ளிச்செய்திருக்கையாலே. (ஆதியானகாலநின்னை) கார்யரூபமான ஜக த்தடைய ஶக்த்யவஸ்தப்ரபை போலே லீநமாய், "సదేవ సోమ్యేదమగ్ర" "ஸதேவ ஸோம்யேதமக்ரே" என்கிறபடியே ஆதிகாலத்துக்கு நிர்வா ஹகனான உன்னை. (யாவர்காணவல்லரோ) தந்தாம் ஸத்தாதிகள் தேவரீரிட்ட வழக்காயிருந்தபின்பு தேவரீரை பரிச்சேதிக்க வல்லா ருண்டோ. ... ... அ

எட்டாம்பாட்டு.—ஶக்த்யவஸ்த ப்ரபை-பொடி மூடினதணல் போலேயிருக்கை. அதாவது-கார்யாவஸ்தையில் ஜ்வாலாக்நிபோலே யும் காரணாவஸ்தையில் ஜ்வாலை யடங்கியிருக்கிற அங்காராவஸ்தை போலேயும் சேதநாசேதநங்களைத் தனக்குள்ளே யடக்கிக் கொண் டிருக்கை. ... ... அ

அ.—ஒன்பதாம்பாட்டு. இப்படி அபரிச்சேத்ய வைபவனுகை யாலே ப்ரயோஜநாந்தரபரரில் அக்ரகண்யனான ருத்ரனும், வைதிகா க்ரேஸரராய் அநந்ய ப்ரயோஜநரான ஸாத்விக ஜநங்களும் உன் னையே யாஶ்ரயிக்கையாலே ஸர்வ ஸமாஶ்ரயணீயனும் நீயே யென் கிறார். ... ... *

தாதுலாவுகொன்றைமாலைதுன்னுசெஞ்சடைச்சிவன்
நீதியால்வணங்குபாதநின்மலாநிலாயசீர்
வேதவாணர்கீதவேள்விநீதியானகேள்வியார்
நீதியால்வணங்குகின்றநீர்மைநின்கணின்றதே. (கூ)

ப-ரை.—தாதுஉலாவு-மகரந்தம்மிக்கிருந்துள்ள, கொன்றைமாலை-கொன்றை மாலையணிந்து, துன்னு - நெருங்கி, செம் - சிவந்த, சடை - ஜடையையுடைய, சிவன் - ருத்ரனானவன், நீதியால் - வேதோக்தப்ரகாரத்தாலே, வணங்கு- உபாஸிக்கிற, பாதம் - திருவடிகளையுடையவனான, நின்மலா - சுத்தியோகத்தை யுடையவனே, நிலாயசீர - அமானித்வாத்யாத்மகுணங்களோடும சமதமாதி குணங்களோடுங் கூடினவர்களாய், வேதவாணவர - வேதார்த்தத்தையறிந்தவ ர்களாய், கீதம் - ஸாமகாநபராயணரான, வேள்வி - யாகங்களிலே ப்ரவர்த்தரா னவர்களாய், நீதியானகேள்வியார - ப்ரஹ்மநிஷ்டரான ஆசார்யனபக்கலிலே வேதார்த்தத்தைக்கேட்டவர்கள், நீதியால் - காமார்ச்சமான அநவரதபாவனை பண்ணுகைக்கு, வணங்குகின்ற - உபாஸ்யனாயநிற்கிற, நீர்மை - ஸ்வபாவம், நின்கணே - உன்பக்கலிலேயே, நின்றது - வர்த்திக்கிறதென்கிறார்.

வ்யா.—(தாதுலாவித்யாதி)தாதுமிக்ககொன்றைமாலையென்ன, நெருங்கிச் சிவந்த ஜடையென்ன,இவற்றையுடைய ருத்ரன். கொன் றைமாலையைச் சொல்லுகையாலே-போக ப்ரதாநனென்றும், தீர்க்க தபாவாகையாலே செறிந்து, ஸ்நாநபாஹுள்யத்தாலே சிவந் திருக்கிற ஜடையையுடையனாகையாலே, அந்தபோகந்தான் ஸாதி த்து லபித்ததென்றும் சொல்லுகிறது. இத்தால்-போகமே புருஷார் த்தம், அதுதான் ஈஶ்வரனை ஆஶ்ரயித்தே பெறவேணுமென்கை. (நீதியால் வணங்குபாத) தேவரீரை ஐஶ்வர்ய விஶிஷ்டனாக ஆஶ்ர யிக்கச்சொல்லுகிற வேதோக்தப்ரகாரத்தாலே அவனுபாஸிக்கிற திருவடிகளையுடையவனே.(நின்மலா)ப்ரயோஜநாந்தரங்களை அபே க்ஷிக்கிறது, "ஈஶ்வரோஹம்" என்றிருக்கிற துர்மாநி ஆஶ்ரயித்தா னென்று இத்தோஷங்களைநினையாதே,நம்பக்கலிலேஸாபேக்ஷனாய் வந் தானென்கிறகுணத்தையேநினைத்து, அநந்யப்ரயோஜநருக்கு முகங் கொடுக்குமாப்போலேமுகங்கொடுக்கும்ஶுத்தியோகத்தை யுடைய வனே.இப்படி விஷயீகரித்து அவனுக்குக்கொடுத்தஐஶ்வர்யமேதெ ன்னில்;"మహాదేవస్సర్వమేధే మహాత్మా""హుత్వాత్మానం దేవదేవో బభూవ""மஹா தேவஸ்ஸர்வமேதே மஹாத்மா""ஹுத்வாத்மாநம்தேவதேவோப பூவ"என்கிறபடியேதேவதேவத்வத்தைக்கொடுத்தவனே. இதுப்ர யோஜநாந்தரபரரெல்லார்க்கு முபலக்ஷணம்.(நிலாயசீர்)வர்த்திக்கிற குணங்கள்.

அதாகிறது - ஜ்ஞாநஸாதநமான அமாநித்வாத்யாத்ம குணங்களாலும்; உபாஸநாங்கமான ஶமதமாதி குணங்களாலும் ஸம்பந்நராயிருக்கை. அங்ஙனன்றியே, "நிலாயசீர்வேதம்" என்று வேதவிஶேஷணமாய் - நித்யத்வ பௌருஷேயத்வ நிர்த்தோஷத்வங்களாலே காரணதோஷ பாதகப்ரத்யயாதி தோஷ ரஹித கல்யாண குணங்களைச் சொல்லிற்றாகவுமாம். (வேதவாணர்) வேதங்களுக்கு நிர்வாஹகரென்னலாம்படி வேதார்த்தத்தைக் கரைகண்டவர். (கிதவேள்வி) அந்த வேதார்த்தாநுஷ்டாநமாய், ஸாமகாந ப்ரதாநமான யாகங்களிலே ப்ரவர்த்தரானவர்கள். அதாவது - ஆத்ம யாதாத்ம்யஜ்ஞாந பூர்வகமாக த்ரிவித பரித்யாகயுக்தராய், பகவத்ஸமாராதநபுத்தியாலே அநுஷ்டிக்கும் யஜ்ஞங்கள். (நீதியாய கேள்வியார்) உக்தமான வேதார்த்த தாத்பர்யம் கைப்படுகைக்கும் தத்கார்யமான கர்மயோகாத்யநுஷ்டாநங்களுக்கு மடியான கேள்வியையுடையவர்கள். நீதியான கேள்வியாராகிறது - "ஸமித்பாணி:" "பரீக்ஷ்யலோகாந்" இத்யாதியிற் சொல்லுகிறபடியே நிர்வேதார்த்தியிறந்து ப்ரஹ்மநிஷ்டனான ஆசார்யன்பக்கலிலே உபஸந்நராய, "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:" "ஶ்ரோதவ்யோ மந்தவ்ய:" என்கிறபடியே ஶ்ரவண மநநங்களைப் பண்ணுகை. (நீதியால் வணங்குகின்ற நீர்மை) "ஸமித்பாணி:" "நிதித்யாஸிதவ்ய:" என்கிறபடியே - கர்மாங்கமான அநவரதபாவனை பண்ணுகைக்கு உபாஸ்யனாய நிற்கிற ஸ்வபாவம். (நின்கண்ணின்றதே) உன பக்கலிலே வர்த்திக்கிற வித்தனை. அவதாரணத்தாலே - வேறு ஆஶ்ரயணீயரில்லையென்கை.... ... ... சு

அ.—பத்தாம்பாட்டு. ஸர்வஸமாஶ்ரயணீயத்வத்தால் வந்த உபாஸ்யத்வமேயன்றிக்கே, "ஸதேவ ஸோம்ய:" "காரணந்து த்யேய:" என்கிறபடியே ஜகதுபாதாநகாரணவஸ்துவே ஸமாஶ்ரணீயமென்று சொல்லுகிற காரணத்வ ப்ரயுக்தமான ஆஶ்ரயணீயத்வமும் தேவரீருடையதென்று த்ர்ஷ்டாந்த ஸஹிதமான உபாதாநகாரணத்வத்தை யருளிச் செய்கிறார். ... . , *

தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண் டடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்;
நின்னுளே பிறந்திறந்து நிற்பவுந் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மை நின்கணின்றதே. (க0)

ஒன்பதாம்பாட்டு.—த்ரிவித பரித்யாகம் - பலஸங்க கர்த்ருத்வ த்யாகம். கர்மசிதாந்லோகாந்பரீக்ஷ்ய என்றாய், "பஜ" "சிந்தயே" என்கிற தாதுவாலே கர்மாநுஷ்டாநத்தாலே வதிக்கப்பட்ட லோகங்களை யென்றபடி. நிர்வேதாவர்த்தி - துக்கம் பலகால் அநுவர்த்திக்கை. ... ... சு

ப-ரை.—தன்னுளே - தனக்குள்ளே, திரைத்து - வாயுவாலேகிளர்ந்து, எழும்-வீசாநின்றுள்ள, தரங்கம்- அலைகளையும், வெண்-வெண்மையையுமுடைத்தாய், தடம் - இடமுடைத்தான, கடல் - ஸமுத்ரமானது, வாயுவசத்தாலே, தனனுளே - தனக்குள்ளே, திரைத்து - கிளர்ந்து, எழுந்து -மேலெழுந்து, அடங்குகின்ற தன்மைபோல் - அடங்கிவிடுகிறஸ்வபாவம்போலே; நின்னுளே-உன் ஸ்வரூபத்துக்குள்ளே, பிறந்து இறந்து'- பிறந்துநசிக்கிற, நிற்பவும் திரிபவும்-ஸ்தாவரஜங்கமங்களும், நினனுளேயடங்குகின்ற - தேவரீர்பக்கலிலேயடங்குகிற, நீர்மை - இந்தஸ்வபாவம், நினகலைநின்றது - தேவரீரிடத்திலேயுள்ளதென்கிறார்.

வ்யா.—(தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் டடங்கடலித்யாதி) த்ர்ஷ்டாநதத்திலே அர்த்தத்தை ஶிக்ஷிதது தார்ஷ்டாந்திகமுகத்திலே அதிதேஶிக்கிறார். "தன்னுளே" என்கிறவித்தால்-ஶரீரபூதசேதநாசேதநங்களும், ஸ்ர்ஷ்ட்யாதிவ்யாபாரங்களும், ஸ்வரூபாந்தர்ப்பூதமென்கை. (திரைத்தெழும்தரங்கம்) நிஸ்தரங்கஜலதியானதுவாயுவாலே கிளர்ந்தெழுந்துஎங்குமொக்க ஸஞ்சரியாநின்றுள்ள திரைகளையுடைத்தாகை. தார்ஷ்டாநதிகத்தில் வாயுஸ்தாநீய பகவத்ஸங்கல்பமடியாக ஸ்ர்ஷ்டிகாலத்திலேபிறந்த குணவைஷம்யம். (வெண்தடங்கடல்) ஸஞ்சாரியான திரையையும் அஸஞ்சாரியான வெண்மையையுமுடைத்தான இடமுடையகடல். இது, மேலே "நிற்பவும்திரிபவும்" என்கிறத்துக்கு தர்ஷ்டாந்தம். (தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்றதன்மைபோல்) வாயுவஶத்தாலே பரம்பினதிரைகள் மற்றப்படி ஒன்றிலேயொன்று திரைத்தெழுந்து உபஸம்ஹரிக்கிற ஸ்வபாவம்போலே. இத்தால் - ஏகத்ரவ்யபரிணாமத்தைச் சொல்லுகிறதன்று, கீழ்ப்பாட்டிலே உபாஸநம் சொல்லிற்று, இப்பாட்டிலே உபாஸ்யமான ஜகதுபாதாநகாரணத்தைச்சொல்லுகிறது. அதாகிறது - ஸூக்ஷ்மசிதசித் விஶிஷ்டப்ரஹ்மமே காரணம், ஸ்தூலசிதசித் விஶிஷ்டப்ரஹ்மமே கார்யமென்று வேதாந்தப்ரஸித்தமான அர்த்தம். இது எத்தாலே அறிவதென்னில்; "नकर्माविभागात्" "நகர்மாவிபாகாத்" என்கிற ஸூத்ரத்தாலே "सदेव" "ஸதேவ" என்கிற அவிபாகஶ்ருதியாலே அக்காலத்தில் க்ஷேத்ரஜ்ஞரில்லாமையாலே கர்மமில்லையென்று பூர்வபக்ஷித்து, "ज्ञाज्ञौ द्वावजावीशनीशौ" "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ" "नित्यो नित्यानाम्" "நித்யோ நித்யாநாம்" என்று

பத்தாம்பாட்டு.—அதிதேஶிக்கை - ஏறிடுகை. தரங்கம்-அலை. வெண்மை ஏகரூபமாகையாலே (அஸஞ்சாரி) என்றது. மற்றைப்படி யென்கிறது - முன்புபோலே அல்பம் சலிக்கை யன்றிக்கே, திரைமேல் திரையாகக்கிளர்ந்து ஸம்ர்த்தமாகை. த்ரவ்ய பரிணாமத்தை யென்றது - ஸாங்க்யர் சொல்லுகிற பரிணாமத்தைச் சொல்லுகிற தென்றபடி.

க்ஷேத்ராஜ்ஞர் களுக்கும் தத்கர்மப்ரவாஹத்துக்கும் அநாதித்வ முண்டாகையாலே அது அர்த்தமன்றென்று விஷேஷித்து நாம ரூபவிபாகாபாவத்தாலே, "ஸதேவ" என்கிற அவதாரணம் உப பந்நமென்றதுமே. த்ர்ஷ்டாந்தம் ஏகத்ரவ்யமுகத்தாலே சொன்னு ரிவரோயன்று, "యథాసౌమ్యైకేనమృత్పిణ్డేన" "யதாஸௌம்யேகேநம்ர்த் பிண்டேந" என்று உபநிஷத்து; "కటకమకుటకర్ణికాదిభేదైః" "கடக மகுடகர்ணிகாதிபேதைঃ" என்று ஸ்ரீபராஶரபகவாநிதத்தைதார்ஷ் டாந்திகத்திலே அதிதேஶிக்கிறார். (நின்னுளேபிறந்திறந்து நிற்ப வும்திரிபவும்) உன் ஸ்வரூபத்துக்குள்ளே உத்பத்தியும் விநாஶமு மாய்ப்போருகிற ஸ்தாவரஜங்கமாத்மகமான ஸகலப்தார்த்தமும். (நி ன்னுளேயடங்குகின்றநீர்மை) ப்ராக்ர்தோபஸம்ஹார வேளையிலே "తమఏకీభవతి" "தமஏகீபவதி" என்கிறபடியே - தேவரீர்பக்கலிலே அடங்குகின்ற இந்த ஸ்வபாவம். (நின்கண்நின்றதே) தேவரீர்பக்க லிலே யுள்ளதென்று இவ்வுபாதாநகாரணத்வம் வ்யக்த்யந்தரத்தில் இல்லையென்கை. முதற்பாட்டிற்சொன்ன உபாதாநகாரணத்வத்தை பத்தாம்பாட்டிலே த்ர்ஷ்டாந்த ஸஹிதமாகச்சொல்லி முடித்தாரா யிற்று. ... ... கo

அ.—பதினேராம்பாட்டு. "నసన్నచాసచ్ఛివఏవకేవలః" "హిరణ్యగర్భ స్సమవర్తతాగ్రే" "நஸந்நசாஸச்சிவஏவ" "ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த் ததாகரோ" என்று ப்ரஹ்மாதிகளுக்கும் காரணத்வஞ்சொல்லுகிறதில் லையோவென்ன; உனக்குமேலே ஸ்ர்ஷ்டராய் உன்பெருமையை ஒரோ ப்ரயோஜநங்களிலே பேசக்ஷமருமன்றிக்கேயிருக்கிறவிவர்கள் ஆஶ்ர யணீயராக ப்ரஸங்கமென், கீழ்ச்சொன்ன காரணவாக்யமும் அவ்வ ஸ்துவைப்பற்ற அந்யபரமென்கிறார்.

சொல்லினுற்றொடர்ச்சிநீ;சொலப்படும்பொருளும்நீ;
சொல்லினுற்சொலப்படாதுதோன்றுகின்றசோதிநீ;
சொல்லினுற்படைக்கநீபடைக்கவந்துதோன்றினர்;
சொல்லினுற்சுருங்கநின்குணங்கள்சொல்லவல்லரோ. (கக)

ப-ரை.—சொல்லினுல் - சப்தஸிந்தமான புருஷார்த்தத்திலே இழிந்தார்க்கு, தொடர்ச்சி - உறவைப்பிறப்பிப்பாயும், நீ—; சொலப்படும்-ச்ருதிஸ்ம்ர் த்யாதிகளில்ஆச்ரயணீயராய்ச்சொல்லப்படுகிறதேவதைகளுக்கு, பொருளும்- அந்தராத்மாவும், நீ—; சொல்லினுல்-வேதாந்தத்தாலே, சொல்லப்படாதுதோ ன்றுகின்ற - பரிச்சேதிக்கப்படாதென்று தோன்றுகிற, சோதி - தேஜச்சப்தவா ச்யன், நீ—; 'சொல்லினுல்-நீகொடுத்த வேதத்தை சாக்ஷியாகக்கொண்டு, படைக்க-

சிதசித்விஶிஷ்ட வஸ்துவுக்கு ஏக த்ரவ்யமான ஸமுத்ரத் தைச் சொல்லலாமோவென்ன; அருளிச்செய்கிறார் (த்ர்ஷ்டாந்த மித்யாதி). வ்யக்த்யந்தரமானது ப்ரதாநபரிணமம் முதலானவற் றில் நில்லாதென்றபடி. ... ... கo

ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுவாராக, நீபடைக்க - நீஸ்ருஷ்டிக்க, வந்து - உன் திருநாபீகமலத்திலேவந்து, தோன்றினார் - தோன்றினப்ரஹ்மாதிதேவர்கள், நின்குணங்கள் - உன்னுடையகுணங்களை, சொல்லினால் - சொல்லப்புகுந்தால், சுருங்க-ஸங்க்ஷேபமாகவாகிலும், சொல்லவல்லரோ-பேசமாட்டார்களென்கிறார்.

வ்யா.—(சொல்லினால்தொடர்ச்சிநீ)ஶப்தத்தாலேஸித்தமான புருஷார்த்தத்திலே இழிந்தார்க்கு அதிலே 'உறவுபிறப்பிப்பாயும் நீ. தொடர் - உறவு. அதாவது - ப்ரத்யக்ஷவிஷயமான ஶப்தாதிகளேபுருஷார்த்தமென்றிருக்கும் ஸம்ஸாரிகளையொழிய வேதாந்த முகத்தாலே வேதைகஸமதிகம்யமான வஸ்துவையறிந்தும,அவ்வஸ்துவைப்பெற •ஆசைப்பட்டவர்களுக்கும் உபக்ரமதசையிலே ருசிஜநகன்நீ; ஹ்ரஹ்மாதிகள் ப்ராப்தரான ஜநகரல்லாமையாலே ருசிஜநகருமல்லர். (சொல்லப்படும்பொருளும்நீ) ஶ்ருதிஸ்ம்ருத்யாதிகளில் ஆஶ்ரயணீயராய்த் தோற்றுகிற தேவதைகளுக்கு ஆத்மாவும்நீ. "[illegible]" "[illegible]" "ஏகமேவ கேவதந்த்யக்நிம்" "சதுர் ஹோதாரோயத்ர ஸம்பதம்கச்சந்தி" "[illegible]" "ஏயஜந்தி." (சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்றசோதிநீ) வேதாந்தத்தால் பரிச்சேதிக்கப்படாதென்றுதோன்றுகிற தேஜஶ்ஶப்தவாச்யன்நீ. "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "யதோவாசோநிவர்த்தந்தே" "அவிஜ்ஞாதம்விஜாநதாம்" "யஸ்யாமதம்தஸ்யமதம்" "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய" "நாராயணபரோஜ்யோதி," இத்யாதிகளிலே உன்ஸ்வரூபாதிகள் அபரிச்சிந்நங்களென்றும் ✱பரம்ஜ்யோதிஶ் ஶப்தவாச்யன் நீயென்றும் சொல்லப்படாநின்றதிறே. (சொல்லினால்படைக்க)[[illegible] - யோவைவேதாம்ஶ்சப்ரஹிணோதிதஸ்மை] நீகொடுத்த•வேதத்தை த்ருஷ்டியாகக்கொண்டு ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுவாராக. "[illegible]" "ஸூரிதிவ்யாஹரத்." (நீபடைக்கவந்துதோன்றினார்) "[illegible]" "யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்" என்கிறபடியே - நீஸ்ருஷ்டிக்க உன்திருநாபீகமலத்திலேவந்து தோன்றின ப்ரஹ்மாமுதலான தேவர்கள். (சொல்லினாற்சுருங்க நின்குணங்கள்சொல்லவல்லரோ) உன் குணங்களையறிந்து பரக்கப் பேசமாட்டாமையன்றியே, ஓரோ ப்ரயோஜநங்களிலே ஸங்க்ஷேபேண உன்குணங்களைப் பேசவும்மாட்டார். பரத்வஸாதகமான குணங்கள், ஜகத்காரணத்வஸாதகமானகுணங்கள், ஆஶ்ரிதார்த்தமானகுணங்கள் இவற்றிலே ஓரோகோடியைக்கணைகாணமாட்டார்கள். ... ... கக

பதினோராம்பாட்டு.—அந்யபரம் - ப்ரஶம்ஸாபரம். ஶப்தம்-வேதஶப்தம். ஜநகரல்லாமை - யதாவானகாரணபூதரல்லாமை. ப்ரஹ்மா வேதத்தைக்கொண்டு ஸ்ருஷ்டிக்குமோவென்ன; அருளிச்செய்கிறார் ([illegible]-ஸர்வபூரிதி வ்யாஹரந் என்று) ... கக

அ.—பன்னிரண்டாம்பாட்டு. ஜகத்காரணபூதனாய் ஸ்ருஷ்ட்யாதி முகத்தாலே நின்று ரக்ஷிக்குமளவேயன்றியே, அஸாதாரண விக்ரஹயுக்தனாய் அவதரித்துரக்ஷிக்கும் உன்படியை லோகத்தில் ஆர் நினைக்கவல்லாரென்கிறார். ... ... *

உலகுதன்னைநீபடைத்தியுள்ளொடுக்கிவைத்தி; மீண்
டுலகுதன்னுளேபிறத்தி; ஓரிடத்தையல்லை; ஆல்!
உலகுநின்னொடொன்றிநிற்கவேறுநிற்றி; ஆதலால்
உலகுநின்னையுள்ளசூழல்யாவருள்ளவல்லரே. (௧௨)

ப-ரை.—நீ - ப்ராக்ருதஸ்ருஷ்டியைப்பண்ணின நீ, உலகுதன்னை - ஸகலபதார்த்தங்களையும், படைத்தி - யாநிற்றி, நித்யநைமித்திகாதிப்ரளயங்களிலே நாமரூபங்களை இழந்தபதார்த்தங்களை, உள் - உன்திருவயிற்றிலே, ஒடுக்கிவைத்தி - அடக்கிவைத்து ரக்ஷியாநிற்றி; மீண்டு - மறுபடியும், உலகுதன்னுளே - ஸ்ரேஷ்டமான இந்தலோகத்திலே, பிறத்தி - அவதரியாநிற்றி; ஓரிடத்தையல்லை - ஒருஸ்தலத்தாயென்று நிர்ணயிக்கவொண்ணாதவனாயிராநிற்றி, உலகு - ஜகத்து உனக்கு சரீரமாகையாலே, நின்னொடொன்றிநிற்க - உன்னைப்பிரியாதேயிருக்க, அஸாதாரணவிக்ரஹயுக்தனாய்க்கொண்டு, வேறுநிற்றி - வ்யாவ்ருத்தனாயிராநின்றாய்; ஆதலால் - ஒருவகையாலும் பரிச்சேதித்தறியவொண்ணாதவனாகையாலே, சூழலுள்ள - ஆச்சர்யமான வ்யாபாரத்தையுடைய, நின்னை - உன்னை, உலகில் - லௌகிகபுருஷர்களில், யாவர் - யார்தான், உள்ளவல்லர் - அறியவல்லாரென்கிறார்.

வ்யா.—(உலகுதன்னை நீ படைத்தி) அசித்தை உபகரணமாகக்கொண்டு ப்ராக்ருத ஸ்ருஷ்டியைப் பண்ணின நீ, ப்ரஹ்மாதி ஸகல தேவதாந்தர்யாமியாய்க்கொண்டு ஸகல பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டியாநிற்றி. (உள்ளொடுக்கிவைத்தி) நித்ய நைமித்திகாதி ப்ரளயாபத்துக்களிலே நாமரூபங்களை யிழந்த பதார்த்தங்களை உன் திருவயிற்றிலே வைத்து ரக்ஷியாநிற்றி. இத்தால் - ஸகல பதார்த்த ஸ்ருஷ்டிக்கும் கர்த்தாவாய ஸகல ஸம்ஹாரங்களிலும் ரக்ஷகனுமாயிருக்கிறான், அடியிலே "ஸஹஸ்ராம்ஸு" "பஹுஸ்யாம்" என்கிற ஜகதுபாதாநகாரணபூதனென்றதாய்த்து. (மீண்டுலகு தன்னுளே பிறத்தி) ஜகத்தேக காரணத்வத்தால் வந்த வைபவத்தினின்றும் மீட்டு உன்னாலே ஸ்ருஷ்டமான இவ்வுலகத்திலே சில க்ஷேத்ரஜ்ஞர்க்கு புத்ரனாய் வந்தவதரியாநிற்றி. (மீண்டு) அதுபோராமே திரியட்டுமென்னுமாம். ஸகல பதார்த்தங்களுக்கும் ஜநகனான நீ உன்னாலே ஸ்ருஜ்யனாயிருப்பானொரு க்ஷேத்ரஜ்ஞனை ஜநகனாகக்கொண்டு நீஜநிப்பதே. ப்ரளயாபத்திலே ஸகல பதார்த்தங்களையும் உன திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்த நீ ஒரு ஸ்த்ரீவயிற்றிலே கர்ப்பபூதனானவதே!. "ப்ரீத்யாத்வம் தாரயேசாநம் த்ருதம்யேநாகிலம் ஜகத்" "ப்ரீத்யாத்வம தாரயேஸாநம் த்ர்தம்யேநாகிலம் ஜகத்" என்னக்கடவதிறே.

பன்னிரண்டாம்பாட்டு—.மீண்டு - காரணத்வத்தில் நின்றும் மீண்டுஎன்னுதல்; காரணமானதுக்கு மேலேயென்னுதல். ஸ்த்ரீவயிற்றிலே என்றதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (ப்ரீத்யாத்வம் - ப்ரீத்யாத்வமித்யாதி)

(ஓரிடத்தையல்லையால்) ஒருஸ்தலத்தாயென்று நிர்ணயிக்கவொண்ணாதவனாகையாலே ஒருகோடியிலே சேர்த்தறியப் போகிறதில்லை. அதாகிறது-உபாதாநகாரணத்வத்திலேபுரையில்லாமையாலே கார்யமென்னவொண்ணாது, அவதாரத்தில்ஸஜாதீயபாவத்தில்புரையில்லாமையாலேகாரணமென்னவொண்ணாது, இதுஎன்னபடியென்கிறார். (உலகுநின்னொடொன்றிநிற்கவேறுநின்றி) ஜகத்துஉனக்கு ஶரீரமாகையாலே உன்னைப்பிரியாதேநிற்க, அஸாதாரண விக்ரஹயுக்தனாய்க்கொண்டு வ்யாவ்ர்த்தனாயிருத்தி. அதாகிறது - விமுகரானகாலத்திலே ஆத்மாவாய், நின்று ஸத்தையை நோக்கியும், அபிமுகீகரித்தவன்று ஶுபாஶ்ரயனாகைக்கு அஸாதாரண விக்ரஹயுக்தனாயிருக்குமென்கை. (ஆதலால்) ஒரு வகையாலும் பரிச்சேதித்தறிய வொண்ணாமையாலே. (உலகில்நின்னை யுள்ளசூழல் யாவருள்ள வல்லரோ) ஆஶ்சர்யமான படிகளையுடைய வுன்னை லௌகிக புருஷர்களில் அறியவல்லவரார். சூழல் - சூழ்ச்சி. ... ... (௧௨)

அ.—பதின்மூன்றாம்பாட்டு. இவ்வவதார ரஹஸ்யம் ஒருவர்க்கறிய வொண்ணாதோ வென்னில்; கோபஸஜாதீயனாய் வந்தவரித்த நீ காட்டித்தர உன்வைலக்ஷண்யம் காணுமதொழிய ஸ்வஸாமர்த்யத்தாலே காணமுடியாதெனகிறார். ... ... *

இன்னையென்றுசொல்லலாவதில்லையாதுமிட்டிடைப்
பின்னைகேள்வனென்பருன்பிணக்குணர்ந்தபெற்றியோர்
பின்னைபாயகோலமோடுபேருமூருமாதியும
நின்னையார்நினைக்கவல்லர்நீர்மையால்நினைக்கிலே. (௧௩)

ப-ரை.—உன் - உன்நிமித்தமாக ஆச்ரிதர்க்கும் அநாச்ரிதர்க்குமுண்டான, பிணக்கு உணர்ந்த - விவாதத்தைஅநுஸந்திக்கிற, பெற்றியோர் - பண்டிதர்களானவர்கள், உன்னைபரிச்சேதித்தறியப்புக்கால், இன்னையென்று - இப்படிப்பட்டவனென்று, சொல்லலாவதுயாதுமில்லை-சொல்லலாவதொன்றுமில்லை; இட்டிடை - நேரிய இடையையுடைய, பின்னை - நப்பின்னைபிராட்டிக்கு, கேள்வனென்பர் - வல்லபனென்று சொல்லுவார்கள்; பின்னையாய - அவதாரஸமாப்தியில் இளைப்பாறுமிடமான, கோலமோடு-வ்யூஹவிக்ரஹமும், பேரும்-குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களும், ஊரும் - அவதரித்த தேசப்ரபாவமும், ஆதியம் - அவ்விக்ரஹத்துக்கு நிதாநமுமாகிய இவற்றையுடையனான, நின்னை - உன்னை, நீர்மையால் - தங்கள் நீர்மையால், நினைக்கில் - ஆராயப்புக்கால், யார்நினைக்கவல்லர் - அறியவல்லாராக, ஒருவருமில்லையென்றுகருத்து.

வ்யா.—(இன்னை யென்று சொல்லலாவ தில்லையாதும்) அவதரித்து நிற்கிற நிலையில் அஜஹத்ஸ்வ பாவங்களென்ன, ஸௌலப்யாதிகளென்ன, இவற்றிலே ஒரு கோடியாலே உன்னைப் பரிச்சேதிக்கப்புக்கால் ஏவம் விதனென்று சொல்லலாவதொன்றுமில்லை.

சூழலுள்ளநின்னை - உலகில் - யாவருள்ள வல்லரோனமபடி. சூழ்ச்சி - வ்யாபாரம். ௧௨

பதின்மூன்றாம்பாட்டு.—யாதும் - ஒன்றும்.

(இட்டிடைப்பின்னை கேள்வனென்பர்) "𑌤𑌸𑍍𑌯 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌪𑌰𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌯𑍋𑌨𑌿𑌮𑍍" "தஸ்யதீராஃபரிஜாநந்தியோநிம்" என்கிறபடியே அவதாரரஹஸ்யஜ்ஞாநமுடையவர்களும் "மிதுநமேஆஶ்ரயணீயம்" என்று ஸஜாதீயரில்காட்டில் வ்யாவர்த்தனான வுன்னைஉபதேஶிப்பார்கள். நேரிதான இடையையுடையநப்பின்னைப்பிராட்டிக்குவல்லபனென்று சொல்லுவர்கள். "யாதுமிட்டு" என்றுகீழோடேகூட்டினபோது, ஶுபாஶ்ரயத்தையோதுகிற ப்ரகரணங்களில் அங்குஷ்ட மாத்ரமென்றும் "𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑍂𑌰𑍍𑌧𑌾 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍀 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑍌" "அக்நிர்மூர்த்நா சக்ஷுஷீசந்த்ர ஸூர்யௌ" என்கிறபடியே த்ரைலோக்ய ஶரீரனென்று இத்யாதிகளில் சொல்லுகிற ஶுபாஶ்ரயங்களை யடங்கவிட்டு. "𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌚 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀" "மநுஷ்யத்வேசமாநுஷீ" என்று கோபஸ்ஜாதீயனாய் வந்தவதரித்த நீளாவல்லபனே ஶுபாஶ்ரய மென்பர்கள். (உன்பிணக்குணர்ந்த பெற்றியோர்)உன்நிமித்தமாக ஆஶ்ரிதர்க்கும் அநாஶ்ரிதர்க்கு முண்டானவிவாதத்தை அநுஸந்திக்கும் பண்டிதர்கள். அதாகிறது - "பேருமோராயிரம் பிறபலவுடைய வெம்பெருமான்" என்னுமித்து ஆஶ்ரிதருடையவறிவு; "பேருமோருருவமு முளதில்லை" என்னுமித்து அநாஶ்ரிதருடைய வறிவு. இவ்விவாதத்துக்கடிநீ யென்றறியுமவர்கள்.

(பின்னையாய கோலமோடு பேருமூருமாதியும் நின்னை) இதரஸஜாதீயனாய் வந்தவதரித்து நிற்கச்செயதே ஸர்வ விஸஜாதீயமான வைலக்ஷண்யத்தையுடைய விக்ரஹமென்ன, அவதாரத்தில் குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களென்ன, அவதரித்த தேஶப்ரபாவமென்ன, அவதாரவிக்ரஹத்துக்கு நிதாநமென்ன, இவற்றை யுடையனான வுன்னை. அதவா, அவதாரஸமாப்தியில் விஶ்ரமஸ்தலமான வ்யூஹவிக்ரஹங்களென்ன, தத்தத்குணசேஷ்டித வாசகங்களான திருநாமங்களென்ன, ஆமோதாதி வ்யூஹஸ்தாநங்களென்ன,இவற்றுக்கடியான பரத்வமென்ன, இவற்றையுடைய வுன்னை யென்றுமாம்.

"இட்டு" என்றது-இட்டளமாய்,அத்தால்-ஸங்கோசமாய் (நேரிதென்கிறது.)யாதுமிட்டு-அடங்கஇட்டு.வேதங்களிலேசொல்லுகிற ப்ரகாரங்களில் எல்லாப்ரகாரங்களையுமிட்டுச்சொன்னாலும் இப்படிப்பட்டவனென்று, சொல்லலாவதில்லை-சொல்லப்போகாதென்றபடி. இடை-இடைக்குலமாதல். நீயென்றறிகையாவது-ஜ்ஞாநாஜ்ஞாநங்களை கர்மாநுகுணமாகக்கொடுத்து விவாதத்தைப் பண்ணுகிறவன் நீயென்றறியு மவர்களென்றபடி. பின்னையாயகோலம்-இதரவ்யாவர்த்தமான விக்ரஹமென்னுதல்; மநுஷ்யத்வத்துக்கு அபரமாயிருக்கிற திர்யகாதிகளென்னுதல். என்றுமாமென்று-தாம்சொன்னஜபிக்கும்பொருள்-திர்யகாதிகளென்றுசொன்ன இரண்டாமர்த்தம். கஅ

நீர்மையால் நினைக்கிலல்லது ஆர்நினைக்கவல்லார் - உன்னுடைய நீர்மையாலே நீ அறிவிக்க அறியு மத்தனையொழிய வேறு அறிய வல்லாரார். அதாகிறது - “బహూనిమేవ్యతీతాని” “பஹூநிமேவ்யதீதாநி” என்று தொடங்கி, “జన్మకర్మచమేదివ్యమ్” ஜந்மகர்மசமேதிவ்யம்” என்று நீ அறிவித்தாப்போலே அறிவிக்க அறியுமத்தனை. ... (கங)

அ.—பதினாலாம்பாட்டு. நம்மவதாரரஹஸ்யம் நீரறிந்தபடியென்னென்னில்; ப்ரயோஜநாந்தர பரர்க்காக திர்யக்ஸஜாதீயனாய் வந்தவதரித்த உன்குணங்களை பரிச்சேதித் தறியமாட்டேனே யாகிலும், அவ்வடிவு வேதைகஸமதிகம்யமென் றறிந்தேனென்கிறார்.

தூய்மையோகமாயினாய்! துழாயலங்கல்மாலையாய்!
ஆமையாகியாழ்கடற்றுயின்றவாதிதேவ! நின்
நாமதேயமின்னதென்னவல்லமல்லவாகிலும்
சாமவேதகீதனாயசக்கரபாணியல்லையே. (கச)

ப.உரை.—ஸம்ஸாரிகளை நித்யஸூரிகளோடேசேர்த்து அநுபவிப்பிக்கவல்ல, தூய்மையோகமாயினாய் - சுத்தியோகத்தையுடையனாய், துழாயலங்கல்மாலையாய்-திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனாய், தேவர்களுக்கு அம்ருதங்கொடுக்கைக்காக, ஆமையாகி - கூர்மாவதாரஞ்செய்தருளி, ஆழ் - மிக்க ஆழத்தையுடைய, கடல்-கடலிலே, மந்தரபர்வதம் அமிழ்ந்தாதபடி உன்முதுகிலேநின்று சுழல, துயின்ற-கண்வளர்ந்தருளின, ஆதிதேவ - ஜகத்காரணபூதனானவனே, நின் - உன்னுடைய, நாமதேயம் - குணசேஷ்டிதங்களை, இன்னதென்ன வல்லமல்லவாகிலும் - இப்படிப்பட்டதென்று சொல்லமாட்டேனேயாகிலும், சாமவேதகீதனாய - ஸாமவேதகீதனாயுசக்ரமவனாய், ஆச்ரிதவிரோதி நிரஸநார்த்தமாக, சக்கரபாணியல்லையே - திருவாழியைகையிலே யுடையவனாதலால் நீயே யோசித்தருளவேணுமென்கிறார். ... ... (கச)

வ்யா.—(தூய்மையோகமாயினாய்) அசித்ஸம்ஸர்க்கத்தாலே அசுத்தனான ஸம்ஸாரிக்கு உன்கர்பையாலே அசித்ஸம்ஸர்க்கத்தையறுத்து நித்யஸூரிகளோடேசேர்த்து உன்னை அநுபவிப்பிக்க வல்ல ஸுத்தியோகத்தையுடையவனே. ஸம்ஸாரி ஸுத்தியோகத்துக்கு நிர்வாஹகனானவனே. இத்தால்-ஸம்ஸாரோத்தரணத்துக்கு உபாயமும் நீயேயென்கை. ஹேயப்ரத்யநீகனானவனேயிறே சேதநர்க்கு ஸம்ஸாரமாகிற அஸுத்தியைப்போக்கவல்லான். (துழாயலங்கல்மாலையாய்) ஸர்வேஶ்வரத்வ சிஹ்நமான திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனானவனே. திருத்துழாய் நாதத்வ சிஹ்நமாகையாலும், போக்யத்வசிஹ்நமாகையாலும், ப்ராப்யபூதனும் நீயேயென்கை. (ஆமையாகி) ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காக அம்ருதமதநத்துக்கு அநுகூலமான கூர்மவேஷத்தைக்கொண்டு. (ஆழ்கடல்துயின்ற) அகாதமானகடலிலே மந்தரம் அமிழ்ந்தாதபடி உன்முதுகிலே அதுநின்றுசுழலக் கண்வளர்ந்

"క్షీరోదమధ్యేత్వభవత్ కూర్మరూపీస్వయంహరిః" "க்ஷீரோதமத்யேத்வபவத் கூர்மரூபிஸ்வயம்ஹரி:" என்னக்கடவதிறே. (ஆதிதேவ) ஜகத்துக்கு நீயேகாரணபூதனென்னு மிடத்தை ப்ரகாஶிப்பித்தவனே. ப்ரயோஜநாந்தரபரரொன்றுபாராதே அவர்களாபத்துக்கு உன்னையழிய மாறிஉதவுகையாகிறவிது 'உத்பாதகர்க்கல்லது கூடுமோவென்கை.

(நின்னுமதேயமின்னதென்ன வல்லமல்லவாகிலும்) கூர்மரூபியான தேவரீருடைய குணசேஷ்டிதங்களை ஏவம்விதமென்று பரிச்சேதித்துச்சொல்லமாட்டேனேயாகிலும். "நின்னுமதேயம்" என்று-வாச்யமான குணசேஷ்டிதங்களை தத்வாசகமான ஶப்தத்தாலே லக்ஷிக்கிறது. (சாமவேதகீதனாய சக்கரபாணியல்லையே) நீ அழிவுக்கிட்ட கூர்மவிக்ரஹம் ஸாந்தோக்யஸித்தமாய் கையும் திருவாழியுமான அதிரமணீய விக்ரஹமென்றறிந்தேன். "య ఏషోఽన్తరాదిత్యే హిరణ్మయః పురుషో దృశ్యతే" "யஏஷோந்தராதித்யோ ஹிரண்மயபுருஷோ த்ர்ஶ்யதே" என்றும், "సవితృమణ్డలమధ్యవర్తీ నారాయణః-ధృతశఙ్ఖచక్రః" "ஸவித்ரமண்டலமத்யவர்ததிநாராயண: - த்ர்தசங்கசக்ர:" என்றும் சொல்லக்கடவதிறே. ... ... (கச)

அ.—பதினஞ்சாம்பாட்டு. வைதிக ஸமதிகம்யமான ஸ்வபாவத்தையுடைய நீ ஆஶ்ரிதாநுக்ரஹார்த்தமாக அவதாரகந்தமான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறது பரதசையென்னும்படி அங்குநின்றும் ஆஶ்ரிதருகந்த ரூபத்தையே உனக்கு ரூபமாகக்கொண்டுவந்தவதரித்த உன்னுடைய நீர்மையை ஒருத்தரால் பரிச்சேதிக்கப்போமோ வென்கிறார். ... ...

அங்கமாறுவேதநான்குமாகிநின்றவற்றுளே
தங்குகின்றதன்மையாய்! தடங்கடற்பணத்தலைச்
செங்கணாகணைக்கிடந்தசெல்வமல்குசீரினாய்!
சங்கவண்ணமன்னமேனிசார்ங்கபாணியல்லையே. கரு

ப-ரை.—அங்கமாறும் - அங்கமான வ்யாகரணம்முதலிய ஆறும், வேதநான்கும் - அங்கியான வேதங்கள் நாலுமாகிற விவற்றுக்கு, ஆகினாறு - ப்ரவர்த்தகனாய்நின்று, அவற்றுளே - அங்கங்களோடுகூடிய வேதங்களினுள்ளே, தங்குகின்ற - பரமேயமாயவர்த்திக்கிற, தன்மையாய் - ஸ்வபாவங்களையுடையவனே, தடம் - இடமுடைத்தான, கடல் - கடலிலே, உன்னுடைய ஸ்பர்சத்தாலே விகஸிதமான, பணத்தலை - பணத்தினதலையிலே, செம் - சிவந்த, கண்-திருக்கண்களையுடையனான, நாகணை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே, கிடந்த - கண்வளர்ந்தருளி, மல்கு - நிரவதிகமான, செல்வம் - ஐசுவர்யத்தையும், சீரினாய் - கல்யாணகுணங்களையு முடையவனே!; க்ஷீரார்ணவசாயிதவம் பரதசையென்னும்படி அங்குநின்றும் க்ரதயுகத்திலே சேதநர்விரும்புகைக்காக, சங்கவண்ணமன்ன - சங்கத்தினநிறத்தையொத்த, மேனி - திருமேனியையுடையையாய்த் திருவவதரித்து, அதுக்குமேலே த்ரேதாயுகத்தில்,

---

பதினாலாம்பாட்டு.—"நாமதேயம்" என்றால் குணசேஷ்டிதங்களைக் காட்டுமோவென்ன; அருளிச்செய்கிறார் (நின்நாமதேயமித்யாதி.) அதிரமணீயம்-கீதத்துக்கு போக்யமான விக்ரஹமென்றபடி.

ராவணாதிகண்டகரை நிரஸிக்கைக்காக, சார்ங்கபாணியல்லையே - க்ஷத்ரிய குலத்திலே சக்ரவர்த்தித்திருமகனாய் வந்தவதரித்து ஸ்ரீசாரங்கத்தைத் திருக் கையிலேதரித்தவனல்லையோ, இப்படிப்பட்ட நீர்மையையுடைய வுன்னை பரிச் சேதித் தறியவல்லாரா ரெனகிறார். ... ... (கரு)

வ்யா.—(அங்கமாறுவேதநான்குமாகிநின்று) ஶிக்ஷாத்யங்கங்க ளாறும், அங்கியான வேதங்கள் நாலுமாகிற இவற்றுக்கு ப்ரவர்த்த கனாய்நின்று. (அவற்றுளே தங்குகின்றதன்மையாய்) ஸாங்கமான வேதங்களினுள்ளே ப்ரமேயமாய்வர்த்திக்கிற ஸ்வபாவங்களையுடை யவனே. (ஆகிநின்றவற்றுளே) நிர்த்தோஷப்ரமாணமாய் நின்றவ ற்றுளென்னவுமாம். வேதப்ரதிபாத்யமான ஸ்வபாவங்களாவன- "ஸத்யம்ஜ்ஞாநம்" "ஸத்யம்ஜ்ஞாநம்" இத்யாதிகளிற்சொன்ன ஸர்வாதி கத்வமென்ன, "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" இத் யாதிகளிற்சொன்ன கல்யாணகுணங்களென்ன, "வ்யாப்ய நாராயணஸ்தி தः" "வ்யாப்யநாராயணஸ்தித:" இத்யாதிகளிற்சொன்ன உபயவி பூதிநாதத்வமென்ன, "மஹாரஜதம்வாஸ:" "மஹாரஜதம்வாஸ:" இத் யாதிகளிற்சொன்னவிக்ரஹயோகமென்ன, "ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:" "யஏஷோந்தராத்மா ஹிரண்மயஃபுருஷ:" இத்யாதி களிற்சொன்ன அவதாரங்களென்ன, "தத்விஷ்ணோ: பரமம்பதம்" "தத் விஷ்ணோஃபரமம்பதம்" இத்யாதிகளிற்சொன்ன நித்யவிபூதியோக மென்ன இவை.

(தடங்கடலித்யாதி) வேதைகஸமதிகம்யமாய் ஸ்வபாவங்களைக் கேட்டே போகாதபடி திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி இக்கு ணங்களை ப்ரகாஶிப்பித்தவனே. இடமுடைத்தான கடலிலே, உன் னுடைய ஸ்பர்ஶத்தாலே விகஸிதமான பணத்தின்தலையிலே, மது பாநமத்தரைப்போலே சிவந்த திருக்கண்களையுடையனான திருவநந் தாழ்வானாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளி, நிரவதிகமான ஐஶ் வர்யத்தையும் கல்யாணகுணங்களையுமுடையவனே. (சங்கவண்ண மன்னமேனியித்யாதி) க்ஷீரார்ணவஶாயித்வம் பரதசையென்னும் படி அங்குநின்றும் க்ர்தயுகத்திலே சேதநர்விரும்புகைக்காக ஶங்கம் போலேயிருக்கிற திருமேனியையுடையையா யவதரித்து, அதுக்கு மேலேத்ரேதாயுகத்திலே, ஆஶ்ரிதவிரோதிகளான ராவணாதிகண்ட கரை நிரஸிக்கைக்குக்ஷத்ரியகுலத்திலே வந்தவதரித்து ஸ்ரீஶார்ங் கத்தைத் திருக்கையிலே தரித்தவனல்லையோ. இப்படி காளமேக நிபஶ்யாமமானதிருநிறத்தையழிய மாறியும், "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" "ஆத்மாநம்மாநுஷம்மந்யே" என்று பரத்வத்தையழிய மாறியும் ரக்ஷித்தவுன்னுடையநீர்மையை பரிச்சேதித்தறிய லாவாரரென்று வாக்யஶேஷம். ... ... (கரு)

பதினஞ்சாம்பாட்டு.—ஶிக்ஷை - வ்யாகரணம், நிருக்தம், சந் தஸ்ஸு, ஜ்யோதிஷம், கல்பஸூத்ரமாகிற அங்கங்களாறும். கரு

அ.—பதினாறும்பாட்டு. திருப்பாற்கடலிலே நின்றும் இப்படி தேவமநுஷ்யாதிகளிலே அவதரித்து ரக்ஷிக்குமளவன்றிக்கே, ஸ்தாவரபர்யந்தமாக சதுர்வித ஸ்ருஷ்டியிலும் அவதரித்து உன்னை ஸர்வாநுபவ யோக்யமாக்கினாலும் ப்ரமாணகணங்கள் பரிச்சேதிக்கமாட்டாதபடியிறே உன்னுடைய அவதாரவைலக்ஷண்ய மிருப்பதென்கிறார்.

தலைக்கணத்துட்குழம்புசாதிசோதிதோற்றமாய
நிலைக்கணங்கள்காணவந்துநிற்றியேலும்நீடிரும
கலைக்கணங்கள்சொற்பொருட்கருத்தினாலினைக்கொணா
மலைக்கணங்கள்போலுணர்த்துமாட்சிநின்றன்மாட்சியே()

ப-ரை.—சாதி-அப்ராக்ருத திவ்யஸமஸ்தாநனான நீ, தலைக்கணம்-புண்ய யோநியான தேவஜாதியிலும், துகள்சாதி - பாபயோநியான ஸ்தாவரஜாதியிலும், குழம்புசாதி - புண்யபாப மிச்ரமான மநுஷ்யஜாதியிலும் திர்யக்ஜாதியிலும், தோற்றமாய - வந்து திருவவதரித்து, நிலைக்கணங்கள்காணவந்து நிற்றியேலும் - ஸ்தாவரங்கள் உன்னையநுபவிக்கும்படி வந்துநின்றாலும், நீடு - நித்யமாய், இரும்-பரப்புடைத்தான, கலைக்கணங்கள் - நான்குவேதங்களும், சொல் அபிதாநவ்ருத்தியாலும், பொருள்-தாத்பர்யவ்ருத்தியாலும், கருத்தினால்-நெஞ்சாலும், நினைக்கொணா - பரிச்சேதித்தறியமாட்டாமையாலே, மலைக்கணங்கள் போல்-பர்வதஸமூஹங்கள்போலே அபேத்யமாய் அபரிச்சிந்நமான உன்னுடைய அவதாரகுணசரித்ரங்களாலே, உணர்த்தும் - அறிவிக்கப்படும், மாட்சி-வைலக்ஷண்யம், நின்றன்மாட்சி - உன் வைலக்ஷண்யம் என்று ஈடுபடுகிறார். (கசு)

வ்யா.—(தலைக்கணத் துகட்குழம்புசாதி) தேவகணமென்ன, க்ஷுத்ரகணமென்ன, நடுவுண்டான மநுஷ்ய திர்யக்குக்களென்ன, சதுர்விதஶரீரங்களிலே. (குழம்புசாதி) தேவகணம் புண்யயோநியாய், ஸ்தாவரங்கள் பாபயோநியாய், மநுஷ்யதிர்யக்குக்களிரண்டும் புண்யபாப மிஶ்ரயோநிகளாகையாலே "குழம்புசாதி" என்கிறது. திர்யக்குக்களுக்கு மிஶ்ரயோநித்வம் ஆஹாரநித்ராதிகளாலே மநுஷ்யஸாம்ய முண்டாகையாலே. க்ஷுத்ரகணமென்று - ஸ்தாவரத்துக்கு உபலக்ஷணம். (துகள்) குற்றமும், புழுதியும். (சோதிதோற்றமாய்) "పరఞ్జ్యోతిరుపసమ్పద్య" "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய" என்கிற அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தை சதுர்விதஜாதிகளிலும் ஸஜாதீயமாக்கியவதரித்து. ஸ்தாவரஜாதியிலும குப்ஜாம்ரமாய் அவதரித்தானிறே. (நிலைக்கணங்கள் காணவந்து நிற்றியேலும்) தேவாதிகளேயன்றியே ஸ்தாவரங்களும் உன்னை அநுபவிக்கும்படி வந்துநின்றாலும். அதாவது - உன்னை ஸ்பர்ஶித்தவாயு அவற்றை ஸ்பர்ஶிக்க ஸ்தாவரத்வ ஹேதுவான பாபம்போமென்கை.

பதினாறும்பாட்டு.—"వాచికైఃపక్షిమృగతామ్" "வாசிகைஃபக்ஷிம்ருகதாம்" என்று - திர்யக்குக்கள் பாபயோநியாயிருக்க, புண்யம்கலசினபடி எப்படியென்ன அருளிச்செய்கிறார் (திர்யக்குக்களித்யாதி.)

(நீடிருங்கலையித்யாதி) நீ இப்படி தாழநின்றாலும் ப்ரமாணங்கள் உன்னுடைய அவதாரவைபவத்தை நெஞ்சாலும்பரிச்சேதிக்க மாட்டாது. (நீடிரும்கலைக்கணங்கள்) ஸ்வரூபேணவும் ப்ரவாஹரூபேணவும் நித்யமாய்ப் பரப்புடைத்தாயிருந்துள்ள சதுர்த்தஶவித்யாஸ்தாநங்களும். "கலை" என்று - வேதமும், அங்கமும். "షడఙ్గాని చత్వారో వేదాః" "அங்காநிசதுரோவேதா:" இத்யாதியாலேசதுர்த்தஶவித்யாஸ்தலங்கள் சொல்லப்பட்டதிறே. (சொல்பொருள் கருத்தினால் நினைக்கொணா) அபிதாநவ்ர்த்தியாலும் தாத்பர்யவ்ர்த்தியாலும் ஓரோ அவதாரத்தைநெஞ்சாலும் பரிச்சேதிக்கமாட்டாமையாலே. (மலைக்கணங்களித்யாதி) பர்வதஸமூஹங்கள்போலே அபேத்யமாய் அபரிச்சிந்நமான உன்னுடைய அவதாரகுண சரித்ரங்களென்றவற்றாலே அறிவிக்கப்படும் வைலக்ஷண்யம் உன்வைலக்ஷண்யம். மாட்சி - அழகு. ... ... (௧௬)

அ.—பதினேழாம்பாட்டு. பரமபதநிலயனாயிருந்து நித்யவிபூதியை நிர்வஹித்தும், வ்யூஹம்முதலாக ஸ்தாவரபர்யந்தமாக அவதரித்து லீலாவிபூதியை நிர்வஹித்தும்போருகிறவிவையோரோன்றே ப்ரமாணங்களால் பரிச்சேதிக்கவொண்ணாதிருக்க, அதுக்குமேலே அர்ச்சாவதாரஸௌலபனாய் ஆஶ்ரிதருடைய இச்சாதீநனாய் தன்னைநியமித்த இஸ்ஸ்வபாவம் என்னாயிருக்கிறதோ! வென்று அதிலேவித்தராகிறார்.

ஏகமூர்த்திமூன்றுமூர்த்திநாலுமூர்த்திநன்மைசேர்
போகமூர்த்திபுண்ணியத்தின்மூர்த்தியெண்ணில்மூர்த்தியாய்
நாகமூர்த்திசயநமாய்நலங்கடற்கிடந்துமேல்
ஆகமூர்த்தியாயவண்ணமென்கொலாதிதேவனே. (௧௭)

ப-ரை.—ஏகமூர்த்தி - பரமபதத்திலே நித்யஸித்தரும் முக்தருமநுபவிக்கும் அத்விதீயமான மூர்த்தியாய், மூன்றுமூர்த்தி - ஸங்கர்ஷணாதிரூபத்தாலே மூன்றுமூர்த்தியாய், நாலுமூர்த்தி - வ்யூஹத்தோடுகூடின நாலுமூர்த்தியாய், நன்மைசேர்-பேரருளாகிற நன்மையையுடைய, போகமூர்த்தி - ஸம்ஸாரிகளுக்கு போகயோக்யமான மூர்த்தியாய், புண்ணியத்தின்மூர்த்தி - அநுதான் பாக்யாதிகருடைய புண்யவிபாகத்திலே பலிக்கும் மூர்த்தியாய், எண்ணிலமூர்த்தியாய்-விபவஜாதீய விக்ரஹத்தையுடையனாய், இப்படி அஸங்க்யாதமான அவதாரங்களைப்பண்ணினவிடத்திலும் ஸம்ஸாரிகள் தன்னைவந்து கிட்டாமலிருக்கச்செய்தேயும், ஆதிதேவனே-ஜகத்துக்கெல்லாம் காரணபூதனான நீ, ரக்ஷணத்தில் ஆசையாலே, நலம் - ஆச்ரிதரக்ஷணார்த்தமாகப்ரளயம்மட்டும்வஸிக்கையாகிற, நன்மையையுடைய, கடல் - திருப்பாற்கடலிலே, நாகமூர்த்தி - திருவநந்தாழ்வான் திருமேனியாகிற, சயநமாய்க்கிடந்த - படுக்கையிலே, கண்வளர்ந்தருளி, மேல் - அதுக்குமேலே, "தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம்தானே"

வ்ர்த்தியென்று - எல்லாஸம்பந்தங்களையும் சொல்லும். அபிதாநவ்ர்த்தியென்று - வாச்யவாசகஸம்பந்தம். ஶப்தார்த்தங்களுக்குண்டான தாத்பர்யவ்ர்த்தியாவது - லக்ஷணாரூபஸம்பந்தம்.

என்கிறபடியே, ஆக - ஆச்ரிதர் தேவரீர்க்கு விக்ரஹமாகநினைத்த த்ரவ்யத்திலே, மூர்த்தியாயவண்ணம் - உனக்கு அஸாதாரணமான விக்ரஹத்திலே பண்ணும் விருப்பத்தைப்பண்ணுகிற இந்த ஸ்வபாவம், என் - என்னாயிருக்கிறதென்று ஈடுபடுகிறார். (கஎ)

வ்யா.—(ஏகமூர்த்தி) "వాసుదేవోసిపూర్ణః" "வாஸுதேவோஸி பூர்ணஃ" என்கிறபடியே ஜ்ஞாநாதிஷட்குணபூர்ணனாய், நிஸ்தரங்க ஜலதிபோலே பரமபதநிலயத்திலே எழுந்தருளியிருந்து நித்யஸித்தரும் முக்தரும் அநுபவிக்கவிருக்கிற அத்விதீயமான மூர்த்தியை யுடையையாய். (மூன்றுமூர்த்தி) அந்த ஷட்குணங்களிலே இவ்விரண்டுகுணங்களை ப்ரகாசிப்பித்துக்கொண்டு ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகைக்காகஸங்கர்ஷணாதிரூபத்தாலேமூன்றுமூர்த்தியாய். (நாலுமூர்த்தி) பராவஸ்தையும்வ்யூஹங்களோடேஎண்ணலாம்படிபரார்த்தமாயிருக்கையாலே அத்தையுங்கூட்டி "நாலுமூர்த்தி" என்கிறது. அதவா, வ்யூஹகார்யமான ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு உபயோகமாயிருக்கிற ப்ரதாநபுருஷ அவ்யக்தகாலங்களை சரீரமாக வுடையனாயிருக்கிறபடியைச் சொல்லுகிறதென்னவுமாம். (நன்மைசேர்போகமூர்த்தி)அநுக்ரஹப்ராசுர்யமான நன்மையையுடைத்தாய் ஸம்ஸாரிகளுக்குபோகயோக்யமானமூர்த்தி. அநுக்ரஹப்ராசுர்யமாவது- ஸ்வாஸாதாரணமாய் அப்ராக்ருதமானவிக்ரஹத்தை, தேவாதி ஸஜாதீயமாக்கிக்கொண்டு ஸம்ஸாரிகளுக்கு சக்ஷுர்விஷயமாம்படி பண்ணுகை. அதவா, ஆமுஷ்மிகத்தில் நித்யாநுபவத்தோடே சேர்ந்த நன்மையை யுடைத்தாய் ஐஹிகத்தில் போகயோக்யமாயிருக்கும் மூர்த்தியென்னவுமாம்.

(புண்யத்தின் மூர்த்தி) அதுதான் பாக்யாதிகருடைய புண்ய விபாகத்திலே பலிப்பதாயிருக்கை. "పరిత్రాణాయసాధూనామ్" "பரித்ராணாய ஸாதூநாம்" என்று-பரமபக்தியுக்தர்க்கு ஸ்வயம்ப்ரயோஜநமாய், ஸித்தஸாதந பரிக்ரஹ யுக்தர்க்கு சரண்யமாயும், உபாஸகர்க்கு சுபாச்ரயமாயுமிறேயிருப்பது "మానుషీంతనుమాశ్రితంపరమ్భావమజానన్తః" "மாநுஷீம்தநுமாச்ரிதம்பரம்பாவமஜாநந்தஃ" என்று பாக்யஹீநராய் அவதாரத்துக்கு இழவாளராகச் சொல்லாநின்றதிறே. (எண்ணில் மூர்த்தியாய) இப்படி அஸங்க்யாதமான விபவ ஸஜாதீயமான விக்ரஹத்தை யுடையையாய். "బహుధావిజాయతే" "பஹுதாவிஜாயதே" என்றுச்ருதி; "బహూని" "பஹூநி" என்று ஸ்வவாக்யம்; "சன்மம்பலபல" என்று அபியுக்தர்வாக்யம்.

பதினேழாம்பாட்டு.—சேருந்தன்மை சேர்க்குமென்றாய், இவனை அநுபவத்தோடே சேர்க்கும் ஸ்வபாவத்தையுடைத்தாய், அவதாரம் உபாயமும் உபேயமுமா யிருக்குமென்றபடி. ஆகமூர்த்தி-மூர்த்தியாக. ... ... கஎ

(நாகமூர்த்தியித்யாதி) இப்படி அஸங்க்யாதமான அவதாரங்களைப்பண்ணினவிடத்திலும் தன்திருவுள்ளத்துக்கேற ஸம்ஸாரிகள் தன்னைவந்து கிட்டாமையாலே உபேக்ஷித்து பரமபதத்திலேபோக ப்ராப்தமாயிருக்க, ரக்ஷணத்தில் ஆசையாலே திருப்பாற்கடலிலே சேர்ந்த நீர்மையைச்சொல்லுகிறது. நலங்கடலிலே நாகமூர்த்திஶயநமாய்க்கிடந்து. அவதாரஸ்தலங்கள்போலே சிரகாலாவதியின்றிக்கே ப்ரளயாவதியாக விரும்பிக் கண்வளர்ந்தருளுகையாலே "நலங்கடல்" என்கிறது. திருவநந்தாழ்வான் திருமேனியாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளி. (மேலாகமூர்த்தியாயவண்ணமென்கொல்) அதுக்குமேலே ஆஶ்ரிதர் தேவரீர்க்கு விக்ரஹமாகநினைத்த த்ரவ்யத்திலே ஸ்வாஸாதாரண விக்ரஹத்தில்பண்ணும் விருப்பத்தைப்பண்ணுகிற இஸ்ஸ்வபாவமென்னாயிருக்கிறது. "స్మృతం సఙ్కల్పనామయమ్" "ஸ்ம்ர்தம் ஸங்கல்பநாமயம்" என்றும், "యేయథా మాం ప్రపద్యన్తే" "யேயதாமாம் ப்ரபத்யந்தே" என்றும் சொல்லுகிறபடியே - ஆஶ்ரிதர் உனக்கு விக்ரஹமாகநினைத்த த்ரவ்யத்தையிறே ஸ்வாஸாதாரணவிக்ரஹத்தோபாதிவிரும்புவது. (ஆதிதேவனே) ஜகத்துக்கெல்லாம் காரணபூதனான நீ கார்யபூதனாயிருப்பானொருசேதநனுடைய இச்சாதீநமாக உன்னைப்பண்ணுவதே! யென்று கருத்து. இவ்விருப்பத்துக்கு அடியுடையவனாகையாலேயென்று ஹேதுவுமாம். (௧௭)

அ.—பதினெட்டாம்பாட்டு. "நாகமூர்த்திசயநம்" என்றும் "தடங்கடல்பணத்தலைசெங்கணாகணைக்கிடந்த" என்றும் அவதாரகந்தமான க்ஷீராப்திஶயநம் ப்ரஸ்துதமானவாறே திருவுள்ளமங்கே தாழ்ந்து, "ఆర్తిర్మానుషేలోకే" "அர்த்திர்மாநுஷேலோகே" என்கிறபடியே அவதாரங்களிலுண்டான அர்த்தித்வமன்றிக்கேயிருக்க விஸத்ர்ஶதேஶத்திலே வந்து கண்வளர்ந்தருளுகிற தேவரீருடைய வாசியை ஆரறிந்து ஆஶ்ரயித்துககாரியங் கொள்ளவென்கிறார்.

விடத்தவாயொராயிரமிராயிரங்கண்வெந்தழல்
விடுத்துவீள்விலாதபோகமிக்கசோதிதொக்கசீர்
தொடுத்துமேல்விதானமாயபௌவநீரராவணைப்
படுத்தபாயில்பள்ளிகொள்வதென்கொல்வேலைவண்ணனே.

ப-ரை.—வேலைவண்ணனே - கடலோடொதத திருநிறத்தை யுடையவனே!; விடத்த - விஷத்தை உமிழாநின்றுள்ள, ஓராயிரம்வாய் - ஆயிரம்வாயையுடையனாய், இராயிரங்கண் - இரண்டாயிரங்கண்ணும், வெம் - வெவ்விய, தழல்விடுத்த - அழலைப்புறப்படவிட்டு, வீள்விலாத - ஒருக்காலும் பிரிவில்லாமல், போகம் - உன்னை அநுபவிக்கையால்வந்த, மிக்கசோதி - நிரவதிகதேஜஸ்ஸையுடையனாய், மேல் - மேலே, விதானமாய - விதாநமானபணங்கள் பலவற்றிலேயுண்டான, தொக்கசீர்தொடுத்து-மிக்கவழகைத்தொடுத்து, பௌவநீர் - கடல்நீரிலே, அராவணை - திருவநந்தாழ்வானாகிற, படுத்தபாயில் - பரப்பப்பட்ட படுக்கையிலே, பள்ளிகொள்வது - கண்வளர்ந்தருளுகிறவிது, என்கொல் - என்னநீர்மையென்று ஈடுபடுகிறார். (௧௮)

வ்யா.—(விடத்தவாயொராயிரம்) விஷத்தை உமிழாநின்றிருந்துள்ள ஆயிரம் வாயையுடையனாய். (இராயிரங்கண்வெந்தழல்விடுத்து) இரண்டாயிரங்கண்ணாலும் வெவ்விய அழலைப்புறப்படவிட்டு. பகவதநுபவமே யாத்ரையாயிருக்கிற திருவநந்தாழ்வானுக்கு ரோஷகார்யமான இந்தக்ரௌர்ய முண்டாவா னென்னென்னில்; துஷ்ப்ரக்ருதிகள் சஞ்சரிக்கிற தேசத்திலே கண்வளர்ந்தருளுகிற விவனுக்கு ஆராலே யென்னவருகிறதோவென்னுமதிசங்கையாலே வந்தது. அநுபவம் ராககார்யமான வோபாதி ப்ரதிகூலஸ்தலத்திலே த்வேஷமும் ராககார்யமிறே. இத்தால் - துஷ்ப்ரக்ருதிகளுக்குக் கணிசிக்கவொண்ணாதபடி திருவநந்தாழ்வானாலே ஸுரக்ஷிதனாய்க் கண்வளர்ந்தருளப் பெற்றோமென்று தர்ப்பதராகிறார். (வீள்விலாதபோகம்) ஈஶ்வரன் அணைத்தால் ஒருவகையாலும் பிரியவொண்ணாத திருவுடம்பையுடையனாய, "போகீ" "அநந்தபோகினி" என்று திருவநந்தாழ்வானுடைய திருமேனியை "போகம்" என்னக்கடவதிறே. இத்தால்-ஆத்மகுணங்களாலே ரக்ஷகனாளுப்போலே ரூபகுணங்களாலே போக்யபூதனானபடியைச சொல்லுகிறது. (மிக்கசோதி) இப்படி கிஞ்சித்காரபூதனாய்க்கொண்டு உ யனை அநுபவிக்கையாலே வந்த நிரவதிக தேஜஸ்ஸையுடையனாய்.

(தொககசீர்தொடுத்து மேல்விதாநமாய) விதாநமானபணங்கள் பலவற்றிலே யுண்டான மிக்கவழகைத்தொடுத்து. தொக்கு - திரட்சி. சீர் - அழகு. இத்தால் - ஸ்பர்ஶததால்வந்த அநுபவமேயன்றிக்கே, தர்ஶநீயமாய் நாநாவர்ணமான பணங்களினழகைச் சேர்த்தநுபவித்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிறபடியைச் சொல்லுகிறது. (பௌவநீராராவணைப்படுத்தபாயில்) கடல்நீரிலே அது உறுத்தாமைக்குப்படுத்த திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே. (பள்ளிகொள்வதென்கொல்) கண்வளர்ந்தருளுகிறவிது வென்னோ. தங்களாபத்துக்கு உதவுகைக்குப்ரஹ்மாதிகள் அர்த்திக்கத்தான் செய்தருளிற்றோ. (வேலைவண்ணனோ) வெள்ளைக்கடலிலே ஒரு நீலக்கடல் சாய்ந்தாப்போலே தேவரீருடைய பரபாகரஸத்தைச் சிலர் அறிந்து அநுபவிக்கைக்காகச் செய்தருளிற்றோ. இப்பாட்டில்- திருவநந்தாழ்வானோட்டை யநுபவத்தைச்சொல்லிற்று. அடிமைசெய்வாரில்லாமையன்று, ஸம்ஸாரிகளிழவைப்பார்த்து, பரார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிறதென்றுதோன்றுகைக்காக. ... ... (கஅ)

அ.—பத்தொன்பதாம்பாட்டு. அர்த்தித்வ நிரபேக்ஷமாகக் கண்வளர்ந்தருளுகிறவிது என்னநீர்மையென்றார் கீழ்; இங்கு - பண்ணின ஜகத்ரக்ஷணங்களைக்கண்டு, "ந ஹி பாலந ஸாமர்த்யம் ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம்" "நஹிபாலநஸாமர்த்யம்ர்தேஸர்வேஶ்வரம்ஹரிம்" என்கிறபடியே பாலநதர்மத்துக்கு வேறுஶக்தரில்லாமையாலும், ஜகத்து தேவரீர்க்கு அநந்யார்ஹஶேஷமாகையாலே ரக்ஷிக்குமிடத்தில் அர்த்தித்வம்

மிகையாகையாலும், வந்து கண்வளர்ந்தருளுகிற இத்தனையென்று அந்தரக்ஷணங்களைப்பேசி, ஸாமாந்யத்ர்ஷ்டியால் ஸஹஜஶத்ருக்களாய்த் தோற்றுகிற பெரியதிருவடியும் திருவநந்தாழ்வானும் ஏகதண்டராய் தேவர்க்குப் பரியும்படியாகக் கண்வளர்ந்தருளுகிற விது என்ன ஆஶ்சர்யமென்கிறார்.

புள்ளதாகிவேதநான்குமோதினையதன்றியும்
புள்ளின்வாய்பிளந்துபுட்கொடிப்பிடித்தபின்னரும்
புள்ளையூர்தியாதலாலதென்கொல்மின்கொணேமியாய்
புள்ளின்மெய்ப்பகைக்கடல்கிடத்தல்காதலித்ததே. (௧௬)

ப-ரை.—புள்ளதாகி - ஹம்ஸரூபியாய்க்கொண்டு, வேதநான்கும் - நாலு வேதங்களையும், ஓதினாய் - சதுர்முகனான ப்ரஹ்மாவுக்கு உபதேசித்தாய்; அதன்றியும் - அதுக்குமேலே, புள்ளின்வாய்பிளந்து - பகாஸுரனவாயைக் கிழித்து, தன்பக்கலிலே ஆர்த்தர்வந்து காரியங்கொள்ளும்படி, புள்-பெரியதிருவடியை, கொடிப்பிடித்தபின்னரும -த்வஜமாகப்பிடித்தபின்பும், புள்ளையூர்தி-அவனைவாஹநமாகக்கொண்டுநடத்தாநிற்றி; மின்கொள்-மின்னுகின்ற, நேமியாயாதலால் - திருவாழியை யுடையவனாயிருக்கையாலே, கடல் - திருப்பாற்கடலிலே, புள்ளின் - பெரியதிருவடிக்கு, மெய்ப்பகை - ஸஹஜசத்ருவான திருவநந்தாழ்வான்மேலே, கிடத்தல -பள்ளிகொண்டருளுகைக்கு, காதலித்தது-ஆசைப்பட்ட விது, என்கொல் - என்னோவென்கிறார். (௧௬)

வ்யா.—(புள்ளதாகிவேதநான்குமோதினாய்)வேதத்தினுடைய அபௌருஷேயஸித்திக்காக ஸ்வாஸாதாரண விக்ரஹத்தை திர்யக்ஸஜாதீயமாக்கிக் கொண்டு ஹம்ஸாவதாரத்தைப் பண்ணி தத்வஹிதங்களுக்கு ஜ்ஞாபகமான நாலுவேதங்களையும் ஜகத்தில் அஜ்ஞாநாந்தகாரமெல்லாம் நீங்கும்படி யருளிச்செய்தாய். "ஜ்ஞானம்ப்ரதீபம் இவ காருணிகோ ததாதி" "மாநம்ப்ரதீபமிவகாருணிகோததாதி" என்னக்கடவதிறே. (அதன்றியும்) ஸஹஜஶத்ருவான அஜ்ஞாநத்தைப் போக்கினதுக்குமேலே. (புள்ளின்வாய்பிளந்து) பகாஸுரன்வாயைக்கிழித்து. இத்தால் - ப்ரமாணஜ்ஞாநத்தாலே அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கினாப்போலே, பகாஸுரனை நிரஸித்து ப்ரமேயபூதனான தன்னைத்தந்து, ஆஶ்ரிதர்க்கு ப்ராணப்ரதிஷ்டை பண்ணினபடியைச் சொல்லிற்று. (புட்கொடிப்பிடித்த பின்னரும்புள்ளையூர்தி) தன்பக்கலிலே ஆர்த்தரடங்கவந்து காரியங்கொள்ளும்படி பெரியதிருவடியை ரக்ஷணதர்மத்துக்கு த்வஜமாகப்பிடித்து அவ்வளவுமன்றிக்கே, ஆஶ்ரிதரிருந்த விடங்களிலேவந்து உதவுகைக்கு அவனை வாஹநமாகக்கொண்டு நடத்தாநிற்றி.

(மின்கொள்நேமியாய்) திருநிறத்துக்குப் பகைத்தொடையாய் மின்னுகின்ற திருவாழியை யுடையவனே. இத்தால் - ரக்ஷகத்வமே நிரூபகமென்று தோற்றும்படி * கைகழலா நேமியானாயிருக்கிறபடியைச் சொல்லிற்று. (ஆதலால்) நிருபாதிகரக்ஷகனாகையாலே. "புள்ளதாகி வேதநான்குமோதினாய்" என்று கீழோடே அந்வயம்.

"அதென்கொல்" என்கிறவிது பாட்டின்முடிவிலே அந்வயம். (புள்ளின்மெய்ப்பகைக் கடல்கிடத்தல்காதலித்தது - என்கொல்) ஸாமாந்யத்ர்ஷ்டியால்பார்த்தால் திருவடிக்கு ஸஹஜஶத்ரு வென்னலாயிருக்கிற திருவநந்தாழ்வான்மேலே திருப்பாற்கடலிலே இருவருங்கூட விரும்பி அடிமைசெய்யும்படி கண்வளர்ந்தருளுகிறவிது என்கொலோ. ஸஹஜஶத்ரு வென்று புத்திபண்ணியிருக்கும் ஸம்ஸாரத்திலே இருவரையும் ஏககண்டராக்கி அடிமைகொண்டவிது, தேவரீருடைய ஸர்வஶக்தித்வத்தை ப்ரகாஶிப்பிக்கைக் காகவோ வென்று கருத்து. அநாதியாய் அஹங்காரத்தை விரும்பிப்போந்த சேதநனை, ஶேஷைகரஸரான நித்யஸூரிகளோடே ஒருகோவை யாக்குவது இச்சக்தியிறே. க௯

அ.—இருபதாம்பாட்டு. ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகளேத்தத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற இம்மேன்மை தானே நீர்மைக்கெல்லை நிலமாயிராநின்றது, அம்ர்தமதநவேளையில் மந்தரதாரணார்த்தமாக ஆமையான நீர்மைதானேமேன்மைக்கு எல்லைநிலமாயிராநின்றது, இவைகளைப்பிரித்து என்னெஞ்சிலேபட வருளிச்செய்ய வேணுமென்கிறார்.

கூசமொன்றுமின்றிமாசுணம்படுத்து, வேலைநீர்
பேசநின்றதேவர்வந்துபாடமுன்கிடந்ததும்,
பாசநின்றநீரில்வாழுமாமையானகேசவா!
ஏசவன்றுநீகிடந்தவாறுகூறு; தேறவே. (உ0)

ப-ரை.—கூச மொன்றுமின்றி - கொஞ்சமாயினும் கூசுதலின்றிக்கே, வேலைநீர் - கடல்நீரிலே, மாசுணம - திருவநந்தாழ்வானை, படுத்து - திருப்பள்ளியாகப்படுத்து, பேச - ப்ரஹ்மாதிகள ஸ்துதிக்கவும், நின்ற - ஊர்த்வலோகங்களில் வர்த்திக்கிற, தேவர்வந்து - தேவர்கள்வந்து, பாட-ஸ்துதிக்கவும், முன்கிடந்ததும் - ஸ்ர்ஷ்டி காலந்தொடங்கிக் கண்வளாநதருளினதும், ஸமுத்ரமதநவேளையிலே, பாசம்நின்ற - வருணபாசங்களை யுடைததான, நீரில் - கடலிலே, ஆமையான - கூர்மரூபியாய, வாழும் - மந்தரத்தைச்சுமந்து நிற்கிறவனாய், கேசவா - ப்ரஹ்மருத்ரர்களுக்கு உத்பாதகனானவனே, அன்று - தேவதைகள் ஸாபேக்ஷராய் நின்றவன்று, உன்படியறியாதார், ஏச - "ஆமையானான்" என்று உன்னுடையாரை ஏசும்படியாக, நீ - ஸர்வாதிகனான நீ; கிடந்தவாறு-மந்தரம்முதுகிலே சுழலக் கண்வளர்ந்தருளினபடியை, தேற - தெரியும்படி, கூறு - அருளிச்செய்ய வேணுமென்கிறார். (2,0)

வ்யா.—(கூசமொன்றுமின்றி) மாயாகுஶலரான அஸுரராக்ஷஸர் ஸஞ்சரிக்கிறதேஶம். ஆராலே யென்வருகிறதோ வென்று ஒரு கூச்சமின்றியே யென்னுதல்; பிராட்டிமாருக்கும் அடுத்துப் பார்க்கப்பொறாத ஸுகுமாரமானவடிவு, துஷ்ப்ரக்ர்திகள்விஷத்ர்ஷ்டிக்கு விஷயமாகிறதோவென்று கூசாதேயென்னுதல். அதவா, "கூசமொன்றுமின்றி-கூறுதேற" என்று அந்வயித்து தன்படிகளைச்சொல்லுகைக்கு அதிகாரிகளில்லையென்று அதிகாரி விரஹத்தால் கூசாதேயென்றுமாம். அதாவது-மேன்மையைச்சொல்லிதுஷ்ப்ராபமென்று அகலுதல்; நீர்மையைச்சொல்லிக் காற்கடைக்கொண் டகலுதலென்கை.

பத்தொன்பதாம்பாட்டு. கடலிலே காதலித்துக் கிடத்தல் என்கொல். (க௯)

(மாசுணம்படுத்து) நீருறுத்தாமே திருவநந்தாழ்வானை விரித்து. (வேலைநீர்பேச) ஸ்வஸந்நிதாநத்தாலே வந்த ப்ரீதியாலே கடல்நீர் கோஷியாநிற்க. (நின்றதேவர்) ஜகத்ரக்ஷண தர்மத்திலே வ்யவஸ்திதராய் நின்ற ப்ரஹ்மாதிகள் பேசநின்றதேவரொன்றுமாம். "பேசநின்றசிவன்" என்னக்கடவதிறே. (வந்துபாட) ஊர்த்வலோகங்களில்நின்றும் வந்து தந்தாமுடைய அபிமதஸித்திக்காக ப்ரீதிப்ரேரிதராயேத்த. (முன்கிடந்ததும்) ஸ்ருஷ்டிகாலமேதொடங்கிக் கண்வளர்ந்தருளுகிற விதுவும். ஸமுத்ரகோஷத்தோடு, ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகளுடைய ஸ்தோத்ரத்தோடு, அநந்யப்ரயோஜநரான ஶ்வேதத்வீபவாஸிகளுடைய ஸ்தோத்ரத்தோடு வாசியற முகங்கொடுத்து நிற்கிற விது என்ன சீலமென்று கருத்து. (பாசநின்றநீரில்வாழு மாமையானகேசவா) ஸமுத்ர மதநவேளையில் வருணபாசங்களை யுடைத்தான கடலிலே முதுகிலே மந்தரம் சுழலுகிற விது ஸ்வப்ரயோஜநமாக நினைத்து கூர்மஸஜாதீயனானவனே. "பாசநின்றநீர்" என்று - பரமபதத்திற்காட்டில் ப்ரேமஸ்தலமான கடலிலேயென்னவுமாம். (கேசவா) ப்ரஹ்மாதிகள் சரணம்புகுர தத்ரக்ஷணார்த்தமாக கூர்மஸஜாதீயனாகையாலே அவ்வளவாலும் ப்ரஹ்மருத்ரர்களுக்கு உத்பாதகனான மேன்மை யழியாதிருக்கிறபடி. (ஏசவன்று நீ கிடந்தவாறு) தேவதைகளடங்க ஸாபேக்ஷராய் நின்றவன்று, ஸர்வாதிகனான நீ, உன்படி யறியாதார் "ஆமையானுன்" என்று உன்னுடையானை யேசும்படி, மந்தரம் முதுகிலே நின்று சுழலக் கண்வளர்ந்தருளின ப்ரகாரம். (கூறுதேறவேறிதே) தெரியும்படியெனக்கருளிச்செய்யவேணும். ஆமையானநீர்மையிலே ஸர்வாதிகத்வமும் ப்ரகாசியாநின்றது, ப்ரஹ்மாதிகளைத்தக கண்வளர்ந்தருளுகிற விடத்திலே நீர்மைப்ரகாஶியாநின்றது, இவற்றைப்பிரித்துத் தெரிய வருளிச்செய்யவேணுமென்று கருத்து. (௨௦)

அ.—இருபத்தோராம்பாட்டு. ஸமுத்ரமதநவேளையில் ஆமையான நீர்மைக்குமேலே ஸகல வ்யாபாரங்களையுமதேவரீரே செய்தருளி, "தேவர்கள் கடல்கடைந்தார்கள்" என்றுதேவர்கள் தலையிலே யேறிட்டுக்கொண்டாடினபடி, ராவணனைத்தேவரீரே அழியச்செய்து முதலிகள்தலையிலே விஜயத்தை யேறிட்டுக்கொண்டாடினாப்போலேயிருந்தது. இவ்வாஶ்ரிதபக்ஷபாதத்தை வேறாகத்தெரியவருளிச்செய்யவேணுமென்கிறார். ஸம்பந்தம் ஸர்வஸாதாரணமா யிருக்க இதொரு பக்ஷபாதமிருந்தபடி யென்னென்று விஸ்மிதராகிறார்.

இருபதாம்பாட்டு. ஆமையாயிருக்கச்செய்தேயும், "கேசவா" என்கையாலே - மேன்மைக்கெல்லை நிலமென்கிறது. மாசுணம்-பெரும்பாம்பு. பேசநின்ற - ப்ரஸம்ஸாபரமாகப் பேசநின்ற. கடல்வருணனுக்கு இருப்பிடமாகையாலே அவனுடைய ஆயுதத்தை யுடைத்தாயிருக்கை. பாசம் - ஆயுதம். ப்ரஹ்மாதிகள் ஸ்தோத்ரம் பண்ணக்கிடக்கிற மேன்மையிலே அசேதநமான ஸமுத்ரகோஷத்தைக் கேட்டுக்கொண்டு கிடக்கையாலே நீர்மை ப்ரகாசிக்கிறது. (௨௦)

அரங்கனேதரங்கநீர்கலங்கவன்றுகுன்றுசூழ்
மரங்கள்தேயமாநிலங்குலுங்கமாசுணஞ்சுலாய்
நெருங்கநீகடைந்தபோதுநின்றசூரரென்செய்தார்
குரங்கையாளுகந்தவெந்தைகூறுதேறவேறிதே. (உக)

ப-ரை.—அன்று - தூர்வாஸசாபத்தாலே தேவதைகள் வெறுவியரான அன்று, தரங்கம - திரைக்கிளர்த்தியை யுடைத்தான, நீர - கடலானது, கலங்க - குளப்படிபோலே கலங்குமபடியாகவும், குன்றுசூழ் - மந்தரபர்வதத்தைச்சூழ்ந்த, மரங்கள் - மரங்களானவை, தேய - வாஸுகியுடல்பட்டுத்தேயவும், ஸமுத்ரகோஷத்தாலே, மாநிலம் - புஷ்கரத்வீபங்களாகிற மஹாப்ருதிவிகள், குலுங்க - அசையவும், மாசுணம் - வாஸுகியை, நெருங்கச்சுலாய் - நெருங்கச்சுற்றி, நீகடைந்தபோது - தேவரீர் கடைந்தருளினபோது, நின்றசூரா - அதிபலபராக்ரமராய் நின்றதேவாகளும அஸுரர்களும், என்செய்தார - செய்ததென்; குரங்கை - சிறியதிருவடியை, ஆள் உகந்த - அடிமைகொண்டு உகந்தருளின, எந்தை - எனஸ்வாமியாய், அரங்கனே - கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறதேவரீர, இது-இதனை, வேறு - விசேஷித்து, தேற - தெரியும்படி, கூறு- அருளிச்செய்யவேணும. (உக)

வ்யா.—(அரங்கனே) என்கிற விது விசேஷ்யமாகையால் க்ரியையோடே அந்வயிக்கக்கடவது. (தரங்கநீர்கலங்க) "అప్రమేయో మహోదధిః" "அப்ரமேயோமஹோததி:" என்கிறபடியே-அத்யகாதமான கடலானையாலே தன்னையநுபவிக்க விழுந்தாரைக் கரையிலேயேறிட வல்ல திரைக்கிளர்த்தியையுடைத்தானகடல் குளப்படிபோலே கலங்க. (அன்று) ஸகலதேவதைகளும் துர்வாஸஶ்ஶாபத்தாலே நஷ்டஶ்ரீகராயத் தங்க ளைச்வாயத்துக்கு தேவரீர் கைபார்த்து நின்ற வன்று. (குன்றுசூழ்மரங்கள்தேய) மந்தரத்தைச்சூழ்ந்த மரங்கள் வாஸுகியுடல பட்டுத்தேய. (மாநிலங் குலுங்க) ஸமுத்ர கோஷத்தினுடைய அதிசயத்தாலே அத்தோடேசேர்ந்த புஷ்கரத்வீபங்களாகிற மஹாப்ருதிவி குலுங்க. (மாசுணம்சுலாய்நெருங்க) (நெருங்க - மாசுணம்சுலாய்) வாஸுகியை நெருகச்சுற்றி. சுலாய் - சுலாவி - சுற்றியென்றபடி. ஸ்வதேஜஸ்ஸாலே உபப்ரும்ஹிதமானபடியாலே கூசாதே மந்தரத்திலே வாஸுகியை நெருங்கச்சுற்றி. "మన్దరాద్రిరధిష్ఠానం మథనేభూత్" "மந்தராத்ரோதிஷ்டாநம் மதநேபூத்" என்று மந்தரததுககு அதிஷ்டாநமும் தானேயென்றும, "తేజసా నాగరాజానం తదాప్యాయితవాన్ ప్రభుః" "தேஜஸா நாகராஜாநம் ததாப்யாயிதவாநப்ரபு:" என்று வாஸுகிக்கு பலகரனும் தானேயென்றும் சொல்லக்கடவதிறே. (நீகடைந்தபோது) "తతో మథితుమారబ్ధ" "ததோமதிதுமாரப்ய" என்று - தேவர்களுக்கு ஆரம்பமாத்ரமேயாய், "ஆயிரந்தோளா லலைகடல்கடைந்தான்" என்கிறபடியே அக்கடலை தேவரீரேகடைந்தபோது.

இருபத்தோராம்பாட்டு. ஸர்வஸாதாரணம் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கு மொத்திருக்க நெருங்கக்கட்டிக்கடைகைக்கு வாஸுகிக்கு சக்தியுண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (ஸ்வதேஜஸ்ஸாலே யித்யாதி.) உபப்ரும்ஹிதம் - பெருக்கப்படுகை.

(நின்றசூரரென்செய்தார்) அதிபலபராக்ரமரான தேவர்களும் அஸுரர்களும் செய்ததென். அம்ர்தமதநஸாமர்த்யத்தை தேவர்கள்பக்கலிலே யேறிட்டு கொண்டாடுகைக்கு அவர்கள்செய்த கார்யமென். கூர்மரூபியாய் மந்தராத்ரிக்கு அதிஷ்டாநமானார்களோ; ‘‘ఉపర్యాక్రాన్తవాన్శైలం బృహద్రూపేణ కేశవః’’ ‘‘உபர்யாக்ராந்தவாச்சைலம் ப்ர்ஹத்ரூபேணகேஶவ:’’ என்று மந்தரம்சலியாதபடி நோக்கினார்களோ; தேஜஸ்ஸாஅலேவாஸுகிச்கு பலகரரானார்களோ; பலபோக்தாக்களாய் நின்ற விஷ்ணுஹேதுவாக அவர்களையே கர்த்தாக்களுமாக்கினவித்தனையன்றோ. ‘‘దేవదానవయత్నేన ప్రసూతామృతమన్థనే’’ ‘‘தேவதாநவயத்நேநப்ரஸூதாம்ர்தமந்தநே’’ என்று-அம்ர்தமதநவ்யாபாரம் அஸுரர்களுக்கு மொத்திருக்க அவர்களைக்லேஶபாகிகளாக்கி தேவர்களை அம்ர்தபாகிகளாக்கின விதுவும் அதுக்குமேலேயொருபக்ஷபாதமிறே. ப்ரயோஜநாந்தர பரரொன்று பாராதே தேவர்கள்பக்கல் பக்ஷபாதத்துக்கடி, ‘‘శరణం త్వామనుప్రాప్తాః’’ ‘‘ஶரணம்த்வாமநுப்ராப்தா:’’ என்று சரணமென்ற வஃதிலேயிறே. (குரங்கையாளுகந்தவெந்தை) கீழ்ச்சொன்ன பக்ஷபாதத்துக்குத்ர்ஷ்டாந்தம் சொல்லுகிறது. ராவணனை தேவரீரே யழியச்செய்து, ப்ரதிபக்ஷத்தை வென்று தந்தார்களாக ஸ்ரீவாநரவீரர்களை ஆதரித்தாப் போலே, ‘‘எந்தை’’ என்று - நித்யஸூரிகளை அடிமைகொள்ளு மேற்றத்தை யுடையனுய்வைத்து, ‘‘திர்யக்குக்கள்’’ என்று இகழாதே அடிமைகொண்ட வித்தைத் தன்பேறுகநினைத் திருக்கையாலே என்னுதனே யென்கிறார். (அரங்கனே - கூறுதேறவேறிதே) ‘‘ஈஶ்வரன் ஒருவனுளன்’’ என்று அறியாத ஸம்ஸாரத்திலே இவ்வாஶ்ரித பக்ஷபாதத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக அர்த்தியாய் வந்துகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற தேவரீர் இத்தைவிஶேஷித்துத் தெரியவருளிச் செய்யவேணும். கீழ் - வ்யூஹததிலும் விபவத்திலும் சொன்னபக்ஷபாதங்கள்காணலாவது பெரியபெருமாள் பக்கலிலே யென்றுகருத்து. ... ... (உக)

அ.—இருபத்திரண்டாம் பாட்டு. ப்ரளயாபத்திலே வனையாதே யெல்லாரையும், வடதளஶாயியாய், ஸர்வஶக்தித்வந்தோற்றச் சிறிய திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்ததேவரீருக்கு ‘‘ஆச்ரிதவிஷயத்தில் வத்ஸலர்’’ என்னுமிது ஒரேற்றமோ வென்கிறார்.

பண்டுமின்றுமேலுமாயோர்பாலனாகிஞாலமேழும்
உண்டுமண்டியாலிலைத்துயின்றவாதிதேவனே!
வண்டுகிண்டுதண்டுழாயலங்கலாய்! கலந்தசீர்ப்
புண்டரீகப்பாவைசேருமார்ப! பூமிநாதனே! (உஉ)

நின்றசூரர் - பராக்ரமமாதல்; சூரராதல். அதுக்கு தான்கடைந்து அவர்கள்மேலே ஏறிட்டத்துக்குமேலே. (உக)

ப-ரை.—பண்டுமாய் - ஸ்ர்ஷ்டிக்கு முன்பு அசித்தாய்க்கிடந்த ஸகலபதார்த்தங்களையும் தன்மேலே யேறிட்டுக்கொண்டு நோக்கியும், இன்றுமாய் - ஸ்ர்ஷ்டிவேளையில் கர்மாநுரூபமாக ஸ்ர்ஷ்டித்து தத்நுரூபமாக ரக்ஷித்தும், மேலுமாய - ப்ரளயங்கொள்ளுமளவில், ஓர் அத்விதியமான, பாலனாகி - முக்தச்சிசுவாய், ஞாலமேழும் - ஸகலலோகங்களையும், மண்டி - தன்பேருகவிரும்பி, உண்டு - அமுதுசெய்து, ஆலிலை - ஓராலந்தளிரிலே, துயின்ற - கண்வளர்ந்தருளின, ஆதிதேவனே - ஜகத்காரணபூதனாய, வண்டு-வண்டுகளானவை, கிண்டு-கிளராநின்றுள்ள, தண்-குளிர்ந்த, துழாயலங்கலாய் - திருத்துழாய்மாலையையுடையனாய், கலந்த - நித்யஸம்ச்லேஷஸ்வ பாவையாய், சீர் - ச்லாக்யமான, புண்டரீகம் - தாமரைப்பூவை ஜந்மபூமியாக வுடையளாய், பாவை - நிருபாதிகஸ்த்ரீத்வத்தை யுடையளான பெரியபிராட்டியார், சேரும் - நித்யவாஸம் பண்ணுகிற, மார்ப - திருமார்பையுடையனாய், பூமி - ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு, நாதனே - நாதனானவன், ப்ரளயத்தில் ஒருவரில்லாதாரைப் போலே தனியே கண்வளர்ந்தருளாநின்றானென்கிறார். (௨௨)

வ்யா.— (பண்டுமின்று மேலுமாய்) "பண்டு" என்கிறது-ஸ்ர்ஷ்டேꞏபூர்வகாலத்தை; "இன்று" என்கிறது - ஸ்ர்ஷ்டிகாலத்தை; "மேல்" என்கிறது - ப்ரளயவேளையை. "𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍" "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்கிறபடியே நாமரூபங்களை இழந்து அசித்விசேஷிதமாய் சோச்யதசாபந்நமான ஸகல பதார்த்தங்களையும், "𑌤𑌮𑌃-𑌏𑌕𑍀𑌭𑌵𑌤𑌿" "தம:ஏகீபவதி" என்கிறபடியே தன் பக்கலிலேயிட்டு நோக்கியும்; ஸ்ர்ஷ்டிவேளையில் கர்மாநுரூபமாக ஸ்ர்ஷ்டித்து தத்நுரூபமாக ரக்ஷித்தும ப்ரளயங்கொள்ளுமளவில் வயிற்றிலே வைத்து நோக்கியும் போருமவனாகையாலே. "ஆய்" என்றது-ஆசையாலேயென்று ஹேதுகர்ப்பமாய்க்கிடக்கிறது. (ஓர் பாலனாகி) அத்விதியமான முக்தசிசுவாய். (ஞாலமேழுமுண்டுமண்டி) ஸகலலோகங்களையும் தன்பேருகவிரும்பி யமுதுசெய்து சிறியவயிற்றிலே ஸகலலோகங்களையு மடக்கின அகடிதகடநாஸாமர்த்யத்தால் தேவரீருடைய ஐச்வர்யமான சக்தியை ப்ரகாசிப்பித்தபடியிறேயிது. (ஆலிலைத்துயின்ற வாதிதேவனே) ஒருபவனான வாலிலையிலே ஜகத்காரணவஸ்து வென்று தோற்றும்படி கண்வளர்ந்தருளினவனே. (வண்டுகிண்டு தண்டுழாயலங்கலாய்) இப்படிப்ரளயார்ணவத்திலே பரிவரொருவரின்றிக்கே தனியே கண்வளர்ந்தருளுகிறவன் ஸர்வாதிகனென்கிறது இப்பாட்டில் சேஷத்வமும். செவ்வியாலே வண்டுகள் புக்குப்பருகும் ச்ரமஹரமான திருத்துழாய்மாலையை யுடையவனே. கிண்டல்-கிளர்தலும், கிழித்தலும். இத்தால்-ஆதிராஜ்யஸூசகமான திருத்துழாய்மாலையையுடையவனென்கை. (கலந்தசீர்ப்புண்டரீகப் பாவைசேருமார்ப) ஸ்வரூபநிருபக பூதையாகையாலே நித்யஸம்ஸ்லேஷஸ்வ பாவையாய், தாமரைப்பூவை ஜந்மபூமியாக வுடையளாய், நிருபாதிகஸ்த்ரீத்வத்தை யுடைய பிராட்டி, "அகலகில்லேனிறையும்" என்று அவள் ஆதரிக்கும்திருமார்பையுடையவனே.

(பூமிநாதனே) ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு நாதனானவனே. இத்தால்-"[illegible]" "ஹ்ரீஶ்சதேலக்ஷ்மீஶ்சபத்ந்யௌ" என்கிறபடியே ஸ்ரீபூமிஸஹிதனான ஏற்றத்தையுடையவனென்கை. இப்படி ஸர்வாதிகன் இவர் ப்ரளயார்ணவத்திலே ஒருவரில்லாதாரைப் போலே தனியே கண்வளர்ந்தருளுகிறானென்கை. ... (௨௨)

அ.—இருபத்து மூன்றாம்பாட்டு. ப்ரளயாபத்ஸகனானைக்கு வடதளஶாயியான அகடிதகடநா ஸாமர்த்யத்யத்தள வனறியே தேவரீருடைய அஸாதாரண விக்ரஹத்தை, "[illegible]" "நரஸ்யார்த்ததநும் க்ருத்வா ஸிம்ஹஸ்யார்த்ததநுந்ததா" என்கிறபடியே ஏகதேஶத்தை மநுஷ்யஜாதியமாக்கியும் ஏகதேஶத்தை திர்யக்ஸஜாதியமாக்கியும் இப்படி யோநித்வயத்தை ஏகவிக்ரஹமாக்கி, அர்த்தித்வ நிரபேக்ஷமாக பிதாவாலே புத்ரனுக்குப்பிறந்த ஆபத்தை தேவர்பொறுக்க மாட்டாமையாலே தூணிலே தோற்றின அகடிதகடநாஸாமர்த்யத்தை அநுஸந்தித்து இத்தை யாவர் பரிச்சேதித்து அறியவல்லாரென்கிறார்.

வாணிறத்தொர்சீயமாய்வளைந்தவாளெயிற்றவன்
ஊனிறத்துகிர்த்தலமழுத்தினாயுலாயசீர்
நானிறத்தவேதநாவர்நல்லயோகினால்வணங்கு
பானிறக்கடற்கிடந்தபற்பநாபனல்லையே. (௨௩)

ப-ரை.—வால்நிறத்து - வெளுத்தநிறத்தையுடைத்தாய், ஓர் - அத்விதீயமான, சீயமாய் - நாஸிம்ஹாவதாரஞ்செய்தருளி, வளைந்த - வளைந்து, வாள்-ஒளியையுடைத்தான, எயிற்றவன் - பற்களையுடைய ஹிரண்யனது, ஊன் நிறத்து - சரீரத்தில் மார்பிலே, உகிர்த்தலம் - திருவுகிரை, அழுத்தினாய் - அழுத்தினவனே, உலாய - ஸர்வலோகப்ரஸித்தமான, சீர் - ப்ராமாண்யத்தையுடைத்தாய், நால்நிறத்த - உதாத்தாநுதாத்தஸ்வரித ப்ரசயரூபமான நாலுவகைப்பட்ட ஸ்வரத்தையுடைய, வேதம் - வேதத்தை, நாவர் - நாவிலேயுடைய வைதிகர், நல்லயோகினால் - பக்தியோகத்தாலே, வணங்கு - ஆச்ரயிக்கிற, பால்நிறக்கடல் - க்ஷீராப்தியிலே, கிடந்த - கண்வளர்ந்தருளின, பற்பநாபனல்லையே-பத்மநாபனன்றோ வென்கிறார். (௨௩)

வ்யா.—(வாணிறத்தொர் சீயமாய்) புருஷோத்தமன் தன்னை அழியமாறி ஸிம்ஹஸஜாதீயனாப்போலே ஸ்வாபாவிகமான நிறத்தையும் மாறுடுவதேயென்கிறார். வால்நிறம் - வெளுத்தநிறம். (ஓர் சீயமாய்) "[illegible]" "பஹுதாவிஜாயதே" என்றும், "[illegible]" "பஹுனி" என்றும் சொல்லுகிற அஸங்க்யாதமான அவதாரங்களிலே இங்ஙனிருப்பதொன்றில்லாமையாலே அத்விதீயமென்கிறார். "அழகியான்றானே" என்கிறபடியே போக்யதையில் அத்விதீயத்வத்தைச் சொல்லவுமாம். சீயம் - சிங்கம். (வளைந்தவாளெயிற்றவன்) வளைந்து ஒளியையுடைத்தான எயிற்றையுடைய ஹிரண்யன்.

இத்தால் - வரபலத்திலே அந்தர்ப்பவியாத ஆஸுரமான புஜ பலத்தைச் சொன்னபடி. (ஊன்நிறத்து உகிர்த்தலமழுத்தினாய்) ஶரீரத்தில்மர்மத்திலே திருவுகிரை அழுத்தினவனே. "உகிர்த்தலமழுத்தினாய்" என்று - அவன்வரத்திலே அந்தர்ப்பவியாத வதஸாதநத்தாலே அநாயாஸேந அழித்தபடி சொல்லிற்றாகிறது. (உலாயசீர் நால்நிறத்த வேதநாவர்) ஸர்வலோக ப்ரஸித்தமான ப்ராமாண்யத்தையுடைத்தாய், உதாத்தாநுதாத்த ஸ்வரிதப்ரசயரூபமான நாலுவகைப்பட்ட ஸ்வரத்தையுடைய வேதத்தை நாவிலே யுடையவர்கள். நிறம்-மேனி. இத்தால - அநுமாநாதிகளாலே தத்வஹிதங்களை நிர்ணயிக்குமவர்கள். அன்றியே, வைதிகர் ஆஶ்ரயிக்குமவனென்கை. (நல்லயோகினால் வணங்கு) பக்தியோகத்தாலே ஆச்ரயிக்குமவர்களென்னுதல்; விலக்ஷணமான ப்ரபத்தியாலே ஆஶ்ரயிக்குமவர்களென்னுதல். யோகு - யோகம்-உபாயம். (பால்நிறக்கடல் கிடந்த பற்பநாபனல்லையே) தேவரீர் திருமேனிக்கு பரபாகரூபமான நிறத்தை யுடைத்தான கடலிலே ஜகத்துக்கு உத்பாதகனென்று தோற்றும் வடிவோடே கண்வளர்ந்தருளுகிற பற்பநாபனல்லையோ. "நல்லயோகினால்" என்கையாலே - வாக்யார்த்த ஜ்ஞாநமென்ன, கர்மஜ்ஞாந ஸமுச்சயமென்ன, இவற்றைமோக்ஷஸாதந மென்கிற குத்ருஷ்டிகளில் வைதிகருக்குண்டான வ்யாவர்த்தி சொல்லுகிறது. "உலாயசீர்" என்று- அதிகாரிவிசேஷணமாகவுமாம். "உலாயசீர்-பற்பநாபன்" என்று அந்வயிக்கவுமாம். அப்போது, "ஸத்ய:" "விதித:" என்கிறபடியே கல்யாணகுண யுக்தனான ஜநகனென்கிறது. (உ௩)

அ.—இருபத்துநாலாம்பாட்டு. பரமபாவநனுமாய் நிரதிஶயபோக்யனுமாய், போக்தாக்களைக்காத்தூட்டவல்ல பரிகரத்தையுமுடைய தேவரீர, ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு அநுரூபமாகதிவ்யவிக்ரஹத்தை அழியமாறிவந்து தோற்றின இவ்வேற்றதை நித்யஸூரிகளறிதல், பிராட்டியறிதலொழிய வேறறியவல்லாராரொன்று பின்னையும் அந்த நரஸிம்ஹவ்ருத்தாந்தத்திலே ஈடுபடுகிறார்.

கங்கைநீர்பயந்தபாதபங்கயத்தெம்மண்ணலே!
அங்கையாழிசங்குதண்டுவில்லும்வாளுமேந்தினாய!
சிங்கமாயதேவதேவதேனுலாவுமென்மலர்
மங்கைமன்னிவாழுமார்பவாழிமேனிமாயனே. (உச)

ப-ரை.—கஙகைநீர் - கங்காதீர்த்தத்தை, பயநத - பெற்ற, பாதபங்கயம்- திருவடித்தாமரைகளையுடைய, எம்மணணலே - எனக்குநாதனாய், அங்கை - அழகியதிருக்கைகளிலே, ஆழியும் - திருவாழியையும், சஙகும் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், தணடு - கௌமோதகியென்னும கதையையும், வில்லும் - சார்ங்க

இருபத்துமூன்றாம்பாட்டு. சீர் - ப்ராமாண்யஸ்ரீ. மேனி - ஸ்வரம். "ஸத்யம்" "தத்த்வமஸி" என்கிற வாக்கியார்த்த ஜ்ஞாநம். அந்தகுளகமாய் மேலேக்ரியை. (உ௩)

மென்னும் திருவில்லையும், வாளும் - நந்தகமென்னும்வாளையும், ஏந்திஞய்- தரித்தருளினவனுய், சிங்கமாய - ந்ருஸிம்ஹாவதாரஞ்செய்தருளி ஹிரண்யனைநிரஸிக்கையாலே, தேவதேவ - நித்யஸூரிகளை யெழுதிக்கொண்டவனுய், தேன் உலாவு - மதுவெள்ளமிடாநின்றதாய், மெல் - ம்ருதுவான, மலர் - தாமரைமலரைப் பிறப்பகமாகவுடைய, மங்கை - நவயௌவநஸ்வபாவையான பெரியபிராட்டியார், மன்னிவாழும் - நித்யவாஸம்பண்ணுகிற, மார்ப - திருமார்பையுடையனுய், ஆழி - கடல்போலே ச்ரமஹரமான, மேனி - திருமேனியையுடைய, மாயனே - ஆச்சர்யபூதனே. (உச)

வ்யா.—(கங்கைநீர்பயந்தபாத பங்கயத்தெம்மண்ணலே) குருபாதகனை ருத்ரனுக்கும் சுத்தியைப்பிறப்பிக்கும் அக்கங்கைக்கும் உத்பாதகனுய், முக்தியுக்தர்க்கு நிரதிஶயபோக்யமான திருவடிகளையுடையவென்னுதனே.*அபராதாநாமாலயரானஸம்ஸாரிகளுக்குப்பாவநமாய், * அஸ்ப்ருஷ்டஸம்ஸாரதோஷரான நித்யர்க்கும் முக்தர்க்கும் நிரதிஶயபோக்யமான திருவடிகளையுடையவனென்கை. இப்போது “அண்ணல்” என்று-இவ்வர்த்தைத்தமக்கு நிர்ஹேதுகமாக ப்ரகாஶிப்பித்த உபகாரஸ்ம்ருதியாலே என்னுதனே யென்கிருர். (அங்கையாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்திஞய்) அத்திருவடிகளை அநுபவிக்கவிழிந்தார்க்கு விரோதிகளை யழியச்செய்யும் திவ்யாயுதங்களை எப்போது ஆர்க்கு என்வருகிறதோவென்று ஸர்வதாதரித்து நிற்குமவனே. தனக்குத்தானே ஆபரணமான திருக்கையிலே திருவாழி தொடக்கமான ஸ்ரீபஞ்சாயுதங்களை தரித்தவிதுவும் திருவடிகளோபாதி தமக்கு போக்யமாயிருக்கிறதாய்த்து. (சிஙகமாய தேவதேவ) அத்திவ்யாயுதங்கள் அஸத்ஸமமாம்படி வரங்கொண்ட ஹிரண்யனை, நகாயுதமான ஸிம்ஹமாயழியச்செய்த ஆஶ்ரித பக்ஷபாதத்தாலே நித்யஸூரிகளை யெழுதிக்கொண்டவனே. திவ்யமங்கள விக்ரஹத்தின் சுவடறியும் நித்யஸூரிகளுக்கிறே அவ்வடிவையும் அழியமாறிரக்ஷித்த ஆஶ்ரிதபக்ஷபாதத்தின் எல்லைதெரிவது. (தேனுலாவுமென்மலர்மஙகைமன்னிவாழுமார்ப) செவ்வியையும்மென்மையையுமுடைத்தான தாமரையில் பிறப்பாலும் பருவத்தாலும் நிரதிஶய போக்யையான பிராட்டி நித்யவாஸம்பண்ணி யநுபவிக்கும் திருமார்பையுடையவனே. இப்போது, “அகலகில்லேன்” என்கிற ஸாமாந்யமன்றிக்கே ஹிரண்யனை யழியச்செய்த வீரத்தாலே, “[illegible]” “பர்த்தாரம்பரிஷஸ்வஜே” என்கிறபடியே இவ்வடிவிலே பிராட்டி அத்யாதரம்பண்ணினபடியைச் சொல்லுகிறது. இத்தால்- நித்யஸூரிகளளவுமன்றிக்கே தலைநீர்ப்பாட்டிலே அநுபவிக்கும் பிராட்டியும் இவ்வாஶ்ரித பக்ஷபாதத்துக்குத் தோற்றிருக்கும்படியைச்சொல்லிற்ருய்த்து. “என்னடியாரது செய்யார்” என்றிறே அவன்படியிருப்பது. (ஆழிமேனிமாயனே) கடல்போலே ச்ரமஹரமான திருமேனியையுடைய ஆஶ்சர்யபூதனே. ஹிரண்யனுக்கு அநபிபவநீயமான அவ்வடிவுதானே ஆஶ்ரிதர்க்கு ச்ரமஹரமானபடியைச்சொல்லுகிறது. ... ... (உச)

அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. அநந்யப்ரயோஜநனான ப்ரஹ்லாதனுடைய விரோதியைப்போக்கினபடியை அநுபாஷித்துக்கொண்டு, அவனுடையவளவன்றிக்கே ப்ரயோஜநாந்தரபரனான இந்த்ரனுக்காக அர்த்தியாயும் அவ்வளவும் புகுரநில்லாதேவிமுகரான ஸம்ஸாரிகளை ப்ரளயாபத்திலே திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்த இவ்வாபத்ஸகத்வத்தை அறியவல்லாராரென்கிறார்.

வரத்தினிற்சிரத்தைமிக்கவாளெயிற்றுமற்றவன்
உரத்தினிற்கரத்தைவைத்துகிர்த்தலத்தையூன்றினாய்
இரத்திநீயிதென்னபொய்யிரந்தமண்வயிற்றுளே
கரத்தியுன்கருத்தையாவர்காணவல்லர்கண்ணனே. (உரு)

ப-ரை.—வரத்தினில் - பர்ஹ்மா தனக்குத்தந்தவரத்திலே, மிக்கசிரத்தை - மிகவும் விசவாஸமுடையனாய், வாள் - வாள்போன்ற, எயிறு - பற்களையுடையனான, மற்றவன் -சத்ருவான ஹிரண்யனுடைய, உரத்தினில்-மார்விலே, கரத்தைவைத்து - திருக்கைகளைவைத்து, உகிர்த்தலத்தை-திருவுகிராலே, ஊன்றினாய் - ஊன்றிக்கிழித்துப்போகட்டாய், நீ - வாமநாவதாரஞ்செய்தருளின நீ, தத்ஸந்தாநஜாதனான மஹாபலியிடத்தில்சென்று, இரத்தி - மூவடிமண்தாவென்று இரந்தாய்; இதென்னபொய்—; இரந்தமண - அர்த்தித்துப்பெற்ற பூமியென்று ப்ரளயத்திலே, வயிற்றுளே - திருவயிற்றிலேவைத்து, கரத்தி - ஒளித்துவைத்துரக்ஷித்த, கண்ணனே- க்ர்ஷ்ணனான, உன-உன்னுடைய, கருத்தை - நினைவை, யாவர்காணவல்லா - அறியவல்லாரா ரென்கிறார். (உரு)

வ்யா.—(வரத்தினில் சிரத்தைமிக்க) ப்ரஹ்லாதனுக்குத்தந்த வரத்திலே அத்யாதரத்தைப்பண்ணி, வரப்ரதனான ப்ரஹ்மாவுக்கு உத்பாதகனானவனோடே விரோதித்து, அவனாலே உத்பந்நனான ப்ரஹ்மா தனக்குத்தந்த வரத்திலேயிறே மிகக ஶ்ரத்தையைப்பண்ணிற்று. "ஸோऽயம்" "சோயம்விஷ்ணு:" என்றுனிறே. தன்வரத்துக்குப்புறம்பான வடிவுகொள்ளவல்லையென்று உன்னை யறியாதே வரத்தையே விஶ்வஸித்திருந்தவன். (வாளெயிறு) வாள்போலேயிருக்கிற எயிற்றையுடையவன். இத்தால் - ஹிரண்யனுடைய புஜபலத்தைச்சொல்லிற்று. வரபலத்துக்குப்புறம்பானவடிவுகொண்டாப்போலே புஜபலத்தை யழிக்க வல்ல ஸர்வஶக்தியென் றறிந்திலன். உன்னை யறியாதே தன் வரபலபுஜபலங்களை விஶ்வஸித்திருந்தமதிகேடன். (மற்றவன்) ஶத்ருவானவன். ஸம்பந்த மொத்திருக்க, "மற்றவன்" என்கிறது - ஆஶ்ரிதஶத்ருவே தனக்கு ஶத்ருவென்னும் நினைவாலே. (உரத்தினில) துர்மாம்ஸங் கிடந்த விடத்தைகொட்டமிடுவாரைப்போலே துர்மாநங்கிடந்தமார்விலே. (கரத்தைவைத்து) "[illegible]" "அப்யேஷப்ர்ஷ்டே மம ஹஸ்தபத்மம்கரிஷ்யதி" என்று அக்ரூராதிகளுக்கு ஜீவந ஹேதுவாய், "அடிச்சியோந்தலைமிசைநீயணியாய்" என்று - ப்ரணயினிக்கு போக்யமாயிருக்கும் திருக்கையை துஷ்ப்ரக்ர்தியான வவனுடைய திண்ணியமார்விலேவைத்து.

(உகிர்த்தலத்தையூன்றினாய்) வரபலத்துக்குப் புறம்பானவத ஸாதநமாய் அத்யந்தம் ஸுகருபமான வுகிராலே அநாயாஸேநக் கொன்றாய்: தலம்-நிலமும், இடமும். (இரத்திநீ) ஹிரண்யனிற்கா ட்டில் தத்ஸந்தாநஜனான மஹாபலிபக்கலிலே ஔதார்யகுணமென்ப தொருகுணமுண்டாகையாலே அர்த்தித்வத்திலேயிழிந்தாய். (இரத்திநீ)ஸர்வஶக்தியாய் அவாப்த ஸமஸ்தகாமனான நீ* அலம்புரிந்தநெ டுந்தடக்கையாலே யிரப்பதே!. ஹிரண்யனுக்காக உடம்பை அழிய மாறினாய், ப்ரயோஜநாந்தர பரனான இந்த்ரனுக்காக உனக்குநிருபக மான ஔதார்யத்தை அன்றழியமாறிற்று. (இத்தென்னபொய்) உ ன்னதல்லாத தொன்றை அர்த்தித்தாயாகிலிறே உன்னர்த்தித்வம் மெய்யாவது, தன்னதொன்றைத் தந்தானாகிலிறேமஹாபலி ஔதா ர்யம் மெய்யாவது. இதுபொய்யென்றதே "இதென்னபொய்" என் று - அர்த்தித்வபலமான த்ரைவிக்ரமாபதாநத்தைஶ்ருதி ஓதாநின் றது. "[Grantha]" "யத்ராம்புவிந்யஸ்ய" என்று- ஔதார்யத் துக்கு பலமாகமஹாபலிக்கு இந்த்ரபதத்தைச் சொல்லாநின்றது. ஆக, ப்ரமாணங்களாலே பொய்யென்னவொண்ணாது, தன்னத்தை அவனதாக்கிக்கொண்டு யிரக்கையாலும், மஹாபலி அவனத்தைத் தன்னதாக்கிக் கொடுக்கையாலும்மெய்யென்னவொண்ணாது. ஆகை யாலே"இதென்னபொய்" என்கிறார். (இரந்தமண்வயிற்றுளேகரந் தி)அர்த்தித்துப்பெற்ற பூமியென்று ப்ரளயாபத்திலே ஆபத்தேஹே துவாகத்திருவயிற்றிலே ஒளித்துவைத்து ரக்ஷித்தது. (உன்கருத்தை யாவர்காணவல்லர்) உன்னினைவை யாவர்காணவல்லார். அநந்யப்ர யோஜநனானப்ரஹ்லாதனோடு,ப்ரயோஜநாந்தரபரனான இந்த்ரனோ டு, விமுகரான ஸம்ஸாரிகளோடு வாசியற ரக்ஷிக்கிற உன்னினைவை ஜ்ஞாநாதிகரார்தான அறியவல்லார். (கண்ணனே)க்ருஷ்ணனாய் வந் தவதரித்து இடக்கையும் வலக்கையுமறியாத இடையரையும் பசுக்க ளையும் ரக்ஷித்து உன்னை யொழியச்செல்லாதபடி பண்ணி, அவர்க ளுக்கு நியாம்யனான நீயேயருளிச்செய்ய வேணுமென்றுகருத்து. ()

அ.—இருபத்தாறும்பாட்டு. ஸர்வநிர்வாஹகனான நீ ஸுஶ்ரி போக்யமான வடிவை ஆஶ்ரிதார்த்தமாக தேவஸஜாதீயமாக்கியும் கோபஸஜாதீயமாக்கியும் அவதரித்துப்பண்ணின ஆஶ்சர்யங்களை ஆரறிய வல்லாரென்கிறார்.வாமநாவதாரத்தோடே க்ருஷ்ணாவதாரத் துக்கு ஒருவகையாலே ஸாம்யம் சொல்லலாயிருக்கையாலே இரண் டவதாரத்தையுஞ்சேர்த்தநுஸந்திக்கிறார்.

இருபத்தஞ்சாம்பாட்டு. "[Grantha]" "த்ரீணிபதாவிசக்ர மே" என்கிற ஶ்ருதி ப்ரயோஜநாந்தர பரனான இந்த்ரனோடுவாசிய ற என்றபடி,

(உரு)

ஆணிளேடுபெண்ணுமாகியல்லவோடுநல்லவாய்
ஊணொடோசையூறுமாகியொன்றலாதமாயையாய்ப்
பூணிபேணுமாயனாகிப்பொய்யினோடுமெய்யுமாய்க்
காணிபேணுமாணியாய்க்கரந்துசென்றகள்வனே, (உசு)

ப-ரை.—ஆணினோடு பெண்ணுமாகி - ஸ்த்ரீயும் விபாகத்தாலே ஸ்ருஷ்டித்து அவற்றுக்கு நிர்வாஹகனாய், அல்லவோடு - நபும்ஸகபதார்த்தத்துக்கு நிர்வாஹகனாய், இந்த லிங்கத்ரய பதார்த்தங்களிலே, நல்லவாய - விலக்ஷணபதார்த்தங்களுக்கு நிர்வாஹகனாய், ஊணொடோசையூறுமாகி - ஐம்புலன்களுக்கும் அந்தராத்மாவாய், ஒன்றலாதமாயையாய் - பலவகையாய்பரிணமிக்கிற ப்ரக்ருதிதத்வத்துக்கு நிர்வாஹகனாய், இப்படி ஸங்கல்பத்தாலே ஸகலமும் நிர்வஹிக்கிறநீ, பூணிபேணும் - பசுக்களை ஆச்ரிதுப்போரும், ஆயனாகி - இடையனாய், பொய்யுமாய் - அநாச்ரிதரான துர்யோதநாதிகளுக்குப் பொய்யனாய், மெய்யுமாய் - ஆச்ரிதரான பாண்டவர்களுக்கு மெய்யனாய், காணிபேணும் - பூமியை நீரேற்றுவாங்கத்தக்க, மணியாய்- ப்ரஹ்மசாரியாய், கரந்துசென்ற-மறைந்துசென்ற, கள்வனே - கர்தரிமனே. (உசு)

வ்யா.—(ஆணினோடுபெண்ணுமாகி) ஜந்யஜநக பாவத்தாலே ஜகத்துவிஸ்த்ருதமாகவேணுமென்று ஸ்த்ரீயும் விபாகத்தாலே ஸ்ருஷ்டித்தும் அந்யோந்யம் ஸம்பந்தித்தும் ஸம்ஸர்க்கிப்பித்தும் இப்படி அந்தராத்மதயாநின்று நிர்வாஹகனாய். (அல்லவோடு) ஒன்றுக்கு முடலன்றிக்கேயிருக்கிற நபும்ஸகபதார்த்தத்துக்கு நிர்வாஹகனாய். (நல்லவாய்) இந்த லிங்கத்ரயவிசிஷ்ட பதார்த்தங்களிலே விலக்ஷணபதார்த்தங்களுக்கு நிர்வாஹகனாய். வைலக்ஷண்யமாவது-புருஷார்த்த ருசியுண்டாகை. அவர்களுக்கு நிர்வாஹகனாகையாவது- "ददामि बुद्धियोगं तम्" "ததாமிபுத்தியோகந்தம்" என்கிறபடியே புருஷார்த்தஸாதநப்ரதனாகை. (ஊணொடோசையூறுமாகி) புருஷார்த்த ருசியில்லாதார்க்கு போக்யமான சப்தாதிகளுக்கு கர்மாநுகூலமாக நியாமகனாய். ரஸரூபதஸ்பர்சமான இவைமூன்றும் - அஞ்சுக்கும் உபலக்ஷணம். (ஒன்றலாதமாயையாய்) இவற்றினுள்ளே ஒன்றுக்கு காரணமானவளவன்றிக்கே, உக்தங்களோடு அநுக்தங்களோடு வாசியற ஸர்வமுமாய்க்கொண்டு பரிணமிக்கவல்ல ப்ரக்ருதி தத்வத்துக்கு நிர்வாஹகனாய். "मायां तु प्रकृतिं विद्यात्" "மாயாந்துப்ரக்ருதிம்வித்யாத்" என்னக்கடவதிறே. "மாயை" என்று- ஆச்சர்யவாசியாய், ஒன்றுக்கு நிர்வாஹகனுமளவன்றிக்கே ஸகலபதார்த்தங்களையும் சேதநனுடையகர்மாநுகூலமாகநிர்வஹிக்கவல்ல ஆச்சர்யத்தையுடையாயென்னவுமாம். (பூணிபேணுமாயனாகி) இப்படி ஸங்கல்பத்தாலே ஸகலமும் நிர்வஹிக்கிற நீ ஆச்ரிதபரித்ராணார்த்தமாக அஸாதாரண விக்ரஹத்தை ஸஜாதீயமாக்கிககொண்டவதரித்து உன்னைப்பேணாதே பசுக்களைப்பேணும் இடையனாகி. பூணி -பசு. (பொய்யினோடுமெய்யுமாய்) அவதரித்து ரக்ஷிக்கும்போது அநாச்ரிதரான துர்யோதநாதிகள்பக்கலிலே பொய்யையும், ஆச்ரிதரான பாண்டவர்கள்பக்கலிலே மெய்யையுமுடையையாய்.

(காணிபேணுமாணியாய்) மஹாபலியாலே அபஹ்ர்தமாய் நோவுபடாதபடி பூமியைப் பேணித்தன்னைப்பேணுதே ப்ரஹ்மசாரியாய். (கரந்துசென்றகள்வனே) மறைத்துக்கொண்டு சென்ற க்ர்த்ரிமனே. மறைத்துக்கொண்டு செல்கையாவது - ஐஶ்வர்யமான வைபவம் தோற்றுமே பூமியை மஹாபலியதாக்கி அர்த்தியாய்ச்செல்லுகை. க்ர்த்ரிமனுகையாவது - சுகரன்வார்த்தை செவிப்படாதபடி அழகாலும் சீலத்தாலும் மஹாபலியை வசீகரித்து சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே அளந்துகொள்ளுகை. (கரந்துசென்ற கள்வனே) "உன்னை யாரமதிக்கவல்லர்" என்று மேல்பாட்டோடே அந்வயம். ... ... (உ௬)

அ.—இருபத்தேழாம்பாட்டு. சேதநாசேதந விலக்ஷணமான உன்னுடைய அபரிச்சிந்நவைபவத்தை பரிச்சேதிக்கிலும் குணப்போிதனுய் பூமியை அளந்துகொண்ட வடிவை பரிச்சேதிக்கவல்லாராரொன்கிறூர்.

விண்கடந்தசோதியாய்! விளங்குஞானமூர்த்தியாய்!
பண்கடந்ததேசமேவுபாவநாசநாதனே!
எண்கடந்தயோகினேடிரந்துசென்றுமாணியாய்!
மண்கடந்தவண்ணநின்னையாரமதிக்கவல்லரே. (உ௭)

ப-ரை.—விண்-விபுவானமூலப்ரகர்தி, கடந்த-உனக்குள்ளேயாம்படியான ஸ்வரூபத்தையுடைய, சோதியாய் - ஸ்வயம்ப்ரகாசவஸ்துவாய், விளங்கு-ப்ரகாசியாநின்றுள்ள, ஞானமூர்த்தியாய-ஜ்ஞானசப்தவாச்யமானஆத்மஸ்வரூபத்தைசரீரமாகவுடையனுய், பண்கடந்த-வேதத்தாலேபரிச்சேதிக்கவொண்ணுத, தேசமேவு - தேஜஸ்ஸையேஸ்வரூபமாகவுடையனுய், பாவநாசநாதனே - ஹேயப்ரத்யநீகனுனஸர்வேச்வரனே, எண்கடந்த - அஸங்க்யாதமான, யோகினேடு - கல்யாணகுணங்களோடேகூட, மாணியாய்இரந்துசென்று-வாமநவேஷத்தைக்கொண்டு அர்த்தியாய்ச்சென்று, மண்கடந்தவண்ணம்நினை-பூமியையளந்துகொண்ட ப்ரகாரத்தையுடையவுன்னை, யாரமதிக்கவல்லர்-பரிச்சேதிக்கவல்லாரார். (உ௭)

வ்யா.—(விண்கடந்தசோதியாய்) விபுவான மூலப்ரக்ர்தி உனக்குள்ளே யாம்படியான ஸ்வரூபவைபவத்தை யுடைய ஸ்வயம்ப்ரகாஶவஸ்துவாய். "சுராறிவருநிலைவிண்" என்று - மூலப்ரக்ர்தியை "விண்"என்கிற ஶப்தத்தாலே சொல்லிற்றிறே. இதுதனக்கடி கார்க்ய வித்யையிலே, "ఆకాశే ఓతశ్చ ప్రోతశ్చ" "ஆகாஶே ஓதஞ்சப்ரோதஞ்ச" என்று மூலப்ரக்ர்தியை ஆகாஶ ஶப்தத்தாலே சொல்லிற்று. (விளங்குஞாநமூர்த்தியாய்) ஸ்வயம்ப்ரகாசமாய், ஜ்ஞாநகுணஸாரமாகையாலே ஜ்ஞாந ஶப்தவாச்யமான ஆத்மஸ்வரூபத்தை ஶரீரமாகவுடையையாய். ஆக இரண்டாலும், "అణోరణీయాన్ మహతో మహీయాన్" "அணோரணீயாந்மஹதோமஹீயாந்" என்கிறபடியே விபுத்வ ஸௌக்ஷ்மதவங்களைச் சொல்லிற்று.

இருபத்தாறும்பாட்டு. காச்யப ப்ரஜாபதி தேவகோடியிலே அந்தர்ப்பவிக்கையாலே வாமநனையும் "தேவன்" என்கிறது. (உ௬)

(பண்கடந்ததேசமேவு பாவநாசநாதனே) வேதத்தாலே பரிச்சேதிக்கவொண்ணாத தேஜஸ்ஸையே ஸ்வரூபமாக வுடையையாய், ஹேயப்ரத்யநீகனான ஸர்வேஶ்வரனே. வேதம் ஸ்வரப்ரதானமாகையாலே தத்வாசிசப்தத்தாலே வேதத்தைச் சொல்லுகிறது. இது தான் சேதநாசேதநங்களை வ்யாபித்து நிற்கச்செய்தேயும் தத்கததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனாகையாலும் அசித்ஸம்ஸர்க்கத்தாலே சேதநனுக்கு வந்த தோஷத்தைப் போக்கவல்லனாகையாலும் ஹேயப்ரத்யநீகனென்கிறது.

(எண்கடந்தயோகினோடு) அஸங்க்யாதமான கல்யாணகுணங்களோடேகூட. யோகு - யோகம். அதாகிறது - கல்யாணகுணயோகம். “பஶ்ய மே யோகமைஶ்வரம்” “பஶ்யமேயோக மைஶ்வரம்” என்று-யோகஶப்தத்தாலேகுணயோகத்தைச்சொல்லிற்றிறே. (இரந்துசென்று மாணியாய்) இரப்பிலே தகணேறினவனென்றுதோற்ற வாமநவேஷத்தைக்கொண்டு அர்த்தியாய்ச்சென்று. (மண்கடந்த வண்ணம்) பூமியையளந்துகொண்ட ப்ரகாரத்தை. அதாகிறது- “இந்த்ரனுக்கு மஹாபலியாலே அபஹ்ருதமான ராஜ்யத்தை வாங்கிக்கொடுக்க” என்கிற வ்யாஜத்தாலே வஸிஷ்டசண்டாள விபாகமற சதுர்த்தஶபுவநாந்தர்க்கதமான சேதநர் தலைகளிலும் திருவடிகளை வைக்கை. (நின்னை) சேதநாசேதநவிலக்ஷணமாய், வேதத்தாலும் பரிச்சேதிக்கவொண்ணாத ஸ்வரூபவைலக்ஷண்யவைபவத்தையுடையையாய், அதுக்குமேலே குணப்ரேரிதனாய்க்கொண்டு பூமியையளந்துகொண்டவுன்னை. (ஆர்மதிக்கவல்லரே)பரிச்சேதிக்கவல்லாரார். வேதங்களாலே பரிச்சேதிக்கலாமோ, ஜ்ஞாநாதிகரான வைதிகரால் தான் பரிச்சேதிக்கலாமோ, அம்மேன்மையை பரிச்சேதிக்கவோ, அந்நீர்மையை பரிச்சேதிக்கவோ, எத்தை யார் பரிச்சேதிக்கவல்லார்.

அதவா; (விண்கடந்தசோதியாய்) பரமபதத்துக்கவ்வருகாய் ஸ்வயம்ப்ரகாஶமானதிவ்யாத்மஸ்வரூபத்தையுடையையாய்.இத்தால்-த்ரிபாத்விபூதியும்தனக்குள்ளே யாம்படியான ஸ்வரூபவைபவத்தைச்சொல்லுகிறது. (விளங்குஞானமூர்த்தியாய்) ஜ்ஞாநம் விளங்குகிறமூர்த்தியையுடையையாய். திவ்யாத்மஸ்வரூபத்தை ஆஶ்ரயமாகவுடைய ஜ்ஞாநத்துக்குப்ரகாஶகமான திவ்யவிக்ரஹத்தை யுடையையாய். இந்த ஜ்ஞாநம் ஷட்குணங்களுக்கு முபலக்ஷணம். “ஷாட்குண்யவிக்ரஹம் தேவம்” “ஷாட்குண்யவிக்ரஹம்தேவம்” என்னக்கடவதிறே. (பண்கடந்ததேசமேவுபாவநாசநாதனே) ச்ருதியால் பரிச்சேதிக்கவொண்ணாத பரமபதத்திலே நித்யவாஸம்பண்ணுமவனாய், ஸம்ஸாரிகளுடைய தோஷத்தைப்போக்க வல்ல ஹேயப்ரத்ய நீகத்வத்தையுடைய ஸர்வேஶ்வரனே.

(எண்கடந்தயோகினோடு) "[illegible]" "பராஸ்யஶக்திர் விவிதைவஶ்ரூயதே" என்கிறபடியே அபரிச்சிந்நமாய் அஸங்க்யாதமான ஆஶ்சர்ய சக்தியோகத்தை யுடையையாய்க்கொண்டு. (மாணியாய் - இரந்துசென்று) அதீந்த்ரியமாய் அபரிச்சிந்நமான திவ்யமங்கள விக்ரஹத்தை' பரிச்சிந்நமாக்கி, மஹாபலியுடைய சக்ஷுர்விஷயமாக்கிஅர்த்தியாய்ச்சென்று.(மண்கடந்தவண்ணம்) மூன்றடியை அர்த்தித்து இரண்டடியாலே ஸகலலோகங்களையும் அளந்து கொள்ளுகையும், சிறுக்காலைக்காட்டிப் பெரியகாலாலே அளந்துகொள்ளுகையுமாகிற இப்ரகாரத்தை. (நின்னை) அபரிச்சிந்நமான ஸ்வரூபவைபவத்தையுடையையாய், அந்த ஸ்வரூபத்துக்கும் ஸ்வரூப ஆஶ்ரயமான குணங்களுக்கும் ப்ரகாஶகமான திவ்யவிக்ரஹயுகதனாய், வேதத்தாலும் பரிச்சேதிக்கவொண்ணாத பரமபதத்தை வாஸஸ்தாநமாகவுடையையாய், உன்னுடைய ஆஶ்சர்யஶக்திப்ரேரிக்க, அத்தாலே ப்பேரிதனாய்வந்து பூமியையளந்துகொண்ட வுன்னை. (ஆர்மதிக்கவல்லரே) இவற்றிலே யொன்றை ஒருத்தராலே பரிச்சேதிக்கப்போமோ. (உஎ)

அ.—இருபத்தெட்டாம்பாட்டு. ஸங்கல்பலேஶத்தாலே அண்டகாரணமான ஜலஸ்ர்ஷ்டிமுதலான ஸகலஸ்ர்ஷ்டியையும் பண்ணக்கடவநீ, ஸ்ர்ஷ்டமான ஜகத்திலே ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக உன்னையழியமாறி அநேகாவதாரங்களைப்பண்ணியும், ஆச்ரிதவிரோதிகளான துர்வர்க்கத்தை திவ்யாயுதங்களாலே கைதொட்டு அழிக்கையுமாகிற இவ்வாஶ்சர்யங்களை ஒருவருமறியவல்லாரில்லையென்கிறார். "ஒருத்தரும் நினைதுதன்மையின்னதென்னவல்லரோ" என்கிற மேலிற்பாட்டில் க்ரியை இதுக்கும் க்ரியை.

புடைத்தபாரிடந்தளந்ததுண்டுமிழ்ந்துபௌவநீர்
படைத்தடைத்ததிற்கிடந்துமுன்கடைந்தபெற்றியோய!
மிடைத்தமாலிமாலிமான்விலங்குகாலனூர்புகப்
படைக்கலம்விடுத்தபல்படைத்தடக்கைமாயனே. (உஅ)

பதா.—பௌவநீர் - அண்டகாரஹமான ஏகார்ணவத்தை, படைத்த - ஸ்ருஷ்டித்து, பார் - ப்ரளயார்ணவத்திலே அந்தர்ப்பூதையானபூமியை இடந்து - வராஹமாய்அண்டபித்தியிலேபுக்கு இடந்தெடுத்து, மஹாபலியாலே அபஹ்ருதமானபூமியை, அளந்து - வாமநாவதாரஞ்செய்தருளி எல்லைநடந்துமீட்டு, நைமித்திகப்ரளயத்திலேவடதளசாயியாய், அது - அந்தலோகத்தை, உண்டு-தன்திருவயிற்றிலேவைத்து, உமிழ்ந்து-பின்புவெளிநாடுகாணப்புறப்படவிட்டு, பௌவநீர்-அண்டாந்தர்வர்த்திகளானஸமுத்ரங்களிலேஒருஸமுத்ரத்தை, வருணனைச் சரணம்புக்கு, படை - படைகளைத்திரட்டி, தடைத்து-அணைகட்டி, முன-ப்ரஹ்மாதிகள் ஆர்த்தரானதசையில்கிட்டி உதவுகைக்காக, அதில் - திருப்பாற்கடலிலே, கிடந்து-கண்வளர்ந்தருளி, தேவர்கள், இழந்தபொருள்களை அவர்களுக்குக் கொடுக்கைக்கா, கடைந்த - அக்கடலைக்கடைந்தருளின, பெற்றியோய - ஸ்வபாவத்தையுடையவனே, மிடைத்த - கோபித்துவந்த, மாலி - மாலியும், மான் -

மிநிக்சனுன, மாலிவிலங்கு - ஸுமாலியென்னும்ம்ர்சமும், காலனூர்புக - யம புரத்தேபோம்படிச்கீடாக், படைக்கலம்விடுத்த - ஆயுதத்தையேவினவனுய். பினனும்விரோதிநிரஸநத்துக்காக, பல்படை - அநேக ஆயுதங்களைதரித்த, தடம் - விசாலமான, கை-திருக்கைகளையுடைய, மாயனே - ஆச்சர்யபூதனே என்று ஈடுபடுகிருர். (உஅ)

வ்யா.—(படைத்தபாரிடந்து)"பௌவநீர்படைத்து-பாரிடந்து" என்று அந்வயமாகக்கடவது. "[illegible]" "அபஏவ ஸஸர்ஜாதௌ"என்கிறபடியே-அண்டகாரணமான ஏகார்ணவத்தை ஸங்கல்பலேசத்தாலே ஸ்ர்ஷ்டித்து, ஜகத்கார்யமான அண்டத்தையும் அண்டாதிபதியான ப்ரஹ்மாவையும் ஸ்ர்ஷ்டித்து, ப்ரஹ்மாவாலே ஸ்ர்ஷ்டமான ப்ரளயார்ணவத்திலே அந்தர்ப்பூதையான பூமியை ஸௌரிபோகயமான திவ்யவிக்ரஹத்தை வராஹஸஜாதீயமாக்கி அண்டபித்தியிலே புக்கு இடந்தெடுத்து. இது ஸங்கல்பத்தாலேசெய்யமுடியாததொன்றன்றே,"ஸம்ஸாரப்ரளயாபத்தினின்றும் எடுப்பானிவனே!"என்று ஆஸ்ரிதர்விச்வஸிக்கைக்காகவிறே. (அளந்து) அதுக்குமேலே, மஹாபலியாலே அபஹ்ர்தமான பூமியை, ஸ்ரீவாமநனுய் எல்லை நடந்து மீட்டுக்கொண்டு. இதுவும் தன்னுடைமைபெறுகைக்குத் தானே அர்த்தியாய் வருமவனென்று ஆஸ்ரிதர்விஸ்வஸிக்கைக்காக. (அதுண்டுமிழ்ந்து) நைமித்திக ப்ரளயம்வர வடதளஸாயியாய், தன்னுடைய சிறியவயிற்றிலே த்ரிலோகத்தையும் வைத்து ரக்ஷித்து, உள்ளேயிருந்து நோவுபடாமல் அவற்றை உமிழ்ந்து. இதுவும் ஸங்கல்பத்தாலே செய்யலாயிருக்க அப்படிசெய்ததும்ஸர்வசக்தியென்றும், உருவழிந்தபதார்த்தங்களை உண்டாக்குமவனென்றும் ஆஸ்ரிதர்விஸ்வஸிக்கைக்காக. "பௌவநீர் படைத்தடைத்து" என்று இங்கேயும் அந்வயிக்கக்கடவது. அண்டகாரணமான ஏகார்ணவத்தை ஸங்கல்பலேசத்தாலே ஸ்ர்ஷ்டித்த நீ அண்டாந்தர்வர்த்திகளான ஸமுத்ரங்களிலே ஒருஸமுத்ரத்தை, வருணனைச்சரணம்புக்குபடைதிரட்டியும் அடைத்தஇதுவும் ப்ரணயினியுடைய விஸ்லேஷத்தில் தேவரீருடைய ஆற்றாமையை ப்ரகாஸிப்பித்த வித்தனையிறே. (முன் அதில்கிடந்து) ப்ரஹ்மாதிகள் ஆர்த்தரானதசையிலே தூரஸ்தராகவொண்ணுது என்றும், அபிமுகீகரித்தார்க்கு அவதரித்து சுபாச்ரயமாகைக்கும திருப்பாற்கடலிலேகண்வளர்ந்தருளி.

இருபத்தெட்டாம்பாட்டு. பௌவநீருக்கு கீழ்மூலத்திலே அர்த்தமாக்கி, மேலுக்கருளிச் செய்கிருர் ([illegible] - அப ஏவ இத்யாதி) (முன்னதில் - கிடந்து) இடந்ததுமுதலான வ்யாபாரங்களுக்குமுன்னே திருப்பாற்கடலிலே கிடந்ததென்றபடி. ()

"ஜ்யோதீம்ஷி விஷ்ணு:" "ஜ்யோதீம்ஷிவிஷ்ணு:" என்கிறபடியே ஸர்வர்க்கும் ஸந்நிஹிதரானதேவரீர் இப்படி செய்தருளிற்று ஆச்ரிதரக்ஷணத்திலே ஸத்யோத்யுக்தரென்று தோற்றுகைக்காக விறே. (கடைந்தபெற்றியோய்) தூர்வாஸ சாபத்தாலே தேவர்களிழந்த பதார்த்தங்களடங்கக் கடலிலே யுண்டாக்கிக் கொடுக்கைக்காக அக்கடலைக்கடைந்த மஹாப்ரபாவத்தை யுடையவனே "பெற்றி" என்று - ஸ்வபாவம். இதுவும் ஆச்ரிதருடைய இழவுகளைத் தானேவ்யாப்ரித்துத்தீர்க்குமென்று தோற்றுகைக்காக.

(மிடைத்தமாலி) கோபித்தமாலி. (மாலிமான்விலங்கு) பெருமிடுக்கனான ஸுமாலியான திர்யக்கு. திர்யக்ப்ரவர்த்தனான ஸுமாலியென்னவுமாம். (காலனூர்புகப் படைக்கலம்விடுத்த) அவர்களையும் அப்புறத்திலே புகும்படி ஆயுதத்தை யேவினவன். இத்தால் - ஆச்ரித விரோதிகளை அழியச்செய்யுமிடத்தில் ஸங்கல்பத்தாலன்றிக்கே கைதொட்டு ஆயுதத்தாலே அழிக்குமவனென்கிறது. (பலபடைத்தடக்கை மாயனே) பின்பு விரோதி நிரஸநத்துக்கீடான அநேக ஆயுதங்களை யுடைத்தாய், அவ்வாயுதங்களுக்கு ஸத்ரசமான சுற்றுடைத்தான திருக்கையையுடைய ஆஸ்சர்யபூதனே. ... (௨அ)

அ.—இருபத்தொன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டில் "மநஸைவ ஜகத்ஸ்ருஷ்டிம்" "மநஸைவஜகத்ஸ்ர்ஷ்டிம்" என்கிறபடியே - ஸங்கல்பலேஶத்தாலே ஜகத்ஸ்ர்ஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணவல்லவன், ஆச்ரிதாநுக்ரஹத்தாலே எளியகாரியங்களுக்கு அநேகவிக்ரஹபரிக்ரஹங்களைப் பண்ணி ரக்ஷிக்குமென்கிறது; இதில்-இவ்வநுக்ரஹத்துக்கு ஹேது ஸர்வாதிகத்வத்தால்வந்த பூர்த்தியும், ச்ரியப்பதித்வத்தால்வந்த நீர்மையும், அவர்ஜநீயமானஸம்பந்தமு மென்றும், அநுக்ரஹகார்யம் வ்யூகவிபவாத்யவதாரங்களென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வநுக்ரஹம் ஏவம்விதமென்று பரிச்சேதிக்கவொண்ணாதென்கிறார்.

பரத்திலும்பரத்தையாகிபௌவநீரணைக்கிடந்
துரத்திலுமொருத்திதன்னைவைத்துகந்ததன்றியும்
நரத்திலும்பிறத்திநாதஞானமூர்த்தியாயிருய
ஒருத்தருமினைதுதன்மையின்னதென்னவல்லரோ. (௨௯)

ப-ரை.—பரத்திலும் - த்ரிவிதாத்மவர்க்கத்துக்கும், பரத்தையாகி - மேலானவை லக்ஷண்யத்தையுடையையாய், ஒருத்திதன்னை - அத்விதீயையான பெரிய பிராட்டியாரை, வைத்து - பிரியாமல்வைத்து, உகந்து-ஸம்ச்லேஷ ரஸங்களை யநுபவிக்கிறநீ, ஆச்ரிதரக்ஷணத்துக்காக அநிருத்தரூபியாய்க்கொண்டு, பௌவம்-

---

"ஜ்யோதீம்ஷி விஷ்ணு:" "ஜ்யோதீம்ஷிவிஷ்ணு:" என்று ஸர்வாந்தர்யாமித்வம சொல்லுகையாலே ஸர்வர்க்கும் ஸந்நிஹிதனென்கிறது, மாலிமானைராக்ஷஸனை, க்ஷுத்ரனாகையாலே விலங்கென்னுதல்; பசுவ்ர்த்தியாலே விலங்கென்னுதல். (௨அ)

க்ஷீராப்தியிலே, நீர் அணை - நீரோபடுக்கையாக, கிடந்து - கண்வளர்ந்தருளி, சேதநர் விஷயத்தில் செய்த அநுக்ரஹம்பர்யவஸியாமையாலே, அன்றியும்- அதுக்குமேலே, உரத்திலும் - மநுஷ்யயோநியிலும், பிறந்தி-ராமக்ருஷ்ணதிரு மேனிவந்தவதரித்தவனாய்,நாத-ஸகலஆத்மாக்களுக்கும்நாதனாய,ஞானமூர்த்தி யாயினாய் - ஜ்ஞாநஸ்வரூபனானவனே!, ஒருதரும-வேதவைதிகர்களில் ஒருவரும், நினதுதன்மை - உனஅநுக்ரஹத்தினெல்லையை, இனனதென்னவல்லரோ-ஏவம்விதமென்று பரிச்சேதிக்கவல்லரோ. (உகூ)

வ்யா.—(பரத்திலும் பரத்தையாதி) "[Grantha]" "பரபராணாம்பரம:" என்கிறபடியே - த்ரிவிதாத்ம வர்கத்துக்கு மவ் வருகான ஸ்வரூபவைலக்ஷண்யத்தையுடையையாய். அநந்தரம் "உரத்திலும் ஒருத்திதன்னைவைத்துகந்து" என்கிறவிது அந் விதமாகக் கடவது. கீழ்ச்சொன்ன ஸ்வரூப வைலக்ஷண்யத்துக்கும் அவ்வருகான உத்கர்ஷத்துக்கும் ஹேதுவாயிறே ச்ரியபதித்வமிருப்பது. (உரத்திலும்) சமுப்தத்தாலே - ஸ்வரூபாந்தர்ப்பாவத்தையும் ஸமுச்சயிக்கிறது. அதுக்குமேலே,மஹிஷீவர்க்கத்தையும் வ்யாவர்த்திக்கிறது. (ஒருத்தி) அத்விதீயை. "வடிவிணையில்லாமலர் மகள்." அதாகிறது - த்ரிவிதாத்மவர்க்கத்துக்கும் ஸ்வாமிநியாய் ஸர்வேம்வரனுக்கு ப்ரதாந மஹிஷியாயிருக்கை. (தன்னைவைத்து) "அகலகில்லேனிறையும்" என்று - மேல்விழக்கடவ விவள்தன்னை, தான் "இறையுமகலகில்லேன்" என்று திருமார்விலேவைத்து.(உகந்து)* துல்யசீலவயோவ்ர்த்தையாயிருந்துள்ளவளோடே ஸம்ம்லேஷரஸங்களை யநுபவிக்கிற நீ. (பௌவநீரணைக்கிடந்து) ரக்ஷ்யவர்க்கத்தினுடையரக்ஷணம்,பிராட்டிபக்கல்ப்ரீதிக்குப்போக்கு வீடாயிறே யிருப்பது. ஆர்த்தரக்ஷணத்துக்காக அநிருத்தரூபியாய்க் கொண்டு க்ஷீராப்தியிலே நீரோபடுக்கையாகக் கண் வளர்ந்தருளி. "[Grantha]" "தாபார்த்தோஜலசாயிநம்" என்கிறபடியே-தாபார்த்தர்க்குப் புகலாய்க்கொண்டு அபேக்ஷா நிரபேக்ஷமாகக் கண்வளர்ந்தருளுகிற நீர்மையைச் சொல்லுகிறது. இது - ஸங்கர்ஷணப்ரத்யும்ந வ்யூகங்களுக்கும் உபலக்ஷணம்.

இருபத்தொன்பதாம்பாட்டு. "பரத்தையாதி"என்றது, "பரத்தையாகி"என்றுபாடமாக வேணும்; கண்டுகொள்வது.சேஷசாயித்வம் உத்கர்ஷஹேது வாயிருக்க,"உரத்திலும்" எனகிற இப்பதத்தைநடுவே வைக்கவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (கீழ்ச்சொன்னஸ்வரூபேத்யாதி.) மஹிஷ்யந்தரத்துக்கு மார்பிலே அந்வயமில்லாவிட்டவாறே அவர்களையும் வ்யாவர்த்திக்கிறது. ரக்ஷணத்துக்காகக் கிடந்தால் ஸம்ம்லேஷத்துக்குக் கொத்தைவாராதோவென்ன; அருளிச்செய்கிறார் (ரக்ஷ்யவர்க்கத்தினித்யாதி.)

(அதன்றியும்) ஸம்ஸாரத்தில் அசித்கல்பமாய்க்கிடந்தசேதநர்க்கு ரூபநாமங்களைக்கொடுத்தும், ஶாஸ்த்ரப்ரதாநாதிகளைப்பண்ணியும், ப்ரஹ்மாதிகளுடைய ஆர்த்திகளைப்பரிஹரித்தும், இப்படி ரக்ஷித்துப்போந்த வ்யூஹாவதாரங்களாலே தேவரீருடைய அநுக்ரஹம் பர்யவஸியாமையாலே, அதுக்குமேலே. (நரத்திலும் பிறத்தி) "[illegible]" "ஸர்வகந்த:" என்கிறநீ ப்ரஹ்மாதிகளுககு ருத்ஸாவிஷயமான மநுஷ்யயோநிகளிலே தத்ஸஜாதீயனாய்க் கொண்டு ராமக்ருஷ்ணாதிரூபத்தாலேவந்தவதரித்து. இது, தேவயோநியிலும் திர்யக்யோநியிலுமுண்டான அவதாரங்களுக்கு முபலக்ஷணம். "[illegible]" "ஸுரநரதிர்யக்ஸாமவதீர்ந" என்னக்கடவதிறே. (நாத) இப்படி விஸஜாதீயமான ஹேயயோநியிலே வந்து அவதரிக்க வேண்டுகிறது இவற்றையுடையனுகையாலேயென்கை. (ஞானமூர்த்தியாயினாய்) ஜ்ஞாநஸ்வரூபனாயினாய். இப்போது ஜ்ஞாநாதிக்யம் சொல்லுகிறது ரக்ஷிக்கைக்கு விரகறியுமவனென்கைக்காக. ப்ராப்தியுண்டானாலும் விரகறியாதவன்று ரக்ஷிக்கப்போகாதிறே. சாஸ்த்ரப்ரதாநமென்ன, ஆசார்யோபதேசமென்ன, அழகென்ன, சீலமென்ன, ஏவமாதிகளாலே ஆச்ரயாநுகூலமாக ருசியைப் பிறப்பிக்க வேண்டும்படியிறே சேதநனுடைய ப்ரக்ருதிபேதமிருப்பது. (ஒருத்தரும் நினைதுதன்மையின்னதென்னவல்லரோ) வேதங்களென்ன, ஜ்ஞாநாதிகரான வைதிகரென்ன, இவர்களொருத்தரும் உன்னுடைய அநுக்ரஹத்தினுடைய எல்லையை ஏவம்விதமென்று பரிச்சேதிக்கவல்லரோ. தன்னையறியமாறி பகவத்ஸம்பந்தத்தை யறுத்துக்கொள்ளும் ஸம்ஸாரிகளை, தன்னை யழியமாறி ரக்ஷிக்கிற அநுக்ரஹத்தை எவரறியவல்லார். ... ... (௨௯)

அ.—முப்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-"நரத்திலும்பிறத்தி" என்று-மநுஷ்யயோநியில அவதாரங்கள் ப்ரஸ்துதமாகையாலும், அதுக்குககீழ்ப்பாட்டிலே, "அமுண்டுமிழ்ந்து" என்று - வடதளசாயியவதாரம ப்ரஸ்துத மாகையாலும, வடதளஶாயியுடைய மௌக்தயத்திலும் ஶக்தியிலும், சக்ரவர்த்திதிருமகனுடைய வவதாரத்தின மெய்ப்பாட்டால் வந்த மௌக்த்யத்திலும் வீரஶ்ரீயிலு மீடுபடுகிறார்.

வானகமும்மண்ணகமும்வெற்புமேழ்கடல்களும்
போனகஞ்செயதாலிலைத்துயின்றபுண்டரீகனே!
தேனகஞ்செய்தண்ணறுமலர்த்துழாய்நன்மாலையாய்!
கூனகம்புகத்தெறித்தகொற்றவில்லியல்லையே. (௩௦)

விரகறியவேண்டுவா னென்னென்ன; ருசிபேதத்தாலேயென்கிறார் (ஶாஸ்த்ரப்ரதாநமித்யாதி.) நினைது - உன்னுடைய. (௨௯)

ப-ரை.—வானகமும் - ஸ்வர்க்கலோகத்தையும், மண்ணகமும்-பூலோகத்தையும்-வெற்பும் - அந்த பூமிக்கு ஆதாரமான ஸப்தகுலபர்வதங்களையும், ஏழ் கடல்களும் - ஸப்தஸமுத்ரங்களையும், போனகஞ்செய்த - அமுதுசெய்தருளி, ஆலிலை-ஓராலந்தளிரிலே, துயின்ற-கண்வளர்ந்தருளினவனுடைய, புண்டரீகனே-தாமரைமலரையொத்தஅவயவங்களையுடையையாய், ஊரெல்லாம், தேன் அகம் செய-வண்டுகள் நெருங்கியிருப்பதாய், தண் - குளிர்ந்திருந்துள்ள, நல் - விலக்ஷணமான, மாலையாய்-திருமாலையையுடையவனே, கூன்-கூனியுடையகூன், அகம்புக-உள்ளேயடங்கும்படி, தெறித்த-சுண்டுவில்லைத்தெறித்தவனாய், சொற்றவில்லியல்லையே - ஜயப்ரதமானவில்லையுடையவனல்லையோ! என்று ஈடுபடுகிறார், (௯0)

வ்யா.—(வானகமும்மண்ணகமும்) ஸ்வர்க்கவாஸிகளான இந்த்ராதிதேவர்களும் அவர்களுக்கு போக்ய போகோபகரண போகஸ்தாநமான ஸ்வர்க்கந்தானும், பூமியிலுள்ளமநுஷ்யாதிகளும் அவர்களுக்கு வாஸஸ்தாநமான பூமியும். "మంచాః క్రోశన్తి" "மஞ்சாக்ரோஶந்தி" என்கிறபடியே தேஶவாசிசப்தத்தாலே - தேஶிகளையும் சொல்லுகிறது; ப்ரளயத்தில் ஆபந்நரானார்தேஶிகராகையாலே. இத்தால் - பூமியிலுள்ளார்க்கு ஆராத்யராய் அவர்களுக்கு அபிமத பலப்ரதருமானஇந்த்ராதிகளோடுஆராதகரான மநுஷ்யாதிகளோடு வாசியறப்ரளயாபத்தில் வந்தால் எல்லாருமொக்க ஈஶ்வரரைகரக்ஷ்ய பூதரென்கிறது. (வெற்பும்) அந்தபூமிக்காதாரமாயிருந்துள்ளஸப்தகுலபர்வதங்களும். இத்தால் - ஆதாரமான குலபர்வதங்களோடு ஆதேயமான பூமியோடுவாசியற தத்காலத்தில் ஈஶ்வரனே ஆதாரமென்கை. "வெற்பு" என்று - ஸ்தாவர ஜாதிக்கு முபலக்ஷணம். (ஏழ்கடல்களும்) த்வீபங்களுக்கு பேதகமான ஸப்த ஸமுத்ரங்களும். அத்தாலே - ஜலவாஸிஸத்வங்களைம் சொல்லுகிறது. ஆக, ஆராத்யரான இந்த்ராதிகளோடு, ஆராதகரான மநுஷ்யர்களோடு, தாரகங்களான பர்வதங்களோடு, தார்யையான பூமியோடு, ஸமுத்ரங்களோடு, ஜலசரஸத்வங்களோடு வாசியற ஸர்வேஶ்வரனேரக்ஷகனென்றதாய்த்து. "போனகஞ்செய்த" என்றது - ரக்ஷகனுக்கு ரக்ஷணதர்மம் பசியர்க்குச் சோறுபோலே அபிமதமாயிருக்குமென்கை. "యస్య బ్రహ్మ చ క్షత్రం చోభే భవత ఓదనమ్" "అత్తా చరాచరగ్రహణాత్" "யஸ்யப்ரஹ்மசக்ஷத்ரஞ் சோபே பவதஓதநம்," "அத்தாசராசரக்ரஹணாத." (ஆலிலைத்துயின்ற) அவ்வடிவுக்களவாய் தன்ஸௌகுமார்யத்துக்குச் சேர்ந்த ஆலந்தளிரிலே கண் வளர்ந்தருளின. (புண்டரீகனே) புண்டரீகாவயவனே. "செங்கனிவாய்ச் செங்கமலம் கண்பாதங்கைகமலம்" என்கிறபடியே-த்வயா வயவங்கள் அப்போதலர்ந்த செந்தாமரைகள்போலே யிருக்கையாலே புண்டரீகசப்தவாச்யனென்கிறது. த்ரைலோக்ய ரக்ஷணத்தால் வந்த ப்ரீதி திருவடிவிலே தோற்றி யிருக்கிறபடி.

(தேனகஞ்செய்) ஊரெல்லாம் வண்டுகளாலே மிடைந்திருக்குமென்னுதல்; மதுவாலே பூர்ணமாயிருக்குமென்னுதல். (தண்ணறுமலர்த்துழாய்) ச்ரமஹரமாய் பரிமளிதமாய்ச் செவ்வியையுடைத்தான திருத்துழாய். (நன்மாலையாய்) அவயவ சோபையிற்காட்டில்ஆகர்ஷகமாயிருக்கும்மாலையென்னுதல்; ரக்ஷணத்துக்கிட்ட தனிமாலை யாகையாலே விலக்ஷணமென்னுதல். ஆக, ஸத்தாப்ரயுக்தமான சக்த்யாதிசயத்தையும், அவயவசோபையையும், அலங்கார சோபையையும் அநுபவிக்கிறார். (கூன் அகம்புகதெறித்து) கூனியுடைய கூன் உள்ளே யடங்கும்படியாகச் சுண்டுவில்லைத் தெறித்த. இத்தால் - அவதாரத்தில் மெய்ப்பாட்டால்வந்த மௌக்த்யமும் ரக்ஷகமாயிருக்கு மென்கை. ரக்ஷகவஸ்துவாகில அதிலுள்ளதெல்லாம் ரக்ஷகமாயேயிருப்பது. (கொற்றவில்லியல்லையே) வில்பிடித்தபோது ஆக்கையையும் வில்லையும் கண்டபோதே ராவணாதிகள் குடல்குழம்பும்படியான வீரஸ்ரீயைச் சொல்லுகிறது. கொற்றம் - வென்றியும்; வலியும். "புண்டரீகனே - கொற்றவில்லியல்லையே" என்று-அவதாராந்தரமா யிருக்கச்செய்தேயும் தர்மைக்யத்தாலே பால்யயௌவனா த்யவஸ்தா விசேஷங்கள்போலே தோற்றுகிறதாய்த்து இவர்க்கு. இப்பாட்டுத்தொடங்கி, மேல் "மாயமென்னமாயம்" என்கிறபாட்டளவும் வர அதுவே க்ரியையாகக்கடவது. ... ... (௩0)

அ.—முப்பத்தோராம்பாட்டு. கீழ்ப்பாட்டில் - அவதாரங்களிலுண்டான ரக்ஷகத்வத்தை யநுபவித்தார்; இதில் - ஆச்ரயணோந்முகரானவர்கள்திறத்தில் அவதாரகார்யமான உபகாரபரம்பரைகளையநுபவிக்கிறார்.

காலநேமிகாலனே! கணக்கிலாதகீர்த்தியாய!
ஞாலமேழுமுண்டுபண்டோர்பாலனாயபண்பனே!
வேலைவேவவில்வளைத்தவெல்சினத்தவீரநின்
பாலராயபத்தர்சித்தம்முத்திசெய்யுமூர்த்தியே. (௩௧

ப-ரை.—காலநேமி-காலநேமியாகிற அஸுரனுக்கு, காலனே-ம்ருத்யுவாய், கணக்கிலாத - அஸங்க்யேயமான, கீர்த்தியாய்-ஸௌலப்யாதிகல்யாணகுணங்களையுடையனாய், ஞாலமேழும - ஸகலலோகங்களையும, உண்டு. திருவயிற்றிலேவைத்து, பண்டு - ப்ராவகல்பாவஸாநத்திலே, ஓர் பாலனாய - அதவிதீய பாலனான, பண்பனே - ஆச்சர்ய சக்தியையுடையனாய, வேலை-கடல், வேவ தக்தமாம்படி, வில்வளைத்த-வில்வளைத்தவனாய், வெல்சினத்த-பகைவரைவெல்லும் சினத்தையுடைய, வீர-வீரனே, நின்பாலராய - உன்விஷயத்தில் அநந்ய ப்ரயோஜநராய், பத்தர்சித்தம் - பக்திமான்களாயிருப்பவர்களுடைய மனஸில், முத்திசெய்யும் - "உன்னையொழிய வேறு ப்ராப்யப்ராபகங்களுண்டெ னும் நசையறுக்கவல்ல, மூர்த்தியே-மஹாப்ரபாவத்தையுடையவனே! இதெ வாச்சர்யமென்கிறார். (௩

முப்பதாம்பாட்டு. தேன் - வண்டாகவுமாம். கூன்நிமிர்ந் ரூபிணியாகையாலே ரக்ஷகமென்கிறது. (௩

வ்யா.—(காலநேமிகாலனே) காலநேமியாகிற அஸுரனுக்கும் ம்ர்த்யுவானவனே. இத்தால்-முமுக்ஷுக்களாய் தேவரீரை ஆஸ்ரயிக்கையிலே உத்யுக்தரானவர்களுடைய ஆச்ரயண விரோதிபாபங்களை, காலநேமியை நசிப்பித்தாப்போலே நசிப்பிக்குமவனென்கை. பிராட்டி பொறுப்பிக்க ஈஸ்வரன் பொறுக்குமாயிருக்கச் செய்தேயும், தாம் அதுக்கு அஞ்சினபடியாலே காலநேமியை த்ர்ஷ்டாந்தீகரிக்கிறாரிறே. (கணக்கிலாத கீர்த்தியாய்) ஆச்ரயணத்துக்குவகாந்தமாய், எண்ணிறந்த ஸௌலப்யாதி கல்யாண குணங்களை யுடையையென்னும குணவத்தாப்ரதையையுடையவனே. "குடந்தையன் கோவலன்" என்று - இந்த ஸௌலப்யாதிகள் பரத்வததிலும் ப்ரஸித்தமிறே. * அபாரகாருண்யந்தொடங்கி, "ஸௌந்தர்யமஹோததே" என்னக்கடவதிறே. (ஞாலமேழுமுண்டு பண்டோர் பாலனாய பண்பனே) ஆச்ரயித்தால் பண்ணுமுபகாரத்தைச் சொல்லுகிறது. ஸப்தத்வீபவதியான பூமியை யுண்டு பூர்வகல்பாவஸாநத்திலே அத்விதீயபாலனான ஆச்சர்யசக்தியைநிரூபகமாக வுடையவனே. பண்பு-இயல்வு. இது-த்ரைலோக்யத்துக்கு முபலக்ஷணம். இத்தால்-ஸ்வாதந்த்ர்யமே நிரூபகமாயப்போந்த ஸம்ஸாரியை மோக்ஷத்வமே நிரூபகமென்னும்படி பண்ணவல்ல சக்தியை யுடையவனென்கை. அதாகிறது-"ஸ்வாதந்த்ர்யமநுஸ்யூதம் ஸநமோயம்" "த்விதாபஜ்யேயமப்யேவம் நநமேயம்" என்றிருக்குமவனை, "ஸம்ஸாரோஹநவீசய:" "மஹாரத்தமபிஜீவாவ:" என்றும், "நின்னலாலிலேன்காண்" என்றும் சொல்லுமபடிபண்ணுமை.

(வேலைவேவவில்வளைத்த வெல்சினத்தவீர) கடல் சுஷ்கத்ர்ணஸமூஹம்போலே தகதமாம்படி. வில்வளைத்தவனாய், ப்ரதிபக்ஷத்தை வெல்லுஞ் சினத்தையுடைய வீரனே. இத்தால் - ஆச்ரிதர்க்கு ஸ்வாநுபவ விரோதிவர்க்கத்தை அநாயாஸேநப் போக்குமவனென்கை. (நின்பாலராயபத்தர் சித்தம் முத்திசெய்யும் மூர்த்தியே) உன்திறத்தில் அநந்யப்ரயோஜநராய், "ச்சாயாவா ஸத்வமநுகச்சேத்" "சாயாவாஸத்வ மநுகச்சேத" என்கிறபடியே - உன்பார்ஸ்வத்தை விடமாட்டாத பக்தர்களுடைய மநஸ்ஸு உன்னையொழிய வேறுப்ராப்யப்ராபகங்களுண்டென்னும் நசையறுக்க வல்லமஹாப்ரபாவத்தை யுடையவனே. இதென்ன வாச்சர்யமென்று வாக்யஸேஷம். ஆச்ரிதவிஷயத்தில் கீழுக்தமான தன்படிகளையநுஸந்தித்தால் அது தன்னையொழிய வேறொன்றை யறியாதபடிபண்ணுமவனென்கை. ... ... (௩௧)

அ.—முப்பத்திரண்டாம்பாட்டு. ஆச்ரிதவிரோதிநிரஸநம்பண்ணுமிடத்தில் சக்ரவர்த்தித்திருமகன் செவ்வைப்பூசலாலே ராக்ஷஸரையழியச் செய்தாப்போலே விரோதிவர்க்கத்தைப் போக்கவுமாம், மஹாபலிபக்கலிலே வாமநனாய் அர்த்தித்துச் சென்று வஞ்சித்தழித்தாப்போலே யழிக்கவுமாம், ஆச்ரிதவிரோதி நிரஸநத்தில் ஸ்வபாவநியதியில்லை யென்கிறார்.

குரக்கினப்படைகொடுகுரைகடலின்மீதுபோய்
அரக்கரங்கரங்கவெஞ்சரந்துரந்தவாதிநீ
இரக்கமண்கொடுத்தவற்கிரக்கமொன்றுமின்றியே
பரக்கவைத்தளந்துகொண்டபற்பபாதனல்லையே. (௩௨)

ப-ரை.—குரக்கினப்படைகொடு - ஸமூஹமான வாநர ஸேனையைக்கொண்டு, குரை - கோஷியாநின்றுள்ள, கடலின் - கடலில் அணைகட்டி, மீதுபோய் - அதின்மேலேபோய், லங்கையிலே ப்ரவேசிக்க, அங்கு - அந்த வாநரஸேனையைக் கண்டு, அரக்கர் - ராக்ஷஸர், அரங்க - அஞ்சும்படியாக, வெஞ்சரம் - அக்நிஸத்ருசங்களான திருச்சரங்களை, துரந்த - நடத்துகையாலே, ஆதிநீ - வீரர்களில் ப்ரதாநனான நீ, இரக்க - வாமநாவதாரஞ்செய்தருளி யஜ்ஞவாடத்திலே சென்று இரக்க, மண்கொடுத்தவற்கு - பூமியைத்தந்த மஹாபலிவிஷயத்திலே, ஒன்றும இரக்கமின்றி - சற்றேனும் இரக்கமில்லாமல், பரக்கவைத்து - திருவடிகளைப் பரப்பிவைத்து, அளந்துகொண்ட - பூமியையெல்லா மளந்துகொண்ட, பற்ப பாதனல்லையே - தாமரைமலரையொத்த திருவடிகளையுடையவனல்லையோ! இதென்ன ஆச்சர்யமென்கிறார். (௩௨)

வ்யா.—(குரக்கினப்படைகொடு) வாநர ஸமூஹமானஸேனை யைக்கொண்டு. (குரைகடலின்மீதுபோய) கடலின் கிளர்த்தியையு ம்கோஷத்தையுங்கேட்டு, "இக்கடலையெங்ஙனே கடக்கக்கடவோம்" என்று அந்தஸேனை பயப்படும்படி கோஷத்தையுடைத்தான கட லைத் தூர்த்து அதின்மேலேபோய. இத்தால் - ப்ரபலபதார்த்தங் களை க்ஷுத்ரபதார்த்தங்களைக் கொண்டு அழிக்கவல்லவனென்கை. (அரக்கரங்கரங்க) அவ்வபதாநத்தைக் கண்டு, "வரபலபுஜபலங்க ளால் நமக்கெதிரில்லை" என்றிருக்கும் ராக்ஷஸர், போக்கடிதேடி அஞ்சும்படியாக. அரக்கல்-கரத்தல். "அரங்க" என்று மெல்லொற் றுமிக்கிடக்கிறது. (வெஞ்சரந்துரந்த) "[illegible]" "பாவகஸங் காசை:" என்கிறபடியே அக்நிஸத்ருசங்களான திருச்சரங்களை நட த்தின. (ஆதிநீ) லங்கைக்கு அரணான ஸமுத்ரத்தைத்தூர்த்து, அர ணையழித்து, ராக்ஷஸருடைய ஹ்ருதயங்களை யழித்து, திருச்சரங்க ளாலேஉடல்களைத்துணித்துச்செய்த ஆனைத்தொழில்களாலேவீரர் களில் ப்ரதாநனான வீரன் நீயென்கிறார். ஆதிஶப்தம் - ப்ரதாநத் தைச் சொல்லுகிறது.

(இரக்க மண்கொடுத்தவற்கு) நீ அர்த்தியாய்ச் செல்ல ப்ரத்யாக்யாநம் பண்ணுதல், சுக்ரனுடைய உபதேஶங் கேட் டல் செய்யாதே, பூமியைத்தந்த மஹாபலிக்கு. (இரக்கமொன்று மின்றியே) பூமியில் அவனுக்கு ஒரு பதந்யாஸமும் ஶேஷியாத படி. (பரக்கவைத்தளந்துகொண்ட) சிறுக்காலைக் காட்டி மூன்றடி யிரந்து, இரண்டடியாலே பூமிப்பரப்படையவளந்துகொண்ட.

முப்பத்திரண்டாம்பாட்டு. ப்ரத்யாக்யாநம் - இல்லையென்கை ஔதார்யமுங் கொடுத்தவனன்றோவென்றுபாராமை. (௩௨

(பற்பபாதனல்லையே) புஷ்பஹாஸஸுகுமாரமான திருவடிகளைக் கொண்டுகாடுமோடையுமளந்துகொண்டவனல்லையோ. திருவடிகளின் ஸௌகுமார்யமும் பார்த்திலே, மஹாபலிபக்கல் ஔதார்யமும் பார்த்திலே, அர்த்திக்கிறவன் ப்ரயோஜநாந்தர பரனென்றும் பார்த்திலே, அந்த இந்த்ரனுடைய இரப்பையே பார்த்த இத்தனையிறே. இதென்ன ஆச்சர்யமென்று வாக்யசேஷம். ... ... (௩௨)

அ.—முப்பத்து மூன்றாம்பாட்டு. ஆச்ரிதரக்ஷணத்தில் ஸ்வபாவநியதியில்லாதவோபாதி ஆச்ரயிப்பார்க்கும் ஜாதிநியதியில்லை யென்கிறார்.

மின்னிறத்தெயிற்றரக்கன்வீழவெஞ்சரந்துரந்து
பின்னவற்கருள்புரிந்தரசளித்தபெற்றியோய்!
நன்னிறத்தொரின்சொலேழைபின்னைகேள்வ!மன்றுசீர்ப்
பொன்னிறத்தவண்ணனாயபுண்டரீகனல்லையே. (௩௩)

ப-ரா.—மின்-மின்னலையொத்த, நிறத்து - ஒளியையுடைத்தான, எயிறு-எயிற்றையுடைய, அரக்கன் - ராக்ஷஸனான ராவணன், வீழ - முடியும்படியாக வெம்-க்ரூரமான, சரந்துரந்து - சரங்களையேவி, பின்னவற்கு - அவன் தம்பியான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு, அருள்புரிந்து - க்ருபைசெய்து, அரசளித்த-ராஜ்யத்தைக்கொடுத்த, பெற்றியோய்-சீலவத்தையையுடையவனே, நல் நிறத்து-நல்லநிறத்தையும், ஓர் இன்சொல் - மிகவுமினிதான சொல்லையுமுடையளாய், ஏழை-தேவரீர்பக்கல் அதிசபலையான, பின்னை-நப்பின்னைப்பிராட்டிக்கு, கேள்வ-வல்லபனானவனே. மன்று - நித்யமான, சீர் - ஔஜ்ஜ்வல்யாதிகுணங்களையும், பொன்னிறத்த வண்ணனாய-ஸ்ப்ருஹணீயமான விக்ரஹத்தையுமுடைய, புண்டரீகனல்லையே - புண்டரீகாக்ஷனல்லையோ. (௩௩)

வ்யா.—(மின்னிறத்தெயிற்றரக்கன்) மின்போலே யொளியையுடைத்தான எயிற்றோடே கூடின ராக்ஷஸனான ராவணன். "மின்னிறத்தெயிறு" என்று - புஜபலத்தால வந்த செருக்குக்கு ஸூசகமா யிருக்கிறது. "அரக்கன்" என்கையாலே - அத்தோள்வலி பரஹிம்ஸைக்கேயாகை ஜாதிஸ்வபாவமா யிருக்கை. ஸத்ப்ரக்ருதிகளுடையதோள்வலியிறே ஸாத்விகர்க்கு ஒதுங்க நிழலாயிருப்பது. (வீழவெஞ்சரந்துரந்து) அவன் முடியும்படியாக * பர்வத ஸங்காசங்களான சரங்களையேவி. (பின்னவற்கருள்புரிந்தரசளித்த பெற்றியோய்) அவன்தம்பிக்கு ப்ரஸாதத்தைப் பண்ணி ராஜ்யத்தைக்கொடுத்த சீலவத்தையையுடையவனே. "राघवं शरणं गतः" "ராகவம்சரணங்கத:" என்ற அதனையே கொண்டு ஸ்ரீவிபீஷணாழ்வானை அவன்தம்பியென்று பாராதே, "वध्यतां, वध्यताम्" "வத்யதாம், வத்யதாம்" என்ற மஹாராஜ ப்ரப்ருதிகள்வார்த்தையையுங்கேளாதே, "न त्यजेयम्" "एतद्व्रतं मम" "நத்யஜேயம்" "ஏதத்வ்ரதம்மம" என்று - ப்ரஸாதத்தைப்பண்ணி, ராஜ்யஸ்பர்சஹ அவனுக்கின்றிக்கே யிருக்க, "दासवच्चावमानितः" "தாஸவச்சாவமாநித:" என்று-புறப்படவிட்டானென்று அந்த லங்காராஜ்யத்தைக் கொடுப்பதே!, இதென்ன ஸ்வபாவமென்கிறார். பெற்றி-ஸ்வபாவம்.

(நன்னிறத்தோரின்சொலேழை பின்னைகேள்வ) நல்லநிறத்தையும், இனியபேச்சையுமுடையவளாய், தேவரீர்பக்கல் அதிசபலையான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனானவனே. இத்தால்-நப்பின்னைப்பிராட்டியுடைய ரூபகுணங்களும் ஆத்மகுணங்களும் தேவரீர்க்கு போக்யமாயிருக்குமாப்போலே, ஸ்ரீவிபீஷணாழ்வான்தேவரீர்க்குபோக்யனாயிருக்கும்படியைச்சொல்லுகிறது. (மன்னுசீர்ப்பொன்னிறத்த வண்ணனாய புண்டரீகனல்லையே) நித்யமான ஔதார்யாதி குணங்களையும், "[illegible]" "அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே" என்றும், "[illegible]" "ருக்மாபம்" என்றும் சொல்லுகிற ஸ்ப்ருஹணீயவிக்ரஹத்தையுமுடையையாய், "[illegible]" "யதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிறபடியே புண்டரீகாக்ஷனாயிருக்கிறவனல்லையோ. இதென்ன வாஶ்சர்யமென்று வாக்யஶேஷம். நிறம்-வடிவு. வண்ணம்-நிறம் ஆக, அவயவஶோபையையும் வர்ணசோபையையும் சொல்லுகிறது. இத்தால்-ஆதித்யமண்டல மத்யாவதாரத்தின் ஆத்மகுணங்களும ரூபகுணங்களும் மஹர்ஷிவர்க்கத்துக்கு போக்யமாயிருக்குமாப்போலே, ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு போக்யபூதனாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது. ... (௩௩)

அ.—முப்பத்துநாலாம்பாட்டு. கீழ்ப்பாட்டில்-ருசியுடைய விபீஷணாழ்வானை ஜந்மத்தால்தாழ்வுபாராதே விஷயீகரிக்கும் சக்ரவர்த்திதிருமகனுடைய நீர்மையையநுபவித்தார்; இதில் - கார்யகாரணங்களென்ன, ப்ரமாண ப்ரமேயங்களென்ன, ஸகலமும் ஸ்வாதீநமாம்படியிருக்கிற நீ புருஷார்த்தருசியில்லாதார்க்கு ருசிஜநகனாய்க் கொண்டு கோபஸஜாதீயனாய்வந்தவதரித்த விதென்னவாச்சர்யமென்கிறார்.

ஆதியாதியாதிநீயோரண்டமாதியாதலால்
சோதியாதசோதிநீயதுண்மையில்விளங்கினாய்;
வேதமாகிவேள்வியாகிவிண்ணினோடுமண்ணுமாய
ஆதியாகியாயனாயமாயமென்னமாயமே. (௩௪)

ப-ரை.—ஆதியாதியாதிநீ-த்ரிவிதகாரணமுமநீ; ஓரண்டமாதி-ஏகரூபமான அண்டஜாதியுமாகிறாய்; ஆதலால்-இப்படி ஸகலஜகத்காரணபூதனாகையாலே, சோதியாத-பரிக்ஷிக்கவேண்டாத, சோதிநீ - தேஜஸ்தத்வம்நீ; அது - அந்த தேஜஸ்தத்வம் நித்யநிரஸ்ததோஷமாகையாலே, உண்மையினை-இதரவிஸஜாதீயனாய்க்கொண்டு, விளங்கினாய்-விளங்கினவனே, வேதமாகி - நித்யநிரஸ்ததோஷமானவேதத்துக்கு நிர்வாஹகனாய், வேள்வியாகி - தத்தமான யாகத்துக்கு நிர்வாஹகனாய், மண்ணும்-போகபூமிக்கும், விண்ணினோடு - மோக்ஷபூமிக்கும் நிர்வாஹகனாய், ஆதியாகி - இதர ருசிஜநகனாய்க்கொண்டு, ஆயனாயமாய - கோபஸஜாதீயனாய் அவதரித்த ஆச்சர்யம், என்னமாயம்-என்ன ஆச்சர்யமெ

[illegible] ([illegible]

வ்யா.—(ஆதியாதியாதி நீ) "సదేవ సోమ్యేదమగ్ర ఆసీత్, ఏకమేవాద్వితీయమ్" "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத், ஏகமேவாத்விதீயம்" என்கிறபடியே த்ரிவிதகாரணமும் நீ. எதுக்குக்காரணமாகிறதென்னில்; மஹதாதிவிசேஷாந்தமான ப்ராக்ருதஸ்ருஷ்டிக்கு "బహుస్యామ్" பஹுஸ்யாம்" என்கிற ஸங்கல்பத்தாலே காரணபூதன். (ஓரண்டமாதி) மஹதாத்யவஸ்தனை நீயே ஏகரூபமான வண்டஜாதியுமாவுதி. "ఈశ్వరాణామ్" "ஈத்ரஶாநாம்ததா" என்கிறபடியே அண்டங்கள் ஏகரூபமாயிறே யிருப்பது. ஏகவசநம்-ஜாத்யபிப்ராயத்தாலே. அதாகிறது - அண்டத்தில் உத்பந்நமான ப்ரஹ்மாதி பிபீலிகாந்தமான ஸகலபதார்த்தங்களையும் ஸ்ருஷ்டித்து, தத்அநுப்ரவேசத்தாலே ஸகலாந்தர்யாமியாய் நிற்கை. (ஆதலால் சோதியாதசோதி நீ) இப்படி ஸகலஜகத்காரணபூதனாகையாலே பரிக்ஷிக்க வேண்டாத உபாஸ்யதேஜஸ்தத்வம் நீ. உபாஸ்யமான தேஜஸ்தத்வம் - த்ரிவித மஹாபூதமோ, தேவதையோ, ஆதித்யனோ, வைஶ்வாநராக்நியோ வென்று சங்கித்து, ஸர்வநிர்வாஹகமான தேஜஸ்தத்வமே யுபாஸ்யமென்று நிர்ணயிர்க்கவேண்டாதிருக்கை. "అథ యదతః పరో దివో జ్యోతిః" "తం దేవా జ్యోతిషాం జ్యోతిః" "నారాయణ పరో జ్యోతిః" "அதய தத: பரோதிவோ ஜ்யோதி:" "தம்தேவாஜ்யோதிஷாஞ்ஜ்யோதி:" "நாராயணபரோஜ்யோதி:" என்கிற தத்வமல்லையோ நீ (அதுண்மையில் விளங்கினாய்) அந்ததேஜஸ்தத்வம் நித்யநிர்த்தோஷப்ரமாணஸித்தமாகையாலே, இதரவிஸஜாதீயனாய்க்கொண்டு விளங்கினவனே.

(வேதமாகி) வேதத்தினுடைய நித்யநிர்த்தோஷத்வத்துக்கு நிர்வாஹகனாய். அதாவது - ஸம்ஹாரவேளையில் திருவுள்ளத்திலே ஸமஸ்காரத்தாலே வைத்து, "యో వై వేదాంశ్చ ప్రహిణోతి తస్మై" "யோவை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்கிறபடியே ஆதியிலே வேதத்துக்கு அத்யாபகனானை. (வேள்வியாகி) ததர்த்தமான யாகத்துக்கு நிர்வாஹகனானவனே. அதாவது - ஆராத்யனானை. (விண்ணின்றொடுமண்ணுமாய்) ஆராதநபலமான போகமோக்ஷபூமிகளுக்கு நிர்வாஹகனாய. "விண்" என்று-பரமபதம. "மண்" என்று-சதுர்த்தசபுவநத்துக்கு முபலக்ஷணம். யாகம் அந்யோந்ய விருத்தங்களான போகமோக்ஷங்களிரண்டுக்கும் ஸாதநமாமோ வென்னில்; ஜீவபராயாதாத்ம்யஜ்ஞாநபூர்வகமான யாகம் மோக்ஷத்துக்கும், கேவலயாகம் போகத்துக்கும ஸாதநமாகையாலே அவிருத்தம். (ஆதியாகி) இதெல்லாம் ருசியுடையவனுக்கநுகமன்றே; அந்தருசிஜநகனாயக்கொண்டு. (ஆயனாயமாய மென்னமாயமே) அதீந்த்ரியமான இவ்விக்ரஹத்தை கோபஸஜாதீயமாக்கி ருசியில்லாதார்க்கு ருசிஜனகமாய்க்கொண்டு வந்தவதரித்த விது என்ன வாஶ்சர்யம். (௩௪)

முப்பத்துநாலாம்பாட்டு. த்ரிவித மஹாபூதம் - ஆகாஶமும், அக்நியும், வாயுவும். ... ... (௩௪)

அ.—முப்பத்தஞ்சாம்பாட்டு. அதீந்த்ரியமான திவ்யவிக்ரஹத்தை கோபஸஜாதீயமாக்கி, ருசியில்லாதார்க்கு ருசிஜநகனாய்க்கொண்டு அவதரித்த வேற்றத்தை யநுபவித்தார்-கீழ்ப்பாட்டில்; இதில்-ஒரு கோபஸ்த்ரீக்குக் கட்டவும் அடிக்கவும் விடவுமாம்படி நியாம்யனான குணதிக்யத்தை யநுஸந்தித்து, திரியவும் க்ருஷ்ணாவதாரத்திலே யீடுபடுகிறார்.

அம்புலாவுமீனுமாகியாமையாகியாழியார்
தம்பிரானுமாகிமிக்கதன்புமிக்கதன்றியும்
கொம்பராவுநுண்மருங்குலாயர்மாதர்பிள்ளையாய்
எம்பிரானுமாயவண்ணமென்கொலோவெம்மீசனே. (௩௫)

ப-ரை.—ஆழியார் தம்பிரானுமாகி - திருவாழியையுடைய ஸர்வாத்மகனானவன், அன்புமிக்கு - சேதநர்பக்கல் ஸ்நேஹாதிசயத்தாலே, அம்பு - ஜலத்திலே, உலாவு-வர்த்திக்கிற, மீனுமாகி-மத்ஸ்யமாய், அம்ருதமதநவேளையிலே மந்தராதாரணார்த்தமாக, ஆமையாகி-கூர்மமாய், மிக்கது - மிகத் தாழ்ந்ததையும் அவதரித்தது; அன்றியும்—, கொம்பு-பூங்கொம்பு போலேயும், அரா-ஸர்ப்பம் போலேயும், நுண்-ஸூக்ஷ்மமான, மருங்குல் - இடையையுடைய, ஆயர்மாதர் பிள்ளையாய்-யசோதைப்பிராட்டிக்குப்பிள்ளையாய், எம்பிரானுமாயவண்ணம்-எங்களை அநந்யார்ஹமாக்கிக்கொண்டது, என்கொல் - என்ன ஆச்சர்யம், எம்மீசனே - எங்களுக்கு நியந்தாவானவனே! என்று ஈடுபடுகிறார். (௩௫)

வ்யா.—"ஆழியார் தம்பிரானுமாகி - அம்புலாவு மீனுமாகி யாமையாகி - மிக்கது" என்று அந்வயமாகக் கடவது. "ஸஹஸ்ரமூர்த்தா புருஷ: ஸஹஸ்ராக்ஷ:" "தமஸ: பரமோ தாதா சங்கசக்ரகதாதர:" என்கிறபடியே ஸர்வேச்வரத்வஸூசகமான திருவாழியையுடைய ஸர்வாதிகனுமாய் வைத்து. (அம்புலாவுமீனுமாகி) அம்பிலே வர்த்திக்கிற மத்ஸ்யமாய். அம்பை, "அம்பு" என்று மெலித்துக்கிடக்கிறது. "முதுகில் மலைகளை மீதுகொண்டு வருமீனை" என்கிறபடியே ப்ரளயார்ணவத்திலே நோவுபட்டதேவர்களுடைய ஆபத்தைப் போக்குகைக்காகத் தன்னிலமான நீரிலே ஸஞ்சரிக்கக்கடவதான மத்ஸ்யமுமாய். சமப்பத்ததாலே - தேவயோநி மநுஷ்யயோநிகளில் பண்ணின அவதாரங்களால் பர்யவஸியாத அநுக்ரஹாதிசயத்தைச் சொல்லுகிறது. (ஆமையாகி) அம்ருதமதநவேளையிலே மந்தராதாரணார்த்தமாக கூர்மமாய். "கூர்மம் பூதம் ஸர்ப்பந்தம்" "கூர்மம் பூதம் ஸர்ப்பந்தம்" என்கிறபடியே ப்ரளயவேளையில் கூர்மவிக்ரஹத்தைச் சொல்லிற்றாகவுமாம். (மிக்கது) க்ஷுத்ரயோநியொன்றும் பாபயோநியொன்றும் பாராதே கைகழிய வவதரித்தது. (அன்புமிக்கு) ஆச்ரிதராய், அவதாரங்களுக்கு நிமித்தபூதரான சேதநர்பக்கலுண்டான ஸ்நேஹாதிசயத்தாலே யவதரித்த விதனையிறே. ஒருகூர்மம்ப்ரோரிக்கவாதல், ஒருநாத்தாப்ரீரிக்கவாதல்லாறிறே; "மீனோடாமை முந்தானானென்னில் தானாயசங்கு" என்னக்கடவதிறே. (அன்றியும்) அதுக்குமேலே ஸுஸிபோக்யமான வடிவை ஜலசரஸத்வஸஜாதீயமாக்குவதே! என்று அதிலேயீடுபட்டாயத்து இவர்தாமிருப்பது

அதிற்காட்டிலும் க்ர்ஷ்ணாவதாரத்தில் குணாதிக்யம் தம்மை யீடுபடுத்தினபடியைச் சொல்லுகிறார்மேல் (கொம்பராவு நுண் மருங்குலாயர்மாதர்பிள்ளையாய்) கொம்புபோலேயும் அரவுபோலேயும் நுண்ணிய இடையையுடைய அசோதைப்பிராட்டிக்குப்பிள்ளையாய். மத்ஸ்யாத்யவதாரங்களில் ரக்ஷணத்திலே தன்ஸ்வாதந்த்ர்யங்கள் குலைந்ததில்லை; இதில் ஒருகோபஸ்த்ரீக்குக்கட்டவும் அடிக்கவுமாம் படி நியாம்யனாயவந்தவதரித்தகுணாதிக்யமுண்டிறே, "ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம்" என்கிற ஸ்வரூபமும் அழிந்ததிறே இதில். அவதாரங்களில் ஸ்வரூபத்தையுமழியமாறின வித்தனையிறே. (எம்பிரானுமாயவண்ணமென்கொலோ) அவர்களுக்குக் கட்டவுமடிக்கவுமாம்படியான நீர்மையைக்காட்டி எங்களை அநந்யார்ஹமாக்கிகொண்டதென்செய்தபடி. பஹுவசநத்தாலே - மற்ற ஆழ்வார்களையும் கூட்டிக்கொள்ளுகிறார். (எம்மீசனே) அறிந்தோம் - எங்களுடைய விழவுபேறுகள் உன்னதென்னுமபடியான ஸம்பந்தத்தாலே. (௩௫)

அ.—முப்பத்தாறும்பாட்டு. கீழ்ச்சொன்ன பாரதந்த்ர்யத்தை அநுபாவித்து அவ்வவதாரங்களின் ஆச்சர்ய சேஷ்டிதங்களிலே யீடுபடுகிறார்.

ஆடகத்தபூண்முலையசோதையாய்ச்சிபிள்ளையாய்ச்
சாடுதைத்ததோர்புள்ளதாவிகள்ளதாயபேயமகள்
வீடவைத்தவெய்யகொங்கையையபாலமுதுசெய்
நாடகக்கைமாதர்வாயமுதமுண்டதென்கொலோ. (௩௬)

ப-ரை.—ஆடகத்த - பொன்னாற்செய்த, பூண் - ஹாரத்தால அலங்க்ருதமான, முலை - ஸ்தநங்களையுடையளான, ஆய்ச்சி - இடைச்சியான, அசோதை - யசோதைப்பிராட்டிக்கு, பிள்ளையாய — முலைவாய்வழியமுதுசெய்த நின்னுடைய திருவடிகளாலே, சாடு - சகடாஸுரனை, உதைத்து - உதைத்து முறித்து, ஓர் - ஒப்பற்ற, புள்ளதாவி - புள்ளினுருத்தையுடையவனாய, கள்ளதாய - க்ருத்ரிமத்தாயான, பேய்மகள் - பூதனையானவள், வீட - நீயழியுமபடிக்கோ, வைத்த - உனதிருப்பவளத்திலேவைத்த, வெய்யகொங்கை - க்ரூரமானமுலையிலுள்ள, ஐய - ஸூக்ஷ்மமான ப்ராணனை க்ரஹிக்கவல்ல, பால - பாலை, அமுதுசெய்து - அமுதுசெய்தருளி, நாடகம் - ஸ்வாநுபவங்களால் அலங்க்ருதமான, கை - கைகளையுடையரான, மாதர்வாயமுதம் - ஸ்த்ரீகளின அதராம்ருதத்தை, உண்டது - புஜித்தது, என்கொலோ - அவ்விஷத்துக்கு பரிஹாரமாகவோவென்கிறார். (௩௬)

வ்யா.—(ஆடகத்தபூண்முலையசோதையாய்ச்சிபிள்ளையாய) "கொம்பராவு நுண்மருங்குலாயர் மாதாபிள்ளையாய" என்றதுதன்னையே முகபேதத்தாலேயநுபவிக்கிறார். (ஆடகத்தபூண்முலை) பொன்னாலே செய்த ஹாரத்தாலே அலங்க்ருதமான முலையை யுடையவள். "க்ர்ஷ்ணன அமுதுசெய்யக்கடவன்" என்று முலையை யொப்பித்துக்கொண்டு நிற்கிறாளாயத்து - அவள்; அந்தப்ரேமத்தை யநுபவிக்கிறாரிறே-இவர். "ஆயர்மாதர் பிள்ளையாய" என்ற ஸாமாந்யத்தை, "அசோதையாய்ச்சிபிள்ளையாய்" என்று விசேஷிக்கிறார்.

முப்பத்தாறும்பாட்டு. "ஆடகம்" என்றது - ஹாடகமாய், அத்தால் - பொன்னைச் சொல்லுகிறது.

ஸர்வநியந்தாவானவன், ஓரிடைச்சி, "என்மகன்" என்றுநியமிக்கலாம்படியிருக்கிற ஆச்சர்யத்தில்நின்றும் கால்வாங்கமாட்டுகிறிலர். (சாடுதைத்து) ஸ்தந்யார்த்தியாய்த்திருவடிகளைநிமிர்த்து ஶகடாஸுரனைநிரஸித்து. "𑌧𑌨𑌂 𑌮𑌦𑍀𑌯𑌂 𑌤𑌵 𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌮𑍍" "தநம்மதீயம் தவபாதபங்கஜம்" என்றும், "கோலமாமென் சென்னிக்கு" என்றும்- அநந்யப்ரயோஜநர்க்குப்ராப்யமானதிருவடிகளை துஷ்ப்ரக்ருதிகளுக்குவத ஸாதநமாக்குவதே! என்கை. (ஓர்புள்ளதாவிகள்ளதாயபேய்மகள்) பிள்ளைகளனுங்கஸஞ்சரிக்கும்புள்ளின் கருத்தையுடையளாய், அபூர்வையென்றுசங்கித்து விலங்கவொண்ணாதபடி க்ருத்ரிமஜநநியான பேய்ப்பெண். "ஓர்புள்" என்று - தப்பவொண்ணாதபடி யனுங்கப்பண்ணும் புள்ளென்றபடி.

(வீடவைத்த வெய்யகொங்கை) ஜகஜ்ஜீவநமான வுன்திறத்திலே தீங்கைவிளைப்பாளாகத் திருப்பவளத்திலேவைத்த க்ரூரமான முலையில். (ஐயபால் அமுதுசெய்து) ஸூக்ஷ்மமான ப்ராணனைப்புக்குக்ரஹிக்கவல்ல அதிஸூக்ஷ்மமானபாலை யமுதுசெய்து. அவள் தன்னுடையக்ரௌர்யத்தையும், ஸ்தநத்தினுடைய க்ரௌர்யத்தையும்பிரித்துப்பேசுகிறாராய்த்துத் தம்முடைய பயாதிசயத்தாலே. "ஐய" என்றுஸம்போதநமாகவுமாம். பூதனையைத் தாயென்று மௌக்த்யத்தாலே அவள்முலையை யமுது செய்தான். ப்ரகாசஸந்நிதியில் தமஸ்ஸுப்போலே துஷ்ப்ரக்ருதிகள் நசிக்கும் தர்மி ஸ்வபாவத்தாலே. அத்தலையித்தலையான வித்தனை. (ஆடக்கைமாதர்வாயமுதமுண்டதெனகொலோ) அப்பருவத்திலே "உன்னையுமொக்கலையில் கொண்டு" என்னுமாப்போலே, அவ்வூரில கந்நிகைகள் தங்கள்க்ருஹத்திலே கொண்டுபோக, யௌவநதசையைப் பரிக்ரஹித்து வித்தனாய்க்கலந்து அவர்கள் வாகம்ருதத்தையுண்டவிதுவென்னே. (ஆடக்கைமாதர்) பொன்னாலே யலங்கரித்த கைவளையையுடைய பெண்கள். அவனைப் பிடிக்குங்கையென்றும், அவனணைக்கும் கொங்கையென்றும் அலங்கரிக்கிறார்களாய்த்து. "என்கொலோ" என்றது - அவ்விஷத்துக்கு இவ்வாகம்ருதம் பரிஹாரமோ, ஸர்வாதாரனாய் வேறுதாரகாந்தரமன்றிக்கேயிருக்கிற உனக்கு ப்ரதிகூலா ப்ராணனும் அநுகூலர்ப்ரேமமும தாரகமாயிருக்கிறதோ. பால்யாவஸ்தையிலே யுவாவாயும், யுவாவான நீபாலனாயுமிருந்த விது என்னவாச்சர்யமென்கிறார் ... ... (௩௬)

அ.—முப்பத்தேழாம்பாட்டு. பின்பு க்ருஷ்ணாவதாரத்தில் வித்தசேஷ்டிதங்களையும முக்தசேஷ்டிதங்களையும அநுபவிக்கிறவர், மௌக்த்யத்தாலும ஸௌலப்யத்தாலும் வளையாதே எல்லாரையும் தீண்டினபடியாலும் க்ருஷ்ணாவதார ஸத்ருசமான வடதளசாயியையும், ஸ்ரீவராஹவாமந ப்ராதுர்ப் பாவங்களையும, க்ருஷ்ணாவதாரத்தோடொக்க வநுபவிக்கிறார்.

(புள்ளதாவி) ஆவி-மநஸ்ஸு. புள்ளாவது-பறவை. "𑌬𑌕𑌃" "தகாஷம்" என்கிற பக்ஷியிலே ஒருகொக்குவிசேஷம். ... (௩௬)

காய்த்தநீள்விளங்கனியுதிர்த்தெதிர்ந்தபூங்குருந்தம்
சாய்த்துமாபிளந்தகைத்தலத்தகண்ணனென்பரால்
ஆய்ச்சிபாலையுண்டுமண்ணையுண்டுவெண்ணெயுண்டுபின்
பேய்ச்சிபாலையுண்டுபண்டொரேனமாயவாமனா. (௯௭)

ப-ரை.—க்ருஷ்ணன்மேலே விழுகைக்குறுப்பாக, காய்த்த - பரப்புமாறக் காய்த்து, நீள்-ஓங்கிநின்ற, விளங்கனி-விளாவான அஸுரனுடைய கனிகளை, உதிர்த்து-கன்றைவிட்டெறிந்து உதிர்த்து, எதிர்ந்த-போராதே நின்ற, பூ-புட்டாககிட பூத்துக்கிடக்கிற, குருந்தம்- குருந்தமரத்தை, சாய்த்து-வேரோடே பறித்துவிழ விட்டு, மா-கேசியை, பிளந்த-இருகூறாகப்பிளந்துபோகட்ட, கைத்தலத்த-திருக்கையையுடைய, கண்ணனென்பர்-க்ருஷ்ணனென்று வ்யாஸபராசராதிகள்சொல்லாநின்றார்கள்; ஆய்ச்சி-யசோதைப்பிராட்டியுடைய, பாலையுண்டு-பாலையமுது செய்து, வெண்ணெயுண்டு - வெண்ணெயை யமுதுசெய்து, பேய்ச்சி - தாய் வடிவுகொண்டு வஞ்சகையாய்வந்த பூதனையுடைய, பாலையுண்டு-முலைப்பாலை யமுது செய்து, பின் - கல்பாவஸாநத்திலே, சிறிய திருவயிற்றிலே, மண்ணை யுண்டு - ஜகத்தையடைய அமுதுசெய்து, பண்டு-கல்பாதியிலே, ஓர்-அத்விதீயமான, ஏனமாய - வராஹாவதாரஞ்செய்தருளி பூமியை யெடுத்து ரக்ஷித்து, அந்த பூமியை மஹாபலி அபஹரிக்க, வாமனா - வாமநாவதாரஞ் செய்தருளி அளந்துகொண்டவனே! என்று சொல்லுகிறார். (௯௭)

வ்யா.—(காய்த்தநீள் விளங்கனியுதிர்த்து) க்ருஷ்ணன்மேலே விழுகைக்குறுப்பாகப் பரப்புமாறக்காய்த்து ஓங்கிநின்ற விளாவான அஸுரனுடைய கனிகளை, கன்றைவிட்டெறிந்து உதிர்த்து. (எதிர்ந்த பூங்குருந்தம் சாய்த்து) விளாவான அஸுரனையழியச் செய்து, க்ருஷ்ணன் கிட்டின பின்பும் போராதே நின்ற பூங்குருந்தை ஊசி வேரோடே பறித்து விழவிட்டு. இதுவும் அவன்மேலே விழுந்து புஷ்பாபசயம்பண்ணுகைக் குறுப்பாகப்பரப்புமாறப் பூத்துநின்ற தாய்த்து. இவையிரண்டாலும் - அநுகூல வேஷராய் நலியவந்த அஸுரர்களை யழியச்செய்தபடி சொல்லிற்று.(மாபிளந்த)ப்ரதிகூலரூபேண வாய்பாறி ஊரையழிக்கவந்த கேசியை அநாயாஸேந இருகூறாகப்பிளந்து அவ்வாபத்தைப்போக்கினவன். (கைத்தலத்தகண்ணனென்பரால்) ஓராயுதத்தாலன்றிக்கே லீலையாகவழித்த திருக்கையையுடைய க்ருஷ்ணனென்று ஜ்ஞாநாதிகரான வ்யாஸபராசராதிகள் சொல்லாநிற்பர்கள். (ஆய்ச்சிபாலை யுண்டு மண்ணை யுண்டு வெண்ணெயுண்டு பின்பேய்ச்சிபாலையுண்டு) (ஆய்ச்சிபாலையுண்டு-வெண்ணெயுண்டு) யசோதைப்பிராட்டியுடைய பாலையும் வெண்ணெயையும் அமுதுசெய்து. இத்தால் - "ஜிஷ்ணு:" என்கிறதத்வத்துக்கு ஆச்ரிதஸ்பர்சமுள்ளதொரு த்ரவ்யத்தாலன்றிக்கே செல்லாதிருக்கிறபடியைச் சொல்லிற்று (பேய்ச்சிபாலையுண்டு) தாய் வடிவுகொண்டு விநாசகையாய் வந்த பூதனையினுடைய முலையையமுது செய்து அவ்வழியாலே அவளைமுடித்து. யசோதையினுடைய பாலோபாதி பூதனையுடைய ப்ராணனும் தாரகமாயிருக்கிறபடி.

(பின்மண்ணையுண்டு)க்ர்ஷ்ணனுடைய மௌக்த்யத்தை யநுபவித்தஸமநந்தரம் தத்ஸத்ர்சமான வடதளஶாயியுடைய மௌக்த்யத்தையநுபவிக்கிறார். சல்பாவஸாநத்திலே சிறியதிருவயிற்றிலே ஜகத்தையடைய வமுதுசெய்தால் ஸாத்மியாதென்றறியாதமௌக்த்யமிறே வடதளஶாயியுடைய மௌக்த்யம். (பணைசேரேனமாயவாமனு)கலபாதியிலே ஸ்ரீவராஹமாய, ஒருத்தர் அர்த்தியாதிருக்க பூமியையெடுத்து ரக்ஷித்து, அந்தபூமியை மஹாபலியபஹரிக்க ஸ்ரீவாமநனுயளந்துகொண்டவனே. தன்னையழியமாறி ரக்ஷித்தஸௌலப்யத்துக்கும், வரையாதே எல்லாரையுநீண்டின ஶீலத்துக்கும் க்ர்ஷ்ணுவதாரத்தோடு ஸாம்யமுண்டாகையாலே இவ்வவதாரங்களையநுபவிக்கிறார.... ... . (கூஎ)

அ.—முப்பத்தெட்டாம்பாட்டு. "[illegible]" "பரித்ராணுயஸாதூநாம் விநாஶாய சதுஷ்க்ர்தாம்" என்கிறபடியே - ப்ரதிகூலரை யழியசெய்தும் அநுகூலரை யநுபவித்தும்செய்தருளின க்ர்ஷ்ணுவதாரசேஷ்டிதங்களையநுபவிக்கிறார்.

கடங்கலந்தவன்கரிம ருப்பொசித்தோர்பொய்கைவாய்
விடங்கலந்தபாம்பின்மேல நடம்பயின்றநாதனே!
குடங்கலந்தகூத்தனுயகொண்டல்வண்ணதண்டுழாய
வடங்கலந்தமாலைமார்பகாலநேமிகாலனே. (கூஅ)

ப-ரை.—கடம் கலந்த - மதஜலம் வ்யாப்தமானவுடம்பையுடைய, வன் - அதிப்ரபலமாயிருந்த, கரி-குவலயாபீடமென்னும் யானையினுடைய, மருப்பு-கொம்பை, ஒசித்து - முறித்து, ஓர் - அதிபயங்கரமாகையாலே அத்விதீயமான, பொய்கைவாய் - பொய்கையிலே, விடம்கலந்த - மிக்கவிஷத்தையுடைய, பாம்பின்மேல-காளியனுடைய பணங்களின்மேலே, நடம்பயின்ற - ந்ர்த்தஞ்செய்தருளி, அத்தாலே, நாதனே - உன்னுடையநாதத்வத்தைப்ரகாசிப்பித்தவனே, கலந்த-கையில்பொருந்தின, குடம்-குடத்தையுடையனுய், கூத்தனுய-ஜாதிப்ரயுக்தமான கூத்தை யுடையனுய், கொண்டல் வண்ண - காளமேகநிபச்யாமமான வடிவையுடையனுய், தண்-குளிர்ந்த, துழாய்வடம் - திருத்துழாய்வடத்தோடும், மாலைகலந்த-வநமாலையோடுங்கூடின, மார்ப - திருமார்பையுடையவனுய, காலநேமி-தேவர்களுக்கு விரோதியான காலநேமிக்கு, காலனே-மாத்யுவானவனே! என்று அவனுடைய ஆச்ரிதபக்ஷபாதாதிசயத்தைஅநுபவிக்கிறார். ()

வ்யா.—(கடங்கலந்தவன் கரிமருப்பொசித்து) குவலயாபீடத்தை மதிப்பித்தபடியாலே அம்மதஜலம் உடம்பிலே வ்யாப்தமாய அதிப்ரபலமாயிருந்தவதின் கொம்பைமுறித்து. இத்தால்-ஸ்வாபாவிகமானபலத்தாலும் மதபலத்தாலும் துர்ஜயமான குவலயாபீடத்தை அநாயாஸேநவழித்தானென்கை. கடம்-ஆனைமதம். (ஓர்பொய்கைவாய்விடங்கலந்தபாம்பின்மேல்நடம்பயின்றநாதனே) "[illegible]" "வாதாஹதாம்புவிக்ஷேபஸ்பர்ஶதக்தவிஹங்கமம்" என்கிறபடியே அதிபீஷணமாகையாலே அத்விதீயமான பொய்கையிலே.

முதலைகிடந்த பொய்கையும் இதுக்கு ஸத்ரஶமன்றென்கை. விஷமே யிவனுக்கு உபாதாந மென்னும்படி விஷப்ரசுரமான காளியனுடைய பணங்களிலே வல்லாராடினாப்போலே திருவடிகளை மாறியிட்டு, அவ்வழியாலே அவனை தமித்துப் போகவிட்டு, யமுனையை ஸர்வோபஜீவநமாம்படி பண்ணி, உன்னுடைய நாதத்வத்தை ப்ரகாஶிப்பித்தவனே. "[illegible]" "துஷ்டுவுர்முதிதாகோபாத்ர்ஷ்டவாஶீவ்ஜலாம்நதீம" என்னக்கடவதிறே. இவ்வளவால துஷ்க்ர்த்விநாஶஞ்சொல்லி, மேல் ஸாது பரித்ராணஞ்சொல்லுகிறது (குடங்கலந்தகூத்தனாய கொண்டல்வண்ண) கையில திருவாழி பொருந்தினாப்போலே பொருந்தின குடத்தையுடையனுய, ஜாதிப்ராயுக்தமான கூத்தையாடி, மன்றிலே யுன்னுடைய வழகை ஸர்வஸ்வதாநம் பண்ணினவனே. ப்ரயோஜநாந்தர நிரபேக்ஷமாக ஜலஸ்தலவிபாகமன்றிக்கே வர்ஷிக்கும் மேகஸ்வபாவனே. குடக்கூத்தாடினபோதை காளமேகநிபஶ்யாமமான நிறத்தைச்சொல்லிற்றாகவுமாம். (தண்டுழாய் வடங்கலந்த மாலைமார்ப) இப்படிக்ஷுத்ராரான இடையருடைய சேஷ்டிதத்திலே யிழிந்தவன், ஸர்வஶேஷியாய், "[illegible]" "அவாக்யநாதர:" என்கிற பூர்ணனென்கிறார். ஐசவர்யஸூசகமான திருத்துழாய்வடத்தோடும் வநமாலையோடுங்கூடின திருமார்வை யுடையவனே. வடம்-தொடை. மாலை-வநமாலை. (காலநேமிகாலனே) ஆபந்நராய்த்திருவடிகளிலேவிழுந்த தேவர்களுக்கு விரோதியான காலநேமிக்கு ம்ர்த்யுவானவனே. இத்தால் ஸர்வஸாதாரணனாயிருக்கச் செய்தேயும் தன்திருவடிகளிலே தலைசாய்த்தார்க்கு விரோதிகளானார், தனக்கு ஶத்ருவென்கை. .. .. (௩௮)

அ.—முப்பத்தொன்பதாம்பாட்டு. ஸாதுபரித்ராணமும் துஷ்கர்த்விநாஶமும் சொல்லிற்று - கீழ்ப்பாட்டில்; இதில - இவ்வளவு புகுரநில்லாத விந்த்ராதிகளுடைய விரோதிகளான ராக்ஷஸவர்க்கத்தை யழியச்செய்து அவர்கள் குடியிருப்பைக் கொடுத்தபடியையும், அவ்விந்த்ரன்றான் ஆஶ்ரிதனைக்குறித்து ப்ரதிகூலனான போது அவனை யழியச்செய்யாதே முகாந்தரத்தாலே ஆஶ்ரிதனை ரக்ஷிக்கும் நீர்மையையும் அநுபவிக்கிறார்.

வெற்பெடுத்துவேலைநீர்கலக்கினாயதன்றியும
வெற்பெடுத்துவேலைநீர்வரம்புகட்டிவேலைசூழ்
வெற்பெடுத்தவிஞ்சிசூழிலங்கைகட்டழித்தநீ
வெற்பெடுத்துமாரிகாத்தமேகவண்ணனல்லையே. (௩௯)

ப-ரை.—இந்த்ராதிதேவர்களபேக்ஷித்தபடி செய்கைக்காக, வெற்பெடுத்து மந்த்ரபர்வதத்தை பரிகரமாகக்கொண்டு, வேலைநீர்-திருப்பாற்கடலை, அவர்கள் விழுந்தவை யடங்கலும் உண்டாம்படி, கலக்கினாய—, அதன்றியும-அதுவன்றியிலே, வெற்பெடுத்து-கண்டமலைகளைப்பிடுங்கி, வேலைநீர் - ஸமுத்ர ஜலத்திலே

மேலே, குரங்குகள் காலாலே நடந்துபோம்படி, வரம்புகட்டி-பூமியிலே அணை கட்டுமாப்போலே அணைகட்டி, வேலைசூழ் - கடலை அகழாகவுடைத்தாய்,]வெற்பு - த்ரிகூடபர்வதத்திலே விச்வகர்மாவாலே சமைக்கப்பட்டிருப்பதாய், எடுத்த-கடக்கவரிதான, இஞ்சிசூழ - மதிளாலே சூழப்பட்ட, இலங்கை - லங்கையிலே, கட்டு-தர்மம் தங்காதபடியான ஸ்வபாவத்தை, அழித்த - மாற்றியருளின, நீ-தேவரீர், வெற்பெடுத்து - கோவர்த்தநபர்வதத்தையெடுத்து, மாரிகாத்த-வர்ஷாபத்தைப்போக்கி யருளின, மேகவண்ண னல்லையே - காளமேக நிபச்யாமமான வடிவையுடையவனல்லையோ என்கிறார்.

வ்யா.—(வெற்பெடுத்து வேலைநீர்கலக்கினாய்) தூர்வாஸஸ் ஸாபத்தாலே இந்த்ராதிகள் ஐச்வர்யத்தையிழந்து, "శరణం త్వామనుప్రాప్తాః" "ஸரணம்த்வாமநுப்ராப்தா:" என்கிறபடியே-திருவடிகளிலேசரணம்புகுர,கடலகொண்டு முழுகும் மந்தரத்தைப் பரிகரமாகக்கொண்டு ஸமுத்ரஜலத்திலே அவர்களிழந்தவையடங்கலும உத்பந்நமாம்படி கலக்கினாய். "రత్నాకరం, మత్స్యాకరం" "ரத்நாகரம்,மத்ஸ்யாகரம்" என்று லோகப்ரஸித்தமாயிருந்துள்ள ஸமுத்ரஸ்வபாவத்தைத்தவிர்த்து ஸ்வர்க்கத்திலுள்ள பதார்த்தங்களுக்கு உத்பாதகமாக்கினாய். "ఏతత్కథం కథయ యన్మథితస్త్వయా సౌమ్యత్వాస్వభావనియమం ప్రథితం త్రిలోక్యామ్। అంశ్వాప్సరోవిషసుధావిధుపారిజాతలక్ష్మ్యాత్మనా పరిణతో జలధిర్బభూవ" "ஏதத்கதம் கதயயந்மதிதஸ்த்வயா ஸௌம்யத்வாஸ்வபாவ நியமம் ப்ரதிதம்த்ரிலோக்யாம! அம்ஸ்வாப்ஸரோ விஷஸுதாவிது பாரிஜாத லக்ஷ்மயாத்மநாபரிணதோ ஜலதிர்பபூவ" என்னக் கடவதிறே. "பரயோஜநாந்தரபரன்" என்று அவனசிறுமைபாராதே, மோக்ஷப்ரதிஜ்ஞயிருக்கிற தன்பெருமை பாராதே, "ஏஷவரோஹம்" என்றிருக்குமவனென்று அவனுடைய பூர்வவ்ருத்தமபாராதே, "சரணமென்றுநின்றான்" என்றத்தையே பார்த்துரக்ஷித்தருளினாய்.(அதன்றியும்)இதுதானே பொருமாயதது ஆச்ரிதர்உண்ணைத் தருசமமன்றவிசவஸித்திருக்கைக்கு,அதுக்குமேமல.(வெற்பெடுத்து வேலைநீர் வரம்புகட்டி) கண்டபலைகளையமிடுகைகி, ஸமுத்ரஜலத்தின்மேலே,பூமியிலேவரம்புகட்டுமாப்போலே,பலவங்கங்கள் காலாலேநடந்துபோம்படி அணைகட்டி.இதொரு அதிமாநுஷமான ஆச்சர்யம. அகாதமான ஸமுத்ரத்தில மலையமிழந்ததிலலை, திரைக்கிளர்த்தியில் மணசரையப்பெற்றதில்லை. (வேலைசூழ் வெற்பெடுத்தவிஞ்சிசூழிலங்கை கட்டழித்தநீ) கடலை அகழாக வுடைத்தாய, த்ரிகூடபர்வதத்திலே விசவகர்மாவாலே சமைக்கப்பட்டதாய், கடக்க வரிதான மதிளாலே சூழப்பட்ட லங்கையினரணை, "యథా సైకతమంభసి" "யதாஸைகதமம்பஸி" என்னும்படியே அநாயாஸேநவழித்தநீ. இஞ்சி-மதிள.கட்டு-அரணும்;இயல்வும்.

தர்மம்தொங்கக்கடவதன்றிக்கேயிருக்கிற லங்காஸ்வபாவத்தையழித்து, "విభీషణస్తు ధర్మాత్మా" "விபீஷணஸ்துதர்மாத்மா" என்கிறபடியே தார்மிகனை நிர்வாஹகனாக்கி,தர்மமே ஸஞ்சரிக்கும்படியாய்ச் சொலவிறறு;

இனி இந்த்ரன்றான் ஆச்ரிதர்க்கு துஷ்கர்த்தாறல் அவனை யழியச்செய்யாதே முகாந்தரத்தாலே ஆச்ரிதரை ரக்ஷிக்கும்படி சொல்லுகிறது (வெற்பெடுத்துமாரிகாத்த மேகவண்ணனல்லையே) "இடையர் க்ர்ஷ்ணனையண்டை கொண்டு நம்முடைய மகபங்கம் பண்ணிறூர்கள்" என்று ஸம்வர்த்தககணத்தையேவி வர்ஷிப்பிக்க; அவனை அழியச்செய்கை ப்ராப்தமாயிருக்க ப்ராதிகூல்யத்தில் நியதனல்லாமையாலும், "ஶக்ஷ்யஃ" "நநமேயம்" என்கிறபடியே திருவடிகளில் தலைசாயேனென்கிற நியதியில்லாமையாலும், கோவர்த்தநகிரியை யெடுத்து வர்ஷத்தால் வந்த அநர்த்தத்தை பரிஹரித்த மஹோதாரனல்லையோ. காளமேகநிபஶ்யாமமாய் ச்ரமஹரமான விக்ரஹத்தைச் சொல்லவுமாம். ஒருமேக ஸமூகம் பாதககோடியிலேயாய் நிற்க ஒருமேகத்தாலே வந்த ஆபத்தைப்பரிஹரித்தாப்போலே யிருந்ததென்கை ... . (௬. ௬)

அ.—நாற்பதாம்பாட்டு. ஈஶ்வராபிமாநிகளான தேவதைகளுடைய ரக்ஷணப்ரகாரஞ் சொல்லிற்று - கீழ்; இப்பாட்டில் - அநந்ய ப்ரயோஜநரை ரக்ஷிக்குமிடத்தில் நித்ய ஸூரிகளுக்கு மேலெல்லையானபிராட்டிமாரோடு ஸம்ஸாரிகளுக்குக் கீழான திர்யக்குக்களோடு வாசியறத் தன்னையொழியச்செல்லாமை யொன்றுமே ஹேதுவாக விரோதிநிரஸநபூர்வகமாக ரக்ஷிக்கும் ஆச்சர்யங்களையநுபவிக்கிறூர்.

ஆனைகாத்தோரானைகொன்றதன்றியாயர்பிள்ளையாய்
ஆனைமேய்த்தநியாநெயுண்டியன்றுகுன்றமொன்றினால்
ஆனைகாத்துமையரிக்கண்மாதரார்திறத்துமுன்
ஆனையன்றுசென்றடர்த்தமாயமென்னமாயமே. (௪0)

ப-ரை.—ஆனை-முதலையாலே பிடர்பட்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானை, காத்து-ரக்ஷித்து, அதன்றி அதுக்குமேலே, ஆயர்பிள்ளையாய்-இடைச்சாதிக்கு நியாமகனாயவதரித்து, ஓர்-அத்விதீயமான, ஆனை-குவலயாபீடமென்கிற யானையை, கொன்று-அநாயாஸேந கொன்று, அதன்றி-அதுக்குமேலே, அந்தஜாதிக்குசிதமாக, ஆனை-பசுக்களை, மேய்த்து-புல்லுள்ளவிடமே மேய்த்து, ஆநெய-பசுக்களின் நெய்யை, உண்டி - அமுது செய்யாநிற்றி; அதுக்குமேலே, அன்று-இந்த்ரன் ஸப்தமேகங்களையும் ஏவிவர்ஷிப்பித்தபோது, குன்றமொன்றினால் - கைக்கெட்டிற்றொருமலையையெடுத்து, ஆனைகாத்து - பசுக்களை ரக்ஷித்து, மை-அஞ்சநத்தாலே அலங்க்ருதமாய், அரி - செவ்வரிகருவரிகளோடுகூடின, கண்-திருக்கண்களையுடைய, மாதரார்திறத்து - நப்பின்னைபிராட்டிக்காக, முன்-ஸம்ச்லேஷார்த்தமாக ஒப்பித்திருக்கிற தசையிலே, சென்று-அவள் ஸந்நிதியிலேசென்று, ஆனை - ரிஷபங்களேழையும், அடர்த்த - ஸம்ஹரித்த, மாயம் - ஆச்சர்யம், என்னமாயம்-என்ன ஆச்சர்யமென்கிறூர். (௪0)

வ்யா.—(ஆனைகாத்து) அநந்யப்ரயோஜநதவமொழிய இவ்வருகுஜந்மாதிகளாலே யொருயோக்யதையில்லாத ஸ்ரீகஜேந்த்ராழ்வானை ரக்ஷித்து. இன்னவானை யென்னாதே, "ஆனைகாத்து" என்கிறூராய்த்து அவனுடைய ஆபத்ப்ரஸித்தியாலும் அவனை ரக்ஷித்த

ரக்ஷணப்ரகாரத்தின் ப்ரஸித்தியாலும். "గజాకర్షే తే తీరే" "పరమాపద మాపన్నః" கஜஆகர்ஷேதேதீரே" "பரமாபதமாபந்ந:" என்னும் படியிறே அவனுடைய ஆபத்து. " అతన్ద్రిత చమూపతి ప్రహితహస్తమ్ " "அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம்" "தவஞ்செய்தார் வெள்கிநிற் பவிண்ணுளார்வியப்ப" என்னக்கடவதிறே. "அதன்றியாயர் பிள்ளையாய்-ஓரானைகொன்று" என்றதுவும். (அதன்றியாயர் பிள்ளையாய்) தேவரீரை தஞ்சமன்றிருக்கைக்கு ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ரக்ஷணப்ரகாரமே யமையும், அதுக்குமேலே, இடைச்சாதிக்கு நியாம்யனு யவதரித்து. கீழ் "அசோதையாய்ச்சி பிள்ளையாய்" என்றத்தை வ்யாவர்த்திக்கிறது. (ஓரானைகொன்று) ஸ்ரீவஸுதேவர் தேவகிப்பிராட்டி, "నసంయుద్ధవిశారదాః" "நஸமம்யுத்தயித்யாஹு:" என்கிற ஸ்ரீமதுரையில் பெண்களாக இவ்வநுகூலவர்க்கமடைய பயப்படும்படி மதிப்பித்து கம்ஸன் நிறுத்தின அத்விதீயமான குவலயாபீடத்தை அநாயாஸேநக்கொன்று. ஸ்வாபாவிகமான பலமும் மதபலமுமாய அத்விதீயமாயிறே யிருப்பது. "கடங்கலந்தவன் கரி" என்றாரிறே. (அதன்றியானைமேய்த்து) அதுக்குமேலே, அந்த ஜாதிக்கு உசிதமாகப் பசுக்களை ரக்ஷித்து. "விளையாடுசூழலைச் சூழவே நின்று காலிமேய்க்கவல்லாய்" என்கிறபடியே தன்னழகாலே வயிறு நிரம்பும்படி யிறே பசுக்களை ரக்ஷித்தது. (ஆநெயுண்டி) பசுக்களின் நெயயை யமுதுசெய்யாநிற்றி. ஸ்தயகாமனுய் விஜிகித்ஸனுயிருக்கிற நீ ஆச்ரிதஸ்பர்ஶமுடையதொருத்ரவ்யத்தை யொழியச் செல்லாமையாலே யிறே அதனைவிரும்பி யமுதுசெய்தது.

(அன்றுகுன்றமொன்றினாலாநிரைகாத்து) அதுக்குமேலே இந்த்ரன், "ஸம்வர்த்தககணம்" என்கிற மேகஸமூஹத்தைக்கொண்டு வர்ஷ மையழியச்செய்கிற தசையிலே கைக்கெட்டிற் றொருமலையையெடுத்து பசுக்களை ரக்ஷித்தது. ஆன்-பசு. கீழ்ப்பாட்டிலும இவ்வபதானம் சொல்லிற்று, அதுக்கும் இதுக்கும் வாசியென்னென்னில்; ப்ராதிகூல்யத்தில் நியதனலலாமையாலே இந்த்ரனை யழியச்செய்யமாட்டாதநீர்மையைச் சொல்லிற்று-அங்கு; இங்கு - தன்னை யொழியச் செல்லாத பசுக்களை ரக்ஷித்தபடியைச்சொல்லுகிறது. (மையரிககண் மாதரார்திறத்து) அஞ்ஜநததாலே அலங்க்ர்தமாய்,செவ்வரிகருவரி கலந்த கூடின திருக்கண்களையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக. (முனாறேனையா ஏறு சென்றடர்ததமாயம்) ஸமஶ்லேஷார்த்தமாக ஒப்பித்து நிற்கிறதசையிலே அவள்ஸந்நிதியிலே சென்று ரிஷபங்களேழையு மடர்தத ஆஶ்சர்யம். (என்னமாயமே) முன்புசெய்த செயல்களுக்கும் அவ்வருகே யொன்றாயிருந்ததீ!. ... (சo)

அ.—நாற்பத்தோராம்பாட்டு. நீ உகந்தாரை, தத்ஸஜாதீயனாய் வந்தவதரித்து ஸ்வரூபாநுரூபமாக ரக்ஷிக்கும்படியையும், விமுகரான ஸம்ஸாரிகளை ஸங்கல்பத்தாலே கர்மாநுகூலமாக ரக்ஷிக்கும்படியையும், அநுஸந்திக்கப்புக்கால் பரிச்சேதிக்க முடியாதாயிருந்ததீ! யென்கிறார்.

ஆயனாகியாயர்மங்கைவேயதோள்விரும்பினாய்;
ஆயநின்னையாவர்வல்லரம்பரத்தொடிம்பராய்,
மாயமாயமாயைகொல்லதன்றிநீவகுத்தலும்
மாயமாயமாக்கினாயுன்மாயமுற்றுமாயமே. (௪௧)

ப-ரை.—ஆயனாகி-இடைச்சாதியிலேபிறந்து, ஆயர்மங்கை - நவயௌவந ஸ்வபாவையான நப்பின்னைப்பிராட்டியுடைய, வேய-மூங்கில்போலேஸ்ப்ருஹணீயமான, தோள்விரும்பினாய்-திருத்தோளோடே ஸம்ச்லேஷித்தாய்; அம்பரத்தொடு-ப்ரஹ்மாதி தேவர்களிலும், இம்பராய் - விசேஷஜ்ஞரான மநுஷ்யர்களிலும், நின்னை - ஸர்வசக்தியுக்தனானவுன்னை, யாவர்-யார், ஆயவல்லா-ஆராய்கைக்கு ஸமர்த்தர்; மாய-ஆச்சர்யசக்தியுக்தனே, மாயம்-ப்ரக்ருதி ஸம்பந்தத்தால்பிறந்த, மாயைகொல் - அஜ்ஞாநத்தாலேயோ; அதன்றி - அந்த அவதார வைபவத்தையொழிய, நீ-தயாளுவான நீ, வகுத்தலும்-மஹாகாதிகளை விபஜித்திருந்தபோதிலும், அவன் தந்த கரணங்களை பரங்களைக்கொண்டு தங்களுக்கு ஹிதம்பார்க்கமாட்டாதே, மாயும் - விஷயாந்தரப்ரவணராய் நசியாநிற்பர்கள்; அவ்வளவிலும் உபேக்ஷியாதே, மாயமாக்கினாய் - ஸ்வசரீரமான பரக்ருதயவஸ்தமாக்கினாய், உன-உன்னுடைய, மாயமுற்றும்-மாநஸவ்யாபாரமான ஸங்கல்பஜ்ஞாநமடங்கலும், மாயமே-ஆச்சர்யாவஹமே யாயிராநின்றதீ! யென்கிறார். (௪௧)

வ்யா —(ஆயனாகி ஆயர்மங்கை வேயதோள் விரும்பினாய்) இடைஜந்மத்திலே யவதரித்து நவயௌவநஸ்வபாவையான நப்பின்னைப்பிராட்டியுடைய, சுற்றுடைமையாலும் பசுமையாலும் செவ்வையாலும வேயபோலே ஸ்ப்ருஹணீயமான திருத்தோளோடே ஸம்ஶ்லேஷித்தாய். நித்யமங்கள விக்ரஹத்தை கோபஸஜாதீயமாக்கிக்கொண்டவதரித்து ஆத்யாதரத்தைப் பண்ணினாய். "ஆனையன்று சென்றடர்த்த" என்று கீழ்ப்பாட்டிலும் இவ்வவதாரத்தைச் சொல்லிற்று, இதுக்கு மதுக்கும வாசியென்னென்னில்; விரோதி நிரஸநத்திலே நோக்கு. அதில்-ஸௌரிபோக்யமான விக்ரஹத்தை கோபஸஜாதியமாக்கி வந்தவதரித்தபடியைச சொல்லுகிறது; இது-அநந்யப்ரயோஜநரான ஆச்ரிதரக்ஷணத்துக்கு முபலக்ஷணம். (ஆய நின்னையாவர் வல்லரம்பரத தொடிம்பராய) உபரிதநலோகங்களிலுண்டான ப்ரஹ்மாதிகளிலும், பூமியில் விஶேஷஜ்ஞரான மநுஷ்யாதிகளிலும் ஸர்வஶக்தியுக்தனான உன்னை யாவர் காணவல்லார். அப்ராக்ருத விக்ரஹத்தை ப்ராக்ருத ஸஜாதியமாக்கினவித்தை எவர் பரிச்சேதிக்கவல்லார்; ஒருவருமில்லையெனகை. (மாய) ஆஶ்சர்ய சக்தியுக்தனே.

நாற்பத்தோராம்பாட்டு. "ஆனையன்று சென்றடர்த்த" என்று-ரிஷபத்தைச்சொல்லுகைக்கு அவதரித்தபடி சொல்லுகிறதென்று சங்காபிப்பராயம்.

(மாயமாயைகொல்) "மமமாயாதுரத்யயா" "மமமாயாது ரத்யயா" என்கிறபடியே ப்ரக்ருதி ஸம்பந்தத்தால்பிறந்த அஜ்ஞாநத்தாலேயோ, அன்றிறே. கிம், க்ஷேபே "மாயாவயுநம்ஜ்ஞாநம்" "மாயாவயுநம்ஜ்ஞாநம்" என்கிறபடியே மாயாசப்தம் ஜ்ஞாநவாசியாகிறது. அஜ்ஞாநமும் ஜ்ஞாநவிசேஷமிறே. அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தனானதான், அப்ராக்ருதமாய் அதீந்த்ரியமான திவ்யவிக்ரஹத்தை ப்ராக்ருதஸஜாதீயமாக்கி சக்ஷுர்விஷயமாக்கின வித்தையறியலாமோ. "அவாக்யநாதர:" "அவாக்யநாதர;" என்கிறபடியே ஸ்வயம் பூர்ணனானவன் ஒருகோபஸ்த்ரீயுடைய வடிவழகிலே அத்யாதரத்தைப்பண்ணின வித்தைத்தான் எவர்பரிச்சேதிக்க. (அதன்றி) அந்தவவதார வைபவத்தைதயொழிய. ஸகலஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளால் பண்ணின வுபகாரங்களை பரிச்சேதிக்க வொண்ணாதென்கிறது மேல் (நீவகுத்தலும) ஸம்ஸாரிகளுடைய விழிவிலே * தயமாநமநாவாயிருந்துள்ளநீ, உன்னை லபிக்கைக்கு ஹேதுவான ஜ்ஞாநமுண்டாய் நல்வழிபோகைக்குக் கரணகளேபரங்களைக்கொடுக்கச்செய்தேயும், மஹதாதிவிசேஷாந்தமான வகுப்பு, தத்கார்யமான வண்டங்களாகிற வகுப்பு, அண்டாந்தர்க்கதமான சதுர்த்தச புவநாத்மகமான வகுப்பு, ததந்தர்க்கத தேவாதிகளாகிற வகுப்பு. (மாய)நசிக்க. அந்த சரீரங்களைக் கொண்டு தந்தாம் ஹிதம் பார்க்கமாட்டாதே விஷயாந்தரப்ரவணராய நசிப்பார்கள். (மாயமாக்கினாய்) அவ்வளவிலு முபேக்ஷியாதே இவற்றுக்கு இனி ஸம்ஹாரமே ஹிதமென்று பார்த்து ஸ்வசரீரமான ப்ரக்ருத்ய வஸ்தமாக்கினாய். (உன்மாயமுற்றுமாயமே) உன்னுடைய மாநஸவ்யாபாரரூபமான ஸங்கல்பஜ்ஞாநமடங்கலும் ஆஸ்சர்யாவஹமாகாநின்றதி!. ... ... (சக)

பரிச்சேதிக்கப் போகாமைக்கு அருளிச்செய்கிறார் (மாயமாயைகொலென்று.) மாயமாயை - ப்ரக்ருதி ஸம்பந்தத்தால்வந்த அஜ்ஞாநமென்னுதல்; "கொல்" என்கிற கிம் - க்ஷேபத்திலேயாய், அஜ்ஞாநமென்று ஜ்ஞாநமென்னுதல். * மாயசப்தம் ஜ்ஞாநத்தைச் சொல்லுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (மாயாவயுநம் ஜ்ஞாநம் - மாயாவயுநம ஜ்ஞாநமித்யாதி.) மாயையை அஜ்ஞாந வாசகமாக சொல்லிற்றே யென்ன; அருளிச்செய்கிறார் (அஜ்ஞாநமுமித்யாதி.) (அறியப்போகாமை) ப்ராக்ருதராயிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கேயன்றிக்கே, அப்ராக்ருதராயிருக்கிற நித்யஸூரிகளுக்கு மறியப்போகாதென்னுமத்தை, அமசத்தமொன்கிறது அர்த்தாந்தரமாக வருளிச் செய்கிறார் (அஸ்ப்ருஷ்டேத்யாதி.) இத்தால் - ப்ரக்ருதிஸம்பந்தத்தால் வந்த அஜ்ஞாநத்தாலே அறியப்போகாதாப்போலே, ப்ரக்ருதிஸம்பந்தி ரஹிதராயிருக்கிற ஜ்ஞாநாதிகர்க்கும அறியப்போகாதென்றதாய்த்து. மாய - நசிக்க. ... ... (சக)

அ.—நாற்பத்திரண்டாம்பாட்டு. "நீவருத்தலும் மாயமாயயாக்கினாய்" என்று - ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள் சேரப்ரஸ்துதமாகையாலே, "𑌏𑌕 𑌏𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃" "ஏகஏவருத்ரஃஸர்வோஹ்யேஷ ருத்ரஃ" என்று ஶ்ருதிப்ரஸித்தராயிருப்பாரு முண்டாயிருக்க, நம்மையே அபரிச்சிந்ந ஸ்வபாவராகச் சொல்லக்கடவீரோ வென்று பகவதபிப்ராயமாக; அந்தருத்ரனுக்குவந்த ஆபத்தை, அவதரித்துத் தாழநின்று அந்நிலையிலே போக்கின தேவரீர்க்கு இதுபரிஹரிக்கை பரமென்கிறார்.

வேறிசைந்தசெக்கர்மேனிநீறணிந்தபுன்சடைக்
கீறுதிங்கள்வைத்தவன்கைவைத்தவன்கபாலமிசை
ஊறுசெங்குருதியால்நிறைத்தகாரணந்தனை
ஏறுசென்றடர்த்தவீசபேசுகூசமின்றியே. (சஉ)

ப-ரை.—வேறு-வேறாக, இசைந்த-தன்னுடையஸம்ஹர்த்ருத்வத்துக்குச்சேர்ந்த, செக்கர்மேனி - க்ருத்தமானவேஷத்தையும், நீறணிந்த - பஸ்மந்தரித்த சரீரத்தையும், புல்-கோரமாயிருந்துள்ள, சடை-ஜடையையுமுடையனாய், அந்த ஜடையிலே, கீறுதிங்கள் வைத்தவன்-கலாமாத்ரமான சந்த்ரனைதரித்தவனாய், கைவைத்த-கையிலேவைத்த, வல்-வலிய, கபாலமிசை-கபாலத்திலே, ஊறு-உன திருமேனியிலே யூறாநின்றுள்ள, செங்குருதியால்நிறைத்த-சிவந்த ரக்தமாகிற ஜலத்தாலே நிறைத்த, காரணந்தனை - ஹேதுவை; ஏறு - ரிஷபங்களினுடைய க்ரௌர்யத்தையும, தன்னுடைய ஸௌகுமார்யத்தையும்பாராது, கூசமின்றி-கூசாமல், சென்று - அவற்றி னருகேசென்று, அடர்த்த - நிரஸித்த, ஈச-நியாமகனே, பேசு-எனக்கருளிச்செய்யவேணும். (சஉ)

வ்யா.—(வேறிசைந்தசெக்கர்மேனி) வேறாகத்தன்னுடைய ஸம்ஹாரத்வத்துக்குச் சேர்ந்த க்ருத்தமான வேஷத்தையுடையனாய். செக்கர்-சிவப்பு. சிவத்தல் - கோபித்தல். ஸ்ருஷ்ட்யாதித்ரயத்துக்கும் தேவரீர்க்கு தயையேயிறே ஸ்வபாவம். (நீறணிந்தபுன்சடை) பஸ்மோத்தூளிதஸர்வாங்கனாய்க்ர்பணமானஜடையையுடையனாய். புன்மை-பொல்லாமை. இத்தால் - ப்ராயஶ்சித்தத்துக்கும் ஸாதகத்வத்துக்கும் ஏகாந்தமான லிங்கத்தையுடையவனென்கை. (கீறுதிங்கள் வைத்தவன்) அந்த ஜடையிலே கலாமாத்ரமான சந்த்ரனை வைத்தவன். ஆக, ஸம்ஹர்த்ருத்வமாத்ரமேதொழிலென்றும், சாஸ்த்ரவஶ்யதையை ஸூசிப்பிக்கிற ஜடாநிகளையுடையவனென்றும், சந்த்ரதாரணத்தாலே-போகப்ரதாநனென்றும் சொல்லிற்றாய்த்து. (கைவைத்தவன் கபாலமிசை) கையில்வைத்த வலியகபாலத்திலே. பாதகித்வப்ரகாஶகமான கபாலதாரணம், பாதகம் போனாலல்லது போகாத ப்ராபல்யத்தை யுடைத்தான கபாலமென்றும் சொல்லிற்றாய்த்து. ஶாஸ்த்ரவஶ்யனுக்கிறே இப்பாதகமுண்டாவது.

நாற்பத்திரண்டாம்பாட்டு. பாதகமுண்டாவது - பாதகபீதியுண்டாவதென்றபடி.

(ஊறுசெங்குருதியால்நனைந்தகாரணந்தனை)உன்திருமேனியிலே யூறுநின்றுள்ளரக்தஜலத்தாலேநனைந்தஹேதுவை.(பேசு)உன்னுடைய ஈஶ்வரத்வமும் அவனுடைய ஈசிதவ்யத்வமுமொழிய வேறு ஹேதுவுண்டாகில்அருளிச்செய்யவேணும்.உன்னுடையரக்ஷகத்வமும் அவனுடைய ரக்ஷ்யத்வமுமொழிய ஹேதுவுண்டோ.இங்கே, "செங்குருதி" என்றும்,மேலே,"அலங்கல் மார்வில் வாசநீர்கொடுத்தவன்" என்றுமருளிச்செய்யாநின்றார்,இரண்டுக்கும்பேதமென்னென்னில்; அப்ராக்ருதஸம்ஸ்தாநத்தை இதரஸஜாதியமாக்கின மெய்ப்பாட்டைச்சொல்லுகிறது-இங்கு;"సర్వగన్ధః" "ஸர்வகந்த:" என்கிற அப்ராக்ர்த ஸம்ஸ்தாநத்தை இதரஸஜாதீயமாக்கிற்றென்று தோற்றுகைக்காகவந்த வைலக்ஷண்யத்தைச்சொல்லுகிறது-அங்கு.(கூசமின்றியே-ஏறுசென்றடர்த்தவீசபேசு) ரிஷபங்களினுடைய க்ரௌர்யத்தையும் தன்ஸௌகுமார்யத்தையும்பார்த்துக்கூசாதே, மேல் விழுந்தடர்த்து உன்னீசவரத்வம் நிறம்பெறும்படி நின்றவனே! எனக்கருளிச்செய்யவேணும. சாஸ்த்ரவஶ்ய ஜந்மததிலே பிறந்து ஏழுகோஹத்யையைப்பண்ணச்செய்தேயும் ஈஶ்வரத்வம் நிறம்பெறநின்றாய்நீ; ருத்ரன் ஈச்வரத்வததால் வந்த மேன்மை குலையாதே நிற்கிறவிளவிலே பாதகியானான், அப்பாதகத்தை யவதரித்து தாழநின்றநிலையிலேபோக்கியருளினாய, இந்நெடுவாசியை தேவர்களே எதிரிகளாயழிக்கப்புக்கால்தான் அழியுமோ. "கூசமின்றியே-பேசு" என்னவுமாம். "అహంవో బాన్ధవో జాతః" "அஹம்வோ பாந்தவோஜாத:" என்று-சிலர்க்கு தேவரீருடைய மேன்மையை மறைத்துப் பரிமாறுகிறபடியை நினைத்துக்கூசாதே, "జన్మకర్మచమేదివ్యమ్" "ஜந்மகர்மசமேதிவ்யம்" என்கிறபடியே அவதாரத்தினுடைய அப்ராக்ர்தத்வத்தையுள்ளபடி யறிகிற வெனக்கு அருளிசசெய்யவேணும்.(௪௨)

அ.—நாற்பத்துமூன்றும்பாட்டு. ருத்ரனுடை பாதகத்தைப் போக்கினவளவேயன்றிக்கே, க்ர்ஷ்ணனாய்வந்தவதரிதது பூபாரமான கம்ஸனைபரிகரமாகநிரஸிக்கையாலும்,அந்தருத்ராதிகளோடு கர்மிகீடாதிகளோடு வாசியற ஸ்ரீவாமநனாய் எல்லார்தலைகளிலும் திருவடிகளைவைத்து உன்ஸர்வஶேஷித்வத்தை ப்ரகாஶிப்பித்தபடியும் ஜகத்காரணபூதன் நீயேயென்கிறார். "కాలనేమిర్హతో యోసౌ" "காலநேமிர்ஹதோயோஸௌ" என்று - பூமிகம்ஸனை பூபாரமாகச் சொன்னாளிறோ.

இந்தநெடுவாசியை அவனாலும் இல்லை செயயப் போகாமையாலே அழிக்கப்போகாதென்கிறது. ... ... (௪௨)

வெஞ்சினத்தவேழவெண்மருப்பொசித்துருத்தமா
கஞ்சனைக்கடிந்துமண்ணளந்துகொண்டகாலனே
வஞ்சனத்துவந்தபேய்ச்சியாவிபாலுள்வாங்கினாய்
அஞ்சனத்தவண்ணனாயவாதிதேவனல்லையே. (சஙு)

ப-ரை.—வெம்சினம் - மிக்ககோபத்தையுடைய, வேழம்-குவலயாபீடத்தினுடைய, வெள்-வெளுத்த, மருப்பு-கொம்பை, ஒசித்து-அநாயாஸேநமுறித்து, அந்தச்செய்தியைக்கேட்டு, உருத்து-கோபித்தவனாய், மா-மிக்கவலிமையையுடையனான, கஞ்சனை-கம்ஸனை, கடிந்து-நிரஸித்து, தாய்வடிவுகொண்டு, வஞ்சநத்து வந்த-வஞ்சகையாய்வந்த, பேய்ச்சி-பூதனையினுடைய, ஆவி-ப்ராணனை, பால்-பாலோடேகூட, உள்வாங்கினாய் - அமுதுசெய்தருளினவனாய், வாமநாவதாரஞ்செய்தருளி-நீரேற்றுப்பெற்ற, மண்-பூமியை, அளந்துகொண்ட - திருவடிகளாலே யளந்து கொள்ளுகையாலே, காலனே - ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுவானவனே, அஞ்சநத்தவண்ணனான-மைபோன்ற திருநிறத்தை யுடையனாய்,-ஆதிதேவனல்லையே - உத்பாதகனானவனே! என்று ஈடுபடுகிறார். (சஙு)

வ்யா.—(வெஞ்சினத்த வேழவெண் மருப்பொசித்து) வெவ்விய சினத்தையுடைய குவலயாபீடத்தினுடையவெளுத்தகொம்பை அநாயாஸேநமுறித்து. வெவ்வியசினம்-அதிகோபம். அதினுடையசினமும் ஹிம்ஸாபரிகரமானகொம்பும பயஹேதுவானவோபாதி கொம்பினுடையவர்ணமும் பயஹேதுவாயிருக்கிறதாய்த்து இவர்க்கு. (உருத்தமாகஞ்சனைக்கடிந்து) அதுகேட்டுக்ருத்தனாய்ப்ரக்ர்த்யாபலோத்தரனான, கமஸனுடைய நினைவைக்கடிந்து-அவன் நினைத்த நினைவையவன்றன்னோடேபோக்கி. "[illegible]" "கிமிந்த்ரேணாலப்யவீர்யேண." "வஞ்சனத்துவந்தபேயச்சியாவிபாலுள்வாங்கினாய்-மண்ணளந்துகொண்டகாலனே" என்றந்வயம். குவலயாபீடத்தைபபோலேயும கம்ஸனைப்போலேயும் எதிரியாய்த் தோன்றுகையன்றிக்கே, தாயவடிவுகொண்டு * வஞ்சனையால்வந்த பூதனையினுடைய ப்ராணனைப் பாலோடேகூட வாங்கினாம். அவளும் தாயாய் முலைகொடுக்கவந்தாள்; இவனும் பிள்ளையாய் ஆதரத்தோடே அம்முலைப்பாலை யமுதுசெய்தான். துஷ்ப்ரக்ர்திகளுக்கு நாஶகரமான தர்மிஸ்வபாவத்தாலே அவள்நினைவு அவள்தன்னோடே போனவித்தனை. முலைவழியாலே ப்ராணனைவாங்கின ஆஶ்சர்யத்தாலும், துர்வர்க்கத்துக்கு ஜ்ஞாததயாவன்றிக்கே ஸத்தயாநாஶகரானகையாலும், ஸர்வாதிகன்நீயேயென்கை. "[illegible]" "ஸ்தந்யம்தத்விஷஸம்மிஶ்ரம் ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோ:" என்னக்கடவதிறே.

நாற்பத்துமூன்றாம்பாட்டு. கம்ஸன் பூபாரமோவென்ன; அருளிச்செய்கிறார் (காலநேமியித்யாதி.) விஷ்ணுவாலே கொல்லப்பட்ட "காலநேமி" என்கிற அஸுரன் கமஸனாய வந்து பிறக்கையாலே தனக்குபாரமென்று பூமிசொன்னாளென்றபடி. உரு-மிடுக்கு. தமன் - மிடுக்கிலே அதிகனென்றபடி. மிடுக்கனோவென்ன; அருளிச்செய்கிறார் ([illegible]-கிமிந்த்ரேணேத்யாதி.) மிடுக்கனாகையாலேயன்றோ "அல்பவீர்யேணஇந்த்ரேணகிம" என்று கம்ஸன்சொன்னானென்றபடி.

"உருத்து" என்று பாடமானபோது - குவலயாபீடநிரஸநத்தாலும் திருவுள்ளத்திலே சினம் மாறாமையைச் சொல்லிற்றாகக்கடவது. (மண்ணளந்துகொண்டகாலனே) பூபாரமாணகம்ஸநிரஸநமேயன்றிக்கே, தன்சேஷித்வத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக ப்ரஹ்மாதி ஸகலஜந்துக்கள்தலையிலும் வைத்த திருவடிகளையுடையவனே. "காலனே" என்று - ப்ரதிகூலர்க்கு ம்ர்த்யுவானவனே யென்றுமாம். (அஞ்சநத்தவண்ணனாய வாதிதேவனல்லையோ) "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா" "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவபாஸ்வரா" என்கிறபடியே - விலக்ஷணவிக்ரஹயுக்தனாய் ஜகத்துக்கு உத்பாதகனாய், அத்தாலே யுஜ்வலனானவனல்லையோ. ஜகத்காரணத்வத்தோபாதி அப்ராக்ர்ததிவ்யவிக்ரஹயோகமும் ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணமென்கை. (சங)

அ.— நாற்பத்துநாலாம்பாட்டு. "மண்ணளந்துகொண்ட காலனே" என்று - முறையறிவித்தபடியும் "அஞ்சநத்தவண்ணன்" என்று முறையறிந்தவர்கள ஆச்ரயிக்கைக்குப-பாச்ரயமானவடிவும் ப்ரஸ்துதமாய்நின்றது-கீழ்; க்ர்தாதியுகங்களில் சேதநர்ஸத்வாதிகுணாநுகூலமாக ச்வேதாதிவர்ணங்களை விரும்புகையாலே அந்த காளமேகநிபஸ்யாமமான நிறத்தை யழியமாறி அவர்களுக்குவர்ணங்களைக்கொண்டு அவ்வவகாலங்களிலே முகங்காட்டசெய்தேயும் ஸம்ஸாரிகள் காற்கடைக்கொள்ளுவதே! இதென்னதுர்வாஸநாபலம்! என்கிறார்.

பாலினீர்மைசெம்பொனீர்மைபாசியின்பசும்புறம்
போலுநீர்மைபொற்புடைத்தடத்துவண்டுவிண்டுலாம்
நீலநீர்மையென்றிவைநிறைந்தகாலநான்குமாய்
மாலினீர்மைவையகம்மறைத்ததென்னநீர்மையே. (சச)

ப-ரை.—பாலின்நீர்மை-பால்போலே வெளுத்ததிருநிறமும், செம்பொன்நீர்மை-செம்பொன்னினநிறமும், த்வாபரயுகத்தில், பாசியின்-பாசியினுடைய, புறம்-புறத்திலுண்டான, பசுமைபோலும் நீர்மை-பசுமையையொத்த திருநிறமும், பொற்புடை — அழகிதான, தடத்து - தடாகத்திலே, வண்டு - வண்டுகள் நெருங்கப்படிந்து மதுபாநத்தைப்பண்ணி அததால்வந்தஹர்ஷத்தாலே, விண்டு-சிறகுவிரித்து, உலாம்-உலாவாநின்றுள்ள, நீலநீர்மை - கருநெய்தல்மலரின்நிறமும், என்றிவை - என்கிற நான்குநிறங்களும், நிறைந்த - குறைவற்றிருந்துள்ள, காலம்நான்குமாய் - சதுர்யுகமாய், மாலின்நீர்மை-இப்படியிருக்கிற ஸர்வேச்வரனுடைய, நீர்மையை - ஸௌலப்யத்தை, வையகம் - பூமியிலுள்ளார், மறைத்து-அவனை ஆச்ரயியாதே அசட்டைசெய்தது, என்னநீர்மை-என்ன துர்வாஸநையோவென்கிறார். (சச)

வ்யா.—(பாலின்நீர்மை)க்ர்தயுகத்திலுள்ளார் ஸத்வப்ரசுரராய் வெளுப்புஉகக்குமவர்களாகையாலே அவர்களுக்குப் பால்போன்ற நிறத்தைக்கொள்ளும்ஸ்வபாவம். அதாகிறது-நிறம். "வளையுருவாய்த்திகழ்ந்தான்" என்றும், "சங்கவண்ணமன்னமேனி" என்றும்சொல்லுகிறஸ்தாநத்திலே "பாலின்நீர்மை" என்றது-இவ்வெளுப்புக்கு ஆச்ரயம் "[illegible]" "ஸர்வரஸ:" என்கிறவிஷயமென்று தோற்றுகைக்காக. (செம்பொன்நீர்மை) த்ரேதாயுகத்தில்வந்தால் "[illegible]" "ருக்மாபம்" என்றும், "சுட்டுரைத்த நன்பொன் உன்திருமேனியொளி யொவ்வாது" என்றும் சொல்லுகிறபடியே - சிவந்த திருநிறத்தைக்கொள்ளும். "சேயனென்றுந் திரேயதைக்கண்" என்கிற ஸ்தாநத்திலே "செம்பொனீர்மை" என்றது-அந்நிறத்துக்கு ஆச்ரயமான விக்ரஹம் மஹார்க்கமென்று தோற்றுகைக்காக. (பாசியின் பசும்புறம்போலும் நீர்மை) த்வாபரயுகத்திலே வந்தால் பாசியினுடைய புறத்தில் பசுமைபோலே ஶ்ரமஹரமானதிருநிறத்தையுடையனாய். (பொற்புடைத்தடத்துவண்டுவிண்டுலாநீலநீர்மை) கலியுகத்திலே வந்தால் எல்லாவடிவுங் கொண்டாலும் அபிமுகீகரிப்பாரில்லாமையாலே ஸ்வாபாவிகமான நீலநிறமாயிருக்கும். "நீலநின்ற பின்னைவண்ணங்கொண்டல் வண்ணம்" என்னக்கடவதிறே. "[illegible]" "கலௌஜகத்பதிம்." அழகியதடாகத்திலே வண்டுகள் நெருங்கப்படிந்து மதுபாநத்தைப்பண்ணி, அத்தால்வந்த ஹர்ஷத்தாலே சிறகுவிரித்து உலாவாநின்றுள்ள நீலப்பூவின் நிறம்போலேயிருக்கிற நிறத்தையுடையனாய். இத்தால் - ஶ்ரமஹரமான செவ்வியை யுடைத்தான நீலப்பூவென்கை. பொற்பு - அழகு. விண்டல் - அலர்தல். (என்றிவை நிறைந்த காலநான்குமாய்) ஆச்ரிதார்த்தமாகக்கொள்ளும் அந்நிறங்கள் குறைவற்றிருந்துள்ள சதுர்யுகமாய். இந்நிறங்கள் நாலுயுகத்திலும் குறைவற்றிருக்கை. (மாலின்நீர்மை) இப்படியிருக்கிற ஸர்வேஶ்வரனுடைய, நீர்மையை - இஸ்ஸௌலப்யத்தை. (வையகம் மறைத்ததென்ன நீர்மையே) பூமியிலுள்ளார் ஆச்ரயியாதே காற்கடைக்கொண்டது என்ன துர்வாஸநையினாலேதான். "[illegible]" "மஞ்சாக்ரோசந்தி" என்கிறபடியே ததந்தர்ப்பூதரைச்சொல்லுகிறது. "மறைத்தது" என்கிறது "[illegible]" "குணமாயாஸமாவ்ர்த:" என்னுமாப்போலே பகவதநுக்ரஹத்தையும் அதிஶயித்திருப்பதே! அநாதிகால துர்வாஸநையென்கை. (௪௪)

அ.—நாற்பத்தஞ்சாம்பாட்டு. பகவத்ஸௌலப்யத்தையும் அதிஶயித்திருந்துள்ள ஸம்ஸாரிகளுடைய துர்வாஸநையால்வந்த இழவைச்சொன்னார்-கீழ்; இதில்-அவர்களிலே அந்யதமனானவெனக்கு தேவரீருடைய பரத்வஸௌலப்யங்களையும், ஆஶ்ரிதர்க்கெளியனாய் அநாச்ரிதர்க்கரியனாயிருக்கிறபடியையுங்காட்டி என்னை அநந்யார்ஹமாக்குவதே! இதென்ன ஆஶ்சர்யமென்கிறார்.

மண்ணுளாய்கொல்விண்ணுளாய்கொல்மண்ணுளேமயங்கிநின்
றெண்ணுமெண்ணகப்படாய்கொலென்னமாயைநின்றமர்
கண்ணுளாய்கொல்சேயைகொலனந்தன்மேற்கிடந்தவெம்
புண்ணியாபுனந்துழாயலங்கலம்புனிதனே. (சரு)

ப-ரை.—* ஆதியஞ்சோதியுருவானதேவரீர் ஆச்ரிதரை அடிமைகொள்ளுகைக்காக, மண்ணுளாய்-இங்கேவந்தவதரித்து ஸுலபராய், விண்ணுளாய்-நித்யஸூரிகளுக்கு நிரவாஹகனாய், ப்ரக்ருதிஸ்பர்சத்தாலும் ப்ரயோஜநாந்தரபரதையாலும், மயங்கிநின்று-மயங்கிநிற்கிற, மண்ணுள்-பூமியிலுள்ள மநுஷ்யர்கள், எண்ணும்எண்-நினைக்கும் நினைவுக்கு, அகப்படாய் - எட்டாதவனாய், நின்தமர் - உன்திருவடிகளைப்பற்றி அநந்ய பரயோஜநராயிருப்பார்க்கு, கண்ணுளாய்-ஸாக்ஷாத்கரிக்கும்படி நிற்குமவனாய், ஆச்ரிதவிரோதிகள் உன்னை அறியாதபடி, சேயை-தூரஸ்தனாய், அவையெல்லாம்கிடக்க, அநந்தனமேல் - திருவநந்தாழ்வான்மேலே, கிடந்த-கண்வளர்ந்தருளினபடியைக்காட்டி, எமபுண்ணியா-எனக்கு உபகாரகனானவனாய், புனம்-தனனிலத்திலுண்டான, துழாயலங்கல்-திருத்துழாய்மாலையாலே அலங்காரனாய், அமபுனிதனே-பரமபாவநனானவனே!, என்னமாயைம்-இதென்ன ஆச்சர்யமெனகிறார். (சரு)

வ்யா.—(மண்ணுளாய்கொல்) "அவாப்தஸமஸ்தகாம:" "அவாக்யநாதர:" என்கிறபடியே பூர்ணரானதேவரீர் ஸர்வஸமாச்ரயணீயராகைக்காக ஸாபேக்ஷராய், அப்ராக்ருதமாய் அதீந்த்ரியமானவிக்ரஹத்தை ப்ராக்ருதஸஜாதீயமாக்கிக்கொண்டு அவதரித்து சக்ஷுர்விஷயமானாய். "கொல்" என்று - ஏகாச்ரயத்திலே விருத்ததர்மங்கள் காண்கையாலே, இதென்னாயிருக்கிறதென்கிறார். அதாகிறது - ஸீதாவியோகத்தில் கலக்கமும், ஒருதிர்யக்குக்கு மோக்ஷப்ரதாநமும். "ப்ரஜ்வலிதேஜ்ஞ", "ப்ரச்சாமிகிஞ்சந." (விண்ணுளாய்கொல்) அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுக்கும் பரிச்சேதிக்கவொண்ணாத பெருமையையுடையையாய். (கொல்) நித்யஸூரிகளுக்கும் நிர்வாஹகனாயிருக்கையும், குஹஸபரி ஸுக்ரீவாதிகளுக்கு நிர்வாஹ்யனாயிருக்கையுமாகிறவிதென்னாயிருக்கிறதோ! வென்கிறார். (மண்ணுளேமயங்கிநின்றெண்ணுமெண்ணகப்படாயகொல்) இப்பரத்வஸௌலப்யங்கள்ப்ரக்ருதிஸ்பர்ஸத்தாலேவந்தவிபரீதஜ்ஞாநத்தையுடையராய் ப்ரயோஜநாந்தரபரரான ஸம்ஸாரிகள்மநோரதத்துக்கும் அவ்வருகாம்படி யிருத்தி. (என்னமாயை) என்கிற விது, இப்பாட்டின் முடிவிலே க்ரியையாகக்கடவது. (நின்தமர்கண்ணுளாய்கொல்) உன்திருவடிகளிலே அநந்ய பரயோஜநரா யிருப்பார்க்கு, "பரித்ராணாய ஸாதூநாம்" "பரித்ராணுயஸாதூநாம்" என்கிறபடியே உள்ளபடியை ஸாக்ஷாத்கரிப்பியாநிற்றி.

நாற்பத்தஞ்சாம்பாட்டு. இரண்டும் ஏகாஸ்ரயத்திலேயுண்டென்றுசொன்னவிடமுண்டோவென்ன; அருளிச்செய்கிறார் (ப்ரச்சாமிகிஞ்சநவென்று.) ... ... (சரு)

(சேயைகொல்) ஆச்ரிதவிரோதிகளுக்கு உன்னை யறியவொண்ணாதே எதிரிட்டு முடிந்துபோம்படி தூரஸ்தனாயிருப்புதி. "[illegible]" "விநாஸாயசதுஷ்க்ர்தாம்" என்னக்கடவதிறே. (கொல்) ஸம்பந்தம் ஸமாநமாயிருக்க அநந்யப்ரயோஜநர் பக்கலிலும் தத்விரோதிகள் பக்கலிலுமுண்டான இஸ்ஸ்வபாவங்கள் என்னாயிருக்கிறதோ. இவ்விருத்த தர்மாச்ரயமாகிற தேவரீருடைய ப்ரபாவம் ப்ரமாணஸித்தமாகையாலே பொய்யென்னவொண்ணாது, விருத்தஸ்வபாவங்களாகையாலே மெய்யென்னவொண்ணாது. (அனந்தன்மேல் கிடந்தவெம்புண்ணியா) அதெல்லாங்கிடக்க, திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளினவடிவைக்காட்டி, தேவரீருடைய ஆஸ்ரித ஸம்ஸ்லேஷ ஸ்வபாவத்தையும் என்னுடைய அநந்யார்ஹ ஸேஷத்வத்தையும் எனக்கு உணர்த்தினவனே. "[illegible]" "பும்ஸ்த்வம்நயதீதிபுண்ய:" என்கிறபடியே இவனுடைய ஸ்வரூபத்தையும் ப்ரகாஸிப்பிக்கைக்கு உபாயமானவனே. (புனந்துழாயலங்கலம்புனிதனே) தோளும் தோள்மாலையுமான வழகைக்காட்டி, விஷயாந்தருசியென்ன, "[illegible]" "சோரேணாத்மாபஹாரிணா" என்கிற ஆத்மாபஹாரமென்ன, இவ்வஸக்திகளைத் தவிர்த்த பரமபாவநனே. (என்னமாயை) இதென்ன ஆஸ்சர்யம். என்திறத்தில் நீசெய்தருளின விவை யென்றால் பரிச்சேதிக்கலா யிருந்ததில்லையெனகிறார். ... ... (சரு)

அ.—நாற்பத்தாறும்பாட்டு. "அனந்தன்மேல்கிடந்த வெம்புண்ணியா" என்று - ஸ்வரூபத்தை யறிவிக்கையாலே ஸம்ஸாரத்திலே வந்து ஆவிர்ப்பவித்தும் அவதரித்தும் பெரியதிருவடிதோளிலேயேறி ஆச்ரித ரிருந்தவிடத்திலேசென்று ரக்ஷித்த காலமெல்லாம் இழந்தேன, இனி இழவாதபடி விரோதி நிவ்ர்த்தி பூர்வகமாக நான் உன்னைப்பெறும் விரகு அருளிச்செய்யவேணுமென்கிறார்.

தோடுபெற்றதண்டுழாயலங்கலாடுசென்னியாய்
கோடுபற்றியாழியேந்தியஞ்சிறைப்புள்ளூர்தியால்
நாடுபெற்றநன்மைநண்ணமில்லையேனும்நாயினேன்
வீடுபெற்றிறப்பொடும்பிறப்பறுக்குமாசொலே. (சசு)

ப-ரை.—உன திருமேனிஸ்பர்சத்தாலே, தோடுபெற்ற-பூவிதழ்கள் மிக்கு, தண்-குளிர்ந்திருந்துள்ள, துழாயலங்கல்-திருத்துழாய்மாலையைதரித்து அசைக்கையாலே, ஆடு-அசைந்துவருகிற, சென்னியாய்-திருமுடியையுடையையாய, கோடு-ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, பற்றி-இடத்திருக்கையிலேதரித்து, ஆழி-திருவாழியை, ஏந்தி-வலத்திருக்கையிலே, ஏந்தி-தரித்து, உன்ஸ்பர்சத்தாலே, அம்-அழகுபெற்றிருக்கிற, சிறை-சிறகையுடைய, புள்-பெரியதிருவடியை, ஊர்தி-நடத்தாநிற்கிறாய்; நாடு-லோகத்திலுள்ளாரெல்லாரும் காணும்படி, பெற்ற - பெரியதிருவடியை மேற்கொண்டு ஸஞ்சரித்த, நன்மை-இந்த நன்மையை, நண்ணமில்லையேனும்-நானகிட்டப்பெறறிலேனாகிலும், நாயினேன்-அநந்யகதியானநான், வீடுபெற்று-பகவத்ப்ராப்திரூபமோக்ஷத்தைப்பெற்று, இறப்பொடும் - இச்சரீர விமோசநத்தோடே, பிறப்பு-இனியொரு சரீரபரிக்ரஹம பண்ணாதபடி, அறுக்குமா - ஸம்ஸாரத்தை அறுக்கும் விரகு, சொல்-அருளிச்செய்யவேணும். (சசு)

வ்யா.—(தோடுபெற்றதண்டுழாயலங்கலாடுசென்னியாய்)உன் திருமேனியில் ஸ்பர்சத்தாலே தழைத்துக்குளிர்ந்திருந்துள்ள திருத்துழாய்மாலையை யுடையையாய், ப்ரணதஜநங்கள்பக்கல் முகப்ரதாநத்தாலே யசைந்துவருகிற திருமுடியையுடையையாய். ஸர்வேஶ்வரஸ்பர்ஶமிறே- சேதநர்க்கு ஸங்கோசத்துக்கும் தாபஶாந்திக்கும் ஹேது. இத்தால்-கண்டபோதே ருசிபிறக்கும்படியான வொப்பனையழகையும், ஆபிமுக்யம்பண்ணினார்பக்கல் முகப்ரதாநம் பண்ணும் நீர்மையையும் சொல்லிற்று. தோடு - பூவிதழ். (கோடுபற்றியாழியேந்தி) ஆச்ரித விரோதிகளை த்வநியாலே மண்ணுண்ணும்படி பண்ணுகைக்கு ஸ்ரீபாஞ்சஜந்யத்தைப்பற்றி, "கருதுமிடம் பொருது"என்கிறபடியே எதிரிகளைச்சென்றழிக்கைக்குத்திருவாழியையேந்தி. ஆச்ரிதர்க்கு முகங்கொடுக்குமளவன்றியே அவர்கள்விரோதிகளையும் அழியச்செய்யும் பரிகரங்களை யுடையவனென்கை. (அஞ்சிறைப்புள்ளூர்தியால்) ஸ்பர்ஶத்தாலே யழகுபெற்ற திருச்சிறகையுடைய பெரியதிருவடியைநடத்தாநிற்றி. அவனை மேற்கொண்டால் ஈஶ்வரனுக்கு அலங்காரமாயிருக்கும்படியான அழகைச்சொல்லிற்றாகவுமாம். இத்தால்-ஆச்ரிதரிருந்தஸம்ஸாரத்திலே ஆபத்தசைகளிலே சென்று முகங்காட்டி ரக்ஷிக்கும் நீர்மையைச் சொல்லிற்று. இப்படி தன்னை தூளிதாநம்பண்ணின காலமெல்லா மிழந்தேனென்கிறார். "ஆல்" என்று - விஷாதாதிஶயஸூசகம். (நாடுபெற்ற நன்மை நண்ணமில்லையேனும்)இருந்ததே குடியாகக்காணலாம்படி பெரியதிருவடியை மேற்கொண்டு ஸஞ்சரித்த விந்த நன்மையை நான் கிட்டப்பெற்றிலேனாகிலும். நான் விமுகனான காலமெல்லா மிழந்தாலும் எனக்கு ருசிபிறந்தவின்றும் தேவருள்ளீராயிருக்க இழக்கவேணுமோவென்கை. (நாயினேன்வீடுபெற்று) அநந்யகதியான நான் பகவத் ப்ராப்திரூபமோக்ஷத்தைப்பெற்று. (நாயினேன்) அநாதிகாலம் திறந்துகிடந்தவாசலெல்லாம் நுழைந்து ஸர்வராலும் பரிபூதனானநான். உசந்து தொட்டாலுமஎதிர்த்தலைக்கு அஶுத்தியைவிளைப்பிக்கும் நிஹீநதையையுடையநான்.(வீடுபெற்று)இப்படிப்பட்டிருந்துள்ளநான்,உனக்குஸத்ருஶராயிருந்துள்ள நித்யஸூரிகள்பேற்றைப்பெற்று. அகிஞ்சநனான நான், பூர்ணனுடைய பேற்றைப்பெற்று. (இறப்பொடும்பிறப்பறுக்குமாசொலே) இச்சரீரத்தினுடைய விமோசநத்தோடே இனியொரு சரீரபரிக்ரஹம் பண்ணாதபடி ஸம்ஸாரத்தை யறுக்கும் விரகு அருளிச்செய்யவேணும். சிறைக்கூடத்திலிருந்த ராஜகுமாரன்தலையிலே அபிஷேகத்தை வைத்து, பின்பு சிறையை வெட்டிவிட்டாப்போலே, ப்ராப்திமுன்பாக விரோதியைப் போக்கும் விரகு அருளிச்செய்யவேணும். ... ... (௪௫)

நாம்பத்தாறும்பாட்டு. ஸ்பர்சத்தாலே திருத்துழாய்தழைக்கக் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார்(ஸர்வேச்வரஸ்பர்சமித்யாதி.) கோடு-ஸ்ரீபாஞ்சஜந்யம். ... ... (௪௬)

அ.—நாற்பத்தேழாம்பாட்டு. பரவ்யூஹவிபவங்களடங்கலுமாச்ரயணீயஸ்தலமன்றோ, அதிலே ஓரிடத்தைப்பற்றியாச்ரயித்து நம்மைப்பெறமாட்டீரோவென்ன; அவ்விடங்களெங்குந்நிலமல்ல,இனி எனக்கு ப்ரதிபத்திபண்ணி யாச்ரயிக்கலாவதோ ரிடத்தை யருளிச் செய்யவேணுமென்கிறார்.

காரொடொத்தமேனிநங்கள்கண்ணவிண்ணினாதனே
நீரிடத்தராவணைக்கிடத்தியென்பரன்றியும்
ஓரிடத்தையல்லையெல்லையில்லையென்பராதலால்
சேர்விடத்தைநாயினேன்றெரிந்திறைஞ்சுமாசொலே. (௪௭)

ப-ரை.—காரொடொத்த-காளமேகத்தோடுஸத்ர்சமான, மேனி-வடிவையுடையையாய், நங்கள்-ஆச்ரிதர்க்கு உன்னை உடைமையாக்கிவைத்த, கண்ண-க்ர்ஷ்ணனாய்அவ்வடிவை, விண்ணினாதனே-* அயர்வறுமமரர்களதிபதியான வுன்னை, நீரிடத்து-க்ஷீராப்தியிலே, அராவணை - திருவநந்தாழ்வானாகிற திருப்படுக்கையிலே, கிடத்தியென்பர் - பள்ளிகொண்டருளாநிற்கிறாயென்று ஜ்ஞாநாதிகரான வைதிகர்கள் சொல்லாநின்றார்கள்; அன்றியும்—, ஓரிடத்தையல்லை-நீ ஓரிடத்திலே வர்த்திக்கிறாயல்லை; தஹரசாண்டில்யம் முதலிய வித்யைகளிலே, எல்லையில்லையென்பர் - உன் ஆச்ரயணீயஸ்தலங்களுக்கு எல்லை யில்லையென்று சொல்லப்படுகிறது; ஆதலால்-இப்படி ஒருவகையாலும் உன்னைக் கிட்டவொண்ணா திருப்பதினாலே, நாயினேன - அயோக்யனான நான், தெரிந்து - இப்படிப்பட்டதென்று அறிந்து, இறைஞ்சுமா-ஆச்ரயிக்கலாம்படி, சேர்விடத்தை-ஆச்ரயணீயஸ்தலத்தை, சொல்-அருளிச்செய்யவேணும். (௪௭)

வ்யா.—(காரொடொத்தமேனிநங்கள்கண்ண)காளமேகத்தோடு ஸத்ர்சமாய் ஆகர்ஷகமானவடிவையுடையையாய், அத்தை ஆச்ரிதர்க்கு ஸ்வமாக்கிவைத்த க்ர்ஷ்ணனே. இத்தால்-காலவிப்ரகர்ஷத்தால் எனக்கு ஆச்ரயிக்கவிரகில்லையென்கிறார். அந்தகாலவிப்ரகர்ஷமாகிற குற்றமின்றிக்கே நித்யமாயிருக்கிற பரமபதத்தில் வடிவைப்பற்றிஆச்ரயிக்கமாட்டீரோவென்ன(விண்ணினாதனே) அவ்வடிவை நித்யஸூரிகள் நித்யாநுபவம்பண்ணுமத்தனையொழிய தேசவிப்ரகர்ஷத்தாலே எனக்காச்ரயிக்க விரகில்லையென்கை (நீரிடத்தராவணைக்கிடத்தி) தேசகாலவிப்ரகர்ஷங்களாகிற குறையின்றிக்கேக்ஷீராப்தியிலே நித்யஸூரி ஸந்நிஹிதரல்லோமோவென்ன; அவ்விடமும் ச்வேதத்வீபவாஸிகளுக்குக் காதாசித்கமாகக் காணலாமித்தனை யல்லது அஸ்மதாதிகளுக்கு வரவுமொண்ணாது. (என்பர்)இவ்வர்த்தம் வேதங்களும் ஜ்ஞாநாதிகரான வைதிகர்களும்சொல்லக்கேட்டோமித்தனை. "అజాయమానో బహుధా విజాయతే" "యత్రావతీర్ణః కృష్ణాఖ్యః పరం బ్రహ్మ నరాకృతిః" "அஜாயமாநோபஹுதாவிஜாயதே" "யத்ராவதீர்ண:க்ர்ஷ்ணாக்ய: பரம்ப்ரஹ்மநராக்ர்தி:" என்று க்ர்ஷ்ணாவதாரமும்கேட்டே போருமித்தனை.

" తద్విష్ణో: పరమంపదం సదాపశ్యన్తి సూరయః " " தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதாபஶ்யந்தி ஸூரய: " என்று பரமபதத்திலிருப்பும் ஶ்ருதிகள் சொல்லக்கேட்ட வித்தனே; " ఏషనారాయణశ్శ్రీమాన్ క్షీరార్ణవనికేతనః" "ஏஷநாராயண: ஶ்ரீமாந்க்ஷீரார்ணவநிகேதந:" என்று-க்ஷீராப்தியில்வாஸமும் ஜ்ஞாநாதிகர்சொல்லக்கேட்ட வித்தனே. நீரிடத்து-கடலிடத்து. அராவணை - அரவணை. அன்றியும்-அதொழியவும். (ஓரிடத்தையல்லை) ஓரிடத்திலேவர்த்திக்கிறுயல்லை. ஸர்வகதனென்கை. இதுவும் "మాముపాస్వ" "మామేవవిజానీహి" "மாமுபாஸ்வ" "மாமேவவிஜாநீஹி" என்றித்யாதிகளிலே ஶ்ராபாச்ரயமாக உபாஸநாத்ரைவித்யத்திலே சொல்லப்பட்டதிறே. (எல்லையில்லை என்பர்) தஹர சாண்டில்ய ஸ்ம்ருதி வைஶ்வாநரோபகோஸலாதிவித்யைகளிலே ஆச்ரயணீயஸ்தலங்களுக்கு எல்லையில்லையிறே; அவையும் "యస్యాత్మనః" "யமாத்மாநமேவத" என்று - ப்ரதிபத்தி விஷயமல்லாமையாலும் த்ரைவர்ணிகாதிகாரமாகையாலும் நிலமல்ல. (ஆதலால்) பரமபதம் தேஶத்தால் விப்ரக்ர்ஷ்டமாகையாலும், அவதாரம் காலத்தால் விப்ரக்ர்ஷ்டமாகையாலும், க்ஷீராப்தி அதிக்ர்தாதிகாரமாகையாலும், அந்தர்யாமித்வம் ப்ரதிபத்திக்கு அபூமியாகையாலும், த்ரைவர்ணிகாதி காரமாகையாலும், நிலமல்ல. (சேர்விடத்தை நாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே) அயோக்யனான நான் "ఇదమ్" "இதம" என்று புத்திபண்ணி ஆச்ரயிக்கலாம்படி ஆஶ்ரயணீயஸ்தலத்தை யருளிச்செய்யவேணும். (சஎ)

அ.—நாற்பத்தெட்டாம்பாட்டு. ஆச்ரயணீயஸ்தலங்களை ஸாமாந்யேந பரிகரித்துவைத்தோமாகில் அவற்றிலே யொன்றைப்பற்றியாச்ரயிக்கும் ஆச்ரிதபூதர்க்கு ஆச்ரயணுநுகூலமாக பலப்ரதராயிருக்குமதொழிய, உமக்கு ஆஶ்ரயணீயஸ்தலத்தை விஶேஷித்துச் சொல்லுகை நமக்கு பரமோவென்ன; ஆச்ரிதாநாசரிதவிபாகமன்றிக்கே நின்ற நின்ற நிலைகளிலே பரஹிதமே செய்யும்ஸ்வபாவனான பின்பு என்னபேக்ஷிதம் செய்கைஉனக்கே பரமன்றோ வென்கிறார்.

குன்றினின்றுவானிருந்துநீள்கடற்கிடந்துமண்
ஒன்றுசென்றதொன்றையுண்டதொன்றிடந்துபன்றியாய்
நன்றுசென்றநாளவற்றுணல்லுயிர்படைத்தவர்க்
கன்றுதேவமைத்தளித்தவாதிதேவனல்லையே. (சஅ)

ப-ரை.— நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணும்படி, வான்இருந்து-பரமபதத்திலே யிருக்கிறநீ, தாழ்ந்தார்க்கு முகம் கொடுக்கைக்காக, குன்றில் நின்று-திருமலையிலே நின்றருளி, ஆர்த்தரான ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கைக்காக, கடல்-திருப்பாற்கடலிலே, நீள்-நெடுங்காலம், கிடந்து-கண்வளர்ந்தருளி, மண்-பூமியை, ஒன்று - அத்விதீயமாக, சென்று-அளந்தருளி, அதொன்று-அந்த ப்ரதாநமானபூமியை, உண்டு - திருவயிற்றிலே வைத்துரக்ஷித்து,பன்

றியாய்-மஹாவராஹமாய், அதொன்று-ப்ரளயங்கொண்டபூமியை, இடந்து-இடந்தெடுத்து, நன்றுசென்ற-நன்றாகச்சென்ற, நாளவற்றுள்-அந்தநாள்களிலே, நல் - சாஸ்த்ராதிகாரத்தாலே ச்ரேஷ்டரான, உயிர்-மநுஷ்யர்களை, படைத்து-ஸ்ருஷ்டித்து, அன்று-ரஜஸ்தமஸ்ஸுக்கள் மேலிட்டு பகவத்விமுகரானவன்று, அவர்க்கு- அந்தமநுஷ்யர்களுக்கு, ஆச்ரயணீயமாக, தேவு-தேவஜாதியை, அமைத்தளித்த-ஸ்ருஷ்டித்தளித்த, ஆதிதேவனல்லையே-ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரனல்லையோ வென்கிறார். .(௬௮)

வ்யா.—(குன்றில்நின்று) "கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்கிறபடியேதாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காகச் சில ரபேக்ஷியாதிருக்கத்திருமலையிலே நின்றநிலை; (வான்இருந்து) அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளுக்கு நித்யாநுபவம் பண்ணுகைக்குப் பரமபதத்திலே யிருக்கிற பெரியமேன்மையை யுடையையா யிருக்கச்செய்தே யன்றோ திருமலையிலே வந்துநின்றது.'(நீள்கடல் கிடந்து)வாநரங்களையும் வேடரையும்போலன்றிக்கே"ஈச்வரோஹம்" என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்குஆபத்துவந்த போது கூக்குரல்கேட்கைக்காகவன்றோ "தாளுந்தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி" என்கிறபடியே - அஸங்குசிதமாகக் கண்வளர்ந்தருளுகைக் கீடாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளிற்று. (மண்ணொன்றுசென்று) இந்த்ரன்இழந்ததும் மஹாபலி அபஹரித்ததும் த்ரைலோக்யத் தளவாயிருக்க, ப்ரஹ்மலோகபர்யந்தமாக, ஒருத்தரபேக்ஷியா திருக்க எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்திலையோ. ப்ரதாநமான பூமியை யளந்து. "சென்று" என்று-பதவிக்ஷேபமாய், அளந்தென்றபடி. பூமியிலே ஓரிடங்களிலேசென்று அவதரித் தென்னவுமாம். (அதொன்றையுண்டு) அந்தப்ரதாநமான பூமியை ப்ரளயங்கொள்ளப்புக அர்த்தித்வ நிரபேக்ஷமாகத் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்திலையோ. (அதொன்றிடந்து பன்றியாய்) மஹாவராஹமாய ப்ரளயங்கொண்ட பூமியை உத்தரித்து.

(நன்று சென்ற நாளவற்றுள் நல்லுயிர்படைத்து) நன்றாகச்சென்ற நாள்களிலே மநுஷ்யர்களை ஸ்ருஷ்டித்து. "நன்றுசென்ற நாள்" என்று - மஹாவராஹ வேஷத்தைக் காணலாங் காலமென்னுமத்தாலே வராஹகல்பத்தைக் கொண்டாடுகிறார். "நல்லுயிர்" என்று - சாஸ்த்ராதி காரத்தாலே ச்ரேஷ்டரான மநுஷ்யர்களைச் சொல்லுகிறது. "దుర్లభో మానుషో దేహః" "துர்லபோமாநுஷோதேஹ" என்னக்கடவதிறே. (அவர்க்கன்று தேவமைத்தளித்த) அம்மநுஷ்யர்களுக்கு ரஜஸ்தமஸ்ஸுக்கள மேலிட்டு பகவத்விமுகரான வன்று ஆச்ரயணீயராக தேவஜாதியை ஸ்ருஷ்டித்து அளித்த. (ஆதிதேவனல்லையே) இப்படி நின்றநின்ற நிலைகளிலே பராக்ஷிதங்களை ப்ரவர்த்திப்பிக்கிறஜகத்காரணபூதனான ஸர்வேஶ்வரனல்லையோ.

ஆராதகரான மநுஷ்யர்களையும் ஆராத்யரான தேவர்களையும் ஸ்ருஷ்டிக்கையாலே ஜகத்காரணபூதனான நிருபாதிக தேவனாகையாலே ஸர்வஸமாச்ரயணீயனல்லையோ. "సహస్రశీర్షం దేవమ్" "ஸஹஸ்ரசீர்ஷம்தேவம்" என்றும், "సాక్షాద్దేవః పురాణోఽసౌ" "ஸாக்ஷாத்தேவ: புராணோஸௌ" என்றும் சொல்லக்கடவதிறே. ... (௪௮)

அ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. "சேர்விடத்தைநாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே" என்று இவர்க்கு இவரிருந்த பூமியிலே சக்ஷுர்விஷயமாய், அவதாரங்களிலுண்டான நீர்மைகளும் இழக்கவேண்டாதபடி குணபூர்த்தியோடே கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற ஸம்ர்த்தியைக் காட்டக் கண்டநுபவிக்கிறார்.

கொண்டைகொண்டகோதைமீதுதேனுலாவுகூனிகூன்
உண்டைகொண்டரங்கவோட்டியுண்மகிழ்ந்தநாதனூர்
நண்டையுண்டுநாரைபேரவாளைபாயநீலமே
அண்டைகொண்டுகெண்டைமேயுமந்தணீரரங்கமே. (௪௯)

ப-ரை.—கொண்டைகொண்ட - மயிர்முடியிலேயுண்டான, கோதைமீது - மாலையின்மேலே, தேன் உலாவு - வண்டுகள் ஸஞ்சரிக்கும்படியான ஒப்பனையழகையுடையளான, கூனி - கூனியுடைய, கூன் - முதுகில் கூனை, லீலார்த்தமாகவில்லிலே, உண்டைகொண்டு - உண்டையை வைத்து, அரங்க - கூனையுள்ளேபுகும்படி, ஓட்டி - ஓட்டித்தெறித்து, ஆச்ரிதர்க்கு அவர்ஜ்யாவஹமான அஹங்காரத்தை அநாயாஸேநப்போக்குகையாலே, உள்மகிழ்ந்த - ஹ்ருஷ்டனாய், நாதன் - அச்செயலாலேயெனக்குநாதனான சக்ரவர்த்திதிருமகன் வர்த்திக்கிற, ஊர் - தேசமாவது; நாரை - நாரையானது, நண்டையுண்டு - நண்டைவிழுங்கி, பேர - மலைபேர்ந்தாப்போலே பெயர, வாளை - வாளைமத்ஸ்யமானது, பாய - துள்ள, நீலம் - கருநெய்தல் பூவின் இருட்சியை, அண்டைகொண்டு - ஸஹாயமாகக்கொண்டு, கெண்டை - கெண்டைமத்ஸ்யமானது, மேயும் - பயம்கெட்டுமேய்கிற, அம் - அழகிதாய், தண் - குளிர்ந்த, நீர் - ஜலஸம்ருத்தியையுடைய, அரங்கமே - ஸ்ரீரங்கமேயாம். (௪௯)

வ்யா.—(கொண்டை கொண்டகோதைமீதுதேனுலாவுகூனி) மயிர்முடியிலே யுண்டான மாலையின்மேலே வண்டுகள் ஸஞ்சரிக்கும்படியான வொப்பனையாலே ஸ்பர்ஹணீய வேஷையான கூனி. இத்தால் - சேதநனுடைய நிஷ்க்ருஷ்டஸ்வரூபம் ஸ்ரீகௌஸ்துபம்போலே ஈச்வரனுக்கு ஸ்பர்ஹணீயமென்று கருத்து. (கூனிகூன்) கீழ்ச்சொன்னவடிவுக்கும் ஒப்பனைக்கும் சேராதே அவளுக்கு நிரூபகமாய்ப் போந்தகூனை. இத்தால்-ஸ்வரூபவிரோதியாய்,

நாற்பத்தொன்பதாம்பாட்டு. கொண்டைகொண்ட கோதை- கொண்டையிலே உண்டாயிருக்கிறகோதை. கொண்டை - உடைத்தாகை. கோதை-மாலை.

"தேவோஹம், மநுஷ்யோஹம்" என்று நிரூபகமுமாய் ஸ்வரூபத்துக்கு அவத்யமுமா யிருந்துள்ள அஹங்காரத்தை நினைக்கிறார். (உண்டைகொண்டரங்கவோட்டி) லீலார்த்தமாக வில்லிலே யுண்டையைவைத்துக் கூனைஉள்ளே புகும்படியோட்டித் தெறித்து. அவத்யமான அஹங்காரத்தை அநாயாஸேநப்போக்கவல்லசக்தியை நினைக்கிறார். (உண்மகிழ்ந்த நாதனூர்) ஆச்ரிதர்க்கு அவத்யமான அஹங்காரத்தை அநாயாஸேநப் போக்குகையாலே ஹ்ருஷ்டனாய், அச்செயலாலே என்னை யெழுதிக்கொண்ட சக்ரவர்த்தித் திருமகன் வர்த்திக்கிற தேசம். இத்தால் - ஆச்ரிதருடைய அவத்யங்களைப்போக்கி யுகப்பானுந்தானே யென்கை. ஆக, சக்ரவர்த்தித் திருமகனுடைய நீர்மையும் நம்பெருமாள் பக்கலிலே காணலா மென்கிறார்.

(நண்டையுண்டு நாரைபேர) நண்டைவிழுங்கின நாரையானது விழுங்கின கனத்தாலே மலைபோந்தாப்போலேபேர. இத்தால்-பாதக பதார்த்தத்தினுடைய கனம்சொல்லிற்று. (வாளைபாய) அந்நாரைக்குத் தன்மேலே நோக்கென்று நினைத்து பயப்பட்டு வாளையானது துள்ள. (நீலமேயண்டைகொண்டு கெண்டைமேயும்) அதின் மிகுதியைக்கண்டு, கெண்டையானது பயத்தாலே பரப்புமாறப் பூத்த நீலத்தி னிருட்சியை யண்டைகொண்டு, அரணுக்குள்ளே வர்த்திப்பாரைப்போலே, பயகெட்டு மேய்ந்து வர்த்திக்கிற தேசம். இத்தால் - ஸம்ஸாரிகளை நலிகிற அஹங்காரத்தைக்கண்டு பீதராய், முமுக்ஷுக்களாய் உபாஸநத்திலே இழிந்த ஸாதகரைக்கண்டு இவையிரண்டும் பயஸ்தாநமென்று ஸர்வேச்வரனையேயுபாயமாகப் பற்றிநிற்பாராய், ஸ்வரூபாநுரூபமான பகவத்குணாநுபவமே யாத்ரையாய் வர்த்திக்கும் ப்ரபந்நர்க்குஸ்மாரகமாயிருக்கிறதாய்த்து-கெண்டைகளினுடையயாத்ரையென்கை. (அந்தண்நீரரங்கமே) அழகிதாய்ச்ரமஹரமான ஜலஸம்ருத்தியையுடைத்தானகோயில். தாபத்ரயாதுரர்க்கு தாபஹரமான தேசமென்கை. "நீலமேயண்டை கொண்டு" என்று, ச்யாமமாய் ஸுகுமாரமான நீலத்தை யண்டைகொண்டு என்கையாலே - பெருமாளுடைய ஸௌந்தர்யமே அபாச்ரயமும், அத்தை ஆச்ரயித்திருப்பார்க்குபோகயமுமதுவே யென்று கருத்து. இப்பாட்டில் சொன்ன ஸ்வாபதேசங்கள் இவர்க்கு நிலமல்லாதபோது தேசத்தை யாச்ரயித்தநுபவிக்க இழிந்தவர்க்கு இப்பாட்டால் ஒருப்ரயோஜந மில்லை. ... ... (௪௩)

அரங்க - மறைய. நீலம் - கருநெய்தல். அதின்மிகுதி-நாரை, வாளை இவற்றின்திரள். சப்தத்துக்கு அர்த்தம்வேறாயிருக்க, இப்படி ஸ்வாபதேசத்திலே ஒதுக்குவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (இப்பாட்டிலித்யாதி.) நிலமல்லாதபோது-விவக்ஷையல்லாதபோது.

அ.—ஐம்பதாம்பாட்டு. ஆந்தரவிரோதத்தைப் போக்கவல்ல வவதார வைபவத்தையும், பாதகபதார்த்த ஸகாஶத்திலே நிர்ப்பயராய் வர்த்திக்கலாம்படி அபாச்ரயமான தேசவைபவத்தையும் சொன்னார் - கீழ்ப்பாட்டில்; இதில் - பாஹ்யவிரோதத்தைப் போக்கவல்ல வவதார வைபவத்தையும் ஸர்வஸமாச்ரயணீயமான தேசவைபவத்தையும் அருளிச்செய்கிறார்.

வெண்டிரைக்கருங்கடல்சிவந்துவேவமுன்னொருநாள்
திண்டிறற்சிலைக்கைவாளிவிட்டவீரர்சேருமூர்
எண்டிசைக்கணங்களுமிறைஞ்சியாடுதீர்த்தநீர்
வண்டிரைத்தசோலைவேலிமன்னுசீரரங்கமே. (௫0)

ப-ரை.—வெள் - வெளுத்த, திரை - திரைகளையுடைத்தாய், கரு-கறுத்த, கடல் - கடலானது, சிவந்துவேவ - சிவந்துவேம்படியாக, முன்னொருநாள் - இருபத்தெட்டாம் சதுர்யுகத்தில் த்ரேதாயுகத்திலே, திண்திறல்-மிக்கவலியை யுடைய, சிலை-ஸ்ரீசார்ங்கத்தை, கை-கையிலேவாங்கி, வாளிவிட்ட-அம்புகளையே வின, வீரர்-ஆண்பிள்ளையான சக்ரவர்த்தித் திருமகன், சேரும்-நித்யவாஸம்பண்ணுகிற, ஊர் - ஊராவது; எண்திசைக்கணங்கள் - எட்டுத்திக்கிலுள்ள ஸமூஹங்களும் வந்து, இறைஞ்சி - பெருமாளைத் திருவடிதொழுது, ஆடு - தீர்த்தமாடி, தங்களபிமத விரோதியான ஸாவபாபங்களையும் போக்கும், தீர்த்தம்-சுத்தியையுடைய, நீர் - நீரையுடைத்தாய, வண்டு - மதுபானமத்தமான வண்டுகள், இரைத்த - ப்ரீதிஉள்ளடங்காமே சப்திக்கிற, சோலைவேலி-சோலையால சூழப்பட்டிருப்பதாய், சீர் - இப்பாவநத்வ போக்யத்வங்களாகிற இநநன்மை, மன்னும் - நித்யமாய்ச்செல்லும். அரங்கம் - கோயிலேயாம். (௫0)

வ்யா.—(வெண்டிரைக்கருங்கடல்) வெளுத்ததிரைகளையுடைத்தான கருங்கடல். திரைகிளர்த்தியின் மிகுதிசொல்லிற்று. (சிவந்துவேவ)கறுத்தகடலோடுவெளுத்ததிரைகளோடு வாசியற அக்நியின்நிறமான சிவப்பே நிறமாய் மறுகும்படி தக்தமானபடி. இத்தால் - ஆச்ரிதரக்ஷணத்துக்கு வருணன் விரோதியாக அவனுக்கு இருப்பிடமான கடலை யழியச்செய்தபடி. (முன்னொருநாள் திண்டிறல் சிலைக்கைவாளிவிட்ட வீரர்சேருமூர்) இருபத்தெட்டாம் சதுர்யுகத்திலே மிக்கவலியையுடைய ஸ்ரீஶார்ங்கத்தை, "चापमानय" "சாபமாநய"என்கிறபடியேவாங்கி அம்புகளையேவின வாண்பிள்ளை சேருமூர். "உண்மகிழ்ந்தநாதனூர்" என்று ஆச்ரிதரக்ஷணம்ஸ்வயம்ப்ரயோஜநமாகப் பண்ணும் நீர்மையைச் சொல்லிற்று - கீழ்ப்பாட்டில்; இதில் - விரோதிநிரஸந ஶக்தியைச்சொல்லுகிறது. இத்தால்— அவதாரத்துக்குப் பிற்பாடரான ஆச்ரிதர்க்கு ஸ்வாநுபவவிரோதியான ஶப்தாதிகளில் ப்ராவண்யத்தைப் போக்குகைக்குக் கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிறபடி யென்கை. திண்மையென்றும், திறல் என்றும் வலியைச் சொல்லுகையாலே - மிக்கவலியென்றபடி.

(எண்டிசைக்கணங்களு மிறைஞ்சியாடுதீர்த்தநீர்) எட்டுதிக்கிலு முள்ள ஸமூஹங்கள் வந்து பெருமாளைத் திருவடித்தொழுது தீர்த்தமாடி, தங்களபிமத விரோதியான ஸர்வபாபங்களையும் போக்கும் சுத்தியையுடைய நீரையுடைத்தாய். "సర్వశక్తిమయ ధామ స ర్వతీర్థమయం సరః। సర్వపుణ్యమయో దేశః సర్వదేవమయో హరిః" "ஸர்வஶக்திமயந்தாமஸ்ஸர்வதீர்த்தமயம்ஸர:। ஸர்வபுண்யமயோதேஶ: ஸர்வதேவமயோஹரி:" என்னக்கடவதிறே. ஸமூஹங்களாவன - ஐச்வர்யார்த்திகள், முமுக்ஷுக்கள், ஜந்மவர்த்தங்களால் யோக்யாயோக்யர் இவர்கள். (வண்டினைத்த சோலைவேலி) மதுபாநமத்தமான வண்டுகள், ப்ரீதிஉள்ளடங்காமேசப்திக்கிறசோலையைச் சூழவுடைத்தாய். (மன்னுசீரரங்கமே) இப்பாவநத்வ போக்யத்வங்க ளாகிற இந்நன்மைகள் நித்யமாய்சசெல்லும்கோயில். அநாத்மகுணோபேதர்க்கு பாவநமுமாய், ஆத்மகுணோபேதர்க்கு போக்யமுமான தேசமென்கை. ... ... (ருo)

அ.—ஐம்பத்தோராம்பாட்டு. கடலைநியமித்து அக்கரையிலேயேறி ராவணனையழியச்செய்தவீரன் நித்யவாஸம் பண்ணுகிற தேசமாய், சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவான சதுர்முகன் தன் அதிகாரஸித்திக்காக ஆஸ்ரயித்ததேசம் கோயிலென்கிறார்.

சரங்களைத்துரந்துவில்வளைத்திலங்கைமன்னவன்
சிரங்கள்பத்தறுத்துதிர்த்தசெல்வர்மன்னுபொன்னிடம்
பரந்துபொன்னிரந்துநுந்திவந்தலைக்குமவார்புனல்
அரங்கமென்பர்நான்முகத்தயன்பணிந்தகோயிலே. (ருக)

ப-ரை.—வில்வளைத்து-ஸ்ரீசார்ங்கத்தை வளைத்து, சரங்களைத் துரந்து-அம்புகளை யேவி, இலங்கைமன்னவன - லங்காதிபதியான ராவணனுடைய, சிரங்கள் பத்து - பததலைகளையும், அறுத்து - அறுக்க, பின்பு வரபலத்தாலே முளைக்க, உதிர்த்த - பனங்கனிகள் உதிர்த்தாப்போலே யுதிர்த்து, செல்வர்-வீரஸ்ரீயால பூர்ணரானவர், மன்னு - நித்யவாஸமபண்ணுகிற, பொன் - ஸ்ப்ருஹணீயமான, இடம - ஸ்தாநமானது; பரந்து - எங்குமொக்கபபரந்து, வந்து - மாறுதேவந்து, பொன-பொனகளை, நுந்த-தள்ளி, அலைக்கும-அலையாநின்றுள்ள, வார்புனல்-ப்ரவாஹரூபமான காவேரியால் சூழப்பட்டதாய், நான்கு வேதங்களையும ஒருக்காலே உச்சரிக்கைக்கான, நானமுகத்து - நானகு முகங்களையுடையனுய, அயன-அஜனெனனும் பேரையுடையனான ப்ரஹ்மா, பணிந்த - பக்தாபிமாநனாய் வந்தாசரயிக்கும, கோயில் - கோயிலை, அரங்கமென்பர் - ஸ்ரீரங்கமெனறு சொல்லா நின்றார்கள்புராணவித்துக்கள். (ருக)

வ்யா.—(சரங்களைத்துரந்து வில்வளைத்து) ஸ்ரீசார்ங்கத்தை வளைத்து, அம்புகளையேவி. துரத்தல் - போக்கல். ஐச்வரமான ஸங்கல்பத்தாலன்றிக்கே ஆச்ரிதவிரோதியான ராவணனை அம்பாலே, பெறாப்பேறுபெற்றானாகக்கைதொட்டுக்கொன்றபடி. (இலங்கை

மன்னவன்) லங்கையையண்டைகொண்டால் ஸ்த்ரீகளுக்கும் எதிரிகளைஜெயிக்கலாம்,வெளிநிலத்திலும்எதிரிகளைஜயிக்கவல்லவாண்பிள்ளை ராவணன். அத்யக்ஷனானவன். "లఙ్కాం రావణపాలితామ్" "லங்காம்ராவணபாலிதாம்." (சிரங்கள் பத்தறுத்துதிர்த்த செல்வர்) அவன்தலைகள் பத்தையும் அறுத்தபின்பு வரபலத்தாலே சதசாகமாக முளைக்க முளைக்க, பனங்கனியுதிர்த்தாப்போலே யுதிர்த்த வீரஸ்ரீயால் பூர்ணரானவர். (மன்னுபொன்னிடம்) அவன் நித்யவாஸம்பண்ணுகிற ஸ்ப்ருஹணீயமான ஸ்தாநம். ரக்ஷகாபேக்ஷையுடைய சேஷபூதனுக்கும் ரக்ஷ்யாபேக்ஷையுடைய சேஷிக்கும் ஸ்ப்ருஹணீயமான விடம். இத்தால் - அவதாரத்துக்குப் பிற்பாடரான அநந்ய ப்ரயோஜநர்க்கு ப்ரபலப்ரதிபந்தகமாய், விஷயாந்தரப்ரவணமான மநஸ்ஸேபரிகரமான இந்த்ரியங்களோடே யழியச்செய்கைக்கு வர்த்திக்கிற தேசமென்கை. "తమేన్ద్రియాననం ఘోరం యో మనోరజనీచరమ్। వివేకశరజాలేన శమం నయతి యోగినామ్" "தமேந்த்ரியாநநம் கோரம் யோமநோரஜநீசரம்। விவேகஶரஜாலேந ஶமம்நயதியோகிநாம்" என்னக்கடவதிறே. "ఆత్మైవరిపురాత్మనః" "ஆத்மைவரிபுராத்மநः."

(பரந்துபொன் நிரந்து நுந்திவந்தலைக்கும்வார்புனல்) தன்னபிநிவேசமெல்லாம் கொண்டு எங்குமொக்கபரந்து மாறாதேவந்து பொன்களைக்கோயிலிலே தள்ளி அலையெறியாநின்றுள்ள காவேரி. வார்புனல் - ப்ரவாஹ ரூபமான ஜலம். அதாகிறது - காவேரி. (அரங்கமென்பர் நான்முகத்தயன்பணிந்த கோயிலே) உபயபாவநாநிஷ்டனான ப்ரஹ்மாவானவன் தன்னதிகாரத்துக்குவரும் விரோதிகளைப்பரிஹரிக்கைக்குப்ரஹ்மபாவனைக்கும் பலமானமோக்ஷத்துக்குமாக சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவென்றும், நாலுவேதங்களையும் ஒருக்காலே உச்சரிக்கைக்கீடான நான்கு முகத்தையுடையனென்றும், அஜனென்றும்,தன்னைஸர்வாதிகனாகவபிமாநித்திருக்கிறவன் பக்நாபிமாநனாய் வந்தாச்ரயிக்குங் கோயிலை"ஸ்ரீரங்கம்"என்று நின்றார்கள் புராணவித்துக்கள். "రతిఙ్గత ఇతిరఙ్గమ్" "ரதிங்கத இதிரங்கம்." "క్షీరాబ్ధేర్మణ్డలాద్భానోర్యోగినాం హృదయాదపి। రతిఙ్గతో హరిర్యత్ర రఙ్గమిత్యభిధీయతే" "க்ஷீராப்தேர் மண்டலாத்பாநோர்யோகிநாம் ஹ்ருதயாதபி। ரதிங்கதோஹரிர்யத்ரரங்க மித்யபிதீயதே." ... ... (௫௧)

அ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு. ராமாவதாரத்துக்குப்பிற்பாடர்க்குக் கோயிலிலே வந்து உதவினபடிசொல்லிற்று - கீழ்மூன்று

ஐம்பத்தோராம்பாட்டு. மநஸ்ஸு சத்ருவோவென்ன; அருளிச்செய்கிறார் (ఆత్మైవరిపురాత్మనః- ஆத்மைவரிபுராத்மநः என்று.) நிரந்து-நிறைந்தென்றாய் (மாறாதேயென்கிறது.) ... ... (௫௧)

பர்ட்டாலே; இனியிரண்டுபாட்டாலே - க்ர்ஷ்ணாவதாரத்துக்குப்பிற்பாடர்க்குதவும்படி சொல்லுகிறது. அநந்தரம் கீழ்ப்பாட்டோடு ஸங்கதியென்னென்னில்; சதுர்த்தசபுவநாத்யக்ஷனாய் ஜ்ஞாநாதிகனான ப்ரஹ்மாவுக்கு ஆச்ரயணீயமானவளவேயன்றிக்கே, அநந்யப்ரயோஜநராய் அநந்யஸாதநராயிருந்துள்ளவர்களுக்கு அநுபவஸ்தாநம் கோயிலென்கிறார்.

பொற்றையுற்றமுற்றல்யானைபோரெதிர்ந்துவந்ததைப்
பற்றியுற்றுமற்றதன்மருப்பொசித்தபாகனூர் •
சிற்றெயிற்றுமுற்றல்மூங்கில்மூன்றுதண்டரொன்றினர்
அற்றபத்தர்சுற்றிவாழுமந்தணீரரங்கமே. (௫௨)

ப-ரை.—பொற்றையுற்ற - கற்பாறையிலே வர்த்திக்கையாலே, முற்றல்-திண்ணிதான, யானை-ஆனையாய், போரெதிர்ந்துவந்ததை- யுத்தத்திலே யெதிர்த்துவந்தத்தை, பற்றி - மதியாதே சென்று பற்றி, உற்று - நாலுகாலுக்குமுள்ளான அதினுடம்பிலே புக்குநுழைந்து, மற்று - அதுக்குமேலே, அதன் - அதினுடைய, மருப்பு-கொம்பை, ஒசித்த-அநாயாஸேந முறித்த, பாகனூர்-பாகன்வர்த்திக்கிற தேசமாவது; சிறு-சிறுகின, எயிறு-கண்களையுடைத்தாய், முற்றல்-திண்ணிதான, மூங்கில் மூன்றுதண்டர் - மூங்கில்தண்டு மூன்று தரித்த ஸந்யாஸிகளும், ஒன்றினர் - இத்தேசமே பரமப்ராப்யமென்று வந்து சேர்ந்தவர்களும், அற்ற - புருஷார்த்தாந்தரங்களில் பற்றற்று, பத்தர் - பெருமாளே ப்ராப்ய ப்ராபகமென்றிருக்குமவர்களும், சுற்றிவாழும் - கோயில்வாஸமே வாழ்வாக வர்த்திக்கிற, அம் - தர்சநீயமாய, தண் - ச்ரமஹரமான, நீர் - ஜலஸம்ருத்தியையுடைய, அரங்கம் - கோயிலாம். (௫௨)

வ்யா.—(பொற்றைபுற்றமுற்றல் யானை) கற்பாறையிலே வர்த்திக்கையாலே திண்ணிதான ஆனை. மநுஷ்யஸஞ்சாரமின்றிக்கே மரங்களாலே நெருங்கின காட்டிலே வர்த்திக்கையாலே மநுஷ்யரைக்கண்டு கண்கலங்கிவர்த்தித்தவானை யென்றுமாம். பொற்றை-கற்பாறையும், கரிக்காடும். (போரெதிர்ந்துவந்ததை) ரஜகனைப் போலன்றியே யுத்தத்திலே யெதிர்த்து வந்தத்தை. (பற்றியுற்று) மதியாதேசென்று பற்றி, நாலுகாலுக்குமுள்ளான வதினுடலிலே புக்குநுழைந்து. (மற்றதன் மருப்பொசித்தபாகனூர்) அதுக்குமேலே, அதினுடைய ஹிம்ஸாபரிகரமான கொம்பை அநாயாஸேந முறித்தபாகன் வர்த்திக்கிறதேசம். "பாகன்" என்று - அதுக்கு ரக்ஷகனானவன், அதினளவறிந்துஇடம்கொள்ளுமாப்போலே இடங்கொண்டுஅத்தை யழித்தபடியாலே சொல்லுகிறது. இத்தால்-க்ர்ஷ்ணாவதாரத்தில் பிற்பாடரானார்க்குப்பெருமாள்ஸ்வாநுபவ விரோதிவர்க்கத்தை குவலயாபீடத்தையழித்தாப்போலேயழியச்செய்யுமவனென்கை.

ஸ்ரீ வஸுதேவரும் தேவகிப் பிராட்டியும் ஸ்ரீமதுரையில் பெண்களும் ரங்கமத்யத்திலேக்ர்ஷ்ணனைக்காணவாசைப்பட்டிருக்க வாசலிலே இடைச்சுவராயிறே குவலயாபீடம் நின்றது. "ஸக்யஹபஶ்யதயுவேவ வஸுதேவோஹூத் ப்ராதுராஸீஜ்ஜநார்த்தந:" "ஸக்யஹபஶ்யதயுவேவவஸுதேவோஹூத்ப்ராதுராஸீஜ்ஜநார்த்தந:."

(சிற்றெயிற்றுமுற்றல் மூங்கில் மூன்றுதண்டர்) சிறுகின கண்களையுடைத்தாய்த் திண்ணிதானமூங்கில்தண்டுமூன்றுதரித்த ஸந்ந்யாஸிகள். "மூங்கில் மூன்றுதண்டர" என்கிறவித்தால்-கீழுள்ள ஆச்ரமத்ரயத்தையும் வ்யாவர்த்திக்கிறது. "சிற்றெயிற்றுமுற்றல" என்கிறவித்தால்-"ஏகேந ப்ரஹ்மதண்டேந ஸர்வாஸ்த்ராணி ஹதாநி மே" "ஏகேநப்ரஹ்மதண்டேநஸர்வாஸ்த்ராணிஹதாநிமே" என்கிறந்யாயத்தாலேஎதிர்த்தவிரோதிவர்க்கத்தைத் தானே யழியச்செய்யவற்றாய், தனக்கழிவின்றிக்கே யிருக்குமென்னு மத்தை நினைக்கிறார். (ஒன்றினர்) பகவத்விஷயத்திலே ஏகாந்தஹ்ர்தயரானவர்கள் என்னுதல், தேசாந்தரங்களைவிட்டு இத்தேசமே ப்ராப்யமென்று வந்து சேர்ந்தவர்களென்னுதல். (அற்றபத்தர்) புருஷார்த்தாந்தரங்களிலும் ஸாதநாந்தரங்களிலும் பற்றற்றுப் பெரியபெருமாளே ப்ராப்யமும்ப்ராபகமுமென்று இருக்குமவர்கள். த்ரிதண்டதாரிகளாய் பகவத்விஷயத்திலே ஏகாந்தஹ்ர்தயராய்பரவஸ்துவைத்திரித்தங்களைத்ர்ணமாகபுத்திபண்ணும்ஸந்ந்யாஸிகளென்றுமாம். (சுற்றிவாழும்) ஸர்வாவஸ்தையிலும் விடாதே கோயிலில்வாஸமே வாழ்வாகஇருக்குமவர்களென்னுதல்; தேசஸம்ர்த்தியைமநோரதித்து அதுவேபோக்யமாக விருக்குமவர்களென்னுதல். சுற்றல் - எண்ணல். (அந்தண்நீரரங்கமே) தர்சநீயமாய்ச்ரமஹரமான ஜலஸம்ர்த்தியையுடையகோயில். (௫௨)

அ.—ஐம்பத்துமூன்றும்பாட்டு. அநிருத்தாழ்வானுடைய அபிமதவிரோதியாய்ப்ரபலமானபாண ப்ரமுகவர்க்கத்தைப் போக்கினப்போலே, இனறுஆசரிதருடைய போகவிரோதியைப்போக்குகைக்கு அந்தக்ர்ஷ்ணன்நித்யவாஸம்பண்ணும்தேசம் கோயிலென்கிறார்.

ஐம்பத்திரண்டாம்பாட்டு. குவலயாபீடம் அநுபவவிரோதியாயிருந்ததோவென்ன; அருளிச்செய்கிறார்(ஸ்ரீ வஸுதேவருமித்யாதி.) "மூங்கில்" என்கையாலே - பலாசதண்டத்தை யுடையப்ரஹ்மசாரியையும், "மூன்றுதண்டர்" என்கையாலே - ஒருதண்டுடைய க்ர்ஹஸ்தாஶ்ரமத்தையும் வ்யாவர்த்திக்கிறது. வஸிஷ்டனுடைய ஏகதண்டத்தாலே விச்வாமித்ரனுடைய அஸ்த்ரங்கள் நசிக்கையாலே (ஸர்வாஸ்த்ராணி ஹதாநி - ஸர்வாஸ்த்ராணிஹதாநி என்கிறது) "ஒன்றினர் அற்றபத்தர்" என்று - தனித்தனியேயாதல்; ஸந்ந்யாஸிகளுக்கு விசேஷணமாதல். பற்றுகை - த்ர்ணமாக விசாரிக்கை. ()

மோடியோடிலச்சையாயசாபமெய்திமுக்கணான்
கூடுசேனைமக்களோடுகொண்டுமண்டிவெஞ்சமத்
தோடவாணனாயிரங்கரங்கழித்தவாதிமால்
பீடுகோயில்கூடுநீரரங்கமென்றபேரதே. (௫௧)

ப-ரை.—சாபமெய்தி - ப்ரஹ்மாவாலே சபிக்கப்பட்டு, கையும் கபாலமுமாய் இரந்து திரிகையாலே, இலச்சையாய - லஜ்ஜாவிஷ்டனாய், முக்கணான்-த்ரிநேத்ரதாரியான ருத்ரன், மோடியோடு - காளியோடே, மக்களோடு கூடு-மக்களோடே திரண்ட, சேனைகொண்டு - ஸேனையையுங்கொண்டு, வெஞ்சமத்து - க்ரூரமான யுத்தத்திலே, மண்டியோட - அளைகுலையத் தலைகுலைய ஓட, வாணன - பாணாஸுரனுடைய, ஆயிரம் கரம் கழித்த - ஆயிரம தோள்களையும் கழித்த, ஆதிமால் - ஜகத்காரண பூதனான ஸர்வேச்வரனுடைய, பீடுகோயில்-பெரிய கோயிலாவது, கூடு - ஸஹ்யத்தினின்றும் வந்ததும் வர்ஷஜலத்தோடு கூடினதுமான, நீர் - நீரையுடைத்தான, அரங்கமென்றபேரது-திருவரங்கமென்னும் திருநாமத்தையுடையது. (௫௧)

வ்யா.—(மோடியோடிலச்சையாயசாபமெய்தி) ஸாத்விகர்க்கு தர்சநமேதொடங்கி லஜ்ஜையாம்படி அவர்களால் அபரிக்ராஹ்யையான சாபத்தைப்ராபித்தகாளியோடே. தமஃப்ரசுரையாகையாலும், துராசாரையாகையாலும், ஸாத்விகரால் உபேக்ஷணீயையாயிறே அவளிருப்பது. (சாபமெய்தி-இலசசையாய-முக்கணான்) "कपाली त्वं भविष्यसि" "கபாலீத்வம் பவிஷ்யஸி" என்றுப்ரஹ்மாசபிக்கையாலே லஜ்ஜாவிஷ்டனான லலாடநேத்ரனென்றுமாம். ஆகமாதிமுகத்தாலேதன்னைஸர்வேச்வரனாக வுபதேசித்து, லலாடநேத்ரத்வ கங்காதரத்வாதிகளாலே தன்னுடையசக்திகளையு மாவிஷ்கரித்து, லோகத்தை யடங்கக் கும்பிடுகொள்ளுகிறவனுக்கு ப்ரஹ்மசாபத்தாலே க்ஷேத்ரஜ்ஞத்வமும் சாஸ்த்ரவச்யதையும் ப்ரகாசித்தால் லஜ்ஜாவிஷ்டனாகச்சொல்லவேணுமோ. (கூடுசேனைமக்களோடு கொண்டுமண்டிவெஞ்சமத்தோட) மக்களோடே திரண்ட ஸேனையையுங்கொண்டு அளைகுலையத்தலைகுலைய யுத்தத்திலேயோட. நம்பிமூத்தபிரானும் க்ர்ஷ்ணனும் விஜயத்திலே மண்டினவாறே ருத்ரனும்பரிகரமும் ஓடுகையிலேமண்டினபடி.

(வாணனாயிரங்கரங்கழித்த) பாணனுடைய ஆயிரந்தோள்களையும் கழித்த. பாணனுடைய ரக்ஷணத்திலே ப்ரதிஜ்ஞைபண்ணின ருத்ரனுடைய அபிமாநத்தைக்கழித்தான்; தோள்வலிகொண்டாடின பாணனுடைய தோள்களையும் கழித்தான். (ஆதிமால்) ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன். "कृष्ण एव हि लोकानाम् उत्पत्तिरपि चाप्ययः" "க்ர்ஷ்ண ஏவஹிலோகாநாம் உத்பத்திரபிசாப்யயஃ" என்னக்கடவதிறே. (பீடுகோயில்) பெரியகோயில். பீடு-பெருமை. (கூடுநீரரங்கமென்றபேரதே) ஸஹ்யத்தினின்றும் வந்ததும் இப்பாலுண்டானவர்ஷத்தாலு மாகக்கூடின நீரையுடைத்தான திரு

வரங்கமென்னும் திருநாமத்தையுடைத்து. "சாபமெய்தி - இலச்சையாய-முக்கணன் - மோடியோடும் - மக்களோடும் - கூடுசேனை-கொண்டு - வெஞ்சமத்து - மண்டி - ஓடவாணனாயிரங்கரங் கழித்தவாதிமால் - கூடுநீர் - அரங்கமென்றபேரதான-பீடுகோயில்" என்றந்வயம். ஆக இரண்டுபாட்டாலும் செய்ததாய்த்து - ஆச்ரிதர்க்கு விரோதிகளா மித்தனையேவேண்டுவது, எதிர்த்தலை திர்யக்காகவுமாம், ஸர்வாதிகனான ருத்ரனாகவுமாம், அழியச்செய்கைக்குகுவலயாபீடம் *கொலையானையாய்த்தோற்றுகையாலேகொன்றருளினான். க்ர்ஷ்ணனைத் தோற்பித்து பாணனைரக்ஷிக்கக்கடவோமென்று வந்த ருத்ரன் தோற்றுப்போம்படிபண்ணினான். "[illegible]" "பாராயமமகிமபுஜை:" என்று தோள்வலிகொண்டுவந்த பாணனுடையதோள்களைக்கழித்தான். ஆக அவர்களுடையநினைவு அவர்கள்தலையிலே யாக்குமவனென்னை. ... ... (௫௩)

அ.— ஐம்பத்துநாலாம்பாட்டு. ஸாத்விகர்க்கு துஷ்ப்ராபமாம்படியான அரணையுடையலங்கையை அம்பாலே யழித்த தசரதாத்மஜன், பிற்பாடர்க்கு ஸ்வபோகவிரோதியான ஸ்வாதந்த்ர்யமாகிற அரணையழிக்கைக்கும, லங்கையிலே பண்ணின ஆயாஸத்தாலே வந்த ச்ரமந்திரக்காவேரி சிசிரோபசாரம் பண்ணுகைக்காகவும் வந்து கண்வளர்ந்தருளுகிறதேசம் கோயிலென்கிறார். கீழிரண்டுபாட்டால் - பாஹ்யமான ஸ்வபோகவிரோதிகளையழியச்செய்தபடி சொல்லிற்று; இதில்-ஸ்வபோகத்தில் "[illegible]" "மமேதம்" என்றுவருமாந்தரமான ஸ்வாதந்த்ர்யத்தை லங்கையிலரணையழித்தாப்போலே யழிக்குமென்கிறது.

இலைத்தலைச்சரந்துரந்திலங்கைகட்டழித்தவன்
மலைத்தலைப்பிறந்திழிந்துவந்துநுந்துசந்தனம்
குலைத்தலைத்திறுத்தெறிந்தகுங்குமக்குழம்பினோடு
அலைத்தொழுகுகாவிரியரங்கமேயவண்ணலே. (௫௪)

ப-ரை.— இலை - இலைபோலேயிருக்கிற, தலை - தலையையுடைத்தான, சரம் - திருச்சரங்களை, துரந்து - ஏவி, இலங்கைகட்டு - லங்கையின அரணை, அழித்தவன் - அழித்ததசரதாத்மஜனாய்; மலைத்தலைபிறந்து-ஸஹ்யபர்வதத்திலேபிறந்து, வர்ஷத்திலே வேரோடே பறியுண்டு, இழிந்து வந்து - அங்கேநின்று இழிந்துவந்து, நுந்து - தள்ளாநின்றுள்ள, சந்தனம் - சந்தனமரங்கள், குலைத்து - குங்குமப்படர்கொடியை நிலைகுலைத்து, அலைத்து - சுற்றுமலைத்து, இறுத்து - முறித்து, எறிந்த - வீசின, குங்குமக்குழம்பினோடு - குங்குமரஜஸ்ஸுக்களைக் குழம்பாக்கி அதனோடே கூட, அலைத்தொழுகு - அலைத்துக்கொண்டுவாரா நின்றுள்ள, காவிரி - திருக்காவேரியால் சூழப்பட்ட, அரங்கம் மேய - கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிற, அண்ணல் - ஸ்வாமி, தனபக்கல்ருசியில்லாதார்க்கு ருசியையுண்டாக்குகைக்கும், ருசிபிறந்தார்க்கு ஆச்ரயணீயனாகைக்கும் உரியனென்கிறார். (௫௪)

வ்யா.— (இலைத்தலைச்சரந் துரந் திலங்கைகட்டழித்தவன்) இலைபோலேயிருக்கிற தலையையுடைத்தான திருச்சரங்களாலேயேவி லங்கையி லரணையழித்த தசரதாத்மஜன. இலைத்தலைச்சரம்-வாய ம்பு. கட்டு - அரண். இவ்வபதாநத்தால் - ராமாவதாரத்தைச் சொ ல்லிற்று, ஸ்வபோகத்தை "மமேதம்" "மமேதம்" என்ற சூர்ப்பணகி யை யழியச்செய்தவனே அழியச்செய்யவேணுமென்று நினைத்து. (மலைத்தலைப் பிறந்திழிந்து வந்து நுந்து சந்தநம்) ஸஹ்யத்திலே பிறந்து வர்ஷத்திலே வேரோடேபறியுண்டு அந்நீரோடே யிழிந்து வந்து தள்ளாநின்றுள்ளசந்தநம்.

(குலைத்தலைத்திறுத்த •தெறிந்த குங்குமக் குழம்பினோடலைத்து ஒழுகுகாவிரி) குங்குமப்பட்டர்கொடியை நீரவந்து குலைதநுச் சுற்று மலைத்துமுறித்தெறிந்த குங்குமராஜஸ்ஸுக்களாக குழம்பாக்கி அத்தோடேகூட அலைத்துக்கொண்டுவாராநின்றகாவேரி. இந்தால்- லங்கையையழித்த ச்ராமந்த்ரமும், அவன் திருமேனியில் ஸௌகு மார்யத்துக்கு ஸத்ர்சமாகவும், சந்தநகுங்குமங்களாலே பரிதப்போரி தையாயக்கொண்டு காவேரி அடிமை செய்யும்படியைச் சொல்லிற் று. (அரங்கமேயவண்ணலே) கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிற ஸ்வாமீ. காவேரிஸஹ்யத்தில்நின்றும் அடிமை செய்கைக்கு வந்த தூரத்தோபாதி போருமாய்த்து - க்ஷீராப்தியில்நின்று மடிமை கொள்ளுகைக்கு வந்ததூரம். அண்ணல-ஸ்வாமி. ஸம்ஸாரத்தில் தம்பக்கலில் ருசியில்லாதார்க்கு ருசிஜநகனுகைக்கும், ருசிபிறந்தார் க்கு ஆச்ரயணீயனுகைக்கும், ஆச்ரிதனை அநுபாவ்யமாகவடி மை கொள்ளுகைக்கு முரியவனென்னை ... ... • (ருச)

அ.—ஐம்பத்துநாலாம்பாட்டு. இப்படி ஆச்ரிதார்த்தமாகக்கோயி லிலே கண்வளர்ந்தருளுகிறபடியைக்காட்டி, லக்ஷ்மீ பூமி நீளாநாய கனுயிருந்துவைத்து எனக்கு மறாகமொண்ணுதபடி யென்னை அங்கீ கரித்தருளினுமென்கிறார்.

மன்னுமாமலர்க்கிழத்திவையமங்கைமைந்தனாய்
பின்னுமாயர்பின்னைதோண்மணம்புணர்ந்ததன்றியும்
உன்னபாதமென்னசிந்தைமன்னவைத்துநல்கினாய்
பொன்னிசூழரங்கமேயபுண்டரீகனல்லையே. (ருரு)

ப-ரை.—மன்னு-மென்மைமருளித்ர நாற்றங்களையுடைத்தாகையாலே, மா- ச்லாக்யமான, மலர்க்கிழத்தி-தாமரைமலரைப்பிறப்பகமாகவுடைய பெரியபிரா ட்டியாருக்கும, வையமங்கை - ஸ்ரீபூமிபிராட்டிக்கும், மைந்தனாய் - இஷ்ட னுய், பினனும் - அதுக்குமேலே, ஆயர் - இடைக்குலத்தில் பிறந்த, பின்னை

ஐம்பத்துநாலாம்பாட்டு. ஸ்வபோக்த்ர்த்வ விரோதி போக்கு கைக்கு, வேறொரு அவதாரமாகாதோ, ராமாவதாரமாகவேணுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (இவ்வபதாநத்தாலித்யாதி.) குங்குமர ஜஸ்ஸு - குங்குமதூளென்றபடி. ... ... (ருரு)

தோள் - நப்பின்னைப் பிராட்டி திருத்தோளோடே, மணம் புணர்ந்து-ஸம்ச்லேஷித்து, அதன்றியும் - அதுக்குமேலேயும், உன்னபாதம்-ஸ்ரீபோக்யமான உன திருவடிகளை, என்னசிந்தை - நித்யஸம்ஸாரியான வென்னுடையஹ்ருதயத்திலே, மன்னவைத்து - பொருந்தும்படிவைத்து, நல்கினுய - பக்ஷபதித்தாய்; பொன்னி - காவேரியாலே, சூழ் - சூழப்பட்ட, அரங்கம் - கோயிலிலே, மேய-நித்யவாஸம் பண்ணின, புண்டரீகனல்லையே - புண்டரீகாவயவனல்லையோ.(ருரு)

வ்யா.—(மன்னுமாமலர்க்கிழத்தி) மென்மை குளிர்த்தி நாற்றமென்கிற விவற்றால் ச்லாக்யமான தாமரைப்பூவில் பிறப்பையுடையளான பெரியபிராட்டியாராகிற மஹிஷி. "..." "க்ர்தாபிஷேகாம் ஹிஷீ" என்கிறபடியே ஜகத்ரக்ஷணத்துக்கு முரியவளென்கை. கிழத்தி - உரியவள். (வையமங்கைமைந்தனாய்) ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு அபிமதனாய். "..." "யுவதிஸ்ச குமாரிணீ" என்கிற விவள்பருவத்தோடே சேர, "..." "யுவாகுமார:" என்கிற பருவத்தையுடைய காந்தனாய். மைந்தன்- இளையோன். (பின்னும்) அதுக்குமேலே. ஸர்வாதிகத்வத்துக்கும் போகபௌஷ்கல்யத்துக்கும் இவர்களிருவருமே யமைந்திருக்க அதுக்குமேலே. "..." "..." "அஸ்யேஶாநாஜகதோ விஷ்ணுபத்நீ" "ஹ்ரீஸ்சதேலக்ஷ்மீஸ்ச பத்நயௌ" "தேவிமாராவார் திருமகள்பூமி."(ஆயர்பின்னை தோள் மணம்புணர்ந்து) அபிஜாதையான நப்பின்னைப் பிராட்டியோடே கலந்து போரும் போகபௌஷ்கல்யத்தையுடையனாய.

(அதன்றியும்) உனக்கபிமத விஷயங்களை குறைவற்றிருக்கச் செய்தே அதுக்குமேலேயும். (உன்னபாதமென்ன சிந்தைமன்ன வைத்து நல்கினாய்) "அமரர்சென்னிப்பூ" என்கிறபடியே ஸ்ரீபோக்யமான உன்திருவடிகளை நித்யஸம்ஸாரியா யிருக்கிற வென்னுடைய ஹ்ருதயத்திலே க்ஷணகாலம் விஸ்லேஷமில்லாதபடி வைத்து என்பக்கலிலே பக்ஷபதித்தாய். வாத்ஸல்யம் தந்தாமுடைய வைலக்ஷண்யத்தையும் எதிர்த்தலையில்தண்மையையும் பார்க்கவொட்டாதிறே.(பொன்னிசூழரங்கமேயபுண்டரீகனல்லையே) ச்ரமஹரமான காவேரியாலே சூழப்பட்டகோயிலிலே நித்யவாஸம்பண்ணின புண்டரீகாவயவனல்லையோ. புண்டரீகாவயவ ப்ராசுர்யத்தாலேபுண்டரீகவ்யபதேஶம்"..." "..." "ஆநந்தோப்ரஹ்ம" "விஜ்ஞாநம்ப்ரஹ்ம" இதிவத், திவ்யாவயவங்களுக்கு ச்ரமஹரமான தேசவாஸத்தால் பிறந்த செவ்விக்குமேலே என்னோட்டை ஸம்ஸ்லேஷத்தாலேயும் புதுக்கணித்ததென்கை. ... (ருரு)

ஐம்பத்தஞ்சாம்பாட்டு. மன்னுமாமலர் - மாமலரிலே மன்னுகிற கிழத்தி. இவர்களிருவரும் ஆதிக்யத்துக்கும் போகத்துக்கும் அமைந்திருப்பார்களென்கிறதுக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார், (... - அஸ்யேஶாநேத்யாதி.) ... ... (ருரு)

அ.—ஐம்பத்தாரும்பாட்டு. இனி மேலாறுபாட்டாலே-திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுபவிக்கிறார். இதில் முதற்பாட்டால்-ஆச்ரிதவிரோதியான ராவணனையழியச்செய்தசக்ரவர்த்தித்திருமகன்,பின்புள்ளாரான அநந்யப்ரயோஜநர்க்குஸ்வப்ராப்திவிரோதிகளைப்போக்கி அநுகூலவ்ர்த்தி கொள்ளுகைக்குத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுபவிக்கிறார்.

இலங்கைமன்னனைந்தொடைந்துபைந்தலைநிலத்துகக்
கலங்கவன்றுசென்றுகொன்றுவென்றிகொண்டவீரனே
விலங்குநூலர்வேதநாவர்நீதியானகேள்வியார்
வலங்கொளக்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. (௫௬)

ப-ரை.—அன்று - வரங்கொடுத்த தேவதைகளும் குடியிருப்பு இழக்கும்படியானதசையிலே, சென்று - ஸேதுபந்தநத்தைப் பண்ணிச்சென்று, இலங்கைமன்னன் - லங்கைக்கு நிர்வாஹகனானராவணன், கலங்க-பயப்படும்படிக்கீடாக, அவனுடைய, பை-வலிதான, ஐந்தொடைந்து தலை - பத்துத்தலைகளும், நிலத்து-பூமியிலே, உக-உதிர்ந்து உருமாய்ந்துபோம்படி,கொன்று—, வென்றிகொண்ட - ஜயத்தை லபித்த, வீரனே - வீரத்தனமையையுடையவனே; வைதிககர்மாநுஷ்டாதாக்களென்று தோற்றும்படியான, நூல் - யஜ்ஞோபவீதத்தை, விலங்கர் - சரீரத்திலே யுடையவர்களாய், வேதநாவர் - ஸர்வகாலமும் வேதமோதுகிற நாக்கையுடையராய், நீதியான - ஸாவகர்ம ஸமாராத்யன்ஸர்வேசவரனென்று, கேள்வியார் - ஸதாசார்யோபதேச முடைய ப்ராஹ்மணருடைய, வலங்கொள - அநுகூலவ்ர்த்தியை அங்கீகரிக்கைக்காக, குடந்தையுள் - திருக்குடந்தையிலே, கிடந்த - கண்வளர்ந்தருளுகிற, மாலல்லையே-ஸர்வாதிகனல்லையோ. (௫௬)

வ்யா.—(இலங்கைமன்னன்) குளவிக்கூடுசேர்த்தாப்போலே ஹிம்ஸகர் சேரவர்த்திக்கும் லங்கைக்கு நிர்வாஹகனான ராவணன். "रावणो राक्षसेश्वरः" "ராவணோராக்ஷஸேஸ்வரஃ" என்கிறபடியே அந்ததுர்வர்க்கத்துக்கடையநிழலாயிருக்குமவனிறே.(ஐந்தொடைந்து பைந்தலைநிலத்துக) அறுக்கவரிதான பத்துத்தலையையும் பூமியிலேயுதிர்த்து உருமாய்ந்துபோம்படி. பைந்தலை-வலியதலை. "ஐந்தொடைந்து" என்று-"दशेन्द्रियाननम्" "தசேந்த்ரியாநநம்" என்கிறபடியே அநந்யப்ரயோஜநர்க்கு பாதகமான சிலவஞ்சகங்களைநினைக்கிறாராய்த்து. (கலங்கவன்றுசென்றுகொன்று வென்றிகொண்ட வீரனே)பயமிருக்கும்படி யறியாதவன் பயத்தாலே போக்கற்றுக் கலங்கும்படி,இவனுக்கு வரங்கொடுத்த தேவதைகளும் குடியிருப்பிழக்கும்படியானதசையிலே ஜநஸ்தாநவதத்தையும் ஸேதுபந்தநத்தையும் பண்ணிச் சென்றுஅவனைக்கொன்று விஜயத்தை லபித்த ஆண்புலியானவனே.

ஐம்பத்தாரும்பாட்டு. சிலவஞ்சகங்கள் – மநஸ்ஸு முதலான தசேந்த்ரியங்களை நினைக்கிறாரென்றுஸ்வாபதேசம்.

(விலங்குநூலர்) ஸர்வகாலமும் வைதிக கர்மாநுஷ்டாதாக்களென்று தோற்றும்படியான யஜ்ஞோபவீதத்தை சரீரத்துக்கு நிரூபகமாக வுடையராய். விலங்கு - உடம்பு. (வேதநாவர்) ஸர்வகாலமும் வேதபாராயணம் பண்ணுகையாலே வேதோச்சாரணத்தை நிரூபகமாக வுடையராய். (நீதியானகேள்வியார்) ஸர்வகர்மஸமாராத்யன் ஸர்வேஶ்வரனென்று ஸதாசார்யோபதேசமுடைய ப்ராஹ்மணர். (வலங்கொளக் குடந்தையுள் கிடந்த மாலுமல்லையே) அவர்களுடைய அநுகூலவ்ருத்தியை ஸ்வீகரிக்கைக்காகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வாதிகனல்லையோ. வலம் - அநுகூலம். சக்ரவர்த்தித் திருமகனுடைய ஆண்பிள்ளைத் தனத்தை ஆராவமுதாழ்வார்பக்கலிலே யநுபவித்தபடி சொல்லிற்றாய்விட்டது. ... ... (ருசு)

அ.—ஐம்பத்தேழாம்பாட்டு. ப்ராப்திவிரோதியைப் போக்கி அநுகூலவ்ருத்தி கொள்ளுமளவன்றியே, நித்யாநபாயிநியான பிராட்டியோட்டைஸம்ஶ்லேஷத்துக்கு இடைச்சுவரான ராவணனை யழியச்செய்தாப்போலே, பிற்பாடரான ஆச்ரிதர்க்கு அநுபவ விரோதிகளைப் போக்குகைக்காகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுபவிக்கிறார்.

சங்குதங்குமுன்கைநங்கைகொங்கைதங்கலுற்றவன்
அங்கமங்கவன்றுசென்றடர்த்தெறிந்தவாழியான்
கொங்குதங்குவார்குழல்மடந்தைமார்குடைந்தநீர்
பொங்குதண்குடந்தையுட்கிடந்தபுண்டரீகனே. (ருஎ)

ப-ரை.—சங்கு - சங்குவளைகள், தங்கு - கழலாதே யிருக்குமுள்ள, முன்கை - முன்கையையுடையளாய், நங்கை- ரூபகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும் பூர்ணையான பிராட்டியுடைய, கொங்கை தங்கல்-ஸ்தநங்களோடே ஸம்ச்லேஷிக்கையை, உற்றவன் - விரும்புற்ற ராவணனுடைய, அங்கம் மங்க - சரீரம் அழிகைக்காக, அன்று - பிராட்டி தலைப்பின்னலாலே உச்சரக்கிட்டுக்கொண்டு முடிய நினைத்தகாலத்திலே, சென்று - அவனிருந்த விடத்தே சென்று, அடர்த்து - அடைமதிள் படுத்தி, எறிந்த - அவன தலையை யறுத்த, ஆநசஹார்கைத் தாலே, ஆழியான் - கடல்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன்; கொங்குதங்கு - பரிமளம் மாறாத, வார் - நீண்ட, குழல் - குழலையுடைய, மடந்தைமார் - ஸ்த்ரீகள், குடைந்த - அவகாஹித்த, நீர்-நீரானது, பொங்கு - இவர்களுடைய நெருக்கத்தாலே ப்ரவ்ருத்தமாய், அத்தாலே, தண் - குளிர்ந்த, குடந்தையுள் - திருக்குடந்தையிலே, கிடந்த-கண்வளர்ந்தருளுகிற, புண்டரீகனே - புண்டரீகாக்ஷனே. (ருஎ)

வ்யா.—(சங்குதங்குமுன்கை) வளை கழலாதேயிருந்துள்ள முன்கையை யுடையவள்.

வலம்-ப்ரதக்ஷிணமாகையாலே (அநுகூலமென்கிறது.) (ருசு)

அவன் கொண்டாடும்வளை முன்கைவளையாகையாலே வ்யதிரேகத்தில் கழலுவதும் அதுவேயிறே. இத்தால் - நித்யாநபாயிநியென்கை. (நங்கை) ரூபகுணத்தாலும் ஆத்மகுணத்தாலும் பூர்ணையானவள். “तुल्यशीलवयोवृत्तां तुल्याभिजनलक्षणाम्” “துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம்” என்கிற பிராட்டி பக்கலிலே. (கொங்கைதங்கலுற்றவனங்கம் மங்க) திருவடிகளிலே தங்கப்ராப்தமாயிருக்க, மாத்ர்விஷயமென்று பாராதே அதிக்ரமத்தைநினைத்த ராவணனுடைய ஶரீரமழிகைக்காக. தங்கல்-தொங்கல். இந்த துர்ப்புத்திககடி தேஹாத்மாபிமாநமாகையாலே அதுக்கடியான சரீரத்தை யாய்த்து அழிக்கநினைத்தது. (அன்று) உடலையு முயிரையும் பிரித்தாப்போலே, இருவரையும் கடலுக்கக்கரையு மிக்கரையுமாம்படி பண்ணினஅன்றென்னுதல்; வேண்யுத்க்ரதந தஶையிலே யென்னுதல். (சென்று) “अभियाता प्रहर्ता च” “அபியாதாப்ரஹர்த்தாச” என்கிறபடியே அவனிருந்தவிடத்தே சென்று. (அடர்த்தெறிந்தஆழியான்) அடைமதிட்படுத்தி அவன்தலையையறுத்து அந்த ஹர்ஷத்தாலே கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவன். எறிதல் - அறுத்தல்.

(கொங்குதங்குவார்குழல் மடந்தைமார்) பரிமளம் மாறாத நீண்ட குழலையுடைய ஸ்த்ரீகள். (குடைந்தநீர்பொங்கு தண்குடந்தைபுள்) அவகாஹித்தநீரானது இவர்களுடைய நெருக்கத்தாலே ப்ரவர்த்தமாய், அத்தாலே ஶ்ரமஹரமானதிருக்குடந்தையிலே. இத்தால் - ஆராவமுதாழ்வாரை யநுபவிக்கச்சொல்லுமவர்களை, “शतं मालाहस्ताः” “ஶதம்மாலாஹஸ்தா:” என்கிறபடியே எதிரேற்றுக்கொள்ளுமவர்களையு மங்குத்தைக்கு பரிசாரகைகளாயும் நிற்குமவர்களென்கை. (கிடந்தபுண்டரீகமே)தாமரைக்காடு பரப்புமாறப் பூத்தாப்போலே யிருக்கிற திவ்யாவயவங்களோடே தன்னை யநுபவிப்பிக்கைக்காகக் கண்வளர்ந்தருளுகிறவன். ஆகஇரண்டுபாட்டாலே- சக்ரவர்த்தித்திருமகனுடைய ஆண்பிள்ளைத்தனத்தையும் அழகையுமநுபவித்து, மேலிரண்டு பாட்டாலே - க்ர்ஷ்ணனுடைய வீரசரிதத்தையும் அழகையும் ஆராவமுதாழ்வார்பக்கலிலே யநுபவிக்கிறார். ... ... (ருள)

அ.—ஐம்பத்தெட்டாம்பாட்டு. ஆஸ்ரிதார்த்தமாக யமளார்ஜுநங்கள் தொடக்கமானப்ரதிகூலவர்க்கத்தைப்போக்கின நீ, அக்காலத்துக்குப் பிற்பாடர்க்குதவுகைக்காக ஆஸ்ரிதவாத்ஸல்யத்தாலே வந்து கண்வளர்ந்தருளினையல்லையோ வென்கிறார்.

ஐம்பத்தேழாம்பாட்டு. “தமக்கு” என்று விசேஷிப்பா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (அவன்கொண்டாடுமித்யாதி.) ()

மரங்கெடநடந்தடர்த்துமத்தயானைமத்தகத்
துரங்கெடப்புடைத்தோர்கொம்பொசித்துகந்தவுத்தமா
துரங்கம்வாய்பிளந்துமண்ணளந்தபாதவேதியர்
வரங்கொளக்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. (ருஅ)

ப-ரை.—மரம் - யமளார்ஜுநமென்னும் மருதமரங்கள், கெட - முறியும்படி, நடந்து - தளர்நடையிட்டு, மத்தயானை - மதிக்கப்பண்ணிக்கொண்டுவந்த குவலயாபீடத்தின்செருக்குப்போம்படி, அடர்த்து-நெருக்கி, ஓர்- அத்விதீயமான, கொம்பு - கொம்பை, ஒசித்து - முறித்து, உரங்கெட - அதின் மிடுக்கழியும்படி, மத்தகத்து - தலையிலே, புடைத்து - புடைத்துக்கொன்றருளி, உகந்த - ஆச்ரிதவிரோதிபோகப்பெற்றதென்று உகந்த, உத்தமா - புருஷோத்தமனே!; துரங்கம்வாய் பிளந்து - கேசியுடைய வாயைக்கிழித்து, வாமநனாய் மஹாபலியஜ்ஞவாடத்தில் சென்றிரந்து நீரேற்றுப் பெற்ற, மண்-பூமியை, அளந்த - அளந்தருளிய, பாத - திருவடிகளையுடையனாய், வேதியர் - வேதார்த்த தாத்பர்யம் கைப்பட்டவர்கள், வரம்கொள - தந்தாமபேக்ஷிதங்களை உன் பக்கலிலே அபேக்ஷிக்கலாம்படி, குடந்தையுள்கிடந்த - திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற, மாலல்லையே - வ்யாமுக்தனல்லையோ. (ருஅ)

வ்யா.—(மரங்கெடநடந்து) மருதுகள் முடியநடைகற்று. நடக்கையாவது - தவழுகையும், தளர்நடையிடுகையும். (அடர்த்து மத்தயானை) மதிக்கப்பண்ணிக்கொண்டுவந்த குவலயாபீடத்தைச் செருக்குப்போம்படி நெருக்கி. (மத்தகத்துரங்கெடப்புடைத்தோர் கொம்பொசித்து) ஆனைவீழக் குத்துமிடத்தில் அத்விதீயமான கொம்பைமுறித்து, அதினுடைய மிடுக்கழியும்படி மஸ்தகத்திலேபுடைத்து. மதத்தாலே வந்த செருக்கை அதினுடைய நாலுகாலுக்குமுள்ளே புக்கு நின்று உழைப்பித்துக்கொடுத்து அதினுடைய ஹிம்ஸாபரிகரமான கொம்பைமுறித்துக் கொன்றருளினனென்றதாய்த்து. (உகந்தவுத்தமா) ஆச்ரிதவிரோதிபோகப் பெற்றதென்று உகந்த புருஷோத்தமனே. இங்குபுருஷோத்தமனென்கிறது-ஸ்வரூபத்தால் வந்த உத்கர்ஷத்தளவன்றியே ஆச்ரிதபக்ஷபாதத்தால் வந்த உத்கர்ஷத்தைநினைத்து. குணாதிக்யமிறே வஸ்துவுக்கு உத்கர்ஷஹேது.

(துரங்கம் வாயபிளந்து) ஸந்த்யாகாலத்திலே திருவாய்ப்பாடியை யழிக்கவந்த கேசியுடைய வாயைக்கிழித்து. (மண்ணளந்த பாத) ஸ்ரீவாமநனாய எல்லார்தலையிலும்வைத்த திருவடிகளையுடையவனே. த்ரைவிக்ரமாபதாநம், கேசிவதஸமநந்தரத்திலே க்ர்ஷ்ணனுடைய சேஷ்டிதமாகப் பேசலாம்படியிறே இரண்டவதாரத்துக்குமுண்டான ஸௌப்ராத்ரம். அதாகிறது-எல்லாரையும் வரையாதே தீண்டுகையும் எதிரிகளை யழகாலே யழிக்கையும்.

ஐம்பத்தெட்டாம்பாட்டு. நடைதருகை யாவதென்னென்ன; அருளிச்செய்கிறார் (தவழுகையுமித்யாதி.) உழப்பி - தடுமாறப் பண்ணி. ... ...(ருஅ)

(வேதியர்வரங்கொளக் குடந்தையுட்கிடந்த மாலுமல்லையே) வேதார்த்ததாத்பர்யம் கைப்பட்டவர்கள் தந்தாமபேக்ஷிதங்களை உன்பக்கலிலே யபேக்ஷிக்கலாம்படி திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற வ்யாமுக்தனல்லையோ. வஞ்சகராய் வந்த யமளார்ஜுநங்களை தன்மௌக்த்யத்தாலேயழித்து எதிரிகளாகக்கண்முகப்பேதோற்றவந்த குவலயாபீடத்தையும் கேஶியையும் அநாயாஸேநவழியச் செய்து, தான் வஞ்சகனாய் எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்து முறையுணர்த்தினபுருஷோத்தமன் தன்வாத்ஸல்யத்தாலே பிற்பாடர்க்குதவவந்துகிடக்கிறதேஶம் திருக்குடந்தையென்றதாய்த்து.()

அ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு. பண்டு ஆச்ரிதவிரோதிகளைப் போக்கின மிடுக்கனாயவைத்து, அழகாலும் சீலத்தாலும் ஆச்ரிதரை யெழுதிக்கொள்ளுகைக்காக வவதரித்த க்ர்ஷ்ணன், பிற்பாடருடைய இழவுதீர ஸர்வப்ரகாரத்தாலும் புஷ்கலமான திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுபவிக்கிறார்.

சாலிவேலிதண்வயல்தடங்கிடங்குபூம்பொழில்
கோலமாடநீடுதண்குடந்தைமேயகோவலா
காலநேமிவக்கிரன்கரன்முரன்சிரமவை
காலனோடுகூடவிற்குனித்தவிற்கைவீரனே. (௫௯)

ப-ரா.—சாலி - செந்நெலை, வேலி - சுற்றுமுடைத்தாய், தண் - குளிர்ந்த, வயல் - வயலையும், அதுக்குள்ளாக, தடம் - பெரிய, கிடங்கு - அகழையும், அதுக்குள்ளாக, பூ - பூத்த, பொழில் - பொழிலையுமுடைத்தாய், கோலம் - அழகிதாய, நீடு - ஓக்கத்தையுடைத்தான, மாடம் - மாடங்களையுடைத்தாய், தண் - குளிர்ந்த, குடந்தை - திருக்குடந்தையிலே, மேய - நித்யவாஸம் பண்ணுகிற, கோவலா - க்ர்ஷ்ணனாய; காலநேமி - காலநேமியும், வக்கிரன் - தந்தவக்ரனும், கரன் - க்ரூரனான, முரன் - முராஸுரனுமாகிற இவர்களுடைய, சிரமவை - தலையையறுத்து, காலனோடு கூட - அவர்களுடைய ப்ராணன காலனோடே கூடும்படிக்கீடாக, வில்வளைத்த - வில்லை வளைத்து அம்பெய்தவனாய், விற்கை வீரனே - வில்பிடித்த பிடியிலே அவர்கள் முடியும்படியான ஆண்பிள்ளைத்தனத்தையுடையவனே. (௫௯)

வ்யா.—(சாலிவேலிதண்வயல் தடங்கிடங்கு பூம்பொழில்) செந்நெலைச்சுற்றுமுடைத்தாய், ச்ரமஹரமான வயலையும் அதுக்குள்ளாகப்பெரிய அகழையும் அதுக்குள்ளாகப்பூத்த பொழிலையுமுடைத்தாய். இத்தால் - ஆராவமுதாழ்வாருடைய ஸௌகுமார்யத்துக்கு அநுரூபமாக ஸர்வப்ரகார போக்யதையையுடைய தேசமென்கை. (கோலமாடநீடு தண்குடந்தைமேயகோவலா) தர்சநீயமுமாய், ஓக்கத்தையுமுடைய மாடங்களை யுடைத்தாய், ச்ரமஹரமான திருக்குடந்தையிலே நித்யவாஸம்பண்ணுகிற க்ர்ஷ்ணனே. இத்தால் - ஆராவமுதாழ்வாருடைய ரஸிகத்வத்துக்கு ஏகாந்தமான போகஸ்தானமென்கை. "கோவலா" என்கிறது - க்ர்ஷ்ணனுடைய அழகும்

ஸௌலப்யமும் ஶீலமும் ஆராவமுதாழ்வார் பக்கலிலே காணலாம் படி யிருக்கையாலே. அவதாராந்தரங்களென்னவொண்ணாது ஸர்வ தாஸாத்ர்ஶ்யத்தாலே. * "குடந்தையன் கோவலன்குடியடியார்" என்று ஒருதேசவிசேஷத்திலும் ப்ரஸித்தமிறே.

(சாலநேமி வக்கரன் கரன்முரன்சிரமவை) காலநேமி தந்த வக்ரன் க்ரூரனான முரன் இவர்களுடைய தலைகளையறுத்து. (காலனோடுகூட வில்குனித்த) இவர்கள்பேர்கேட்கவஞ்சுங்காலன் இவர்களுக்கு நிர்வாஹகனாய், இவர்களஞ்சிச் சென்று கூப்பிடும்படியாக, ஸங்கல்பத்தா லன்றியே, வில்லாலே யழியச்செய்தவனே. (விற்கைவீரனே) ஆச்ரிதவிரோதிகளை யழியச்செய்கைக்கு வில்லைக் கவும் வேண்டாதே, "𑌶𑌕𑍍𑌰𑌚𑌾𑌪𑌨𑌿𑌭𑍇 𑌚𑌾𑌪𑍇 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌶𑌤𑍍𑌰𑍁𑌨𑌾𑌶𑌨𑍇" "ஶக்ர சாபநிபேசாபே க்ர்ஹீத்வா ஶத்ருநாஶநே" என்னும்படியே வில் பிடித்தபிடியிலே அவர்கள் முடியும்படியான ஆண்பிள்ளைத்தனத்தை யுடையவனே. ... ... (௫௯)

அ.—அறுபதாம்பாட்டு. உகந்தருளினநிலங்கள் ஆச்ரயணீயஸ்தலம், போகஸ்தானம் ஒருதேசவிசேஷமென்றிராதே, "நிலையாரநின்றான்" என்று-நிலையழகிலே துவக்குண்பார்க்குத் திருமலையிலே நின்றருளியும், "கிடந்ததோர் கிடக்கை" என்று - கிடையழகிலே துவக்குண்பார்க்குத்திருக்குடந்தையிலேகண்வளர்ந்தருளியும், இப்படிசெய்தருளிற்று, போக்தாக்களான ஆச்ரிதர்பக்கலுள்ளவ்யாமோஹமிறேயென்கிறார்.

செழுங்கொழும்பெரும்பனிபொழிந்திடவுயர்ந்தவேய
விழுந்துலர்ந்தெழுந்துவிண்புடைக்கும்வேங்கடத்துள்நின்று
எழுந்திருந்துதேன்பொருந்துபூம்பொழிற்றழைக்கொழும்
செழுந்தடங்குடந்தையுட்கிடந்தமாலுமல்லையே. (௬0)

ப-ரை.—செழும் - பருத்த, கொழும - தாரைகளாய விழுகிற, பெரும்பனி - மூடுபனியானது, பொழிந்திட - சொரிய, உயர்ந்த - ஓங்கின, வேய்-மூங்கில்கள், விழுந்து - பனியினசனத்தாலே தரையளவும் சாய்ந்து, உலர்ந்து-ஸூர்யகிரணத்தாலே பனி உலருகையாலே, எழுந்து - தலையெடுத்து, விணபுடைக்கும் - ஆகாசத்தி னெல்லையிலே முட்டும், வேங்கடத்துள் நின்று - திருமலையிலே நின்றருளி, தேன் - வண்டுகள், எழுந்திருந்து - கிளாநது பரவி, பொருந்து - திரியவும்படிந்து வர்த்திக்குமதாய, தழை - தழைதது, கொழும்-சிரத்தையையுடைத்தாய், பூ - பரப்புமாறப் பூத்த, பொழில - பொழிலை யுடைத

ஐம்பத்தொன்பதாம்பாட்டு. அழகுமுதலானவற்றை அவதாரங்களுக்கு இல்லையென்ன; அருளிச்செய்கிறார் (அவதாராந்தரம்த்யாதி.) க்ர்ஷ்ணனே யென்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன; அருளிச்செய்கிறார் (குடந்தையன்கோவலனித்யாதி.) ... (௫௯)

தாய், செழும் - அழகிய, தடம் - தடாகத்தை யுடைத்தான, குடந்தையுள்- திருக்குடந்தையிலே, கிடந்த - கண்வளர்ந்தருளுகிற, மாலல்லையே - வ்யாமுக்தனல்லையோ. (௬0)

வ்யா.— (செழுங்கொழும்பெரும்பனிபொழிந்திட) பருத்து தாரைகளாய் விழுகிற மூடுபனிசொரிய. செழுமை-பெருமை. கொழுப்பு - கொழுமை. இடைவிடாதேதாரைகளாய் விழுகை. செழுமை- வண்மை. பெரும்பனி - மூடுபனி. இப்படி பனியை வர்ணிக்கிறது- ஏதேனுமாகத் திருமலையிலே ஸம்பந்தித்தவை தமக்கு மநோஹரமா யிருக்கையாலே. (உயர்ந்தவேய்விழுந்து) ஓங்கினமூங்கில்கள் பனியால்வந்த கனத்தாலே தரையளவும் சாய்ந்து. "செழுங்கொழும் - உயர்ந்தவேய் - பெரும்பனிபொழிந்திட - விழுந்து" என்றுமாம். அப்போது - பெருத்து ச்ரத்தையை யுடைத்தாய் உயர்ந்த மூங்கில்களென்றாகக் கடவது. திருவேங்கட முடையானுடைய விசேஷகடாக்ஷமே விளைநீராக வளருகிறவை யென்கை. (உலர்ந்தெழுந்து விண்புடைக்கும் வேங்கடத்துள் நின்று) ஆதித்யகிரணங்களாலே பனியுலருகையாலே, பனியுலர்ந்தவாறே தலையெடுத்து ஆகாசத்தினெல்லையிலே முட்டுந் திருமலையிலே நின்றருளி. இத்தால்- திருவேங்கடமுடையானுடைய விசேஷகடாக்ஷத்திலே தலையெடுக்கையும் வ்யதிரேகத்தில் தரைப்படுகையும் அத்தேசிகமானபதார்த்தங்களுக்கு ஸ்வபாவமென்னுமிடத்துக்கு த்யோதகமென்கை.

(எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழும்) வண்டுகள்கிளர்ந்துபரவாநதிரியவும்படிந்துவர்த்திக்குமதாய், தழைத்துச்ரத்தையையுடைத்தாய், பரப்புமாறப்பூத்த பொழிலையுடைய தேசம். இத்தால் - வண்டுகள் பொழிலின்மதுவெள்ளத்தாலே அவகாஹிக்கமாட்டாதே அலமாக்குமென்கை. (செழும்தடங்குடந்தையுள்) விடமாட்டாதே அப்பொழிலுக்குள்வாயில் அழகிய தடாகத்தையுடைத்தானதிருக்குடந்தையிலே. இத்தால்- அத்தேசத்தில்திர்யக்குக்களும்போக்யத்தாலேவந்துகளித்துவர்த்திக்கும்படியாயும்த்ராதரயாதுரர்க்குக்கண்டபோதே ச்ரமஹரமாயுமிருக்கும்தேஶமென்கிறது. (கிடந்தமாலுமல்லையே) "கிடையழகிலே துவக்குண்டு அநுபவிப்பாராரோ" என்று அவஸரப்ரதீக்ஷனாய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகிற வ்யாமுக்தனல்லையோ. ... ... (௬0)

அ.—அறுபத்தோராம்பாட்டு. இப்படி போகஸ்தாந மாகையாலே ஆராவமுதாழ்வார்திருவடிகளிலேதாமநுபவிக்க விழிந்தவிடத்தில், வாய்திறத்தல் அணைத்தல் செய்யாதே ஒருபடியேகண்வளர்ந்தருளக்காண்கையாலே, ஸுகுமாரமான இவ்வடிவைக்கொண்டு த்ரிவிக்ரமாதி சேஷ்டிதங்களைப்பண்ணுகையாலேதிருமேனிநொந்து

கண்வளர்ந்தருளுகிறாராகத் தம்முடையபரிவாலே அதிசங்கித்து என்பயம்கெடும்படி ஒன்றை நிர்ணயித்து எனக்கருளிச் செய்ய வேணுமென்கிறார். இதொழியப்ராங்ந்யாயத்தாலே அர்ச்சாவதார ஸங்கல்பமென்னவொண்ணாதிறே இவர்க்கு.

நடந்தகால்கள்நொந்தவோநடுங்கஞாலமேனமாய்
இடந்தமெய்குலுங்கவோவிலங்குமால்வரைச்சுரங்
கடந்தகால்பரந்தகாவிரிக்கரைக்குடந்தையுள்
கிடந்தவாறெழுந்திருந்துபேசுவாழிகேசனே. (௬௧)

ப-ரை.—நடந்த - திருவுலகளந்தருளின, கால்கள் - திருவடிகள், நொந்தவோ-நொந்த ஆயாஸம் பொறுமையாலேயோ; நடுங்க - பூமிப்பிராட்டி தன்னை உத்தரிக்கைக்கு ஒருவழிகாணாதே நடுங்குகிறதசையிலே, ஞாலம்-பூமியை, ஏனமாய் - மஹாவராஹமாய், இடந்த - அண்டபித்தியிலே புக்கு இடந்தெடுத்தவது பொறாமே, மெய்குலுங்கவே - திருமேனியிலுண்டான ஆயாஸத்தாலேயோ; விலங்கு - நீர்வரவொண்ணாதபடி இருவிலங்கான, மால்வரை - பெரியமலைகளையும், சுரம்-மணற்காடுகளையும், கடந்த-கடந்த நீரோடு, கால்பரந்த-கால்பரந்து வருகிற, காவிரி-காவேரி யடிமைசெய்ய, கரை - அதன்கரையிலுள்ள, குடந்தையுள்-திருக்குடந்தையிலே, கிடந்தவாறு-கண்வளர்ந்தருளுகிறபடியை விட்டு, எழுந்திருந்துபேசு-எழுந்திருந்து அருளிச்செய்யவேணும்; வாழி - இக்கிடையழகு நித்யமாய்ச்செல்லவேணும்; கேசனே-குழலைப்பேணி எனக்லேசத்தைத்தீர்த்தருளவேணுமெனகிறார். (௬௧)

வ்யா.—(நடந்தகால்கள்நொந்தவோ) "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்கிறபடியே ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு திருவுலகளந்த விது பொறாமே நொந்துகண்வளர்ந்தருளுகிறதோ. சக்ரவர்த்தித் திருமகனுயக்காட்டிலும் மலையிலும ஸுகுமாரமான திருவடிகளைகொண்டு திரிந்தவது பொறாமேநொந்து கண்வளர்ந்தருளுகிறதோ. "எவ்வாறுநடந்தனை யெம்மிராமாவோ!" என்று - ஸௌகுமார்யத்தை யறியுமவர்கள் கூப்பிடும்படியாயிறேயிருப்பது. நடந்ததுபொறாமேகண்வளர்ந்தருளுகிறதாகில் நான் திருவடிகளைப்பிடிக்க. (நடுங்க ஞாலமேனமாயிடந்த மெய்குலுங்கவோ) அன்றிக்கே, பூமிக்கபிமானியான பிராட்டி, பாதாளகதையாய்த் தன்னுடைய உத்தரணத்துக்கு ஒருவழிகாணாதே நின்றுநடுங்குகிற தசையிலே,பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணயான பூமியை மஹாவராஹமாய்அண்டபித்தியிலேபுக்கிடந்தவதுபொறாமே திருமேனியில்ஆயாஸத்தாலே கண்வளர்ந்தருளுகிறதோ!;அதுவாகில் நான்திருமேனியைப்பிடிக்க.(விலங்குமால்வரைச்சுரம் கடந்தகால்பரந்த காவிரிக்கரை) நீர்வரவொண்ணாதபடி இரு

அறுபத்தோராம்பாட்டு. ப்ராங்ந்யாயம் - திருவெஃகாவிலும் அர்ச்சாவதார ஸமாதிகுலைந்து கார்யம் செய்கை.

விலங்கான பெரியமலைகளையும் சுரங்களையும் கடந்த நீரோடு கால்பாந்து வருகிறகாவேரிக்கரையிலே. சுரம்-காடும்; அருநெறியும். இத்தால்-ஆராவமுதாழ்வாருடைய ஸௌகுமார்யத்துக் கநுகூலமாக சிசிரோபசாரம் பண்ணுகைக்கு, காவேரி, மலையென்ன அருநெறியென்ன இவற்றைக்கடந்து தனனபிநிவேஶம் தோற்றப்பரந்து வந்தபடியைச் சொல்லிற்றென்கை. (குடந்தையுள் கிடந்தவாறு) காவேரி அடிமைசெய்யத் திருக்குடந்தையிலே ச்ரமம்தோற்றக் கண்வளர்ந்தருளுகிறபடியை. காவேரி சிசிரோபசாரம்பண்ணக் காண்கையாலும், திருவெஃகாவில் கிடையில், "ఛాయావాసత్వమనుగచ్ఛేత్" "சாயாவாஸத்வமநுகச்சேத்" என்கிறபடியே தொடர்ந்துபோரக்காண்கையாலும், கோயிலிலும் "உன்னபாதமென்னசிந்தைமன்னவைத்து நல்கினாய்" என்று தன்னபிமதம் பெறுகையாலும், திருக்குடந்தையில் முகந்தாராதேகண்வளர்ந்தருளுகைக்குஹேது ச்ரமமென்றிருக்கிறார். ஆராவமுதாழ்வாரும் இவருடைய பரிவினெல்லையையநுபவிக்கைக்காகவும் படுக்கைவாய்ப்பாலும் கண்வளர்ந் தருளுகிறார். (எழுந்திருந்துபேசு) இதுக்கு ஹேதுவை, கண்வளர்ந்தருளாநிற்க அருளிச்செய்ய வொண்ணாது, என்பயங்கெட எழுந்திருந்து அருளிச்செய்யவேணும். எழுந்திருக்கும்போதை சேஷ்டிதத்தாலும, அருளிச்செய்யும போதை ஸ்வரத்தாலும் எனக்கு பயங்கெடவேணும்.(வாழி) அப்படி யருளிச்செய்யாமையாலே, "ఆయుష్మన్" "ஆயுஷ்மந்" என்னுமாப்போலே யொருநீங்கின்றிக்கே கண்வளர்ந்தருளுகிற இவ்வழகு நித்யமாயச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுகிறார். (கேசனே) கேசவசப்தமாய்இடைக்குறைத்தலாய்நகிடக்கிறதென்னுதல்; கேசத்தை யுடையவனென்னுதல். இரண்டுக்கும் * ஸ்நிகதநீலகுடிலகுந்தளனென்றர்த்தம். இத்தால்-"కేశవః క్లేశనాశనః" "கேஶவக்லேஶநாஶந:"என்கிறபடியே-திருக்குழலைப்பேணி என்னுடைய க்லேசத்தைத் தீர்த்தருளவேணுமென்கை. ... ... (கூக)

அ.—அறுபத்திரண்டாம்பாட்டு. திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளின விதுக்கு ஹேதுநிஶ்சயிக்கமாட்டாதே பிதரானவர்க்கு, ஹிரண்யனை யழியச்செய்த வீரத்தோடே திருக்குறுங் குடியிலே நின்றருளினபடியைக் காட்டக்கண்டு தரித்து, நம்பியுடைய ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்து முரட்டுஹிரண்யனை யழியச்செய்தாயென்பது உன்னையே யென்று விஸ்மிதராகிறார்.

ச்ரமத்தாலேகண்வளர்ந்தருளுகிறானென்பானென், அர்ச்சாவதாரஸமாதியாலே கண்வளர்கிறானென்னவொண்ணாதோவென்ன; அருளிச்செய்கிறார் (காவேரிசிசிரோபேத்யாதி.) ... ... (கூக)

கரண்டமாடுபொய்கையுட்கரும்பனைப்பெரும்பழம்
புரண்டுவீழவாளைபாய்குறுங்குடிநெடுந்தகாய்
திரண்டதோளிரணியன்சினங்கொளாகமொன்றையும்
இரண்டுகூறுசெய்துகந்தசிங்கமென்பதுன்னையே. (சு௨)

ப-ரை.—கரண்டம் - நீர்க்காக்கைகள், ஆடு-முழுகாநின்றுள்ள, பொய்கையுள் - பொய்கையிலே, பனை-பனையினுடைய, கரு-கறுத்து, பெரு - பெரிதான, பழம்—, அதினின்றும் விழுந்து, புரண்டு—, வீழ-நீரிலேவிழ, அத்தை நீர்க்காக்கையாகக்கருதி, வாளை - வாளைகள், பாய் - அஞ்சிப்பாயாநின்ற, குறுங்குடி-திருக்குறுங்குடியிலே, அழகு முதலிய ஸ்வபாவங்கள் குறைவற்றிருக்கிற, நெடுந்தகாய் - மஹாப்ரபாவனே, திரண்ட - திரட்சிபெற்ற, தோள் - தோளையுடையனான, இரணியன-ஹிரண்யனுடைய, சினம்கொள-சினம்மிக்க, ஒன்று-அத்விதீயமான, ஆகத்தை - சரீரத்தை, இரண்டு கூறுசெய்து - இருகூறாகப்பிளந்து, உகந்த - சிறுக்கனுடைய விரோதிபோக்கப்பெற்றோமென்று உகந்த, சிங்கம் என்பது - நரஸிம்ஹமாக ப்ரமாணங்கள் சொல்லுவது, உன்னையே - அத்யந்த ஸுகுமாரனானவுன்னையே. (சு௨)

வ்யா.—(கரண்டமித்யாதி) நீர்க்காக்கை ஸஞ்சரிக்கும்பொய்கையிலே, பனையினுடைய கறுத்தபெரிய பழம் அதினின்றும் விழுந்து புரண்டு நீரிலேவிழ, நீர்க்காக்கையாகக் கருதி வாளைகள் அஞ்சிப் பாயாநின்ற திருக்குறுங்குடியிலே, அழகும் ஸௌகுமார்யமும்சீலமும் மேன்மையுமாகிறஇஸ்ஸ்வபாவங்கள் குறைவற்றிருக்கிறமஹாப்ரபாவனே. கரண்டம்-நீர்க்காக்கை. ஆடுகை-நடையாடுதலென்னுதல்; முழுகுதலென்னுதல். தகை - இயல்வு. போலியைக்கண்டு வாளையானது அதிசங்கைபண்ணுகிறவிது, அத்தேசத்தின்பதார்த்தங்கள் நம்பிபக்கல் அஸ்தாநேபயசங்கை பண்ணுகிறபடிக்கு ஸூசகமாயிருக்கிறது.

(திரண்டதோளிரணியன்) திரட்சிபெற்ற தோளையுடைய ஹிரண்யன். அவன் வலியைக் கோட்சொல்லித் தருகிறதோளென்கை. அதவா, தேவர்களுடைய வலியடங்கத் திரண்டதோளென்றுமாம். "இந்த்ரத்வமகரோத்தைத்ய" "இந்த்ரத்வமகரோத்தைசத்ய" இத்யாதி. (சினங்கொளாகம்) நெஞ்சில்க்ரோதம் வடிவிலே தோற்றியிருக்கிறபடி. சினம்மிக்கவடிவு. (ஒன்றையுமிரண்டு கூறுசெய்து) இஸ்ஸுகுமாரமான வடிவைக்கொண்டு அத்விதீயமான ஹிரண்யன்சரீரத்தை இரண்டுகூறாகப்பிளந்து. (உகந்த சிங்கமென்ப துன்னையே) சிறுக்கனுடைய விரோதி போக்கப்பெற்றோமென்று உகந்த நரஸிம்ஹமாக ப்ரமாணங்கள் சொல்லுவது அத்யந்த ஸுகுமாரனான வுன்னையே. "உக்ரம்வீரம்ம்ருத்யும்ருத்யும்"

அறுபத்திரண்டாம்பாட்டு. இந்த்ரத்வம் - அஸுரர்களெல்லாருங்கூடி ஹிரண்யனை இந்த்ரனாக ப்ரதிபத்திபண்ணினார்கள்.

"உக்ரம்வீரம்மர்த்யுமர்த்யும்" என்றுசொல்லுவதுன்னையே. "క్వయా వనో స్మృభూతసుకుమారతనుంహరిః। క్వవజ్రకఠినాభోగశరీరోయంమహాసురః" "க்வ யௌவநோந்முகீ பூதஸுகுமாரதநும்ஹரி:। க்வவஜ்ரகடிநாபோக ஶரீரோயம் மஹாஸுர:" என்கிறபடியே உன்ஸௌகுமார்யங் கண்டபடிக்கு அவ்வபதாநம் அநுபபந்நமென்று கருத்து. ஸர்வா திகனாய் அத்யந்த ஸுகுமாரனான வவன், விமுகரான ஸம்ஸாரி கள்நடுவே திருக்குறுங்குடியிலே வந்து தாழ்ந்தார்க்கு முகங்கொ டுக்க நிற்கிற நிலையாய்த்து, அவ்வூரில் பதார்த்தங்களுக்கு அதி சங்கை மாறாதே செல்லுகைக்கும் இவ்வாழ்வார்க்கு நம்பியுடைய ஸௌகுமார்யத்தையே யநுஸந்திக்கைக்கும் ஹேது. ... (௬௨)

அ.— அறுபத்துமூனறாம்பாட்டு. தேவரீர்ஸௌகுமார்யத் தைப் பாராதே, ஸ்ரீப்ரஹ்லாதன்பக்கல் வாத்ஸல்யத்தாலே ப்ரேரி ரிதராய், ஹிரண்யனை யழியச்செய்யலாம், விமுகரான ஸம்ஸாரிக ளுடைய ஆபிமுக்யத்தை யபேக்ஷித்துஉன்மேன்மையைப்பாராதே கோயில்களிலே நிற்பது, இருப்பது, கிடப்பதாகிற விதென்ன நீர் மையென்று தாம் ஈடுபடுகிறார்.

நன்றிருந்துயோகநீதிநண்ணுவார்கள்சிந்தையுள்
சென்றிருந்துதீவினைகள்தீர்த்ததேவதேவனே
குன்றிருந்தமாடநீடுபாடகத்துமூரகத்தும்
நின்றிருந்துவெஃகணைக்கிடந்ததென்னநீர்மையே. (௬௩)

ப-ரை.—குசாஜிநங்களாகிற ஆஸநத்தையிட்டு, நன்றிருந்து-அதிலே ஏகா க்ரசித்தனாயிருந்து, யோகநீதி - யோகமாகிற உபாயத்தாலே, நண்ணுவார்கள்- உன்னை லபிக்க விருக்கிறவர்களுடைய, சிந்தையுள் சென்று - ஹ்ருதயத்திலே சென்று, இருந்து-பொருந்திநின்று, தீவினைகள் - அநுபவவிரோதிகளான துக் கங்களை, தீர்த்த-போக்குகிற, தேவதேவனே-தேவாதிதேவனானவனே; குன்று இருந்த-மலைசேரவிருந்தாப்போலே, நீடு-ஓங்கின, மாடம்-மாடங்களையுடைய, ஊரகத்து - திருவூரகத்திலே, நின்றும் - நின்றருளியும், பாடகத்து - திருப்பா டகத்திலே, இருந்தும்-இருந்தருளியும், வெஃகணை - திருவெஃகாவிலே, கிடந் தது-கண்வளர்ந்தருளினவிது, என்னநீர்மை-என்னஸ்வபாவமென்கிறார். (௬௩)

வ்யா.—(நன்றிருந்து) "చేలాజినకుశోత్తరం స్థిరమాసనంశుచౌదేశేప్రతిష్ఠాప్య" "சேலாஜிநகுஶோத்தரம் ஸ்திரமாஸநம் ஶுசௌதேஶே ப்ரதிஷ்டாப்ய" என்கிற ஶுத்தமான தேஶத்திலே குஶாஜிநசே லோத்தரமான ஆஸநத்தையிட்டு அதிலே ஏகாக்ரசித்தனாயிருந்து. "ఆసీనస్సమ్భవాత్" "ஆஸீநஸ்ஸம்பவாத்" இத்யாதி. (யோகநீதிநண்ணு வார்கள்)யோகமாகிறஉபாயத்தாலேயுன்னை லபிக்கவிருக்கிறவர்கள். நீதி-வழி.(சிந்தையுட்சென்றிருந்து தீவினைகள்தீர்த்ததேவதேவனே)

அவ்வபதாநம் - நரஸிம்ஹாவதாரம். ... ... (௬௨)

* அயர்வறுமமரர்க ளதிபதியான உன்மேன்மை பாராதே அவர்க ளுடைய ஹ்ருதயத்திலே சென்று சுபாச்ரயமாய்க்கொண்டு, அநாதி காலம் விஷயாந்தர ப்ரவணமாய்ப் போந்த ஹ்ருதயமென்று குத்ஸியாதே ஆஸநபலத்தாலே ஜயிப்பாரைப்போலே ஸ்தாவரப்ரதிஷ்டையாக விருந்து, ஆந்தரமாயும் பாஹ்யமாயுமிருந்துள்ள அநுபவ விரோதிகளான துக்கங்களைப்போக்கும் ஸ்வபாவத்தையுடையவனே. அநந்யப்ரயோஜநரானவர்கள் ஸாதநாந்தர நிஷ்டரேயாகிலும் அவர்கள்ஹ்ருதயத்திலே செல்லுகையும், நெடுநாள் விஷயாந்தரப்ரவணமான ஹ்ருதயமென்று குத்ஸியாதே அதிலே நற்றரிக்கவிருக்கையும், ஸ்வப்ராப்தி விரோதிகளான அவித்யாகர்ம வாஸநாதிகளைப் போக்குகையும் தேவரீர்க்கே பரமிறே. "योगो योगविदां नेता" "யோகோயோக விதாம்நேதா" என்னக்கடவதிறே.

ஸாதநாந்தர நிஷ்டரென்று பாராதே அநந்யப்ரயோஜநரென்கிற விவ்வளவேபார்த்து அவர்களுடைய ஹ்ருதயத்திலேசென்று, உன்னைப்பெறுகைக்கு க்ருஷிபண்ணின விவெளதார்யம் பொருமே உன்பக்கல் த்வேஷம் பண்ணியிருக்கிற ஸம்ஸாரிகள்திறத்திலே பண்ணினவிவை என்னநீர்மை யென்கிறார்மேல் (குன்றிருந்த வித்யாதி) மலைகள் சேரவிருந்தாப்போலே ஓங்கின மாடங்களையுடைய திருப்பாடகத்திலும், அப்படியே யிருந்துள்ள திருவூரகத்திலும்; "முகங்காட்டுவாருண்டோ" என்று திருவூரகத்திலே நின்றருளியும், "ஒருத்தரையுங்கண்டிலோம்" என்று சோம்பாதே திருப்பாடகத்திலே யிருந்தருளியும், அவ்விடத்திலும் ஆதரிப்பாரில்லாமையாலே ருசிபிறந்தவன்று கிடையழகைக்கண்டு ஆதரிக்கிறார்களென்று திருவெஃகாவிலே கண்வளர்ந்தருளியும், இப்படிசெய்தருளின விது என்ன நீர்மையென்கிறார். உன்னைப் பிரியமாட்டாத நித்யஸூரிகளுக்கும் நித்யாநுபவவிஷயமாகலாம், உன்வாசியறியாதார் பக்கலிலே மேல்விழுந்து அவர்களைத் திருத்தி யநுபவிக்க நினைக்கவுமாம், "உன்னைநோககோம்" என்றிருந்தஸம்ஸாரிகளுடை வுகப்பையாசைப்பட்டு வளைப்புக்கிடக்கிற விதென்னநீர்மை யென்கிறார். (௬௩)

அ.—அறுபத்துநாலாம்பாட்டு. கீழ்ச்சொன்னநீர்மையையுடையவன், எனக்கு ருசிஜநகனுகைக்காகத் திருவூரகந்தொடக்கமான

அறுபத்துமூன்றும்பாட்டு. ஸாதநாந்தரநிஷ்டர் தங்கள் ஸத்கர்மத்தாலே விரோதியைப்போக்கிக் கொள்ளுகையொழிய அவர்களுக்கு நாம் வேணுமோவென்ன; அருளிச்செய்கிறார் (அநந்யப்ரயோஜநரித்யாதி.) ஸாதநாந்தரநிஷ்டர்க்கும் அவன்வேணுமென்னுமதுக்குப்ரமாணமருளிச்செய்கிறார் (योगो योग - யோகோயோகேத்யாதி.) ... ... (௬௩)

திருப்பதிகளிலே வர்த்தித்து ருசிபிறந்தபின்பு, என்பக்கல் அதிவ்யாமோஹத்தைப் பண்ணுகையாலே கீழ்ச்சொன்ன நீர்மைபலித்தது என்பக்கலில் என்கிறார்.

நின்றவெந்தையூரகத்திருந்தவெந்தைபாடகத்
தன்றுவெஃகணைக்கிடந்தவென்னிலாதமுன்னெலாம்
அன்றுநான்பிறந்திலேன்பிறந்தபின்மறந்திலேன்
நின்றதுமிருந்ததுங்கிடந்ததுமென்னெஞ்சுளே. (௬௪)

ப-ரை.—எந்தை-எனக்கு ஸ்வாமியானவன், ஊரகத்து-திருவூரகத்திலே, நின்றது-நின்றருளினதும், எந்தை-என்னுடையஸ்வாமி, பாடகத்து-திருப்பாடகத்திலே, இருந்தது-இருந்தருளினதும், அன்று-இவ்விரண்டுதிருப்பதிகளிலும் எனக்கு ருசிபிறவாதவனாய்; வெஃகணை-திருவெஃகாவிலே, கிடந்தது-கண்வளர்ந்ததும், என்னிலாதமுன்னெலாம்-நான் அபிமுகீகரிப்பதற்கு முன்பெல்லாம்; அன்று-ஸ்ருஷ்டிகாலத்திலே நாமரூபங்களைத் தந்தருளினவன்று, நான்—, பிறந்திலேன்-அஜ்ஞனாய்ப்போனேன்; பிறந்தபின்-அவன்சேஷி நான்சேஷம் என்னும் அறிவு பிறந்தபின்பு, மறந்திலேன்-மறந்தறியேன்; எனக்கு மறக்கவொண்ணாதபடி ருசிபிறந்தபின்பு, நின்றதும்-நின்றருளினதும், இருந்ததும்-இருந்தருளினதும், கிடந்ததும்-கண்வளர்ந்தருளினதும், என்னெஞ்சுள்-என் மநஸ்ஸிலேயாம். (௬௪)

வ்யா.—(நின்றவெந்தையூரகத்து) த்ரைவிக்ரமம் பண்ணின தூளிதாநந் தோற்றத் திருவூரகத்திலே நின்றருளிற்று, எனக்கு ஸ்வாமியென்று நானிசைகைக்காக. நிலையழகைக்காட்டி ருசியைப் பிறப்பித்து, த்ரைவிக்ரமாபதாநத்தை ப்ரகாஶிப்பித்து முறையையுணர்த்துகைக்காக வென்கை. அதவா, எனக்குஇசைவின்றிக்கே யிருக்கச்செய்தேயும் வந்து நின்றருளுகிறது உடையவன் உடைமையை யிழக்கமாட்டாமையாலே நின்றருளுகிறானென்றுமாம். (இருந்த வெந்தைபாடகத்து) அந்தநிலையழகிலும் எனக்கு ஆபிமுக்யம் பிறக்கக்காணாமையாலே இருப்பழகைக்காட்டி, "[illegible]" "குணைர்த்தாஸ்யமுபாகத:" என்கிறபடியே-"நீஎனக்கு ஸ்வாமி, நான் அடியேன்" என்னும்முறையுணருகைக்காகத் திருப்பாடகத்திலே யிருந்தருளினான். (அன்று வெஃகணைக்கிடந்தது) கீழ்ச்சொன்னவிரண்டு திருப்பதிகளிலும் எனக்குருசிபிறவாதவன்றாகத்திருவெஃகாவிலே கண்வளர்ந்தருளிற்றும். அத்திருப்பதிகளை ஆச்ரயித்த காலத்துக் கவதியென்னென்னில் (என்னிலாத முன்னெலாம்) நானில்லாத முற்காலமெல்லாம். நான் அபிமுகீகரிப்பதற்குமுன்பெல்லாம். "என்னாகிநானாகி" என்னக்கடவதிறே. உபயவிபூதிநாதனான தான்

அறுபத்துநாலாம்பாட்டு. "என்னிலாத" என்றதுக்கு, "நானிலாத" என்றவிடமுண்டோவென்ன; அருளிச்செய்கிறார். (என்னாகிநானாகியென்று.)

ஸம்ஸாரியாளவெனக்கு ருசிபிறவாதகாலமெல்லாம் ருசிபிறக்கைக்காக நிற்பது இருப்பது கிடப்பதாவதே!. என்னுடையஸத்தைதன்னுடையகடாக்ஷாதீநமாயிருக்க, இத்தலையில்கடாக்ஷம்தனக்குத்தேட்டமாவதே!.

அக்காலத்தில் நீர்செய்ததென்னென்னில் (அன்றுநான்பிறந்திலேன்) தன்திருவடிகளிலே தலைசாய்க்கைக்காக ஸ்ர்ஷ்டிகாலத்திலே நாமரூபங்களைத் தந்தருள விஷயாந்தர ப்ராவண்யத்தாலே அநுபவிக்கப் பெற்றிலேன். (நான்பிறந்திலேன்) ஆத்மாவுக்கு ஜந்மமாகிறது அஜ்ஞாநலாபமாகையாலே அஜ்ஞனாய்ப்போனேன். "అసద్బ్రహ్మేతి వేదచేత్-అసన్నేవ స భవతి" "அஸத்ப்ரஹ்மேதி வேதசேத்-அஸந்நேவஸபவதி" என்னக்கடவதிறே. "గరీయాన్ బ్రహ్మదః పితా" "கரீயாந்ப்ரஹ்மதப்பிதா." (பிறந்தபின் மறந்திலேன்) அவன் க்ர்ஷியாக வெனக்குஅறிவு பிறந்தபின்பு மறந்தறியேன். "మత్తస్స్మృతిర్జ్ఞానమపోహనఞ్చ" "மத்தஸ்ம்ர்திஜ்ஞாநமபோஹநஞ்ச." அவனடியாகப் பிறந்த ஜ்ஞாநம், "மதிநலம்" என்கிறபடியே-பக்திரூபாபந்நஜ்ஞாநமாகையாலே விஸ்ம்ர்திப்ரஸங்கமில்லையிறே. ஆக, தன்னுடையஸத்பாவா உஸத்பாவங்களாகிறன- பகவத்விஷயத்திலே ருசிபிறக்கையும், அதின்றிக்கே யொழிகையும். (நின்றதுமிருந்ததுங் கிடந்ததுமென்னெஞ்சுளே) எனகரு மறக்கவொண்ணாதபடி ருசிபிறந்த பின்பு,அவன்,திருப்பதிகளில்பண்ணினசெயல்களெல்லாவற்றையும், திருப்பதிகளைச் சாம்கடைக்கொண்டு என்னுடைய ஹ்ர்தயத்திலே பண்ணியருளாநின்றான். முதலிலே தான் என்பக்கலிலே அபிநிவிஷ்டனாய, அஸத்ஸமனா யிருந்துள்ள வென்னையும் உளனாம்படி பண்ணி, தன்னை மறக்கவொண்ணாதபடியான ப்ரேமத்தை விளைத்து,அதுக்கு விஷயபூதனாயத்தன்னுடையவிடாயுந் தீர்ந்தானென்றதாய்த்து. "சிந்தையுட் சென்றிருந்து தீவினைகள் தீர்த்த" என்றார் - கீழ்; "நின்றது மிருந்ததும கிடந்ததுமென்னெஞ்சுளே" என்று அநுபவத்தைச் சொன்னார் - இங்கு. இவை யிரண்டாலும் - ஸாதநாந்தரநிஷ்டரிற்காட்டில் தம்முடையவதிகாரத்துக்குண்டான வேற்றத்தை யருளிச் செய்துவிட்டாராய்த்து. ... ... (௬௪)

அ.—அறுபத்தஞ்சாம்பாட்டு. தமதிழத்தில் ஈச்வரன் பண்ணின வுபகாரமானது தமதிருவுள்ளத்தில்நின்றும் பேராமையாலே பின்பும் அதிலே கால்தாழ்ந்து, திருமலையில் நிலையும், பரமபதத்திலிருப்பும், க்ஷீராப்தியில் கண் வளர்ந்தருளின விதுவும், எனக்குத் தன்திருவடிகளிலே ருசிபிறவாத காலமிறே யென்கிறார்.

க்ர்ஷியாக - க்ர்ஷியடியாக. ... ... (௬௪)

நிற்பதுமோர்வெற்பகத்திருப்புவிண்கிடப்பதும்
நற்பெருந்திரைக்கடலுண்ணானிலாதமுன்னெலாம்
அற்புதனனந்தசயனனாதிபூதன்மாதவன்
நிற்பதுமிருப்பதுங்கிடப்பதுமென்னெஞ்சுளே. (௯௫)

ப-ரை.—ஓர்-அத்விதீயமான, வெற்பகத்து-திருமலையிலே, நிற்பதும்-நின்றருளினதும், விண் இருப்பும் - பரமபதத்திலிருந்தருளினதும், நல்-தெளிந்து குளிர்ந்திருக்கிற, திரை-திரைகளையுடைத்தாய், பெரு - பரப்பையுடைத்தான, கடலுள் - திருப்பாற்கடலிலே, கிடப்பதும் - கண்வளர்ந்தருளினதும், நான் இலாத முன்னெல்லாம் - நான் அஸத்கல்பனாய்க்கிடந்த காலமெல்லாம்; அற்புதன்-ஜ்ஞாநசக்த்யாதிகுணபரிபூர்ணனாய், அநந்தசயநன - திருவனந்தாழ்வான மேலே பள்ளிகொண்டருளுகையாலே ஸர்வேச்வரனாய், ஆதிபூதன் - ஜகத்காரணபூதனாய், மாதவன - ச்ரியபதியான ஸர்வேச்வரன, நிற்பதும்-நின்றருளுவதும், இருப்பதும் - இருந்தருளுவதும, கிடப்பதும் - பள்ளிகொண்டருளுவதும், என்னெஞ்சுள் - என ஹ்ருதயத்திலேயாம். (௯௫)

வ்யா.—(நிற்பதுமோர்வெற்பகத்து) அத்விதீயமான திருமலையிலே நிற்பதுவும். திருமலைக்கு அத்விதீயத்வம்—"கானமும் வாநரமும் வேடுமுடை வேங்கடம்" என்கிறபடியே தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கும் நீர்மைக்கு எல்லைநிலமாயிருக்கை. ஸ்தாவரங்களுக்கும் திர்யக்குக்களுக்கும தத்ப்ராயரானவேடர்க்கும் திருவடிகளிலே ருசியைப்பிறப்பிக்கைக்கு நிற்கிறநிலையிறே. (இருப்பும்விண்) ருசி பிறந்தாரை அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளோபாதி முகங்கொடுத்து அநுபவிப்பிக்கைக்காக வெழுந்தருளியிருக்கிற பரமபதத்திலிருப்பும் (கிடப்பதும் நற்பெருந்திரைக்கடலுள்) தெளிந்து குளிர்ந்திருக்கிற திரைகளையுடைத்தாய், "தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி" என்கிறபடியே விஸ்த்ருதமாகக் கண்வளர்ந்தருளுகைக்கு வேண்டும் பரப்பையுடைத்தாய, திரையாகிற கைகளாலே திருவடிகளைவருட க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளுவதும். (நான் இலாத முன்னெலாம்) தன்னோடுண்டான முறையை யறியாதே நான் அஸத்ஸமனாயிருந்த காலமெல்லாம்.

இப்படி என்பக்கலிலே அத்யபிநிவேசத்தைப்பண்ணுகிறவன் ஸர்வப்ரகாரபரிபூர்ணன் என்கிறது மேல் (அற்புதனனந்தசயனனாதிபூதன்மாதவன்) ஆச்சர்யமானஜ்ஞாநசக்த்யாதி குணபரிபூர்ணனாய், அநந்தசாயியாகையாலே ஸர்வேச்வரனாய, ஜகத்காரணபூதனாய், உபயவிபூதிநாதத்வத்துக்கும் அவ்வருகானச்ரியஃபதித்வத்தையுமுடையவன் என்னுதல். என்னைப்பெற்றபின்பு அவனுக்கு இவையெல்லாம் நிறம்பெற்றதென்னுதல். (நிற்பது மிருப்பதுங் கிடப்பதுமென்னெஞ்சுளே) "கல்லும் கனைகடலும் வைகுந்தவானாடும் புல்லென்றொழிந்தன கொலோ பாவம்" என்கிறபடியே அத்திருப்பதி

களைக்காற்கடைக்கொண்டு அவ்விடங்களில்நின்றும் இருந்தும் கிடந்தும்செய்தருளின நன்மையெல்லாம் என்னெஞ்சிலேயாய்த்து. ஸ்ரீநாகசோஸரனென்னை விஷயீகரித்தவாறே திருமலையில் நிலையும் மாறி என்னெஞ்சிலே நின்றருளினான்; தன்திருவடிகளில்போக்யதையையெனக்கறிவித்தபின்பு பரமபதத்தி லிருப்பைமாறி என்னெஞ்சிலே போகஸ்தாநமாயிருந்தான்; "[illegible]" "தாபார்த்தோஜலஶாயிநம்" என்கிறபடியே திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியைக் காட்டி யென்னுடைய ஸாம்ஸாரிகமான தாபத்தைத் தீர்த்தபின்பு திருப்பாற்கடலில்கிடையைமாறி என்னெஞ்சிலே கண்வளர்ந்தருளித் தன்விடாய் தீர்ந்தான். இப்படி என்பக்கல் பண்ணின வ்யாமோஹம் என்றால் மறக்கலாயிருக்கிறதில்லை யென்கிறார். ... ... (௬௫)

அ.—அறுபத்தாறும்பாட்டு. பகவத்விஷயம் ஸுலபமாயிருக்க, ஸம்ஸாரம் அல்பாஸ்திரத்வாதி தோஷதூஷித மென்னுமிடம் ப்ரத்யக்ஷஸித்தமாயிருக்க, பகவத்ஸமாசரயணம் அபுநராவ்ர்த்திலக்ஷணமான மோக்ஷப்ரதமாயிருக்க, ஸம்ஸாரிகள் பகவத்ஸமாச்ரயணம்பண்ணுதிருக்கிற ஹேது என்னோ! என்று விஸ்மிதராகிறார்.

இன்றுசாதனின்றுசாதலன்றியாரும்வையகத்
தொன்றிநின்றுவாழ்தலின்மைகண்டுநீசரென்கொலோ
அன்றுபாரளந்தபாதபோதையொன்றிவானின்மேல்
சென்றுசென்றுதேவராயிருக்கிலாதவண்ணமே. (௬௬)

ப-ரை.—இன்று சாதல்-பிறந்து தன்னையினறென்றறிந்தவுடனே முடிதல்; நின்றுசாதல்-நூறுபிராயம சென்றபின முடிதல்; அன்றி - இப்படியன்றிக்கே, யாரும் - பேரளவுடையரான ப்ரஹ்மாதிகளும், வையகத்து - பதினாலுலோகங்களிலும், ஒன்றி நின்று - ஒருபடிப்படநின்று, வாழ்தலின்மைகண்டும்- ஜீவிக்குமதில்லாமையைக்கண்டுவைத்தும், நீசர் - அறிவிலிகள்; அன்று - பூமி மஹாபலியாலே அபஹரிக்கப்பட்டவன்று, பாரளந்த - பூமியையிரண்டடியாலேயளந்துகொண்ட, பாதபோதை - திருவடித்தாமரைகளை, ஒன்றி - ஆசரயித்து, வானின்மேல்சென்று - அர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று சென்று-பரமபதத்திலேபோய், தேவராயிருக்கலாதவண்ணம்-நித்யஸூரிகளோடே ஒரு கோவையாயிராதே யொழிகைக்கு ஹேது, என்கொலோ - என்னோவென்கிறார். (௬௬)

வ்யா.—(இன்றுசாதல்) யோஷித்புருஷ ஸம்யோகஸமநந்தரம் முடிதல்; பிறந்து தன்னை யின்னானென்று ப்ரதிபத்தி பண்ணின ஸமநந்தரத்திலே முடிதல். "गर्भाष्टमेषु" "கர்பாஷ்டமேஷு"

அறுபத்தாறும்பாட்டு. கர்ப்பத்திலிருப்பையும் ஆயுஸ்ஸாகச் சொல்லுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (गर्भाष्टमेषु-கர்ப்பாஷ்டமேஷு இத்யாதி.)

என்கையாலேகர்ப்பாதாநஸமயம் உத்பத்திகாலமாய், கர்ப்பவாஸகாலம் ஆயுஸ்ஸுக்குடலாகக்கடவது. (நின்றுசாதல்) சதாயுஸ்ஸம்பூர்ணனாய் முடிதல்; கல்பாதியிலே தோற்றி கல்பாந்தத்திலே முடியும் தேவர்களைப்போலேயாதல். "నాశంభూత్వాభవితావానభూయః" "நாசம் பூத்வாபவிதாவாநபூய:" என்னக்கடவதிறே. (அன்றி) இந்த அஸ்தைர்யத்திலும் உள்மானம் புறமானமொழிய நித்யராயிருப்பாரொருவருமில்லை. "గర్భేవిలీయతేభూయో జాయమానోస్తమేతిచ। జాతమాత్రేచ మ్రియతేబాలభావేచయౌవనే" "கர்ப்பேவிலீயதே பூயோஜாயமாநோஸ்தமேதிச। ஜாதமாத்ரேசம்ர்யதேபாலபாவேசயௌவநே" இத்யாதி. (ஆரும்) எத்தனை யேனும் அதிசயித ஜ்ஞாநராய் சதுர்த்தச புவநத்துக்கும்நிர்வாஹகரானப்ரஹ்மாதிகளும்.(வையகத்தொன்றி நின்றுவாழ்தலின்மைகண்டும்) சதுர்த்தச புவநத்திலும் ஒருபடிப்பட நின்று ஜீவிக்குமதில்லாமையைக் கண்டுவைத்தும். "வையகம்" என்று-சதுர்த்தச புவநத்துக்கு உபலக்ஷணம். "வாழ்தல்" என்று - க்ஷேபிக்கிறாராதல். ஸம்ஸாரிகள்கருத்தாலே யாதல். (நீசர்) தங்களநுபவத்துக்கு உபதேசம் வேண்டும்படி அஜ்ஞராயிருக்குமவர்கள். ப்ரக்ருதி ப்ராக்ருதங்களின்தண்மை ப்ரத்யக்ஷத்தாலும் பரோக்ஷத்தாலும் ப்ரகாசியா நிற்கச்செய்தே விடமாட்டாதேயிருக்கிற பாபப்ரசுரரொன்றுமாம். "நீசர்" என்று – அறிவிலோரும், பறையரும்.

(அன்று) பூமி மஹாபலியாலே அபஹ்ருதமாய், அத்தாலே தன்னுடைய சேஷித்வமும் சேதநருடைய மோக்ஷத்வமுமழிந்து கிடந்தவன்று. (பாரளந்தபாதபோதை) குணகுண நிரூபணம் பண்ணாதே பூமிமுதலான ஸகலலோகங்களிலு முண்டான ஸகல சேதநர்தலையிலும்வைத்து முறைமையை யுணர்த்தின ஸர்வஸுலபமான திருவடித்தாமரைகளை."பார்" என்று-ஊர்த்வலோகங்களுக்குமுபலக்ஷணம். "தாமரை" என்றது-துர்லபமானாலும் விடவொண்ணாத போக்யதையாலே. ஒன்றி - ஆச்ரயணம் அநாயாஸமென்கிறது "சிந்திப்பேயமையும்" என்னக்கடவதிறே. ஆச்ரயணத்தில் ஆயாஸமின்றிக்கே யொழிந்தால பலமும் க்ஷுத்ரமாயிருக்

கல்பாதியிலே தோற்றி கல்பாந்தத்திலே முடியுமென்னுமதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார். (నాశంభూత్వా - நாஶம் பூத்வா இத்யாதி.) மநுஷ்யஜந்மத்தையும் தேவஜந்மத்தையும் வ்யாவர்த்தித்து ஆத்மநித்யத்வம் சொல்லிற்றேயாகிலும், தீர்க்க ஜீவிகளாயிருக்கிற தேவதேஹத்தையும் வ்யாவர்த்திக்கையாலே ப்ரமாணமாகக் குறையில்லை. உள்ளு - பாதாளலோகம்.

குமோ வென்னில் (வானின்மேல்சென்று சென்று) அர்ச்சிராதி மார்க்கத்தாலே போய், அபுநராவ்ர்த்தி லக்ஷணமான பரமபதத்திலே சென்று. அதவா, (சென்று சென்று) தேசப்ராப்தியிற் காட்டில் வழிப்போக்குத்தானே யினிதாயிருக்கிற படியைச் சொல்லிற்றாகவுமாம். (தேவராயிருக்கிலாத வண்ணம் - என்கொலோ) நித்யஸூரிகளோடே ஒரு கோவையாயிராதே ஒழிகிற ஹேதுவென்னோ! நித்யஸூரிகளாயிருக்கையாவது - ஸர்வதா ஸத்ர்சராயிருக்கை. அதாகிறது – அஸங்கோசத்தாலும், ரூபத்தாலும், பேதத்தாலும், அவர்களோடுஸமரா யிருக்கை. (என்கொலோ) ப்ரத்யக்ஷஸித்தமான ஸம்ஸார தோஷத்துக்குக் கண்ணழிவுண்டாயோ, சாஸ்த்ரஸித்தமான பகவத்ப்ராப்தியில்நன்மைக்குக் கண்ணழிவுண்டாயோ, ஆச்ரயணீய வஸ்துவி னுடையஸௌலப்யத்துக்குக்கண்ணழிவுண்டாயோ, ஆச்ரயணத்திலாயாஸமுண்டாயோ, வழிப்போக்கி லருமையுண்டாயோ, ப்ரக்ருதிப்ராக்ர்தங்களில் ப்ராவண்ய ஹேதுவான பாபமும் பகவத்வைமுக்ய ஹேதுவான பாபமுமொழிய இப்புருஷார்த்தத்தை இழக்கைக்கு ஒருஹேதுவுங் கண்டிலோமென்கை. ... ... (௬௬)

அ.—அறுபத்தேழாம்பாட்டு. ஸம்ஸாரிகள் தங்களுக்கு ஹிதமறிந்திலர்களேயாகிலும் இதில் ருசிபிறந்தவன்று இத்தை யிழக்கவொண்ணாதென்று பார்த்து, இவர்கள்துர்க்கதியைக்கண்டு பரோபதேச ப்ரவர்த்தராகிறார்-மேலேழுபாட்டாலே;இதில் முதல்பாட்டு-அர்ச்சிராதிகதியிலே போய, நிலைநின்றபுருஷார்த்தத்தை லபிக்க வேண்டி யிருப்பீர், ப்ராப்யமும் ப்ராபகமுமான பகவத்விஷயத்தை யாச்ரயித்து உங்கள்விரோதியைப்போக்கி யுஜ்ஜீவியுங்கோளென்கிறார்.

சண்டமண்டலத்தினூடுசென்றுவீடுபெற்றுமேல்
கண்டுவீடிலாதகாதலின்பநாளுமெய்துவீர்
புண்டரீகபாதபுண்ணியகீர்த்திநுஞ்செவிமடுத்
துண்டுநும்முறுவினைத்துயருண்ணீங்கியுய்ம்மினோ. (௬௭)

ப-ரை.—சண்டமண்டலத்தினூடுசென்று-ஆதித்யமண்டலத்தின் நடுவேபோய்,வீடுபெற்று-பரமபதத்தைலபித்து, மேல்-பரமப்ராப்யமாய்,வீடிலாத-ஒருநாளும் விச்சேதியாத,காதலின்பம்-பகவதநுபவஜநிதபக்திகாரித கைங்கர்யஸுகத்தை, கண்டு- ஸாக்ஷாத்கரித்து,நாளும எய்துவீர் - யாவதாத்மபாவிலபிக்கவேண்டியிருப்பீர்; புண்டரீகம் - தாமரைமலரையொத்த, பாதம் - திருவடிகளையுடைய, புண்ணியகீர்த்தி-பாவநத்வப்ராபகத்வபரதையிலே, நும்செவி-உங்கள செவியை, மடுத்து - ஆசாரயோபதேசத்துக்கு பாத்ரமாக்கி, உண்டு - பகவத்குணங்களையநுபவித்து, நும்-உங்களால் சூழ்த்துக்கொள்ளப்பட்ட, உறு-அநு

அஸங்கோசம் - ஜ்ஞாநம் ஸங்கோசமில்லை.... ... (௬௬)

பவித்தே கழியவேண்டும்படி பொருந்திநின்ற, வினை - பாபபலமான, துயருள் நீங்கி - துக்கத்தினின்று நீங்கி, உய்மின் - உஜ்ஜீவியுங்கோள். (கூஎ)

வ்யா.—(சண்டமண்டலத்தினூடுசென்று) கடிதான ஆதித்ய மண்டலத்தின் நடுவேபோய். "மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தினன்னடுவுள்" என்கிறபடியே முமுக்ஷுக்க ளல்லாதார்க்கு துஷ்ப்ராபமான ஆதித்யமண்டல மத்யத்திலே, ராஜபுத்ரர்கள் ராஜகுலத்தாலே அப்ரதிஹத கதிகளாய்ப்போமாபோலே போய். (வீடுபெற்று) பரமபதத்தைலபித்து. (மேல்கண்டு வீடிலாத காத லின்பம் நாளுமெய்துவீர்) (மேல்-வீடிலாதகாதலின்பம் - கண்டு-நாளுமெய்துவீர்) ப்ராப்யபலமாய், யாவதாத்மபாவி விச்சேதசங்கையின்றியே ஸ்வரூபாநுபந்தியாய், பகவதநுபவ ஜநிதபக்திகாரிதகைங்கர்ய ஸுகத்தை ஸாக்ஷாத்கரித்து யாவதாத்மபாவி லபிக்கவேண்டியிருப்பீர்.

(புண்டரீகபாதபுண்ணியகீர்த்தி) செவ்வித் தாமரைப்பூப் போலே நிரதிசய போக்யமான திருவடிகளில் பாவநத்வ ப்ராபகத்வ ப்ரதையிலே. "పావనస్సర్వలోకానామ్" "పవిత్రాణాంహిగోవిన్దః" "లోకానాంత్వంపరోధర్మః" "కృష్ణంధర్మంసనాతనమ్" "பாவநஸ்ஸர்வலோகாநாம்," "பவித்ராணாம் ஹிகோவிந்த:" "லோகாநாம்த்வம்பரோதர்ம:" "க்ருஷ்ணம்தர்மம்ஸநாதநம்" என்று ப்ரஸித்தமிறே. (நும்செவிமடுத்து) பகவத்விஷயத்தைக் கேளாதே போந்த உங்கள்செவியை, ஆசார்யோபதேசத்துக்கு பாத்ரமாக்கி. ஆப்தவாக்ய ச்ரவணமே பகவத் விஷயீகாரத்துக்கு வேண்டுவதென்கை. (உண்டு) ஸ்மர்த்தவ்யதசையே தொடங்கி யினிதாகையாலும், நிரபேக்ஷோபாயமாகையாலும், பகவத்குணங்களையே யநுபவித்து. (நும்முடைவினைத் துயருள் நீங்கியுய்மினோ) நீங்கள் சூழ்த்துக்கொண்டதாய், "అవశ్యమనుభోక్తవ్యమ్" "அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற பாபபலமான துக்கத்தினுள்ளே வர்த்திக்கிற நீங்கள், இதில்நின்றும்நீங்கி முன்சொன்ன கைங்கர்ய ஸுகத்தை லபித்து, "தொழுதெழு" என்கிறபடியேஉஜ்ஜீவியுங்கோள். ... ... (கூஎ)

அ.—அறுபத்தெட்டாம்பாட்டு. ஸம்ஸாரிகள் குணத்ரய ப்ரசுரராகையாலே குணாநுகூலமாக ராஜஸ தாமஸ தேவதைகளை யாச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பார்க்கிறவர்களை நிஷேதியாநின்றுகொண்டு, ஆத்மோஜ்ஜீவநத்திலே ருசியையுடையராய் ஸாத்விகரானவர்கள் ஸர்வாதிகனை யாச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோளென்கிறார்.

அறுபத்தேழாம்பாட்டு. உபதேசம்வேணுமோ, சாஸ்த்ரஜ்ஞாநமாகாதோ வென்ன; அருளிச்செய்கிறார் (ஆப்த வாக்யேத்யாதி. ... ... (கூஎ)

முத்திறத்துவாணியத்திரண்டிலொன்றுநீசர்கள்
மத்தராய்மயக்குகின்றதிட்டதிலிறந்துபோந்
தெத்திறத்துமுய்வதோருபாயுமில்லையுய்குறில்
தொத்திறுத்ததண்டுழாய்நன்மாலைவாழ்த்திவாழ்மினோ (சுஅ)

ப-ரை.—ஸாத்விக ராஜஸ தாமஸதேவதைகளை ஆராதித்துப்பெறும், முத்திறத்துவாணியத்து - மூன்றுவகைப்பட்ட பலங்களிலே, இரண்டில் ஒன்றும்-ராஜஸதாமஸங்களில் ருசியைபபண்ணுகிற, நீசர்கள்-தண்ணியர்கள், காமாவஸாநத்தில், அதில் இட்டு - அந்தபலத்தைவிட்டு, இறந்து - அவ்வவதேசங்களில் போகசரீரங்களைவிட்டு, போந்து-பூமியிலேவந்து பிறந்து, மத்தராய்-தேஹாத்மாபிமாநத்தாலே ப்ராக்ருத பதார்த்த லாபத்தாலே களித்து, மயங்குகின்றது-தன்னையும் ஈச்வரனையும் அறியாமையாலே மயங்காநின்றார்கள்; ஆகையாலே, எத்திறத்தும்-தன்னுடைய ஆணதனமையாலும் இதரதேவதைகளை ஆச்ரயணீயராகப் பற்றினாலும்ஸர்வேசவரனை ஐச்வார்யார்த்தமாகபபற்றினாலும், உய்வதோருபாயமில்லை-உஜ்ஜீவிக்கைக்குவழியில்லை; உயகுறில்-உஜ்ஜீவிக்கவேண்டியிருந்திகோளாகில, தொத்திறுத்த - கொத்துக்கொத்தாகச்செறிந்த, தண் - குளிர்ந்த, துழாய்-திருத்துழாய்மாலையாலே அலங்காதனாய், நல்-ஸௌலப்யாதி கல்யாணகுணயுக்தனாயிருக்கிற, மாலை-ஸர்வேசவரனை, வாழ்த்தி - மங்களாசாஸநம்பண்ணி, வாழ்மினோ-வாழுங்கோளென்கிறார். (சுஅ)

வ்யா.—(முத்திறத்து வாணியத்து) ஸாத்விக ராஜஸதாமஸதேவதைகளைத் தந்தாமுடைய குணாநுகூலமாகப் பற்றி ஆராதித்துப் பெறும் மூன்றுவகைப்பட்ட பலங்களிலும். திறம்-ப்ரகாரம். பலங்களை "வாணியம்" என்கிறது - வ்யாபாரம் அல்பமாய் பலம்விஞ்சியிருக்கை. "అకౌ ప్రాస్తాహుతిస్సమ్యక్" "పత్రం పుష్పం ఫలం తోయమ్" "త్రైగుణ్యవిషయా వేదాః" "அக்நௌ ப்ராஸ்தாஹுதிஸ்ஸம்யக்" "பத்ரம்புஷ்பம் பலம்தோயம்" "த்ரைகுண்யவிஷயாவேதா:" என்கிறபடியே-வேதங்களும் குணத்ரயவச்யரான சேதநர்க்கு குணாநுகூலமாக ஆராத்ய தேவதைகளையும், ததாராதநப்ரகாரங்களையும், ஆராதந பலங்களையும்சொல்லிவைத்தது.(இரண்டிலொன்றும் நீசர்கள்)ஸ்வகுணங்களுக்கு அநுகூலமாயிருக்கையாலும்சாஸ்த்ராநுமதியாலும் நித்யஸத்வத்தையும் ததாராத்யனான ஈச்வரனையும் ஆராதந பலமான மோக்ஷத்தையு மொழிந்து, ராஜஸ் தாமஸபலங்களிலே ருசியைப்பண்ணும் நீசர். நீசராகிறார் - ஸம்ஸாரத்தை வர்த்திப்பித்துக்கொள்ளும் ஹேயர். (மத்தராய் மயங்குகின்ற திட்டதிலிறந்து போந்து) (இட்டதில்) கர்மாவஸாநத்திலே அந்தபலத்தை விட்டு.

அறுபத்தெட்டாம்பாட்டு. வ்யாபாரம் அல்பமாய் பலம்பெருத்திருக்குமோ வென்ன; அருளிச்செய்கிறார் (అకౌప్రాస్తా- அக்நௌ ப்ராஸ்தாவித்யாதி.) (இட்டதில்) அதில்-இட்டு—அத்தைவிட்டு.

(இறந்து) அவ்வவதேசங்களில்போகசரீரங்களைமுடித்து.(போந்து) அந்தபோகபூமியில்நின்றும் ஆகாச மேக ஸஸ்யாதிகளிலே கிடந்து கர்ப்பவாஸார்த்தமாகப்போந்து. "[illegible]" "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி" என்கிறபடியேபூமியிலேபிறந்து. (மத்தராய்) தேஹாத்மாபிமாநத்தாலே ப்ராக்ர்த பதார்த்த லாபத்தாலே களித்து. (மயங்குகின்றது) ஆத்மாவையாதல், ஈச்வரனையாதல் உள்ளபடி யறியாமையாலே மோஹங்கதனைப்போலே யிருக்கிறதிறே. ஸ்வர்க்காதிபலாநுபவங்களை, புண்யம் க்ஷயித்தவளவிலே மத்யேவிட்டு அந்தபோகசரீரஙகளையும் முடித்து, கர்ப்பவாஸார்த்தமாக அதிக்லேசத்தோடே போந்தபடியை யநுஸந்தியாமையிறே சேதநர் ப்ராக்ர்தபோகங்களிலே களித்து வர்த்திக்கிறதென்கை.

(எத்திறத்துமுய்வதோருபாயமில்லை) ஆகையாலே ஸ்வபௌருஷத்தாலும் இதரதேவதைகளை யாச்ரயணீயராகப்பற்றிலும், ஈச்வரன் தன்னையே ஐச்வர்யார்த்தமாகப் பற்றிலும் உஜ்ஜீவிக்கைக்கு வழியில்லை. (உய்குறில்) உஜ்ஜீவிக்கவேண்டி யிருந்திகோளாகில். (தொத்துறுத்ததண்டுழாய் நன்மாலை வாழ்த்தி வாழ்மினோ) ஸர்வேச்வரத்வஸூசகமாய், தொடைசெறிந்து ச்ரமஹரமா யிருந்துள்ள திருத்துழாயாலே அலங்க்ர்தனாய், ஸௌலப்யாதி கல்யாண குணயுக்தனா யிருக்கிற ஸர்வேச்வரனையாச்ரயித்து வாழுங்கோள். "நிகரில் புகழாயுலகமூன்றுடையாய்" இத்யாதிகளைச்சொல்லிப் புகழ்ந்து, யாவதாத்மபாவி ஆநந்த நிர்ப்பரராயிருங்கோள். "[illegible]" "ஏஷஹ்யேவாநந்தயாதி" என்னக்கடவதிறே. (௬௮)

அ.—அறுபத்தொன்பதாம்பாட்டு. "எத்திறத்து முய்வதோருபாயமில்லை" என்கிறதென், தேவதாந்தரங்களை யாச்ரயித்தால் உஜ்ஜீவிக்க வொண்ணாமை யென்னென்னில்; அந்த தேவதாந்தர ஸமாச்ரயணம் துஷ்கரம், அத்தைப் பெற்றாலும் அபிமதப்ரதாநத்தில் அவர்கள் அசக்தர்; ஆனபின்பு ஜகத்காரணபூதனை யாச்ரயித்து ஸம்ஸார துரிதத்தை யறுத்துக்கொள்ள வல்லிகோளென்கிறார்.

காணிலுமுருப்பொலார்செவிக்கினாதகீர்த்தியார்
பேணிலும்வரந்தரமிடுக்கிலாததேவரை
ஆணமென்றடைந்துவாழுமாதர்காளெம்மாதிபால்
பேணிநும்பிறப்பெனும்பிணக்கறுக்ககிற்றிரே. (௬௯)

ப-ரை.—முமுக்ஷுக்களுக்கு, காணிலும்-காணக்கூடாத, உருப்பொலார்-க்ரூரமான ரூபத்தையுடையவர்களாய், செவிக்கு - காதுகளுக்கு, இனாத-இனிமையைத் தாராத, பிதுர்வசம்முதலிய, கீர்த்தியார் - கீர்த்தியை யுடையவர்களாய், பேணிலும் - ஆச்ரயிக்கிலும், வரம் தர - அபிமதபலம் தருகைக்கு, மிடுக்கிலாத - சக்தியில்லாதவர்களான, தேவரை - தேவதைகளை, ஆணமென்று -

தஞ்சமென்று, அடைந்து - ஆச்ரயித்து, வாழும்-வாழுகிற, ஆதர்காள் - குறு டர்களே!, எம்மாதிபால் - எங்களுக்குக் காரணபூதனை ஸர்வேச்வரன் பக்க லிலே, பேணி - ஆதரத்தைப்பண்ணி, நும் - உங்களுடைய, பிறப்பெனும் - பிற ப்பு என்கிற, பிணக்கு-தூற்றை, அறுக்ககிற்றிர் - அறுக்கக்கொள்ள ஸமர்த்த ராகுங்கோள். (௬௯)

வ்யா.—(காணிலுமுருப்பொலார்) தாமஸதேவதைக ளாகை யாலே முமுக்ஷுக்களுக்கு அவர்கள் த்ரஷ்டவ்யரலலர். "ஸ்கந்தருத்ர மஹேந்த்ராத்யா: ப்ரதிஷ்டிதாஸ்துபூஜநே। அஶுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா: கர்மயோநய:" "ஸ்கந்தருத்ரமஹேந்த்ராத்யா: ப்ரதிஷ்டிதாஸ்துபூஜநே। அஶுத் தாஸ்தேஸமஸ்தாஸ்ச தேவாத்யா: கர்மயோநய:" என்னக்கடவ திறே. "ஆத்மாவாரேத்ரஷ்டவ்ய:" "ஆத்மாவாரேத்ரஷ்டவ்ய:" என்னுமவ னல்லனிறே. இங்ஙனே யிருக்கச்செய்தே உங்கள் குறுருருபமான ருசியாலே கண்டாலும் விரூபாக்ஷத்வாதிகளாலே வடிவு பொல்லா தாயிருப்பர்; திருவுள்ளத்தில் தண்ணளியைக்கோட்சொல்லித்தாரா நின்றபுண்டரீகாக்ஷனைப்போலேவடிவு ஆகர்ஷகமாயிருக்கிறதன்றே; அவர்களுடைய ஹ்ருதயத்தில் க்ரௌர்யமே அவர்கள் வடிவிலே ப்ரகாசிப்பது. (செவிக்கினாத கீர்த்தியார்) த்ரஷ்டவ்யரல்லாதவோ பாதி ச்ரோதவ்யருமல்லர். கேட்கவேண்டி யிருந்திகோளேயாகி லும், பிதுர்வத ப்ரஸித்தியென்ன, தத்பலமான பிக்ஷாடநசாரித்ர ப்ரதைதயென்ன, அத்வரத்வம்ஸ கதையென்ன, ச்வசுரவதகதையெ ன்ன, இத்யாதி ச்ரவணகடுகமான கீர்த்தியையுடையரா யிருப்பர்; மர்தனனபுத்ரனை ஸாந்தீபிநிக்குமீட்டுக்கொடுத்தான், புநராவ்ர்த்தி யில்லாத தேசத்தில்நின்றும் வைதிகன்புத்ரர்களை மீட்டுக்கொடுத் தான் என்றித்யாதிகளாலே * ஸம்ஸாரவே மதுரமான கீர்த்தியி றே. (பேணிலும்) ஆச்ரயணீயருமல்லர், ஆச்ரயித்தார்திறத்திலே "உன்பயலேபறுத்திடு" என்றும், "ஊட்டியிலே தட்டிற்றில்லைகா ண்" என்றும்சொல்லுகையாலே, உங்கள்ருசியாலே அவற்றையும் பொறுத்து ச்ரவணகடூரமான கீர்த்தியையும் வைரூப்யத்தையும் பொறுத்து ஆச்ரயித்தாலும். "பத்ரம்புஷ்பம்பலம்தோயம்" "பத்ரம் புஷ்பம பலம்தோயம்" என்றும, "ஸுஸுகம்கர்தும்" "ஸுஸுகம்கர்த் தும்" என்றும் ஆச்ரயணம் ஸுகரமுமாய் ஸுகரூபமுமா யிருக் கிறதன்றே. (வரந்தர மிடுக்கிலாததேவனை) பராஹிம்ஸையிலே வந்தால் ஜகதுபஸம்ஹாரக்ஷமராய், அபிமதபலந்தருகைக்கு சக்தி யில்லாத தேவதைகளை.

அறுபத்தொன்பதாம்பாட்டு. அத்வரத்வம்ஸம் - மாமனுயிரு க்கிற தக்ஷப்ரஜாபதியுடைய யாகத்தையும் கெடுத்து அவனையுங்கொ ன்றது.

ஒருபிசாசத்துக்கு மோக்ஷத்தைக்கொடுப்பது, ஒரு பக்ஷிக்கு மோக்ஷத்தைக்கொடுப்பது. “ఉదారాస్సర్వఏవైతే” “உதாராஸ்ஸர்வ ஏவைதே” என்று-தானும், பிறரும் “సకలఫలప్రదోహివిష్ణుః” “ஸகல பலப்ரதோஹிவிஷ்ணுঃ” என்னும் விஷயமன்றிறே. “நீதந்த நித்யத்வம் எனக்குக் கழுத்துகட்டியாய்த்து” என்றுமார்க்கண்டேயன் அவனைவளைக்க, மோக்ஷப்ரதன்கையிலே காட்டிக்கொடுத்து நழுவும் சீலமிறேபிறாது.

(ஆணமென்றடைந்து) இப்படி இவர்கள் ஆச்ரயணீயரு மன்றிக்கே யிருக்கச்செய்தே தங்கள் ப்ரமத்தாலே ஆச்ரயித்து. ஆணம் – அரண். “నత్యజేయమ్” “நத்யஜேயம்” என்னும் விஷயமன்றே. “మాశుచః” “மாஶுசঃ” என்னமாட்டான் ஏறுண்டவனுகையாலே. (வாழும் ஆதர்காள்) கர்தராயிருக்கிற அறிவுகேடர்காள். ஆதர்-குறுடரும், அறிவுகேடரும். “నాహారయతిసంత్రాసం బాహూరామస్యసంశ్రితా” “நாஹாரயதிஸந்த்ராஸம்பாஹூராமஸ்யஸம்ச்ரிதா” என்றும், “బాహుచ్ఛాయామవష్టబ్ధో యస్యలోకోమహాత్మనః” “பாஹுச்சாயாமவஷ்டப்தோயஸ்யலோகோமஹாத்மநঃ” என்றும், “అథసో௭భయంగతోభవతి” “அதஸோபயங்கதோபவதி” என்று மிருக்கிறார்களன்றே. (எம்மாதிபால்பேணி) எங்களுக்குக்காரண பூதனானவன்பக்கலிலே ஆதரத்தைப்பண்ணி. ஜகத்காரணவஸ்துவாயிருக்கிறவனை, “எம்மாதி” என்பானென்னென்னில்; ஈச்வரன் ஜகத்ஸ்ர்ஷ்டியைப்பண்ணுகிறது முமுக்ஷுவிஸ்ர்க்ஷையாலே யாகையாலே அந்தஸ்ர்ஷ்டிபலிதததது அநந்யப்ரயோஜநர்பக்கலிலே யென்று “எம்மாதி” என்று விசேஷிக்கிறார். (நும்பிறப்பெனும்பிணக்கறுக்ககிற்றிரோ) ஒருத்தராலுமறுக்கப்போகாத வுங்களுடைய பிறப்பென்கிற தூற்றையறுத்துக்கொள்ள வல்லிகோளே. (பிணக்கறுக்க) ஜந்மத்தை “தூறு” என்கிறது - அகப்பட்டவனுக்குப் புறப்படப்போகாதொழிகையும், தன்னில் தரிக்க வொண்ணாதொழிகையும், முதலும் முடிவும்காண முடியாதிருக்கையும். ... ... (ஸூ௧)

அ —ஏழுபதாம்பாட்டு. “வரந்தரமிடுக்கிலாததேவர்” என்று-அவர்களுக்கு சக்திவைகல்யம் சொல்லுவானென், அவர்களை ஆச்ரயித்துத் தங்களபிமதம் பெற்றாரில்லையோவென்னில்; ருத்ரனையாச்ரயித்து அவனுக்கந்தரங்கனாய்ப் போந்த பாணன் பட்டபாடும், ருத்ரன்கலங்கினபடியும் * (கண்டு, அன்று ஸஹகரித்தது) தேவர்களையறியுமத்தனை யிறேயென்கிறார்.

கொந்தமோடுசூலம்வேல்கள்தோமரங்கள்தண்டுவாள்
பந்தமானதேவர்கள்பரந்துவானகமுற
வந்தவாணனீரைஞ்ஞூறுதோள்களைத்துணித்தநாள்
அந்தவந்தவாகுலமமரரேயறிவரே. (௭0)

ஏறுண்டது - பாணஸங்கரயுத்தத்திலே. ... (ஸூ௧)

* இந்தகுண்டலிதகரந்தத்துக்குச்சரியான பாடதஸந்தர்ப்பசாநதரங்களில கண்டுகொள்வது.

ப - ரை.—கொந்தமோடு - சவளங்களும், சூலம் - சூலங்களும், வேல்கள் - வேல்களும், தோமரங்கள்-எறியீட்டிகளும், தண்டு - கதைகளும்,வாள்-வாள்களுமாகிற ஆயுதங்களை, பந்தமான - பந்தகமாகப் பொகட்டுப்போன, தேவர்கள் - தேவதைகள், க்ருஷ்ணன் முன்னே நிற்கமாட்டாமல், பரந்து - ஒருவர்போன வழி ஒருவர்போகமாட்டாமே சிதறி, வானகமுற - தங்களிருப்பிடங்களில் புக; வந்த - தன்தோள் வலியைநம்பி எதிர்த்துவந்த, வாணன்-பாணாஸுரனுடைய, ஈரைஞ்ஞூறுதோள்களை - ஆயிரம் தோள்களையும், துணித்த நாள் - கழித்தவன்று, அந்தவந்த ஆகுலம் - ருத்ரன் அரைகுலையத் தலைகுலைய ஓடின ஸங்கடத்தையும் தனக்குப் புசலிட மற்றுபாணாஸுரன பட்டஸங்கடத்தையும், அமரரோ யறிவர் - தேவர்களோ யறிவார்கள்; இன்று நான சொல்லவேண்டியிருக்கிறதோ வென்கிறார். (௭0)

வ்யா.—(கொந்தமோடு சூலம் வேல்கள் தோமரங்கள் தண்டு வாள் பந்தமான தேவர்கள்) கொந்தம் முதலான வாயுதங்களைக் கொண்டு ருத்ரனுக்கு பந்துக்களா யுதவிசெய்யவந்த தேவதைகள். கொந்தம் - சவளம். தோமரம் - எறியீட்டி. பந்தம் - பந்தம். இவ்வாயுத வர்க்கத்தைக்கொண்டு வந்து அவைதானே காற்கட்டாய்ப் பொகட்டுப்போன தேவர்களென்றுமாம். அப்போது "பந்தம்" என்று - பந்தகமென்றபடி. "ஸ்வா॰॰॰" "விநாமாயசதுஷ்க்ர்தாம்" என்கிறபடியே க்ர்ஷ்ணனை, தங்களுக்கு விரோதிகளான அஸுரராக்ஷஸர்களை யழியச்செய்து குடியிருப்புத்தர வந்துபிறந்தவனென்று பாராதே, அந்த துர்வர்க்கத்தோபாதி எதிரம்பு கோத்துவருகையாலே க்ர்தக்நருமாய் துர்மாநிகளுமாயிருக்குமவர்களென்கை. ஸாயுதராய்வந்த தேவர்களென்று சுருங்கச் சொல்லாதே பரக்க ஆயுதங்களைப் பேசிற்று, உபகாரகனானவன் பக்கலிலே இத்தனை அபகாரத்தை நினைப்பதே! என்னும் நெஞ்செரிவாலே யருளிச்செய்கிறார். (பரந்துவானகமுற) க்ர்ஷ்ணன்ஸந்நிதியிலே நேர்நிற்கமாட்டாதே ஒருவர்போனவழியொருவர்போகாதே சிதறித் தங்கள் குடியிருப்பிலே புக.

(வந்தவாணன்) தேவதைகள் ஆயுதங்களைப்பொகட்டுப்போனவிடத்திலும், தனக்கு நியாமகனான ருத்ரன் ஜ்ர்ம்பிதனானவிடத்திலும், தன்தோள்வலியை விச்வஸித்துவந்த வாணனுடைய. (ஈரைஞ்ஞூறு தோள்களைத் துணித்தநாள்) ஆயிரந்தோள்களையும் கழித்தவன்று. தோள்வலியைக்கொண்டுவந்தவனுடைய தோள்வலியைக் கழித்தான், ஆயுதங்களைபலமாகக்கொண்டுவந்த தேவர்களை ஆயுதங்களைப் பொகட்டுப் பிற்காலித்துப்போம்படி பண்ணினான், ஸர்வாத்யக்ஷனாய் வந்த ருத்ரனை நிச்சேஷ்டனாம்படி பண்ணினான்.

எழுபதாம்பாட்டு. கொந்தம்- சவளம் தோமரம் – வேல்விசேஷம். ஜ்ர்ம்பிதன் - முறிந்துபோனவன். ... ... (௭0)

(அந்தவந்தவாகுலம்)ருத்ரன் கொன்றையும் தும்பையும் ஜடையும் குலையக்கெட்டுப்போன பாரவச்யமும், போக்கற்றவாறே கலங்கி க்ர்ஷ்ணனுடைய முகம்பெறுகைக்கு ஸ்தோத்ரம்பண்ணின பாரவஶ்யமும். "పారవశ్యం సమాయాత శూలిజృమ్భిత తేజసా। పాఞ్చజన్యస్య ఘోషేణ శార్ఙ్గవిస్ఫూర్జితేన చ" "பாரவஶ்யம்ஸமாயாதஶூலிஜ்ர்மபிததேஜஸா। பாஞ்சஜந்யஸ்யகோஷேண ஶார்ங்கவிஷ்பூர்ஜிதேநச" என்றும், "కృష్ణకృష్ణ మహాబాహో జానే త్వాం పురుషోత్తమమ్। పరేశం పరమాత్మాన మనాదినిధనం హరిమ్" "க்ர்ஷ்ணக்ர்ஷ்ணமஹாபாஹோ ஜாநேத்வாம் புருஷோத்தமம்। பரேஶம்பரமாத்மாந மநாதிநிதநம்ஹரிம்" என்னக் கடவதிறே. (அமரரோயறிவரோ) ஆக இப்படி யிரண்டு வகைப்பட்ட ஆகுலத்துக்கும்கெட்டுப்போன தேவர்களே ஸாக்ஷி, நான் இன்றுசொல்லவேண்டியிருந்ததோ ... ... (எO)

அ.—எழுபத்தோராம்பாட்டு. பாணனை ரக்ஷிக்கக்கடவேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணி, ஸபரிகரனாய்க்கொண்டு ரக்ஷணத்திலே யுத்யோகித்து, எதிர்த்தலையிலே அவனைக்காட்டிக் கொடுத்துத் தப்பிப்போனபடியாலும், ஒருவன் ஆச்ரிதனுக்குதவினபடியென் என்று லஜ்ஜித்து க்ர்ஷ்ணனைகாபைபண்ணி அவனஸத்தையைநோக்கினபடியாலும், அவன் ரக்ஷகனல்லனென்னுமிடமும் க்ர்ஷ்ணனே ரக்ஷகனென்னுமிடமும் ப்ரத்யக்ஷமன்றோ, இவ்வர்த்தம் ஒருவர் சொல்லவேண்டியிருந்ததோ வென்கிறார்.

வண்டுலாவுகோதைமாதர்காரணத்தினால்வெகுண்டு
இண்டவாணனீரைஞ்ஞூறுதோள்களைத்துணித்தநாள்
முண்டனீறன்மக்கள்வெப்புமோடியங்கியோடிடக்
கண்டுநாணிவாணனுக்கிரங்கினானெம்மாயனே. (எக)

ப-ரை.—சித்ரலேகையைக்கொண்டு அநிருத்தாழ்வானை வரவழைத்தவளாய், வண்டு உலாவு - வண்டுகள் மாறாத, கோதை-மாலையாலே அலங்காரத்தையாய், மாதர்காரணத்தினால்- தனபெண்ணான உஷைநிமித்தமாக, எதிரத்தலைஸர்வேச்வரனென்று பாராதே, வெகுண்டு - கருத்தனாய், இண்ட-மேல்விழுந்த, வாணன் - பாணாஸுரனுடைய, ஈரைஞ்ஞூறு தோள்களை-ஆயிரம் தோள்களையும், துணித்தநாள் - சேதித்தவன்று; முண்டன் - முண்டிதனாய், நீறன - பஸ்மந்தரித்த சரீரத்தையுடையனான ருத்ரனும், தேவஸேநாபதியாய், மக்கள் - பிள்ளையான ஸுப்ரஹ்மண்யன முதலிய புத்ரர்களும், வெப்பு - ஜ்வரமும், மோடி-காளியும், அங்கி - நாறபத்தொன்பது அகநிக்கும் நிர்வாஹகனான அக்நியும், ஓடிடக்கண்டு - முதுகுகாட்டி யோடக்கண்டு, எம் ஆயன் - என்னுடையனான க்ர்ஷ்ணன், நாணி - தாம் போராத இவற்றின்மேலே யாகாதே சீறிற்றென்று லஜ்ஜித்து, வாணனுக்கு - பாணாஸுரனுக்கு, இரங்கினான் - இரங்கி இரண்டுதோளைக்கொடுத்து ரக்ஷித்தருளினானென்கிறார். (எக)

வ்யா.—(வண்டுலாவுகோதைமாதர் காரணத்தினால்) வண்டு மாறாதமாலையாலே அலங்க்ருதையான உஷைநிமித்தமாக. ஸ்வப்ந த்ருஷ்டனான அநிருத்தனை சித்ரலேகை கொண்டுவரக்கூடுமென்று அவள்வரவுபார்த்துச்செவ்விப்பூவாலே யொப்பித்திருந்தபடியைச் சொல்லுகிறது. (வெகுண்டிண்டவாணன்)எதிர்த்தலை ஸர்வேஶ்வர னென்று பாராதே யுத்தக்ருத்தனாய் மேல்விழுந்த பாணன். வெகு ளி-கோபம். இண்டல்-நெருங்குதல். “పితరం మాతరం దారాన్” “பிதரம் மாதரம்தாரான்” என்று-ரக்தஸ்பர்சங்களைவிட்டுப் பற்றவேண்டும் விஷயத்திலே ஸ்நேஹநிமித்தமாகப் பகைக்கிறானிறே துஷ்ப்ரக்ருதி யாகையாலே. காந்தர்வபக்ஷத்தாலே ஸம்ச்லேஷம் பிறந்தபின்பு க்ருஷ்ணனோடே ஸம்பந்தியாய்க்கொண்டு ப்ரீதனாக ப்ராப்தமாயிருக்க, தன் பாஹுபலத்தாலே வந்த துர்மாநத்தாலே சீறி அந்தரப்பட்டா னென்கை. (ஈரைஞ்ஞூறுதோள்களைத்துணித்தநாள்) இவன் எதி ரிடுகைக்குஹேது பாஹுபலமாகையாலே பாஹுவநத்தைச்சேதி த்தவன்று.

(முண்டன் நீறன் மக்கள் வெப்புமோடியங்கியோடிடக் கண்டு நாணி) “ரக்ஷிக்கிறேன்” என்று ப்ரதிஜ்ஞைபண்ணினவன் செய்த தென்னென்னில்; பாணனை க்ருஷ்ணன்கையிலே காட்டிக்கொடுத்து ப்ரதாநனான தனனோடு பரிகரத்தோடுவாசியற முதுகுகாட்டியோ டின வித்தனை. (முண்டன்நீறன்) முண்டிதனாய் பஸ்மச்சந்நஶரீர னான ருத்ரன். இத்தால்-க்ருஷ்ணனைக்குறித்துத் தன்னபிமத ஸந்தி யைக்குறித்து,ஸாதகனான அவன தன்னளவும்பாராதே எதிர்த்தலை யையும்பாராதே ஸாதகவேஷத்தோடே துர்மாநங்கொண்டாடின படி. தேவஸேநாபதியான ஸுப்ரஹ்மண்யன்முதலான புத்ரர்கள், ஜ்வரம், மோடி - பிடாரி, நாற்பத்தொன்பதகநிக்கும்கூடஸ்தனான வக்நி இவர்களோடு, தன்னோடு வாசியற முதுகிட்டுப்போகக்கண்டு லஜ்ஜித்து. மோடி - காளிகளென்றுமாம். லஜ்ஜிக்கையாவது - யுத்த தோந்முகனாய்த்தான்படுதல், எதிர்த்தலையை ஜயித்தல் செய்ய ப்ரா ப்தமாயிருக்க, முதுகிடுகையாலே தாம்போராத இவற்றின்மேலே யாசாதே நாம்சீறிற்றென்று லஜ்ஜித்து. “అరిః ప్రాణాన్ పరిత్యజ్య రక్షితవ్యః” “அரிப்ப்ராணாந்பரித்யஜ்யரக்ஷிதவ்ய:”என்கிறபடியே - ஆச்ரிதனை ப்ராணாவதியாக ரக்ஷிக்க ப்ராப்தமாயிருக்க,ஒருவன் ஆச்ரிதனுக்கு உதவினபடியென்! என்று லஜ்ஜித்தெனனவுமாம். (வாணனுக்கிரங் கினானெம்மாயனே) இப்படிப்பட்ட ருத்ரனைத் தனக்குத் தஞ்சமாக நினைத்திருக்கையாலே தயநீயனான பாணனுக்கு ஆபத்தேஹேது வாக க்ருபைபண்ணி இரண்டுதோள்களைக்கொடுத்து ரக்ஷித்தான் என்னுயனான க்ருஷ்ணனல்லனோ. இத்தால்-தேவதாந்தரங்கள் ரக்ஷ கரானாலும் ஆபத்துக்கு உதவார்கள்; ஈஶ்வரன் முனிந்த தசையி லும் ஆபத்ஸகனென்றதாய்த்து. “కృపయా పర్యపాలయత్” “க்ருபயா பர்யபாலயத்.” ... ... (எக)

அ.—எழுபத்திரண்டாம்பாட்டு. ருத்ரன் லோகத்திலேமோக்ஷப்ரதனென்று ஆச்ரயிப்பாரும் ஆகமாதிகளிலே பரத்வத்தை ப்ரதிபாதித்துமன்றோ போருகிறதெனனில்; நிர்த்தோஷச்ருதியில் அவனை க்ஷேத்ரஜ்ஞனாகச் சொல்லுகையாலே லோகப்ரஸித்தி வடயக்ஷப்ரஸித்திபோலே அயதார்த்தம், ஆகமாதிகள் விப்ரலம்பகவாக்யவத் அயதார்த்தமென்கிறார்.

போதின்மங்கைபூதலக்கிழத்திதேவியன்றியும்
போதுதங்குநானமுகன்மகனவன்மகன்சொலில்
மாதுதங்குகூறனேறதூர்தியென்றுவேதநூல்
ஓதுகின்றதுண்மையல்லதில்லைமற்றுரைக்கிலே. (எஉ)

ப-ரை.—போதில்மங்கை - தாமரைமலரில் திருவவதரித்த பெரியபிராட்டியாரும், பூதலக்கிழத்தி - ஸ்ரீபூமிப்பிராட்டியும், தேவி - மஹிஷிகள்; அன்றியும் - அதுக்குமேலே, போதுதங்கு நான்முகன் - கமலாஸநனான ப்ரஹ்மா, மகன் - புத்ரன்; அவன் - அந்தப்ரஹ்மாவினுடைய, மகன்சொலில் - மகனென்று சொல்லப்புகில், மாது - பார்வதியை, தங்கு கூறன் - இடது பக்கத்திலே யுடையருத்ரன; ஏறது - ரிஷபம், ஊர்தி - அவனுக்கு வாஹநம்; என்று - ஸ்ரீபூமீஸஹிதன் ப்ரஹ்மாவுக்கு உத்பாதகன் பரமஹேரதபநனன ருத்ரனென்று, வேதநூல் - வேதமாகிற சாஸ்த்ரம், ஓதுகின்றது - சொல்லுகிற அர்த்தமே, உண்மை - ஸத்யம்; மற்று - அதுக்குப் புறம்பாக, உரைக்கில் - ப்ராதநம் சொல்லில், அல்லதில்லை - அது அஸத்யமல்லதுவேறன்று. (எஉ)

வ்யா.—(போதில்மங்கைபூதலக்கிழத்திதேவி) தாமரையிலேபிறப்பையுடைய பிராட்டியும், ஸ்ரீபூமிப்பிராட்டியும் மஹிஷிகள். "హ్రీశ్చ తే లక్ష్మీశ్చ పత్న్యౌ" "ஹ்ரீஶ்சதேலக்ஷ்மீஶ்சபத்ந்யௌ" என்றும், "పద్మేస్థితాం పద్మవర్ణామ్" "பத்மேஸ்திதாம் பத்மவர்ணாம்" என்றும் சொல்லக்கடவதிறே. (அன்றியும்) ச்ரியःபதித்வமே போரும் ஸர்வாதிகன் ஸர்வ ஸமாச்ரயணீயனென்கைக்கு, ச்ரியःபதித்வத்துக்கு மேலில்லையிறே. அன்றியும் - அதுக்குமேலே. (போதுதங்கு நான்முகன்மகன்) திருநாபீகமலத்திலே பிறக்கையாலே கமலாஸநனான சதுர்முகன் புத்ரன். "అజస్య నాభావధ్యేకమర్పితం యస్మిన్ విశ్వం భువనమధిశ్రితం స ప్రజాపతిరేకః పుష్కరపర్ణే సమభవత్" "அஜஸ்யநாபாவத் யேகமர்ப்பிதம்யஸ்மிந்நிதம் விஶ்வம்புநம் மதிஶ்ரிதம் ஸப்ராஜாபதிரேகः புஷ்க்கரபர்ணேநஸமபவத்" என்னக்கடவதிறே. (அவன்மகன் சொலில் மாதுதங்குகூறனேறதூர்தி) "ఏక ఏవ రుద్రః సర్వో హ్యేష రుద్రః" "ஏக ஏவருத்ரः ஸர்வோஹ்யேஷருத்ரः" என்கிற ப்ரசம்ஸாவாக்யங்களையும் ஆகமாதிதந்த்ரங்களையுமொழிய அவன்ஸ்வரூபத்தையுள்ளபடியே "బ్రహ్మణః పుత్రాయ జ్యేష్ఠాయ" "ப்ரஹ்மணःபுத்ராய ஜ்யேஷ்டாய" இத்யாதி நிர்த்தோஷ ஶ்ருதி ப்ரக்ரியையாலே சொல்லப்பார்க்கில் அவன் ப்ரஹ்மபுத்ரன்.

எழுபத்திரண்டாம்பாட்டு. இங்கே பிராட்டிஸம்பந்த மேதுக்கென்ன; அருளிச்செய்கிறார். (ஸர்வாதிகனித்யாதி.) ... (எக)

"மாதுதங்குகூறன்" என்கிறது - ப்ரஹ்மாவினுடைய மாநஸ ஸ்ர்ஷ்டியொழிய யோஷித்புருஷ ஸம்யோகத்தாலே பிறக்கும் ஸ்ர்ஷ்டிக்கு ப்ரதமகண்யனென்று இவனுடைய க்ஷேத்ரஜ்ஞத்வந் தோற்றுகைக்காக. "భ్రుకుటీకుటిలాత్తస్య లలాటాత్ క్రోధదీపితాత్। సముత్పన్నస్తదా రుద్రో మధ్యాహ్నార్కసమప్రభః। అర్ధనారీనరవపుః ప్రచణ్డోఽతిశరీరవాన్" "ப்ருகுடீகுடிலாதஸ்யலலாடாத்க்ரோததீபிதாத்। ஸமுத்பந்நஸ்ததாருத்ரோ மத்யாஹ்நார்க்கஸமப்ரப:। அர்த்தநாரீநரவபு: ப்ரசண்டோதிஶரீரவாந்" என்று ப்ரஹ்மாவினுடைய ஸ்ர்ஷ்டிப்ரகரணத்திலே சொல்லக்கடவதிறே. "ஏறதூர்தி" என்று-வேதமய்ஞன பெரியதிருவடிக் கெதிராக ரிஷபத்தை வாஹநமாகக்கொண்டிருக்கிற துர்மாநம் தோற்றுகைக்காக. (என்று வேதநூலோதுகின்றதுண்மை) ஸ்ரீபூமிஸஹிதன ப்ரஹ்மாவுக்கு உத்பாதகன், ப்ரஹ்மோத்பந்நன் ருத்ரனென்று வேதாக்யஶாஸ்த்ரமோதுகிற அர்த்தமே ஸத்யம். (அல்லதில்லை மற்றுரைக்கிலே) அதுக்குப் புறம்பாக ஓரர்த்தம்சொல்லில் அது அஸத்யம். ஸௌபர்ணவைகுண்டஸம்வாதே, "యత్తత్పద్మమభూత్ పూర్వం యత్ర బ్రహ్మా వ్యజాయత। బ్రహ్మణశ్చాపి సమ్భూతః శివ ఇత్యవధార్యతామ్। శివాత్స్కన్దస్సమ్భూత ఏతత్సృష్టిచతుష్టయమ్" "யத்தத்பத்மமபூத்பூர்வம்யத்ரப்ரஹ்மாவ்யஜாயத, ப்ரஹ்மண ஶ்சாபிஸம்பூதஶ் ஶிவ இத்யவதார்யதாம்। ஶிவாத்ஸ்கந்தஸ்ஸம்பபூவ ஏதத்ஸ்ர்ஷ்டிசதுஷ்டயம்" இத்யாதி. ... ... (௭௨)

அ.—எழுபத்துமூன்றாம்பாட்டு. ச்ரியப்பதியே யாச்ரயணீயன், ப்ரஹ்மருத்ரர்கள்க்ஷேத்ரஜ்ஞராகையாலே அநாச்ரயணீயரென்றதாய்நின்றது-கீழ்; இதில் அந்தச்ரியப்பதிதான் தாழ்ந்தார்க்குமுகங்கொடுக்கைக்காக மநுஷ்ய ஸஜாதீயனாய்த் தன்னைத்தாழவிட்டுக்கொண்டு நின்றநிலையிலே ப்ரஹ்மருத்ரர்களுடைய வதிகாரத்திலே நின்றார்க்கு மோக்ஷப்ரதனென்றுகொண்டு தேவதாந்தரங்களுக்கும் ஸர்வேச்வரனுக்குமுண்டான நெடுவாசியை யருளிச்செய்கிறார்.

மரம்பொதச்சரந்துரந்துவாலிவீழமுன்னோர்நாள்
உரம்பொதச்சரந்துரந்தவும்பராளியெம்பிரான்
வரங்குறிப்பில்வைத்தவர்க்கலாதுவானமாளினும்
நிரம்புநீடுபோகமெத்திறத்தும்யார்க்குமில்லையே. (௭௩)

ப - து.—மஹாராஜருக்கு நம்பிக்கையுண்டாக்குகைக்காக, மரம் - மராமரங்கள், பொத - மறுபாடுருவும்படி, சரம்துரந்து - திருச்சரங்களை யேவி, முன்னோர்நாள் - முன்பொருதரேதாயுகத்திலே, ராவணனை வாலிலே கட்டிக்கொண்டு திரியும் பெருமிடுக்கனான, வாலி - வாலியானவன், வீழ-தரையிலே விழும்படி, உரம் அவனுடைய மார்வு, பொத - மறுபாடுருவும்படி, சரம்துரந்து-அம்புவிட்டருளினவனாய், உம்பராளி - நித்யஸூரிகளை அடிமை கொள்ளுமவனாய், எம்பிரான் - அச்செயலாலே என்னை யெழுதிக்கொண்டவன்;

இப்படிப்பட்ட தசரதாத்மஜனுடைய, வரம் - ச்ரேஷ்டமான, குறிப்பில் வைத்தவர்க்கலாகாது - திருவுள்ளத்தாலே விஷயீகரிக்கப்பட்டவர்களுக்கல்லது, ஜ்ஞாநாதிகனான சதுர்முகனாய், வானமாளிலும் - ப்ரஹ்மலோகத்தை நிர்வஹிக்கப்பெற்றாலும், நிரம்பு - குறைவற்று, நீடுபோகம் - நித்யமானமோக்ஷம், எத்திறத்தும்-கர்மாத்யுபாயங்களை யநுஷ்டித்தாலும் ஸித்தோபாய பரிக்ரஹம் பண்ணினாலும், யார்க்குமில்லை - அநந்யப்ரயோஜநர்க்கும் ஸித்தியாது. (௭௩)

வ்யா.—(மரம்பொதச்சரந்துரந்து) மஹாராஜருடைய விச்வாஸார்த்தமாக மராமரங்களை மறுபாடுருவத்திருச்சரத்தையேவி, இத்தால்-தன்னுடைய ரக்ஷணத்திலே அதிசங்கைபண்ணினார்க்கும் அவ்வதிசங்கையைத்தீர்த்துத்தன்பக்கலிலேவிச்வாஸத்தைப்பிறப்பித்து ரக்ஷிக்குஞ்சீலவானென்னை.(வாலிவீழ முன்னோர்நாள்உரம்பொதச்சரந்துரந்த) ராவணனை வாலிலே கட்டிக்கொண்டுதிரியும் பெருமிடுக்கனான வாலியை, முன்போன சதுர்யுகங்களில் ஒரு த்ரேதாயுகத்திலே இவன் தரைப்படும்படியாக மராமரங்களிலும்திண்ணிய அவன்மார்வு மறுபாடுருவும்படி அம்பைவிட்டு. அதிகாரிகளுமாய் நிவ்ருத்தவிரோதருமாயிருக்குமவர்களுக்குஸ்வாநுபவரூபமான அபிமதத்தைக்கொடுக்கையேயன்றியே,தத்விரோதியான அவித்யாதிப்ரபலவிரோதிகளையும்போக்கி அதுக்கடியான வதிகாரத்தையும் கொடுக்கும் சீலவானென்கைக்குஉதாஹரணமிதுவென்கை. "வரந்தரமிடுக்கிலாததேவர்" என்று அபிமத ப்ரதாநத்திலும் அசக்தரென்றதிறே ப்ரஹ்மாதிகளை. (உம்பராளி)நித்யஸூரிகளை யடிமைகொள்ளுகிறவன்கிடீர் தாழ்ந்தார்க்கு இப்படி யுபகரிக்கிறானென்கை. ரக்ஷணத்திலே அதிசங்கைபண்ணினவனுடைய அதிசங்கையைத் தீர்த்து அவன் விரோதியைப்போக்கின அந்தசீலமறியவுரியார்நித்யஸூரிகளிறே.

(எம்பிரான்) அச்செயலாலே என்னை யெழுதிக்கொண்டவன். அதவா, "உம்பராளியெம்பிரான்" என்று - அச்செயலாலே ப்ரயோஜநாந்தர பரரான தேவர்களையும், அநந்ய ப்ரயோஜநரான அஸ்மதாதிகளையுமொக்கவெழுதிக்கொண்டவனென்றுமாம்.

எழுபத்துமூன்றாம்பாட்டு. அதிகாரத்திலே - அவர்களுடைய அநுஷ்டாநத்திலே.நிர்வாஹகரா யிருக்குமவர்களுக்கும்ஸ்வாநுபவரூபமான தன்னை யநுபவிக்கையாகிற புருஷார்த்தத்திலே அபிமாநத்தையுண்டாக்குகை. ப்ரஹ்மாதிகள் இவன்விரோதியைப்போக்க மாட்டார்களோ வென்ன; அருளிச்செய்கிறார் (வரந்தரமிடுக்கிலாத வித்யாதி.) "உம்பராளி" என்றதுக்கு தாத்பர்யத்வய மருளிச்செய்கிறார் (நித்யஸூரிகளை யித்யாதி வாக்யத்வயத்தாலே.) அன்றிக்கே, ப்ரஹ்மாதிகளாகவுமாம்; இத்தை யருளிச்செய்கிறார் (அதவாயித்யாதி.) ப்ரயோஜநாந்தர பரரோ ப்ரஹ்மாதிகளோடொக்க அஸ்மதாதிகளையு மென்றபடி. ஜ்ஞாநாதிகரான அநந்யப்ரயோஜநர் — உபாஸகர். ... ... (௭௩)

"உரம்பொதச்சரந்துரந்த-எம்பிரான்" என்று-முன்புமஹாராஜர்க்குஉதவினதுவும்தமக்குஉதவிற்றாகநினைத்திருக்கிறார்.(வரங்குறிப்பில்வைத்தவர்க்கலாது) இப்படிப்பட்டதசரதாத்மஜனுடையச்ரேஷ்டமான திருவுள்ளத்தாலேவிஷயீகரிக்கப்பட்டவர்களுக் கல்லது. ச்ரேஷ்டமாகையாவது - பரஸம்ர்த்யேக ப்ரயோஜநமா யிருக்கை. (வானமாளிலும்) ஜ்ஞாநாதிகராய் சதுர்த்தசபுவநங்களுக்கும் நிர்வாஹகரான ப்ரஹ்மாதிகளாயிருந்தாலும். (நிரம்பு நீடுபோகம்) குறைவற்று நித்யமானபோகம். அதாவது - பரமபக்தி க்ர்தமாய் பரிபூர்ணமாய்விசததமமான நித்யாநுபவம். (எத்திறத்தும் யார்க்குமில்லையே) அநந்யப்ரயோஜநர்க்குமில்லை; கர்மாத்யுபாயங்களை யநுஷ்டிக்கவுமாம், ஸித்தோபாயபரிக்ரஹம்பண்ணவுமாம், அவன் ப்ரஸாதமொழிய மோக்ஷஸித்தியில்லை. ஜ்ஞாநாதிகராய் அநந்ய ப்ரயோஜநராகவுமாம்; அகிஞ்சநராய் அநந்யப்ரயோஜந ராகவுமாம்; அவன் ப்ரஸாதமே மோக்ஷஸாதநமென்கை. விரோதிநிரஸந சீலனான தசரதாத்மஜன் ப்ரஸந்நரானார்க்கல்லது ப்ரஹ்மருத்ராதிகளுடைய அதிகாரத்திலே நின்றார்க்கும் நித்யமானமோக்ஷத்தை ப்ராபிக்க விரகில்லையென்றதாய்த்து. ... ... (௭௩)

அ.—எழுபத்துநாலாம்பாட்டு. ஆச்ரயணீயனுடைய ப்ரஸாதமேமோக்ஷஸாதநமாகில் முமுக்ஷுவான விவ்வதிகாரிக்கு ப்ரஸாதகமான கர்த்தவ்யமேதென்னில்; ஸ்ரீவாமநனுடைய திருவடிகளிலே தலைசாய்த்தல், க்ஷீராப்திநாதனுடைய சீலத்துக்குவாசகமான திருநாமத்தை வாயாலே சொல்லுதல் செய்யவே புருஷார்த்த ஸித்தியுண்டென்கிறார்.

அறிந்தறிந்துவாமனனடியிணைவணங்கினால்
செறிந்தெழுந்தஞானமோடுசெல்வமுஞ்சிறந்திடும்
மறிந்தெழுந்ததெண்டிரையுள்மன்னுமாலைவாழ்த்தினால்
பறிந்தெழுந்துதீவினைகள்பற்றறுதல்பான்மையே. (௭௪)

ப-ரை.—வாமநன் - தன்னுடைமை பெறுகைக்காக வாமநாவதாரம் செய்தருளினவனுடைய, அடியிணை - திருவடிகளை, சாஸ்த்ர ச்ரவணத்தாலும் ஆசார்யோப தேசத்தாலும், அறிந்தறிந்து - அவனேப்ராப்யமும் ப்ராபகமுமென்று அத்யவஸித்து, வணங்கினால் - ஆச்ரயித்தால், செறிந்தெழுந்த ஞானமோடு - "ஸர்வேச்வரனுக்கே அநந்யார்ஹசேஷம் இவ்வாத்மா" என்கிற ஜ்ஞாநத்தோடே, செல்வமும் - கைங்கர்யோபகரணமான பக்தியும், சிறந்திடும் - குறைவறவுண்டாம்; மறிந்து - பரம்பி, எழுந்து - கிளர்ந்து, தெள்-தெளிந்த, திரையுள் - அலைகளையுடைய க்ஷீராப்தியிலே, மன்னு - நித்யவாஸம் பண்ணுகிற, மாலை - ஆச்ரிதவத்ஸலனுடைய வாத்ஸல்யவாசியான திருநாமத்தை, வாழ்த்தினால் - வாயாலே சொன்னால், தீவினைகள் - பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களான பாபங்கள், பறிந்து - இத்தைவிட்டுப் பறிந்து, எழுந்து - மேலே கிளர்ந்து, பற்றறுதல் - வாஸநையோடேபோம்படி பண்ணுகை, பான்மை - ஸ்வபாவமேயாகுமென்கிறார். (௪)

வ்யா.—(அறிந்தறிந்து வாமநனடியிணை வணங்கினால்) தன்னு
டைமையை லபிக்கைக்குத்தான் அர்த்தியாய்வந்தவன்றிருவடிகளை,
“ப்ராப்யமும் ப்ராபகமு மதுவே” என்று அத்யவஸித்து, அத்
திருவடிகளிலே ந்யஸ்தபரனானால். “வாமநனடியிணை” என்று-வரை
யாதே யெல்லார் தலையிலும் திருவடிகளை வைக்கையாலே ஸர்வ
ஸுலபனானவன் றிருவடிகளென்றுமாம். “அறிந்தறிந்து” என்றது-
சாஸ்த்ரச்ரவணத்தாலும், ஆசார்யோபதேசத்தாலு மென்றுமாம்.
இது “அன்று பாரளந்த பாதபோதையொன்றி” என்றுகீழ்ச்சொன்
னதினுடைய விவரணம். (செறிந்தெழுந்தஞானமோடு செல்வமும்
சிறந்திடும்) ப்ரத்யக்ப்ரவண்மாய்ஸாக்ஷாத்காரபர்யந்தமான ஸர்வேச்
வரனுக்கே அநந்யார்ஹசேஷபூதன் இவ்வாத்மாவென்கிற ஜ்ஞாந
மும், அதடியாககைங்கர்யோபகரணமான பக்தியும் குறைவறவுண்
டாம். சிறப்பு-மிகுதி. இது-கைங்கர்யத்துக்கும் விரோதிநிவர்த்திக்கு
முபலக்ஷணம். நிர்த்தோஷனுக்கிறே கைங்கர்யோபகரணமானபக்தியு
ண்டாவது. ப்ரீதிகாரிதமிறே கைங்கர்யம். “தநமாயதானே கைகூ
டும்” என்று வைஷ்ணவனுக்கு ஐச்வர்யம்பக்தியாகையாலே, அந்த
பக்தியை இங்கு “செல்வம்” என்கிறது. (மறிந்தெழுந்து தெண்
டிரையுள்மன்னுமாலைவாழ்த்தினால்) பரம்பிக்கிளர்ந்து தெளிந்த தி
ரைகளையுடைய க்ஷீராப்தியிலே நித்யவாஸம்பண்ணுகிற ஆச்ரிதவத்
ஸலனுடைய வாத்ஸல்யவாசியான திருநாமத்தைவாயாலே சொன்
னால். மறிதல்-விறிதல். (பறிந்தெழுந்து தீவினைகள் பற்றறுதல்) பக
வத் ப்ராப்திப்ரதிபந்தகங்களாய்ஸ்வாச்ரயத்திலே வேர் விழுந்தவை
த்தை விட்டுப்பறிந்துபோய் மறுவலிடாதபடி வாஸனையோடே
போம்படி பண்ணுகை. (பான்மையே) அவன் ஒரேற்றம்செய்தானா
கவன்றிக்கே ப்ரக்ருதியாயிருக்கை. இதுவும் “𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾
𑌮𑌿” “ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி” என்கிறபடியே கைங்கர்
யத்துக்கும் உபலக்ஷணம். ... ... (எச)

அ.—எழுபத்தஞ்சாம்பாட்டு. இப்படி அவனை ஆச்ரயித்து அ
வனுடைய கடாக்ஷததாலேப்ரதிபந்தகநிரஸநபூர்வகமாக அவனைப்
பெறுகை யொழிய வுபாயாந்தரங்களிலே யிழிந்து ஆச்ரயிப்பாரு
டைய வருமையை யருளிச்செய்கிறார்-மேலேழுபாட்டாலே; இதில்
முதற்பாட்டில்-கர்மயோகமே தொடங்கி பரமபக்தி பர்யந்தமாக ஸா
திக்கு மவர்களுடைய துஷ்கரதையை யருளிச்செய்கிறார்.

எழுபத்துநாலாம்பாட்டு. ப்ரத்யக்ஷப்ரதாநம்-ப்ரயக்ஷஸமாநா
காரம் விரோதி நிவர்த்திக்கும் உபலக்ஷணமாகவேணுமோவென்ன;
அருளிச்செய்கிறார் (நிர்த்தோஷனுக்கித்யாதி) ஸ்வாச்ரயத்திலே-வி
னைகளானவைதன்னிருப்பிடத்திலே. போய்-அங்குமிருக்கமாட்டா
மல் அவ்விடத்தையும் ஸவாஸநமாகவிட்டுப்போய். (எச)

ஒன்றிநின்றுநற்றவஞ்செய்தூழியூழிதோறெலாம்
நின்றுநின்றவன்குணங்களுள்ளியுள்ளந்தூயராய்ச்
சென்றுசென்றுதேவதேவரும்பரும்பரும்பராய்
அன்றியெங்கள்செங்கண்மாலையாவர்காணவல்லரே. (எரு)

ப - ரை.—விஷயாந்தரங்களினின்றும் மீட்டமநஸ்ஸோடே கூட, ஒன்றி நின்று - பொருந்திநின்று, நல்தவம்செய்து-யஜ்ஞதாந தபஸ் கர்மங்களாகிற நல்லதபஸ்ஸுகளைப்பண்ணி, ஊழியூழிதோறெலாம் - ப்ரளயகாலங்களிலெல்லாம், நின்றுநின்றவன் - க்ரமத்தாலே பரமபாவநனான ஸர்வேச்வரனுடைய, குணங்கள் - குணங்களை, உள்ளி - அநுசந்தித்து, உள்ளம் தூயராய் - பரிசுத்தாந்தக்கரணராய், சென்று சென்று-அநவரதப்ராவனையளவும் சென்று, தேவதேவர் - நித்யஸூரிகளளவிலேசெல்ல, உம்பரும்பரும்பராயன்றி - ஸோபாந க்ரமத்தாலே பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திரூபத்தாலே உத்கர்ஷராய்ப் பெறுவதொழிய, எங்கள் செங்கண்மாலை - எங்களுடைய புண்டரீகாக்ஷனை, யாவர்காணவல்லர் - காணவல்லாரார். (எரு)

வ்யா.—(ஒன்றிநின்று) "చఞ్చలంహిమనఃకృష్ణ" "சஞ்சலம் ஹிமநக் க்ர்ஷ்ண" என்கிறபடியே விஷயாந்தரங்களிலே மண்டி அவற்றில் நின்றும் மீட்க வரிதான நெஞ்சை பகவத் விஷயத்தில் உத்தேஸ்ய புத்தியாலே மீட்ட அம்மநஸ்ஸோடே பகவத்விஷயத்திலேயொன்றி நின்று. (நற்றவம் செய்து) தபஸ்ஸென்று - "యజ్ఞేనదానేనతపసానాశకేన" "யஞ்ஜேநதாநேநதபஸாநாஸகேந" என்றும், "యజ్ఞోదానంతపఃకర్మనత్యాజ్యంకార్యమేవతత్" "யஜ்ஞோதாநம்தபஃகர்மநத்யாஜ்யம்கார்யமேவதத்" என்றும்சொல்லுகிற கர்மங்களுக்கும் உபலக்ஷணம். "நற்றவம்" என்று-ஜீவபரயாதாத்ம்யஞ்ஜாநபூர்வகமாகவும்த்ரிவிதபரித்யாக பூர்வகமாகவு மநுஷ்டிக்கும் கர்மயோகத்தைச்சொல்லுகிறது. (ஊழியூழிதோறெலாம்) புதுப்புடைவையிலழுக்குக் கழற்றுமாப்போலேஅந்தகர்மத்தாலே விரோதிபாபம்போமிடத்தில் "జన్మాన్తరసహస్రేషు" "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு" இத்யாதிப்படியேகாலதைர்க்யத்தைச்சொல்லுகிறது. (நின்றுநின்றவன்குணங்களுள்ளி) க்ரமத்தாலேபரமபாவநனா யிருந்துள்ளவனுடையகுணங்களையநுஸந்தித்து. இத்தால் - விவேகவிமோகாதிஸாதநஸப்தகங்களிலப்யாஸத்தைச் சொல்லுகிறது. க்ரமத்தாலே அநவரத பாவனையும்சொல்லுகிறது. (உள்ளந்தூயராய்) உத்தமான கர்மயோகத்தாலும் பகவத் குணப்யாஸத்தாலும், "మనసాతువిశుద్ధేన మనసాగ్రాహ్యః" "மநஸாது விஶுத்தேநமநஸாக்ராஹ்ய:" என்றும் சொல்லுகிறபடியே பரிசுத்தாந்தக்கரணராய.

எழுபத்தஞ்சாம்பாட்டு. அநசநேந - அநசநத்தாலே.

(சென்று சென்று) “ த்ருவாநுஸ்ம்ருதி: ” “ த்ருவாநுஸ்ம்ருதி: ” என்றும், “ நிதித்யாஸிதவ்ய: ” “ நிதித்யாஸிதவ்ய: ” என்றும் சொல்லுகிறபடியே க்ரமத்தாலே அநவரதபாவனையளவும்சென்று. (தேவ தேவரும்பரும்பரும்பராயன்றி) ஸூரிகளளவிலேசெல்ல ஸோபாந க்ரமத்தாலே பரபக்திபரஜ்ஞாந பரமபக்தி ரூபத்தாலே யுத்க்ருஷ்டராய்ப்பெறுவதொழிய. (எங்கள் செங்கண்மாலே)சரணாகதவத்ஸலனைபுண்டரீகாக்ஷனை. “எங்கள்” என்று - மற்றுள்ள ஆழ்வார்களையுங்கூட்டிக்கொள்ளுகிறதென்னுதல். தம்மையேபற்றிவர்த்திக்கும் சரணாகத ஸமூஹத்தைக்கூட்டிக் கொள்ளுகிறதென்னுதல். “செங்கண்மால்” என்றது - “ஜிதந்தே புண்டரீகாக்ஷ” “ஜிதந்தே புண்டரீகாக்ஷ” என்கிறபடியே ருசியேதொடங்கி பரமபக்திபர்யந்தமாக அத்தலையில் விசேஷ கடாக்ஷத்தாலே ஸித்தியென்றுதோற்றுகைக்காக. (யாவர் காணவல்லரோ) நிர்ஹேதுககடாக்ஷத்தாலேஎங்களுக்குஅவன்காட்ட நாங்கள் கண்டாப்போலே, யாவர்காணவல்லார். “உம்பரும்பரும் பராய்” என்று-மேலேமேலே போயல்லது, தேவ தேவர்-எங்கள் செங்கண்மால்” என்று கூட்டுவது ... ... (எரு)

அ.—எழுபத்தாறும்பாட்டு. த்ரவ்யார் ஜநாதிக்லேசமென்ன, பரஹிம்ஸாதிதுரிதமென்ன, இவற்றையுடைத்தாய், இந்த்ரிய வ்யாபாரரூபமான கர்மயோகத்தில் காட்டில் இந்த்ரியோபரதி ரூபமான ஞ்ஜாநயோகத்திலே ப்ரதமத்திலே இழியுமவர்களுடைய துஷ்கரதையை யருளிச்செய்கிறார்.

புன்புலவழியடைத்தரக்கிலச்சினைசெய்து
நன்புலவழிதிறந்துஞானநற்சுடர்கொளீஇ
என்பிலெள்கிநெஞ்சுருகியுள்கனிந்தெழுந்ததோர்
அன்பிலன்றியாழியானையாவர்காணவல்லரோ. (எசு)

ப - ரை.—புல் - க்ஷுத்ரவிஷயங்களைப்பற்றிப்போருகிற, புலம்வழி - இந்த்ரிய மார்க்கத்தை, அடைத்து-நிரோதித்து, அரக்கு இலச்சினைசெய்து-அரக்கு முத்திரையிட்டு, நல் - விலக்ஷணவிஷயத்தில, புலம்வழி - இந்த்ரிய மார்க்கத்தை, திறந்து - ப்ரகாசிப்பித்து, நல் - நன்றான, ஞானச்சுடர் - ஜ்ஞாநப்ரபையை, கொளீஇ - மிகவுண்டாக்கி, என்பில் எள்கி - எலும்பிலே தட்டும்படி சரீரம் சிதிலமாய், நெஞ்சு உருகி - மநஸ்தத்வம் த்ரவீபூதமாய், உள்கனிந்து-உள்ளே பக்வமாய், எழுந்ததோர் - பக்திரூபேண ஆவிர்ப்பூதமான, அன்பிலன்றி- ப்ரேமத்தாலல்லது, ஆழியானை - திருவாழியைத்திருக்கையிலே யுடையனான ஸர்வேச்வரனை, யாவர்காணவல்லர் - காணவல்லாரார். (எசு)

(ஸூரிகளளவிலே)அவர்களுடைய அஜ்ஞாநத்தையுடையராக. “உம்பர்உம்பர்”என்று-மேலேமேலேபரபக்த்யாதிகளையுடையராய்.

வ்யா.—(புன்புலவழியடைத்து) க்ஷுத்ரவிஷயங்களைப் பற்றிப் போருகிற இந்த்ரியமார்க்கத்தை நிரோதித்து. விஷயங்களுக்குப் புல்லிமையாவது - அல்பமாய் அஸ்திரமாய் அபோக்யமாயிருக்கையும், வகுத்தவிஷயத்திலே வைமுக்யத்தைப் பண்ணுகையும். தத்விஷயமான இந்த்ரியபதத்தைநிரோதிக்கையாவது-விஷயங்களிலே சாபலத்தைப் பண்ணி சேதநனையும் தன்வழியிலே ஆகர்ஷிக்கும் இந்த்ரியங்களை ப்ரத்யாஹாரத்தாலே மீட்கை.(அரக்கிலச்சினை செய்து) சப்தாதிவிஷயங்களினுடைய க்ஷுத்ரதையை யநுஸந்தித்து வாஸனையு மநுவர்த்தியாதபடி பண்ணி. “ബലവാനിന്ദ്രിയഗ്രാമോ വിദ്വാംസമപികർഷതി” “பலவாநிந்த்ரியக்ராமோ வித்வாம்ஸமபிகர்ஷதி” என்று ஜ்ஞாநாதிகர்களையும் வாஸனாநலியுமிறே; அதுவும்பிறவாதபடி பண்ணி. (நன்புலவழிதிறந்து) விலக்ஷணவிஷயத்தில் இந்த்ரியமார்க்கத்தை ப்ரகாசிப்பித்து. இவ்வாத்மாவுக்கு ப்ராப்தமாய் “ஸுஸுகம்கர்த்தும்” “ஸுஸுகம்கர்த்தும்” என்கிறபடியே ஸாதநவேளையேதொடங்கி ரஸிக்கும் பகவத்விஷயமே இந்த்ரியங்களுக்கு விஷயமாக்கியென்கை.(ஞானநற்சுடர்கொளீஇ)நன்றானஜ்ஞாநப்ரபையை மிகவுமுண்டாக்கி. ஈச்வரனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை ஸ்வஜ்ஞாநத்துக்கு விஷயமாம்படி பண்ணி.

(என்பிலெள்கி) எலும்பிலே தட்ட சரீரம் சிதிலமாய். எள்கல் - இறங்கல். (நெஞ்சுருகி) மநஸ்தத்வம்த்ரவீபூதமாய். கீழ்ச்சொன்ன ஜ்ஞாநம் பரபக்த்ய வஸ்தமாம்படி வாஸனைபண்ணி. (உள்கனிந்தெழுநததோரன்பிலன்றி)உள்ளே பக்வமாய்,பரமபக்திரூபேணஆவிர்ப்பூதமானப்ரேமத்தாலேயல்லது பெறவிரகில்லை. (ஆழியானையாவர்காணவல்லரே)“எங்கள்செங்கண்மால்” என்று-கீழ்ச்சொன்ன ஸ்தாநத்திலே “ஆழியானை” என்கிறார். “கைகழலாநேமியான் நம்மேல் வினைகடிவான்” என்கிறபடியே விஷயாந்தரப்ராவண்ய ஹேதுவான பாபத்தையும் பகவத்வைமுக்யஹேதுவாயிருந்துள்ள பாபத்தையும் கையில் திருவாழியாலே இருதுண்டமாக வெட்டி, கையும்திருவாழியும்சேர்ந்தசேர்த்தியைக்காட்டிஸ்வவிஷயமான பக்தியை வர்த்திப்பித்தவனை நான்கண்டாப்போலே யாவர் காணவல்லார். இந்த்ரியஙகளுக்கு விஷயாந்தர ப்ராவண்யத்தைத்தவிர்த்து,பகவத்விஷயமே விஷயமாக்கி,தத்விஷயஜ்ஞாநம்பக்திரூபாபந்நஜ்ஞாநமாய்,அதுபரபக்த்யாதிகளாய்ப் பழுத்தாலல்லதுஸர்வேச்வரனை லபிக்கவிரகில்லையாய்த்து. ... ... (எ௬)

அ.— எழுபத்தாறும்பாட்டு. பகவத்ஜ்ஞாநம் - பகவாந்சரீரி, ஜகத்துசரீரம் என்கிறஜ்ஞாநம்.

அ.—எழுபத்தேழாம்பாட்டு. கர்மஜ்ஞாநங்களை ஸஹகாரமாகக்கொண்டுப்ரவர்த்தமான பக்தியாலே பகவல்லாபத்தைச்சொல்லிற்று-கீழ்; ஸர்வாந்தர்யாமியாய் ஜகத்காரணபூதனான ஸர்வேஶ்வரனை அஷ்டாங்க ப்ரணாமம்முன்னாகத்திருமந்த்ரத்தைக்கொண்டுபஜிக்குமவர்கள் இட்ட வழக்கு பரமபதமென்கிறார். இப்பாட்டுமுதலாக இதிஹாஸபுராணப்ரக்ரியையாலே பகவத்பஜநத்தை அருளிச்செய்கிறார்.

எட்டுமெட்டுமெட்டுமாயொரேழுமேழுமேழுமாய்
எட்டுமூன்றுமொன்றுமாகிநின்றவாதிதேவனை
எட்டினாயபேதமோடிறைஞ்சிநின்றவன்பெயர்
எட்டெழுத்துமோதுவார்கள்வல்லர்வானமாளவே. (எஎ)

ப-ரை.—எட்டுமெட்டுமெட்டுமாய்-இருபத்துநாலு தத்வங்களுக்கும் அந்தராத்மாவாய் நின்று ஸத்தையை நோக்குமவனாய், ஏழும்-ஸப்தத்வீபங்களுக்கும், அவற்றுக்காதாரமான, ஏழும்-ஸப்தகுலபர்வதங்களுக்கும், அந்த த்வீபங்களுக்கு அவச்சேதகங்களான, ஏழுமாய்-ஸப்தஸமுத்ரங்களுமாய், எட்டு மூன்றுமொன்றுமாகி நின்ற - த்வாதசாதித்யர்களுக்கும் அந்தராத்மாவாய் நின்ற, ஆதிதேவனை - ஸர்வஸமாச்ரயணீயனானவனை, எட்டினாயபேதமோடு இறைஞ்சி - அஷ்டாங்கப்ரணாமத்தைப்பண்ணி, நின்று - அவ்வழியாலே ஆச்ரயித்து நின்று, அவன்பெயர் எட்டெழுத்து - அவன திருநாமமான திருவஷ்டாக்ஷரத்தை, ஓதுவார்கள்-வாயாலே உச்சரிக்குமவர்கள், வானமாள வல்லர் - பரமபதத்தைத் தாங்களிட்டவழக்காம்படி நிர்வஹிக்க ஸமர்த்தராவர்கள். (எஎ)

வ்யா.—(எட்டுமெட்டுமெட்டுமாய்) சதுர்விம்ஶதி தத்வங்களுக்கு மாத்மாவாய் நின்று ஸத்தையை நோக்குமவன். இந்த ஸாமாநாதிகரண்யம் சரீராத்ம பாவத்தாலே சொல்லுகிறது. இத்தால்-அண்டகாரணமானப்ராக்ருதஸ்ருஷ்டியைச்சொல்லுகிறது. (ஓரேழுமேழுமேழுமாய்)ஸப்தத்வீபங்களும், அவற்றுக்குதாரகமான ஸப்தகுலபர்வதங்களும், அந்தத்வீபங்களுக்கு அவச்சேதகங்களானஸப்தஸமுத்ரங்களுமாய். அண்டாந்தர்வர்த்திகளான ஸகலலோகங்களுக்குமுபலக்ஷணம். ஸ்தலசரராயும் ஜலசரராயும்பார்வதேயருமானசேதநரை நினைக்கிறது.(எட்டுமூன்றுமொன்றுமாகிநின்ற)த்வாதசாதித்யர்களுக்கும்அந்தராத்மாவாய்நின்ற. இது-ஆராத்ய தேவதைகளுக்குமுபலக்ஷணம். "अग्नौ प्रास्ताहुतिस्सम्यक्" "அக்நௌப்ராஸ்தாஹுதிஸ்ஸம்யக்." (ஆதிதேவனை) ஸூக்ஷ்ம சிதசித்வஸ்து சரீரனாயும் ஸ்தூலசிதசித்வஸ்துசரீரனாயும்கார்யகாரணமிரண்டுமாய்க்கொண்டு ஸர்வஸமாச்ரயணீயனானவனை.

(எட்டினாயபேதமோடிறைஞ்சிநின்று) அஷ்டாங்க ப்ரணாமத்தைப்பண்ணி அம்முகத்தாலே ஆச்ரயித்து நின்று. ப்ரணாமத்துக்கு

அஷ்டாங்கதையாவது - பக்நாபிமாநியாய் விழுகையும், மநோ புத்திகளுக்கு ஈச்வரனே விஷயமாகையும், பதத்வயகரவயங்களும் கூர்மவத்பூமியிலே பொருந்துகையும். "మనోబుద్ధ్యభిమానేన సహన్యస్య ధరాతలే । కూర్మవచ్చతురః పాదాన్ శిరస్తత్రైవ పఞ్చమమ్" "மநோ புத்த்யபிமாநேந ஸஹந்யஸ்ய தராதலே । கூர்மவத்சதுர꞉பாதாந் ஶிரஸ்தத்ரைவபஞ்சமம்" என்னக்கடவதிறே. (அவன்பெய ரெட்டெழுத்து மோதுவார்கள்) கீழ்ச்சொன்னஜகதந்தராத்மபாவத்துக்குவாசகமானமந்த்ராந்தரங்களிற்காட்டில் திருவஷ்டாக்ஷரத்தை வாயாலே உச்சரிக்குமவர்கள். (வல்லர்வானமாளவே) அர்த்தத்தை மநஸ்ஸாலெ அநுஸந்தித்தும், வாயாலேசப்தத்தை யுச்சரித்தும், சாரீரமானப்ரணாமத்தை பண்ணியும், இப்படிமநோவாக்காயங்களாலே பஜிக்குமவர்கள்இட்ட வழக்கு பரமபதமென்கை. "ఆపో నారా ఇతి ప్రోక్తాః" "ஆபோநாரா இதிப்ரோக்தா꞉" என்றும், "నరాజ్జాతాని తత్త్వాని" "நராஜ்ஜாதாநிதத்த்வாநி" என்றும்-ஜகத்காரணவஸ்துவை நாராயணனென்னக்கடவதிறே ... ... (எஎ)

அ.—எழுபத்தெட்டாம்பாட்டு. உபாஸநத்துக்கு சுபாச்ரயம் வேண்டாவோ வென்ன; கார்யரூபமான ஜகத்திலே ஆச்ரிதார்த்தமாக வந்து கண்வளர்ந்தருளுகிற க்ஷீராப்திநாதனை சுபாச்ரயமாகப்பற்றி மந்த்ர ரஹஸ்யத்தாலேமுறையறிந்து ஆச்ரயித்து இடைவிடாத ப்ரேமத்தையுடையரா யிருக்குமவர்கள் பரமபதத்தையாளுகை நிச்சிதமென்கிறார்.

சோர்விலாதகாதலால்தொடக்கறுமநத்தராய்
நீரராவணைக்கிடந்தநின்மலன் நலங்கழல்
ஆர்வமோடிறைஞ்சிநின்றவன்பெயரெட்டெழுத்தும்
வாரமாகவோதுவார்கள்வல்லர்வானமாளவே. . (எஅ)

ப - ரை.—சோர்விலாத - விஷயாந்தரங்களால் அபஹ்ருதமாகாத, காதலால்-ஆசையாலே, பகவத ஸமர்த்திமாறாதே செல்லுகையாலே, தொடக்கறு-விச்சேதமில்லாத, மநத்தராய் - மநஸ்ஸையுடையராய், நீர் - க்ஷீராப்தியிலே, அராவணை-திருவநந்தாழ்வானமேலே, கிடந்த-கண்வளர்ந்தருளுமவனாய், பஜநவிரோதிகளைப்போக்கும், நின்மலன்-ஹேயப்ரத்யநீகனுடைய, நலங்கழல்-ருசிஜநகமான திருவடிகளை, ஆர்வமோடு - ப்ரேமயுக்தனாய்க்கொண்டு, இறைஞ்சிநின்று - ஆச்ரயித்து நின்று, அவன்பெயர் - அவன் திருநாமமான, எட்டெழுத்தும் - திருவஷ்டாக்ஷரத்தையும், வாரமாக ஓதுவாகள் - அன்பினாலே சொல்லுமவர்கள், வானமாளவல்லர் - பரமபதத்துக்கு நிர்வாஹகராகைக்கு ஸமர்த்தராவ ரென்கிறார். (எஅ)

எழுபத்தேழாம்பாட்டு. (கரத்வயங்களும்) சிரஸ்ஸுமென்று கூட்டுவது. ... ... (எஎ)

வ்யா.—(சோர்விலாதகாதலால்) ஸர்வகாலமும் விஷயாந்தரங்களால் அபஹ்ர்தமாகாத ப்ரேமத்தை யுடையராகையாலே. அதாவது - ப்ரேமாதிசயத்தாலே தத்ஸம்ச்லேஷ விச்லேஷஸுகதுக்கராகை. (தொடக்கறுமநத்தராய்) பகவத்ஸ்ம்ர்தி ஸந்ததிரூபேணச் செல்லாநின்றால் விச்சேதமில்லாத நெஞ்சையுடையராய். "స్మృతిర్ధ్రువాస్మృతిః" "స్మృతిలమ్భే సర్వగ్రన్థీనాం విప్రమోక్షః" "ஸத்வஶுத்தௌ த்ருவாஸ்ம்ர்திः" "ஸ்ம்ர்திலம்பே ஸர்வக்ரந்தீநாம்விப்ரமோக்ஷः" என்கிற வளவைச் சொல்லுகிறது. (நீரராவணைக்கிடந்த நின்மலன் நலங்கழல்) இப்படி ப்ரேமத்தை விளைக்கும் விலக்ஷணவிஷயமான சுபாச்ரயத்தைச் சொல்லுகிறது. (நீரராவணைக்கிடந்த) க்ஷீராப்தியிலே திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற. இத்தால் - நீருறுத்தாமைக்கு அதின்மேலே திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையனாகையாலே ஸௌகுமார்யமும், ஆச்ரித ஸம்ச்லேஷைகஸ்வபாவதவமும், அர்த்தித்வநிரபேக்ஷமாக ஆச்ரிதாநுக்ரஹத்தாலே கண்வளர்ந்தருளுகையாலே ஸௌலப்யாதிகளையும் சொல்லுகிறது. (நின்மலன் நலங்கழல்) பஜநவிரோதிபாபங்களைப் போக்கும் ஹேயப்ரத்யநீகனுடைய ருசிஜநகமான திருவடிகளை.

(ஆர்வமோடிறைஞ்சிநின்று) ப்ரேமயுக்தராய்க்கொண்டு ஆச்ரயித்துநின்று. இத்தால் "నాస్త్యకృతః కృతేన" "நாஸ்த்ய க்ர்தக்ர்தேந" என்கிறபடியே ஸம்ஸாரம் அநித்யம், ஈச்வரன்நித்யனென்று ஆச்ரயிக்குமளவன்றியே, நிரதிசயபோக்யனென்கிறப்ரேமத்தாலே யாச்ரயிக்கை. (அவன்பெய ரெட்டெழுத்தும்) க்ஷீராப்திநாதன்திருநாமமான திருவஷ்டாக்ஷரத்தையும். "ఏష నారాయణః శ్రీమాన్" "ஏஷ நாராயணஶ்ஶ்ரீமாந்" என்றும், "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்றும், "భవాన్నారాయణో దేవః" "பவாந்நாராயணோதேவः" என்றும் - தீர்மிபுக்க விடமெங்கும் இத்திருநாமம் ப்ரதமாபிதாநமா யிருக்குமென்கை. (வாரமாக வோதுவார்கள் வல்லர் வானமாளவே) "నమో నారాయణాయేతి మన్త్రః సర్వార్థసాధకః" "நமோநாராயணாயேதிமந்த்ரः ஸர்வார்த்தஸாதகः" என்கிறபடியே தந்நிஷ்டராய்க்கொண்டு சொல்லுமவர்கள், பரமபதத்துக்கு நிர்வாஹகராக வல்லரென்கிறார்.

அ.— எழுபத்தெட்டாம்பாட்டு. "நாராயணன்" என்கிற திருநாமம்பரத்திலேயன்றோ, க்ஷீராப்திநாதனுக்கு வாசகமோவென்ன; அருளிச்செய்கிறார் (ఏష నారాయణశ్శ్రీమాన్ - ஏஷநாராயணஶ்ஶ்ரீமாநித்யாதி.). ... ... (எஅ)

நீராரவணைக்கிடந்தநின்மலன் நலங்கழல் ஆர்வமோடிணைறஞ்சி நின்று - சோர்விலாத காதலால் தொடக்கறு மனத்தராய் - அவன் பெயரொட்டெழுத்தும் வாரமாக வோதுவார்கள் வல்லர்வானமாள வே" என்றந்வயம் ... ... (எஅ)

அ.—எழுபத்தொன்பதாம்பாட்டு. ச்வேதத்வீப வாஸிகளை யொழிந்த ஸம்ஸாரிகளுககு அதுகிலமோவென்ன; அவதாரகந்தமா னகஷீராப்தியில்நின்றும் தன் மேன்மை பாராதே தஸப்ராதுர்ப்பாவ த்தைப் பண்ணி ஸம்ஸாரிகளுடைய வன் திருவடிகளிலே அவதாரரஹஸ்ய ஜ்ஞாந மடியான பக்தியையுடையவர்களுக்கல்லது முக்தராகவிர குண்டோ வென்கிறார்.

பத்திறோடுபத்துமாயோரேழிறோடொரொன்பதாய்
பத்திரண்டிசைக்கணின்றநாடுபெற்றநன்மையாய்ப்
பத்திறுயதோற்றமோடோராற்றன்மிக்கவாதிபால்
பத்தராமவர்க்கலாது முத்திமுற்றலாகுமே. (எகூ)

ப - ரை.—பத்திறோடு - பதுநதிக்குக்களுக்கும், அத்திக்குக்களிலே வஸி க்கிற, பத்துமாய் - தசாத்யக்ஷருக்கும் நிர்வாஹகனுய, ஓர் - அத்விதீயமான, எழிறோடு - ஸப்தஸ்வரத்துக்கும், ஒன்பதாய் - நாட்யரஸமொன்பதுக்கும நிர வாஹகனுய், பத்திரண்டிசைக்கண் நின்றநாடு - பதினொன்று வகைப்பட்ட லோகங்களுக்கு, பெற்ற - ப்ரயோஜநமான, நன்மை - சப்தாதிவிஷயங்களெ ல்லாம், ஆய் - தான் ஆகைக்காக, பத்திறுயதோற்றமோடு - தசாவதாரஞ்செய தருளி, ஸம்ஸாரிகளபக்ஷமும, ஓர்-அத்விதீயமான, ஆற்றல்மிக்க-பரிபவத்தை ப்பொறுத்தரக்ஷிக்கும் மிக்கக்ஷமையையுடையனுய, ஸம்ஸாரிகள குசிபிறந்த வன்று ஆசரயிக்கைக்காக, ஆதிபால் - முன்னமே அவதரித்த நிற்பவன விஷ யத்தில், அவ்ளபண்ணின உபகாரத்தையறிந்து, பத்தராமவர்க்கலாது - பக் தராயவர்களுக்கல்லது, முத்திமுற்றலாகுமே - மோக்ஷபலமபெறக்கூடுமோ.()

வ்யா.—(பத்திறோடுபத்துமாய) தஸதிக்குக்களுக்கும், அத்தி க்குக்களிலே வ்யவஸ்திதரான தஸாத்யக்ஷருக்கும் நிர்வாஹகராய. அவர்களாகிறார் - இந்த்ராதி திக்பாலகர்களெண் மரும், ஊர்த்வ லோகங்களுக்கு மேலெல்லையான ஸத்யலோகத்துக்கு நிர்வாஹக ருன ப்ரஹ்மாவுக்கும், அதோலோகத்துக்குக் கீழெல்லையிலேதாரக ருன அநந்தனுக்கும். (ஓரேழிறோடோரொன்பதாய) அத்விதீயமா னஸப்தஸ்வரமும, நாட்யரஸமொன்பதும. அவையாகிறன-இசைக ளேழும், "నిషాదర్షభగాంధార షడ్జమధ్యమధైవతాః। పంచమశ్చేత్యమీసప్త" "நி ஷாதர்ஷபகாந்தார ஷட்ஜமத்யமதைவதா, । பஞ்சமஸ்சேத்யமீ ஸப்த" என்கிறபடியே "శృంగారహాస్యకరుణా వీరరౌద్రభయానకాః। బీభత్సా ద్భుతశాంతాశ్చ నవ నాట్యరసాస్స్మృతాః" "ஶ்ருங்காரஹாஸ்யகருணவீரரௌ த்ரபயாநகா:। பீபத்ஸாத்புதஸாந்தாஸ்ச நவநாட்யரஸாஸ்ஸ்ம்ருதா:" என்கிறபடியே நாட்யரஸங்களும். இவை சப்தாதிவிஷயங்களுக்கு

றூபலக்ஷணம். இத்தால்-கீழ்ச்சொன்ன தசாத்யக்ஷரோடு அவர்களு க்கு நிர்வாஹகரான சேதநரோடு வாசியற எல்லார்க்கும் போக்ய மான சப்தாதிகளுக்கும் நிர்வாஹகனென்கை. (பத்திறன் திசைக் கண்நின்றநாடுபெற்றநன்மையாய)பதிறுவகைப்பட்டிருந்துள்ள லோகங்களுக்கு ப்ரயோஜநமானசப்தாதிவிஷயங்களெல்லாம் அவர் களுக்குத் தானேயாகைக்காக, "ఏషాదిక్" "ஏஷாதிக்" என்கிறபடி யே, "திசை" என்று-ப்ராகாரவாசி. "பத்திறன்திசைக்கணின்றநாடு" என்று - "பத்திறேடுபத்துமாய்" என்கிறவிடத்தை யநுபாஷிக்கி றூர். "பெற்றநன்மை" என்று-"ஏழிறேடோரொன்பதாய்" என்ற விடத்தை யநுபாஷிக்கிறூர். "ஆய்" என்று - ஆகைக்காக வென்ற படி. "உயிர்முதலா முற்றுமாய" என்னக்கடவதிறே. "సర్వరసః" "ஸர்வரஸ:" என்கிற தானே சேதநர்க்கு போக்யனுகைக்காக வெ ன்கை.

(பத்தினுயதோற்றமோ டோராற்றல்மிக்க வாதிபால்) தச ப்ராதுர்ப்பாவத்தாலே யாவிர்ப்பவித்து, ஸம்ஸாரிகள பண்ணும் பரி பவத்தைப் பொறுத்து ரக்ஷிக்கும் பூர்வஜன்பக்கலிலே. தோற்றமா வது - அதிந்த்ரியனுனதன்னை சக்ஷுர்விஷயமாக்குகை. ஆற்றல்- பொறை. பூர்வஜனுகையாவது - ஸம்ஸாரிகளுக்கு முற்பிறந்தவன்று ஆச்ரயணீயரானநாம் தூரஸ்தராகவொண்ணுதென்று ஏற்கவே யவ தரித்து நிற்கை. (பத்தாமவர்க்கலாது) "జన్మకర్మ చ మే దివ్యమేవం యో వేత్తి తత్త్వతః" "ஜந்மகர்மசமேதிவ்யமேவமயோவேத்திதத்வத:" என் கிறபடியே அவன்பண்ணின உபகாரத்தை உள்ளபடிஅறிந்து அதி லே ஸக்தராயிருக்குமவர்களுக்கல்லது. (முத்திமுற்றலாகுமே) மோ க்ஷபலம்பக்வமாகைக்கு விரகில்லை. "త్యక్త్వా దేహం పునర్జన్మ నైతి మామేతి" "த்யக்த்வாதேஹம்புநர்ஜந்மநைதிமாமேதி" என்கிறபடியேவிரோ திநிவ்ருத்திபூர்வகமான பரவல்லாபமுண்டாக விரகில்லையென்கிறூர்.

அ.—எண்பதாம்பாட்டு. அவதார ரஹஸ்யஜ்ஞாந மடியான ப்ரேமம் மோக்ஷஸாதநமென்றது - கீழ்; இதில் - அவதாரவிசேஷ மான க்ர்ஷ்ணனுடைய ஆச்ரிதவிரோதி நிரஸநசீலத்தை அநுவதி த்து, அவன்றிருவடிகளிலே ஆசையுடையார்க்கல்லது நித்யஸூரிக ளோடு ஒருகோவையாய் அநுபவிக்கைக்கு விரகில்லையென்கிறூர்.

அ.— எழுபத்தொன்பதாமபாட்டு. ப்ரகாரவாசி யென்று-பத் துதிக்கோடே கூடியிருக்கையாலே பத்துவகைப்பட்டலோகமென் றபடி. பதிறுலோகமும் பத்துதிக்கிலே அந்தர்ப்பூதமாகையாலே அநுபாஷிக்கிறது. (முற்றலாகும்) முற்றல் - பலமாய், "ஆருமே" என்கிறஸ்வரத்தாலே - பலியாதென்றபடி. ... ... (எகூ)

வாசியாகிநேசமின்றிவந்தெதிர்ந்ததேனுகன்
நாசமாகிநாளுலப்பநன்மைசேர்பனங்கனிக்கு
வீசிமேனிமிர்ந்ததோளினில்லையாக்கினாய்கழற்
காசையாமவர்க்கலாலமரராகலாகுமே. (அ0)

ப-ரை.—நன்மைசேர் - அழகிதான, பனங்கனிக்கு-பனம்பழம் உதிருகைக்கீடாக, வாசியாகி - வாஜிவேஷத்தையுடையனாய், நேசமின்றி-அபிமுகனுகையன்றிக்கே, வந்தெதிர்ந்த - வந்தெதிர்த்த, தேனுகன் - தேனுகாஸுரனை, நாசமாகி-ம்ர்தப்ராயனாகி, நாள் உலப்ப - ஆயுஸ்ஸு முடிக்கைக்காக, வீசி - சுற்றியெறிந்து, அத்தாலே, மேல்நிமிர்ந்த-எதிரியைக்காட்டிலும்மிகுசின, தோள்-தோள்வலியாலே, இல்லையாக்கினாய் கழற்கு - அவனையழியச்செய்த வுனதிருவடிகளிலே, ஆசையாமவர்க்கலால் - ப்ரேமமுடையார்க்கல்லது, அமரராகலாகுமே-நித்யஸூரிகளோடு ஸத்ர்சராய் தேவரீரை யநுபவிக்கப்போமோ. (அ0)

வ்யா.—(வாசியாகிநேசமின்றி வந்தெதிர்ந்த தேநுகன்) காலயவநாதிகளைப்போலே ஸ்வரூபேண வந்து தோற்றாமே வாஜிவேஷத்திலேவந்து தோற்றினாய்த்து - க்ர்ஷ்ணன் அவதாரம்பண்ணி மேல்விழுகைக்காக. நேசமின்றி வருகையாவது - "மருண்டுமான்கணங்கள் மேய்கைமறந்து மேய்ந்தபுல்லும் கடைவாய்வழிசோர" என்று - க்ர்ஷ்ணசேஷ்டிதங்களாலே திர்யக்குக்களும் ப்ரேமபரவசமாய்ச்செல்லாநிற்க, துஷ்ப்ரக்ர்தியாகையாலே அத்துறையி லிழியாதொழிகை. எதிர்ந்துவருகையாவது - ஆதரமில்லையானாலுமுபேக்ஷகனாகலாமிறே; அதுவுமின்றிக்கே ப்ரதகனாய்வருகை. (நாசமாகிநாளுலப்ப) இப்படிப்பட்டதேநுகனை ம்ர்தப்ராயனாக்கி ஆயுஸ்ஸை முடிக்கைக்காக. நாசம் - துன்பம். (நன்மைசேர்பனங்கனிக்கு வீசி) தர்ஶநீயமாய்ப்பழுத்துநின்ற பனம்பழமுதிரும்படி, பனைத்தலையிலே சுழற்றியெறிந்து. "గృహీత్వా భ్రామణేనైవ సోஉమ్బరే గతజీవితమ్ । తస్మి
న్నేవ స చిక్షేప ధేనుకస్తృణరాజని । తతః ఫలాన్యనేకాని తాలాగ్రాన్నిపతన్ఖరః । పృథి
వ్యాం పాతయామాస మహావాతో ఘనానివ" "க்ர்ஹீத்வாப்ராமணேநைவஸோம்பரேகதஜீவிதம் । தஸ்மிந்நேவஸசிக்ஷேப தேநுகந்த்ர்ணராஜநி । ததஃபலாந்யநேகாநிதாலாக்ராந்நிபதந்கரஃ । ப்ர்திவ்யாம்பாதயாமாஸ மஹாவாதோகநாநிவ" என்னக்கடவதிறே.

(மேல்நிமிர்ந்ததோளினில்லையாக்கினாய்கழற்கு) எதிரியளவன்றிக்கே விஞ்சினதோள்வலியாலே அவனையழியச்செய்த உன்திருவடிகளுக்கு ஸங்கல்பத்தாலே யழித்தல், ஆயுதத்தாலேயழித்தலன்றிக்கே, கைதொட்டுத் தோள்வலியாலே யழியச்செய்தபடி. (ஆசையாமவர்க்கலாலமரராகலாகுமே) உன்னுடைய விரோதி நிரஸநஶீலதையை யநுஸந்தித்து உன்பக்கலிலே ப்ரேமமுடையார்க்கல்லது நித்யஸூரிகளோடு ஸத்ர்சராய் தேவரீரை யநுபவிக்கப்போமோ வென்கிறார். ... ... (அ0)

அ.—எண்பத்தோராம்பாட்டு. வ்யூஹவிபவங்கள் தேசகால விப்ரக்ருஷ்டத்தாலே நிலமன்றென்ன வேண்டாதபடி பிற்பாடரிழவாமைக்குத் திருமலையிலேவந்து நின்றருளினான், அவன் திருவடிகளையாச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோளென்று உபதேசத்தைத் தலைக்கட்டுகிறார்.

கடைந்தபாற்கடற்கிடந்துகாலநேமியைக்கடிந்
துடைந்தவாலிதந்தனுக்குதவவந்திராமனாய்
மிடைந்தவேழ்மரங்களுமடங்கவெய்துவேங்கடம்
அடைந்தமாலபாதமேயடைந்துநாளுமுய்ம்மினோ. (௮௧)

ப-ரை.—துர்வாஸச்சாபத்தாலே ப்ரஷ்டைச்வர்யனான இந்த்ரனுக்கு ஐராவதம் கல்பகவ்ருக்ஷம் முதலியவற்றை யுண்டாக்கிக் கொடுக்கைக்காக, கடைந்தருளின, பாற்கடல்-க்ஷீராப்தியிலே, ஆர்த்தரக்ஷணத்துக்காக, கிடந்து-கண்வளர்ந்தருளியும், அத்தேவதைகளை புஜபலத்தாலே நலிந்த, காலநேமியை-காலநேமியாகிற அஸுரனை, கடிந்து-வென்று, உடைந்த-பகைமீளப்பெறாத நாம் என்னராஜ்யம்பண்ணுகிறோமென்று நெஞ்சழிந்த, வாலிதந்தனுக்கு-உதவ, வாலியின் தம்பியாகிய மஹாராஜருக்குண்டான ஆபத்தைத் தீர்க்கைக்காக, இராமனாய்வந்து-சக்ரவர்த்தித்திருமகனாய்த்திருவவதரித்து, மிடைந்த-இலக்குக்குறிக்கவொண்ணாதபடி நெருங்கிநிற்கிற, ஏழ்மரங்களும்-மராமரங்களேழையும், அடங்க-கிரிரஸாதலங்களையுமடைய, எய்து-துளைத்து, வேங்கடம் அடைந்த-திருமலையை ஆச்ரயித்துநிற்கிற, மாலபாதமே-வ்யாமுக்தனுடைய திருவடிகளையே, அடைந்து-அநந்யப்ரயோஜநராய் ஆச்ரயித்து, நாளும்-நாள்தோறும்-உய்மின-உஜ்ஜீவிக்கப்பாருங்கோள். (௮௧)

வ்யா.—(கடைந்தபாற்கடல்கிடந்து) துர்வாஸச்சாபத்தாலே இந்த்ராதிகளுக்குவந்த ஆபத்தை, கடலைக்கடைந்து பரிஹரித்து, இன்னம் ஆபத்துக்களிலே ப்ரஹ்மாதிகள் வந்தபேக்ஷிக்கலாம்படி அதிலே கண்வளர்ந்தருளி. (காலநேமியைக்கடிந்து) அத்தேவதைகளை புஜபலத்தாலே நலிந்தகாலநேமியாகிற அஸுரனைவென்று. கடத்தல்-வெற்றி. (உடைந்தவாலிதந்தனுக்குதவவந்திராமனாய்) வலியாலேயுடைந்த தம்பி தனக்கு. (தன்தம்பி) ப்ரம்ஹாதிகளாலும் வல்லாததிர்யக்குக்களுடைய ரக்ஷணத்துக்காக சக்ரவர்த்தித்திருமகனாய் வந்தவதரித்து. தேவதாந்தர ஸ்பர்சத்தாலே ஸ்வரூபமழிந்தவாலிக்கு, "ராமபாணாஸநக்ஷிப்தமாவஹத்பரமாங்கதிம்" "ராமபாணாஸநக்ஷிப்தமாவஹத்பரமாங்கதிம்" என்கிறபடியே ஸ்வஹஸ்தவதத்தாலே மோக்ஷப்ரதனானைக்காக தசரதாத்மஜனாய்வந்து. உடைதல்-அழிதல். அதவா, தனக்கு துஷ்ப்ராபமான ரிச்யமூகத்திலே பகையான மஹாராஜரிருக்கையாலே, "பகைமீளப்பெறாத நாம் என்னராஜ்யம் பண்ணுகிறோம்" என்று நெஞ்சழிந்தவாலியாலே மஹாராஜர்க்குப் பிறந்த ஆபத்தைத் தீர்க்கைக்காக வந்தென்றுமாம்.

(உடைந்தவாலிதந்தனுக்கு) "(தம்பிதனக்கு) மவ்வுக்கு ந ஆதேசமாய், 'தம்பி'என்றதை 'தந்' என்று கடைக்குறைத்த லாய்க் கிடக்கிறது" என்று ஒருதமிழன்.

(மிடைந்தவேழ்மரங்களுமடங்கவெய்து) ஆபத்திலே ரக்ஷிக் கவரக்கொண்டு ரக்ஷணத்திலே அதிசங்கைபண்ணின மஹாராஜர் விச்வஸிக்கைக்காக இலக்குக்குறிக்கவொண்ணாதபடி மிடைந்துநிற் கிற மராமரங்களேழையும், அருக்தமான கிரிஸாதலங்களேழை யுமடங்கத்துளைத்து. வாலி, ஸ்வபலபரீக்ஷைபண்ணுவது ஒரு மரா மரத்தளவிலேயாயிருக்க, மஹாராஜருடைய வதிசங்கையை ஸவா ஸநமாகப் போக்குகைக்காக ஏழென்று பேர்பெற்றதடைய எய்தா ராய்த்து. (வேங்கடமடைந்த மாலபாதமே யடைந்து) ப்ரயோஜ நாந்தரபரர்க்கு முகங்கொடுத்த சீலமும், அவதாரத்தில தாழ்ந்தார் க்குமுகங்கொடுத்தசீலமும், பிற்பாடரானவர்க ளிழவாமைக்குத் திருமலையை யாச்ரயித்துநிற்கிற வ்யாமுக்தன்திருவடிகளை அநந்ய ப்ரயோஜநரா யாச்ரயித்து நாளுமுய்மினோ. "நாளும்-அடைந்துய் மின்" என்றுமாம. கைங்கர்யமென்றும் உஜ்ஜீவநமென்றும்-பர்யா யம். "சுடரடிதொழுதெழு" என்னக்கடவதிறே. ஆச்ரிதர்க்குத் திருவேங்கடமுடையான்திருவடிகளே ஆச்ரயணீயஸ்தலம்; திரு வேங்கடமுடையானுக்கு ஆச்ரயணீயஸ்தலம் திருமலை. (அக)

அ.—எண்பத்திரண்டாம்பாட்டு. இதுக்கு முன்பு பரோபதே சம்பண்ணினாராய், மேல் ஈச்வரனைக்குறித்து தேவரீர்திருவடிகளி லே ப்ரேமயுக்தர் நித்யஸுகிகளென்கிறார். இதுக்கடி-பிறர்க்கு ஸாத நமாகத் தாமுபதேசித்தபக்தி தமக்கு ஸ்வயம் ப்ரயோஜநமாகையா லே, தமக்கு ரஸித்தபடியைப் பேசுகிறார். இப்பரபக்திதான் ஸாதக னுக்கு உபாயத்தில் மேலெல்லையாய், ப்ரபந்நனுக்கு ப்ராப்யத்திலே முதலடியாயிருக்குமிறே. இதில் முதற்பாட்டில்-மநுஷ்யத்வே பரத் வத்தையும் அவதாரகந்தமான க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளு கிற நீர்மையையும் அநுஸந்தித்து, தேவரீர்திருவடிகளிலே ப்ரவண ரானார்க்கு ஸர்வதேசத்திலும் ஸுகமேயாமென்கிறார்.

எத்திறத்துமொத்துநின்றுயர்ந்துயர்ந்தபெற்றியோய்
முத்திறத்துமூரிநீரராவணைத்துயின்றநின்
பத்துறுத்தசிந்தையோடுநின்றுபாசம்விட்டவர்க்
கெத்திறத்துமின்பமிங்குமங்குமெங்குமாகுமே. (அஉ)

அ.—எண்பத்தோராம்பாட்டு. "வாலிதனக்கு" என்று முழுச் சொல்லாய் - வாலிபரமாதல்; வாலியுடைய, தந்தனுக்கு - தம்பித னக்கென்றாய் மாஹாராஜர்பரமாதல். ... ...(அக)

ப-ரை.—எத்திறத்தும் தேவமநுஷ்யதிர்யக் ஸ்தாவரங்களாகிற நான்கு ஜாதிகளிலும் - ஒத்துநின்று-ஸஜாதீயனுய அவதரித்து, உயர்ந்து - அஜஹத்ஸ்வபாவனுகையால் வந்தவுத்கர்ஷத்தையும், உயர்ந்த - ஸௌசீல்யத்தால்வந்த உத்கர்ஷத்தையும், பெற்றியோய் - ஸ்வபாவமாகவுடையவனே, முத்திறத்துநீர்-மூன்றுவகைப்பட்ட நீரையுடையகடலை, மூரி-இடமாகக்கொண்டு, அந்நீர் உறுத்தாமைக்காக, அரவணை - திருவநந்தாழ்வான்மேலே, துயின்ற - கண்வளர்ந்தருளின, நின் - தேவரீர்திருவடிகளிலே, பத்து உறுதத-பக்திமிகுந்த, சிந்தையோடுநின்று - மநோரதத்தோடே நின்று, பாசம்விட்டவர்க்கு - இதரவிஷய ஸங்கம் விட்டவர்களுக்கு, இங்கும் - சரீரத்தோடேயிருக்குமிருப்பிலும், அங்கும் - பரமபதத்திலிருக்குமிருப்பிலும், எங்கும் - உத்க்ரமணதசையிலும் அர்ச்சிராதிமார்க்கத்திலும், எத்திறத்தும்-ஆகிய இவ்வவஸ்தைகளிலெல்லாம், இன்பமாகும்-ஸுகமேயாயிருக்கும். (அஉ)

வ்யா.—(எத்திறத்துமொத்துநின்றுயர்ந்துயர்ந்த பெற்றியோய்) தேவஜாதியிலும் மநுஷ்யஜாதியிலும் திர்யக்ஜாதியிலும் ஸ்தாவர ஜாதியிலும் ஸஜாதீயனுயவதரித்து, அஜ்ஜாதியிற்காட்டில் அஜஹத்ஸ்வபாவனுகையாலேவந்த வுத்கர்ஷத்தையும், "సద్రేయాన్ భవజాయమానః" "ஸஉம்ரேயாந்பவதிஜாயமாநः" என்கிறபடியே ஸௌசீல்யத்தால்வந்த வுத்கர்ஷத்தையும் ஸ்வபாவமாகவுடையவனே. பெற்றி-இயல்வு. திறம்-திரள். ப்ரஹ்மருத்ரமத்யாவதாரத்தோடு மத்ஸ்யாவதாரத்தோடு வாசியற ஸஜாதீயபாவத்தில் புரையறுகையும், அதிமாநுஷ சேஷ்டிதங்களாலே ஸர்வாதிகத்வந் தோற்றுகையும், ஸாரத்யஸாரத்யங்களாலே ஸௌசீல்யம் தோற்றியிருக்கையும். (முத்திறத்துமூரிநீரரவணைத்துயின்ற) அவதாரத்தில் சொன்னமேன்மைக்கும் நீர்மைக்கும் ஊற்றாய், மூன்றுவகைப்பட்ட நீரையுடைத்தானகடலையிடமாகக்கொண்டு, அந்நீருறுத்தாமைக்குத்திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளின. முத்திறத்துநீர் - ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷஜலம் இவை. மூரி - இடம்.

(நின்பத்துறுத்தசிந்தையோடுநின்றுபாசம்விட்டவர்க்கு) உன் திருவடிகளிலே பக்திமிக்க மநோரதத்தோடே நின்று,இதரவிஷயத்தில் ஸங்கத்தைவிட்டவர்க்கு. "பத்து" என்று - பக்தி. உறுதல்-அழுந்தல். அதாவது - மிகுதி. ஆச்ரிதபரித்ராணார்த்தமாக வவதரித்த வவதாரத்தின்மேன்மையும் நீர்மையும் அதுக்கூற்றுனக்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளுகிற நீர்மையையும் அநுஸந்தித்து பரபக்தியுக்தராய்,அப்பக்தி பாரவஶ்யத்தாலே இதரவிஷயங்களிலே வைராக்யத்தையுடையராயிருக்கிறவர்களுக்கென்கை.

(எத்திறத்துமின்பமிங்கு மங்குமெங்குமாகுமே) சரீரத்தோடே யிருக்குமிருப்பிலும், பரமபதத்திலிருக்குமிருப்பிலும், உத்க்ரமணதசையிலும், அர்ச்சிராதிமார்க்கமென்கிறஅவஸ்தாவிஶேஷங்களிலும் ஸுகமேயாயிருக்கும். எத்திறத்து மின்பமான ஸர்வேஶ்வரனான உன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை யநுபவித்து, ப்ரகாரபேதங்களிலும் த்வததநுபவத்தால் வந்த ஸுகமேயல்லதில்லை. விஷயாந்தரப்ராவண்யம் எங்ஙனுமாகிலும் துக்கமேயானவோபாதி பகவத்ப்ராவண்யம் எங்ஙனுமாகிலும் ஸுகமேயாயிருக்குமென்கை.

அ.—எண்பத்துமூன்றாம்பாட்டு. "அநந்தக்லேஶபாஜநம்" "அநந்தக்லேசபாஜநம்" என்கிறபடியே-துக்கப்ரசுரமான இஸ்ஸம்ஸாரத்திலே ஸுகமுண்டாகக்கூடுமோவென்னில்; ப்ராப்திதசையில் ஸுகமும், ஸம்ஸாரத்தேயிருந்துவைத்து தேவரீர்திருவடிகளில் விச்சேதமில்லாத ப்ரேமத்தால் பிறக்கும் ஸுகதத்துக்குப் போராதென்கிறார்.

மட்டுலாவுதண்டுழாயலங்கலாய்புலன்கழல்
விட்டுவீள்விலாதபோகம்விண்ணினண்ணியேறினும்
எட்டினோடிரண்டெனுங்கயிற்றினான்மனந்தனைக்
கட்டிவீடிலாதுவைத்தகாதலின்பமாகுமே. (அ௩)

ப-ரை.—மட்டுஉலாவு - தேனமாரும், தண்-குளிர்ந்த, துழாயலங்கலாய்-திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனானவனே, புலனகழல் - ப்ராசநீயமான திருவடிகளை, விட்டு—, வீள்விலாதபோகம்-அழிவில்லாதபோகத்தை, விண்ணினண்ணியேறினும்-பரமபதத்திலே யேறிக்கிட்டினாலும்; எட்டினோடிரண்டெனும் கயிற்றினால்-பக்தியெனகிறகயிற்றாலே, மனந்தனை-ஸர்வேந்த்ரியங்களுக்கும் ப்ரதானமான மனஸ்ஸை, கட்டி-விஷயங்களிலே போகாதபடி பந்தித்து, வீடிலாது-விச்சேதமில்லாதபடி, வைத்த-தேவரீர்திருவடிகளிலேவைத்த, காதலின்பம் - ப்ரேமமானது, ஸுகத்துக்கு ஸாதநமாயிருக்கையன்றிக்கே, ஆகும்-அதுதானே ஸுகமாயிருக்கும். (அ௩)

வ்யா.—(மட்டுலாவுதண்டுழாயலங்கலாய) தேன்மாறாத செவ்வித்திருத்துழாய் மாலையாலே யலங்க்ருதனானவனே. இத்தால்-திருத்துழாயோட்டை ஸம்பந்தத்தாலே ஸர்வாதிக வஸ்துவென்னுமிடமும், உபயவிபூதி நிர்வஹணத்துக்கிட்ட தனிமாலையென்னுமிடமும், ஒப்பனையழகும் சொல்லித்தாய்த்து.(புலன்கழல் விட்டு

அ.— எண்பத்திரண்டாம்பாட்டு. "இங்குமங்குமெங்குமான-எத்திறத்தும்"என்றாய்-முமுக்ஷுசரீரம், முக்தசரீரம், ஸூக்ஷ்மசரீரம் இவையெல்லாவற்றிலும் ஸுகமாயிருக்குமென்கை. திறம்-ப்ரகாரமாய், அத்தால் - சரீரத்தைச்சொல்லுகிறது. எல்லாவவஸ்தையிலுமென்றபடி. ... ... (அ௨)

வீள்விலாதபோகம்) தர்சநீயமாய் நித்யஸூரிகளுக்கு ஸதா தர்சநீயமுமான தேவரீர்திருவடிகளைவிட்டு, வேறுபோக்கில்லாத போகத்தை. புலன்கழல்-புலப்படும் திருவடிகளை. (விண்ணில்நண்ணியேறினும்) பரமபதத்தேயேறிக்கிட்டிலும்.

(எட்டினோடிரண்டெனுங்கயிற்றினால்) எட்டுமிரண்டும்கூடி பத்தாய், அத்தைபக்தியென்கிறது. பகவத்பக்தியில் தமக்குள்ள கௌரவாதிசயத்தாலே மறைத்துச்சொல்லுகிறார். "கயிறு" என்று-பந்தகமென்றபடி. (மநந்தனைக்கட்டி) ஸர்வேந்த்ரியங்களுக்கும் ப்ரதாநமான மநஸ்ஸை விஷயாந்தரங்களில் போகாதபடிபந்தித்து. (வீடிலாதுவைத்தகாதலின்பமாகுமே) விச்சேதமில்லாதபடி தேவரீர்திருவடிகளிலே வைத்த ப்ரேமம், ஸுகத்துக்கு ஸாதநமாயிருக்கையன்றிக்கே தானே ஸுகமாயிருக்கும். ... (அங)

அ.—எண்பத்துநாலாம்பாட்டு. "வீடிலாதுவைத்த காதலின்பமாகும்" என்று-கீழ்ப்ரஸ்துதமானபக்தி தம்பக்கல் காணாமையாலும், தம்மை ப்ரக்ருதியோடேயிருக்கக் காண்கையாலும், ஈச்வரன் ஸ்வதந்த்ரனுகையாலும், அவன்நினைவாலே பெறுகையாலும், என் திறத்தில் என்னுதன், தன் திருவடிகளிலே பரமபக்தியுக்தனும்படி பண்ண நினைத்திருக்கிறானே, நித்யஸம்ஸாரியாய்ப்போக நினைத்திருக்கிறானே, திருவுள்ளத்தில் நினைத்திருக்கிறதென்னோவென்கிறார்.

பின்பிறக்கவைத்தனன்கொலன்றிநின்றுதன்கழற்
கன்புறைக்கவைத்தநாளறிந்தனன்கொலாழியான்
தன்திறத்தோரன்பிலாவறிவிலாதநாயினேன்
என்திறத்திலென்கொலெம்பிரான்குறிப்பில்வைத்ததே. (அச)

ப-ரை.—இந்தசரீராவஸாநத்துக்குமேலே, பின்பிறக்கவைத்தனன் கொல்-இன்னமும் சிலசரீரபரிக்ரஹம்பண்ணும்படியாக நினைத்திருக்கிறானோ; அன்றி-அன்றிக்கே, நின்று - இடைவீடில்லாமல், தன்கழற்கு - தன திருவடிகளுக்கு, அன்பு-அன்பை, உறைக்கவைத்தநாளறிந்தனன்கொல் - உறைக்கவைத்து அநுபவிக்கும்நாள் எனக்குண்டாம்படி நினைத்திருக்கிறானோ; ஆழியான்தன்திறத்து-ஸர்வாதிகத்வஸூசகமான திருவாழியையுடையனானவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளிலே, ஓரன்பிலா-ப்ரேமலேசமில்லாதவனாய், ஓர் அறிவிலாத-ஜ்ஞாநலேசமில்லாதவனாய, நாயினேன - ஹேயனான, என்திறத்தில் - என் விஷயத்திலே, எம்பிரான் - எனக்கு உபகாரகனான ஸர்வேச்வரன், குறிப்பில்வைத்தது என்கொல் - திருவுள்ளத்தில் கொண்டிருக்கிறது என்னோ. (அச)

வ்யா.—(பின்பிறக்கவைத்தனன்கொல்) இந்த சரீராவஸாநத்துக்குமேலே இன்னமும் சிலசரீரபரிக்ரஹம்பண்ணும்படியாக என்னை நினைத்திருக்கிறானோ. அன்றிக்கே (பின்புஇறக்கவைத்தனன்கொல்)

அ.—எண்பத்துநாலாம்பாட்டு. பின் பிறக்க என்னுதல்; பின்பு இறக்கவென்னுதல்.

தன்பக்கலிலே ஜ்ஞாநம்பிறந்தபின்பும் தன்னைவிஸ்மரித்துநசிக்க நினைத்திருக்கிறுரே. நித்யமான வாத்மாவுக்கு பகவத் ஜ்ஞாந லாபாலாபங்களேயிறே ஸதஸத்பாவஹேதுக்கள். "అసద్బ్రహ్మేతివేదచే త్-అసన్నేవసభవతి-అస్తిబ్రహ్మేతిచేద్వేద, సన్తమేనన్తతోవిదురితి" "அஸத் ப்ரஹ்மேதிவேதசேத் - அஸந்நேவஸபவதி, அஸ்திப்ரஹ்மேதிசேத்வேத,ஸந்தமேநந்ததோவிதுரிதி" என்னக்கடவதிறே. (அன்றி) அன்றிக்கே. (நின்று தன்கழற்கன்புறைக்கவைத்தநாளறிந்தனன் கொல்) விச்சேதமில்லாதபடி தன்திருவடிகளுக்குஅன்பையுறைக்கவைத்து அநுபவிக்கும்நாள் எனக்குண்டாமபடி நினைத்திருக்கிறுரே. அன்புறைக்கையாவது - பரமபக்தியுக்தனுகை. வைத்தநுபவிக்கும் நாளென்கிறது - ஒருதேசவிசேஷத்தி லநுபவத்தை. இத்தால் - இச்சேதநனுக்கு ஜந்மமும் விஸ்ம்ருதியும் விநாசமும் பக்தியில்லாமை; உஜ்ஜீவநம் பரமபக்தியுக்தனுகை யென்றதாய்த்து. ஜந்மமாகிறது- விஷயாந்தர ப்ராவண்யஹேது. விஸ்ம்ருதியாகிறது - விஷயாந்தர ப்ராவண்யகார்யமாகையாலே ஆத்மாவுக்கு உபயமும்விநாசமிறே.

(ஆழியான்றன்திறத்து) ஸர்வாதிகனுன தன்னிடையாட்டத்து. (ஓரன்பிலாவறிவிலாதநாயினேன்) அவன்ஸ்வரூப ரூப குண விபூதிகளில் ப்ரேமகந்தமின்றிக்கே, அதுக்கடியான ஜ்ஞாநலேசமுமின்றிக்கே, ஹேயனுன நான். ப்ரேமகந்தமின்றிக்கே,அதில்லையென்கிற வறிவுமில்லாதவென்றுமாம். "நாயினேன்" என்கிறது - திறந்துகிடந்த வாசல்கள்தோறும நுழைந்து திரிகையும், எல்லாராலும் பரிபூதனுகையும், உகந்து தொட்டார்க்கும் ஸ்நாநம் பண்ணவேண்டும்படிஅமேத்ய பதார்த்தமாகையும்.(என்திறத்தில்) ஸம்ஸாரிகளைப்போலே விமுகனுதல், முக்தனைப்போலே போகப்ரவணனுதலன்றிக்கேயிருக்கிற வென்னிடையாட்டத்தில். (எம்பிரான் குறிப்பில் வைத்தது-என்கொல்) என்னுதன் திருவுள்ளத்தில் கொண்டிருக்கிறதென்னே. "பிறந்தபின்மறந்திலேன்" என்கிற ஜ்ஞாநத்தையும், "நடந்தகால்கள்நொந்தவோ" என்கிற ப்ரேமத்தையும் உபாயமென்றிருக்கிறிலர், ஈச்வரன்நினைவே தமக்கு உபாயமென்றிருக்கிருர். "வரந்தரும் திருக்குறிப்பில்வைத்ததாகில்" என்று-ஸாமாந்யேநவுபாயமாகச்சொல்லுவதுமதுவே, தமக்குஉபாயமாகவிசேஷித்துச்சொல்லுவதுமதுவே. இப்பாட்டால்-என்னுடைய பூர்வ வ்ருத்தத்தைப் பார்த்து உபேக்ஷிக்கிறுரே, இத்தலையில்விநாசம் தன்னிழவாமபடியானகுடற்றுடக்கை நினைத்து உஜ்ஜீவிப்பிக்க நினைத்திருக்கிறுரேவென்றதாய்த்து. ... ... (அ௪)

அவன்நினைவேஸாதநமென்பானென், தம்முடைய ஜ்ஞாநம் ஸாதநமாகாதோவென்ன;அருளிச்செய்கிறுர்(பிறந்தபின் இத்யாதி.)

அ.—எண்பத்தஞ்சாம்பாட்டு. என்னை இப்ப்ரக்ருதியோடே வைத்தபோதே தேவரீர்நினைவின்னதென்றறிகிலேன், முந்துற முன்னம்உன்ப்ரஸாதத்தாலே திருவடிகளில்பிறந்த ருசியைமாற்றி இதரவிஷய ப்ரவணனுக்காதொழியவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

நச்சராவணைக்கிடந்தநாதபாதபோதினில்
வைத்தசிந்தைவாங்குவித்துநீங்குவிக்கநீயினம்
மெய்த்தன்வல்லையாதலாலறிந்தனன்னின்மாயமே
உய்த்துநின்மயக்கினில்மயக்கலென்னைமாயனே. (அரு)

ப-ரை.—உகவாதார்க்குக்கிட்டவொண்ணாதபடி, நஞ்சு - விஷத்தையுமிழு கிற, அராவணை-திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளியிலே, கிடந்த-கண்வளர்ந்த ருளுகிற, நாத-ஸர்வேச்வரனே. பாதம்-தேவரீருடைய திருவடிகளாகிற, போதினில்-புஷ்பத்திலே, வைத்த-வைக்கப்பட்ட, சிந்தை - மநஸ்ஸை, வாங்குவித்து-அவைகளினின்றும் மீளும்படிபண்ணி, நெடுங்காலம் அகன்றிருந்ததுபோராமே, இன்னம் நீங்குவிக்க - இன்னும் அகலும்படி பண்ணுகைக்கு, நீ - ஸர்வசக்தியான நீ, மெய்த்தன வல்லை - மெய்யே ஸமர்த்தனை; ஆதலால - ஆகையாலே, அறிந்தனன்-உன்னை ஸ்வதந்த்ரனென்று அறிந்துகொண்டேன; மாயனே - ஆச்சர்ய மான சேஷ்டிதங்களையுடையவனே, நின்மாயம - தேவரீரிட்டவழக்கான ப்ரக்ருதியோடே, உய்த்து - நித்யஸம்ஸர்க்ஷடனும்படிபண்ணி, நின் - உனக்கு பரிகரமான, மயக்கினில் - சப்தாதிவிஷயங்களிலே மூட்டி, என்னை-உன்கைபார்த்திருக்கிறவென்னை, மயக்கல் - அறிவுகெடுக்கப்பாராதொழியவேணும். (அரு)

வ்யா.—(நச்சராவணைக்கிடந்தநாத) உகவாதார்க்குக் கிட்டவொண்ணாதபடி விஷத்தையுமிழுகிற திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனே. நீ உகந்தாரை நித்யகைங்கர்யம் கொள்ளும் ஸ்வதந்த்ரனென்றபடி. (பாதபோதினில்வைத்தசிந்தை) உன்திருவடிகளாகிற செவ்விப்பூவிலே வ்யவஸ்திதமான மநஸ்ஸை. ப்ராப்தமுமாய் நிரதிசய போக்யமுமா யிருந்துள்ள திருவடிகளிலே பொருந்தின மநஸ்ஸை யென்கை. (வாங்குவித்து) திருவடிகளில்நின்றும் மீளும்படிபண்ணி. ‘‘𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌥𑌮𑌨𑍍𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌤𑌿’’ ‘‘நிவேசிதாத்மாகதமந்யதிச்சதி’’ என்று மநஸ்ஸையும் விமுகமாம்படிபண்ணி. (நீங்குவிக்கநீயினம்மெய்த்தன்வல்லை) நெடுங்காலம் அகன்றதுபோராமே யின்னமகலுமபடிபண்ணவல்ல ஸர்வசக்தியானநீ மெய்யே வல்லை.

(ஆதலாலறிந்தனன்) ஒருத்தனைக் கேள்விகொண்டு கார்யம் செய்யவேண்டாதபடிவஸ்துவை வஸ்தவந்தரமாக்கவல்ல சக்தியையுடையையாகையாலே உன்னை ஸ்வதந்த்ரனென் றறிந்துகொண்டேன். (நின்மாயமேயுய்த்து நின்மயக்கினில்மயக்கல்) உமக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; ‘‘𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾’’ ‘‘மமமாயா’’ என்கிறபடியேதேவரீரிட்டவழக்கான ப்ரக்ருதியோடே நித்யஸம்ஸர்ஷட

ணும்படி பண்ணி, உனக்கு பரிகரமான சப்தாதிவிஷயங்களிலே மூட்டி என்னை யறிவுகெடுக்கப் பாராதொழியவேணும். சேதநனை யறிவுகெடுக்குமவையானையாலே, "மயக்கு" என்று - சப்தாதிவிஷயங்களைச்சொல்லுகிறது. (என்னை) உன்பக்கலிலே ந்யஸ்தபரனாய் உன்கைபார்த்திருக்கிறவென்னை. (மாயனே) நம்மை யொழியச் செல்லாதாரை சப்தாதிகளிலேமூட்டி யறிவுகெடுப்புதோமோ, ஸ்வதந்த்ரரையன்றோ நாம் அங்ஙன் செய்வதென்ன; ஆச்சர்ய மான சேஷ்டிதங்களையுடையவனே. "ఉపమానమశేషాణాం సాధూనామ్", "உபமாநமஶேஷாணாம்ஸாதூநாம்" என்கிறபடியே ப்ரஹ்லாதனை எதிரம்புகோக்கப்பண்ணவல்லை, ப்ராதிகூல்யத்தில் வ்யவஸ்திதனான சிசுபாலனுக்கு ஸாயுஜ்யப்ரதனாகவும் வல்லை, இதுவன்றோ தேவரீருடைய ஸ்வாதந்த்ர்யமென்கிறார். ... ... (அரு)

அ.—எண்பத்தாறும்பாட்டு. உம்மை நம்பக்கல்நின்றுமகற்றி ப்ரக்ருதிவச்யராக்குவோமாக நம்பக்கலிலே அதிசங்கை பண்ணுவானென்னென்ன; விரோதிநிரஸநஸமர்த்தனான நீ என்ப்ரக்ருதிஸம்பந்தத்தையறுத்து என்னினைவைத் தலைக்கட்டாதொழிந்தால் அதிசங்கைபண்ணாதே செய்வதென்னென்கிறார்.

சாடுசாடுபாதனே சலங்கலந்தபொய்கைவாய்
ஆடரவின்வன்பிடர்நடம்பயின்றநாதனே
கோடுநீடுகையசெய்யபாதநாளுமுள்ளினால்
வீடனாகமெய்செயாதவண்ணமென்கொல்கண்ணனே. (அசு)

ப-ரை.—சாடு-சகடாஸுரனமுடியும்படி, சாடு-உதைத்த, பாதனே - திருவடிகளையுடையனாய், விஷமேமிகுந்த, சலங்கலந்த - அந்தோட்டையமுநாஜலமும் கலந்திருந்துள்ள, பொய்கைவாய்-பொய்கையிலே, ஆடு-வாத்திக்கிற, அரவினை-காளியனுடைய, வன்-திண்ணிதான, பிடர் - பிடரியிலே, நடம்பயின்ற - நாத்தநம்செய்தவனாய், நாதனே-எங்களுக்கு வகுத்தஸ்வாமியாய், நீடு-ஸர்வகாலத்திலும், கோடு-ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, கைய-திருக்கையிலே யுடையவனாய், கண்ணனே-ஆச்ரிதஸுலபனானவனே, செய்ய - அழகிதான. பாதம்-உன் திருவடித்தாமரைகளை, நாளும்-ஸர்வகாலமும், உள்ளினால்-அநுஸந்தித்தால், வீடனாக-ப்ரக்ருதிஸம்பந்தமற்றுத்திருவடிகளைப்பெறுமவனாக, மெய்செயாதவண்ணம் - மெய்செய்யாதொழிகின்ற ப்ரகாரம், என்கொல்-என்னோவென்கிறார். (அசு)

வ்யா.—(சாடுசாடுபாதனே) சகடாஸுரன்முடியும்படி திருவடிகளை நிமிர்த்தவனே. அநுகூலர்க்கு உத்தேஶ்யமான திருவடிகளேயாய்த்து ப்ரதிகூலர்க்குநாசகரமாயத்து. இதிறே வஸ்துஸ்வபாவம். "விடமுமமுதமுமாய்" என்னக்கடவதிறே. இத்தால்-விரோதிநிரஸநத்தில் உனக்கு வருத்தமுண்டாய்த்தானிழக்கிறேனோவென்கை.

(சலங்கலந்தபொய்கைவாய்)விஷப்ரசுரமாய் அத்தோடே யமுநா ஜலமும் மிச்ரமாயிருந்துள்ள பொய்கையிலே. "తస్యాశ్చాభిమహాభీమం విషాగ్నిశ్రితవారిణమ్। హ్రదం కాళీయనాగస్య దదర్శాతిభీషణమ్" "தஸ்யாஶ்சாதிம ஹாபீமம்விஷாக்நிஶ்ரிதவாரிணம் | ஹ்ரதம்காளியநாகஸ்ய ததர்ஶா திவிபீஷணம்" என்னக்கடவதிறே. (ஆடரவின்வன்பிடர்நடம்பயி ன்ற) அப்பொய்கையிலே வர்த்திக்கிற காளியனுடைய திண்ணிய பிடரியிலேநின்று ஸஞ்சரிக்கிற ஸஞ்சாரம் வல்லார்ஆடினைப்போலே யிருக்கை. "ஆடரவு" என்று-க்ரோதத்தாலே யாடுகிற அரவென்று மாம். "ஆடல்" என்று - நடையாட்டமும், கூத்தும். (நாதனே) வகுத்தஸ்வாமியானவனே. விரோதிநிரஸந முகப்பாகைக்கடியான ஸம்பந்தத்தைச்சொல்லுகிறது. இத்தால - என்விரோதியைப்போக் குகைக்கு உகப்பல்லாரையிழக்கிறேனே, ஸம்பந்தமில்லாமே யிழக் கிறேனேவென்கை. பகவத்ஸமாச்ரயணத்துக்கும் அநுபவத்துக் குமாக ஸ்ரேஷ்டமான சரீரத்திலே அஹங்காரலேச முண்டானால் அதுநிரஸநீயமென்று தோற்றுகைக்காக, சகடாஸுரநிரஸநத்தை யருளிச்செய்தார். தனக்கு போக்யமான வாத்மாவுக்கு, விஷ ஸம் ஸர்க்கம்போலே நிரஸநீயம் தேஹஸம்பந்தமென்று தோற்றுகை க்காகக் காளியமர்த்தநத்தை யருளிச்செய்தார். அநுகூலமாகவை த்ததொன்றிறே சகடம், உபஜீவ்யமாயிருப்பதொன்றிறே யமுநா ஜலம்.

(கோடுநீடுகைய) ஸர்வகாலமும் இருக்கைக்கு நிரூபகமென்னு ம்படி அத்தைப்பிரியாத ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடையவனே. என் விரோதியைப் போக்குகைக்கு உன்கையில் பரிகரமில்லாமே யிழக்கி றேனே, என்கையில் பரிகரமுண்டாயிழக்கிறேனேவென்கை. (செ ய்யபாதம் நாளுமுள்ளினால்) உன்திருமேனிக்கு பரபாகமாய் ஆகர் ஷகமான திருவடிகளை ஸர்வகாலமும் அபாச்ரயமாக வநுஸந்தித் தால். இத்தால்-நான் அந்யபரனாய்த்தானிழக்கிறேனோ வென்கை. (வீடனாகமெய்செயாதவண்ணமென்கொல்) இப்படி சக்தனாயிருக்க, ப்ரக்ருதி ஸம்பந்தமற்றுத் திருவடிகளைப்பெறுமவனாக மெய்செய்யா

அ.— எண்பத்தாறும்பாட்டு (ஆடரவு) ஆடல் - ஸஞ்சாரமா ய், அத்தால் - வர்த்திக்கிற அரவென்னுதல். மெய்செய்கை - சரீரமி ருக்கச்செய்தே ஒருஜ்ஞாநவிஷயத்தாலேமெய் போலேதோற்றியிரு க்கையை சரீரநிவர்த்திபூர்வகமாக யதாவானபகவதநுபவத்தைச் செய்கை. நான்இச்சங்கைக்குஹேது சொல்லாதபடி என்னபிமதம் செய்யாமைக்கு ஹேதுவைச்சொலலலாகாதோ என்கிறுதொன்று வாக்யத்தை அந்வயித்துக்கொள்வது. ... ... (அசு)

தொழிகிற ப்ரகாரமென்னே. மெய்செய்கையாவது - விஷயீகாரமாத்ரத்திலே, "மூடியாததென்னெனக்கேலினி" என்னப்பண்ணுதல், ஜ்ஞாநலாபத்தாலே, "யாவர்நிகரகல்வானத்தே" என்னப்பண்ணுதல் செய்யுமிவ்வளவுகளாலேவந்த ஆஸ்வாஸமொழிய தேஹஸம்பந்தத்தை அறுக்கையும், நித்யஸூரிகள் பரிமாற்றத்தைப் பண்ணித்தருகையும். (கண்ணனே) ஸம்ஸாரிகளுக்கு இச்சையே தொடங்கி பரமபக்தி பர்யந்தமாக வெல்லா வவஸ்தைகளையு முண்டாக்கி முக்தராக்குகையன்றே வவதாரத்துக்குபலம், அநுபாவ்யமாயிருப்பதொரு கர்மஶேஷமுண்டாயோ வவதரித்தது; ஆக, நீர் நம்பக்கலிலே அதிசங்கை பண்ணுகைக்கு ஹேதுவென்னென்ன; நீ சக்தனாய் வைத்து என்னபிமதஞ்செய்யாமைக்கு ஹேதுவைச் சொல்லலாகாதோ நான் அதிஶங்கைபண்ணினதுக்கு ஹேதுசொல்லும்படியென்கிறார். ... ... (அசு)

அ.—எண்பத்தேழாம்பாட்டு. "செய்யபாதம் நாளுமுள்ளினால்" என்று நீயே எனக்கு அபாச்ரயமென்கையாலே நம்மையொழிய வுமக்கு வேறொரு பற்றில்லையோவென்ன; அபாச்ரயமாக ஸம்பாவனையுள்ள ப்ரஹ்ம ருத்ரர்கள் ஸ்வாதிகாரஸித்திக்கு தேவரீர் கைபார்த்திருக்கும்படியாய் இழிந்தபின்பு, ஸர்வாதிகாரானதேவரீரையொழிய வேறொரு பற்றையுடையே னல்லேனென்று தம்முடைய வதிகாரத்துக்கு அபேக்ஷிதமான அநந்யகதித்வ க்யாபநம் பண்ணுகிறார் மேல்.

நெற்றிபெற்றகண்ணன்விண்ணினாதனோடுபோதின்மேல்
நற்றவத்தநாதனோடுமற்றுமுள்ளவானவர்
கற்றபெற்றியால்வணங்குபாதநாதவேதநின்
பற்றலாலோர்பற்றுமற்றதுற்றிலேனுரைக்கிலே. (அஎ)

ப-ரை.—நெற்றிபெற்றகண்ணன் - நெற்றியிலே கண்ணையுடையனான ருத்ரனும், விண்ணின்நாதனோடு-ஸ்வர்க்கத்துக்கு நிர்வாஹகனான இந்த்ரனும், போதின்மேல் - திருநாபீகமலத்தைப் பிறப்பிடமாகவுடையனாய், நல்தவத்தநாதனோடு-ஒருவராலும் செய்யமுடியாத தபஸ்ஸைப்பண்ணுகையாலே பதினாலு உலகங்களுக்கும் ஸ்ரஷ்டாவாய் அவற்றுக்கு நாதனான சதுர்முகனும், மற்றுமுள்ளவானவர்-ஹவிர்ப்பாகபுக்குக்களான மற்ற தேவதைகளும், கற்றபெற்றியால்-தந்தாம்கற்ற ப்ரகாரங்களாலே, வணங்கு - ஆச்ரயிக்கும், பாத-திருவடிகளையுடையனாய், நாதவேத-ஸர்வலோகநாதனாக வேதப்ரதிபாத்யனானவனே, உரைக்கில் - உண்மைசொல்லப்புகில், நின்பற்றலால்-உன்திருவடிகளே அபாச்ரயமாயிருக்குமதொழிய, மற்றோர்பற்றுத -வேறோர் பாச்ரயத்தை, உற்றிலேன் - உடையேனல்லேன். (அஎ)

வ்யா.—(நெற்றிபெற்றகண்ணன்)நெற்றியிலே கண்ணையுடைய ருத்ரன். தன்னுடைய ஶக்த்யதிசயத்துக்கு ப்ரகாசகமாகையாலே லலாட நேத்ரத்தைத் தனக்குப்பேறாக நினைத்திருக்கிறானாய்த்து.

(விண்ணின்நாதனோடு போதின்மேல் நற்றவத்தநாதனோடுமற்றுமுள்ளவானவர்) ஸ்வர்க்கத்துக்குநிர்வாஹகனான இந்த்ரனோடே, திருநாபீகமலத்தைப் பிறப்பாகவும் ஸ்தாநமாகவுமுடையனாய் துஷ்க்கரமான தபஸ்ஸாலே சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவுமாய் அதுக்கு நிர்வாஹகனுமானப்ரஹ்மாவோடே, ஹவிர்ப்பாகபுக்குக்களான ஸகல தேவதைகள். ஸம்ப்ரதிபந்ந க்ஷேத்ரஜ்ஞரான தேவர்களோடும் இந்த்ரனோடுங்கூட ப்ரம்ஹ ருத்ரர்களைச் சொல்லிற்று, அவர்களோபாதி இவர்களும் க்ஷேத்ரஜ்ஞரென்று தோற்றுகைக்காக.

(கற்றபெற்றியால்வணங்குபாத) தாந்தாங்கற்ற ப்ரகாரங்களாலே யாச்ரயிக்கும் திருவடிகளையுடையவனே. கற்றப்ரகாரங்களென்கையாலும், ஆச்ரயணத்தைச் சொல்லுகையாலும்-இவர்களுடைய சாஸ்த்ரவஶ்யதையையும் ஜ்ஞாநஶக்திகளுடைய வைஷம்யங்களையும் சொல்லுகிறது. (நாதவேத) நாதனாக வேதப்ரதிபாத்யனானவனே. தேவர்களுடைய ஆச்ரயணத்துக்கடியான ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. ‘‘తమీశ్వరాణాంపరమం మహేశ్వరమ్’’ ‘‘పతింవిశ్వస్య’’ ‘‘தமீஶ்வராணாம்பரமம்மஹேஶ்வரம்’’ ‘‘பதிம்விஶ்வஸ்ய’’ என்னக்கடவதிறே. (நின்பற்றலாலோர்பற்றுமற்றதுற்றிலேன்) உன்திருவடிகளே அபாச்ரயமாகவிருக்குமதொழிய எனக்கு வேறொரு அபாச்ரயஸ்பர்சமில்லை. உறுதல்-தீண்டுதல். (உரைக்கிலே) தேவதாந்தரஸ்பர்சமில்லையென்று சொல்லுகையும் எனக்கவத்யமென்கை. (அஎ)

அ.—எண்பத்தெட்டாம்பாட்டு. ப்ரஹ்மருத்ராதிகளுடையவதிகாரம் ஈஶ்வரனாலேயென்றார்-கீழ்; இதில்- அவர்கள் தங்களாபந்நிவ்ர்த்திக்கு தேவரீர்கைபார்த்திருக்கும்படி பரமோதாரரான தேவரீரையொழிய வேறொருவரை தேவதையாக மதிப்பனோவென்கிறார்.

வெள்ளைவேலைவெற்புநாட்டிவெள்ளெயிற்றராவளாய்
அள்ளலாய்க்கடைந்தவன்றருவரைக்கோராமையாய்
உள்ளநோய்கள்தீர்மருந்துவானவர்க்களித்தவெம்
வள்ளலாரையன்றிமற்றோர்தெய்வம்நான்மதிப்பனே. (அஅ)

ப-ரை.—வெள்ளைவேலை - வெளுத்தகடலானக்ஷீராப்தியிலே, வெற்புநாட்டி-மந்தரபர்வதத்தைநாட்டி, வெள் - வெளுத்த, எயிறு - தந்தபங்தியைக்காட்டுகிற, அரா - வாஸுகியாகிறபாம்பை, அளாய்-சுற்றி, அள்ளலாய-திரைகள் எதிரேவந்து செறியும்படி, கடைந்தவன்று-மதநம்பண்ணின காலத்திலே, அருவரைக்கு - அரிதான அம்மலை அமிழ்ந்தாதபடி முதுகிலேநின்று சுழலுகைக்கு, ஓர்-அத்விதீயமான, ஆமையாய-ஆமையாய்த்தரித்து, வானவர்க்குஉள்ள நோய்கள்-இந்த்ராதி தேவர்களுக்குண்டான துரிதங்களை, தீர்-தீர்க்கத்தக்க, மருந்து-அம்ர்தத்தை, அளித்த - அவர்களுக்குக்கொடுத்தருளுகையாலே, எம்வள்ளலாரையன்றி - எனக்கு ஔதார்யத்தை ப்ரஸாதித்தவனையொழிய, நான்-அநந்யப்ரயோஜநனாய் அநந்யசரணனானநான், மற்றோர்தெய்வம் - வேறொருதைவத்தை, மதிப்பனே-ஆச்ரணீயமாகமதிப்பேனோ. (அஅ)

வ்யா.—(வெள்ளைவேலைவெற்புநாட்டி) வெளுத்தகடலிலேமந்தரபர்வதத்தைநாட்டி.காளமேகநிபஶ்யாமமானதான் க்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளும்போதை அந்த பரபாகரஸம் அநந்யப்ரயோஜநர்க்கு அநுபாவ்யமாயிருக்க, அத்தைக்குலைத்து ப்ரயோஜநாந்தரபரர்க்காக அக்கடலிலே கொடுப்புக்கு மந்தரத்தைநாட்டி. (வெள்ளெயிற்றரவளாய்) வெளுத்த தந்தபங்தியைக்காட்டுகிற வாஸுகியை அதிலேசுற்றி. தன்னை மந்தரபர்வதத்திலே சுற்றிவலிக்கப்புக்கவளவிலே தன்பலஹாநிதோற்றப் பல்காட்டுகிற வாஸுகிக்கு பலஸாதநத்தைப்பண்ணி அந்த மந்தரத்திலேசுற்றி. "తేజసా నాగరాజానం తదాప్యాయితవాన్ ప్రభుః" "தேஜஸாநாகராஜாநம் ததாப்யாயிதவாந் ப்ரபுঃ" என்னக்கடவதிறே. எயிறு - பல்லு. அரவு-பாம்பு. அளாய்-அளாவி-சுற்றி. (அள்ளலாய்க்கடைந்தவன்று) "అప్రమేయో మహోదధిః" "அப்ரமேயோமஹோததி." என்கிறபடியே அம்மஹார்ணவத்தை, "கடல்மாறுசுழன்றழைக்கின்றவொலி" என்னும்படி திரைகள் எதிரேவந்து செறியும்படி கடைந்தவன்று. அள்ளல் - செறிவு. "அன்று" என்கிறது-ஈஶ்வராபிமாநிகளான ஸகலதேவதைகளும் தங்களாபந்நிவ்ருத்திக்கு அவனைப்பார்த்திருந்தவன்றென்கை. (அருவரைக்கோராமையாய்) அம்மந்தரம் அழுங்காமல்படாமே தன்முதுகிலேநின்று சுழலும்படி அத்விதீயமானவாமையாய்தரித்து. அஜ்ஜாதியிலே அத்யதமனுமென்றுமாம். "క్షీరోదమధ్యే భగవాన్ కూర్మరూపీ స్వయం హరిః। మన్దరాద్రేరధిష్ఠానం భ్రమతోఽభూన్మహామునే" "க்ஷீரோதமத்யேபகவாந் கூர்மரூபீஸ்வயம்ஹரிঃ। மந்தராத்ரேரதிஷ்டாநம் ப்ரமதோபூந்மஹாமுநே" என்னக்கடவதிறே.

(உள்ளநோய்கள்)"ஈச்வரோஹம" என்றிருக்கிறவர்களுக்குஒரு ப்ராஹ்மணசாபமாத்ரத்தாலே தன்னையும்தன்விபூதியையும் அஶ்ரீ ப்ரவேஶிக்கையும், அத்தாலே ஸத்வம் குடிபோகையும், அத்தாலே ஜ்ஞாநஹாநியும் பலஹாநியும்,அந்த பலஹாநியாலே வந்த அஸுரபரிபவமும், இவற்றால்வந்ததுக்கபரம்பரைகளும்நோய்களிறே.(தீர்மருந்துவானவர்க்களித்த) இவர்கள்துரிதங்கள்போக அம்ருதத்தையும் பிராட்டியுடைய விஶேஷகடாக்ஷத்தையும் கொடுத்த. அம்ருதப்ரதாநத்தாலே பலத்தையும், பிராட்டியுடைய விஶேஷகடாக்ஷத்தாலே ஐச்வர்யத்தையும் கொடுத்தானென்கை. "శ్రీ తేభ్యో తేజబలైశ్వర్యైర్యుక్తాస్తదా। వర్ధమానాత్ తతో దేవా హరివక్షఃస్థలస్థయా। లక్ష్మ్యా మైత్రేయ సహసా పరాం నిర్వృతిమాగతాః" "ஶ்ரீதேப்யோ தேஜபலைர்த்தைத்ய சமூஸ்ததா। வத்யமாநாததோதேவா ஹரிவக்ஷஸ்தலஸ்தயா। லக்ஷ்ம்யாமைத்ரேய ஸஹஸா பராந்நிவ்ருதிமாகதா:" என்னக்கடவதிறே.(எம்வள்ளலாரையன்றி மற்றோர்தெய்வம்நான்மதிப்பனே) "ఉదారాస్సర్వ ఏవైతే"

"உதாராஸ்ஸர்வஏவைதே" என்கிற ஔதார்யத்தை எனக்கு ப்ர காசிப்பித்தவனையொழிய அநந்யப்ரயோஜநனாய்அநந்யசரணனாயிரு ந்துள்ள நான் வேறொருதைவத்தை ஆச்ரயணீயமாகநினைப்பனோ.

அ.—எண்பத்தொன்பதாம்பாட்டு. ப்ரஹ்மாதிகளையும் மேன் மைகுலையாதபடி நின்று ரக்ஷித்தவளவன்றிக்கே, "కృష్ణాశ్రయాః కృష్ణబలాః కృష్ణనాథాశ్చ పాణ్డవాః" "க்ர்ஷ்ணாச்ரயா:க்ர்ஷ்ணபலா: க்ர்ஷ்ண நாதாஸ்சபாண்டவா:" என்கிறபடியே பாண்டவர்களுக்கு தூத்ய ஸாரத்யங்களைப்பண்ணித்தாழநின்று ஸத்யஸங்கல்பனாய்க்கொண்டு அவர்கள் விரோதிவர்க்கத்தை யழியச்செய்து ராஜ்யத்தைக்கொடு த்தவுன்னையொழிய ஒருதைவமுண்டென்று நான் நினைத்திருப்பனோ வென்கிறார்.

பார்மிகுத்தபாரமுன்னொழிச்சுவானருச்சுநன்
தேர்மிகுத்துமாயமாக்கிநின்றுகொன்றுவென்றிசேர்
மாரதர்க்குவான்கொடுத்துவையமைவர்பாலதாம்
சீர்மிகுத்தநின்னலாலோர்தெய்வநான்மதிப்பனே. (அகூ)

ப-ரை.—பார் - எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளும்பூமி, என்னால் ஸஹிக்கவொண்ணாதென்று சொன்ன, மிகுத்தபாரம் - மிக்கபாரத்தை, முன்-தான்முறபாடனாய்நின்று, ஒழிச்சுவான் - அதனைத்தவிர்பபிக்கைக்காக, அருச்சுநன்-அர்ஜுநனுடைய, தேர்-தேரை, மிகுத்து - பார்த்தபார்த்த விடமெல்லாம் நடத்தி, மாயமாக்கி - பகலையிரவாக்குவதுமுதலிய ஆச்சர்யங்களையுண்டாக்கி, நின்று - முகம் தோற்றாமே நின்று, கொன்று - எதிரிகளைக்கொன்று, வென்றி சேர் - தங்களுக்குவெற்றியுண்டாவதாக நினைத்திருந்த, மாரதர்க்கு - மஹாரத ரான துர்யோதநாதிகளுக்கு, வான்கொடுத்து - வீரஸ்வர்க்கத்தைக்கொடுத்து, அவர்கள் "ஒருகோல்குத்துநிலமும்கொடோம்" என்றிருந்த, வையம்-பூமியை, ஐவர்பாலதாம் - பாண்டவர்கள் பக்கலிலேயாம்படி, சீர்மிகுத்த-புகழ்மிகுந்த, நின்னலால் - உன்னையொழிய, நான்-நீ ஆச்ரிதபக்ஷபாதியென்றறிந்தநான், ஓர் தெய்வம் - வேறொருதைவத்தை, மதிப்பனே-ஆச்ரயணீயமாக நினைப்பேனோ வெனகிறார். (அகூ)

வ்யா.—(பார்மிகுத்தபாரம்) ஸர்வம்ஸஹையான பூமிதன்னால் பொறுக்கவொண்ணாதென்று சொன்ன மிக்கபாரத்தை. "కాలనేమిహతో యోసౌ" "காலநேமிஹதோயோஸௌ" என்று தொடங்கி, "తథాన్యే చ మహావీర్యాః నృపాణాం భవనేషు తే । సముత్పన్నా దురాత్మాన స్తాన్న సంఖ్యాతుముత్సహే" "ததாந்யேச மஹாவீர்யா ந்ர்பாணாம்பவநேஷுதே । ஸமு த்பந்நாதுராத்மா நஸ்தாந்நஸங்க்யாதுமுத்ஸஹே." (முன்னொழிச் சுவானருச்சுநன்தேர்மிகுத்து) தான்முற்பாடனாய் அத்தைத்தவிர்ப் பிக்கைக்காகஅர்ஜுநனுடையதேரைப் பார்த்தபார்த்தவிடமெல்லாம் நடத்தி. அர்ஜுநனுக்குத் தான் முற்பாடனானையாவது - "విసృజ్య సశరం చాపమ్" "விஸ்ர்ஜ்யஸஸராஞ்சாபம்" என்று இருந்த அர்ஜுந னை, "కరిష్యే వచనం తవ" "கரிஷ்யேவசநந்தவ" என்னப்பண்ணுகையும்,

யுத்தமத்யத்தில் விஜயபரிகரங்களில் உத்க்ர்ஷ்டபரிகரம் தேரொன்று எதிரிகள் மதிக்கும்படி தேரைநடத்துகையும்,ஆயுதமெடுக்கக்கடவதன்றாக பதிஜ்ஞைபண்ணுகையாலே ஸாரத்யவேஷத்திலேயதிகரித்துத் தேரைக்கொண்டே விஜயவ்யாபாரங்களடையப் பண்ணினாய்த்து. (மாயமாக்கி) ஆச்சர்யங்களை யுண்டாக்கி. அதாவது-பகலை யிரவாக்குகையும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும்; ஆச்ரிதார்த்தமாகக் காலவ்யவஸ்தையையும் தன்ஸ்வபாவ வ்யவஸ்தையையும் அழித்தானென்கை. (நின்றுகொன்று) அர்ஜுநன் செய்தானென்னும்படி முகந்தோற்றாமே நின்று எதிரிகளைக்கொன்று.

(வென்றிசேர் மாரதர்க்கு வான்கொடுத்து) நாம் யுத்தோந்முகரானவன்று விஜயமும் நம்மது, அத்தாலே பூமியும் நம்மதாகக்கடவதென்றிருந்த மஹாரதரான துர்யோதநாதிகளென்ன, அவர்களுக்குத் துணையாய்வந்தத்ரோணாதிகளென்ன, இவர்களுக்கு வீரஸ்வர்க்கத்தைக்கொடுத்து. (வையமைவர்பாலதாஞ் சீர்மிகுத்தநின்னலால்) அவர்களுக்கு"ஒருபதந்யாஸமுங்கொடோம், ஸாகல்யேந எங்களதாக வேணும்" என்றிருந்த பூமியை பாண்டவர்கள் பக்கலிலேயாம்படி புகழைமிகுத்த வுன்னையொழிய. சீர் - புகழ். பாண்டவர்கள் விஜயிகளாய் பூமியை ஸாகல்யேநலபித்தார்களென்னும் படி புகழ்மிகுத்தவென்னுதல்; "ஆச்ரிதபக்ஷபாதி"என்னும்தன்புகழை மிகுத்தானென்னுதல். (ஓர்தெய்வம் நான் மதிப்பனே) ஆச்ரிதபக்ஷபாதியென்றறிந்த நான் வேறொரு தைவத்தை ஆச்ரயணீயமாக நினைப்பேனோ. ... ... (அகூ)

அ.—தொண்ணூறாம்பாட்டு. உன்னையொழிந்தாரொருவனை ஆச்ரயணீயனென்றிரோ மென்று தம்முடைய அநந்யகதித்வம் சொன்னார் - கீழ்; இப்பாட்டில் - ஆச்ரயணீயர் தேவரீரேயானாலும் தேவரீரை லபிக்கைக்கு தேவரீர்திருவடிகளையொழிய என்பக்கல் உபாயமென்று சொல்லலாவ தில்லையென்றுதம்முடையஆகிஞ்சந்யத்தை யருளிச்செய்கிறார்.

> குலங்களாயவீரிரண்டிலொன்றிலும்பிறந்திலேன்
> நலங்களாயநற்கலைகள்நாலிலும்நவின்றிலேன்
> புலன்களைந்தும்வென்றிலேன்பொறியிலேன்புநிதநின்
> இலங்குபாதமன்றிமற்றோர்பற்றிலேனெம்மீசனே. (கூ0)

ப - ரை.—பொறியிலேன் - கண்ட கண்ட விஷயங்களிலே வீழ்த்தும்சபதாதிவிஷயங்களுக்கு வசப்பட்டு நடக்குமவனாய், புலன்களைந்தும் வென்றிலேன் - பஞ்சேந்த்ரியங்களையும் நானிட்டவழக்காய் நடத்த சக்தியற்றவனாய், நலங்களாய - சேதநருடைய குணானுகூலமாக நல்வழி போகைக்குடலாய், நற்கலைகள் நாலிலும்-மோக்ஷஸாதநங்களான நான்குவேதங்களிலும், நவின்றி

லேன - அப்யஸிக்கப்பெற்றிலேனாய், குலங்களாய வீரிரண்டில்ஒன்றிலும் - நாலுவர்ணங்களில் ஒருவர்ணத்திலும், பிறந்திலேன் - பிறவாதவனாயிரா நின்றேன்; புநித - ஸ்வஸ்பர்சத்தாலே யாவரையும் சுத்தராக்கவல்ல சுத்தியோகமுடையனாய், எம்மீசனே - அகதிகளான எங்களுக்கு நிர்வாஹகனானவனே, நின் - தேவரீருடைய, இலங்கு - விளங்கா நின்றுள்ள, பாதமன்றி - திருவடிகளையொழிய, மற்றோர்பற்றிலேன - வேறொரு ஜீவநோபாயத்தை யுடையேனல்லேனென்கிறார். (கூ0)

வ்யா.—(குலங்களாயவித்யாதி) இப்பாட்டு "பொறியிலேன்" என்கிற பதந் தொடங்கிக் கீழ்நோக்கிக் காரணபரம்பரையாலேயும் பாடக்ரமத்தாலே கார்யபரம்பரையாலேயும் இரண்டுமுகமாக நிர்வஹித்துப்போரும். நம்மை லபிக்கைக்கு உம்முடைய பக்கலுள்ளதென்னென்ன; ஸம்ஸாரபீஜமான சப்தாதிவிஷயங்களிலே யகப்பட்டு நின்றேன், இதிறே என்பக்கலுள்ளது. "பொறி" என்று-சப்தாதிவிஷயங்களைச் சொல்லுகிறது, வறல்நாற்றத்தைக் காட்டி யகப்படுத்திக்கொள்ளுமதாகையாலும், அகப்பட்டால்பின்பு புறப்படவிரகற்றிருக்கையாலும், விநாசத்தோடே தலைக்கட்டுகையாலும்.

சப்தாதிவிஷயங்களே புருஷார்த்தமென்று ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிற ஸம்ஸாரத்திலே இது அகப்படத் தகாதென்றறிந்த நீர் அவ்விஷயங்களிலே இந்த்ரியங்கள் போகாமே நோக்க மாட்டிற்றிலீரோவென்ன (புலன்களைந்தும் வென்றிலேன்) இந்த்ரியங்கள் ஸ்வவசத்திலே யென்னைக்கொடுபோக அவையிட்ட வழக்காய்த் திரிந்தே னித்தனைபோக்கி அவற்றிலே யோரிந்த்ரியத்தை நியமிக்க க்ஷமனாயத்திலேன். "ఇన్ద్రియాణి ప్రమాథీని హరన్తి ప్రసభం మనః" "இந்த்ரியாணிப்ரமாதீநி ஹரந்திப்ரஸபம்மந:" என்னக்கடவதிறே. "ధర్మేణ పాపమపనుదతి" "தர்மேண பாபமபநுததி" என்றும், "శాన్తో దాన్త ఉపరతః" "ஶாந்தோதாந்தஉபரத:" என்றுமித்யாதிகளாலே வேதங்கள் இந்த்ரியஜயத்துக்கு வழிசொல்லாநின்றன, அவ்வேதங்களிலே யிழிய் மாட்டிற்றிலீரோ வென்ன (நலங்களாய நல்கலைகள் நாலிலும் நவின்றிலேன்) நலங்களாயகலைகளாவது - "త్రైగుణ్యవిషయా వేదాః" "த்ரைகுண்யவிஷயாவேதா:" என்கிறபடியே சேதநருடைய குணாநுகூலமாக நின்றநின்ற நிலைகளிலே நலவழிபோக்கும்படி மாதாபித்ர்சதங்களிற் காட்டில் வத்ஸலதரங்களாகை. நற்கலைகளாவது-மோக்ஷதந் ஸாதநங்களிலே நோக்கையுடைத்தாகை.

அ.— தொண்ணூறும்பாட்டு. பாடக்ரமம் * பொறியிலேன் தொடங்கி பதம் பேதியாமல் கீழ்நோக்கி அவரோஹணமாகவருகை. கார்யபரம்பரையாவது - ஒன்றினுடையகார்யம் ஒன்றினுக்காகக்கொண்டு அடிதொடங்கி மேல்நோக்கி ஆரோஹணமாகப் போருகை.

இப்படிப்பட்ட நாலுவேதங்களிலும் இகலிக்கப் பெற்றிலேன். கலிலுதல் - பயிலுதல். கலை - வேதம். ப்ரதமத்திலே அத்யயநம் பண்ணினார்க்கிறே தத்பலமான வநுஷ்டாநம், அதிறே இந்த்ரியஜயத்துக்கு ஸாதநம். ஆக இப்படி இந்த்ரியஜயத்தில் நான் தூரஸ்தனென்கை.

இந்த இந்த்ரியஜயத்துக்கு ப்ரதமஸாதநமான அத்யயநாதிகளில் இழியாதொழிவரென்னென்னில(குலங்களாயவீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்) உபேக்ஷையாலே இழியாதொழிந்தேனல்லேன், அயோக்யனாகையாலே யிழியப்பெற்றிலேன். அத்யயநம் த்ரைவர்ணிகாதிகாரமிறே. சதுர்த்தவர்ணத்திலே ஜநித்தவனுக்கும் பாகயஜ்ஞாத் யதிகாரமுண்டு, த்ரைவர்ணிக சுச்ரூஷணத்திலே யதிகாரமுண்டு, அத்தாலே விரோதிபாபம்போகையாலே இந்த்ரியஜயத்துக்கு ஸாதநமாகலாம், அந்நாலுவர்ணத்திலும் பிறக்கப் பெற்றிலேன். இவ்வுத்க்ர்ஷ்ட வர்ணத்திலே ரிஷிபுத்ரராய்த்திருவவதரித்த விவர் நாலுவர்ணத்திலே பிறந்திலேனென்பானென்னென்னில்; யதுகுலத்திலே யவதரித்தக்ர்ஷ்ணன் வளர்ந்தருளின கோபகுலத்தையே தனக்குக் குலமாக நினைத்திருந்தாபபோலே, இவரும் வளர்ந்தருளினபடியை நினைத்தருளிச் செய்கிறார். "𑌗𑍋𑌪𑌾𑌲𑍋 𑌯𑌾𑌦𑌵𑌂 𑌵𑌂𑌶𑌂 𑌮𑌗𑍍𑌨𑌮𑌭𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿" "கோபாலோயாதவம்வம்ஶம்மக்நமப்யுத்தரிஷ்யதி" என்று அவதரித்த குலம் கோபகுலம, ரக்ஷ்ய குலம் யதுகுலமாகச் சொல்லாநின்றதிறே. "𑌸𑌪𑌿𑌤𑌾 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑍋𑌷𑌕𑌃" "ஸபிதாயஸ்துபோஷக," என்னக்கடவதிறே. அதவா, நாலுவர்ணத்திலும்எனக் கந்வயமில்லாதபடியாலே த்ரைவர்ணிகர்க்கே விஹிதமான அத்யயநத்துக்கு அயோக்யனானேன், அத்யயநம் பண்ணப்பெறாமையாலே வேதார்த்தஜ்ஞாநமில்லையாய், அதின்பலமான வேதார்த்தாநுஷ்டாநமில்லாமையாலே இந்த்ரியஜயம் பண்ணப் பெற்றிலேன். அஜிதேந்த்ரியனாகையாலே விஷயங்களின்கையிலே யகப்பட்டு நின்றேனென்கிறானென்னவுமாம். ஸம்ஸாரபீஜமான விஷயாந்தர ப்ராவண்யமொழிய உம்முடைய பக்கலொருமுதலில்லையாகில் உமக்குஉஜ்ஜீவந ஹேதுவாக நீர்நினைத்திருந்ததென்னென்ன (புநித)விஷயாந்தரப்ராவண்யத்தாலே அசுத்தராய்த் தந்தாம் பக்கல்சுத்திஹேதுவின்றிகேயிருக்கும் குறைவாளரையும்ஸ்வஸ்பர்சத்தாலே சுத்தராக்கவல்ல சுத்தியையுடையவனல்லையோ.

(அதிகாரமிறே) நாலுவர்ணத்திலு மென்பானென்ன என்று பூரிப்பது. பாகயஜ்ஞம்-யாகத்துக்கு உபசிக்கைக்கு காஷ்டாதி சுச்ரூஷைபண்ணுகை. அநுஷ்டாநகார்யமாக என்றது-அநுஷ்டாநத்தாலே யுண்டான சுத்திக்கு ஹேதுவான கீழ்ச்சொன்னஜந்மாதிகளில்லாத குறைவளரையுமென்றபடி. ... ... (௯௦)

அதாவது-உத்க்ருஷ்டஜந்மமென்ன, வேதஸ்பர்சமென்ன, வேதார்த்தாநுஷ்டாநமென்ன, இவற்றினுடைய ஸ்தாநத்திலே பகவதநுக்ரஹம் நின்று விஷயாந்தரப்ராவண்யத்தைத் தவிர்த்துத்தருகை. (மின்னிலங்கு பாதமன்றி மற்றோர்பற்றிலேன்) இருட்டு மிக்கதனையும் விளக்கொளி வீறுபெறுமாப்போலே, குறைவாளர்க்கு முகங்கொடுக்கையாலே விளங்காநின்றுள்ள திருவடிகளையொழிய வேறு ஜீவநோபாயத்தை யுடையேனல்லேன். (எம்மீசனே) வேறுமுதலின்றிக்கே அகதிகளான எங்களுக்கு நிர்வாஹகனானவனே. (௯0)

அ.—தொண்ணூற்றோரம்பாட்டு. "𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑌰𑌿" "சாஸ்த்ரபலம்ப்ரயோக்தரி" என்றுபேறு உம்மதானால் உமமுடையவிரோதிநிவர்த்திக்கு நீரேகடவீராகவேண்டாவோ, "மின்னிலங்குபாதமன்றிமற்றோர்பற்றிலேன்" என்கிறதெத்தாலேயென்ன; ப்ராங்ந்யாயத்தாலே. அதெங்ஙனேயென்னில்; அசோகவநிகையிலேயிருந்தபிராட்டிதேவரீரைலங்கைக்குராக்ஷஸவதத்திலே அவள்யத்நம் பண்ணுமன்றன்றோ நான்என்னுடையவிரோதியைப்போக்குகைக்குயத்நம்பண்ணுவது, ஆனபின்பு அநந்யகதியாய் அகிஞ்சநனான என்னை ஸ்வரக்ஷணத்திலேமூட்டி அகற்றொழியவேணுமென்கிறார்.

பண்ணுலாவுமென்மொழிப்படைத்தடங்கணாள்பொருட்டு
எண்ணிலாவரக்கரைநெருப்பினால்நெருக்கினாய்
கண்ணலாலோர்கண்ணிலேன்கலந்தசுற்றம்மற்றிலேன்
எண்ணிலாதமாயநின்னையென்னுள்நீக்கலென்றுமே. (௯௧)

ப-ரை.—பண்ணுலாவு - பண்ணோடே சேர்ந்த, மெல் - ம்ருதுவான, மொழி - பேச்சையுடையளாய், படை - வாள்போலே ஒளியையும், தடம்-வைசால்யத்தையுமுடைத்தான, கணாள் பொருட்டு - திருக்கண்களை யுடையளான ஸ்ரீஜநகராஜன்திருமகள்நிமித்தமாக, எண்ணிலா - அஸங்க்யாதரான, அரக்கரை - ராக்ஷஸர்களை, நெருப்பினால் - சார்ங்கியாலே, நெருக்கினாய் - அழியச்செய்தநீயே, கண் அலால் - எனக்கு நிர்வாஹகனல்லாமல், ஓர்கண்ணிலேன் - வேறொரு நிர்வாஹகனையுடைத்தாகாதவனாய், கலந்த - நெஞ்சுக்குப் பொருந்தின, சுற்றம் - பந்துவர்க்கத்தை, மற்றிலேன் - வேறேயுடைத்தாகாதவனாயிராநின்றேன; எண்ணிலாதமாய - அஸங்க்யேயமான ஆச்சர்யசக்தியையுடையவனே, நின்னை - ஸர்வசக்தியாயிருக்கிறவுன்னை, என்னுள் - அகிஞ்சநனானவென்பக்கல் நின்றும், என்றும் - நான் கலங்கினவன்றும், நீக்கல் - அகற்றொழியவேணும். (௯௧)

வ்யா.—(பண்ணுலாவுமென்மொழி) பண்ணோடேசேர்ந்த ம்ருதுவான பேச்சையுடையவள். "𑌮𑌧𑍁𑌰𑌾 𑌮𑌧𑍁𑌰𑌾𑌲𑌾𑌪𑌾 𑌕𑌿𑌮𑌾𑌹 𑌮𑌮 𑌭𑌾𑌮𑌿𑌨𑍀" "மதுராமதுராலாபாகிமாஹமமபாமிநீ" என்றுசக்ரவர்த்தித்திருமகன் வாய்ப்புலத்தும்படி வார்த்தைப்பாடுடையவளிறே. "பண்ணைவென்றவின்சொல்மங்கை" என்றவளிறே. (படைத்தடங்கணாள் பொருட்டு) வாள்போலேயொளியையும் இடமுடைமையையுமுடைத்தான திருக்கண்களையுடைய ஸ்ரீஜநகராஜன் திருமகள் பொருட்டு.

"నజీవేయం క్షణమపి వినా తామసితేక్షణామ్" "நஜீவேயம் க்ஷணமபிவிநாதாமஸிதேக்ஷணம்" என்று அவர்வ்யதிரேகத்தில் தரிக்கமாட்டாதகண்களிறே. ஆகஎதிர்த்தலையை "அகலகில்லேன்" என்னப்பண்ணும்பேச்சழகையும் கண்ணழகையுமுடையவளென்கை. தம்முடைய வெறுமைசொல்ல விழிந்தவர் பிராட்டியுடைய வேற்றங்களைசொல்லுகிறது, நிக்ர்ஷ்க்ர்ஷ்டமான விவ்வாத்மஸ்வரூபம்பிராட்டியோபாதியும் ஸ்ரீகௌஸ்துபத்தோபாதியும் விலக்ஷணமென்கைக்காக. ஜ்ஞாநம் பிறந்தபின்பு பிராட்டி அசோகவநிகையிலே யிருந்தாப்போலே, அஸஹ்யமிறே சேதநனுக்கு சரீரவாஸமும். (எண்ணிலாவரக்கரை) அவளைப்போலே விரோதிகள் அஸங்க்யாதராகவேணுமோ, அஞ்சாளுலாகாதோ. (நெருப்பினால்நெருக்கினாய்கண்) சராக்நியாலே யழியச்செய்தநீ எனக்கு நிர்வாஹகனென்னுதல். "యథారాఘవ నిర్ముక్తశ్శరః" "யதாராகவநிர்முக்தஶ்ஶர:" என்கிறபடியே ஶரஸ்தாநீயனான திருவடியையிட்டு லங்கையைதஹித்து, ராக்ஷஸரைக் கண்கலங்கும்படிபண்ணினநீ எனக்கு நிர்வாஹக னென்னுதல். இத்தால் - என்னுடைய விரோதிவர்க்கத்தையும் பஸ்மமாகப் பண்ணவேணுமென்கை.

(அலாலோர்கண்ணிலேன்) "లోకానాంత్వం పరోధర్మః" "லோகாநாம்த்வம்பரோதர்ம:" என்கிற தேவரீரையொழிய வேறொரு நிர்வாஹகனை யுடையேனல்லேன். "தயரதற்குமகன்றன்னை யன்றி மற்றிலேன்றஞ்சம" என்கிறார். "నత్వాకుర్మి దశగ్రీవభస్మ" "நத்வாகுர்ம் மி தஶக்ரீவபஸ்ம" என்று - பிராட்டிக்கு சக்தியுண்டாயிருக்க ப்ராப்தியில்லாதேதவிர்ந்தாள், எனக்கு ஶக்தியுமில்லை யென்கிறார். (கலந்தசுற்றம்மற்றிலேன) நெஞ்சுக்குப்பொருந்தின பந்துவர்க்கத்தை வேறுடையேனல்லேன். உத்பாதகரான மாதா பிதாக்கள் தைவம் ரக்ஷிக்கிறதென்று காட்டிலேவிட்டுப் போனார்கள், வளர்த்தவர்களை "పితరం మాతరం దారాన్" "பிதரம்மாதரம்தாராந்" என்கிறபடியே நான்விட்டேன். "భ్రాతాభర్తాచబన్ధుశ్చ పితాచమమరాఘవః" "ப்ராதாபர்த்தாச பந்துஶ்ச பிதாச மமராகவ:" என்கிறபடியே ஸர்வவிதபந்துவும் தேவரீரேயென்கிறார். பிராட்டிக்குத் தனியிருப்பிலே திருவடிவந்து முகங்காட்டினார், அப்படியேயிருப்பதொரு குளிர்ந்தவிழியும் தேவரீரை யொழிய எனக்கில்லை யென்கிறார். ஜநககுலத்தில் பிறந்தவாபிஜாத்யமுண்டு அவளுக்கு. "குலங்களாயவீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்" என்றிரோ நீசொன்ன

தொண்ணூற்றோராம்பாட்டு. பிராட்டியோட்டை ஸாம்யமுண்டானால் அசோகவநிகைஸ்தாநம் இவனுக்கேதென்ன; அருளிச்செய்கிறார் (ஜ்ஞாநம்பிறந்தபின் இத்யாதி.) ... ... (கூக)

(எண்ணிலாதமாய) அஸங்க்யேயமானவாஸ்சர்ய சக்தியையுடைய வனல்லேயோ. இத்தால் - நிஹீநஜந்மாவாய் சாஸ்த்ராதிகாரியும ன்றிக்கே யிருந்துள்ள பக்ஷிக்கு மோக்ஷங்கொடுத்த சக்தியன்றோ தேவரீருடைய ஶக்தியென்கை. ராவணன்குறியழியாமே யிருக்க இக்கரையிலே அவன்தம்பியை லங்காராஜ்யத்துக்கு அபிஷேகம் பண்ணிற்று அவன் ஜந்மம்பார்த்தோ. "ஶத்ரோ: ப்ராதர:" "அபி ஜ்ஞோராஜதர்மாணும்" என்கிறபடியே அவன் ஜ்ஞாநாதிகயென்ன; * அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றிற்று ஜ்ஞாநாஜ்ஞாநங்களில் உள்மானம் புறமானம் பார்த்தோ. (நின்னையென்னுள் நீக்கல்) ஸர்வசக்தியாயிருந்துள்ள 'வுன்னை, அசிஞ்சநனாயிருந்துள்ள வென் பக்கல்நின்றும், க்ஷுத்ரமான வுபாயாந்தரங்களைக்காட்டியகற்றுதொழியவேணும். (என்றுமே) நான்கலங்கினவன்றும என்னை விடாதொழியவேணும். ... ... (கூக)

அ.—தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. "நின்னையென்னுள் நீக்கல்" என்றீர், நாம் உம்மையகலாதொழிகைக்கு நம்மளவிலே நீர் செய்ததென், நாம் உமக்குச்செய்யவேண்டுவதென்னென்ன; நிருபாதிகசரண்யரான தேவரீர்திருவடிகளிலே ப்ரவணனான என்னை "உன்னுடையகார்யம் எனக்குபரம், நீ பயப்படவேண்டா" என்று என் பயந்தீர "மாஶுச:" "மாஶுச" என்னவேணுமென்கிறார்.

விடைக்குலங்களேழடர்த்துவென்றிவேற்கண்மாதரார்
கடிக்கலந்ததோள்புணர்ந்துகாலியாய! வேலைநீர்
படைத்தடைத்ததிற்கிடந்துமுன்கடைந்தநின்றனக்கு
அடைக்கலம்புகுந்தவென்னையஞ்சலென்னவேண்டுமே. (கூஉ)

ப - ரை.—முன் - முதல் முதலில், வேலைநீர்படைத்து - ஏகார்ணவத்தை ஸ்ருஷ்டித்து, அதில் கிடந்து - க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளி, அடைக்கலம் புகுந்த இந்த்ராதி தேவர்களுக்காக, கடைந்து-அம்ருதத்தை கடைந்து அம்ர்தத்தைக் கொடுத்து, ராவணாதிகளால் குடியிருப்பிழந்த தேவர்கள் நிலைநிற்கைக்காக, அடைத்து - ஸேதுபந்தம்பண்ணி, குலம் - நாநாவர்ணமான, விடையேழடர்த்து - ரிஷபங்களேழையும் ஊட்டியாக நெரித்து, ஸர்வரையும் கண்களாலே தோற்பிக்கும் தேவரீரையும், வென்றி - வென்றிகொள்ளத்தக்கதாய், வேல் - வேல்போன்ற, கண் - நோக்கையுடையளான, மாதரார்- நப்பின்னைப்பிராட்டியுடைய, கடிக்கலந்த - பரிமளிதமான, தோள்புணர்ந்து - தோளையநுபவித்து, அவளுக்குப்ரியமாக, காலி - பசுக்களை மேய்க்கும், ஆய - இடையனே, நின்றனக்கு - தேவரீர் திருவடிகளை, அடைக்கலம் புகுந்த வென்னை - சரணமாகப்பற்றினவென்னை, அஞ்சலென்னவேண்டும் - பயப்படாதேயென்று ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும். (கூஉ)

வ்யா.—(விடைக்குலமித்யாதி) "முன் - வேலைநீர்படைத்து அதிற்கிடந்து-கடைந்து-அடைத்து - விடைக்குலங்களேழடர்த்து வென்றிவேல்கண் மாதரார் கடிக்கலந்ததோள்புணர்ந்த காலியாய - நின்மனக்கடைக்கலம் புகுந்தவென்னை யஞ்சலென்னவேண்டும்" என்றந்வயம். (முன்வேலைநீர்படைத்து) "అపఏవససర్జాదౌ" "அபஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே ஏகார்ணவ ஸ்ர்ஷ்டியைப்பண்ணி. "வேலைநீர்" என்று - எல்லையான கடலென்னுதல்; திரைக்கிளர்த்தியை யுடைத்தான கடலென்னுதல். "வேலை" என்று - எல்லையும், திரையும். "நீர்" என்று - கடல். (அதில்கிடந்து) - அதிலே கிடந்து. ஸ்ர்ஷ்டமான ஜகத்திலே சேதநர்க்கு ஆச்ரயணருசிபிறந்தவன்று சரண்யரானநாம்தூரஸ்தராகவொண்ணாதென்று க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளி. (கடைந்து) அக்கிடைபலித்து தேவதைகள் ஐச்வர்யததை யிழந்து, "శరణం త్వామనుప్రాప్తాః సమస్తా దేవతాగణాః" "ஶரணம்த்வாமநுப்ராப்தாஸ் ஸமஸ்தாதேவதாகணா:" என்கிறபடியே சரணம்புகுர; அவர்கள்இழந்தவற்றை, கடலைக்கடைந்து அக்கடலிலே யுண்டாக்கிக்கொடுத்தவனென்கை. (அடைத்து) அந்ததேவதைகளைக் குடியிருப்பழியும்படி அதிக்ரமத்திலே நடந்த ராவணாதிகண்டக நிரஸநார்த்தமாக. தசரதாத்மஜனாய் வந்தவதரித்து லவணார்ணவத்தை யடைத்து. (விடைக்குலமித்யாதி) ப்ரஹ்மாதிகளுக்கு சரண்யனாய் அவர்களாபத்திலே யுதவினவளவன்றிக்கே, தாழ்ந்தார்க்கு முகம்கொடுக்கைக்காக கோபஸஜாதீயனாய்வந்தவதரித்து ரக்ஷித்தபடி சொல்லுகிறது மேல் (விடைக்குலங்களேழடர்த்து) விடையேழடர்த்தென்னுதல், விடைக்குலமடர்த்தென்னுதல் செய்யாதே இப்படி சொல்லுகிறது, "చాతుర్వర్ణ్యం మయా సృష్టం" "சாதுர்வர்ண்யம்மயாஸ்ர்ஷ்டம்" என்கிறபடியே கோஜாதியிலும் வர்ணபேதமுண்டாகையாலே. நாநாவர்ணமான ரிஷபங்களேழையுமடர்த்து. நப்பின்னைப்பிராட்டியோட்டை போகத்துக்கு இடைசுவராகையாலே நாநாஸ்வபாவங்களானவிடையேழையு மூட்டியாகநெரித்து. குலம்-வர்ணம். "குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்" என்றாரிறே. (வென்றிவேல்கண் மாதரார் கடிக்கலந்ததோள்புணர்ந்த காலியாய) "జితంతే పుండరీకాక్ష" "ஜிதந்தேபுண்டரீகாக்ஷ" என்றும், "தூதுசெய்கண்கள்" என்றும் சொல்லுகிறபடியேஸர்வரையும்கண்களாலேதோற்பிக்கும்தேவரீரையும் தோற்பிக்கவல்லநோக்கையுடைய நப்பின்னைப்பிராட்டி

தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. இழந்தவற்றை-இழந்தபதார்த்தத்தை. (கடிக்கலந்த) கலக்கை-எங்கும் வ்யாபிக்கையாய், அத்தால் - மிகுதிசொல்லுகிறது.

யுடைய பரிமளிதமான தோளையநுபவித்து, அவளுக்குப்ப்ரியமாக ரக்ஷகாபேக்ஷையுடைய பசுக்களுடைய ரக்ஷணமே ப்ரயோஜநமாயிருக்கு மவனே. "సర్వగన్ధః" "ஸர்வகந்த:" என்கிற அவன் திருமேனியையும் பரிமளிதமாக்கும் தோளென்கை. "యువతిశ్చ కుమారిణీ" "யுவதிஶ்சகுமாரிணீ" என்கிறபடியே ஸ்வஸத்ருஶமான பருவத்தை யுடையவளாகையாலே செவ்வியையுடைய தோளென்னவுமாம். (வென்றிவேல்கண்) வென்றியை விளைக்கும் வேல்போலே நோக்கையுடைய கண். "கடி" என்று - செவ்வியும், நாற்றமும். (நின்றனக்கடைக்கலம் புகுந்தவென்னை) "యో బ్రహ్మాణం విదధాతి పూర్వమ్" "ముముక్షుర్వై శరణమహం ప్రపద్యే" "யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்" "முமுக்ஷுர்வை சரணமஹம்ப்ரபத்யே" என்று-ஜகத்காரண வஸ்து சரண்யமென்னுமிடம் சருதிஸித்தம். "శరణం త్వామనుప్రాప్తాః" "ஶரணம்த்வாமநுப்ராப்தா:" என்றும், "లోకానాం త్వం పరో ధర్మః" "லோகாநாந்த்வம்பரோதர்ம:" என்றும்-வ்யூஹவிபவங்களில் ஶரண்யதை ஆப்தவாக்யஸித்தம். அங்ஙனன்றிக்கே, "మామేకం శరణం వ్రజ" "மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்று, தேவரீர்திருவடிகளிலே ப்ரவணனான வென்னை. (என்னை) அநந்யஶரணனான வென்னை. அடைக்கலம்புகுருகையாவது - என்கார்யம் தேவரீர்க்கே பரமென்று பற்றுகை. "త్వైవాస్మి హి భరః" "த்வைவாஸ்மிஹிபர:" என்னக்கடவதிறே. (அஞ்சலென்னவேண்டுமே) தேவரீர்பூர்த்தியையும்என் சிறுமையையும் இடைச்சுவரான விரோதியின்கநத்தையும்பார்த்து நானஞ்சாதபடி "మాశుచః" "மாஶுச:" என்று ஒருவார்த்தை யருளிச்செய்யவேணும். "మామేకం శరణం వ్రజ" "மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்றதேவரீர்க்கு, "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கைஅரிதோ. ... ... (௩௨)

அ.—தொண்ணூற்றுமூன்றாம்பாட்டு. "அடைக்கலம் புகுந்தவென்னை யஞ்சலென்னவேண்டும்" என்று-என்பயங்கெட "మాశుచః" "மாஶுச:" என்னவேணுமென்றார் - கீழ், இவ்வளவமையுமேயென்ன; உபாயாந்தரங்களைக் காட்டி என்னை யகற்றுதொழிகைக்காகச் சொன்ன வார்த்தையன்றோவது, தேவரீருடைய நிரதிஶய போக்யதையைக்கண்டு அநுபவிக்க ஆசைப்படுகிறவெனக்கு விஷயாந்தர நிவ்ருத்திபூர்வகமாக தேவரீரையே நான் அநுபவிக்கும்படி என்பக்கலிலே யிரங்கியருளவேணுமென்று பெரியபெருமாள் திருவடிகளி லநுபவத்தை யபேக்ஷிக்கிறார்.

"நின்றனக்கு" என்கையாலே - வ்யூஹவிபவாந்தரங்களை வ்யாவர்த்திக்கிறது. ... ... (௩௨)

சுரும்பரங்குதண்டுழாய்துதைந்தலர்ந்தபாதமே
விரும்பிநின்றிறைஞ்சுவேற்கிரங்கரங்கவாணனே
கரும்பிருந்தகட்டியேகடற்கிடந்தகண்ணனே
இரும்பரங்கவெஞ்சரந்துரந்தவில்லிராமனே. (௯௩)

ப - ரை.—கரும்பிருந்தகட்டியே - ஸ்வாபாவிகமான ரஸத்தையுடையகனைனல்போலே நிரதிசயபோக்யனானவனாய, கடல்கிடந்த கண்ணனே - திருப்பாற்கடலிலே அபேக்ஷாநிரபேக்ஷமாகக்கண்வளர்ந்தருளுமவனாய், இரும்பு அரங்க - இரும்புபோன்ற எதிரிகள் சரீரத்திலே யழுந்துமபடி, வெஞ்சரம் - க்ரூரமான அம்புகளை, துரந்த - விட்ட, வில் இராமனே - வில்லையுடைய தசரதாத்மஜனாய், அரங்கவாணனே - கோயிலுக்கு நிர்வாஹகனாய்க்கொண்டுகண்வளர்ந்தருளுமவனாய், சுரும்பு - வண்டுகளானவை, அரங்கு - படிந்த, தண் - குளிர்ந்த, துழாய் - திருத்துழாய்த்தாரானது, துதைந்து - நெருங்கி, அலர்ந்த - விகஸியாநின்றுள்ள, பாதமே - திருவடிகளிலே, விரும்பி நின்று - அநுபவருசிபிறந்து, இறைஞ்சுவேற்கு - அநுபவிக்கையிலே யிழிந்தவென விஷயத்திலே, இரங்கு - க்ருபை பண்ணியருளவேணுமெனகிறார். (௯௩)

வ்யா.—(சுரும்பரங்குதண்டுழாய்த்துதைந்தலர்ந்தபாதமே) வண்டுபடிந்து ச்ரமஹரமான திருத்துழாய்த் தாரானது அலர்ந்து வருகிற திருவடிகளையே. இத்தால் - திருத்துழாயோட்டை ஸம்பந்தத்தாலே ஸர்வாதிக வஸ்துவென்னு மிடத்தையும், திருவடிகளோட்டைச் சேர்த்தியாலே திருத்துழாய்க்குச் செவ்வியும் விகாஸமு முண்டாகையாலே, திருவடிகளோடே சேர்ந்ததற்கு செவ்வியும் விகாஸமுமுண்டாமென்னு மிடத்தையும், திருத்துழாயாலே அலங்க்ருதமா யிருக்கையாலே நிரதிசயபோக்யமென்னு மிடத்தையும் சொல்லிற்று.(விரும்பிநின்றிறைஞ்சுவேற்கிரங்கு) அநுபவருசி பிறந்து அநுபவிக்கையிலே யிழிந்த வெனக்கு இரங்கு. இவன் நாசகரமான விஷயாந்தரத்தில்நின்றும் மீளுவான், நிரதிசயபோக்யமானநம்மை யநுபவிப்பானென்று க்ருபைபண்ணி யருளவேணும். தேவரீர்க்கு ஒருஇரக்கமாத்ரம், அது இவ்வாத்மாவுக்கு உஜ்ஜீவநம்; ஆனபின்பு இத்தனையும் செய்தருளவேணும்.(அரங்கவாணனே) கோயிலுக்கு நிர்வாஹகனாய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனே. தந்தாம்பக்கல் முதலின்றிக்கே யிருக்க வநுபவத்திலே யிழிந்தவர்களுக்கும் தேவரீரழகாலே விஷயாந்தரப்ராவண்யத்தைத் தவிர்த்து, தேவரீர்பக்கல் ஆதரத்தைப்பிறப்பித்து அநுபவிப்பிக்கைக்காகவன்றோ கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. "போதரே யென்று சொல்லிப்புந்தியில்புகுந்து தன்பாலாதரம்பெருகவைத்த வழகன்" என்னக்கடவதிறே.

தொண்ணூற்றுமூன்றாம்பாட்டு. (துதைந்து) செவ்வியாய், இரக்குமெனக்கு ஜீவநமென்று பூரிப்பது.

(கரும்பிருந்தகட்டியே) இவர்க்கு ருசிபிறப்பித்த வுபாத்யாய னைச் சொல்லுகிறது. கோதுண்டாதல் கழிக்குமம்சமுண்டாதலின் றிக்கே ஸர்வதோமுகமாய் ஸாரஸ்யத்தையுடைத்தாய், பாகவிசே ஷத்தால் வந்த ஸாரஸ்யமின்றிக்கே ஸ்வாபாவிகமான ஸாரஸ்யத் தை யுடைத்தாயிருப்பதொரு கன்னல்போலே நிரதிசயபோக்யனு னவனே. (கடல்கிடந்த கண்ணனே) பெரியபெருமாளுடைய அகந்தத்தைச் சொல்லுகிறது. திருப்பாற்கடலிலே அபேக்ஷாநிர பேக்ஷமாகக் கண்வளர்ந்தருளுகிற ஸௌலப்யத்தையுடையவனே. ப்ரஹ்மாவுக்கு க்ஷீராப்திநாதன் உகந்தருளினபடியாலே அங்குத் தைஸௌலப்யமும் வடிவழகும் பெரியபெருமாள்பக்கலிலே ப்ர த்யபிஜ்ஞை பண்ணலாம்படியிறே யிருப்பது. (இரும்பரங்க வெஞ் சரந்துரந்த வில்லிராமனே) எதிரிகள்சரீரத்திலே யழுந்தும்படி தீப்தபாவக ஸங்காசமான அம்புகளைவிட்ட வில்லையுடைய தசர தாத்மஜனே. இத்தால் - "நஞ்சேவகனார் மருவிய பெரியகோயில்" என்கிறபடியே சக்ரவர்த்தித்திருமகனுடைய வீரமும்அபிராமதை யும் பெரியபெருமாள்பக்கலிலே அநுபவிக்கலாயிருக்கை. "மேகஶ்யா மம் மஹாபாஹும் ஸ்தி²ரஸத்த்வம் த்³ருட⁴வ்ரதம்" "மேகஶ்யாமம் மஹாபாஹும் ஸர்வஸத்வமநோஹரம்" என்னக்கடவதிறே. ப்ராப்தராய் ஸந்நி ஹிதராய நிரதிஶய போக்யபூதராய விரோதிநிரஸந ஶீலராய் தே வரிருக்க இத்தலையில ருசியுண்டாயிருக்க நான் இழக்கவேண்டுகிற தென்? இரங்கி யருளவேணுமென்கை. "கரும்பிருந்தகட்டியே- கடல்கிடந்தகண்ணனே - இரும்பரங்கவெஞ்சரந்துரந்தவில்லிரா மனே - அரங்கவாணனே-சுருமபரங்குதண்டுழாய் துதைந்தலர்ந்த பாதமேவிரும்பிநின்று இறைஞ்சுவேற்கிரங்கு" என்றந்வயம் (௩௫)

அ.— தொண்ணூற்றுநாலாம்பாட்டு. த்வதநுபவ விரோதிக ளைப் போக்கவும், அதுக்கநுகூலங்களானவற்றை யுண்டாக்கவும், அநுபவந்தன்னை அவிச்சிந்நமாக்கவும் வேணுமென்றபேக்ஷிக்க ப்ராப்தமாயிருக்க, "இரங்கு" என்று - இவ்வளவபேக்ஷிக்கவமை யுமோ வென்ன; உனக்கு ப்ரகாரமாயிருக்குமதொழிய ஸ்வதந்த்ர மாயிருப்பதொருபதார்த்தமில்லாமையாலே என்னபிமதஸித்திக்கு உன்னிரக்கமே யமையுமென்கிறார்.

ஊனின்மேயவாவிநீயுறக்கமோடுணர்ச்சிநீ
ஆனின்மேயவைந்துநீயவற்றுள்நின்றதூய்மைநீ
வானினோடுமண்ணுநீவளங்கடற்பயனுநீ
யானுநீயதன்றியெம்பிரானுநீயிராமனே. (௩௪)

ஆடிக் கட்டியாகையன்றிக்கே, "இருந்தகட்டி" என்று-இருந்த படியே கட்டியென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (கோதுண்டா தலித்யாதி.) கந்தம்—அவதாரமூலம். ... (௩௫)

ப - ரை.—உறக்கமோடு - தமோகுணுபிபவத்தால்வந்த நித்ரையும், உணர்ச்சியோடு - ஸத்வகுணகார்யமான வுணர்த்தியும், நீ - உன்னதீநமாயிராநின்றது; வளம - கண்டார்க்கு ஆகர்ஷகமான, கடல பயனும் - கடலிலுண்டாகும் அம்ர்தமும் ரத்நாதிகளும, நீ - உன்னதீநமாயிராநின்றது; ஆனில்மேய வைந்தும்-பசுக்களிடத்திலுண்டாகும் சுத்திகரமான பஞ்சகவ்யமும், நீ-நீயிட்டவழக்காயிராநின்றது; அவற்றுள் நின்றதூய்மை-அந்தபஞ்சகவ்யங்களுக்குண்டானசுத்தியும், நீ - உன்னதீநம; வானினோடு - நிராலம்பமான ஆகாசத்திலே வாய்வாதிகள் ஸஞ்சரிக்கிறதும, மண்ணும - நீரிலேகிடக்கிற பூமிகளை யாதே ஸகலாதார பூதையாகிறதும், நீ - உன்னுடைய; யானும் - பத்தனானும், நீ - உனக்குப்ரகாரபூதன; அதன்றி - அதுவொழிய, இராமன - சக்ரவர்த்தித் திருமகனான நீயே, எம்பிரான - அஸ்மத்நாதனான ஸ்ரீ வேங்கடேசஸ்வாமி. (௯௪)

வ்யா.—(உறக்கமோடுணர்ச்சி நீ - வளங்கடல் பயனும் நீ - ஆனில்மேயவைந்தும் நீ, அவற்றுள் நின்ற தூய்மைநீ - ஊனில் மேயவாவிநீ - வானினோடு மண்ணும்நீ-யானும் நீ, அதன்றியெம்பிரானும்நீ இராமனே" என்றந்வயம். (உறக்கமோடுணர்ச்சிநீ) தமோகுணுபிபவத்தால் வந்த நித்ரையும், ஸத்வகுணகார்யமான வுணர்த்தியுமுன்னதீநம். இததால் - சேதநர்க்கு விஷயப்ராவண்ய ஹேதுவான அஜ்ஞாநமும், பகவத்ப்ராவண்ய ஹேதுவான ஜ்ஞாநமும் நீயிட்டவழக்கென்கை. "అనాదిమాయయాసుప్తః" "அநாதிமாயயாஸுப்த:" என்று அஜ்ஞாநத்தை நித்ரையாகச் சொல்லக்கடவதிறே. (வளங்கடல்பயனும்நீ) கண்டார்க்கு ஆகர்ஷகமான கடலில் அம்ர்தமும் ரத்நாதிகளும் உன்ஸங்கல்பாதீநம். இது-ப்ரயோஜநாந்தரங்களுக்கும் உபலக்ஷணம். இத்தால் - உன்பக்கல் ப்ராவண்யத்துக்கு விரோதியாய் அஜ்ஞாநகார்யமான பந்தகபதார்த்தங்களெல்லாம் நீயிட்டவழக்கென்கை. (ஆனில்மேயவைந்தும்நீ) பசுக்களில் சுத்திகரமாகச்சொல்லுகிறபஞ்சகவ்யமும் உன்னதீநம். (அவற்றுள் நின்றதூய்மைநீ) அந்த பஞ்சகவ்யங்களுக்குண்டான சுத்தியும் உன்ஸங்கல்பாதீநம. பரமபாவநரான தேவரீரோட்டை ப்ரத்யாஸத்தியிறே பதார்த்தங்களுக்கு சுத்திஹேது.' கோப்ராஹ்மணர்க்கு பகவத்ஸமாராதநோபகரணங்களாகையாலேயிறே சுத்திஹேதுத்வம். "బ్రాహ్మణానాంగవాఞ్చైవ కులమేకంద్విధాకృతం। అన్యత్రమన్త్రాస్తిష్ఠన్తి హవిరన్యత్రతిష్ఠతి" ப்ராஹ்மணாநாம்கவாஞ்சைவ குலமேகந்த்விதாக்ர்தம்। அந்யத்ரமந்த்ராந்திஷ்டந்தி ஹவிரந்யத்ரதிஷ்டதி" என்னக்கடவதிறே. கர்மத்துக்கு சுத்திஹேதுத்வம் பகவத்ஸமாராதநமாகையாலே ஜ்ஞாநத்துக்கு சுத்திஹேதுத்வம் பகவத்விஷயமாகையாலே, "క్షేత్రజ్ఞస్యేశ్వరజ్ఞానా ద్విశుద్ధిఃపరమామతా" "க்ஷேத்ரஜ்ஞஸ்யேஶ்வரஜ்ஞாநாத் விஶுத்தி: பரமாமதா" என்னக்கடவதிறே. "పావనస్సర్వలోకానాంత్వమేవ" "పవిత్రాణాంహిగోవిన్దః పవిత్రంపరముచ్యతే" "பாவநஸ்ஸர்வலோகாநாம் த்வமேவ" "பவித்ராணாம்ஹிகோவிந்த: பவித்ரம் பரமுச்யதே."

இத்தால் - அநாதிகாலம் விஷயாந்தரப்ராவண்யத்தால் வந்தஅசுத்திபரிஹாரமான பாவநபதார்த்தங்களும் நீயிட்டவழக்கென்கை. (ஊனில்மேயஆவிநீ) சரீரத்திலே தாரகமாக வர்த்திக்கிற பஞ்சவ்ர்த்திப்ராணனும் நீயிட்டவழக்கு. இத்தால்-சரீரஸ்திதியும் ஶரீரவியோகமும் நீயிட்டவழக்கென்கை. (வானிநோடு மண்ணும்நீ) நிராலம்பநமான ஆகாசத்திலே வாய்வாதிகள் ஸஞ்சரிக்கிறதும், நீரிலே கிடக்கிற பூமிகளையாதே ஸகலாதாரபூதையாகிறதும உன்னாலே. அதவா, பந்தகமான ஸம்ஸாரமும் முக்தப்ராப்யமான நித்யவிபூதியும் நீயிட்டவழக்கென்றுமாம். (யானும்நீ) பத்தனான நானும் உனக்குப்ரகாரபூதன். இத்தால் - எனக்குருசியில்லாதவன்றும், "దదామిబుద్ధియోగన్తమ్" "ததாம்புத்தியோகந்தம்" என்கிறபடியே என்னுடைய ருசி நீயிட்டவழக்கு. (அதன்றி) அதொழிய. (எம்பிரானும் நீயிராமனே) நினைத்தார்க்கு நினைத்ததைக் கொடுக்கவல்லவனென்கைக்கு உதாஹரணம் சொல்லுகிறது. சக்ரவர்த்தித் திருமகனான நீயே அகிஞ்சநரான வெங்களுக்குஸ்வாமி. "అపివృక్షాఃపరిమ్లానాః" "அபிவ்ருக்ஷா:பரிம்லாநா:" என்கிறபடியே-ஸ்தாவரபர்யந்தமாக அழகாலும சீலத்தாலும் பிரிந்து தரிக்கமாட்டாதபடி பண்ணின நீயே எங்களுக்கு நிர்வாஹகன். 'అలమద్యహిభుక్తేన పరమార్థైరలఞ్చనః। యథాపశ్యామినిర్యాన్తం రామంరాజ్యేప్రతిష్ఠితమ్" "அலமத்யஹிபுக்தேந பரமார்த்தைரலஞ்சந:| யதாபஶ்யாமிநிர்யாந்தம் ராமம்ராஜ்யேப்ரதிஷ்டிதம்." [புற்பாமுதலாவித்யாதி] "యాగతిర్యజ్ఞశీలానామ్" 'யாகதிர்யஜ்ஞஶீலாநாம்" என்று ஒருபக்ஷிக்கு மோக்ஷங்கொடுத்தவனே எங்களுக்கு நிர்வாஹகன்; * அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றினவனே எங்களுக்கு நிர்வாஹகன். (௯௪)

அ.—தொண்ணூற்றஞ்சாம்பாட்டு. "எம்பிரானும் நீயிராமனே" என்று நினைத்தார்க்கு நினைத்தத்தைகொடுக்கவல்ல சக்தனுமாய் ஸ்வதந்த்ரனுமான சக்ரவர்த்தித்திருமகனே யுபாயமென்றார் - கீழ்; இதில் - உபாயத்தில் தமக்குண்டான அத்யவஸாயத்தை யருளிச்செயகிறார். பாஹ்யவிஷயருசியைத் தவிர்த்து, உன்பக்கலிலே ருசியைப்பிறப்பித்து, கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கும்படி புகுற நிறுத்தினநீ, என்னை யுபேக்ஷித்து விஷயாந்தர ப்ரவணனும்படி கைவிட்டாலும் உன்னையொழிய வேறொருசத்தியில்லையென்று தம்முடைய அத்யவஸாயத்தை யருளிச்செய்கிறார்.

தொண்ணூற்றுநாலாம்பாட்டு. 'రామః - ராம:"என்கையாலே-நினைத்தார்க்கு நினைத்தத்தைக் கொடுக்குமென்கிறது. அழகாலும் சீலத்தாலும் மோக்ஷபர்யந்தம் வேண்டினார்க்கு வேண்டினது கொடுப்பானென்கைக்கு ப்ரமாணங்கள் பலவுமருளிச்செய்கிறார் (అలమద్యహిభుక్తేన - அலமத்புஹிசிக்தேநஎன்றுதொடங்கி.) (௯௪)

அடக்கரும்புலன்களைந்தடக்கியாசையாமவை
துடக்கறுத்துவந்து நின்றொழிற்கண்நின்றவென்னைநீ
விடக்கருதிமெய்செயாதுமிக்கோராசையாக்கிலும்
கடற்கிடந்தநின்னலாலோர்கண்ணிலேனெம்மண்ணலே. (௩௫)

ப - ரை.—அடக்கரும் - அடக்கவரிதான, புலன்களைந்து - செவிமுதலிய வைம்புலன்களையும், அடக்கி - விஷயங்களில் போகாதபடி மீட்டு, ஆசையாமவை - அவ்விஷயங்களிலுண்டான ருசியை, துடக்கறுத்து - வாஸனையோடே போக்கி, வந்து - மோக்ஷேச்சையாலேவந்து, நின்றொழிற் கண்நின்ற வென்னை - உன்திருவடிகளிலே கைங்கர்யத்தை ஆதரித்து நின்றவென்னை, எம்மண்ணலே - எனக்கு நிருபாதிகஸ்வாமியாய, நீ - இந்த்ரிய ஜயமேதொடங்கி இவ்வளவும் புகுராநிறுத்தின நீ, விடக்கருதி - உபேக்ஷிக்கும்படி நினைத்து, மெய்செயாது - ஆரம்பித்த ஆத்மோஜ்ஜீவநத்தை முடிய நடத்தாதே, மிக்கோராசையாக்கிலும் - விஷயாந்தரங்களில் மிக்க ருசியையுண்டு பண்ணிலும், கடல் கிடந்தநின்னலால் - எனக்கு நிமித்தமாகத் திருப்பாற் கடலிலே வந்து கண்வளர்ந்தருளின வுன்னையொழிய, ஓர் கண்ணிலேன் - வேறொரு நிர்வாஹகரையுடையேனல்லேனென்கிறார். (௩௫)

வ்யா.—(அடக்கரும்புலன்களைந்தடக்கி) ஆசார்யோபதேசத்தாலும் சாஸ்த்ரவாஸனையாலும் இந்த்ரியங்களை நியமிக்கவிழிந்தால் நியமிக்கவரிய ச்ரோத்ராதிகளைந்தையும், ஆகர்ஷகமான தன்வடிவைக்காட்டி விஷயங்களில் போகாதபடி மீட்டு, அவற்றுக்குத் தானே விஷயமாம்படி நியமித்தது. ஈச்வரன் வடிவழகைக்காட்டி மீட்டானென்கைக்கு இங்கு சப்தமுண்டோவென்னில்; கீழே - "புலன்களைந்தும்வென்றிலேன் பொறியிலேன்" என்றவராகையாலே இங்குச்சொன்ன இந்த்ரியநியமநம் ஈச்வரனாலேயென்னுமிடம் அர்த்தாதஸித்தம். தபோபங்கம்பண்ணவந்த ஊர்வசியை மாத்ர்புத்தியாலே நமஸ்கரித்துநின்ற அர்ஜுநனும், "तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम्" "தஸ்யாஹம்நிக்ரஹம் மந்யேவாயோரிவஸுது ஷ்கரம்" என்னும்படியிறே இந்த்ரியநியமநத்தினருமையிருப்பது. (ஆசையாமவைதுடக்கறுத்து) அவ்வடிவில் பாவநத்வத்தாலே விஷயங்களில் ருசியை வாஸனையோடேதவிர்த்து. விஷயாந்தரருசிக்கடி பாபமேயிறே. (வந்துநின்றொழில்கண்நின்றவென்னை) புருஷார்த்தத்தின் மேலெல்லையிலேவந்து உன்திருவடிகளிலே கைங்கர்யத்தை அர்த்தித்து நின்றவென்னை.

(நீவிடக்கருதி) இந்த்ரியஜயமேதொடங்கி இவ்வளவும் புகுராநிறுத்தினநீ உபேக்ஷிப்பாயாக நினைத்து. (மெய்செயாது) ஆரம்பித்த கார்யத்தை முடியநடத்தாதே. மெய்செய்யாதொழிகையாவது - ஆத்மோஜ்ஜீவநத்தை யாரம்பித்து தத்விபரீதமாக ஆசரிக்கும் மித்யா வ்யாபாரம். "अन्यथा सङ्कल्प्यान्यथाचरति स मिथ्याचारस्स उच्यते" "அந்யதாஸங்கல்ப்யாந்யதாசரதி மித்யாசாரஸ்ஸஉச்யதே" என்னக்கடவதிறே.

(மிக்கோராசையாக்கிலும்) விஷயாந்தரங்களிலே ருசியைப் பிறப்பித்தாயாகிலும். ஸ்வவிஷயத்தில் ருசிக்குக்ஷிபண்ணினவன் சப்தாதிவிஷயங்களில் ருசிக்குஉத்பாதகனுகக்கூடாது, அப்படிகூடினுலும். (கடல்கிடந்தநின்னலாலோர்கண்ணிலேன்) நான் அபேக்ஷியாதிருக்க என்னுடைய ஹிதார்த்தமாக த்ரிபாத்விபூதியிலிருப்பை விட்டு விஸஜாதீயமான ஸம்ஸாரத்திலே திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற வுன்னையொழிய வேறொரு நிர்வாஹகனை யுடையேனல்லேன். (எம்மண்ணலே) அபேக்ஷாநிரபேக்ஷமாக என்னுடைய ஹிதத்தை ப்ரவர்த்திப்பிக்கைக்கடி எனக்கு நிருபாதிகஸ்வாமியாகையாலே யெனகிறுர். உபேக்ஷித்தாலும் விடமாட்டாமைக்கடி நிருபாதிகஸ்வாமியாகையாலே. அண்ணல் - ஸ்வாமி. ... (௯௫)

அ.—தொண்ணூற்றாறும்பாட்டு. தம்முடையவ்யவஸாயத்தையருளிச்செய்தார் - கீழ்ப்பாட்டில்; இதில் - "அஞ்சலென்னவேண்டுமே" என்றும், "இரங்கரங்கவாணனே" என்றும் பலபடியாக அபேக்ஷியாநின்றீர், உம்முடையப்ராப்யத்தை நிர்ணயித்துச்சொல்லீரென்ன; நான் ஸம்ஸாரத்தையறுத்து உன்திருவடிகளிலேபொருந்தும்படியாக ப்ரஸாதத்தைப் பண்ணியருளவேணுமென்று தம்முடைய ப்ராப்யத்தை ப்ரார்த்திக்கிறுர்.

வரம்பிலாதமாயைமாயவையுமேழுமெய்ம்மையே
வரம்பிலூழியேத்திலுமவரம்பிலாதகீர்த்தியாய்
வரம்பிலாதபலபிறப்பறுத்துவந்துநின்கழல்
பொருந்துமாதிருந்தநீவரஞ்செயபுண்டரீகனே. (௯௬)

ப - ரை.—வரம்பிலாத-அளவிறந்தஸ்வரூபத்தையும் அளவிறந்த மஹாதிபரிணமங்களையுமுடைத்தான, மாயை - ப்ரக்ருதிதத்வத்தை ஸ்வாதீநமாகவுடையனுய, மாய - ஆச்சர்யமான ஜ்ஞாந சக்த்யாதி கல்யாணகுணங்களை யுடையனுய, வையமேழும் - ஸப்தலோகங்களிலுள்ளவர்களும், மெய்ம்மையே-ஆநந்யப்ரயோஜநராய்க்கொண்டு, வரம்பில ஊழி - அஸங்க்யாதமான கல்பங்களெல்லாம், ஏத்திலும் - ஸ்தோத்ரம் பண்ணிலுலும், வரம்பிலாத - எல்லைகாணவொண்ணுத, கீர்த்தியாய் - ரக்ஷகத்வ ப்ரஸித்தியையுடையானுய், புண்டரீகனே - தாமரைமலரையொத்த அவயவங்களை யுடையவனே, வரம்பிலாத-அளவில்லாத, பல்பிறப்பு அறுத்து-பலவகைப்பட்ட பிறப்பையறுத்து, வந்து-அர்ச்சிராதி மார்க்கத்தாலே ஒருதேச விசேஷத்திலேவந்து, நின்கழல் - ஸுபோக்யமான வுனதிருவடிகளை, பொருந்துமா - பொருந்தும்படியாக, திருந்த-கைங்கர்ய ஸுகமே ஸுகமாம்படி, நீ-என்னுடைய உஜ்ஜீவநார்த்தமாக * ஆள்பார்த்து ஸஞ்சரிக்கிறநீ, வரமசெய்-ப்ரஸாதத்தைப்பண்ணியருளவேணுமென்கிறுர். (௯௬)

வ்யா.—(வரம்பிலாதமாயை) அளவிறந்த ஸ்வரூபத்தையும் அளவிறந்த மஹதாதிபரிணமங்களையுமுடைத்தான ப்ரக்ருதி தத்வத்தை ஸ்வாதீநமாகவுடையவனே. மாயை-ப்ரக்ருதி.

“అనన్తస్యనతస్యాన్తం సఙ్ఖ్యానాం వాపివిద్యతే” “அநந்தஸ்ய ந தஸ்யாந்தம் ஸங்க்யாநாம் வாபி வித்யதே” என்னக்கடவதிறே. இத்தால்-பந்தகமான ப்ரக்ருதிநீயிட்ட வழக்கென்கை. (மாய) ஆச்சர்யமான ஜ்ஞாநசக்த்யாதிகல்யாணகுணங்களை யுடையவனே. மாயம்-ஆஶ்சர்யம். இத்தால்-கீழ்ச்சொன்ன ப்ரக்ருதியிலே பத்தராய் தந்நிவர்த்யர்த்தமாக தேவரீரை யாச்ரயித்த சேதநர்க்கு தத்ஸம்பந்தத்தை யறுத்துக்கொடுக்கைக்கடியான ஜ்ஞாநசக்த்யாதி குணங்களையுடையவனென்கை. (வையமேழும்மெய்ம்மையே வரம்பிலூழியேத்திலும் வரம்பிலாத கீர்த்தியாய்) ஸப்தலோகங்களும் ஸ்தோதாக்களாக, தந்தாமுடைய சேஷத்வத்தை யுணர்ந்து ஸ்வரூபாநுரூபமாக அநந்யபரராய்க்கொண்டு அஸங்க்யாதமான கல்பங்களெல்லா மேத்தினாலும் எல்லைகாணவொண்ணாத ரக்ஷகத்வப்ரதையையுடையவனே. இத்தால் - அசித்ஸம்ஸர்க்கத்தையறுத்துத் திருவடிகளோடேசேர்த்து ரக்ஷித்துப்போந்த ரக்ஷகத்வ ப்ரதையை பரிச்சேதிக்கவொண்ணாதென்கை. “వర్షాయుతైర్యస్యగుణానుభాగ్యా వక్తుం సమేతా రపి సర్వలోకాః। చతుర్ముఖాయుర్యది కోటివక్త్రః” “வர்ஷாயுதைர்யஸ்யகுணாநுபாக்யா வக்தும்ஸமேதாரபிஸர்வலோகா:। சதுர்முகாயுர்யதிகோடிவக்த்ர:.”

(வரம்பிலாதபல்பிறப்பறுத்து) நம்மைப்புகழாதே அபேக்ஷிதத்தைச்சொல்லீரென்ன; அஸங்க்யேயமான பலவகைப்பட்ட பிறப்பையறுத்து. பலவகையாவது-தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவரங்கள். அஸங்க்யாதமாவது-ஒருஜாதியிலேபிறக்கும் ஜந்மத்துக்குந்தொகையற்றிருக்கை. காலம் அநாதி, ஆத்மாநித்யன், பண்ணிவைக்கவல்லகர்மங்களுக்கு அவதியில்லாமையாலே கர்மாநுகுணமாகப்பிறக்கவிருக்கிற பிறவிக்குத் தொகையில்லை, ஜந்மங்களையறுத்து. (வந்துநின்கழல்பொருந்துமா) அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஒருதேஶவிஶேஷத்திலேவந்து, ஸூரிபோக்யமான திருவடிகளிலே, “ఛాయావా సత్త్వమనుగచ్ఛేత్” “சாயாவாஸத்வமநுகச்சேத்” என்கிறபடியே ப்ரதக்ஸ்திதியநர்ஹமாகப் பொருந்தும்படியாக. (திருந்த) “నోపజనం స్మరన్నిదం శరీరమ్” “நோபஜநம்ஸ்மரந்நிதம்ஶரீரம்” என்கிறபடியே திருவடிகளுக்குப் புறம்பானவற்றை ஸ்மரியாதே கைங்கர்யஸுகமே ஸுகமாம்படி. (நீவரஞ்செய்) என்னுடைய உஜ்ஜீவநார்த்தமாக *ஆள்பார்த்துழிதருகிற நீ ப்ரஸாதத்தைப்பண்ணியருளவேணும். (புண்டரீகனே.) புண்டரீகாவயவனே. புண்டரீகாக்ஷனே. திருக்கண்களே ப்ரசுரமாயிருக்கையாலே புண்டரீகனென்கிறார். “విజ్ఞానం యజ్ఞం తనుతే” “விஜ்ஞாநம்யஜ்ஞம்தநுதே” என்னக்கடவதிறே. இத்தால்-ப்ரஸாதத்தைப் பண்ணுகையாவது- ஒருவிஶேஷகடாக்ஷமென்கை.

அ.—தொண்ணூற்றேழாம்பாட்டு. "வரஞ்செய்புண்டரீகனே" என்றுநின்றீர், நம்முடையவிசேஷகடாக்ஷத்துக்கு உம்முடையபக்கலிலே யொருமுதல் வேண்டாவோவென்ன; திருமார்விலே பிராட்டியெழுந்தருளியிருக்கத் திருக்கையிலே திவ்யாயுதங்களிருக்க ஒருமுதல்வேணுமோ, அங்ஙனேயொருநிர்ப்பந்தம் தேவரீர்க்குண்டாகில்என்விரோதியைப்போக்கியுன்னைக்கிட்டியடிமைசெய்கைக்கு ஹேதுவாயிருப்பதொருவுபாயத்தை தேவரீரே தந்தருளவேணுமென்கிறார். அகிஞ்சநனாய் தேவரீர்கைபார்த்திருக்கிற வெனக்கு ப்ராப்யமான கைங்கர்யத்தோடு ததுபாயத்தோடுவாசியற தேவரீரே தந்தருளவேணு மத்தனையன்றோவென்கிறார்.

வெய்யவாழிசங்குதண்டுவில்லும்வாளுமேந்துசீர்க்
கையசெய்யபோதில்மாதுசேருமார்ப!நாதனே!
ஐயிலாயவாக்கைநோயறுத்துவந்துநின்னடைந்
துய்வதோருபாயநீயெனக்குநல்கவேண்டுமே. (கூஎ)

ப-ரை.—வெய்ய - எதிரிகள் குடல்குழம்பும்படி வெவ்விதான, ஆழி-திருவாழியையும், சங்கு - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், தண்டு - கௌமோதகீயென்னும் கதையையும், வில்லும்-ஸ்ரீசார்ங்கமென்னும்திருவில்லையும், வாளும்-நந்தகமென்னும் திருக்குற்றுடைவாளையும், ஏந்து - எப்போதும தரித்த, சீர்-அழகிய, கைய - திருக்கைகளையுடையனாய், செய்யபோதில் - சிவந்த தாமரைமலரைப்பிறப்பகமாகவுடைய, மாது - பெரியபிராட்டியார், சேரும் - நித்யவாஸம் பண்ணுகிற, மார்ப - திருமார்வையுடையனாய், நாதனே - ஸர்வஸ்வாமியானவனே; ஐயிலாய - ச்லேஷ்மத்தை ப்ரசுர்யமாக வுடைத்தான, ஆக்கை நோயறுத்து - சரீரமாகிறநோயை யறுத்து, வந்து - ஒருதேச விசேஷத்திலே வந்து, நின் அடைந்து - நிரதிசயபோக்யனான வுன்னை ப்ராபித்து, உய்வதோருபாயம் - அடிமைசெய்து உஜ்ஜீவிப்பதொருவழியை, நீ - எனக்கு இல்லாததையெல்லாம் தரக்கடவநீ, எனக்கு - உன்கைபார்த்திருக்கிறவெனக்கு, நல்கவேண்டும் - தந்தருளவேணுமென்கிறார். (கூஎ)

வ்யா.—(வெய்யவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்துசீர்க்கைய) காணவே யெதிரிகள் தறைப்படும்படியான ஸ்ரீபஞ்சாயுதங்களையும் அநவரதம் வாத்ஸல்யத்தாலே திருக்கையிலே யேந்தினவனே. வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படி யிருக்கிற கையிலே திவ்யாயுதங்களை யேந்தினவனே யென்றுமாம். திவ்யாயுதங்களை யேந்தினபடியேயிருக்கிறது தேவரீர்க்கு ஒருவிரோதியுண்டாயோ, என்விரோதியைப்போக்குகைக்காகவன்றோவென்கை. "எப்போதுங்கைகழலாநேமியான்நம்மேல்வினைகடிவான்" என்னக்கடவதிறே. (செய்யபோதில்மாதுசேருமார்ப) சிவந்ததாமரைப்பூவைப்பிறந்தகமாகவுடையளாயிருக்கையாலே ஸுகுமாரையாய்த் திருமேனிக்கு பரபாகரூபத்தாலே ஆபரணபூதையான பிராட்டி "அகலகில்லேனிறையும்" என்று சொல்லப்படும் திருமார்வையுடையவனே.

தொண்ணூற்றேழாம்பாட்டு. சீர்-வாத்ஸல்யமாதல்; அழகாதல்.

இத்தால்-ஆச்ரயண விரோதிபாபத்தைப் பொறுப்பிக்கைக்குப் பிராட்டி ஸந்நிதியுண்டாயிருக்க அநுபவவிநாஶ்யமாய் பகவத்ப்ராப்தி விரோதிகளை யழியச்செய்கைக்கு பரிகாரமுண்டாயிருக்க,மாத்ர்பித்ர்ஸந்நிதியிலே நோவுபடுவாரைப்போலே, சரீரஸம்பந்தத்தாலே நோவுபடக்கடவேனோ வென்கை. (நாதனே) ஸர்வஸ்வாமியானவனே. இத்தால்-இவள் புருஷகாரமாகாதே கையிலே பரிகாரமுமின்றிக்கே யொழிந்தவன்றுதான் ஆருடைமை நோவுபடுகிறது.

இப்படியிருக்க, புருஷார்த்த ஸித்திக்கு என்தலையிலேயுமோருபாயம் வேணுமென்று தேவரீர்க்கு நிர்ப்பந்தமுண்டாகில் அத்தை தேவரீரோ தந்தருளவேணுமென்கிறார் மேல்(ஐயிலாயவாக்கை நோயறுத்து) ச்லேஷ்மத்தை ப்ரக்ருதியாகவுடைய சரீரமாகிற நோயையறுத்து. தேஹாத்மாபிமாநிகளுக்கு பரார்த்தநீயமானசரீரம் ஜ்ஞாநம்பிறந்தால்வ்யாதியாயிறேயிருப்பது."ஏய்ந்ததமமெய்குந்தமாகவிரும்புவர்" என்னக்கடவதிறே. (வந்துநின்னடைந்து) ஒருதேசவிசேஷத்திலேவந்து நிரதிசயபோக்யனானவுன்னைப்ராபித்து. (உய்வதோருபாயம்) அடிமைசெய்து உஜ்ஜீவிப்பதொருவழியை. (நீயெனக்குநல்கவேண்டுமே) ச்ரியபதியாய் திவ்யாயுதோபேதனாய் எனக்கில்லாதவையெல்லாம் தரக்கடவநீயே, எல்லாவற்றுக்கு முன்கைபார்த்திருக்கிற வெனக்குத் தந்தருளவேணும். நல்குதல்-கொடுத்தல். அதாகிறது-தருதல். ... ... (கூள)

அ.—தொண்ணூற்றெட்டாம்பாட்டு. நமமுடைய விசேஷ கடாக்ஷத்துக்கு உம்முடைய தலையிலே ஒருமுதல்வேணுமே, என்னை நீயே தரவேணுமென்னக்கடவீரோ வென்று பகவதபிப்ராயமாக; புருஷார்த்தருசியாலே வந்த ப்ராதிகூல்ய நிவ்ருத்தியும புருஷார்த்த ருசியுமே ஆலம்பநமாக நான் ஸம்ஸாரதுரிதத்தைத் தப்பும்படி நீயேபண்ணி யருளவேணுமென்கிறார்.

மறந்துறந்துவஞ்சமாற்றியைம்புலன்களாசையும்
துறந்துநின்கணாசையேதொடர்ந்துநின்றநாயினேன்
பிறந்திறந்துபேரிடர்சுழிக்கணின்றுநீங்குமா
மறந்திடாதுமற்றெனக்குமாயநல்கவேண்டுமே. (கூஅ)

ப-ரை.—மாய - ஆச்சர்யமான சக்தியையுடையவனே; மறம்துறந்து-பிறர்மினுக்கம் பொறுதொழிகையும் பிறருக்குத தீங்கை நினைக்கையுமாகிறவிவற்றைவிட்டு, வஞ்சம்மாற்றி - க்ருத்ரிமத்தைத் தவிர்த்து, ஐம்புலன்களாசையும் துறந்து - இந்த்ரியங்களுக்கு இதரவிஷயங்களிலுண்டான ஆசையைவிட்டு, நின்கண் ஆசையே தொடர்ந்து நின்ற - உன்பக்கலாசையையே

மெய்குந்தமாக - சரீரத்தை குத்ஸிதமாக. (கூள)

ஆதரித்துநின்ற, நாயினேன் - தண்ணியனான நான், பிறந்திறந்து - பிறப்பது சாவதான, பேரிடர் - மஹாதுக்கமாகிற, சுழிக்கண்நின்று - சக்ரத்தினின்றும், நீங்குமா - நீங்கும்படி, மறந்திடாது - ஸம்ஸாரத்தில நான்பட்ட துக்கத்தை மறவாமல், எனக்கு - விரோதி நிரஸநத்திலே அசக்தனான வெனக்கு, நல்க வேண்டும் - புருஷார்த்ததைத் தந்தருளவேணுமென்கிறார். (௯௮)

வ்யா.—(மறம்துறந்து) மறமாது - கோபம். அதினெல்லை - பரஸம்ர்த்தி பொருதொழிகையும், பராநர்த்தசிந்தையும். அத்தை விட்டு. (வஞ்சம்மாற்றி) க்ர்த்ரிமத்தைத் தவிர்த்து. அதாகிறது - அநுகூலனாய்த்தோற்றி ப்ராதிகூல்யத்தோடே 'தலைக்கட்டுகை. வஞ்சம் - பொய். (ஐம்புலன்களாசையும் துறந்து) இந்த்ரியங்களுக்கு இதரவிஷயங்களிலுண்டான ஸங்கத்தையும் விட்டு. கீழ்-"பொறியிலேன்" என்றத்தை யகப்பாடாகச் சொன்னார்; இதிலே - கீழ்ச் சொன்ன கோப க்ர்த்ரிமங்களுக்கு ஹேதுவான விஷயாந்தர ஸங்கத்தையும் விட்டு. அவைதான் புருஷார்த்தருசி பிறந்தார்க்கு அஸம்பாவிதங்கள். (நின்கணுசையேதொடர்ந்துநின்ற) உன்பக்கலாசையையே ஆதரித்துநின்ற. அதாகிறது-பகவத்ப்ரேமம் வேணுமென்றிருக்கிற ஆதரம். தொடர்வு - உறவு. (நாயினேன்) ப்ராதிகூல்ய நிவ்ர்த்தியும் புருஷார்த்த ருசியுமொழிய, புருஷார்த்த ஸித்திக்கு முதலொன்றுமின்றிக்கே யிருக்கிற அநந்யகதி.

(பிறந்திறந்து பேரிடர் சுழிக்கண் நின்று நீங்குமா) பிறப்பது சாவதான மஹாதுக்க சக்ரத்தினின்றும் நீங்கும்படி. "பிறந்து" என்கிறவிது - ஷட்பாவவிகாரத்துக்கும் உபலக்ஷணம். "இறந்து" என்கிற விது - நரகாதிகளுக்கும் உபலக்ஷணம். (மறந்திடாது மற்றெனக்கு மாயநல்கவேண்டுமே) ஸம்ஸாரத்திலேநான்பட்ட துக்கத்தையும்என்னுடைய பூர்வவ்ர்த்தத்தையும் தேவரீருடைய ஸ்வாதந்த்ர்யத்தையும்பார்த்து விஸ்மரியாதே, அபேக்ஷாமாத்ரத்தையும் ஸம்பந்தத்தையும் பார்த்து, விரோதிநிரஸநத்திலே அசக்தனான வெனக்கு தந்நிவ்ர்த்தி பூர்வகமாக புருஷார்த்தத்தைத் தந்தருளவேணும். "மற்று" என்கிறது - விரோதிநிவ்ர்த்தி ஸமநந்தரத்திலேலபிக்குமதாகையாலே. (மாய) "மமமாயா" "மமமாயா" என்கிறபடியே ஸம்ஸாரச்க்ரத்தை யறுத்து நித்யஸூரிகளோடே யொருகோவை யாக்கவல்ல வாச்சர்யசக்தியுக்தனே. (௯௮)

தொண்ணூற்றெட்டாம்பாட்டு. (விட்டு) அவன் விடுவிக்கவிட்டபடி சொல்லுகிறானென்று பூரிப்பது. அவைதான் - ப்ராதிகூல்யநிவ்ர்த்திதான். மற்றெனக்கு - விரோதிக்கு. மற்றான புருஷார்த்தம். ... ... (௯௮)

அ.—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. புருஷார்த்தருசிபிறந்த பின்பு அத்தால்வந்த ப்ராதிகூல்ய நிவர்த்தியை உம்முடையபக்கல் முதலாகச சொல்லாநின்றீர், அநாதிகாலம் நரகஹேதுவாகப பண்ணின ப்ராதி கூல்யங்களுக்கு போக்கடியாகநீர் நினைத்திருந்த தென்னென்ன; நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்றவுன் திருவடிகளிலே ந்யஸ்தபரனான விதுவொழிய வேறுபோக்கடியுண்டோ, ஆனபின்பு கீழ்ச்சொன்ன கர்மமடியாக வருகிற யமவஶ்யதைதையைத் தவிர்த்து, எனக்கு உன்திருவடிகளிலே அவிச்சிந்நமானபோகத்தைத் தந்தருளவேணுமென்கிறார்.

காட்டிநான்செய்வல்வினைப்பயன்றனால்மநந்தனை
நாட்டிவைத்துநல்லவல்லசெய்யவெண்ணினாரெனக்
கேட்டதன்றியென்னதாவிபின்னைகேள்வநின்னொடும்
பூட்டிவைத்தவென்னைநின்னுள்நீக்கல்பூவைவண்ணனே. (௯௯)

ப-ரை.—பின்னை - நப்பின்னைப்பிராட்டிக்கு, கேள்வ-வல்லபனாய், பூவைவண்ணனே - காயாம்பூப்போன்ற திருநிறத்தையுடையவனே; நான்செய - நான்செய்த, வல்வினை - ப்ரபலமானபாபங்களை, காட்டி - யமபடர்க்குக் காட்டி, "இந்த பாபபலம் நமக்கு அநுபவிக்க ப்ராப்தம்" என்று, பயன்றனால்- பலத்திலே, மநந்தனை-மநஸ்ஸை, நாட்டிவைத்து - பூட்டிவைத்து, நல்லவல்ல செய்யவெண்ணினாரென - கொடியசெயல்களைச் செய்யவெண்ணினாரென்று, கேட்டதன்றி - கேட்டுப்போநதவறறையகற்றி, என்னதாவி - பாபபராசுரனாய் அகிஞ்சநனான வென்னுடைய ஆத்மாவை, நின்னொடும் - உன்விஷயத்திலே, பூட்டிவைத்தவென்னை - ஸமாப்பித்தவென்னை, நின்னுள் - உனபக்கல்நின்றும், நீக்கல-அகற்றுதொழியவேணும். (௯௯)

வ்யா.—(காட்டிநான்செய்வல்வினை) நான்செய்த ப்ரபலமான பாபங்களை யமபடர் எனக்குக்காட்டி. வாசிகமாயும் மாநஸமாயுமுள்ள பாபங்களை யொழிய, செய்தவையாய், நரகப்ரவேசம் பண்ணி அநுபவிக்கவேண்டும ப்ரபலபாபங்களை. இத்தால் - இவர்கள் என்னை நலிகிறார்களென்று நான் நினையாதபடி பண்ணுமவர்களென்கை. (பயன்றனால்மநந்தனைநாட்டிவைத்து) இந்தபாபபலம் நமக்கு இவ்வளவும் அநுபவிக்க ப்ராப்தமென்று பலத்திலேயும் என் மநஸ்ஸைப்பூட்டிவைத்து. (நல்லவல்லசெய்யவெண்ணினார்) கொடியசெயல்களைச்செய்ய வெண்ணினார். இவனுக்கு முதலிலேபண்ணின பாபத்தை யறிவித்து இப்பாபபலம் நாம் இவ்வளவு மநுபவிக்க வேணுமாகாதே! என்று நெஞ்சைப்பிறப்பித்துப் பின்னையாய்த்து க்ரூரமான செயல்களை யவர்கள்செய்ய நினைப்பது.

தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. பாபத்தைக்காட்டி நலிகையாலே, நான் நினையாதபடி-நான் வெறுக்காதபடி பண்ணுமவர்களென்கை. "நல்லவல்லசெய்யவெண்ணினார்" என்றபதத்தையும் கூட்டி அருளிச்செய்கிறார். (இந்தபாபபலமித்யாதி.) ... (௯௯)

(எனக்கேட்டதன்றி) என்று கேட்டுப்போந்தவற்றையகற்றி. இப்படி சாஸ்த்ரத்திலே கேட்டுப்போந்த யமவச்யதையைத் தவிர்த்து. (என்னதாவிபின்னைகேள்வ நின்னொடும்பூட்டிவைத்தவென்னை) நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனாகையால் வந்த நீர்மையையுடைய க்ர்ஷ்ணனே! பாபப்ரசுரனாய் அகிஞ்சநனான என்னுடைய ஆத்மாவை உன்பக்கலிலே ஸமர்ப்பித்த வென்னை. "காலியாய-நின்றனக் கடைக்கலம்புகுந்தவென்னை" என்றதை ஸ்மரிப்பிக்கிறார். பூட்டிவைக்கையாவது - நீவிடக்கருதி மெய்செயாது மிக்கோராசையாக்கிலும்-நின்னலாலோர்கண்ணிலேன்" என்றதை ஸ்மரிப்பிக்கிறார். (நின்னுள்நீக்கல் பூவைவண்ணனே) பூவைப்பூப்போலே நிறத்தையும் ஸௌகுமார்யத்தையுமுடைய வடிவையுடையவனே! நின்பக்கல்நின்றும் அகற்றுதொழிய வேணும். புஷ்பஹாஸ ஸுகுமாரமான வடிவழகை ஸர்வகாலமும் விச்சேதியாதே யநுபவிக்கும்படி பண்ணியருளவேணும். "பின்னைகேள்வ - என்னதாவி நின்னொடும் பூட்டிவைத்த வென்னை - காட்டி நான்செய்வல்வினைப் பயன்றனால்மனத்தனை நாட்டிவைத்து நல்லவல்லசெய்யவெண்ணினாரெனக்கேட்டதன்றி - பூவைவண்ணனே-நின்னுள் நீக்கல். (௯௯)

அ.—நூறும்பாட்டு. இப்படி அவிச்சின்னமான அநுபவத்துக்கு பரபக்தி யுக்தனாகவேண்டாவோவென்ன; அப்பரபக்தியைத் தந்தருளவேணுமென்கிறார்.

பிறப்பினோடுபேரிடர்ச்சுழிக்கணின்றுநீங்குமஃ
திறப்பவைத்தஞானநீசரைக்கரைக்கொடேற்றுமா
பெறற்கரியநின்னபாதபத்தியானபாசனம்
பெறற்கரியமாயனேயெனக்குநல்கவேண்டுமே. (௱௦௦)

ப-ரை.—பிறப்பினோடு - ஜந்மத்தோடேகூடின, தாபத்ரயரூபமான, பேரிடர்-மஹாதுக்கத்தை விளைக்கக்கடவதான, சுழிக்கண்நின்று - ஸம்ஸாரமாகிற சக்ரத்திநின்றும், நீங்குமஃது-நீங்குகைக்குறுப்பான தத்வஹிதங்களை, இறப்பவைத்த-மறைத்துவைத்த, ஞானநீசரை-ஸர்வோத்தமமாகத்தங்களை அபிமானித்திருக்கும்நீசரை, கரைக்கொடேற்றுமா - கரையிலேகொண்டேறுகைக்கு உபாயமாக, பெறற்கரிய-பெறுதற்கு அரிய, நினனபாதம-உன திருவடிகளை விஷயமாகவுடைத்தான, பத்தியான-பத்தியாகிற, பாசனம்-பஜநத்தை, உன் க்ருபையாலேயொழிய, பெறற்கரிய - வேறொருவழியாலே பெறக்கூடாத, மாயனே-ஆச்சர்யசக்தியுக்தனே, எனக்கு - உனக்ருபையல்லது அறியாதவெனக்கு, நல்கவேண்டும்-பக்தியைத்தந்தருளவேணும். (௱௦௦)

வ்யா.—(பிறப்பினோடுபேரிடர் சுழிக்கண்நின்று நீங்குமஃதிறப்பவைத்த) ஜந்மத்தோடேகூடின தாபத்ரயரூபமான மஹாதுக்கத்தைவிளைக்கக்கடவதான ஸம்ஸாரசக்ரத்தில் நின்றும் நீங்குகைக்குறுப்பான தத்வஹிதங்களை மறைத்துவைத்தவர்கள்.

தத்வஹிதங்களை "அம்து" என்றது-ச்ருதிப்ரஸித்தியாலே. அதாவது-ஸ்வர்க்கதத்ஸாதநங்களை வேதார்த்தமென்றிருக்கை. "వేద వాదరతాః పార్థ నాన్యదస్తీతివాదినః" "வேதவாதரதாঃ பார்த்த நாந்யதஸ்தீதிவாதிநঃ" என்றிறே அவர்கள் நிர்ணயம். இறக்கையாவது - நசிக்கை. அதாகிறது - "నశ్యదగ్నే" "நஶ்யதக்நே" என்கிறபடியே மறைக்கை. (ஞாநநீசரை) ஸர்வஜ்ஞராகத் தங்களை யபிமாநித்திருக்கும் நீசரை. "யாரும்வையகத்தொன்றிநின்று வாழ்தலின்மைகண்டுநீசர்" என்றவர்கள் கேவலநீசர்; இவர்கள் ஜ்ஞாநநீசர். (கரைக்கொடேற்றுமா) இவர்களைக் கரையிலேகொண்டேற்றுகைக் குபாயமாக. "సోఽధ్వనః పారమాప్నోతి తద్విష్ణోః పరమం పదమ్" "ஸோத்வநঃபாரமாப்நோதி தத்விஷ்ணோঃபரமம்பதம்" என்கிறபடியே - ஸம்ஸாராத்வாவுக்குக் கரையாவது - பகவத்விஷயமிறே. அத்தை லபிக்கைக்கு உபாயமாக வேதாந்தங்களில் சொல்லிவைத்த.

(பெறற்கரியநின்னபாத பத்தியானபாசநம்) பெறுதற்கரிய உன்திருவடிகளை விஷயமாகவுடைத்தான பரமபக்தியாகிற பாஜநத்தை. ப்ராப்யஙுனவனிற் காட்டில் தத்விஷயபக்தி துர்லபமிறே. "యా ప్రీతిరవివేకానామ్" "யாப்ரீதிரவிவேகாநாம்" என்றும், "ముక్తిస్తస్య కరేస్థితా" "முக்திஸ்தஸ்யகரேஸ்திதா" என்றும், "సమస్తజగతాంమూలే యస్యభక్తిస్థిరాత్వయి" "ஸமஸ்தஜகதாம்மூலேயஸ்யபக்திஸ்திராத்வயி" என்றும்சொல்லக்கடவதிறே. பாசநம்-மரச்கலம். அத்தாலே-தநத்தைலக்ஷிக்கிறது. "தநமாயதானேகைகூடும்" என்னக்கடவதிறே. "యస్మైవైషవృణుతేతేనలభ్యః" "யமைவைஷவ்ருணுதேதேநலப்யঃ" என்றும், "హృదామనీషామనసాభిక్లృప్తః" "ஹ்ருதாமநீஷாமநஸாபிக்லப்தঃ" என்று - வேதாந்தங்கள் உன்திருவடிகளைப்பெறுகைக்கு ஸாதநமானபக்தியை யுபதேசித்துவைத்ததிறே; அந்தபக்தியை (பெறற்கரியமாயனே) உனகேவலக்ருபையையொழிய வேறொருவழியாலே யுன்னைப்பெற விருப்பார்க்கு ஸித்தியாத ஆச்சர்யபூதனே. லோகத்தில் ஸாத்யங்களுக்கெல்லாம் ஸாதநமுண்டாயிருக்க அநந்யஸாத்யனான ஆச்சர்யபூதனே. (எனக்குநல்கவேண்டுமே) பெறவேண்டுமவையெல்லாவற்றுக்கும் உன்க்ருபையையல்லதறியாத வெனக்கு அந்த பக்தியைதேவரீர்தந்தருளவேணும்.

நூற்றும்பாட்டு.—அம்து-தத்வஹிதங்கள். அதாவது - மறக்கையாவது. ப்ரயோஜநாந்தரபரரான ஸ்வர்க்காதிபோக பரரைக் கரையேற்றுகைக்காக வேதாந்தங்களிலே பக்தியை உபாயமாகச் சொல்லிவைத்ததென்றபடி. பாசநம்-பாஜநமென்றாய், பக்திரூபமான ஸமாச்ரயணமென்றபடி. உபதேசிக்கை - ஸ்ரீ கீதையிலே. (௧00)

ப்ரயோஜநாந்தரபரர்க்குமோக்ஷருசியைப் பிறப்பித்து தத்ஸாதநமானபக்தியைக் கொடுத்தருளக்கடவ தேவரீர், அநந்யப்ரயோஜநனாய் அநந்யஸாதநனாயிருந்துள்ள வெனக்கு த்வதநுபவபரிகரமான அந்தபக்தியைத் தந்தருளுகை தேவரீர்க்கு அபிமதமன்றோ, அத்தைத் தந்தருளவேணுமென்றதாய்த்து. ... (௧00)

அ.—நூற்றோராம்பாட்டு. நீர் நம்மை ப்ரார்த்திக்கிற பரபக்தி விஷயாந்தரங்களினின்றும் நிவ்ர்த்தமான இந்த்ரியங்களைக் கொண்டு நம்மை அநவரதபாவனைபண்ணுமத்தாலே ஸாத்யமன்றோவென்ன; அங்ஙனேயாகில் ஜிதேந்த்ரியனாய்க்கொண்டு அநவரதபாவனை பண்ணுவேனாக தேவரீர் திருவுள்ளமாகவேணுமென்கிறார்.

இரந்துரைப்பதுண்டுவாழியேமநீர்நிறத்தமா
வரந்தருந்திருக்குறிப்பில்வைத்ததாகில்மன்னுசீர்ப்
பரந்தசிந்தையொன்றிநின்றுநின்னபாதபங்கயம்
நிரந்தரம்நினைப்பதாகநீநினைக்கவேண்டுமே. (௧0௧)

ப - ரை.—திருவடிகளிலேவிழுந்து, இரந்து - தேவரீரைத் தலையாலே யிரந்து, உரைப்பதுண்டு-விண்ணப்பம் செய்யப்புகுகிற தொருகார்யமுண்டு; வாழி-உனவடிவழகுக்கு மங்களமுண்டாகக்கடவது; ஏமம் நீர்- ஜபரிச்சிந்நமான கடலபோலே யிருக்கிற, நிறத்த-திரு நிறத்தையுடைய திருபாதிகபந்துவே; மன்னு - இவ்வாத்மாவுக்குஸ்வரூபாநுரூபமான, சீர் - நன்மைகளையும், வரம் - ஆச்ரிதரபேக்ஷிததவரங்களையும், தரும்-தநதருளுகிற, திருக்குறிப்பில்-திருவுளளத்திலே, வைத்ததாகில - எனககுததா நினைததாகில, பரந்த-சப்தாதி விஷயங்களிலே பரந்த, சிந்தை - எனனுடைய மாஸ்ஸை, ஒன்றி நின்று - உன்பக்கலிலேபொருந்தி நின்று, நின்னபாதபங்கயம - ப்ராப்யமுமாய் நிரதிசயபோக்யமுமானவுன் திருவடித்தாமரைகளை, நிரந்தரம் நினைப்பதாக-நிரந்தரமாகநினைக்கும்படி, நீநினைக்கவேண்டும் - நீதிருவுள்ளம்பற்றியருளவேணும். (௧0௧)

வ்யா.—(இரந்துரைப்பதுண்டு) "శిరసా యాచతస్తస్య" "ஶிரஸாயாசதஸ்தஸ்ய" என்கிறபடியே திருவடிகளிலே பக்நாபிமாநனாய்க்கொண்டுவிழுந்து, தலையாலே தேவரீரையிரந்துவிண்ணப்பம் செய்யப்புகுகிற தொருகார்யமுண்டு. வகுத்தவிஷயத்திலே ஸ்வரூபப்ரயுக்தமான அநவரதபாவனையே அர்த்திக்கிறாராகில்இப்படிகூசிச் சொல்லுகிற தென்னென்னில்; தம்முடையபூர்வ வ்ர்த்தத்தைப்பார்த்தும்,தத்வத்தினுடைய உத்துங்கதையைப்பார்த்துமருளிச்செய்கிறார். பூர்வவ்ர்த்தத்தைப் பார்த்தால் கிட்டக்கூசவேணும், கிட்டினாலும் உத்துங்கதையைப்பார்த்தால் அநாதரிக்கிறானோவென்று கூசவேணும். (வாழி) அவன்முகம் பார்க்கைக்காக மங்களாசாஸநம்பண்ணுகிறானொன்னுதல்; அநவரதபாவனைக்கு விஷயமான வடிவழகை யநுஸந்தித்து மங்களாசாஸநம்பண்ணுகிறானொன்னுதல்.

(ஏமநீர்நிறத்தமா) "[illegible]" "அப்ரமேயோமஹோததி:" என்கிறபடியே-அபரிச்சிந்நமான கடல்போலே யிருக்கிறதிருநிறத்தையுடைய நிருபாதிகபந்துவே.ஏமம்-உறவு."[illegible]" "ஸநோபந்து:" என்றும், "[illegible]" "அஹம்வோபாந்தவோஜாத:" என்றும் சொல்லக்கடவதிறே.இத்தால்-இரந்தல்லது நிற்கவொண்ணாதபடியையும் மங்களாசாஸநம்பண்ணி யல்லது நிற்கவொண்ணாதபடியான வடிவழகையும், ப்ராப்தியையும் சொல்லுகிறது.(வரந்தருந்திருக்குறிப்பில்வைத்ததாகில் மன்னுசீர்) இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமான நன்மைகளை, அபேக்ஷித்தார் அபேக்ஷித்த வரங்களைத்தந்தல்லது நிற்கமாட்டாத திருவுள்ளத்திலே வைத்ததாகில். சீர்-நன்மை. அதாகிறது கைங்கர்யஸாமராஜ்யம்.

இந்தகைங்கர்யத்துக்கடியாயிருந்துள்ள அநவரதபாவனையை அபேக்ஷிக்கிறார்மேல் (பரந்தசிந்தையொன்றிநின்று) சப்தாதிவிஷயங்களிலேபோந்த வென்னுடைய மநஸ்ஸு, மற்றொன்றில்போகாதே உன்பக்கலிலே யொன்றிநின்று. (நின்னபாதபங்கயம்) ப்ராப்தமுமாய் நிரதிஶய போக்யமாகையாலே ஆகர்ஷகமுமானஉன்திருவடிகளை. (நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கவேண்டும்) அம்மநஸ்ஸு நிரந்தரமாக நினைக்கவற்றாம்படி நீ திருவுள்ளமாகவேணும். என் நினைவும் என்செயலும் அகிஞ்சித்கரம், உன் நினைவுக்கே பலவ்யாப்தியுள்ளதென்கை. ... ... (௧௦௧)

அ.—நூற்றிரண்டாம்பாட்டு. விச்சேத ப்ரஸங்கமில்லாத அநவரதபாவனைக்கு ஶரீரஸம்பந்தமறவேணுங்காணுமென்ன; எனக்கு ருசியுண்டாயிருக்க தேவரீர் ஸர்வசக்தியாயிருக்க அநுவர்த்திக்கிற விவ்வசித் ஸம்ஸர்க்கத்தை தேவரீரறுத்துத்தந்தருளுமளவும் நான் தரித்திருக்கும்படி இன்னபடி செய்கிறோமென்று ஒரு வார்த்தை யாகிலும் அருளிச்செய்யவேணுமென்கிறார்.

விள்விலாதகாதலால்விளங்குபாதபோதில்வைத்து
உள்ளுவேனதூனநோயொழிக்குமாதெழிக்குநீர்
பள்ளிமாயபன்றியாயவென்றிவீரகுன்றினால்
துள்ளுநீர்வரம்புசெயததோன்றலொன்றுசொல்லிடே. (௧௦௨)

ப - ரை.—தெழிக்கும் - கோஷிக்கிற, நீர - கடலிலே, பள்ளி - ஆச்ரிதார்த்தமாகச்கண்வளர்ந்தருளுகிற, மாய - ஆச்சர்ய பூதனே, பன்றியாய - மஹாவராஹமாய் பூம்யுத்தரணம்பண்ணி, வென்ற - ஹிரண்யனைவென்ற, வீர - வீரத்தையுடையனாய், துள்ளுநீர் - திரைக்கிளர்த்தியையுடைய கடலிலே, குன்றினால் - நீரிலே ஆழக்கடவ மலைகளைக்கொண்டு, வரம்புசெய்த - அணைசெய்த, தோன்றல் - சகரவர்த்தித்திருமகனே; விள்விலாத - விச்சேதமில்லாத,

---

நூற்றோராம்பாட்டு. ஏம நீர் - ஏமம்-நெடுமை. ... (௧௦௧)

காதலால்-ப்ரேமத்தாலே, விளங்கு-உஜ்வலமான, பாதபோதில்-திருவடித்தாமரைகளிலே, வைத்து - நெஞ்சைவைத்து, உள்ளுவேனது - அத்திருவடிகளையே தஞ்சமாக நினைத்திருக்கிறவெனக்கு, ஊனம் - ஊனத்தைவிளைக்கும், நோய்-ஸம்ஸாரமாகிற நோயை, ஒழிக்கும் ஆவொன்று-போக்கநினைத்திருக்கிறதோருபாயம், சொல்லு - அருளிச்செயயமேணும். (௧௦௨)

வ்யா.—(விள்விலாதகாதலால்) ப்ரயோஜநாந்தரங்களைப்பற்றி நெகிழாதே அநந்ய ப்ரயோஜநனாய்க்கொண்டு திருவடிகளில் பண்ணின ப்ரேமத்தாலே. "விள்ளை விள்ளாமைவிரும்பி" என்னக் கடவதிறே. (விளங்குபாதபோதில்வைத்து) அந்த ப்ரேமத்தாலே உஜ்வலமான திருவடித்தாமரைகளிலே நெஞ்சைவைத்து. அநந்ய ப்ரயோஜநரான ஆச்ரிதருடைய ஸந்நிதியிலே அலருமதிறே திருவடித்தாமரைகள். இத்தால் - நான் ப்ரயோஜநாந்தரபரனாய் அசித்ஸம்பந்த மநுவர்த்திக்கிறதோ, தேவரீர் ஆச்ரிதவத்ஸலரல்லாமே யநுவர்த்திக்கிறதோவென்கை. (உள்ளுவேனதூனநோயொழிக்குமா) அத்திருவடிகளையே தஞ்சமென்று நினைத்திருக்கிற வெனக்கு ஊனத்தை விளைக்கும் சரீரஸம்பந்தமாகிற நோயைப்போக்க நினைத்திருக்கிற விரகும். ஊனமாகிறது - ஸ்வஸ்வரூபவிஷயமான ஜ்ஞாநஸங்கோசமும், பகவத்ஜ்ஞாநஸங்கோசமும், பகவதநுபவ சங்கோசமும் இவற்றை விளைக்குமதிறே தேஹஸம்பந்தம். "சரீரம்" என்றும், "வ்யாதி" என்றும்-பர்யாயமிறே. இத்தால்-வேறொன்றைத்தஞ்சமென்றிருக்கிறேனோ, சரீரத்திலாதரமுண்டாயிருக்கிறேனோ.

(தெழிக்குநீர்ப்பள்ளிமாய) தேவரீரோட்டை ஸ்பர்சத்தாலே கோஷிக்கிறகடலிலே ஆச்ரிதாநுக்ரஹார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிற ஆச்சர்யமான ஸௌலப்யாதிகுணயுக்தனே. தெழிக்கை- முழங்குகை. (பன்றியாயவென்றிவீர) விஸ்த்ர்ணமான ஸம்ஸாரத்திலே ஆச்ரிதாநுக்ரஹார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிற விவ்வளவேயன்றிக்கே, நீருகக்கும் சேற்றுக்குமிறாயாத மஹாவராஹமாய் பாதாளகதையான பூமியை யெடுத்து ஹிரண்யாக்ஷனை வென்ற வீரத்தை யுடையவனே. (குன்றினால்துள்ளுநீர்வரம்புசெய்ததோன்றல்) தன்னில்கிடக்கும்பதார்த்தங்களைக்கரையிலே பொகடுந்திரைக்கிளர்த்தியையுடைய கடலிலே யழுந்தக்கடவ மலைகளைக்கொண்டு அணைசெய்த சக்ரவர்த்தித்திருமகனே. தோன்றல் - அரசன். பரமபதநிலயனான தேவரீர் ஆச்ரிதார்த்தமாக ஸம்ஸாரத்திலேவந்து ஸாலபராயும் தேவரீரையழிய மாறி நஷ்டோத்தாரணம்பண்ணியும், ஆச்ரிதவிரோதிகளை யழியச்செய்தும், அதிமாநுஷசேஷ்டிதங்களைப் பண்ணியும், இப்படி நீர்மையாலும் சக்தியாலும் குறைவற்றதேவரீர்க்கு, என்சரீரஸம்பந்தத்தை யறுக்கைக்கு என்கையில் பொருளுண்டோவென்கை.

(ஒன்றுசொல்லிடே) இரண்டு தலையிலும் குறைவற்ற பின்பு இது அநுவர்த்திக்கிறது நீ நினையாமையிறே. தேவரீர் நினைக்குமளவும் தரிக்கும்படி "இன்னவளவிலேசெய்கிறோம்" என்று ஒரு வார்த்தை யருளிச்செய்யவேணும்.

தெழிக்குநீர்ப்பள்ளிமாய பன்றியாய வென்றிவீர குன்றினால் துள்ளுநீர்வரம்புசெய்ததோன்றல—விள்விலாதகாதலால் விளங்குபாதபோதில் வைத்து உள்ளுவேனதூனநோயொழிக்குமா-ஒன்றுசொல்லிடே" என்றந்வயம். ... ... (௧0௨)

அ.—நூற்றுமூன்றாம்பாட்டு. அசித்ஸம்பந்தம்தேஹாவஸாநத்திலே போக்குகிறோம், நீர் பதறுகிறதென்னென்ன; அங்ஙனேயாகில் தேவரீருடைய மேன்மைக்கும் நீர்மைக்கும் வடிவழகுக்கும் வாசகமான திருநாமங்களை நான் இடைவிடாதே மநநம்பண்ணிப் பேசுகைக்கு ஒருப்ரகார மருளிச்செய்யவேணுமென்கிறார்.

திருக்கலந்துசேருமார்பதேவதேவதேவனே
இருக்கலந்தவேதநீதியாகிநின்றநின்மலா
கருக்கலந்தகாளமேகமேனியாயநின்பெயர்
உருக்கலந்தொழிவிலாதுரைக்குமாறுரைசெயே. (௧0௩)

ப - ரை.—திரு - பெரிய பிராட்டியார், கலந்து - தேவரீரோடேஸம்ச்லேஷித்து, "அகலகில்லேனிறையும்" என்று, சேரும - நித்யவாஸம பண்ணுகிற, மார்ப - திருமார்பையுடையனாய், தேவதேவதேவனே - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாய், இருக்கலந்த - ரிக்ப்ரசுரமான, வேதம் - வேதத்தாலே ப்ரதிபாதிக்கையையே, நீதியாகிநின்ற - ஸ்வபாவமாகவுடையையாய் நின்ற, நின்மலா - ஹேயப்ரத்யநீகனாய், கருக்கலந்த - பொனபோலே புகர்த்து, காளமேகம்-கறுத்தமேகம்போலே யிருக்கிற, மேனி - திருமேனியையுடைய, ஆய - க்ர்ஷ்ணனே, ச்ரியபதி * அயர்வறுமமரர்களதிபதி ஹேயப்ரத்யநீகன விலக்ஷணவிக்ரஹயுக்தன் ஆச்ரிதஸுலபன் என்று, நினபெயர் உருக்கலந்து - உன் திருநாமங்களை மநநமபண்ணி, ஒழிவிலாது - இடைவிடாதே, உரைக்கும் ஆறு - பேசும் வழியை, உரைசெய் - அருளிச்செய்யவேணும். (௧0௩)

வ்யா.—(திருக்கலந்துசேருமார்ப) பிராட்டி தேவரீரோடே ஸம்ச்லேஷித்து, அந்த ஸம்ச்லேஷத்தில் அதிசங்கித்து "அகலகில்லேனிறையும்" என்று நித்யவாஸம்பண்ணுகிற திருமார்வையுடையவனே. பத்தரோடு முக்தரோடு நித்யரோடு வாசியற "ஈஶ்வரீம்ஸர்வபூதாநாம்" "ஈச்வரீம்ஸர்வபூதாநாம்" என்கிறபடியே - ஸர்வர்க்கும் அபாச்ரயபூதையான பிராட்டி தான் நித்யஸாபேக்ஷையாம்படியன்றோ தேவரீருடையபெருமை. (தேவதேவதேவனே) "யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" "யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவா:" என்கிறபடியே ப்ரஹ்மாதிகளுக்கு மோக்ஷருசி பிறந்தவன்று ப்ராப்யரான நித்யஸூரிகளுக்கு நித்யாநுபாவ்யனாய் கொண்டு நிர்வாஹகனானவனே. தேவரீரும் பிராட்டியும் சேர்ந்